கதைப் பாடல்
சுவடித் திரட்டும் பதிப்பும்

(பகுதி - 1)

முனைவர் சு. தாமரைப்பாண்டியன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

கதைப்பாடல்
சுவடித் திரட்டும் பதிப்பும்
(பகுதி - 1)

முனைவர் சு. தாமரைப்பாண்டியன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113

நூல் விவரக் குறிப்பு

நூல் தலைப்பு	:	கதைப்பாடல் சுவடித் திரட்டும் பதிப்பும் (பகுதி - 1)
ஆசிரியர்	:	முனைவர் சு. தாமரைப்பாண்டியன் உதவிப் பேராசிரியர் தமிழிலக்கியம் மற்றும் சுவடியியல் புலம் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தரமணி, சென்னை - 113
வெளியீட்டாளரும் பதிப்பு உரிமையும்	:	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இரண்டாம் முதன்மைச் சாலை மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம் தரமணி, சென்னை 600 113 தொலைபேசி எண் 044 - 2252 2992
வெளியீட்டு எண்	:	779
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதற்பதிப்பு
பதிப்பு ஆண்டு	:	2014
பயன்படுத்திய தாள்	:	18.6 கிகி டி.என்.பி.எல் வெள்ளை மேப்லித்தோ
நூலின் அளவு	:	1/8 டெம்மி
எழுத்தின் அளவு	:	11 புள்ளி
பக்க எண்ணிக்கை	:	464
அச்சுப்படிகளின் எண்ணிக்கை	:	1200
விலை	:	ரூ. 210 (ரூபாய் இருநூற்றுப் பத்து மட்டும்)
அச்சகம்	:	ஸ்ரீ சரவணா அச்சகம், சென்னை-600 001
பாடம்	:	சுவடியியல்

முனைவர் **கோ.விசயராகவன்**
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 113

அணிந்துரை

கதைப்பாடல்கள் திரட்டுதல் என்பது சிரமமான காரியம். சுவடிகள் கிடைக்கும் இடத்தைத் தேடிப் 'பழுமரம் தேடும் பறவைபோல்' அலைந்துகொண்டே இருக்க வேண்டும். உ.வே.சா.விற்குப் பிறகு சுவடிப்பதிப்புத் துறையில் தொய்வு ஏற்பட்டது. அதன் காரணமாகப் பல அரிய தமிழ் இலக்கியங்களை நாம் இழந்திருக்கிறோம் என்பது நிதர்சனமான உண்மை. இழந்தவற்றை மீட்டெடுப்பது சற்றுச் சிரமம். ஆனால் அழியக் காத்திருக்கும் இலக்கியங்களையும், ஆவணங்களையும் சுவடிகளிலிருந்து மீட்டெடுப்பது காலத்தின் கட்டாயத் தேவை. சுவடிகள் பதிப்புக் கல்வி பெற்றவரால் முறையாகச் சுவடியைப் பதிப்பிக்க இயலுமா என்றால் அது சற்றுச் சிரமமான காரியம்தான். 'ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது' என்ற பழமொழி இதற்கு நன்கு பொருந்தும். பயிற்சியும், அனுபவமுமே ஓலைச்சுவடிப் பதிப்பிற்கு முக்கியம்.

வாய்மொழி மரபு இலக்கியங்கள் வாழ்வாங்கு வாழும் தன்மைத்தன. எனினும் அவ்விலக்கியங்களைக் காலத்தே பதிவு செய்தால் திரிபுகள் குறைந்து காணப்படும். மரபுகள் காலந்தோறும் மாறும். எனவே அம்மரபுகளைக் களஆய்வு செய்து சேகரித்து உண்மை வரலாற்றையும் பண்பாட்டையும் இனங்காண முடியும். வரலாற்றை இனங்காண வாய்மொழி இலக்கியத்தை விட்டால் வேறுகதியில்லை என்பது ஆய்வு அறிஞர்கள் கண்டறிந்த ஊரறிந்த உண்மை. எனவே வாய் மொழி இலக்கிய வகைகளில் ஒன்றான கதைப்பாடல்களைப் பதிவு செய்வது மிகவும் அவசியம். கதைப்பாடல்கள் வாய் மொழி இலக்கியமாகக் கருதப்பட்டாலும் ஓலைச்சுவடிகளில் எழுதிவைக்கப்பட்ட வடிவமாக மிகுதியாகக் கிடைக்கின்றன. அவ்வாறு ஓலைச்சுவடிகளில் மறைந்துகிடக்கும் மக்கள் இலக்கியமான கதைப்பாடல்களைத் தேடிப் பதிவுசெய்வது அவசியமாகும். அவற்றைச் செய்பவர்கள் இன்று அரிதாகவே உள்ளனர்.

முனைவர் சு.தாமரைப்பாண்டியன் அவர்கள் சமூகக் கதைப்பாடல், வரலாற்றுக் கதைப்பாடல், புராணக் கதைப் பாடல் என்ற மூன்று படிநிலையுடைய கதைப்பாடல்களைச் சுவடிவழித் திரட்டிப் பதிப்பித்திருக்கிறார். இவர் வழங்கிய ஆய்வுரையில் நூலின் உள்ளீடுகள் துணுக்குகளாக நமக்கு பட்டவார்த்தமாகப் புலப்படுகின்றன. ஆண்டுக்கணக்கில் உழைத்து இந்நூற்களை வெளிக்கொண்டு வருகிறார் என்பது நூற்களைப் படித்தபொழுது உணர முடிந்தது.

நாட்டுப்புறத் தெய்வங்களான சங்கிலிபூதம், வண்ணார மாடன், சிவனணைந்த பெருமாள், கசமாடசாமி, பலவேசக் காரன், கபாலக்காரன், பரமசிவ பாண்டியன், சிவனாண்டி பாண்டியன், அந்தரமுடையார், மன்னன் கருங்காளி வாதை, வன்னியடி மறவன், வண்ணமுத்துசாமி, முத்துப்பட்டன், உச்சினி மாகாளி, குலைவாழை இசக்கி, செண்பகநாச்சியார், மாரியம்மன், பிரம்மசக்தி, முத்தாரம்மன், பொன்னிறத்தாள், சின்னப்பிள்ளை நாச்சியார் முதலிய தெய்வங்களின் வரலாறுகள் கதைப்பாடல்களின் மூலமாக உணர்ந்துகொள்ள முடிகின்றன. பெரும்பாலான தெய்வங்கள் கொலையில் உதித்த தெய்வங்களாக உள்ளன. ஒவ்வொரு நாட்டுப்புறத் தெய்வ வரலாறும் சாதிய முரண்பாடுகளையும், சமூகச் சிக்கல்களையும், அரசியல் மோதல்களையும் உள்ளீடாகக் கொண்டிருக்கின்றன என்பதைக் கதைப்பாடல் தொகுப்பின் மூலம் உணர்ந்து கொள்ள முடிந்தது. இக்கதைப்பாடல்களை விரிவான ஆய்வுக்கு உட்படுத்தினால் மக்கள் வரலாறும் ஒடுக்கப்பட்டோர் பாரம்பரியமும் வெளிப்படும் என்பது திண்ணம். அனைத்து நாட்டுப்புறத் தெய்வ கதைகளையும் திரட்டினால் சமூக வரலாற்றைக் கட்டமைக்கலாம் என்பது இக்கதைப்பாடல்கள் தொகுப்பின் மூலம் உறுதிப்படுகிறது.

வரலாற்றுக் கதைப்பாடல்கள் பாண்டிய மன்னர் வரலாறு சார்ந்ததாகவே பெரும்பான்மையாக அமைந் துள்ளன. சீவலமாறன் தென்காசியை ஆண்ட பிற்காலப் பாண்டிய மன்னன். அவனது வரலாற்றைப் பொன்னுருவி தவநிலை, பரமசிவ சிவனுபாண்டியர் கதை, வன்னியடி மறவன்கதை ஆகிய கதைகள் குறிப்பிடுகின்றன. சீவலமாற னுடைய குலச் சிறப்பு, ஆட்சிச்சிறப்பு பற்றி கதைப்பாடல்கள் தெரிவிக்கின்றன. பாண்டியர் வம்ச சிக்கலுக்கு இத்தகைய

கதைப் பாடல்கள் தீர்வு தரும். சீவலமாறனுக்கும் மறவர்குல ஜமீன் காட்டாரி பாண்டியனுக்கு இடையிலான பகைமை யுணர்வும் அதனால் நடைபெற்ற போர் பற்றிய செய்தி யினையும் கதைப்பாடல்வழி உணரமுடிகிறது. மறவர், கள்ளர் இனமக்களின் இடப்பெயர்ச்சி வரலாற்றையும் கதைப்பாடல் களின் வழி அறிந்துகொள்ள முடிகிறது. மேலும் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வு நிலையினையும் கதைப்பாடல் வழி கண்கூடாகக் காணமுடிகிறது.

புராணக் கதைப்பாடல்கள் சிவபெருமானின் திரு விளையாடல்களையும், சிவபெருமானின் பெருமைகளையும் முன்வைப்பதாகவே உள்ளன. சிவ அடியவர்களைச் சிவன் சோதித்து ஆட்கொள்ளும் பாங்கு சுட்டப்பட்டுள்ளது. பாமர மக்களுக்குச் சைவ, வைணவ மதத்தின் பெருமைகளை எடுத் துரைப்பதாகவே புராணக் கதைப்பாடல்கள் அமைந்துள்ளன. மதமாற்றம் நிகழ்ந்த காலகட்டத்தில் மக்களை இந்து மதத்தின் மீது பற்று கொள்ளச் செய்ய இத்தகைய புராணக் கதைப் பாடல்கள் இயற்றப்பட்டிருக்குமோ? என்று எண்ணத் தோன்றுகிறது. உச்சினி மாகாளிஅம்மன் கதை இதனைப் பட்டவார்த்தமாக வெளிப்படுத்துகிறது. இத்தகைய மத மாற்றம் தொடர்பான எதிர்ப்புணர்வுக் கதைகள் வாய்மொழி யிலும் நிரம்பக் கிடைக்கின்றன. புராணக் கதைப்பாடல்கள் நாட்டுப்புற வழிபாட்டு மக்களைப் பெருந்தெய்வ வழிபாட்டு நிறுவனச் சமயத்திற்குள் கொண்டுவர உதவி செய்துள்ளன என்று கொள்ளலாம். மேலும் அரிச்சந்திரன் கும்மி, பாரதக் கதைச் சார்ந்த சத்தியத்தின் மேன்மையை எடுத்துரைக்கும் கதைப்பாடலாக அமைந்துள்ளது. நான்கு கதைப்பாடல் தொகுதிகளுமே தென்தமிழக மக்களின் வாழ்வியல் சார்ந்த குறிப்பாக அடித்தட்டு மக்களின் அடையாள விழுமியத் தொகுப்புகளாகவே தோன்றுகின்றன. இக்கதைப்பாடல் தொகுப்பின் மூலம் முனைவர் சு.தாமரைப்பாண்டியன் அவர்கள் தமிழகத்தில் அதிகமான கதைப்பாடல்களைத் தொகுத்த பெருமையினை அடைகிறார். அவரின் கடின உழைப்பு அவருக்கு அந்தத் தகுதியைப் பெற்றுத்தந்துள்ளது என்றால் மிகையல்ல.

முனைவர் சு.தாமரைப்பாண்டியன் கவிதை, சிறுகதை, பாடல்கள், சுவடிப்பதிப்பு, சங்கஇலக்கிய ஆய்வு என்று

பரந்துபட்ட கோணத்தில் பதினாறு நூற்களை ஏற்கெனவே வெளியிட்டுள்ளார். தற்பொழுது நான்கு நூற்களை வெளியிடுகிறார். ஏறத்தாழ 20 நூற்களைத் தொடப்போகிறார் என்பதை நினைக்கின்ற பொழுது வியப்பாகவும் அதே நேரத்தில் இத்தகையச் சிறப்புடைய அவரைப் பாராட்ட வேண்டும் என்ற எண்ணமும் மேலிடுகிறது.

முனைவர் சு.தாமரைப்பாண்டியன் அவர்கள் தமிழ் இலக்கியத் துறைக்கும், ஆய்வுத்துறைக்கும், சுவடிப்பதிப்புத் துறைக்கும் கணக்கற்ற நூற்களைத் தரவேண்டும் என்று நான் உளமாரப் பாராட்டுகிறேன்.

இயக்குநர்

உள்ளடக்கம்

	ஆய்வுரை	8
1.	பலவேசக்காரன் கதை	78
2.	சங்கிலிபூதத்தார் கதை	142
3.	பொன்னுருவி தவநிலை கதை	160
4.	வண்ணாரமாடன் கதை	228
5.	கசமாடசாமி கதை	257
6.	கபாலக்காரன் பிறவிக் கதை	282
7.	கபாலக்காரன் போர்க் கதை	309
8.	வெங்கலராசன் கதை	335
9.	பரமசிவ சிவனு பாண்டியர் கதை	405
10.	அந்தரமுடையார் கதை	436

முனைவர் **சு. தாமரைப்பாண்டியன்**

உதவிப் பேராசிரியர்
தமிழிலக்கியம் மற்றும் சுவடியியல் புலம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 113.

ஆய்வுரை

கதைப்பாடல் என்பது கதைத் தழுவிய நிலையில் அமையும் பாடல் எனலாம். கதைத் தழுவிய நிலையில் அமைவதால் கதைப்பாடல் என்று அழைக்கப்படுகிறது. கதைப்பாடல் அதிகமாகக் கிடைப்பது தமிழகத்தில்தான் என்றால் மிகையாகாது. தமிழில் கதைப்பாடலை கதை, கும்மி, பாட்டு, போர், அம்மானை, காவியம், மாலை, குறம், தூது, மசக்கை, வெற்றி, சண்டை, ஏணிஏற்றம் எனும் பலபெயர்களில் வழங்கி வருகின்றனர். கதைப்பாடலைப் பாமரரின் அறிவுச்சொத்து; புலமைக்காவியம்; வாழ்வியற் கருவூலம், சமூகம்காட்டும் காலக்கண்ணாடி என்றெல்லாம் அழைக்கலாம். ஒவ்வொரு கதைப்பாடலும் அடித்தட்டு மக்களின் வரலாற்றை ஏதாவது ஒரு நிலையில் பதிவு செய்துள்ளன என்றால் பொய்யாகாது. கதைப்பாடல்கள் சமூகம், வரலாறு, புராணம் எனும் முக்கூறுகளைப் பொருண்மைகளாகக் கொண்டு இயங்குகின்றன. எனவே நாட்டின் வரலாற்றை அறுதியிடத் துணைசெய்யும் கதைப்பாடல்களைத் திரட்டுவதும் பதிப்பிப்பதும் ஆய்வு செய்வதும் அவசியமாகும்.

தமிழில் 200-க்கும் மேற்பட்ட கதைப்பாடல்கள் இருப்பதைத் தோராயமாக உணரமுடிகிறது. சில கதைப் பாடல்கள் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. பல கதைப்பாடல்கள் இன்னும் பதிவுறாமல் உள்ளன. பதிவுப்பெற்ற கதைப் பாடல்களும் மறுபதிப்பின்றிக் காணாமல் போய்க் கொண்டிருக்கின்றன. கதைப்பாடல்களைப் பதிப்பகங்களில் தேடிக் கண்டுபிடிப்பதே அரிதாகவுள்ளன. எனவே அனைத்துக் கதைப்பாடல்களையும் ஓரிடத்தில் கிடைக்கச் செய்வதன் மூலம் ஆய்வுத்தளம் விரிவுபெறும். மறைக்கப்பட்ட வரலாறும் தெளிவுறும்.

தமிழில் கிடைக்கும் கதைப்பாடல்கள் பெரும்பாலும் நாட்டுப்புறத் தெய்வ வரலாறு சார்ந்தவையாக உள்ளன. நாட்டுப்புறத் தெய்வ வரலாறுகளும் முழுமையாகத் திரட்டப் படாத நிலையே காணப்படுகின்றது. திரட்டப்பட்ட வரலாறும் முழுமையான வரலாற்றினைச் சுட்டாமல் சிலைகள் கிடைத்த வரலாற்றையும் தெய்வப் பெயர்ச்சி வரலாற்றையும் கோவில் கட்டிய வரலாற்றையுமே முன்மொழிகின்றன. இந்நிலையில் நாட்டுப்புறத் தெய்வங்களின் உண்மையான தோற்றவரலாற்றை அறியக் கதைப்பாடல்கள் பேருதவி செய்யும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

கதை தழுவிய பாடல் மரபு தமிழுக்குப் பழமையானது. எனினும் கதைப்பாடல் வரலாற்றை நோக்கும்பொழுது கி.பி. 16-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட கதைப்பாடல்களைக் காண்பதரிது. தமிழில் முதலில் தோன்றிய கதைப்பாடலாகக் கி.பி.1575-இல் தோன்றிய மூவர் அம்மானை கருதப்படுகிறது. ஆனால், அருணாசலம் அவர்கள் அருத(ன)குட்டி நாடாரால் இயற்றப்பட்ட வள்ளித் திருமணம்தான் முதலில் தோன்றிய கதைப்பாடல் என்பார். கி.பி.1600-இல் மானாட்டு சுந்தரம் நாடார் பாடிய வலங்கை மாலையும் கி.பி.1606-இல் ஆறுமுகம் நாடார் பாடிய வெங்கலராசன் கதையும் அடுத்தடுத்துத் தோன்றின. அடுத்து அருத(ன)குட்டி நாடாரால் கி.பி.1575 முதல்1675 வரையிலான காலக்கட்டத்தில் இயற்றப்பட்ட செண்பகநாச்சியார் கதைப்பாடல், கபாலக்கார சுவாமி கதை, அந்தரமுடையார் கதைப்பாடல், பெருமாள் தம்பிரான் சுவாமி கதைப்பாடல் ஆகியவை தோன்றின. அடுத்து, அல்லி அரசாணி மாலை கி.பி.1575 முதல் 1625 காலக்கட்டத்தில் தோன்றியது. கி.பி.1648-இல் இராமப்பையன் அம்மானை தோன்றியது. அதன்பின் கதைப்பாடலின் தோற்றம் அதிகரித்து 18 மற்றும் 19 ஆம் நூற்றாண்டுகளில் உச்சம் பெற்றன எனலாம். கதைப்பாடலின் வளர்ச்சிக்கு வில்லுப்பாட்டும் கணியன் கூத்தும் பெருந்துணைபுரிந்தன. அதோடு கதைப் பாடல்கள் நின்று நிலைத்து நிலைபேறு கொள்ளவும் உதவின.

கதைப்பாடல்களில் பெரும்பான்மையும் ஆசிரியர் பெயர் இடம்பெற்றிருக்காது. ஆனால் சில கதைப்

பாடல்களில் ஆசிரியர் பெயர் காணப்படுகின்றன. அவ்வாறு காணப்படும் ஆசிரியர்கள் பெரும்பாலும் நாடார் இனத்தைச் சார்ந்தவர்களாக உள்ளனர். எனவே கதைப்பாடல்களின் மூலவர்களாக நாடாரின மக்களைக் குறிப்பிடலாம். வில்லிசைக் கலை இவர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதை வரலாற்றின் வழி அறியலாம். மேலும் இம்மக்கள் பல நாட்டுப்புறத் தெய்வங்களை வழிபடுபவர் களாகவும் உள்ளனர். அவ்வாறு அவர்கள் வழிபடும் தெய்வங் களுக்கெல்லாம் கதைப்பாடல் இயற்றித் தெய்வங்களின் வரலாற்றை அழியாமல் பாதுகாத்தும் வருகின்றனர். நாடாரின மக்களுக்கு அடுத்தப்படியாக தேவரின மக்களிடம் அதிகப் படியான நாட்டுப்புறத் தெய்வ வழிபாடு நிலவுகின்றன.

நாடாரின மக்களின் தொன்மையான வரலாற்றை வெளிப்படையாக அறியமுடியவில்லை வரலாற்று அறிஞர்கள் நாடாரின மக்களை மூவேந்தரின் வம்சாவழியினர் என்று குறிப்பிடுகின்றனர். பிற்கால வரலாற்றுச் சான்றுகளும் நாட்டுப்புற இலக்கியச் சான்றுகளும் நாடாரின மக்களைப் பாண்டிய மன்னர் பரம்பரையினர் என்பதைத் தெளிவாக எடுத்துரைக்கின்றன. நாட்டுப்புறக் கதைப்பாடல்களான சின்னணைஞ்சிகதை, அந்தரமுடையார்கதை, ஐவர்ராசாக்கள் கதை, அழகன் பெருமாள்கதை, வெட்டும் பெருமாள்கதை, உடையார் சுவாமிகதை, அரவமுத்துவீரன் கதை, பரமசிவ சிவனுபாண்டியர் கதை, வன்னியடிமறவன் கதை, பொன்னுருவி தவநிலை கதை, சிவனணைஞ்சபெருமாள் கதை முதலியவை மேற்கண்ட கருத்தை உறுதிப்படுத்தும் சான்றாதாரங்களாக உள்ளன. வாய்மொழித் தரவுகளும் பழைய நிலப்பத்திர ஆவணங்களும் இதற்குத் துணைசெய்கின்றன.

இத்தகைய பாரம்பரியம் மிக்க நாடார் இனமக்கள் நாயக்கர் ஆட்சி மதுரையில் நிலைபெற்ற பின்பு அதாவது கி.பி. 16ஆம் நூற்றாண்டிற்குப் பின்பு பாரம்பரிய பெருமை களை இழக்கத் தொடங்கினர். மறவர், வெள்ளாளர், நாயக்கர், முதலியார் இவர்களின் கூட்டு ஆளுமையினால் அடித்தட்டு நிலைக்குத் தள்ளப்பட்டனர் என்பதற்கு வாய்மொழிச் சான்றுகள் நிரம்பக் கிடைக்கின்றன. திருவிதாங்கூர் அரசு ஆளுமையின் கீழிருந்த பகுதியில் வாழ்ந்த நாடார் இன மக்கள்

நாயர், வெள்ளாளர், நம்பூதிரிகள் மேலாண்மை யால் கடை நிலைக்குத் தள்ளப்பட்டனர். இன்றும் பாண்டிய நாட்டு நாடார்களுக்கும் மறவர்களுக்கும் பெரும் பகையுணர்வு நின்று நிலவுவதைக் காணலாம். மேலும் நாடார் இன மக்களால் இயற்றப்பட்ட கதைப்பாடல்களில் வெள்ளாளர் மற்றும் மறவர் சாதியினரைத் தாழ்த்திப் பேசுவதையும் காண முடிகின்றது. குமரி மாவட்ட நாடாரின மக்கள் புதிய ஆளும் வர்க்கத்தால் விளிம்பு நிலை மக்களாக்கப்பட்டமையினைக் களஆய்வில் கிடைத்த பழமொழி ஒன்று உறுதிப்படுத்தும்.

"பள்ளு பறையனைத் தொட்டா தீட்டு
சாணானைப் பார்த்தாலே தீட்டு."

இத்தகு விளிம்பு நிலை மக்களாக்கப்பட்ட நாடார் இன மக்களிடம் கல்வி அறிவு எப்படி வந்தது. கணக்கற்ற மருத்துவச் சுவடிகளையும் கதைப்பாடல்களையும் எப்படி எழுதி வைத்தனர் என்பது வியப்பாக உள்ளது. ஒருவேளை அரச பாரம்பரியத்தின் வழியாகக்கல்வி இப்பரம்பரை யினருக்கு வீட்டிற்குள்ளேயே வம்சாவழியினரால் போதிக்கப் பட்டிருக்குமோ? என்று எண்ணத்தோன்றுகிறது. பிற்காலத்தில் பாண்டியமன்னரின் வம்சாவழியினர் தென்காசி, வள்ளியூர் பகுதிகளில் ஆட்சி செய்தமையினையும் நமக்குக் கதைப் பாடல்கள் கட்டியம் கூறுகின்றன. புதியவர் ஆட்சிப் பீடத்தில் அமர்கின்றபொழுது பழைய அரச மரபினரை நசுக்குவது மரபுதான் என்பதை நாடாரின மக்களின் பிற்படுத்தப்பட்ட தன்மையோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

தென்மாவட்டப் பகுதிகளில் கிடைக்கின்ற கதைப் பாடல்கள் பெரும்பாலும் ஆதிக்க அடித்தட்டு வர்க்கத்தினரின் முரண்பாடுகளையும் மோதல்களையுமே பேசுகின்றன. ஆதிக்கவர்க்கத்தின் அடக்குமுறையினைத் திமிரியவர் அல்லது மீறியவர் படுகொலை செய்யப்பட்டுக் கொலையிலுதித்த தெய்வமாக மாறிய செய்திகளே கதைப்பாடலில் பொருண் மையாக விரவிக்கிடக்கின்றன. வாய்மொழித் தரவுகளும் மேற் கண்ட கூற்றை உறுதிப்படுத்துகின்றன. வெள்ளாளர், நாயக்கர், ரெட்டியார் ஆகியோர் ஆதிக்கவர்க்கமாகவும் நிலக்கிழார் களாகவும் இருந்துள்ளனர். அவர்களின் ஆதிக்கத்தனத்திற்குத்

தேவரின மக்கள் உறுதுணையாக இருந்துள்ளனர். ஆதிக்க வர்க்கத்தினர் தங்களின் தேவை கருதிக் கள்ளர், மறவர் இன மக்களை வடபகுதியிலிருந்து தென்பகுதிக்குக் குடியேற்றிய வரலாறும் கதைப்பாடல் மற்றும் வாய்மொழித் தரவுகளில் பெரும்பான்மையாகக் காணமுடிகின்றன.

வெள்ளாளர் இனமக்கள் நில அளவைக்காரர்களாக இருந்த காலக்கட்டத்தில் அடித்தட்டு மக்களின் நிலங்களைச் சூழ்ச்சியால் பறித்த செய்திகளும் வாய்மொழித்தரவுகளில் பரவலாகக் கிடைக்கின்றன. வாய்மொழி வழக்கிலுள்ள பழமொழிகளும் இதனை உறுதிப்படுத்துகின்றன. வெள்ளாளன் புத்தி/வெள்ளாவியில் வச்சாலும் போகாது; வேலிக்கொரு வெள்ளாடு/ஊருக்கொரு வெள்ளாளன்; வெள்ளாளன் கால்வச்சா/வெள்ளாம சொந்தமில்லை; மீசை நரைத்தாலும் / ஆச நரைக்காத வெள்ளாளன்; இருந்துங் கெடுத்தான் இருக்கன்குடி கணக்கன்/செத்துங்கெடுத்தான் இருக்கன்குடி கணக்கன்; இருந்துங்கெடுத்தான் போயிங் கெடுத்தான் / வேப்பங்குளத்து கணக்கன்-என்பன போன்ற பழமொழிகளைச் சான்றாகக் காட்டலாம். ரெட்டியார், நாயக்கர் போன்ற வர்களும் அடித்தட்டு மக்களை நசுக்கி வளமாக வாழ்ந்த வரலாறுகளும் வாய்மொழிச் செய்திகளாகக் கிடைக்கின்றன.

கள்ளர் இன மக்கள் குலத்தொழிலைச் செய்ததால் மாறிய சமூகச் சூழலில் அவர்கள் அடைந்த இன்னலையும் ஏற்பட்ட உயிர்ப்பலி இழப்பையும் கதைப்பாடல்கள் குறிப் பிடுகின்றன. ஆங்கிலேயர் இம்மக்களைக் 'குற்றப் பரம்பரை யினர்' எனப் பெயரிட்டு அழைத்தமையினை மேற்கண்ட கூற்றோடு பொருத்திப் பார்க்கலாம். மறவர் இனமக்களின் வீரச் சிறப்பினையும் கதைப்பாடல்கள் பதிவுசெய்துள்ளன. வன்னியடி மறவன் கதை, ஈனமுத்து சாமி கதை, பரமசிவ சிவனுபாண்டியர்கதை, சின்னணைஞ்சி கதை, உடையார் சுவாமிகதை, பொன்னுருவி தவநிலை முதலிய கதைப் பாடல்களைச் சான்றாகக் கூறலாம்.

புலையர் இனமக்கள் முற்காலத்தில் சமூகத்தில் மதிக்கத்தக்க நிலையில் வாழ்ந்தமையினைக் கதைப்பாடல் மற்றும் வாய்மொழித் தரவுகள் மூலம் அறியமுடிகின்றது.

புலையர் இன மக்கள் மந்திர தந்திரங்கள் கற்றவராகவும் மலைகளில் வசித்ததாகவும் கதைப்பாடல்கள் தெரிவிக் கின்றன. சுடலைமாடன் கதை, மன்னன் கருங்காளி வாதை கதை, சங்கிலிபூதத்தான் கதை முதலியவற்றைச் சான்றாகச் சுட்டலாம். வேப்புலாங்குளம் பகுதியில் பெரும் வீரனாகத் திகழ்ந்த சின்னத்தம்பி புலையனைத் திருக்குறுங்குடி வெள்ளாளருடன் மறவரும் சேர்ந்து படுகொலை செய்த வரலாற்றைச் சின்னத்தம்பி கதைப்பாடல் தெரிவிக்கிறது. புலையர் இன மக்கள் சமூகத்தில் உயர்ந்த நிலையில் வாழ்ந்து அடித்தட்டு நிலைக்குத் தள்ளப்பட்ட வரலாறுகள் வாய் மொழித் தரவுகளிலும் கிடைக்கின்றன. இராதாபுரம் வட்டம் சார்ந்த சில இடங்களில் ஊர்ப் பெயர்களும் குளங்களின் பெயர்களும் புலையர்கள் பெயரில் நின்று நிலவிவருவதைச் சான்றாகச் சுட்டலாம். (சான்று:வேப்புலாங்குளம் (ஊர்ப் பெயர்), கருப்புலாங்குளம் (குளப்பெயர்)) மேலும் கொலையி லுதித்த தெய்வமாகப் புலையர் இனத்தைச் சேர்ந்த புலமாடன், புலமாடத்தி, குலை வாழை இசக்கி, மன்னங் கருங்காளி வாதை முதலிய தெய்வங்கள் வழிபாட்டிலுள்ளன. அவைகளை ஆய்விற்கு உட்படுத்துவதும் புலையர் இன வரலாற்றை அறியத் துணைசெய்யும். எனவே புலையர் இனமக்களின் வரலாற்றை மீட்டெடுக்கவும் கதைப்பாடல்கள் பெருந்துணைசெய்யும் என்பதில் ஐயமில்லை.

பிராமணர் இனமக்களும் மேல்தட்டு வர்க்கத்தினரும் பிற மக்களைத் தீண்டத்தகாதவர்களாகக் கருதிய நிலையின் எச்சத்தை இன்றும் காணமுடியும். மேல்தட்டு வகுப்பினர் தங்கள் குலப்பெண்கள் பிற இனத்தவருடன் சேருவதைக் குல இழுக்காகக் கருதினர். எனவே குலத்தின் மானம் காக்க, ஆட்சியாளரின் துணையுடன், கலப்புமணம் செய்தவரைப் படுகொலை செய்தனர். இதனை முத்துப்பட்டன் கதை, சிதம்பரநாடார் கதை, காத்தவராயன் கதை, தூண்டிமுத்து கதை, பூச்சியம்மன் கதை முதலிய கதைப்பாடல்கள் மூலம் அறியலாம்.

இதைப் போன்று அடித்தட்டு மக்களும் தங்களுக்கும் கீழ்நிலையில் இருந்த இனமக்களைத் தீண்டத்தகாதவர்களாகக் கருதிய மனப்போக்கினையும் கதைப்பாடல்கள் பதிவு செய்

துள்ளன. பள்ளர் இனப்பெண்ணை வண்ணார் இனத்து வாலிபன் விரும்பியதற்காக அவனைப் பள்ளர் இனமக்கள் படுகொலை செய்த வரலாற்றினை 'வாசமுத்து கதை' தெரிவிக்கிறது. வண்ணாரமாடன் கதையும் ஆய்வுநோக்கில் பார்த்தால் மேற்கண்ட கருத்தை உறுதிப்படுத்தும்.

சமூகத்தில் பெண்கள் எந்த உரிமையும் அற்றவர்களாக வாழ்ந்து வந்தமையினையும் அவர்கள் ஆண் சமூகத்தால் போகப் பொருளாகப் பார்க்கப்பட்ட நிலையினையும் கதைப்பாடல்கள் பதிவு செய்துள்ளன. பாலம்மாள் கதை, ஈஸ்வரியம்மன் கதை, அனந்தாயி கீரிப்பிள்ளை கதை முதலியவற்றை அதற்குச் சான்றாகக் கூறலாம். கற்புநெறி காக்கப் பெண்கள் தீயில் பாய்ந்து உயிர்விட்டுத் தீப்பாய்ந் தம்மனாக வழிபாடு பெற்ற வரலாற்றையும் கதைப்பாடல்கள் பதிவு செய்துள்ளன. எனவே பெண்ணியம் சார்ந்த வரலாற்றை மீட்டெடுக்கவும் கதைப்பாடல்கள் துணைசெய்யும் என நம்பலாம்.

மேற்கண்ட செய்திகள் அடிப்படையில் பார்க்கின்ற பொழுது கதைப்பாடல்கள் இனவரலாறு, மொழிவரலாறு, நாட்டு வரலாறு ஆகியவற்றைத் தெளிவுசெய்ய உதவும் என உணரமுடிகிறது. எனவே இத்தகைய சிறப்புடைய கதைப் பாடல்களைத் தொகுத்துப் பதிப்பிப்பது அவசியம் ஆகும். கதைப்பாடல்களைப் பதிவு செய்ய அரசும் பதிப்பகங்களும் தன்னலமின்றித் துணைசெய்ய வேண்டும். இன்றும் பதிவு பெறாமல் பல்லாயிரக்கணக்கான ஓலைச்சுவடிகள் உள்ள நிலையில் ஒருசில பல்கலைக்கழகத்தில் ஓலைச்சுவடித் துறை யினை மூடமுயற்சிகள் நடப்பதாக அறிகின்றபொழுது மனக்கவலை அளிக்கின்றது. இந்நிலை மாறி ஓலைச்சுவடித் துறையில்ஆர்வமும் பயிற்சியும் உள்ளவர்களைக் கொண்டு ஓலைச்சுவடிகளில் மறைந்துகிடக்கும் இலக்கியங்களையும் வரலாற்றினையும் பதிப்பித்துத் தமிழ் மொழியையும் தமிழக வரலாற்றையும் காக்க வேண்டும், அதற்கு அரசும் உதவிசெய்ய வேண்டும்.

கதைப்பாடல் சுவடிகளை முதன் முதலில் தேடிப் பதிப்பித்தவர் **கதைப்பாடல் பதிப்பு துறையின் தந்தையான** குமரி

மாவட்டம் அகஸ்தீஸ்வரத்தைச் சேர்ந்த **கு. ஆறுமுகப்பெருமாள் நாடார்** ஆவார். இவரின் தந்தையார் பெயர் குமாரசுவாமி நாடார். கதைப்பாடல்கள் பதிப்பின் மூலவரான இவர் உவரி சுயம்புலிங்க சுவாமி மான்மியம், கன்னியாகுமரி பகவதி யம்மன் திருப்பணி களவுமாலை, குமரியாலய மகத்துவம் முதலிய நூற்களையும் பதிப்பித்துள்ளார். ஆறுமுகப் பெருமாள் நாடார் பற்றி விரிவான ஆய்வுகள் செய்யப்பட வேண்டும். ஏனென்றால் கதைப்பாடல்களை அவர் தேடிப் பதிப்பித்த பணி பாராட்டத்தக்கது. ஆனால் கதைப்பாடல் பதிப்புத் துறையில் ஆறுமுகப்பெருமாள் நாடார் குறித்து விரிவான செய்திகள் கூறாமை ஒரு வித இனக் காழ்ப்புணர்ச்சி என்றே தோன்றுகிறது. ஆய்வாளர்களுக்கு நடுநிலைமை பண்பு மிகவும் அவசியம். முத்துக்குட்டி சாமியின் சமூகப் புரட்சியானது எப்படி கிறிஸ்தவ ஆய்வாளர்களால் இருட்டடிப்புச் செய்யப்படுகிறதோ அதற்கு இணையாக இதனைக் கருதலாம். எனவே ஆறுமுகப்பெருமாள் நாடார் குறித்து விரிவான ஆய்வுகள் நிகழ்த்தப்படவேண்டும். கு.ஆறுமுகப்பெருமாள் நாடார் உச்சினிமாகாளியம்மன் கதை, முத்தாரம்மன்கதை, சுடலைமாடசுவாமி கதை, இயக்கி யம்மன் கதை, வெங்கலராசன் கதை, மார்க்கண்டன் கதை, மாரியம்மன் கதை, பிச்சைக்காலன் கதை, வள்ளியம்மன் கதை, சங்கிலிபூதத்தார் கதை, கிருஷ்ணசுவாமி கதை, பார்வதி யம்மன் கதை, முத்துப்பட்டன் கதை, தோட்டுக்காரி கதை, சின்னதம்பி கதை, பெருமாள்சுவாமி கதை, வல்லரக்கன் கதை, சிறுதொண்டர் பக்தன் வில்லுப்பாட்டு முதலிய கதைப் பாடல்களைப் பதிப்பித்துள்ளார். மேலும் இவர் சித்த மருத்துவம் செய்யும் வைத்தியராகவும் இருந்துள்ளார் என்பது கவனத்திற்குரியது.

கதைப்பாடலை முதன் முதலில் ஆய்வுரையுடன் பதிப்பித்த பெருமை **நா. வானமாமலை** அவர்களையே சாரும். நா. வானமாமலை அவர்கள் ஓலைச் சுவடிகளைத் தேடி அலைந்து கண்டுபிடித்து பதிப்பு முறைப்படி முறையாகக் கதைப்பாடல்களைப் பதிவுசெய்தார். எனவே இவரைக் **கதைப்பாடல் பதிப்பின் சிகரம்** என்று கூறலாம். இவர் கட்ட பொம்மன் கதைப்பாடல், வீணாதிவீணன் கதைப்பாடல், கட்டபொம்மு கூத்து, முத்துப்பட்டன் கதை, காத்தவராயன்

கதைப்பாடல், கான்சாகிபு சண்டை, ஐவர் ராசாக்கள் கதை ஆகிய கதைப்பாடல்களைப் பதிப்பித்துள்ளார்.

இவர்கள் இருவரின் பதிப்புப் பணியினை அடியொற்றி **முனைவர் சு. சண்முகசுந்தரம்** அவர்கள் மெச்சும்பெருமாள் பாண்டியன்கதை, சுடலைமாடன்கதை, ஈனமுத்து பாண்டியன்கதை, தேசிங்குராஜன் கதை, பழையனூர் நீலிக் கதை, மதுரைவீரன் கதை ஆகியவற்றைப் பதிப்பித்துள்ளார். **முனைவர் ஆ. தசரதன்** அவர்கள் கபாலக்காரன் கதைகள், மாரியம்மன் கதை, மார்கண்டேயன் கதை, பெருமாள்சாமி தம்பிரான் கதை, முப்புராதியம்மன் கதை, கம்சன் கதை, பத்மநாப சுவாமி கதை, நாச்சியாரம்மன் கதை, அந்தர முடையார் கதை முதலிய சில கதைப்பாடல்களைப் பதிப்பித் துள்ளார். **சிவ. விவேகானந்தன்** அவர்கள் பார்வதியம்மன் கதை, குருக்கேந்திரன் கதை, பிரம்மசக்தியம்மன் பிறவிக்கதை, செங்கிடாக்காரன் கதை, பலவேசக்காரன் கதை ஆகிய வற்றைப் பதிப்பித்துள்ளார். **உத்ராடம்** அவர்கள் அணைஞ்ச வனார் கதையைப் பதிப்பித்துள்ளார்.

சு.தங்கதுரை அவர்கள் சிதம்பரநாடார் கதை, பல வேசஞ் சோர்வைக்காரர் கதை ஆகியவற்றைப் பதிப்பித் துள்ளார். டாக்டர் ஏ.என். பெருமாள் அவர்கள் வெள்ளைக் காரன் கதையினைப் பதிப்பித்துள்ளார். முனைவர் வ. அலமேலு அவர்கள் தோட்டுக்காரி கதையினைப் பதிப்பித் துள்ளார். அ.ம. சத்தியமூர்த்தி அவர்கள் மன்னன் சின்னாண் டிக் கதைப்பாடலைப் பதிப்பித்துள்ளார். அ.கா.பெருமாள் அவர்கள் பொன்னிறத்தாள் கதை, தளவாய் மாடசுவாமி கதை, நல்லதங்காள் கதை ஆகியவற்றைப் பதிப்பித்துள்ளார். சூ. நிர்மலா தேவி அவர்கள் முத்தாரம்மன் கதை, கோவலன் கதை, சின்னணைஞ்சான் கதை, அரவமுத்துவீரன் கதை ஆகியவற்றைப் பதிப்பித்துள்ளார். தி. நடராசன் அவர்கள் வன்னியடிமறவன் கதை, தம்பிமார் கதை, கட்டபொம்மு கும்மிப்பாடல், கோவலன் கண்ணகி கதை, உடையார் கதை, பத்திரகாளியம்மன் கதை, அயோத்தி கதை ஆகியவற்றைப் பதிப்பித்துள்ளார். சு. சக்திவேல் அவர்கள் ஆந்திரமுடையார் கதை, புலமாடன் கதை, பொன்னிறத்தாள் கதை ஆகிய

வற்றைப் பதிப்பித்துள்ளார். முனைவர் சு. தாமரைப் பாண்டியன் அவர்கள் வல்லாள மகாராசன்கதை, குயில வண்ணான் கதை , நாககன்னிகதை, அனந்தாயி கீரிப்பிள்ளை கதை, வள்ளித்திருமணம் கதை, கபாலக்காரன் பிறவிக் கதை, கபாலக்காரன் போர்க்கதை, சங்கிலிபூதத்தான் கதை, மன்னன்கருங்காளி வாதை கதை, அபிமன்னன் போர்க்கதை ஆகிய கதைப்பாடல்களைப் பதிப்பித்துள்ளார். மேலும் கி. ஜெயக்குமார், டாக்டர் பி.டாக்டர்நசீம்தீன், முனைவர் தி.இராஜரெத்தினம், பூமிநாகநாதன், பிருந்தா, சண்முகம் பிள்ளை, ஆ. சிவசுப்பிரமணியன், மருதமுத்து, ஸ்ரீகுமார், செல்வலெட்சுமி, ஜெயலெட்சுமி, சக்திகனல், வீ. சொக்க லிங்கம், ச. முருகானந்தம் முதலியோரும் கதைப்பாடல் பதிப்புத் துறையில் குறிப்பிடத் தக்கவராவார்.

இன்று கதைப்பாடல்களை ஆய்வு செய்கின்ற ஆய்வாளர்களுக்குப் பதிவுசெய்த கதைப்பாடல்கள் முழுமை யாகக் கிடைக்கப் பெறவில்லை. எனவே கதைப்பாடல் களைத் தொகுத்து அனைத்துக் கதைப்பாடல்களும் ஓரிடத்தில் கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் முதற் கட்டமாக நான்கு தொகுதிகளாகக் கதைப்பாடல்கள் திரட்டப்பட்டு வெளியிடப்படுகின்றன.

கதைப்பாடல் திரட்டின் முதல் தொகுதியில்,

1. பலவேசக்காரன் கதை
2. சங்கிலி பூதத்தான் கதை
3. பொன்னுருவி தவநிலை
4. வண்ணாரமாடன் கதை
5. கசமாட சாமி கதை
6. கபாலக்காரன் பிறவிக் கதை
7. கபாலக்காரன் போர்க் கதை
8. வெங்கலராசன் கதை
9. பரமசிவ சிவனு பாண்டியர் கதை
10. அந்தரமுடையார் கதை

எனும் பத்துக் கதைப்பாடல்கள் அமைந்துள்ளன.

கதைப்பாடல் திரட்டின் இரண்டாவது தொகுதியில்,

1. உச்சினி மாகாளியம்மன் கதை
2. மன்னன் கருங்காளி வாதை கதை
3. வன்னியடி மறவன் கதை
4. வல்லாள மகாராசன் கதை
5. செண்பக நாச்சியார் கதை
6. வண்ணமுத்துசாமி கதை
7. நல்லதங்காள் கதை
8. நளாயினி கதை
9. அனந்தாயி கீரிப்பிள்ளை கதை
10. நாககன்னி கதை

ஆகிய பத்துக் கதைப்பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

கதைப்பாடல் திரட்டின் மூன்றாவது தொகுதியில்,

1. சித்திரபுத்திர நயினார் கதை
2. அமராபதி கதை
3. கஞ்சன் வதைக் கதை
4. பெருமாள் சுவாமி கதை
5. நாலுமந்திரி கும்மி
6. வள்ளித் திருமணம் கதை
7. கோவலன் கதை
8. பார்வதியம்மன் கதை
9. அபிமன்னன் போர்க்கதை
10. காலசுவாமி கதை

எனும் பத்துக்கதைப்பாடல்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

கதைப்பாடல் திரட்டின் நான்காம் தொகுதியில்,

1. முத்தாரம்மன் கதை
2. பொன்னிறத்தாள் கதை
3. முத்துப்பட்டன் கதை
4. கான்சாயிபு சண்டை
5. அரிச்சந்திரன் கும்மி

6. சிறுத்தொண்டர் பத்தன் கதை
7. தேசிங்குராஜன் கதை
8. இசக்கியம்மன் கதை
9. சின்னப்பிள்ளை நாச்சியார் கதை
10. ஆரவல்லி சூரவல்லிக் கதை

ஆகிய கதைப்பாடல்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

கிடைத்த கதைப்பாடல்கள் ஓலைச்சுவடி, தாள்சுவடி மற்றும் வாய்மொழிப்பதிவு வழியும் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. கதைப்பாடல் தொகுப்பிலுள்ள கதைப்பாடல்கள் சமூக, வரலாற்று, புராணக் கதைப்பாடல்களாக அமைந்துள்ளன. நான்கு தொகுதியிலும் சேர்த்து 40 கதைப் பாடல்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

பலவேசக்காரன்கதை பலவேசக்காரன் எனும் நாட்டுப்புறத் தெய்வத்தின் பிறப்பு வரலாற்றைக் கூறுகிறது. சிவபெருமான் பார்வதியை மணமுடிக்கிறார். தேவர்கள் பரிசாகக் கொண்டு வந்த பொன்னரிய மாலையினைச் சண்டமுண்டன் எனும் அரக்கன் பறித்துச் செல்கிறான். பலவேசக்காரனும் பிரம்மசக்தியும் சிவனால் பிறவி செய்யப் படுகின்றனர். இருவரும் சண்டமுண்டனை அழித்து பொன்னரிய மாலையை மீட்கின்றனர். பின்பு சிவனிடம் வரம் பெற்றுப் பூலோகத்தில் வந்து அமர்ந்து பூசை பெறுகின்றனர். இத்தெய்வ வழிபாடு குமரி, நெல்லை மாவட்ட நாடாரின மக்களிடம் உள்ளது. இக்கதைப் பாடலை இயற்றிய புலவர் **சுடலைமுத்து நாடார்**. இவர் கபாலக்காரன் பிறவிக்கதை எனும் கதைப்பாடலையும் இயற்றியுள்ளார். இவர் மானாடு அருகிலுள்ள திருமலை புரத்தைச் சேர்ந்தவர்.

பலவேசக்காரன் பெயரில் பலவேசஞ்சேர்வைக்காரன் கதை எனும் கதைப்பாடலும் உள்ளது. இக்கதைப்பாடல் பங்காளிச் சண்டையில் கொலையுண்ட இருவரின் வீர வரலாற்றைக் கூறுகிறது. ஒருவேளை பலவேசக்காரனின் பிறப்பினை மேல்நிலையாக்கம் செய்ய பலவேசக்காரன் (பிறவி) கதையைச் சுடலை முத்து நாடார் பாடியிருப்பாரோ? என்று எண்ணத் தோன்றுகிறது. காரணம், சுடலை முத்து

நாடார் கபலக்காரனுடைய பிறப்பினை மேல்நிலையாக்கம் செய்ய கபாலக்காரன் பிறவி எனும் கதைப்பாடலை இயற்றி யுள்ளார். அருத(ன)குட்டி நாடார் இயற்றிய கபாலக்காரன் போர்க் கதையில் கபாலக்காரன் பிறப்புப் பற்றிக் கூறப்பட வில்லை. அதை நிறைவு செய்யக் கபாலக்காரன் பிறவி கதையைச் சுடலைமுத்து நாடார் பாடினார் என்பது உண்மை யானால் மேற்கூறிய கருத்தும் உறுதிப்படும்.

சங்கிலிபூதத்தான் கதை சங்கிலிபூதம் எனும் நாட்டுப் புறத் தெய்வத்தின் பிறப்பு வரலாற்றை எடுத்துரைக்கிறது. தேவர்கள், சிவனிடம் அசுரர்கள்போல் நாங்களும் பிறப்பு இறப்புடையவராக இருந்தால் எங்களுக்குச் சிறப்பு இல்லை. எனவே நாங்கள் இறப்பு இல்லாத தன்மையுடையவராக அருள் செய்ய வேண்டும் என்கின்றனர். அமிர்தம் கடையச் சிவன் கூறுகிறார். சங்கிலிபூதம், சேத்திரபாலன், சட்டநாதன் ஆகிய மூவரும் பிறக்கின்றனர். மூவரும் தேவர்களிடம் அட்டாதுட்டி செய்ததால் பூலோகம் அனுப்பப்படுகின்றனர். பூலோகத்தில் குடியிருந்த மரத்தை வெட்டிய செட்டியார் களைக் கொல்கின்றனர். நம்பிமலையில் காவல் பணி செய்கையில் சங்கிலிபூதம் பூஜைசெய்யும் பூசாரி தொழுத நம்பியின் குழந்தையைக் கொல்கிறது. இறுதியில் குற்றாலம் சென்று காவல் பணி ஏற்று, பூசையும் பெற்று **'கருப்பன்'** என்று பெயர் வாங்கிக் குடியமர்கிறது.

சங்கிலிபூதத்தின் வரலாற்றை **நம்பிராயன் கதை**யும் எடுத்துரைக்கிறது. சங்கிலிபூதம் கதையை இயற்றிய ஆசிரியர் பெயர் அறியமுடியவில்லை. சங்கிலிபூதம் காவல் தெய்வ மாகக் கருதப்படுகிறது. நாடார் இன மக்கள் தனிப்பட்ட முறையில் கோவில் அமைத்து வழிபடுகின்றனர். பிற இனமக்களும் வழிபடுகின்றனர். திருக்குறுங்குடி நம்பிமலை யிலுள்ள நம்பிகோவிலின் அடிவாரத்தில் சங்கிலிபூதத்திற்குக் கோயில் அமைந்துள்ளது. சங்கிலிபூதத்திற்கு வெங்கலச்சிலை அமைக்கப்பட்டுள்ளது. சங்கிலிபூதத்தின் ஆலயம் அமைந்துள்ள இடத்தின் மேற்குப் பகுதியில் பாறை ஒன்று அமைந்துள்ளது. அதுதான் முன்பு சங்கிலி பூதத்தின் பீடமாக இருந்துள்ளது. இன்றும் அப்பாறையில் குங்குமம் சந்தனம் பூசி பூஜை

செய்யப்படுகிறது. அப்பாறை பார்ப்பதற்குப் பலிபீடம் போல் அமைந்துள்ளது. ஒருவேளை யாரோ ஒருவனைச் சங்கிலியால் பிணைத்துக் கொண்டுவந்து இந்தப்பாறையில் வைத்து வெட்டிக் கொன்றிருப்பார்களோ? என்றும் எண்ணத் தோன்றுகிறது. சங்கிலிபூதத்தான் கதையில் வரும் தொழுத நம்பி வரலாறு உண்மையானது என்று தகவலாளர்கள் குறிப்பிடுகின்றனர். மேலும் தொழுதநம்பியின் இயற்பெயர் பச்சநம்பி என்றும் மனைவிபெயர் ருக்குமணி என்றும் தகவலாளர்கள் குறிப்பிடுகின்றனர் (க.முத்தையா, சு. நடராஜன், திருக்குறுங்குடி). ஒருவேளை குழந்தை இறப்புக்கும் சங்கிலி பூதத்தின் இறப்பிற்கும் தொடர்பு இருக்குமோ? என்றும் கருதத் தோன்றுகிறது.

கருப்பசாமியும் காவல் தெய்வமாகக் கருதப்படுகிறது. ஆரியங்காவு அச்சங்காவுப் பகுதியில் ஐயப்பனுக்குக் காவல் தெய்வமாக அமர்ந்திருக்கிறது. இத்தெய்வத்தின்பெயரில் உள்ள **கருப்பன் கதைப்பாடல்** கருப்பசாமி தென்பகுதிக்கு வந்த வரலாற்றைக் கூறுகிறது. சங்கிலிபூதமும் ஆரியங்காவு அச்சங் காவு சென்று ஐயப்பனுக்குக் காவல் தெய்வமாக இருந்ததாகச் சங்கிலிபூதம் கதைப்பாடல் குறிப்பிடுகிறது. எனவே சங்கிலி பூதமும் கருப்பசாமியும் ஒன்றோ என நினைக்கத் தோன்று கிறது. மேலும் கருப்பசாமிக்குச் **சங்கிலி கருப்பன்** என்ற பெயரும் வழக்கிலுள்ளது சிந்திக்கத்தக்கது. அதுபோலச் சங்கிலிபூதமும் கருப்பன் என்று பெயர் பெற்றதாகக் கதைப் பாடல் குறிப்பிடுகிறது.

கருப்பன் கதைப்பாடல் வரலாற்றுத் தொடர்புடையது. கருப்பன் இரவிவர்ம மகாராசனை எதிர்த்த பகைவரைச் சூறையாடியதாகவும் வரகுண பாண்டியனின் படையை மீண்டோடத் துரத்தியதாகவும், விக்கிரம பாண்டிய நம்பி கருப்பனுக்கு மணிமண்டபம் அமைத்து வழிபட்டதாகவும் அறியமுடிகின்றது. எனவே இவற்றோடு பொருத்திப் பார்த் தால் சங்கிலிபூதத்தின் வரலாறும் வரலாற்றோடு தொடர் புடையதாக இருக்குமோ? என்று எண்ணத் தோன்றுகிறது. இதுகுறித்து விரிவான ஆய்வு செய்வது அவசியம்.

பொன்னுருவி தவநிலை கதை எனும் கதைப்பாடல் ஒரு வரலாற்றுக் கதைப்பாடல் ஆகும். பாண்டிய மன்னர்களின் வரலாற்றோடு தொடர்புடையதாக அமைகிறது. மேலும் சிவனணைந்த பெருமாள் எனும் நாட்டுப்புறத்தெய்வ வரலாற்றையும் எடுத்துரைக்கிறது. பொன்னுருவி தவமிருந்து பெற்ற சிவனணைஞ்சபெருமாள் திருமணமான வண்ணாத்தி சின்னணைஞ்சி மீது காதல் கொண்டு அழிந்த வரலாற்றைக் கதைப்பாடல் எடுத்துரைக்கிறது. பொன்னுருவி தவநிலை எனும் கதைப்பாடலுக்குச் **சின்னணைஞ்சான் கதை** என்று வேறு பெயரும் நிலவுகிறது. சூ.நிர்மலாதேவி, ஜி. உத்தி ராடம் ஆகியோர் சின்னணைஞ்சான் கதையைப் பதிப்பித் துள்ளனர். அவர்கள் பதிப்பித்த சுவடிகளில் கதைப்பாடலை இயற்றிய புலவர் ஆறுமுகப்பெருமாள் நாடார் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. எனவே இதன் அடிப்படையில் பொன்னுருவி தவநிலை கதைப்பாடலை இயற்றிய புலவர் **ஆறுமுகப் பெருமாள் நாடார்** என்பது தெளிவாகிறது.

பொன்னுருவி தவநிலை கதைப்பாடலில் குறிப்பிடப் பெறும் சீவலமாறன் எனும் மன்னன் கி.பி.1753இல் அரசாண்ட சீவலவரகுணராமனாக இருக்கவேண்டும். இவன் அபிராம அதிவீரராமனின் தம்பியாகவோ மகனாகவோ இருக்க வேண்டும். இவன் கி.பி.1753இல் குற்றாலநாதர் கோயிலுக்கு அறக்கட்டளை அளித்துள்ளான் என்பது குற்றாலநாதர் கோயில் செம்புப்பட்டயத்தால் அறியமுடிகிறது (ஜி. உத்ராடம், ப. 23 - 31). இச்சீவலமாறன் பற்றி வன்னியடி மறவன் கதையும் பரமசிவ சிவனுபாண்டியர் கதையும் குறிப் பிடுகின்றன. எனவே சீவலமாறன் காலம் கி.பி.18-ஆம் நூற்றாண்டு என்று தெளியலாம். மேலும் பொன்னுருவி தவநிலை கதைப்பாடலில் வரும் சிவனணைஞ்சபெருமாள் காலமும் இதுதான் என்று கூறலாம்.

பொன்னுருவி தவநிலையில் குறிப்பிடப்படும் சீவலமாறன் எனும் பாண்டிய மன்னன் தென்காசிப் பகுதியை ஆண்டவன். இவன் வலங்கைக் குலம் எனும் நாடார் குலத்தைச் சேர்ந்தவன் என்பதற்குச் சின்னணைஞ்சான் கதைப்பாடலில் குறிப்பு உள்ளது. அதை உறுதிச் செய்யப் பரமசிவ சிவனுபாண்டியர் கதையும் துணைசெய்கிறது. அதாவது நாடார் குலத்தைச்

சேர்ந்த சிவனணைஞ்ச பெருமாள் தாழ்த்தப்பட்ட குலத்தைச் சேர்ந்த வண்ணார்குலப் பெண்ணை விரும்பி மடிந்ததைக் கேலிசெய்யும் வகையில் குறிப்புகள் காணப்படுகின்றன. சுரண்டை ஜமீன் காட்டாரிப் பாண்டியனின் மந்திரிகளாகப் பணியாற்றிய பரமசிவபாண்டியன், சிவனாண்டி பாண்டியன் இருவரும் மறவர்குலத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் தங்கள் வேட்டை நாய்களுக்குச் சின்னஅணைஞ்சி, பெரிய அணைஞ்சி என்று பெயரிடுகின்றனர். நடுவக்குறிச்சி பாண்டியர்களின் பெயர்தான் சின்னணைஞ்சி, பெரிய அணைஞ்சி என்பது. எனவே நடுவக்குறிச்சி பாண்டியர்களை அவமானப்படுத்தவே அப்பெயரை நாய்களுக்கு இட்டதாகக் கருதி நடுவக்குறிச்சி பாண்டியர்கள் சுரண்டை காட்டாரி பாண்டியன் மீது படையெடுத்தாகக் கூறப்பட்டுள்ளது. எனவே இச்செய்தியின் மூலம் வண்ணார் குலப் பெண்ணான சின்னணைஞ்சிக்காக உயிரைவிட்ட சிவனணைஞ்ச பெருமாளையும் அவனுடைய குலத்தையும் (நாடார் குலம்) இழிவுபடுத்தும் வகையில் மறவர் வீரர்கள் தங்கள் நாய்களுக்குச் சின்னணைஞ்சி, பெரிய அணைஞ்சி என்று பெயரிட்டனர் என்று தோன்றுகிறது. இங்கு நடுவக்குறிச்சி பாண்டியர் என்பது நாடார் குலத்தைச் சார்ந்த சீவல மாறனைக் குறிக்கிறது எனலாம்.

வண்ணாரமாடன் கதை வண்ணாரமாடன் எனும் நாட்டுப் புறத் தெய்வத்தின் வரலாற்றைக் கூறுகிறது. குயிலவண்ணான் என்பவனிடம் சலவைத் தொழிலாளியாக வேலை பார்க்கும் முண்டுசாமி என்பவன் குயிலவண்ணானின் மகளைக் காதலித்துக் கர்ப்பமாக்குகிறான். இதனால் கோபம் கொண்ட குயிலவண்ணான் முண்டுசாமியையும் அவனது அக்காவையும் படுகொலை செய்கிறான். இருவரும் வரம்பெற்றுக் குயிலவண்ணான் குடும்பத்தை அழிக்கின்றனர். முண்டுசாமி வண்ணாரமாடனாகப் பூசை பெற்று அமர்கிறான்.

வண்ணாரமாடன் கதைப்பாடல் ஒரு குறியீட்டு நிலையில் அமைந்த கதைப்பாடல் எனலாம். உண்மையான கதையினை மறைத்து மாற்றிப் பாடப்பட்டுள்ளது. முண்டுசாமி மன்னர் குலத்தவன். அவனது பெற்றோர் இறந்ததும் பங்காளிகள்

அவனைக் கொலை செய்ய முயல்கின்றனர். முண்டுசாமியின் அக்காள் அதனை அறிந்து முண்டுசாமியினைக் காப்பாற்றிட அரண்மனையை விட்டு வெளியேறுகிறாள். இருவரும் பசியினால் குயிலவண்ணானிடம் சிக்கிச் சலவைத் தொழில் செய்கின்றனர். குயிலவண்ணானின் மகளை விரும்பியதால் முண்டுசாமியும் தமக்கையும் கொலை செய்யப்படுகின்றனர். முண்டுசாமி வண்ணாரமாடன் ஆகிறான் என்று கதைப் பாடல் தெரிவிக்கிறது. இது முரண்பட்ட கருத்தாக அமை கிறது. பொதுவாகக் கதைப்பாடல் தலைவனுடைய உண்மை யான சாதிப்பெயருடன் இணைந்தே கதைப் பாடலின் பெயர்கள் அமைந்திருக்கும். சான்றாகப் புலமாட சாமிகதை, பகடை சாமி கதை ஆகிய இரண்டு கதைப்பாடல்களையும் குறிப்பிடலாம். அந்த வகையில் பார்க்கின்றபொழுது முண்டு சாமி வண்ணார் குலத்தைச் சார்ந்தவனாக இருக்கவேண்டும். **'முண்டுசாமி'** என்ற பெயரே அதை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது. மேலும் வண்ணாரமாடன் என்ற வண்ணார்குல இளைஞன் உயர் குலப்பெண்ணை விரும்பிய தற்காகக் கொலை செய்யப்பட்டிருக்கிறான் என்பதே வண்ணாரமாடன் கதையின் உண்மைக் கதையாக இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. வண்ணாரமாடன் கதைப்பாடலை இயற்றிய புலவர் **அருத(ன)குட்டி நாடார்** என்று முனைவர் ஆ. தசரதன் குறிப்பிடுகிறார் (செண்பகநாச்சியார் கதைப்பாடல், ப.28).

கசமாடசாமி கதை எனும் கதைப்பாடல் கசமாட சாமி எனும் நாட்டுப்புறத்தெய்வ வரலாற்றைக் கூறுகிறது. இக்கதைப்பாடல் வில்லிசைக் கலைஞர் **திரு. ஆ. பிச்சைத்தேவர்** அவர்கள் பாட எழுதி எடுக்கப்பட்டுப் பதிவு செய்யப்ப ட்டுள்ளது. இதனை எழுதிய புலவர் பெயர் அறிய முடிய வில்லை. கசமாடசாமி கதை கொண்டையங்கோட்டை மறவன் ஒருவனின் வீரவரலாற்றைப் பேசுகிறது. மாடப்ப தேவருக்கும் மாடிப்பிள்ளைக்கும் மகனாகக் கசமுத்து பிறக்கிறான். தனது பராக்கிரமத்தால் கசமுத்து சோழ மன்னனிடம் மந்திரி பதவியைப் பெறுகிறான். சோழன் விலை உயர்ந்த மாலை ஒன்றைக் கசமுத்துக்கு வழங்குகிறான். நம்பந்தட்டை ஆதிமூலப் பெருமாள் கோவில் அருகிலிருந்த

ஆற்றிலுள்ள முதலையைப் பிடிக்கும் பொறுப்பு கசமுத்திடம் ஒப்படைக்கப்படுகிறது. இரவு நேரத்தில் முதலையைப் பிடிக்கத் தூண்டில் போட்டு அமர்ந்திருக்கும் வேளையில், வன்னிக் கலந்தையைச் சேர்ந்த கள்ளர்கள் உய்க்காடு நம்பந்தட்டைக்குத் திருடவருகின்றனர். அவர்கள் கசமுத்து கழுத்திலிருந்த விலை உயர்ந்த மாலையினைப் பார்த்து அதைத் திருட முயல் கின்றனர். கசமுத்து கள்ளர்களுடன் மோதி இறுதியில் உயிரை விடுகிறான். கசமுத்துவின் மனைவி கசத்தியும் உடன்கட்டை ஏறி உயிரைவிடுகிறாள். இருவரும் சிவனிடம் வரம்பெற்றுத் தெய்வமாகின்றனர்.

கசமாடசாமி கதைப்பாடல் அக்காலத்தில் இருந்த தீவட்டிக்கொள்ளையர்களுடைய தொல்லையினை எடுத் துரைக்கிறது. இத்தகைய கள்வர் கொள்ளையினை அந்தர முடையார் கதைப்பாடலும் எடுத்துரைக்கிறது. கி.ராஜ நாராயணன் அவர்களும் கோபல்லகிராமம் எனும் நாவலில் இத்தகைய கள்வர் கொள்ளையினைச் சுட்டிக்காட்டியுள்ளர். நெல்லை அருகிலுள்ள வடுகம்பட்டி எனும் கிராமம் கள்வர் கொள்ளைக்கு ஆட்பட்டு அழிந்ததாக வாய்மொழித்தரவுகள் குறிப்பிடுகின்றன. நாங்குநேரிப் பகுதிகளிலும் இத்தகைய கள்வர் கொள்ளை நடந்ததாக அறியமுடிகிறது.

கட்டபொம்மனும் கொள்ளையிடுவதில் ஈடுபட்டான் என்று கூறியதோடு 'கட்டபொம்மன் கொள்ளைக்காரன்' என்ற நூலையும் தமிழ்வாணன் எழுதியுள்ளார். கட்ட பொம்மன் கொள்ளையடித்ததாக வாய்மொழிச் செய்திகளும் கூறுகின்றன. இதுகுறித்து நடுநிலையில் விரிவான ஆய்வு செய்வது அவசியம்.எனவே அக்காலக்கட்டத்தில் மன்னராட்சி சீர்குலைந்து இருந்ததை இது காட்டுகிறது. மேலும் மக்கள் பாதுகாப்பு இன்றி வாழ்ந்ததையும் அறியமுடிகிறது. மேலும் கள்வர்களை எதிர்த்து நின்று உயிர் விட்டவர்களை மக்கள் தெய்வமாக மதித்துப் போற்றிய நிலையையும் உணரமுடிகிறது.

கபாலக்காரன் எனும் நாட்டுப்புறத் தெய்வத்தின் பெயரில் இரண்டு கதைப்பாடல்கள் வழக்கிலுள்ளன. ஒன்று **கபாலக் காரன் போர்க்கதை** மற்றொன்று **கபாலக்காரன் பிறவிக் கதை. கபாலக்காரன் போர்க்கதை** கபாலக்காரன் வீரத்தைப்

பறைசாற்றுகிறது. அதாவது கீழக்கரை நகரிலிருந்த குட்டி யாலி மரக்காயனும் குன்னாலிகுட்டி மரக்காயனும் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று ஒன்பது கப்பல் வைத்திருந்தனர். ஆயிரமாவது கப்பல் செய்ய மரம்வெட்ட எண்ணிக் கப்பலில் ஆட்களுடன் பயணம் செய்து திருவனந்தபுரத்தை அடைந்து, மன்னனின் அனுமதிபெற்று மலையில் மரம்வெட்ட வருகின்றனர். கபாலக்காரன் குடியிருந்த மரத்தை வெட்ட முயலுகையில் தீயசகுனம் தென்பட்டதையும் பொருட்படுத்தாமல் வெட்டுகின்றனர். இதனால் கபாலக்காரன் கன்னியாகுமரி பகுதியில் கப்பல் வரும்போது தாக்கி மரக்காயர் கூட்டத்தைத் தாக்கிக் கொன்று விடுகிறான். இறந்தவர்கள் சிவனிடம் வரம்பெற்றுக் கபாலக் காரன் ஆலயத்தில் கணங்களாக அமருகின்றனர்.

கபாலக்காரன் பிறவிக் கதை கபாலக்காரனின் பிறப்பு நிலை குறித்து கூறுகிறது. அதாவது மங்கைபதி நாட்டில் பார்வதி தேவியார் பிறந்து வளர்ந்து வருகிறார். பார்வதி தேவியாரின் சாபக்காலம் முடிவு பெற்றதால் சிவன் பார்வதி தேவியாரை மணமுடித்து அழைத்துவரச் செல்கிறார். எனவே கயிலா யத்தைக் காவல் செய்யக் கபாலமுத்தையும் கவுத்துக் காரனையும் இடைவெட்டும் பெருமாளையும் தோற்று விக்கிறார். காவலர்களுடன் காவல் செய்யும்பொழுது அங்குவந்த எமதர்மனையும் காலனையும் அடித்து விரட்டி விடுகின்றனர். உயிர்களைப் பிடித்து வரும் பணியினையும் நயினார் விதிக்கும் தண்டனையையும் நிறைவேற்றி வருகின்றனர். சிவன் பார்வதியுடன் கைலாயம் திரும்பியதும் எமனும் காலனும் கபாலமுத்துவின் அட்டா துட்டிச் செயல்களைக் கூறுகின்றனர். சிவன் அக்கினித் தூணினை மூவரையும் தழுவச்சொல்கிறார். அவர்களும் அக்கினித் தூண்களைப் பிடுங்கிக் கடலில் எறிய முற்பட்டபொழுது சிவன் தடுத்து நிறுத்தி மன்னிப்பு கோருகிறார். மேலும் மூவருக்கும் வரங்கொடுத்துப் பூலோகத்திற்கு அனுப்பி வைக் கிறார். ஸ்ரீரங்கத்தில் பெருமாளுடன் குடியமர்கின்றனர்.

கபாலக்காரன் போர்க்கதையினை **அருத(ன)குட்டி நாடாரும்** கபாலக்காரன் பிறவிக்கதையினைச் **சுடலைமுத்து நாடாரும்**

இயற்றியுள்ளனர். கபாலக்காரன் போர்க்கதை கபாலக் காரனின் வீரம் பற்றி மட்டும் கூறுகிறது. கபாலக்காரனின் பிறப்புப்பற்றிக் குறிப்பிடவில்லை. எனவே அந்தக் குறை யினைப் போக்குவதற்குப் பிற்காலத்தில் கபாலக்காரன் பிறவிக்கதை இயற்றப்பட்டிருக்க வேண்டும் என்று தோன்று கிறது. கபாலக்கார சாமிக்கு மானாடு, நவ்வலடி, திருமலா புரம், மாடநாடார் குடியிருப்பு, வள்ளியம்மாள்புரம், காரிகுளம், தென்திருப்பேரி, மூக்குப்பேரி ஆகிய பகுதிகளில் வசிக்கும் நாடாரின மக்கள் வழிபாடு நடத்துகின்றனர். கபாலக்காரனை வழிபடும் மக்கள் பெரும்பாலும் மானாடு பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களின் வழியினராகவே உள்ளனர்.

கபாலக்காரனுக்கும் குட்டியாலி, குன்னாலி மரக்காயர் களுக்கும் நடந்த போரையே கபாலக்காரன் போர்க்கதை விளக்குகிறது. கபாலக்காரன் உள்ளிட்ட பெருமாள்சாமி தம்பிரான் கூட்டத்தார்க்கும் கேரள அரசன் தொடர்புடைய மரக்காயர்களின் படைவீரர்களுக்கும் இடையே நடந்த போராக இக்கடற்போரைக் கருதலாம். பெருமாள்சாமி தம்பிரான் விஜயநகர வேந்தர்களால் திருவனந்த புரத்திற்கு அனுப்பப்பட்டிருந்தார். அதைப் பொறுக்காத கேரள அரசனுடன் விசயநகரத்தாரை நேராக எதிர்க்காது தன் பகுதிக்கு வந்த பெருமாள்சாமி தம்பிரான் கூட்டத்தாரைத் தானும் எதிர்க்காது மேலைக் கடலில் கப்பற்படைகளின் தலைவர்களான குட்டியாலி மற்றும் குஞ்ஞாலி மரக்காயர் களை விட்டுப் பிடித்துக் கைது செய்யுமாறு கூறியிருக்கலாம். இந்த அரசியல் ஆட்டத்தில் பெருமாள்சாமி காட்டில் யாரும் காணாதவாறு ஒளிந்து கொண்டார். கபாலக்காரனும் அவனைச் சேர்ந்தார் சிலரும் சிறை பிடிக்கப்பட்டனர். இறுதியில் கடலில் வைத்து நடைபெற்ற கப்பல் போரில் குஞ்ஞாலி குட்டி மரக்காயனும் அவனுடைய வீரர்களும் இறந்ததாகவும் அறிந்து கொள்ளலாம். கி.பி. 1558 -இல் கீழைக் கடலில் குஞ்ஞாலி மரக்காயரின் கப்பல் மூழ்கியது என்ற வரலாற்றுச்செய்தி உள்ளது. அது உண்மையானால் அக் கப்பலை மூழ்கடித்தது கபாலக்காரன் கூட்டத்தாராகவே

இருக்க வேண்டும் (ஆ. தசரதன், கபாலக்காரன் கதைப்பாடல், பக்கம், 44 - 46).

திருவிதாங்கூர் ஆட்சியாளர்க்கும் விஜயநகர ஆட்சி யாளர்க்கும் இடையே அமையும் வரலாற்றுக் குறியீட்டுக் கதையாகக் கபாலக்காரன் பிறவிக்கதை அமைந்துள்ளதை இனி ஆராயலாம். பிறவிக்கதையை ஆழ்ந்து படிக்கும்போது அக்கதை இருவேறு ஆட்சியாளர்களுக்கிடையே நடந்த அரசியல் போராட்டத்தை மையமாக வைத்து குறியீட்டு நிலையில் பாடப்பெற்றிருப்பதுபோல் தோன்றுகிறது. முதலில் சிவனுக்கு வேண்டிய இரு கூட்டத்தாரும் சண்டையிட்டுப் பின் ஒரு கூட்டத்தார் மட்டும் பெருமாள்சாமியுடன் சீரங்கத்திற்கு வந்துவிடுகின்றனர். இக்கூட்டத்தார்க்கு எதிரிகளாகிய எமன், காலன், தூதன் கூட்டத்தினர் அடிபட்டுத் தோல்வி அடைகின்றனர். இவர்களைக் குஞ்சுமரக்காயன் கூட்டத்தார்க்கும், சிவன் பிறவி செய்த மூவரைச் சேர்ந்த கூட்டத்தாராகிய பெருமாள்சாமி தம்பிரான் கூட்டத் தார்க்கும் ஒப்பிடலாம். கேரள அரசனுக்கும் விசயநகர வேந்தர்களுக்கும் நடந்த அரசியல் போராட்டத்துடன் இவ்விரு கூட்டத்தாரையும் இணைத்துப் பார்க்கலாம் (மேலது, ப. 27).

கபாலக்காரன் போர்க்கதை, வெள்ளைக்காரன்கதை, செங்கிடாக்காரன் கதை ஆகிய கதைகளில் குஞ்ஞாலி, குட்டியாலி மரக்காயர்கள் பற்றிய செய்தி காணப்படுகின்றது. இம்மரக்காயர்கள் பற்றிய செய்திகள் கேரளப்பகுதியில் கிடைக்கின்றன. குஞ்ஞாலி, குட்டியாலி என்பவர்கள் சிறந்த கடற்படைத் தலைவர்களாக இருந்துள்ளனர். மேலும் இவர்கள் மரக்கலம் செலுத்துவதில் வல்லமையுடையவராக விளங்கினர். மரக்கலம் செலுத்துவதில் வல்லவர்களாக இருந்ததாலும் மரக்காயர் வம்சத்தோடு தொடர்புடையவர்களாக இருப்ப தாலும் **'மரக்காயர்'** எனும் அடைமொழி வழங்கி யிருக்கலாம்.

குஞ்ஞாலி வம்சத்தினர் கேரள மாநிலம் பொன்னானியில் இருந்து கொச்சிக்குக் கடல் வாணிபம் செய்ய வந்தவர்கள். குஞ்ஞாலிகள் சாமூதிரிகளோடு சேர்ந்து, கப்பற்படையில்

சேர்ந்து, பின்னர்க் கப்பற்படைத் தலைவர்களாகவும் ஆயினர். உள்நாட்டுக்கப்பல் போக்குவரத்துக்குத் தலைவனாக மிக்க வீரனான குட்டியாலி தேர்ந்தெடுக்கப்பட்டான். 1524-இல் குட்டியாலி அதிகாரத்திற்குக் கீழுள்ள கடற்படை போர்த்துக் கீசியக் கடல் போக்குவரத்து வாகனங்களைத் தாக்கியது. ஹென்ரிக் டி மெனஸஸ் என்பார் குட்டியாலியைப் பொன்னானி துறைமுகத்தில் தம் படைகளுடன் தாக்கினார். பின்னர் 1525லும் கொல்லத்தில் குஞ்ஞாலிகளை அவர் தாக்கினார்.

குட்டியாலியின் அதிகாரத்தால் போர்த்துக்கீசியர் கோழிக் கோட்டிலிருந்து இடம்பெயர்ந்தனர். 1528-இல் போர்த்துக் கீசியர் குட்டியாலியின் மீது போர்தொடுத்தனர். குட்டியாலி, பார்க்கர் என்பவரால் சிறைப்படுத்தப்பட்டான். பிறகு பாச்சாச்சி மரக்காயர், குட்டியாலி உறவினர்கள், அலி ஆபிரகாம், கெய்ரோவன், இரண்டாம் குஞ்ஞாலி, குட்டியாலியின் மகன் ஆகியோரால் சாமூதிரியின் கடற் படை திருத்தி அமைக்கப்பட்டது. போர்த்துக்கீசியரைக் குஞ்ஞாலிகள் மீண்டும் இலங்கையின் கிழக்குக் கடற்கரையில் தாக்கினர். 1529-இல் போர்த்துக்கீசிய புதிய வைஸ்ராய், சாலியம் என்னுமிடத்தில் கோட்டை கட்டி அதில் பாதுகாப்புப் படைகளைக் காவல் வைத்தான். சாலியம் படைவீரர்கள் சாமூதிரிகளுக்கு அடிக்கடி தொல்லைக் கொடுத்ததால் சாமூதிரிகள் கழுத்தில் துப்பாக்கி வைத்தது போல் சாலியம் கோட்டை காணப்பட்டது. 1531-இல் சிறைவைக்கப்பட்ட குட்டியாலி கொல்லப்பட்டான். அவனது இடத்தை இரண்டாம் குஞ்ஞாலி நிரப்பினான்.

1536-இல் இடப்பள்ளி என்னுமிடத்தை மார்ட்டின் டி சூசா என்பவர் முற்றுகையிட்டார். அப்போது இரண்டாம் குஞ்ஞாலி போர்த்துக்கீசியரிடம் இடப்பள்ளியை விட்டு உடனே விலகுமாறு கட்டளை பிறப்பித்தான். 1540-இல் நடந்த போரில் சாமூதிரிகள் தளர்ந்துவிட்டதால் போர்த்துகீசி யருடன் உடன்படிக்கை செய்து கொண்டார். இவ்வுடன் படிக்கை இரு தரப்பினருக்கும் நன்மையாக அமைந்தது. 1550-இல் மீண்டும் போர் ஏற்பட்டது. தொடர்ந்து நடந்த போரில் 1571-இல் சாலியம் கோட்டையைச் சாமூதிரிகள் கைப்பற்றிப் பரப்பனாடு மன்னனுக்குத் தானமாகக் கொடுத்

தனர். சாமூதிரிகளுக்கும் போர்த்துக்கீசியருக்கும் இடையே மீண்டும் ஏற்பட்ட உறவால் 1591-இல் பொன்னானியில் சாமூதிரிகள் போர்த்துகீசியருக்கு நிலம் தானமாகக் கொடுத்தனர். இவர்களது உறவால் சமூதிரிகளுக்கும் குஞ்ஞாலி களுக்குமிடையே உறவில் விரிசல் ஏற்பட்டது. இதனால் மூன்றாம் குஞ்ஞாலி மரக்காயர் கோட்டை கட்டி அதிலிருந்து போர்த்துக்கீசியரோடு சண்டையிட்டான். 1595-இல் நான்காம் குஞ்ஞாலி சாமூதிரிகளிடம் சபதம் கூறினான்.

போர்த்துக்கீசியரோடு சேர்ந்து சாமூதிரிகள் நான்காம் குஞ்ஞாலியை வீழ்த்த முயற்சித்தனர். 1600-இல் போர்த்துக் கீசியரும் சாமூதிரியரும் 6000 காலாட்படைகளும் கடற்படை களுமாகச் சென்று குஞ்ஞாலிகளின் மரக்காயர் கோட் டையை முற்றுகையிட்டனர். அதில் குஞ்ஞாலிகள் சாமூதிரி களிடம் சரணடைந்தனர். சாமூதிரிகள் போர்த்துக்கீசியர் உதவியுடன் நான்காம் குஞ்ஞாலியையும் அவன் ஆட்களை யும் கோவாவுக்குக் கொண்டு சென்று தண்டனை அளித்தனர். குஞ்ஞாலியின் உடலைத் துண்டு துண்டாக வெட்டிக் கோவாவில் பார்வைக்கு வைத்தனர். முஸ்லீம்கள் எச்சரிக்கை யாக இருக்கவேண்டி அவ்வாறு செய்யப்பட்டதாம். அத்துடன் குஞ்ஞாலிகள் அழிக்கப்பட்டனர் (சிவ. விவேகா னந்தன், செங்கிடாக்காரன் கதை, பக். 29 -32). மேற்கண்ட வரலாற்றுச் செய்தியுடன் கபாலக்காரன் கதையினை ஒப்பிட்டுப் பார்க்கையில் முன்னர்க்கண்ட வரலாறு முரண் பட்டதாகத் தோன்றுகிறது. கபாலக்காரன் கதை, பத்மநாப சாமி கதை இரண்டும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையது. மேலும் பத்மநாபசாமி கதையில் பத்மநாபசாமியின் வீரர்களுள் ஒருவராகவே கபாலக்காரன் காட்டப்படுகிறான். ஆனால் குஞ்ஞாலி, குட்டியாலிகளின் வரலாறு வேறொரு வரலாறாகத் தென்படுகிறது.

குஞ்ஞாலி குட்டியாலிகள் வரலாற்றில் அவர்கள் வம்சம் சாமூதிரிகள் ஆதரவுடன் சிறப்பாக வாழ்ந்ததும், பின்னர்ச் சாமூதிரிகளைப் பகைத்து அழிந்ததும், நான்காம் குஞ்ஞாலி யின் தலை வெட்டி எடுக்கப்பட்டுக் கண்ணூரில் பார்வைக்கு வைத்ததும் வரலாற்று வடுவாகவே உள்ளது.

வெங்கலராசன் கதை நாடாரின மக்களின் குல வரலாற் றோடு தொடர்புடையது. இக்கதைப்பாடலைக் கி.பி. 1606 இல் **ஆறுமுகம் நாடார்** எனும் புலவர் இயற்றினார். வலங்கை குலத்தவருக்கும் சோழனுக்கும் மோதல் ஏற்படுகிறது. எனவே வலங்கைக் குலத்தவரில் ஒரு பிரிவினர் ஈழத்தில் சென்று குடியேறுகின்றனர். அங்கு வெள்ளைக்காரனுடைய நீசச் செயலினால் வாழமுடியாமல் கப்பல் மூலம் இடம் பெயர்ந்து குமரி மாவட்டப் பகுதியில் குடியேறுகின்றனர். வெங்கலக் கோட்டையிட்டு வெங்கலராசன் வாழுகையில் வஞ்சிவேந்தன் அவனிடம் பெண் கேட்கிறான். வெங்கலராசன் குலமானம் காக்க மகளைக் கொன்று விட்டு இடம்பெயர்ந்து குறும்பூரில் குடியேறுகிறான். அங்கும் நளராசன் எனும் மன்னன் பெண் கேட்கப் பெண் கொடுக்காமல் வெங்கலராசன் குடும்பத் தோடு அழிவதாகக் கதை அமைகிறது.

இக்கதைப்பாடலில் நாடாரின மக்களின் தோற்றம் குறித்த தொன்மக் கதை கூறப்பட்டுள்ளது. அதோடு நாடாரின மக்கள் சோழ நாட்டினைப் பூர்வீகமாகக் கொண்டு வாழ்ந்த நிலையினையும் எடுத்துரைக்கிறது. மேலும் நாடாரினத்தாரின் ஆதி மூதாதையராகிய செங்கமலன், அழகேசன், விக்ரமன், சேதுங்கன், காளிநாதன், ஏனாதிநாதன், தக்க ஏனாதிநாதன் ஆகிய எழுவரின் பெயர்கள் கூறப்பட்டுள்ளன. அதனோடு பனை மரமும் பனங்கொட்டையும் தோன்றிய வரலாற்றையும் நாடார் இன மக்கள் பனைத் தொழிலைக் குலத்தொழிலாக ஏற்றுக் கொண்ட செய்தியும் கூறப்பட்டுள்ளன. காவிரி அணை உடைப்பு ஏற்பட்டபோது "மண்குட்டை சுமந்து அணையை அடைக்கமாட்டோம். அது எம் குலத்திற்கு இழுக்கு" என்று கூறியதோடு இரு வலங்கைத் தலைவர்கள் உயிரைவிடுவதன் மூலம் நாடாரின மக்களின் குலச்சிறப்பினை அறிந்து கொள்ள முடிகிறது. வணிகர் இன மக்களுக்குத் தொல்லை கொடுத்த கள்வர் கூட்டத்தை வலங்கையர் வேரறுத்த செய்தியும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இதனால் மகிழ்ச்சியடைந்த வணிகச் செட்டிகள் வலங்கை யரைத் தோளில் தூக்கிச் சுமந்ததோடு **'தோளேறும் பெருமாள்'** என்று பட்டம் சூட்டிப் பெருமைப்படுத்திய செய்தியும் கதைப்பாடலில் கூறப்பட்டுள்ளது. வலங்கையர்

ஈழத்தில் குடியேறிய செய்தியும் வலங்கையர் **'சான்றோன்', 'ஈழவன்'** எனும் சிறப்புப் பெயர் பெற்ற நிலையினையும் அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் ஈழத்தில் குலப் பெருமையை உயர்த்த **'சாணார் காசு'** வெளியிடச் செய்த தன்மை யினையும் கதைப்பாடல் நவில்கிறது.

நாஞ்சில் நாட்டில் வெங்கலராசன் வெங்கலக் கோட்டை கட்டி ஆண்ட செய்தியும் கூறப்பட்டுள்ளது. பெருமாள் சாமியும் வெங்கலராசனும் விசயநகர வேந்தர்கள் காலத்தில் தென்பாண்டி நாட்டிலும் தென் சேர நாட்டிலும் மிகவும் கருதத்தக்கவர்களாக இருந்தனர். வெங்கலராசன் குமரி மாவட்டப்பகுதியில் கோட்டை கட்டி இருந்தான். இதே காலக்கட்டத்தில் விஜயநகர வேந்தர்க்குத் திறைச் செலுத்தியும், நிறுத்தியும் சேர நாட்டின் சில பகுதிகளையும் பாண்டிய நாட்டுப் பகுதிகள் சிலவற்றை ஆண்ட அகம்படிய மன்னனான உண்ணிக் கேரளவர்மன் என்ற பூதலராம வர்மன் (உண்ணிக்குட்டி) தென்காசிப்பாண்டிய அரச குலத்தினருக்கும் குமரியில் இருந்த வெங்கலராசனுக்கும் எதிரியாக இருந்தான் என்று ஆ. தசரதன் அவர்கள் பெருமாள் சாமி தம்பிரான் கதை நூலில் குறிப்பிடுவதன் மூலம் வெங்கலராசனின் சிறப்பினை உணரமுடிகிறது. மேலும் வெங்கலராசன் கோட்டை கட்டி ஆண்ட உண்மை வரலாறும் புலப்படுகிறது.

பரமசிவ சிவனுபாண்டியர் கதை தேவரின மக்கள் சார்ந்த வரலாற்றோடு தொடர்புடையது. இக்கதைப்பாடலை இயற்றியவர் சுந்தரபாண்டிய புரத்தைச் சார்ந்த **எஸ்.சொக்க லிங்கம் பிள்ளை** எனும் புலவராவார். இக்கதைப்பாடலை எழுதத் துணை நின்றவர் ஆ. வேல்சாமி பாண்டியன் தேவர் ஆவார். எஸ். சொக்கலிங்கம் புலவர் ஐந்தாண்டுத் திட்டம் குறித்த வில்லுப்பாட்டு ஒன்றையும் இயற்றியுள்ளார். சங்கர ஆவுடை தனது மகன் பரமசிவபாண்டியனுடனும் பேரன் சிவனாண்டி பாண்டியனுடனும் நாட்டின் பஞ்சம் நீங்க வேண்டி தீர்த்த யாத்திரை மேற்கொள்கிறாள். வரும் வழியில் ஊத்துமலை பகுதியை ஆண்ட காட்டாரிபாண்டியனைச் சந்திக்கின்றனர். காட்டாரிபாண்டியன் பரமசிவ பாண்டி யனையும், சிவனாண்டி பாண்டியனையும் தனது மந்திரிகளாக

வைத்துக் கொள்கிறான். நடுவக்குறிச்சி பாண்டியர்களுடன் மோதல் ஏற்படுகிறது. இருவரும் பகையை முறியடிக்கி ன்றனர். அரண்மனையிலிருந்த சிலரின் சதியினால் தலை வெட்டப்பட்டு இருவரும் மரணமடைகின்றனர். சங்கர ஆவுடையாள் நாக்கினைப் பிடுங்கிக்கொண்டு உயிரை விடுகிறாள். சிவனிடம் வரம் பெற்று மூவரும் தெய்வ மாகின்றனர்.

இக்கதையில் மறவர்கள் தென் சீமைக்கு இடம்பெயர்ந்த வரலாறு கூறப்பட்டுள்ளது. மேலும் அக்காலத்தில் ஏற்பட்ட கொடிய பஞ்சம் பற்றியும் சொல்லப்பட்டுள்ளது. காட்டாரி பாண்டியன் ஊத்துமலை ஜமீனாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. காட்டாரி பாண்டியனிடம் விசுவாசமாக இருந்த இரு வீரர்களும் மற்றவர்களின் பொறாமைக்கு ஆளாகின்றனர். நடுவக்குறிச்சி பாண்டியர்களின் பெயரை வீரர்கள் இருவரும் தங்கள் நாய்களுக்கு இடுகின்றனர். நடுவக்குறிச்சி பாண்டியர்களின் பெயர் சின்னணைஞ்சி பெரிய அணைஞ்சி என்று கதைப்பாடல் கூறுகிறது. சிவ னணைஞ்ச பெருமாள் சின்னணைஞ்சியை மணமுடித்ததை இழிவுபடுத்தும் செயலாகவே இது தோன்றுகிறது. மேலும் சிவனணைஞ்ச பெருமாள்நாடார் குலத்தவன் என்பதும் இதன்மூலம் உறுதிப்படுகிறது. பரமசிவபாண்டியனும் சிவனாண்டி பாண்டியனும் இறுதியில் சூழ்ச்சியில் சிக்கி தலை வெட்டப்பட்டு இறக்கின்றனர். பதவி வெறியினால் ஏற்பட்ட மோதலையும் இழப்பையும் இக்கதைப்பாடல் எடுத்துரைக் கிறது. உடையார் சுவாமி கதைப்பாடலும், அரவமுத்துவீரன் கதையும் இத்தன்மையில் அமைந்த கதைப்பாடல்களாக உள்ளன.

சுரண்டையில் சங்கர ஆவுடையார் கோவிலின் கிழக்குப் பக்கத்தில் பரமசிவ சிவனுபாண்டியர் கோயில் அமைந் துள்ளது. கோவிலினுள் பரமசிவ பாண்டியனுக்கும் சிவனாண்டி பாண்டியனுக்கும் சங்கரஆவுடைக்கும் சிலைகள் அமைந் துள்ளன. வீரர்கள் வளர்த்த இரண்டு நாய்களுக்கும் கோயிலினுள் உருவச்சிலைகள் காணப்படுகின்றன. பரமசிவ பாண்டியனும் சிவனாண்டி பாண்டியனும் தலைவெட்டப் பட்ட இடம் கோவிலின் கிழக்குப்பக்கம் சுமார் நூறுமீட்டர்

தொலைவில் அமைந்துள்ளது. தேவர் இனமக்கள் இத் தெய்வங்களை வழிபடுகின்றனர்.

அந்தரமுடையார் கதை எருக்கலம்பட்டி நாட்டை மாட நாடார் பொன்னிலங்கி தம்பதியினர் ஆண்டு வந்தனர். அவர்களுக்கு நீண்ட நாள் பிள்ளை இல்லை. எனவே குல தெய்வம் செண்பக நாச்சியார் அம்மனை வழிபடுகின்றனர். செண்பகநாச்சியார் அம்மன் அழகான ஆண் குழந்தையைத் தந்து அருள்பாலிக்கிறார். குழந்தைக்கு அந்தரமுடையார் என்று பெயரிடுகின்றனர். பின்னர் அந்தரமுடையார்க்கு முறையான கல்வி கற்பிக்கப்படுகிறது. அந்தரமுடையார் போர்க்கலையினையும் நன்கு கற்றுத் தேறுகிறார். அந்தர முடையார் அரண்மனை கட்டி சீரும் சிறப்புமாக வாழ்ந்து வரும் நளையிலே ஒரு நாள் அவர் வள்ளியூருக்கு பயணம் செய்கிறார். அங்கு பண்டார போத்தி மகளைக் கண்டு விரும்பி மணமுடிக்க விரும்புகிறார். பண்டாரபோத்தி முதலில் பெண்தர மறுக்கிறார். பின்னர் ஊராரின் வற்புறுத்தலின் பேரில் மணமுடித்துதர இசைகிறார்.

அந்தரமுடையார் திருமணக் கோலம் பூண்டு ஊர்வலம் வந்த காட்சியைக் காணப்பொறுக்காமல் சிலர், சாதிக்கு தக்கது செய்யாமல் முடுக்காய் வந்தவரை பின் கட்டாய் கட்டுங்கள் என்கின்றனர். மேலும் அந்தரமுடையாருடன் வந்தவரை அவர்கள் அடித்து துன்புறத்துகின்றனர். இதனை அறிந்த அந்தரமுடையார் கலகம் செய்தவரைக் கட்டித் தூக்கி வருமாறு கூறுகிறார். வீரர்களும் அவ்வாறே செய்கின்றனர். பின்னர் அவர்களை மன்னித்து விடுதலை செய்கிறார். பின்னர் மணியக்காரன் என்பவன் பண்டாரபோத்தி அந்தரமுடை யாருக்குப் பெண் கொடுத்ததால்தான் மேல்வர்க்கத்தார் வீதிக்குள் அந்தரமுடையாரின் பல்லக்கு வந்ததென்று போத்தியைக் கட்டி இழுத்துச் சென்று அடித்து உதைக்கிறான். அந்தரமுடையார் மணியக்காரனிடமிருந்து பண்டாரத்தை மீட்டதோடு மணியக்காரனையும் மன்னிக்கிறார்.

அதன்பின்னர் அந்தரமுடையார் பண்டார போத்தியின் மகளை மணமுடிக்கிறார். அன்று இரவு பிரான்மலைக் கள்ளர்கள் வள்ளியூரைக் கொள்ளையடிக்கின்றனர். எதிர்த்தவர்களைக்

கொல்கின்றனர். வீதிதோறும் கொள்ளையடித்துவிட்டுத் தப்பிச் செல்கின்றனர். மக்களின் கூக்குரல் கேட்டு வெளியே வந்த அந்தரமுடையார் விபரம் அறிந்து கள்ளர்களைத் தேடிப்போய் அனைவரையும் கொன்று சிலருக்கு உயிர்பிச்சை வழங்கி கொள்ளைப் பொருட்களை மீட்டுத் திரும்பி வருகிறார். மக்கள் அந்தரமுடையாரைப் போற்றிப் புகழ்கின்றனர்.

அந்தரமுடையாரின் வீரம் கதையின் பொருண்மையாக அமைந்துள்ளது. அந்தரமுடையார் பிரான்மலைக் கள்வரை வெற்றி கொண்டது மக்களுக்கு ஆச்சரியத்தையும் வியப்பையும் ஏற்படுத்தி இருக்க வேண்டும். எனவே அதனை போற்றும் வகையில் பாமரக் கவிஞன் அந்த வீரவரலாற்றைக் கதைப் பாடலாகப் பாடியிருக்க வேண்டும் எனத்தோன்றுகிறது. கதைப்பாடல் அந்தரமுடையாரை அரசன் என்றே குறிப்பிடு கிறது. அந்தரமுடையார் நாடார் சாதியை சேர்ந்தவர். அவர் சோழ வம்சமரபில் வந்தவர் என்றும் பாண்டிய நாட்டை ஆளும் அதிகாரமுடையவர் என்றும் அறியமுடிகிறது. இதனைக் கதைப்பாடலில்,

"நாளும் தொட்ட யோக பத்ரகாளி புத்ரனார்
வள்ளல் செண்பக நாச்சியாரை வணங்கியே வாரார்
ஆனகளக்காடு வள்ளியூர் திருநெல்வேலி
அரண்மனைதோறும் பெரிய அம்பலங்கள் செய்தார்"

என்ற பாடல் வரிகளும்,

"பாண்டிய நாட்டு அதிகாரம் பண்ணுதல் அறியாமல்
ஆண்டிதன்னைத்தொட்டதற்கு அபதாரம் தாறோம்"

என்னும் வரிகளும் உறுதிப்படுத்துகின்றன. முனைவர் ஆ. தசரதன் அவர்களும் மேற்கண்ட கருத்தை உறுதிப்படுத்து கிறார். அதாவது அருதனக்குட்டி அடிகளார் என்ற புலவருக்கு (கி.பி. 1575-1675) 13 தலைமுறைக்கு முன் திருவாரூரில் வாழ்ந்தவன் கருகாலன் எனப்பட்ட கரிகாலன் ஆவான். இவன் கரிகால் சோழனின் பரம்பரையினன். அவ்வாறெனில் உறையூர்ச் சோழன் ஆகலாம். இவனுடைய தங்கையே அந்தரமுடை யாரின் தாய் ஆவாள். அந்தரமுடையார் கரிகாலனின் மகளை

தாரமாக மணந்தார். அவர் வள்ளியூர் எருக்கலை வட்டாரத்தில் அதிகாரம் ஏற்றிருந்ததாக அறியமுடிகின்றது.

வள்ளியூருக்கு வந்த கொள்ளையர்களை அவர் அடக்கினார். அந்தரமுடையார் பெயரில் கதைப்பாடலை கி.பி.17-ஆம் நூற்றாண்டில் அருதனக்குட்டி அடிகளார் பாடியுள்ளார் என்று குறிப்பிடுகிறார். அந்தரமுடையாரின் வீரச்சிறப்பைப் போற்றும் வகையில் மக்கள் அவரை தெய்வமாக வழிபடுகின்றனர். வள்ளியூர், மானாடு பகுதியில் அந்தரமுடையாருக்கு வழிபாடு நடைபெறுகிறது. அந்தரமுடையாரின் வழியினர் இன்றும் மானாடு பகுதிகளில் வசித்து வருகின்றனர். அந்தரமுடை யாரின் கல்லறை திருக்குறுங்குடி பகுதியில் உள்ள தென்றும் அறிந்துகொள்ள முடிகிறது.

உச்சினி மாகாளி அம்மன் கதை பத்திரகாளியின் பிறப்பு மற்றும் பெருமையினை எடுத்துரைக்கும் கதைப்பாடலாக அமைகிறது. சிவனின் உச்சந்தலையிலிருந்து மாகாளி பிறக்கிறாள். விக்கிரமபுரியை ஆண்ட விக்கிரமாதித்தனுக்கும், பட்டி என்ற மந்திரிக்கும் இரண்டாயிரம் ஆண்டுகள் வாழ அருள்புரிகிறாள். இதனால் மனமகிழ்ந்து இருவரும் பத்திர காளிக்குக் கோட்டையுடன் கோயில் அமைக்கின்றனர். கோயில் பூசாரிக்குக் காளி உதவிசெய்கிறாள். பூசாரி அம்மன் கொடுத்த தங்கப்பாளத்தை விற்க முயலுகையில் சம்புதுரை எனும் வெள்ளைக்காரனிடம் மாட்டித் தங்கம் கிடைத்த உண்மை வரலாற்றைக் கூறுகிறான். சம்புதுரைக் கோவிலை உடைத்துத் தங்கத்தை எடுக்க முயல்கிறான். பத்திரகாளி அனைவரையும் கொன்று பழிதீர்க்கிறாள். சம்புதுரை மட்டும் அம்மனிடம் மன்னிப்பு கேட்டுக் கோவிலைப் புதுப்பித்து வழிபடுகிறான்.

இக்கதைப்பாடல் காளியம்மன் விடத்திலிருந்து உருவாகிச் சிவனின் உச்சந்தலை வழியாகப் பிறந்ததால் **உச்சினி மாகாளி** என்று பெயர் பெற்றதாக குறிப்பிடுகிறது. காளியம்மன் விக்கிரமன் எனும் ராஜாவின் குலதெய்வமாக மாறியதாகக் கதைப்பாடல் கூறுகிறது. நாடாரின மக்களின் தோற்றம்

குறித்துக் குறிப்பிடும் வெங்கலராசன் கதையில் காளியின் புத்திரர்களில் ஒருவன் பெயர் விக்கிரமன் என்று கூறப்பட்டுள்ளது. எனவே உச்சினி மாகாளி கதையில் வரும் விக்கிரமனும் இவனும் ஒன்றா? என எண்ணத் தோன்றுகிறது. வெங்கலராசன் கதையில் வரும் வெள்ளைக்காரன் செய்தியும் உச்சினிமாகாளி அம்மன் கதையில் வரும் சம்புதுரைக் குறித்த செய்தியும் ஒன்றுபட்டு அமைவதுபோல் தோன்றுகிறது. எனவே வெங்கலராசன் கதையின் அடிப்படையில் உச்சினி மாகாளி அம்மன் கதை படைக்கப்பட்டதா என்றும் எண்ணத் தோன்றுகிறது.

மன்னன் கருங்காளி வாதை கதை மன்னராசா எனும் நாட்டுப்புறத் தெய்வத்தின் வரலாற்றைக் கூறுகிறது. இக் கதைப்பாடலை இயற்றிய புலவர் பெயர் தெரியவில்லை. குஞ்சு நம்பி, வலிய நம்பி ஆகியோரால் கொலை செய்யப் பட்டு புலைச்சியும் அவள் வயிற்றிலிருந்த குழந்தையும் 'குலைவாழை இசக்கி', 'காளிமுத்து' என்று பெயர் பெற்று இசக்கியம்மனிடம் சென்று வரம் வாங்குகின்றனர். தப்பி யோடிய காளிப்புலையன் கட்டை தட்டிக் கீழேவிழுந்து உயிரைவிட்டுக் 'கழுக்காரன்' என்ற பெயருடன் அங்கு வந்து சேருகிறான். மதுரையினை இவர்களுடன் பல்வேறு வாதை களும் சேர்ந்து அழிக்கின்றன.ள வாதைகளை வேலனும் வேலத்தியும் அடக்கி மலைக்குக் கொண்டு செல்கின்றனர். வாதைகள் வேலத்தியின் மகள் செண்பகக் குட்டியைப் பலிகொண்டு அவர்களுக்குக் கட்டுப்பட்டு நிற்கின்றன. தாழக்குடி மயிலெறி கணியன் தனது எதிரி வரத்தனை அழிக்க வாதைகளை வாங்கி வருகிறான். வாதைகள் மக்களுக்குத் தொல்லை கொடுக்கின்றன. எனவே கோயில் கட்டி வழிபடு கின்றனர். உடையாம்பிள்ளை வாதைக் கோயிலின் நேர்ச்சை பொருளை எடுத்துச் சென்றதால் உயிரை விடுகிறான். வாதைகள் அவனது மருமகளையும் கொல்கின்றன. உடை யாம்பிள்ளையின் வழியினர் கோவில் கட்டி வழிபட, வாதைகள் கட்டுப்படுகின்றன.

இக்கதைப்பாடல் அடிமைத் தொழில் செய்தவர்களை மேல் வர்க்கத்தினர் படுகொலை செய்த நிகழ்வை எடுத்துரைக் கிறது. மேலும் இக்கதைப்பாடல் குலைவாழை இசக்கி,

காளிமுத்து, கழுக்காரன் எனும் மூன்று நாட்டுப்புறத் தெய்வங்கள் வரலாற்றை எடுத்துரைக்கிறது. அக்கால கட்டத்தில் நிலக்கிழார்களிடம் பள்ளர், பறையர், புலையர் மக்கள் அடிமை வேலை செய்தமையினையும் கதைப்பாடல் குறிப்பிடுகிறது. மேலும் மலைவாழ் மக்கள் மந்திரங் கற்றவர்களாகத் திகழ்ந்தமையினையும் கதைப்பாடல் கூறுகிறது. சுடலைமாடன் கதைப்பாடலில் வாதைகள் பிறப்பெடுக்கும் முறையும் மொழி அமைப்பும் மன்னன் கருங்காளி வாதைக் கதையின் வாதைகள் பிறப்பு மற்றும் மொழிநடையுடன் ஒத்துக் காணப்படுகின்றன. எனவே இரண்டு கதைப்பாடல்களையும் இயற்றிய புலவர் ஒருவரோ? என்றும் நினைக்கத் தோன்றுகிறது. மன்னன் கருங்காளி வாதையினை நாடார் இனமக்கள் வழிபட்டு வருகின்றனர். கதைப்பாடல்களில் கோயில் கட்டப்பட்டதாகக் கூறப்படும் இடங்களில் மன்னன் கருங்காலி வாதைக்கு கோவில் இல்லை. ஆனால் சிவசுப்பிரமணியபுரம், வைராவிக்கிணறு, நம்பியான் விளை, லெவிஞ்சுபுரம் முதலிய இடங்களில் சிறப்பான வழிபாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

வன்னியடிமறவன் கதை வன்னியடிமறவன் எனும் நாட்டுப் புறத் தெய்வத்தின் வரலாற்றைக் கூறுகிறது. இக்கதைப் பாடலை இயற்றிய புலவர் **நாராயணன் நாடார்**. மாடப்பத் தேவனுக்கும் கருமறத்திக்கும் மகனாக வன்னியடி மறவன் பிறக்கிறான். வாலிபப்பருவம் அடைகின்றபொழுது கன்னிக் களவு படிக்கச் செல்கிறான். களவு செய்கையில் செட்டி ஒருவனை அடித்துவிடுகிறான். செட்டி மன்னன் சீவல மாறனிடம் முறையிடுகிறான். சீவலமாறன் வீரர்களை அனுப்பி வன்னியடிமறவனைப் பிடித்துத் தலையை வெட்டச் செய்து விடுகிறான். வன்னியடிமறவன் நீலன், நீலியுடன் சென்று சிவனிடம் வரம்பெற்று மணிக்கெட்டி பொட்டலில் வழிபாடு பெற்றுக் குடியமர்கிறான்.

வன்னியடிமறவன் வழிபாடு முதன்மைத் தெய்வ நிலையில் அமையவில்லை. துணைத்தெய்வ வழிபாடாக அமைகிறது. நீலன், நீலி வழிபாடு உள்ள கோவில்களில் வன்னியடி மறவனுக்குத் துணைத் தெய்வ வழிபாடு நடத்தப்படுகின்றது.

வன்னியடி மறவன் கதை மறவர் இனவரலாற்றைக் கூறுகிறது. மணிக்காஞ்சி நாட்டில் வாழ்ந்த வீரர்களான வீராளன் தேவன், வெட்டாளந்தேவன், புலித்தேவன், பொன்பாண்டித் தேவன், சாத்தான் குட்டித் தேவன், சிவராமத்தேவன், வல்லாளத் தேவன் ஆகியோர் பற்றிய குறிப்புகளும் இடம் பெற்றுள்ளன. வன்னியடி மறவன் கதைப்பாடல் ஒரு சமூகக் கதைப் பாடலாக அமைந்துள்ளது. அ.கா. பெருமாள், தி. நடராஜன், லாரன்ஸ் நாயகம் ஆகியோர் பதிப்பித்த வன்னியடி மறவன் கதைகளில் கதைக் கூறுகளில் முரண்பாடுகள் காணப்படு கின்றன. அவை மேலாய்விற்குரியன.

வல்லாள மகாராசன் கதை ஒரு புராணமும் வரலாறும் கலந்த கதைப்பாடல் ஆகும். இக்கதைப்பாடல் சிவபக்தியையும் சிவனின் அருட்பெருமையினையும் வலியுறுத்துவதாக அமைந் துள்ளது. வல்லாள மகாராசன் கதை அருணாசல புராணத்தின் உட்கதைகளுள் ஒன்றாக அமைகிறது. நாட்டுப்புறப் புலவர் அதனை எடுத்துக் கதைப்பாடலாகப்பாடி வைத்துள்ளார். அருணயம்பதியை வல்லாள மகாராசன் ஆண்டு வருகிறான். அவன் மனைவியர் மல்லம்மா, சல்லம்மா.குழந்தை வரம்கேட்டு 32 தானதர்மங்கள் செய்கிறான் வல்லாள மகாராசன். முப்பத்திரண்டு தானதர்மமும் முறையாகச் செய்தால் இந்திரலோகப் பதவி கிடைக்கும் என்பதால் இந்திரன் அதைக் கெடுக்க நினைக்கிறான். நாரதர் தான தர்மம் செய்வதைத் தடுக்கப் பார்க்கிறார்; முடியவில்லை. சிவன் மாறுவேடமிட்டு வந்து பெண்தானம் கேட்கிறார். பெண்தானம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டபொழுது மனைவியைத் தானமாகக் கொடுக்கிறான். வல்லாளனின் பக்தியை மெச்சிய சிவன் முக்தி வழங்கி அருள்பாலிக்கிறார்.

வல்லாள மகாராசன் திருவண்ணாமலைப் பகுதியை ஆண்ட ஹொய்சாள மன்னன் ஆவான். இவனின் பெருமையினையும் பக்திச் சிறப்பினையுமே கதைப்பாடல் நவில்கிறது. தமிழ் மன்னர்களின் ஆளுகைக்கு உட்பட்டுத் திருவண்ணாமலைப் பகுதி இருந்தாலும் கர்நாடகத்தைச் சேர்ந்த ஹொய்சாள மன்னர்களின் ஆளுகையும் இப்பகுதியில் இருந்தது. இம்மன்னர்களின் கோவில் திருப்பணி சார்ந்த

செய்திகள் கி.பி.1292-ஆம் வருடத்திலிருந்து கி.பி.1343 வரையிலான ஒன்பது கல்வெட்டுகளில் காணக் கிடக்கின்றன. ஹொய்சாள பரம்பரையைச் சேர்ந்த மன்னர்கள் பத்தாம் நூற்றாண்டில் இருந்தே தமிழ் நாட்டுடன் தொடர்பு கொண்டிருந்தனர். திருவண்ணாமலையைப் பொறுத்தவரை ஹொய்சாள அரசர்களில் முக்கியமானவன் மூன்றாம் வல்லாள மகாராசன். இவன் சுந்தரபாண்டியனோடு அணிசேர்ந்து தொண்டை மண்டலத்தின் சில பகுதிகளைத் தன்னுடைய ஆட்சியின்கீழ் கொண்டு வந்தான். இதில் திருவண்ணா மலையும் அதைச் சுற்றியிருந்த பகுதிகளும் அடங்கும். இதனைத் திருவண்ணாமலையில் கிடைத்த கி.பி.1317-ஆம் ஆண்டு கல்வெட்டின் மூலம் அறிகின்றோம்.

மூன்றாவது வல்லாள மகாராஜனுக்கு வீர வைபோக வல்லாளமகாராஜன் என்ற பெயரும் உண்டு. திருவண்ணா மலை ஆலயங்களில் உள்ள கல்வெட்டுக்கள் முழுதும் இவன் காலத்தில் ஏற்பட்டவையே. இவை மூன்றாம் பிரகார மதிற்சுவரிலும் செதுக்கப்பட்டுள்ளன. முக்கியமாகக் கவனிக் கப்பட வேண்டியது என்னவென்றால் அவன் கட்டிய வல்லாள இராஜகோபுரத்தைப் பற்றி எந்த விவரமும் இக் கல்வெட்டுகளில் இல்லை. இது பரம்பரையாக வல்லாள கோபுரம் என்று அழைக்கப்பட்டாலும் அவன் கட்டியதற்கு ஆதாரமாய் இந்தக் கோயிலில் உள்ள ஐநூறு கல்வெட்டுகளில் ஒன்றைத் தவிர வேறு எதிலும் குறிப்பு இல்லை. ஒரே ஒரு கல்வெட்டு மட்டும்தான் இதை வல்லாள கோபுரம் என்று குறிப்பிடுவதாக அறியப்படுகிறது. மேலும் இக்கல்வெட்டு களிலிருந்து மூன்றாவது பிரகாரமும் கிழக்குக் கோபுரமும் கி.பி. 1317-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டன என்றும் கல்வெட்டு ஒன்று கூறுகிறது. இந்தக் குறிப்பிட்ட கல்வெட்டு மிக முக்கியமான செய்தியை நமக்குக் கூறுகின்றது. இது தேவநாகரி யிலும் கிரந்தங்களிலும் தமிழிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டுகளில் இரண்டு தேதிகள் குறிக்கப் பட்டுள்ளன. ஒன்று கிறித்தவ ஆண்டு பிப்ரவரி 15-ஆம் தேதி 1317-ஆம் வருடம்; மற்றொன்று ஆகஸ்ட் 5-ஆம் தேதி 1317-ஆம் வருடம். இந்த இரு தினங்களிலும் இந்தக் கல்வெட்டு பொறிக்கப்பட்டதாக ஓர் அறிவிப்பு கூறுகின்றது.

வல்லாள மகாராஜன் திருவண்ணாமலைக்கு வந்தபொழுது அவன் செய்த நன்கொடைகளைப் பற்றிக் கூறுகிறது. இக் கல்வெட்டில் திருவண்ணாமலை 'அருண சமுத்ர வல்லாள பட்டணம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இந்தப் பகுதி ஹொய்சாள மண்டலத்தின் தலைநகரமாக விளங்கியது என்றும் கூறப்படுகிறது.

நிலவரி, கடைகள் வரி முதலியவற்றிலிருந்து கிடைத்த தொகையை அரசன் (மூன்றாம் வல்லாள மகாராஜன்) அண்ணாமலை ஆலயத்திற்கு தினமும் மூன்றுவேளை வழி பாட்டிற்கும் பஞ்சபருவச்செலவை அதாவது பிரதோஷம், அமாவாசை, பௌர்ணமி (தீபப் பெருவிழா) முதலிய பண்டிகைகளுக்கு ஆகும் செலவை இதிலிருந்து எடுத்துக் கொள்ளும்படிப் பணித்தான். இச்செய்திகள் வடமொழியில் பொறிக்கப்பட்டுள்ளன. தமிழிப் பகுதியில் இவ்வரசன் அண்ணாமலையார் வழிபாட்டிற்காகவும் மேலும் விழாக் களுக்காகவும் 10,000 பொன் நன்கொடையாக அளித்ததாகவும் கூறப்படுகிறது. இக்காலத்தில்தான் மூன்றாவது பிரகாரமும் கிழக்குக் கோபுரமும் கட்டப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் அறுபது ஆண்டுகளுக்குப் பிறகு செதுக்கப்பட்ட கல்வெட்டில் இந்தக் கோபுரத்தை வீரவல்லாள திருவாசல் என்று குறிப்பிட்டிருப்பது காணக்கிடக்கிறது.

மேலும் இங்குள்ள கல்வெட்டுகளில் நிலங்களின் நன் கொடையும், சிவாச்சாரியர்களுக்கு அளித்த தானமும் கூறப்பட்டுள்ளன. இக்காலத்தில்தான் நான்காவது பிரகார மதிற்சுவரும் கட்டப்பட்டது. வல்லாள மகாராஜன் முப்பத்து மூன்றாயிரம் பொன் ஆலயத்திற்காகக் கொடுத்ததை மற்றொரு கல்வெட்டு கூறுகிறது. இதுவேதான் அரசன் ஒருவன் கொடுத்த தொகையில் மிக அதிகமாகும் (ஸ்ரீ அருணாசலேசுவரர் திருக்கோவில் மஹாகும்பாபிஷேக மலர், 2002; முனைவர் ச. மெய்யப்பன், திருவண்ணாமலை, மணிவாசகர் பதிப்பகம்).

இத்தகைய சிவ நெறி வழிபாட்டினனான வல்லாள மகா ராஜனின் புகழைப் புராணக்கதையோடு இணைத்துப் பாடியதில் வியப்பொன்றுமில்லை என்று கூறலாம்.

செண்பக நாச்சியார்கதை செண்பக நாச்சியாரம்மன் எனும் தெய்வ வரலாற்றைப் பேசுகிறது. இக்கதைப்பாடலை **அருத(ன)குட்டி நாடார்** என்பவர் கொல்லம் ஆண்டு 792 மாசி மாதம் 4ஆம் நாள் வெள்ளிக்கிழமை (கி.பி.1617) தேரியூரான தாங்கையூரில் இருந்த நாச்சியார் கோவிலில் அரங்கேற்றம் செய்தார் (ஆ. தசரதன், செண்பகநாச்சியார் கதை, ப. 13). கைலாய மலையின் கீழ்த்திசையில் நாச்சியாரம்மன் வீற்றிருக் கிறாள். அவளின் பெருமையை அறிந்த சிவன், அவளை அழைத்து வரங்கொடுத்து, ஆவினன் குடிக்குப் போகச் சொல்கிறார். இடும்பன் தொல்லைதரச் சிவன் முருகனை அனுப்பி இடும்பனின் தொல்லையை அகற்றுகிறார். நாச்சி யாரம்மன் முருகப்பெருமானை வழிபட்டு வீற்றிருக்கிறாள். அதன் பின் தனது பக்தன் அருத(ன)குட்டியை ஆட் கொள்ளத் தென்பகுதிக்குப் பயணமாகி ஆட்கொள்கிறாள். பின் அங்கு வழிபாடு பெற்று அமர்கிறாள் என்று கதை அமைகிறது.

இக்கதைப்பாடலைக் குறித்து ஆ. தசரதன் அவர்கள் விரிவான ஆய்வினை நிகழ்த்தியுள்ளார். அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திலுள்ள மருத்துவத் தமிழ்ச் சுவடிகளை விளக்க அட்டவணைகள் திட்டப் பணிக்காகப் புரட்டிய போது அதில் சுவடிக் குறிப்பாகச் (colophon) சோழமாதேவிப் பழனி... என்றிருந்த ஒரு குறிப்பிலிருந்து ஆவினன்குடி எனும் பழனித் திருத்தலம் ஒரு காலத்தில் சோழர் ஆட்சியைச் சார்ந்திருந்தது என்றும் அந்நாட்டு அரசிளங் குமரியின் பெயரால் இருந்தது என்றும் அறியமுடிந்தது. இதன் மூலம் பழனித் திருத்தலத்தில் சோழனின் படைப்பிரிவு ஒன்று இருந்தது. அங்கே அருத(ன)க் குட்டியாரின் முன்னோர் இருந்தனர் என்றும் அது அங்கிருந்து இடம்பெயர்ந்து போன பின் அவர்கள் தெற்கே குடிபெயர்ந்திருக்கலாம் என்றும் அறியலாம். இதற்குச் சான்றாகக் கி.பி.10ஆம் நூற்றாண்டுப் பழனிக் கல்வெட்டு ஒன்றில் மூல பல கொற்றவாளர்

எழுநூற்றுவர் என்று குறிப்பிடப்படுவதைக் காணலாம். இது வீரகேரளர் என்ற மன்னன் காலத்தது ஆகும்.

மேலும் இக்கதைப்பாடலைப் பாடிய அருத(ன) குட்டியார் தம்மை உளப்படுத்திப் பாடியிருக்கக் கூடிய சில பகுதிகளில் அன்னார் சிறுவயதில் சேணாட்டிலிருந்து மானாட்டுக்குக் குடிபெயர்ந்ததாகவும் அன்னாரைக் காணும் பொருட்டே செண்பகநாச்சியாரம்மனும் மாநாட்டுத் தாங்கையூருக்குக் குடிபெயர்ந்ததாகவும் அறிய முடிகின்றது. இதனால் பிற்காலச் சோழர்களின் ஆட்சியின் இறுதிக் காலத்தில் ஒரு குடியேற்றமும், அருத(ன)குட்டியார் பிறந்து சிறிது காலத்திற்குப் பின் மற்றொரு குடியேற்றமும் ஏற்பட்டிருந்ததாகத் தெரிகிறது (செண்பகநாச்சியார் கதைப் பாடல், ப. 19 - 20)

இவரின் கருத்தின் அடிப்படையில் பார்க்கின்றபொழுது செண்பக நாச்சியாரம்மன் அருத(ன)குட்டி நாடாரின் மூதாதையரின் குலதெய்வமாக இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. மேலும் மூதாதையர் இடம்பெயர்ந்த பொழுது குலதெய்வத்தையும் இடப்பெயர்ச்சி செய்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. ஆனால் அதனை மாற்றி அருத(ன)குட்டிநாடார் குலதெய்வ வரலாற்றைத் தன்னோடு இணைத்துப் பாடியிருக்க வேண்டும் என்று உணரமுடிகிறது.

வண்ணமுத்துசாமி கதை ஒரு சமூகக் கதைப்பாடல் ஆகும். இக்கதை ஆ. பிச்சை தேவர் வாய்மொழியாகப் பாடக்கேட்டு எழுதிப் பிரதி செய்யப்பட்டது. காத்தவராயன் கதை, சிதம்பரநாடார்கதை, தூண்டிமுத்து கதை, பூச்சியம்மன் கதை ஆகிய கதைப்பாடல்கள் மேல்தட்டு வகுப்புப் பெண்ணை விரும்பியவரின் கொலைச் செய்தியை அடிப்படையாக வைத்து பாடப்பட்டவை. வண்ணமுத்துசாமி கதையும் இந்நிலை சார்ந்ததுதான். பத்தபயப்புநேரியைச் சேர்ந்த மாடப்ப பணிக்கரும் மாடிப்பிள்ளையும் குழந்தைவேண்டித் தவமிருக்கின்றனர். ஆற்றில் வந்த குழந்தையை எடுத்து வண்ணமுத்து என்று பெயரிட்டு வளர்க்கின்றனர். அதே வேளையில் குருவிலாங்குளம் ஆளாத்தி பிள்ளை, சுந்தராட்சி

அம்மை தம்பதியர்க்கு **விசாலாட்சி** என்ற பெண் குழந்தை பிறக்கிறது. பருவவயதை அடைந்தபொழுது வண்ண முத்துவும் விசாலாட்சியும் விரும்புகின்றனர். விசாலாட்சி கர்ப்பமாகி ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கிறாள். ஆனால் குழந்தைக்கு அப்பன் யார்? என்று கூற மறுக்கிறாள். மகன் **தமிழ்அழகன்** வளர்ந்து தந்தையைத் தேடிச்செல்கிறான். அப்போது சாமியார் ஒருவன் வண்ணமுத்துவும் விசாலாட்சி யும் தனிமையில் சந்திப்பதையும், வண்ணமுத்துதான் அவனது தந்தை என்பதையும் தமிழ்அழகனுக்குக் கூறிவிடுகிறார். கோபம் கொண்ட மகன் தாயையும் தந்தையையும் கொன்றுவிட்டுத் தனது உயிரையும் மாய்த்துக் கொள்கிறான். மூவரும் சிவனிடம் வரம் வாங்கிப் பிராமணர்களுக்குத் தொல்லை கொடுத்துக் கூனியூரில் வழிபாடு பெறுகின்றனர். திருமலைக் கோவிலின் அருகிலும் வண்ணமுத்துவுக்கு வழிபாடு உள்ளது. வண்ணமுத்துவை வாசமுத்து என்ற பெயரிலும் மக்கள் வழிபடுகின்றனர்.

இக்கதையின் மூலக்கதை கதைப்பாடலில் மாற்றிப் பாடப்பட்டது போல் தோன்றுகிறது. அதாவது உயர் ஜாதி வர்க்கத்தினரின் பெண்ணை விரும்பியதற்காக வண்ணார் குலத்தைச் சேர்ந்த வண்ணமுத்துவையும் அவனை விரும்பிய விசாலாட்சியையும் அவர்களுக்குப் பிறந்த குழந்தையையும் உயர் வர்க்கத்தினர் கொலை செய்திருக்க வேண்டும். ஆனால் அதனை மாற்றி மகனே தாயையும் தந்தையையும் கொன்று விட்டு உயிரைவிட்டதாகக் கதை மாற்றிப் பாடப்பட்டது போல் தோன்றுகிறது. இதுபோன்று மாற்றிப் பாடப்பட்ட பலகதைகள் வழக்கிலுள்ளன. வண்ணமுத்துக் கதையினை வாசமுத்துக் கதையும் கூறுகிறது. அக்கதை மேற்சொன்ன கதையிலிருந்து முரண்பட்டு ஓரளவு உண்மையினை வெளிப் படையாகக் கூறியுள்ளது. அதாவது வண்ணார் குலத்தைச் சேர்ந்த வாசமுத்து பள்ளர் இனப் பெண்ணை விரும்பியதால் படுகொலை செய்யப்படுவதாக வாசமுத்து கதை அமை கிறது. எனவே எப்படிப் பார்த்தாலும் வண்ணமுத்துக் கதை சாதிய மீறலின் வன்மத்தை வெளிப்படுத்துகிறது எனலாம்.

நல்லதங்காள் கதை ஒரு சமூகக் கதைப்பாடல். பெண்ணுக்குச் சொத்துரிமை வேண்டும் என்ற சிந்தனையின் அடிப்படையில் தோன்றிய கதைப்பாடலாகும். காசி ராஜனுக்கு வாழ்க்கைப்பட்டு போன நல்லதங்காள், ஏழு குழந்தைகளுடன் பஞ்சம் காரணமாக வாழ வகை தேடி, அண்ணன் நல்லதம்பி வீட்டிற்கு வருகிறாள். அங்கு அண்ணன் மனைவி மூளியலங்காரியால் அவமானப்படுத்தப்படுகிறாள். எனவே ஏழு குழந்தைகளையும் கிணற்றில் தள்ளிக் கொன்றுவிட்டுத் தானும் உயிரை மாய்த்துக் கொள்கிறாள். அண்ணன் நல்லதம்பி மனைவியைப் பழிவாங்கிவிட்டு உயிரை விடுகிறான். காசிராஜனும் உயிரை விடுகிறான். அனைவரும் தெய்வமாகின்றனர் என்று கதை அமைகிறது.

நல்லதங்காள் கதை முற்காலத்தில் தமிழக மக்களிடம் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தது. நல்லதங்காள் கூத்தும் மக்களிடம் நிகழ்த்தப்பட்டது. நல்லதங்காள் கதை நிகழ்வு ஆந்திரா என்றும் தமிழகம் என்றும் இருவேறுபட்ட கருத்துக்கள் உள்ளன. சில ஆய்வாளர்கள் நல்லதங்காள் வழிபாடு தமிழகத்தில் இருப்பதையும் நல்லதங்காள் குழந்தை களுடன் குதித்து இறந்த கிணறு மதுரை அருகில் இருப்பதை யும் சுட்டிக்காட்டிக் கதை நிகழ்வு தமிழகமே என்று வாதிடுகின்றனர். எனினும் கதைத்தலைவி தெலுங்கர் இனத் தவள் என்று ஒப்புக் கொள்கின்றனர்.

நளாயினிகதை நிடதநாட்டு மன்னன் நளன். அவனுடைய மனைவி பெயர் தமையந்தி. அவர்களின் புதல்வி நளாயினி. நளாயினி திருமண வாழ்வை வெறுத்து வாழ்ந்து வருகிறாள். பலநாட்டு அரசர்கள் நளாயினியை மணமுடிக்க வந்தனர். ஆனால் மறுத்துவிடுகிறாள். ஆண்களை நளாயினி வெறுப் பதை அறிந்த மவுக்கல்யர் எனும் முனிவர், கோபம் கொண்டு, மன்மத ரூபமிட்டு நளாயினியை மயக்கி, ஏமாற்றி திருமணம் செய்து கொள்கிறார். திருமணம் முடிந்த பின்பு நளாயினிக்குத் தக்க பாடம் கற்பிக்க எண்ணி பல்வேறு கொடுமைகள் செய்கிறார். ஆனால் நளாயினி பொறுமையாக அதனைப் பொறுத்து கணவனுக்கு வேண்டிய பணிவிடைகளைச்

செய்கிறாள். முனிவர் நளாயினியை மேலும் சோதிக்க எண்ணி குஷ்டரோகியாக மாறுகிறார். குஷ்டம் நீங்க புண்ணிய தலங்கள் சென்று தீர்த்தமாட வேண்டும். ஆனால் என்னால் நடக்க முடியாதே என்று பாவனை செய்கிறார். நளாயினி கணவனின் நோய் தீர கூடையில் கணவனை வைத்து சுமந்து சென்று பல்வேறு திருத்தலங்களில் தீர்த்தமாட வைக்கிறாள். நோய் குணமாகவில்லை. பின்னர் பொன்னி என்ற தாசியின் மேல் கொண்ட மோகத்தால்தான் குஷ்டநோய் வந்தது. அவளை ஒரு நாள் சேர்ந்தால் நோய் நீங்கிவிடும். ஆனால் அவளிடம் கொடுக்க பணம் இல்லையே என்று கூறி நடிக்கிறார். நளாயினி பொன்னியுடன் கணவரைச் சேர்த்து வைக்க பொன்னியின் வீட்டின்முன், தினம் தினம் அதிகாலையில் சுத்தம் செய்து, சாணம் தெளித்து கோலமிடுகிறாள். அதைக்கண்ட பொன்னி நளாயினிடம் ஏன் இவ்வாறு தினமும் என் வீட்டின் முன்பு செய்கிறாய்? என்று கேட்கிறாள். நளாயினி கணவனின் நிலையையும் விருப்பத்தையும் கூறுகிறாள். பொன்னியும் சரி வரச்சொல் உன் கணவனை என்கிறாள். தாசியிடம் சென்ற மவுக்கல்யர் தனது மன்மத ரூபத்தை வெளியில் சொன்னால் உன் தலை சுக்கலாக வெடித்து சிதறிவிடும் என்கிறார். எனவே தாசி அதனை யாரிடமும் கூறாமல் மறைத்து விடுகிறாள்.

தாசியுடன் இருந்துவிட்டு திரும்பிய பின்பு கணவனின் நோய் குணமாகி இருக்கிறதா? என்று நளாயினி தடவிப் பார்த்தாள். ஆனால் குணமாகவில்லை. மீண்டும் விடிவதற்குள் குற்றாலம் சென்று குற்றாலீசுவரரை வழிபட்டால் நோய்தீரும் என்றார் மவுக்கல்யர். எனவே கணவன் உயிரைக் காக்க கணவனைக் கூடையில் சுமந்தவாறு ஓடோடி வரும்போது முனிவரின் சூழ்ச்சியால் காற்றும் பெருமழையும் அடிக்கிறது. அதைப் பொருட்படுத்தாமல் தனது உடம்பில் கணவனின் உடலில் உள்ள புழுக்கள் நெளிவதையும் பொருட் படுத்தாமலும் ஓடோடி வருகிறாள். இருட்டில் ஓடிவரும்போது கழுவில் ஏற்றப்பட்ட மாண்டவியர் எனும் முனிவரின் கழுவில் கால் தட்டுகிறது. அவர் வலிதாளாமல் கோபம் கொண்டு நாளை

சூரியன் உதயமானால் உன் கணவன் இறந்துபோவான் என்று சாபமிடுகிறார். நளாயினி மன்னிப்பு கேட்டும் முனிவர் மனம் இரங்கவில்லை. உடனே கோபம் கொண்ட நளாயினி, "நான் ஒரு ஆடவருக்கு கை கொடுத்து, அவரையே தெய்வமென்று வணங்கி அவர் வார்த்தைக்கு கீழ்படிந்து வணங்கி ஒரு கற்புடையவளானால் சூரிய பகவானே! நீ உதிக்காமல் இருக்கக் கடவது" என்று சபித்தாள். உலகமே சூரியன் உதிக்காமல் சூன்யமானதால் சிவன், விஷ்ணு, பிரம்மா மற்றும் தேவர்கள் வந்து முனிவரையும் நளாயினியையும் சமாதானம் செய்தனர். பின்பு இருவரும் சாபத்தைத் திரும்பப் பெறுகின்றனர். அப்போது மவுக்கல்யர் சுயரூபம் எடுக்கிறார். சுயரூபம் எடுத்து "பெண்ணே! ஆடவரை நீ குறை கூறியதால் தான் நான் இவ்வளவு நாடகத்தையும் நடத்தினேன். இப்பிறவியில் உனக்கு நான் இன்பம் தரவில்லை. அடுத்த பிறவியில் ஐந்து பேராக (தர்மன், அர்ச்சுனன், பீமன், நகுலன், சகாதேவன்) வந்து இன்பம் தருகிறேன் என்றார். நளாயினியும் மகிழ்ச்சியாக முனிவரின் பக்கத்தில் அமர்கிறாள். பின்னர் சிவன் பார்வதி தேவியருடன் கைலாய மலையில் போய் அமர்கின்றனர்.

நளாயினி கதை ஒரு புராணக் கதைப்பாடல் வகையைச் சார்ந்தது. பத்தினியாக வாழ்ந்து பேருபெற்ற நளாயினி வரலாற்றைக் கதை எடுத்துரைக்கிறது. 'கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்', 'கணவனே கண்கண்ட தெய்வம்' எனும் பழமொழிகளை வலியுறுத்தும் கதையாக அமைந்துள்ளது. கற்பு நெறியும், ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாடும் வலியுறுத்துவதாக அமைந்துள்ளது. பத்தினிப் பெண்ணின் பெருமையினை எடுத்துரைக்கிறது.

அனந்தாயி கீரிப்பிள்ளை கதையும் ஒரு சமூகக் கதைப் பாடலாகவும் பெண்ணுக்குச் சொத்துரிமை வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துவதாகவும் அமைகிறது. அரிகிருஷ்ணப் பார்ப்பானின் மனைவி அனந்தாயி. அவள் வீட்டில் வளர்த்த கீரிப்பிள்ளை, தனது குழந்தையைக் கடித்துக் கொன்று விட்டது என்று தவறாக எண்ணிக் கீரிப்பிள்ளையைக் கொன்று விடுகிறாள். ஆனால் பாம்பிடமிருந்து கீரிப்பிள்ளை குழந்தை

யைக் காப்பாற்றியதைப் பின்பு அறிந்து கண்ணீர் விடுகிறாள். அந்தப்பாவம் தீர அரிகிருஷ்ணப்பார்ப்பான் தீர்த்தயாத்திரை செல்கிறான். அங்குப் பாம்புகடித்து இறந்து விடுகிறான். அரிகிருஷ்ணப்பார்ப்பான் இறந்ததும் அவனது உறவினர் அனந்தாயியையும் அவளது குழந்தையையும் வீட்டை விட்டு விரட்டுகின்றனர். ஊர் வழக்காளி அதற்கு உதவிசெய்கிறான். இதனால் மனம் உடைந்த அனந்தாயியும் குழந்தையும் தவமிருந்து வரம்பெற்று, சதிகாரர்களை அழித்து, பதினெட்டு மாரியம்மனாகப் பிறப்பெடுக்கின்றனர்.

அனந்தாயி கீரிப்பிள்ளைக் கதை தொன்மையான கீரிப் பிள்ளைக் கதையினை அடிப்படையாக வைத்துப் படைக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு நாட்டுப்புறத் தெய்வ தோற்றமும் ஒரு புராணக் கதையினை அடியொற்றி அமைவதுபோல் மாரியம்மனின் தோற்றப்பாட்டிற்குக் கீரிப் பிள்ளைக்கதை பயன்படுத்தப்பட்டுள்ளது என்று தோன்றுகிறது. இக் கதைப் பாடல் நாகதோச நம்பிக்கை குறித்து வலியுறுத்துவதாகவும் அமைந்துள்ளது. மேலும் உயிர்களுக்குத் துன்பமிழைத்தால் அது பெரும்பாவம் என்றும் அதற்கான பலன்கிடைக்கும் என்றும் இயம்பப்பட்டுள்ளது. பத்தினி சாபம் பலிப்பதோடு பத்தினி தெய்வமாவாள் என்ற கருத்தையும் வலியுறுத்துவதா யுள்ளது. பதினெட்டு மாரியம்மனின் பிறப்பினைச் சுட்டுவதாய் இக்கதைப்பாடல் அமைந்துள்ளது. மேலும் அனந்தாயி கீரிப்பிள்ளை கதையின் முடிவில் மாரியம்மனுக் குரிய கும்மிப்பாட்டும் இணைக்கப்பட்டுள்ளது என்பது கவனத்திற்குரியது.

நாககன்னி கதை புராணக்கதைகளுள் ஒன்று. நாககன்னி தெய்வக்கன்னி இருவரும் அக்கா தங்கையர் இருவருடைய போட்டி மனப்பான்மையால் போட்டி நடத்தி, அதில் நாககன்னி கார்கோடன் உதவியுடன் தெய்வக்கன்னியை வெற்றிபெறுகிறாள். தோல்வியுற்ற தெய்வக்கன்னி அடிமை வேலை செய்து கண்ணீர் வடிக்கிறாள். சிவன் அவளுக்கு உதவக் கருடனைப் பிறவி செய்து கார்க்கோடனை அழிக்கிறார். பின்னர் சிவன் முப்புராதியர்களை அழித்த வரலாறு அமைகிறது. ஆனால் அக்கதை முடிவடையாமல்

உள்ளது. நாககன்னிக் கதை முத்தாரம்மன் கதையின் கிளைக் கதையாகும். ஆனால் நாட்டுப்புற கவிஞர் அதனை தனிக் கதைப்பாடலாக உருவாக்கியுள்ளார்.

நாககன்னி கதை புராண மாந்தர் பெருமை கூறுவதாக அமைந்துள்ளது. மேலும் அக்காள் தங்கை இருவரின் போட்டியினையும் பொறாமையினையும் அதனால் ஏற்படும் விளைவுகளையும் குறிப்பிடுகிறது. மேலும் சிவபெருமானின் பெருமையும் திருவிளையாடலும் இணைத்துக் கதைப்பாடல் பாடப்பட்டுள்ளது.

சித்திரபுத்திர நயினார் கதையும், அமராபதி கதையும் சித்திரபுத்திர நயினாரின் பெருமையினையும் வழிபாட்டையும் கூறுவதாக அமைந்துள்ளன. **சித்திரபுத்திர நயினார் கதை** சித்திரபுத்திரநயினாரின் தோற்றம், பதவி ஏற்பு மற்றும் குற்றமிழைத்தவர்களுக்கு மேலுலகில் வழங்கும் தண்டனை, நல்லவர்களுக்கு வழங்கும் நற்பதம் ஆகியவற்றை எடுத் துரைக்கிறது. சித்திரபுத்திர நயினார் கதை மனிதன் வாழுகையில் நன்முறையில் வாழவேண்டும், இல்லை எனில் மேலுலகில் அதற்கான தண்டனை கிடைக்கும் என்று கூறுவதோடு, மனிதனை நல்ல முறையில் வாழவைக்க அறிவுரை வழங்குவதாயும் அமைந்துள்ளது. சித்திரபுத்திர நயினாரின் கதைப்பாடல் சுவடியின் தொடர்ச்சியாக **அமராபதிகதை** அமைந்துள்ளது. இக்கதை சித்திரபுத்திர நயினார் நோன்பினையும் அதை மேற்கொள்வதால் அடையும் மேலுலகப் பதவியினையும் எடுத்துரைக்கிறது. அமராபதி எனும் செட்டிப்பெண் சித்திரபுத்திரர் நோன்பினை மேற்கொள்ளாமல் அடைந்த இன்னலையும் சித்திரபுத்திரர் நோன்பினை மேற்கொண்டபின் அடைந்த மேன்மை யினையும் அமராபதி கதை எடுத்துரைக்கிறது.

கஞ்சன்வதைக் கதை எனும் கதைப்பாடல் கஞ்சனின் அழிவையும் கிருஷ்ணரின் பெருமையினையும் எடுத்துரைக் கிறது. இக்கதை மகாபாரதத்தின் கிளைக்கதை. மகாபாரதத்தின் கிளைக்கதை நாட்டுப்புற மரபில் பாடப்பட்டுள்ளது. கஞ்சன் பெற்ற சாபம், கிருஷ்ணனின் பிறப்பு மற்றும் லீலைகள்

கதையின் பொருண்மையாக அமைந்துள்ளன. கஞ்சனின் மரணத்துடன் கதை முடிவடைவதால் கஞ்சன் வதைக் கதை என்று புலவர் பெயரிட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது. இக் கதைப்பாடலுக்கு **'ஸ்ரீ கிருஷ்ணன் கதை'** என்ற பெயரும் நிலவுகிறது. கதைப்பாடலை அகஸ்தீஸ்வரத் தைச் சேர்ந்த **கு. ஆறுமுகப் பெருமாள் நாடார்** பாடியுள்ளார்.

பெருமாள் சுவாமி கதை திருமால் ஸ்ரீ ரங்கத்திலிருந்து இடம் பெயர்ந்து திருவனந்தபுரம் வந்த வரலாற்றைக் கூறுகிறது. மேலும் திருவனந்தபுரத்தில் திருமாலுக்குக் கோயில் எழுப்பிய வரலாறும் கூறப்பட்டுள்ளது. திருமாலுடன் சங்கிலிப்பூதம், கேத்திரபாலன், காளி முதலிய தெய்வாரும் இடம்பெயர்ந்து வந்ததாகக் கதைப்பாடல் கூறுகிறது. இக்கதைப்பாடல் திருமாலின் பெருமையினை உலகிற்கு எடுத்துரைக்கும் கதைப்பாடலாக அமைந்துள்ளது. இதனை இயற்றிய புலவர் **அருத(ன) குட்டி நாடார்.**

நாலுமந்திரிகும்மி போதவாதித்தன், போதவிபூஷணன், போதவியாகர்னன், போதசந்திரன் எனும் நான்கு மந்திரிகளின் மதிநுட்பத்தை வெளிக்காட்டும் வகையில் அமைந்துள்ளது. மதுரை மன்னன் அழகேசனைக் காப்பதற்காக மந்திரி போதவாதித்தன் எடுத்த முயற்சியில் சந்தர்ப்பச் சூழ்நிலை யால் குற்றவாளியாகிறான். அழகேசன் அவனைத் தண்டிக்க முயலுகையில் மதிநுட்பமிக்க மந்திரிகள் பல்வேறு நிகழ்வு களாகிய நீதிக்கதைகளைக் கூறி மன்னனின் மனதைத் தெளிய வைக்கின்றனர். இறுதியில் மன்னன் மந்திரி போதவாதித்தன் குற்றமற்றவர் என்று விடுதலை செய்வதாகக் கதை அமைகிறது. இக்கதை ஊழ்வினையும் சந்தர்ப்பச் சூழ்நிலையும் ஒருவனைக் குற்றவாளியாக்கி தண்டனை பெற்றுத் தந்துவிடும் என்று அறிவுறுத்துகிறது. இது கும்மிப்பாடல் வகையில் கதை தழுவிய நிலையில் அமைந்துள்ளது. நாலுமந்திரி கும்மியை இயற்றியவர் **சின்னதம்பி ஐயர்** ஆவார்.

வள்ளித்திருமணம் கதை ஒரு புராணக் கதைப்பாடல் ஆகும். அதாவது, நம்பி எனும் வேடர்குலத் தலைவன் சிற்றூர் எனும் பகுதியை ஆண்டு வருகிறான். அவன் மனைவியின் பெயர்

மோகினி. இவர்களுக்கு ஏழு ஆண் குழந்தைகள் பிறந்தன. ஆனால் ஆசையாய் வளர்க்க ஒரு பெண் குழந்தை இல்லாமல் மனம் வாடினார். ஒருநாள் நம்பி காட்டில் வேட்டையாடும் பொழுது வள்ளிக்கிழங்கெடுத்த ஒரு குழியில் பெண்மகவு ஒன்றைக் கண்டெடுத்து மனைவியிடம் கொடுத்து வளர்க்கு மாறு கூறினான். வள்ளி பருவவயதை அடைந்தபொழுது தினைப்புனக் காவலுக்கு அனுப்பப்படுகிறாள். தினைப் புனத்தில் வள்ளியைக் கண்டு நாரதர் உனக்கான மணவாளன் முருகப்பெருமான் தான் எனக் கூறுகிறார். வள்ளி கோப மடைந்து நாரதரை விரட்டியடிக்கிறாள். நாரதர் முருகப்பெரு மானிடம் சென்று வள்ளியினுடைய அழகினைக் கூறி, முருகனின் மனதில் ஆசையைத் தூண்டிவிடுகிறார்.

முருகன் வேடனாக வேடம் தரித்து வள்ளியிடம் சென்று திருவிளையாடல் நடத்துகிறார். வள்ளி அண்ணன்மார்களை அழைக்க முருகன் மறைந்துவிடுகிறார். பின்பு வளையல் செட்டி வேடமிட்டும் வயதான முதியவர் வேடமிட்டும் திருவிளை யாடல் நடத்துகிறார். வள்ளி அண்ணன்மார்களை அழைக்க முருகன் மறைந்துவிடுகிறார். பின்னர் கணபதியின் துணை யுடன் வள்ளியைத் திருமணத்திற்கு சம்மதிக்க வைத்து மறைந்து விடுகிறார். வள்ளி உண்மை நிலையைப் புரிந்து அழுது புலம்புகிறாள். முருகபெருமான் காட்சியளித்து கந்தர்வ மணம் செய்து கொள்கிறார். அப்போது அங்கு வந்த நாரதரிடம் வள்ளி மன்னிப்பு கோருகிறாள். பின்பு அங்கு வந்த வள்ளியின் சகோதரர்கள் முருகனுடன் மோதி மடிகின்றனர். வள்ளியின் வேண்டுதலை ஏற்று மீண்டும் அவர்களை உயிர்பிக்கிறார் முருகன். அதன்பின்பு இருவரும் விடைபெற்று செந்திலம் பதியை அடைகின்றனர்.

இக்கதையினைத் தொடர்ந்து வள்ளி தெய்வானை ஏசல் பகுதி தனியாக அமைந்துள்ளது. வள்ளி தெய்வானை ஏசல் தனியாகப் படைக்கப்பட்ட கதை தழுவிய பாடலாகும். அதில் முருகப்பெருமான் வள்ளியை மணமுடித்து தனது வீட்டிற்கு அழைத்துச் செல்கிறார். அங்கு வள்ளிக்கும் தெய்வானைக்கும் வாக்குவாதம் நடக்கிறது. இறுதியில் முருகப்பெருமான்

இருவரையும் சந்து செய்து ஒற்றுமையாக வாழவைக்கிறார். வள்ளித்திருமணம் கதையை இயற்றியவர் மாரிமுத்துப் புலவர் ஆவார். மாரிமுத்துப் புலவர் வள்ளித் திருமணம் கதையை இசைப்பாடலுடன் அமைத்துள்ளார். பாடல்கள் முத்து கிருஷ்ணன் என்பவரின் இசைப்பாடல்களை அடிப்படை யாகக் கொண்டது என்ற செய்தியும் கதைப்பாடலில் கூறப்பட் டுள்ளது.

புராணங்கள் மனித சமுதாயத்தின் தனியுரிமைப் பத்திரம் என்பார் இ.பி.டைலர். மாலினோவஸ்கி இவை மனிதனின் தொடக்க நிலைகளைப் பற்றியும் தோற்றங்களைப் பற்றியும் கூறுவன. நடந்த நிகழ்ச்சிகளைக் குறிப்பன. அவற்றில் காணும் பாத்திரங்கள் கற்பனையாக இருக்கும் என்பார். மார்ஸ்முல்லர் ஒவ்வொரு புராணமும் ஏதோ ஓர் உண்மையைக் கூற விழைகிறது. அது அடுக்காக அமைந்த பல்வேறு செய்திகளை எல்லாம் அகற்றிக் கொண்டே வந்தால் செய்தியாகிய உண்மை இறுதியில் கிடைத்துவிடும் என்று குறிப்பிடுகிறார்.

மிகப்பழமையும் தொன்மையும் வாய்ந்தவற்றைப் புராதனம் என்பர். எனவே புராதனம் வாய்ந்த நூற்களைப் புராண நூல்கள் என்று கூறுதலும் உண்டு. புராணம் என்பதைப் புராதனம் என்பதோடு பழமையான வரலாறு என்னும் பொருளிலும் வழங்கலாம் என்பார் சு.சண்முகசுந்தரம் (நாட்டுப்புறவியல், ப.263).

தமிழில் முதலில் தோன்றிய புராணம் திருத்தொண்டர் புராணம் ஆகும். புராணம் பற்றிச் சிதம்பரப் பாட்டியல் இலக்கணம் கூறுகிறது. கடவுளரின் பராக்கிரமங்களைக் கூறுதல், தல மகிமை கூறுதல், அடியவர் பெருமையைப் பாடுதல், சாதிப் பெருமையைச் சாற்றுதல், தலைவர்களின் வரலாற்றைப் பேசுதல் என்ற வகையில் தமிழ்ப் புராணங்கள் அமைந்துள்ளன.

கந்தப் புராணத்தினுடைய ஒரு பகுதியே வள்ளித் திருமணமாகும். இக்கதையும் வடமொழியில் இருந்துதான் மொழிபெயர்க்கப்பட்டதாகத் தெரிகிறது. கந்தபுராணம், இது மகாபுராணங்கள் பதினெட்டனுள் ஒன்று. இது லக்ஷம்

கிரந்தமுடையது. இது தத்புருஷ கற்பத்தில் நடந்த சம்பவங் களையும் கந்த மூர்த்தி தோற்றம், சூராதிகள் ஒடுக்கம் முதலியவற்றையும் விவரித்துக் கூறும். இதிற் சங்கர சங்கிதையைக் கச்சியப்ப சிவாச்சாரியர் தமிழில் மொழி பெயர்த்தார். (அபிதான சிந்தாமணி, ப.405)

கந்த புராணத்தை கச்சியப்ப சிவாச்சாரியர் தமிழில் மொழிபெயர்த்த பின்பு மிகப்பெரிய செல்வாக்குப் பெற்றுள்ளது. தமிழகத்தில் அரிச்சந்திர புராணம், கந்த புராணத்தில் வள்ளித் திருமணம் சருக்கம் முதலியன மிகப் பிரபலம். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் வள்ளித் திருமண நாடகம் சுதந்திர உணர்வை மக்களுக்கு ஊட்டும் ஊடகமாகச் செயல்பட்டது. வள்ளித் திருமணம் கதை மக்களிடம் பெற்ற செல்வாக்கு அளப்பரியது. எனவே இதனை அடியொற்றியே வள்ளித் திருமணம் கதை என்பது வில்லுப்பாட்டாகப் பாடப் பெற்றிருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

வள்ளித் திருமணம் கதையின் கரு குறிஞ்சிப்பாட்டு தலைவன் தலைவியினுடைய காதலை எடுத்துரைப்பதுபோல் அமைந்துள்ளது. எனவே இதன் அடிப்படையில் பார்க்கின்ற பொழுது கந்தபுராணத்தில் வரும் வள்ளித் திருமணம் கதை தமிழ் செவ்விலக்கியம் சார்ந்தது என்று தோன்றுகிறது. இது குறித்தச் செய்தியை வள்ளித்திருமணம் குறிஞ்சிப்பாட்டு ஒப்பாய்வு என்ற நூலில் கண்டு கொள்க. வள்ளி தெய்வானை ஏசல் என்பது வள்ளித் திருமணம் கதையின் அடுத்த நிலையைக் கூறுவதாக அமைந்துள்ளது. வள்ளித்திருமணம் கதையின் முடிவிற்கு பின்பு என்ன நிகழ்ந்திருக்கும் என்ற வில்லிசைப் புலவரின் எண்ணவோட்டத்தின் விளைவாக வள்ளி தெய்வானை ஏசல் தோன்றியதாகக் கொள்ளலாம். வள்ளி தெய்வானை ஏசலை எழுதிய ஆசிரியர் பற்றிய குறிப்புகள் பாடலில் காணப்படவில்லை.

கோவலன் கதை கோவலன், கண்ணகி, மாதவி ஆகிய மூவருடைய வரலாற்றை எடுத்துரைக்கிறது. தனது பக்தனைக் கொன்ற மதுரை பாண்டியர்களை வேரறுக்க மாகாளி

கண்ணகியாகப் பிறந்து பாண்டியர்களைப் பழிதீர்ப்பதாகக் கதை அமைகிறது. கோவலன் கதை எனும் நாட்டுப்புறக் கதைப்பாடல் சிலப்பதிகாரக் கதை அமைப்பு நிலையிலிருந்து சற்று மாறுபட்டு அமைந்துள்ளது. கண்ணகியைக் கோவலன் மணமுடித்த அன்றே மாதகி கோவலனை அழைத்துச் சென்றுவிடுகிறாள். கண்ணகி பருவம் அடைந்த பின்னர், கழுத்தில் தாலி இருக்க தனது மாமியாரிடம் விபரம் கேட்டுத் தெரிந்து கொண்டு, தாசி மாதகியிடம் சிக்கிய கோவலனை மீட்கத் தான் இறந்ததாக நாடகமாடுகிறாள். கோவலன் மாதகியிடம் இறப்பு நிகழ்வுக்குச் சென்று வரஅனுமதி கேட்கிறான். இதனால் கோபம் கொண்ட மாதகி கோவலனைக் கொலை செய்ய முயல்கிறாள். கோவலன் கண்ணகியை வணங்கி, அதிலிருந்து தப்பி, கண்ணகியிடம் வந்து சிலம்பு விற்க மதுரைக்குச் சென்று இறக்கிறான். இக்கதைப்பாடலில் கோவலனைக் கள்வனாக்கிய வஞ்சிப் பத்தன் கதைக்கூறு, மாதகி உடன்கட்டை ஏறிய கதைக்கூறு, கண்ணகி, மாதகி கோவலன் அஸ்தியைக் காசி மற்றும் கங்கையில் கரைப்பது முதலிய பல கூறுகள் சிலப்பதிகாரக் கதையிலிருந்து முரண்பட்டு அமைகின்றன.

கோவலன் கதையினை நாட்டுப்புற மரபின் அடிப்படையில் பார்க்கின்றபொழுது **சிலப்பதிகாரக் கதை** கற்பனை சேர்த்து படைக்கப்பட்டதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

பார்வதியம்மன் கதை சிவன் பார்வதிக்கு மறைபொருளை உணர்த்திக் கொண்டிருக்கின்றபொழுது வேலவர் அதனை வண்டுருவில் பார்வதியின் கூந்தலில் மறைந்திருந்து கேட்டு விடுகிறார். இதனை அறிந்து சிவன் இருவருக்கும் சாபம் கொடுக்கிறார். பார்வதி மீனவர் தலைவன் அதியரசன், அருணவல்லி தம்பதிக்கு மகளாகப் பிறக்கவும் முருகன் கடலில் மகரமாகப் பிறக்கவும் சபிக்கிறார். பார்வதி "எங்களுக்கு எப்போது சாபவிமோசனம் கிடைக்கும்" என்று கேட்கிறாள். அதற்கு சிவன் "நீ வளர்ந்து பருவ மங்கையாகும்போது கடலில் மகரமாக கிடக்கும் முருகனைக் கரையேற்றி உன்னை

மணஞ்செய்து கொள்வேன்" என்கிறார். சிவனின் சாபப்படி பார்வதி அதியரசன் மகளாக வளர்ந்து பருவவயதை அடைகிறாள். கடலில் தொந்தரவு செய்யும் மகரம் குறித்து மீனவர்கள் அதியரசனிடம் முறையிடுகின்றனர். அதியரசன் கடலில் தொந்தரவு செய்யும் மகரத்தைப் பிடிப்பவர்க்கு எனது மகளை மணமுடித்துத் தருகிறேன் என்று அறிவிக்கின்றான். உடனே சிவன் சன்னியாசி வேடம் பூண்டு வந்து மகரத்தைப் பிடித்துக் கொண்டு வருகிறார். பார்வதி ஆண்டி சன்னியாசியை மணமுடிக்க விரும்பாமல் உயிரை விடுகிறாள். சிவன் பார்வதியின் உயிர் மீட்டு மணம் செய்து கொள்கிறார். பின்பு அதியரசனுக்கு வரம் நல்கி கயிலைக்குத் திரும்புகிறார்.

பார்வதியம்மன் கதை பார்வதியம்மன் பிறப்பு வரலாற்றைக் கூறுவதாய் அமைந்துள்ளது. பார்வதியம்மன் கதை பரதவர்கள் கிறித்தவர்களாக மாறுவதைத் தடுக்கப் படைக்கப்பட்ட கதையாகத் தோன்றுகிறது. பார்வதியம்மன் கோயில் கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் காணப்படுகிறது. இக் கோயில்களில் கொடைவிழா நடைபெறும்போது பார்வதியம்மன் கதை வில்லுப்பாட்டாகப் பாடப்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இலந்தையடி தட்டு, தொல்லை விளை, அகஸ்தீசுவரம் முதலிய ஊர்களில் பார்வதி கோயில் காணப்படுகிறது. இவ்வூர்களில் பார்வதி தனியாக விளங்காமல் துணைத் தெய்வங்களோடு வீற்றிருக்கின்றாள். தொல்லைவிளை என்னும் ஊரிலுள்ள பார்வதியம்மன் கோயில் பார்வதி தலைமைத் தெய்வமாகவும், துணைத்தெய்வங்களாகச் சிவன், பெருமாள், பொய்ப்பெண், புதுப்பெண், சுடலை மாடன், காலன், சாமக் கொடைக்காரன், பட்டாணித் துரை, இனப்பலி மாடன் எனும் தெய்வங்கள் காணப்படுகின்றன. இலந்தையடிதட்டு, அகஸ்தீசுவரம் ஆகிய ஊர்களில் பார்வதி தலைமைத் தெய்வமாகவும் சிவன், பெருமாள் துணைத் தெய்வங்களாகவும் உள்ளனர். எந்தக் கோயிலிலும் அதியரசனுக்கோ, அருணவல்லிக்கோ பீடம் இருப்பதாகத் தெரியவில்லை என்று சிவ.விவேகானந்தன் தெரிவிக்கிறார்.

அபிமன்னன் கதை அத்தினாபுரத்தை துரியோதனன் ஆண்டு வருகிறான். அதே வேளையில் இந்திர பிரஸ்தத்தை பஞ்ச பாண்டவர்கள் ஆண்டு வருகின்றனர். அப்படி அவர்கள் ஆண்டு வரும் நாளையிலே துரியோதனன் சூழ்ச்சி மூலம் தருமனை சகுனியோடு சூதாட வைத்து, நாடு நகரங்களை எல்லாம் பறித்துக் கொள்கிறான். மேலும் பன்னிரெண்டு ஆண்டு வனவாசமும் ஓராண்டு அஞ்ஞாத வாசமும் முடித்து வந்தால் நாட்டைத் திருப்பித் தருகிறேன் என்று கூறுகிறான். ஆனால் முன்னர் கூறியபடி நாட்டைத் திருப்பித் தர மறுக்கிறான் துரியோதனன். இதனால் பாரதப்போர் மூளுகிறது. பாரதப்போரில் பதிமூன்றாம் நாள் போரில் துரியோதனன் சக்ரவியூகம் அமைத்து பாண்டவரை அழிக்க முடிவு செய்கிறான். இதனை அறிந்த தர்மன் கண்ணனிடம் காத்தருள வேண்டுகிறான். அதற்குக் கண்ணன் "தர்மா இன்றைக்கு போர்க்களத்திற்குச் சென்று நீ போரிடக் கூடாது. மற்ற நால்வரும் திசைக் கொருவராய் சென்று போரிடவேண்டும். அவ்வாறு செய்தால் இன்றைய போரில் நீங்கள் வெற்றி பெறலாம்." என்கிறார்.

அதே வேளை கண்ணபிரான் மனத்திற்குள் "இன்றைய போரில் அர்ச்சுனன் மகன் அபிமன்னன் இறக்கவேண்டும்; பரம சிவனிடம் நான் அடகு வைத்த சக்கரத்தை மீட்க வேண்டும்" என்று எண்ணுகிறார்.

தர்மனுக்கு பதிலாகத் திருஷ்டதூய்மன் போர்க்களத்தில் துரோணரை எதிர்த்து தோல்வியடைந்து பாசறைக்குத் திரும்புகிறான். எனவே, தர்மரைக் காக்க அபிமன்னன் போர்க்களம் செல்கிறான். போர்க்களத்தில் துரோணரையும் அஸ்வத்தாமனையும், கர்ணனையும் அபிமன்னன் புறமுது கிட்டு ஓடவைக்கிறான். சகுனியின் மகன் காளிகேயனைக் கொன்று ஏனைய புதல்வர்களையும் விரட்டியடிக்கிறான். அதன்பின் போரிட வந்த துரியோதனனின் மகன் லக்கண குமாரனையும் கொல்கிறான். இதனால் துரியோதனன் மிகவும் கவலை கொள்கிறான். அப்போது அங்கு வந்த சிந்துதேசத்து அரசன் செயத்தரசன் "நான் அபிமன்னனைக் கொன்று

வருகிறேன்" என்று கூறிவிட்டு போர்க்களத்திற்கு வந்து, துரோணர், கர்ணன் ஆகியோருடன் மோசப்போர் செய்முறையைக் கூறி, அதன்படி போர் செய்து, அபிமன்னனை வீழ்த்தி, இறுதியில் அபிமன்னனை செயித்தரசன் சிகரதண்டத் தால் அடித்துக் கொன்று விடுகின்றான். அனைவரும் அழுது புலம்புகின்றனர். அர்ச்சுனனும் அழுது புலம்பி கோபம் கொண்டு நாளை அந்திப்பொழுதுக்குள் செயித்தரசனைக் கொல்வேன் என்று வஞ்சினம் கூறி பாசறையில் போய் அமர்கிறான் என்று கதை முடிகிறது.

காலசுவாமிகதை இயமதர்மனின் புகழையும் மார்க் கண்டேயனின் வரலாற்றையும் எடுத்துரைகிறது. காலசுவாமி கதையை மார்க்கண்டேயன் கதை, என்றும் குறிப்பிடு கின்றனர். மிருகண்டர், மருத்வதி தம்பதியினர் குழந்தை வேண்டி தவமிருக்கின்றனர். அப்போது, சிவன் மனதிரங்கி சப்பாணி, நோயுள்ள குழந்தை என்றால் நூறுவயது வரை வாழும். அறிவுடைய நல்ல குழந்தை என்றால் பதினாறு வயதுவரை வாழும்.எந்தக் குழந்தை வேணும் என்கிறார். மிருகண்டர், மருத்வதி தம்பதியினர் பதினாறு வயதுவரை வாழும் குழந்தையே போதும் என்கின்றனர். சிவனும் அப்படியே வரம் நல்குகிறார். குழந்தை மார்க்கண்டேயன் மிகுந்த சிவபக்தனாக விளங்குகிறான். எப்போதும் சிவ நாமத்தை உச்சரிப்பதையே பெரும்பேறாகக் கருதி வாழ்ந்து வருகிறான்.

இந்நிலையில் அவனுக்கு பதினாறு வயது நிறைவு பெற்றதால் எமதர்மன் உயிரைப் பறிக்க வருகிறான். மார்க் கண்டேயன் எமதர்மனை அருகில் வராதே என மிரட்டு கிறான். எனவே எமதர்மன் கோபத்துடன் பாசவலையை வீசுகிறான். மார்க்கண்டேயன் சிவநாமத்தை உச்சரித்து சிவலிங்கத்தை இறுக அணைத்துக் கொள்கிறான். இதனால் பாசக்கயிறு சிவலிங்கத்தையும் சுற்றிக்கொள்கிறது. இயமன் பாசக்கயிற்றை இழுத்தபோது மார்க்கண்டேயனுக்காக இரங்கிய சிவன் கோபம் கொண்டு எமதர்மனை உதைத்துக் கொன்று விடுகிறார். இயமதர்மன் இறந்ததால் உயிர்கள்

மரணமில்லாதிருந்தன. பூமி பாரம் அதனால் அதிகரித்தது. எனவே பூமாதேவி அப்பாரத்தினைத் தாங்கமுடியாமல் திருமாலிடம் முறையிடுகிறாள். அதனைத், திருமால் சிவனிடம் எடுத்துரைக்கிறார். சிவனும் இயமதர்மனை மன்னித்து உயிரெழுப்பி வரம்தருகிறார். எமதர்மன் எமபுரிக்குச் சென்று மீண்டும் உயிர்களைப் பிடிக்கும் தொழிலைச் செய்கிறான். அதனால் பூமியின் நிலைமை சீரடைந்தது. மார்க்கண்டேயன் புகழ் அவனியில் பரவியது.

மார்க்கண்டேயன் கதை ஒரு பழம் புராணக் கதை. இப் பழம்புராணத்தை வடமொழியில் மார்க்கண்டேய புராணம் எனும் பெயரில் பாடப்பெற்று பதினெண் புராணங்களுள் ஏழாவதாக அமையுமாறு தொகுக்கப் பெற்றுள்ளது. தமிழில் தேவாரம் தொடங்கி பிற சைவத் திருமுறைகளிலும் சிவபெருமானை நாயகனாகக் கொண்டு எழுந்த பக்தி இலக்கியங்களிலும் இப்பழம் புராணக்கதை நிகழ்ச்சிகள் சிவநெறிச் செல்வர்களால் சுட்டப்பட்டுள்ளன. இக்கதை, தனி நூல்களாகவும் எழுந்துள்ளது. பாடல்களாலும் உரைநடை யாலும் இவ்விரண்டும் அமைந்த நாடகங்களாகவும் இக்கதை எழுந்துள்ளது. பாமரர்களும் இக்கதையினை நாட்டுப்புறக் கலைஞர்கள் கூறக்கேட்டு இன்புற்றுள்ளனர். இவ்வாறு கூறப்பெற்ற கதை பனையோலைச் சுவடிகளில் இன்று கிடைத்து வருகின்றன. சன்மார்க்க அன்பர் தொழுதூர் வேலாயுத முதலியார் வடமொழியில் முப்பத்திரண்டாயிரம் கிரந்தமுடைய மார்க்கண்டேய புராணத்தைத் தமிழில் மொழிபெயர்த்து உரைநடையில் தந்துள்ளார்.

தனிப்புராணமாக மார்க்கண்டேயன் கதை அமைந்தாலும் பிற புராணங்களிலும் அக்கதை எடுத்தாளப்பெற்றுள்ளது. சான்றாக வடமொழி கந்தபுராணத்தில் நான்காவது பாகமாக மார்க்கண்யேன் சரித்திரம் இடம்பெற்றுள்ளது. இதன் தழுவலான கந்தபுராணத்தைப் பதிப்பித்த ஆறுமுகநாவலர் இக் கதையை மட்டும் எடுத்துத் தனி நூலாக வெளியிட்டுள்ளார். வடமொழிப் புராணத்தைத் தழுவி மார்க்கண்டேயர் புராணம் எனும் தலைப்பில் தமிழ்ப்புராண அமைப்புடன்

குழந்தைவேலுக் கவிராயர் என்பவர் ஒரு நூல் இயற்றியுள்ளார். மார்க்கண்டேயன் காஞ்சி எனும் பெயரில் ஒரு நூலிருந்து மறைந்துபோனதாக மு. அருணாசலம் குறிப்பிடுகிறார்.

மார்க்கண்டேயன் விலாசம் எனும் நூல் வடலூர் வெங்கடராம உபாத்தியாயரால் ஐந்தாம் பதிப்பாக 1867-இல் பதிக்கப்பட்டுள்ளது. மார்க்கண்டேயன் கதை நாடகமாக இரு பாகங்களில் கி.பி.1867-இலும், 1875-இலும் வெளிவந்துள்ளது. மார்க்கண்டேயர் சங்கீத சார ஒயிற்கும்மி எனும் பெயரில் கும்மி மெட்டில் 304 செய்யுள் மூலத்துடன் மார்க்கண்டேயன் கதை அப்பாவு முதலியாரால் கி.பி.1887-இல் வெளியிடப் பட்டுள்ளது. மார்க்கண்டேயன் கதைப்பாடல் சுவடிகள் மார்க்கண்டேயன் அம்மானை, மார்க்கண்டேயன் தவநிலை, மார்க்கண்டேயன் கதை என்பன போன்ற வடிவங்களிலும் கிடைக்கின்றன என முனைவர் ஆ.தசரதன் குறிப்பிடுகிறார். மார்கண்டேயன் கதையின் (காலசுவாமி கதை) காலம் கி.பி.16 ஆம் நூற்றாண்டின் இறுதியிலோ அல்லது கி.பி.17 ஆம் நூற்றாண்டின் முதலிலோ இயற்றப்பெற்ற இக்கதைப்பாடல் பின்பு ஓலைச்சுவடிகளிலும் எழுதிவைக்கப் பெற்றிருக்கலாம் என்று கருத இடமுண்டு. ஆனால் 18 அல்லது 19 நூற்றாண்டில் இக்கதைப்பாடல் பாடப்பெற்றது எனச் சிலர் கூறுவர். மார்க்கண்டேயன் கதையை இயற்றியவர் **நல்ல கூத்தன்** என்பவர் என்றும் முனைவர் ஆ.தசரதன் குறிப்பிடுகிறார் (மார்க்கண்டேயன் கதைப்பாடல், பக்.1-33). ஆனால் காலசுவாமிகதை, வெங்கலராசன் கதை, சித்திரபுத்திர நயினார் கதை, அமராபதி கதை ஆகிய கதைப்பாடல்களின் மொழிநடையினை அடிப்படையாக வைத்துப் பார்க்கின்ற பொழுது இக்கதைப்பாடல்களை இயற்றியவர் ஒருவரோ எனத் தோன்றுகிறது. வெங்கலராசன் கதைப்பாடலை இயற்றிய ஆறுமுகம் நாடாரே காலசுவாமி கதைப்பாடலை பாடியிருக்க லாம் என்றும் எண்ணத்தோன்றுகிறது.

முத்தாரம்மன் கதை தென்மாவட்டத்தில் பரவலாக வழிபடப்படும் நாட்டுப்புற பெண் தெய்வத்தின் வரலாற்றை எடுத்துரைக்கிறது. சம்புத் தீவுக்கு அப்பால் ஏழு கடலுக்கு

அடுத்துள்ள சொர்ண பூமியில் கமலையென்ற திருச்சுனையின் அருகில் மாணிக்கப் புற்று ஒன்று இருந்தது. அதில் இருந்த நாகம் ஒரு அமுத கலசத்தை ஈன்றது. நஞ்சுடைய பாம்பு ஈன்ற அமுதக் கலசத்தில் இருந்து ஏழு அரக்கியர் தோன்றினர். இவர்களுக்கு நீலன், குமுதன், ஆதித்தன் என்ற முப்புராதியர் பிறந்தனர். ஆனால் அரக்கியர்கள் குழந்தைகளை வளர்க்காமல் காட்டில் விட்டு விட்டு மறைந்து விடுகின்றனர்.

சக்தி முனி வளர்த்த வேள்வியின் புகை மண்டிட அதனை நீக்க வருகிறார் பார்வதி. ஆனால் வேள்விப் புகையால் விளைந்த வேர்வையை வழித்தெறிய அவ்வேர்வை முத்திலிருந்து முத்தாரம்மன் தோன்றுகிறாள். அவ்வாறு தோன்றிய முத்தராம்மனை முப்புராதியர்க்கு தாயாக, தெய்வமாக அனுப்புகிறாள் ஈஸ்வரி. முத்தராம்மனும் காண்டாபுரக் காடழித்து, முப்புரக் கோட்டையமைத்து முப்புராதியருடன் சிறப்புடன் வீற்றிருக்கிறாள். அவ்வாறு வீற்றிருக்கும் பொழுது முப்புராதியர்களும் அவர்களின் புதல்வர்களும் தேவர்களுக்குத் தொல்லைக் கொடுத்தனர். தேவர்கள் அதனைத் திருமாலிடம் கூறினர். திருமால் தேவர்களின் துயரைத் தீர்க்க முயல்கிறார். ஆனால் அதனை முப்புராதியரும் அவரின் புதல்வர்களும் முறியடிக்கின்றனர். இறுதியில் முப்புராதியரும் அவரின் புதல்வர்களும் முறியடிக்கப்படுகின்றனர். சிவன் முப்புரம் எரிக்க வில் எடுத்து வந்து இறுதியில் வில்லினைக் கீழே போட்டுவிட்டு கை கொட்டிச் சிரிக்க அப்போது தோன்றிய நெருப்பில் முப்புரம் எரிந்து சாம்பலாகிறது. இதனை அறிந்த முத்தாரம்மன் சிவனிடம் முறையிடுகிறாள். சிவன் அம்மனை சமாதானம் செய்து முப்புராதியர்களை உயிரெழுப்பி வரம் தருகிறார். முத்தாரம்மன் மனிதர்கள் மேல் விதைப்பதற்குப் பல்வேறு வகையான வித்துக்களை வரமாகப் பெற்று பூலோகம் வந்து பூசை பெற்று அமர்கிறாள்.

முத்தாரம்மன் கதையில் வரும் முப்புரம் எரித்த கதை சங்க இலக்கியங்களிலேயே காணப்படுகின்றன.

"ஒருகணை கொண்டு மூவெயில் உடற்றி (புறம்.552)
எயிலெரி யூட்டிய வில்லன்" (பதிற்.(கடவுள் வாழ்த்து)வரி:3)

"தேறுநீர் சடைக்கரந்து திரிபுரந்தீ மடுத்து"
(கலி. (கடவுள் வாழ்த்து) வரி:2)

"கடந்தடு முன்பொடு முக்கண்ணான் மூவெயிலு
மூடன்றக் காண் முகம் போல" (பாலைக்கலி.1:4-5)

இச்செய்திகள் மூலம் முப்புரமெரித்த செய்தி சங்ககாலத் திற்கு முன்னரே மக்கள் மத்தியில் பரவலாக வழங்கப்பட்டு வந்திருக்கின்றது என்பது தெளிவாகின்றது. பழமையான முப்புரமெரித்தச் செய்தி முத்தாரம்மன் கதையுடன் நெருங்கிய வகையில் இணைத்துப் பாடப்பட்டுள்ளது என்பது புலனாகிறது. முத்தாரம்மன் தெய்வமாகப் படைக்கப்பட்டு வணங்கப்பட்டிருக்கின்றாள். மூன்று மன்னர்கள் வணங்கும் தாய்த்தெய்வம் என்பதுணர்த்தவும் மூவரையும் மூவரின் முப்புரத் தையும் காப்பவள் என்ற அடிப்படையிலும் ஒருடல் மும்முகம் அமைந்த தெய்வ வடிவாக முத்தாரம்மனைப் படைத்து வணங்கியிருக்கின்றனர். இத்தெய்வ வழிபாடு பின்பு தமிழகம் முழுவதும் பரவி வழிபாட்டினைப் பெற்றுள்ளது.

முத்தாரம்மனுக்கு முத்தாலம்மன், முத்தாளம்மன், முத்தியாலம்மன், மாரியம்மன், முத்துமாரியம்மன், முத்து மாலையம்மன், முத்துமாலை நங்கையம்மன், முத்தம்மன், சின்ன முத்தம்மன், பெரிய முத்தம்மன், சின்னம்மன், பெரிய அம்மன், சொரிமுத்தம்மன் என்ற பல பெயர்கள் வழக் கிலுள்ளன என்று முனைவர் சூ.நிர்மலாதேவி குறிப்பிடுகிறார். (முத்தாரம்மன் கதை, ப-249).

பொன்னிறத்தாள் கதை பொன்னிறத்தாள் என்னும் பெண்ணின் படுகொலை நிகழ்வை மையமிட்டு அமைந் துள்ளது. கடையம் எனும் ஊரில் வடுகர் குலத்தில் பிறந்த பொன்மாரியை அணஞ்ச பெருமாள் என்பவர் மாலையிடு கிறார். அவர்களுக்கு ஏழு ஆண் குழந்தைகள் பிறந்த பின்பு, தவமிருந்து ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுக்கின்றனர். அக்குழந்தைக்கு பொன்னிறத்தாள் என்று பெயரிடுகின்றனர்.

பொன்னிறத்தாள் வளர்ந்து பருவமடைந்து அவளை இணைசூரப் பெருமாள் என்பவன் மணமுடிக்கின்றான். மணமுடித்து இருவரும் இன்பமுடன் வாழ்ந்து வந்தனர். பொன்னிறத்தாள் கர்ப்பமடைகிறாள். நிறைமாதச் சூலியாக இருக்கும்போது அவள் சுனையாடச் செல்கிறாள். போகும் போது தீயசகுனம் தென்படுகிறது. அதைப் பொருட்படுத் தாமல் சுனையாடச் செல்கிறாள். அங்கு காட்டாளம்மன் கோவிலில் கருவூலத்தை எடுக்க வந்த கள்ளர்களால் அவள் பலி கொடுக்கப்படுகிறாள். கள்ளர்களும் காட்டாளம்மனின் ஏவலால் புலி கடுவாய்களுக்குப் பலியாகின்றனர். மகள் இறந்ததைக் கண்டு பெற்றோர்களும் சகோதரர்களும் உயிரை விடுகின்றனர். இணைசூரனும் வாளை நட்டு அதில் சாடி உயிரைவிடுகிறான். வன்கொலையால் மாண்ட பொன்னிறத் தாள் சிவனிடம் வரம்பெற்று தனது மரணத்திற்குக் காரண மானவரின் குடும்பத்தையும் மதுரையையும் அழிக்கிறாள். அவளை அடக்க வந்த வேலனையும் பொன்னிறத்தாள் கொல்கிறாள். பின் வேலனின் மனைவி தந்த பலியை ஏற்று வேலனுக்கு உயிர்க் கொடுக்கிறாள். பின்பு வழிபாடு பெற்று அமர்கிறாள் என்று கதை அமைகிறது.

முத்துப்பட்டன் கதை முத்துப்பட்டன் எனும் சிறு தெய்வத்தின் வரலாற்றை எடுத்துரைக்கின்றது. ஆரிய நாட்டில் முத்துப்பட்டன் பிறக்கின்றான். அவனது அண்ணன்மார் களுடன் சண்டையிட்டுக் கொண்டு ஊரைவிட்டு வெளி யேறுகிறான். பின்பு கொட்டாரக் கரைக்குச் சென்று ராம ராஜன் எனும் மன்னனின் அரண்மனையில் பணிபுரிகிறான். சிறிதுகாலம் சென்றபின் தமையன்மார்கள் முத்துப் பட்டனைத் தேடி கொட்டாரக்கரைக்கு வருகின்றனர். அவர்கள் தம்பி முத்துப்பட்டனைச் சமாதானம் செய்து அவனை அழைத்துக் கொண்டு தங்கள் ஊருக்குத் திரும்பி வந்தனர். வரும் வழியில், அரசடித்துறையில் முத்துப்பட்டன் தாகமாக இருக்கிறது என்று கூறிவிட்டு நீர் அருந்தச் செல்கிறான். நீர் அருந்த சென்ற இடத்தில் பொம்மக்கா, திம்மக்கா எனும் இரண்டு சக்கிலியக் குலப்பெண்களை கண்டு காதல் கொள்கிறான். அதனை முத்துப்பட்டன் சகோதரர்

களிடம் தெரிவிக்கின்றான். சகோதரர்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். அதனை முத்துப்பட்டன் ஏற்காததால் சகோதரர்கள் அவனைக் கற்குழிக்குள் தள்ளி மூடிவிடுகின்றனர். அதிலிருந்து தப்பிய முத்துப்பட்டன் வாலப் பகடையின் அறிவுரைப்படி குடுமி, பூனுல் நீக்கி சக்கிலியர் குலத் தொழில் செய்து அப்பெண்களைத் திருமணம் செய்கிறான். அன்று இரவு ஆநிரைகளைத் திருடவந்த ஊற்றுமலை வன்னியரைக் கொன்று தானும் உயிரை விடுகிறான். பூச்சி என்ற பட்டனின் நாய் பொம்மக்கா, திம்மக்கா ஆகிய இருவருக்கும் பட்டனின் இறப்பைத் தெரிவிக்கிறது. பொம்மக்காவும், திம்மக்காவும் சிங்கம்பட்டி ஜமீனிடம் அனுமதி பெற்று உடன்கட்டை ஏறி உயிர்விடுகின்றனர். பின்னர் அனைவரும் சிவனிடம் வரம்பெற்று தெய்வமாகி அமர்கின்றனர்.

முத்துப்பட்டன் கதை நிகழ்ந்த பகுதி இன்று திருநெல்வேலி மாவட்டத்தின் ஒரு பிரிவாகவும், கேரள மாநிலத்தின் ஒரு பிரிவாகவும் காணப்படுகிறது. மேல் மலைத்தொடரின் தென்பகுதியில் கொண்ட நிலப்பகுதி இருபிரிவிலும் உள்ள சிற்றூர்களனைத்தையும் ஆரியநாடு என்று அழைக்கப் பட்டது.

கதையில் வரும் தலைவியர் இருவரும் வாலப்பகடையின் மக்கள். பகடைகள் தெலுங்கு மொழி பேசும் சக்கிலியர். சக்கிலியர் பெரும் அளவுக்குத் தமிழ் நாட்டுக்கு வந்த காலம் எது? கிருஷ்ணதேவராயன் தஞ்சை மீதும், மதுரை மீதும் படையெடுக்கத் தனது தளவாய்களை அனுப்பினான். அவர்கள் தஞ்சையையும், மதுரையையும் கைப்பற்றினார்கள். கிருஷ்ணதேவராயனது காலத்திலேயே விஜயநகர ஆட்சி சீர்குலைந்தது. மதுரைத் தளவாய் விசுவநாத நாயக்கன் சுயாதிகாரம் பெற்ற மன்னனானான். அவனுடைய சேனைகளோடு தமிழ்நாடு வந்தவர்களே சக்கிலியர்கள். அவர்கள் நாயக்கர் சேனைகள் தங்கியிருந்த இடங்களில் செருப்பு தைத்துக் கொடுத்து வந்தார்கள். மூடநம்பிக்கையுள்ள நாயக்க மன்னர்கள் கோயில் கட்டும்பொழுதும், அணைகள், பாலங்கள் கட்டும்பொழுதும் நரபலி கொடுப்பதுண்டு. அதற்காக இழிந்தவரெனக் கருதப்பட்ட சக்கிலியர்களைப் பிடித்துச்

சிறை யில் அடைத்துப் பலமுறை பலி கொடுத்தார்கள். உயிருக்கு பயந்து அவர்கள் ஓரிடத்தில் தங்காமல் சிதறினார்கள். அவ்வாறு சிதறியவர்கள் திருநெல்வேலி மாவட்டம் என்று இன்று அழைக்கப்படும் பகுதியில் பல சிற்றூர்களில் குடியேறினார்கள். குடியேறியவர்கள் தங்கள் பரம்பரைத் தொழிலைச் செய்து பிழைத்தார்கள். இவ் வரலாற்றைக் கவனிக்குமிடத்து மதுரையில் திருமலை நாயக்கன் கட்டிடப் பணிகள் நடத்திய காலத்திற்கு முன்னர் சக்கிலியர் தென்தமிழ்நாட்டில் பரவினார்கள் என்று கருதலாம்.

கட்டபொம்மன் கதையில் அவனுடைய முன்னோர்கள், திருமலை நாயக்கனிடம் நரபலி கொடுப்பதற்காக சிறை யிலடைக்கப்பட்டிருந்த சக்கிலியர்களை மீட்க வாதாடி னார்கள் என்றும் ஒரு செய்தி கூறப்பட்டுள்ளது. இது மேற்கண்ட கருத்தையும் வலியுறுத்தும். திருமலை நாயக்கன் கட்டிடப் பணிகள் செய்த காலம் சுமார் 1623 முதல் 1655 வரை. அப்படியானால் சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னர் சக்கிலியர் தமிழ்நாட்டில் நாயக்கர் ஆட்சி பலமாக வேரூன்றாத இடங்களுக்குக் குடிபெயர்ந்திருக்க வேண்டும். ஆரிய நாடு நாயக்கர் ஆட்சியின் கீழ் இல்லை. ஆகவே பகடைகள் அல்லது சக்கிலியர்கள் அங்குக் குடியேறி வாழ்ந்தார்கள் என்று எண்ணினால் தவறேதும் இல்லை. எனவே முடிவாக 260 வருஷங்களுக்கும் 300 வருஷங்களுக் கும் இடைப்பட்ட காலத்தில் இச்சம்பவங்கள் நடந்திருக் கலாம் (கி.பி.1658-1738).

பொதிகை மலை மேல் தற்போது காரையாறு அணை கட்டியுள்ள இடத்திலிருந்து ஒன்றரை மைல் தூரத்தில் பட்டவராயன் கோயில் இருக்கிறது. இது சொரிமுத்தையன் கோயிலுக்கு வடக்கே உள்ளது. இக்கோயிலினுள் மூன்று சிலைகள் உள்ளன. ஒன்று பட்டவராயன் சிலை இடுப்பில் சல்லடம், ஒரு கையில் வல்லயம், மற்றொன்றில் சூர்க்கத்தி, தலையில் முண்டாசு, முறுக்கிவிட்ட மீசை, சாய்ந்து விழுவது போன்ற நிலை. மொத்தத்தில் கலைத்திறன் மிக்க சிற்பி தன் ஆர்வம் முழுவதையும் கொட்டிச் செதுக்கியுள்ளது போலத் தோற்றமளிக்கிறது. ஒரு பக்கத்தில் திம்மக்கா; இடுப்பில் ஒரு

கூடை ஒரு கை கூடையை அணைத்திருக்கிறது. இச்சிலை, பட்டவராயன் சிலைக்கு மற்றொரு புறமுள்ள பெண்ணுருவச் சிலையைவிடச் சற்றே உயரமானது; மறுபுறம் இருக்கும் சிலை பொம்மக்கா அவள் கையில் ஒரு கலசம் மற்றொரு கையில் பொந்தடி என்ற கதை போன்றதடி. இரண்டு சிலைகளும் மிக அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன. பட்டன் சிலைக்கு அருகில் இரண்டு நாய் உருவங்களும் காணப் படுகின்றன.

இக்கோயிலின் முன்னுள்ள பாறையில் இக்கோயில் தோன்றிய காலம் 999 ஸ்ரீ என்று பொறிக்கப்பட்டுள்ளது. இது கொல்லமாண்டு சுமார் 150 வருஷங்களுக்கு முன் இக்கோயில் தோன்றியது என விளங்குகிறது. மற்றொரு கல்வெட்டு இக்கோயில் சிங்கம்பட்டியரால் கட்டப்பட்டதென்று கூறுகிறது. இக்கோயில் கட்டுமுன் இக்கோயிலில் உள்ள சிலைகள், இக்கோயில் இருக்கும் இடத்திற்குச் சுமார் நான்கு மைல் கிழக்கேயுள்ள சுளியமுத்து பட்டவராயன் கோயிலில் இருந்ததாகவும், அது மிகவும் பழமையான கோயில் எனவும் அதுவே ஆதிப்பட்டவராயன் கோயில் எனவும் கூறுகிறார்கள். இவ்விரண்டு கோயில்களுக்கும் நேர்த்திக் கடனாகச் செருப்புகளைச் சேர்ப்பிக்கிறார்கள். இது கவனத்திற்குரியது *(நா.வானமாமலையின் கதைத்திரட்டு, பக்-13-57)*

கான்சாயிபு சண்டை ஒரு வரலாற்றுக்கதைப்பாடல் ஆகும். பண்ணையூரில் பிறந்த கான்சாயிபை மூஸாலாலி என்ற பிரெஞ்சியன் வளர்க்கிறான். பிரட்டன் என்னும் ஆங்கில தளபதியிடம் இவன் வேலைக்குச் சேர்கிறான். ஆங்கிலம் கற்று ஆற்காட்டு நவாபின் படையில் சேர்கிறான். படிப்படியாக உத்யோக உயர்வு பெற்று கான்சாகிபு ஆற்காட்டு நவாபின் படையின் கமாண்டராக ஆகிறான். பிரிட்டிஷ்காரர்கள் தங்கள் சேவகத்தில் இவனை அமர்த்திக் கொண்டு டச்சு மற்றும் பிரெஞ்சுக்காரரை வெற்றி பெறுகின்றனர். பின்னர் கான்சாயிபு பரங்கிப் பெண்ணான மாஷா என்பவளை மணந்து கொள்கிறான்.

தமிழகத்தில் தென்பகுதி முழுவதிலும் வரிவசூலிக்கும் உரிமையை கிழக்கிந்திய கம்பெனி நவாபிடமிருந்து குத்தகைக்குப் பெறுகிறது. எனவே வரி கொடுக்காத பூலுத்தேவனை, கான்சாகிபு அடக்கி ஒழிக்கிறான். மேலும் பாளையக்காரர்களிடமிருந்து ஒழுங்காக வரிகிடைக்க வகை செய்கிறான்.

பிரிட்டிஷ் கம்பெனியார் கான்சாகிபுவின் சேவையைப் பாராட்டி மதுரை சுபேதரராக நியமிக்கின்றனர். மதுரையிலிருந்து தென்பகுதி முழுவதையும் நவாபின் பிரதிநிதியாக ஆண்டு பிரிட்டிஷ் கம்பெனிக்காக வரிவசூலித்துக் கொடுத்து வந்தான். ஒரு ஆண்டிற்கு பின் வரி கொடாத சிவகங்கை பாளையக்காரருடன் கான்சாயிபு மோதுகிறான். சிவகங்கை பாளையக்காரன் கான்சாயிபுவை சமாதானம் செய்ய முயல்கிறான். அது முடியவில்லை. எனவே சிவகங்கை பாளையத்தார் ஆற்காடு நவாபிடம் கான்சாயிபு குறித்து பொய்யான செய்திகளைக் கூறி பகைகொள்ளச் செய்கின்றனர். இதனால் ஆற்காடு நவாபு கம்பெனியாரிடம் தமது நிருவாகத்திற்கு கான்சாயிபை மாற்றிட வேண்டும் என்று வேண்டினான். கம்பெனியார், கான்சாயிபுவை நவாபின் வேண்டுகோளை ஏற்குமாறு கூறுகின்றனர். ஆனால் கான்சாயிபு மறுக்கிறான். எனவே ஆற்காடு நவாபு படையும், கம்பெனியார் படையும் மதுரையை முற்றுகையிட்டன. ஆனால் போரில் வெற்றிபெற முடியவில்லை. இறுதியில் சதி செய்து கான்சாயிபுவைக் கைது செய்து தூக்கிலிடுகின்றனர்.

கான்சாயிபு சண்டை கதைப்பாடல் சாதாரண மனிதனாக இருந்த ஒருவன் உயர்பதவி பெற்று இறுதியில் சூழ்ச்சிக்கு இரையான வரலாற்றைக் கூறுகிறது. கான்சாயிபு சாதாரண படைவீரனாகப் பணியில் சேர்ந்து மதுரையின் ஆளுமையைப் பெறுபவனாக உயர்கின்றான். பூலுத்தேவனை ஒழிக்க இவன் ஆங்கில அரசுக்கு உதவியதன் மூலம் பதவி உயர்வு பெறுகிறான். ஆனால் சிவகங்கைப் பாளையக்காரனுடன் வரிவசூலிப்பதில் ஏற்பட்ட மோதலால் சூழ்ச்சியில் சிக்கி கம்பெனியாரின் எதிர்ப்பையும் நவாபின் எதிர்ப்பையும்

சந்திக்கிறான். எனவே தனது ஆளுமையை நிலைநிறுத்த கம்பெனியாரையும் நவாபையும் எதிர்த்து போரிடுகிறான். இறுதியில் சூழ்ச்சிக்கு இரையாகிறான். இக்கதைப்பாடல் கான்சாயிபுவின் வீர தீர பராக்கிரமத்தை வெளிப்படுத்துகிறது. தமிழர் வீரத்தைப் போற்றுபவர்கள் என்பதால் நாட்டுப்புற கவிஞன் அதனை கதைப்பாடலாக உருவாக்கியிருக்கிறான் எனலாம்.

அரிச்சந்திரன் கும்மி என்னும் கதை அரிச்சந்திரனின் பெருமையைப் பேசுகிறது. அரிச்சந்திரனின் பொய் பேசா தன்மையை மக்களிடம் எடுத்துரைத்து பொய்பேசாமை எனும் பண்பு உயர்ந்தது என்று கட்டியம் கூறுகிறது.

அயோத்தியாபுரி நாட்டினை அரிச்சந்திரன் சீருடனும் சிறப்புடனும் ஆண்டு வருகிறான். அவன் சத்தியத்தின் வழி நின்று பொய்பேசா பெருமையுடையோனாக வாழ்ந்தான். அப்படி அவன் வாழ்ந்து வரும் நாளில், மேலுலகில் இந்திரன் தனது சபையில் இருக்கும் தேவர்களைப் பார்த்து பூவுலகில் பொய்பேசாத அரசர்கள் யாரேனும் இருக்கிறார்களா? என்று வினவுகிறான். அப்போது வசிஷ்டமாமுனி எழுந்து எனது சிஷ்யன் அயோத்தியை ஆளும் அரிச்சந்திரன் பொய்யுரைக்க மாட்டான் என்று கூறுகிறார். உடனே விஸ்வாமித்திரர் எழுந்து, நான் அரிச்சந்திரனைப் பொய்சொல்ல வைப்பேன் என்று கூறுகிறார். சபை கலைந்து சென்றபின்பு விஸ்வா மித்திரர் அரிச்சந்திரனிடம் வருகிறார். அரிச்சந்திரனிடம் யாகம் செய்ய திரவியம் தானமாகக் கேட்கிறார். அரிச்சந்திரனும் தானம் தருகிறேன் என்று ஒப்புக்கொள்கிறான். முனிவர் சூழ்ச்சி செய்து நாடு நகரங்களை எல்லாம் அவனிடமிருந்து பெற்றுக் கொண்டு வீதிக்கு கொண்டு வந்து விடுகிறார்.

மேலும் முனிவருக்குத் தர வேண்டிய மீதி தொகைக்காய்த் தன் மனைவியையும் மகனையும் அடிமைக் கூலிகளாய் விற்றுவிடுகிறான். சந்திரமதியும், லோகிதாசனும் காலகண் டய்யன் என்பவனின் வீட்டில் அடிமைகளாய் வேலை செய்து வரும்போது லோகிதாசன் பாம்பு கடித்து இறந்துவிடுகிறான். அவனை எரிக்க எடுத்துச் செல்கையில் தனது கணவன்

அரிச்சந்திரன் வெட்டியானாக வேலை செய்வதை சந்திரமதி அறிகிறாள். ஆனால் அரிச்சந்திரன் பிணத்தை எரிக்க முழந்துண்டும், காற்பணமும் வாங்கிவரச் சொல்கிறான். சந்திரமதி வரும் வழியில் காசி மன்னன் மகனைக் கொன்ற பழியில் சிக்குகிறாள். மன்னன் சந்திரமதியின் தலையை வெட்ட ஆணையிடுகிறான். மனைவியின் தலையை வெட்டும் பணியை அரிச்சந்திரனே செய்யும் நிலை ஏற்படுகிறது. அரிச்சந்திரன் சந்திரமதியின் தலையை வெட்டினான். ஆனால் அவள் கழுத்தில் பூமாலையாக விழுந்தது. அரிச்சந்திரன் சத்தியம் தவறிவிட்டதே என்று பதறியபோது தேவர்கள் வந்து அவனைச் சமாதானம் செய்கின்றனர். மேலும் அவனின் பெருமையை உணர்ந்து மீண்டும் நாட்டை ஆளும் வரம் நல்குகின்றனர்.

அரிச்சந்திரன் கதை ஒரு புராணக்கதையாகும். அரிச்சந்திரன் திரிசங்குவின் புத்திரன். இவன் வருணனை நோக்கி எனக்குப் புத்திர சந்ததி நேருமேல் அக்குமரனைப் புருஷப் பசுவாகக் கொண்டு உன்னைத் திருப்தி செய்விக்கிறேன் எனக் கூறி அவ்வகை உதித்த குமரனை யாகப் பசுவாக ஆக்காத்திருந் தான். தந்தையின் செய்கையுணர்ந்திருந்த குமரன் தன்னிலை உணர்ந்து பயந்து காட்டில் வசித்தான். பின்பு வருணன் அரிச்சந்திரனுக்கு மகோதர நோயுண்டாக்கினான். தந்தை மகோதரத்தால் பீடிக்கப்படுகிறானென வினவுற்று நகர்நோக்கி வருகையில் இந்திரனால் வனத்தில் ஆறுவருஷம் தடைப்பட்டு அந்த ஆறாம் வருஷக் கடைசியில் அசிகிரதன் என்பவனி டத்தில் சுனச்சேபனை விலையாகக் கொண்டு தந்தைக்கு அளித்தனன்.

குமரன் தந்தையை வருணகோ பந்தலுண்டாக்கியே மகோதரத்தினின்றும் நீக்கினன். இவன் சாம்ராட். இவன் தேவி சந்திரமதி மந்திரி சத்திய கீர்த்தி என்று அபிதான சிந்தாமணி குறிப்பிடுகிறது. அரிச்சந்திரனின் பொய் பேசா தன்மையே அவனை பாட்டுடைத் தலைவனாக்கியுள்ளது எனலாம்.

சிறுத்தொண்டர் பத்தன் கதை கர்னன், காசியில் பிறந்து சிவலிங்கப் பூசை செய்து திருச்செங்காட்டில் சிறுத்தொண்ட

பத்தனாகத் தோன்றினான். அவன் மனைவி பெயர் திருவெண் காட்டு நங்கை. இருவரும் சிவனடியார்களுக்குத் தொண்டு செய்வதையே வாழ்நாள் கடமையாக எண்ணி வந்தனர். சிறுத்தொண்டர் தம்மைத் தொண்டர்களிற் சிறியவர் என்று மதித்துத் சிறுத்தொண்டர் என்ற பெயர் பெற்றார். சிவன் இவரின் பக்திச் சிறப்பை உலகுக்கு எடுத்துக்காட்ட விரும்பினார். எனவே சிவன் ஒரு சங்கமர் திருக்கோலம் கொண்டு இவரது வீட்டிற்கு அமுதுண்ண எழுந்தருளினார். நாயனார் சங்கமாரைக் கண்டுகளித்து அமுதுகொள்ள அழைத்தார். அதற்கு சங்கமர் நாம் ஆறுமாதத்திற்கு ஒரு முறையே அமுது கொள்வேன். அவ்வுணவு நரமாமிசத்துடன் கூடியதாக இருக்க வேண்டும். அதாவது ஒரே புத்திரனாய்; அங்கப்பழுதிலானாய்; ஐந்து வயதுள்ள சிறுவனாய்; ஒரு உறுப்பும் குறையாதவனைச் சமைத்தல் வேண்டும் என்றார். இதனைக் கேட்ட நாயனாரும் அவ்வகையில் உணவு படைக்க உடன்பட்டார். பின்பு மனைவியிடம் வந்து அடியவர் கூறியதைக் கூறினார். அயலார் தங்கள் குழந்தைகளைக் கொலை செய்யச் சம்மதிப்பரோ? சம்மதிக்கமாட்டார். எனவே நமது குழந்தையாகிய சீராள தேவனை சங்கமர் விருப்பப்படி நரவுணவாகச் சமைத்துக் கொடுக்கலாம் என்றார். மனைவியும் உடன்பட்டாள். அதன்படி சீராளனை வெட்டி கறியாகச் சமைத்தனர்.

சங்கமர் உணவு உண்ண வந்தபோது எல்லா உறுப்புகளும் சமைக்கப்பட்டதா? என்று வினவுகிறார். நாயனார், தலை யொழிந்த மற்ற உறுப்புகள் அனைத்தும் சமைக்கப்பட்டன என்றார். சங்கமர், அப்படியானால் அதனையும் சமைத்து கொணர்க என்றார். அவரின் விருப்பப்படி தலைக்கறியும் சமைத்துக் கொணரப்பட்டது. சங்கமர் கோலங் கொண்ட சிவபெருமான் அமர்ந்து உணவு உட்கொள்ளும் முன்பு என்னுடன் அமர்ந்து உணவு உண்ணுவதற்கு மற்றொரு சிவனடியார் வேண்டும் என்றார். நாயனார், எங்குத் தேடியும் அடியார் கிடைக்கவில்லை என்று வருத்தத்தோடு சங்கமரிடம் தெரிவித்தார்.

உடனே சங்கமர் நீரே எம்முடன் உணவு உண்ண உட்காரும் என்றார். நாயனாரும் சம்மதித்து உணவு உண்ண அமர்ந்தார். உணவு உண்ணப் போகும்போது சங்கமர் தடுத்து நிறுத்தினார். உமக்குப் புத்திரர் இருந்தால் உடனுண்ண அழையுமென்றார். சிறுத்தொண்டர் சங்கமரின் கட்டளையை மறுக்க அஞ்சினார். மனம் வருந்தியவாறு தெருவிற்குச் சென்று **சீராளா** என அழைத்தார். சிவனனுக் கிரகத்தால் சீராளன் தந்தையின் குரல்கேட்டு கல்விச் சாலையிலிருந்து ஓடிவந்தான். நாயனார் மகிழ்ச்சியில் திழைத்து மகனை வாரி அணைத்து வீட்டிற்குள் அழைத்துச் சென்றார். அப்பொழுது சங்கமரும் மறைந்தார். இலையிலிருந்த உணவுகளும் மறைந்தன. நாயனாரின் பக்தியைக் கண்டு வியந்த சிவன் அவர்க்கும் அவர் குடும்பத்தாருக்கும் அருள்பாலித்து மறைகிறார் என்று கதை அமைகிறது. இக்கதையின் தொடர்ச்சியாக காரைக் காட்டம்மையின் பக்திச்சிறப்பு கூறப்படுகிறது. மேற்கண்ட கதை மக்களிடம் பெற்ற செல்வாக்கும் பக்திச் சிறப்பும் சிறுத்தொண்டர் கதையை நாட்டுப்புற மரபில் பாடத் துண்டியிருக்கலாம் எனத் தோன்றுகிறது.

தேசிங்குராஜன் கதை ஒரு வரலாற்றுக் கதைப்பாடல் ஆகும். செஞ்சியைத் தலைநகரமாகக் கொண்டு ஒரு குறுநிலப் பகுதியை தேரணி மகாராசன் (சொரூப்சிங்) டில்லிபாட்சாவின் ஆணைக்குட்பட்டு ஆட்சி புரிந்து வந்தான். அவனுக்குப் பின் அவன் மகன் தேசிங்குராஜன் ஆட்சிக்கு வந்தான். தேசிங்குராஜன் தந்தையைப் போலவே தலைமை அரசிற்கு வரிகட்டவில்லை. எனவே டில்லி அரசின் தென்மண்டல அரசப் பிரதிநிதியாக இருந்த ஆர்க்காட்டு நவாபு தேசிங்கு ராஜனிடம் வரிகேட்டு ஆள் அனுப்புகிறான்.

தேசிங்குராஜன் வரிகட்ட முடியாது; அவனைப் போர்க் களத்தில் சந்திக்கிறேன் எனக் கூறுகிறான். அவன் அமைச்சர் களோ வரிகட்டி விடும்படிக் கூறினர். ஆனால் தேசிங்குராஜன் சொன்ன சொல்லைத் திரும்பப் பெறமாட்டேன் எனக் கூறிவிடுகிறான். அதுவரை பொறுமையாக இருந்த ஆற்காடு நவாபு தேசிங்குராஜனை அடக்கப் படையுடன் வருகிறான் . தேசிங்கு ராஜனும் நவாபை தன்படையுடன் போர்க்களத்தில்

சந்திக்கிறான்.இருபடைகளும் போர்க் களத்தில் மோதுகின்றன. தேசிங்குராஜன் போர்க்களத்தில் எதிரிகளை வெட்டி வீழ்த்துகிறான். நவாபின் படைத்தலைவனான தாவுத்துக் கானும் தேசிங்குராஜனின் வாளினால் மடிகிறான். நவாப் பெரும்படையுடன் மீண்டும் வந்து தேசிங்குராஜனோடு போரிட்டு வெற்றி பெறுகிறான். தேசிங்குராஜன் எதிரியின் கையால் சாவதை இழிவாகக் கருதி தானே தன் நெஞ்சில் வாளை ஏந்தி இறுதியில் உயிரை விடுகிறான்.

மராட்டியர்களிடமிருந்து செஞ்சிக் கோட்டையை முகலாய தளபதி 1698ஆம் ஆண்டு கைப்பற்றுகிறார். பின்னர் ஔரங்கசீப் 18-01-1700-ல் சொரூப்சிங்கை செஞ்சி அரசராகப் பதவி ஏற்கச் செய்கிறார். ஔரங்கசீப் காலத்திற்கு பின்பு அவரின் மகன் ஷாஆலம் பதவியேற்கிறார். அவர் சததுல்லாக் கான் என்பவனை ஆற்காடு நவாபாக நியமித்து செஞ்சி அரசின் மேற்பார்வையையும் அவனிடம் ஒப்படைக்கிறார். அச்சமயம் ஆங்கிலேயரும் பிரஞ்சியரும் உள்நாட்டு அரசியல் விவகாரங்களில் தலையிடுவதைக் கண்டு சொரூப்சிங் கோபமடைந்தார். மேலும் செஞ்சி அரசுக்கும் சொரூப் சிங்குக்கும் எதிராகக் கூடலூர் எல்லையில் கலகம் செய்தனர். ஆனால் சொரூப்சிங் கலகத்தை அடக்கி ஆங்கிலேயரைத் தலை தூக்கவிடாமல் பார்த்துக் கொண்டார். ஆனால் டெல்லி அரசு பன்னிரெண்டு ஆண்டாக செலுத்தாத வரிப்பணம் எழுபது லட்சம் நாணயங்களை உடனே செஞ்சி அரசிடமிருந்து வசூலித்து அனுப்புமாறு ஆற்காடு நவாபுக்கு உத்தரவிட்டது. நோய்வாய்பட்டு கி.பி.1714 சனவரியில் சொரூப்சிங் மரணமடைந்தார்.

சொரூப்சிங்கிற்கு பிறகு அவர் மகன் தேசிங்குராஜன் பதவியேற்றார். அவர் டில்லி பேரரசுடைய அனுமதியைப் பெறாமலும் ஆற்காட்டு நவாபுக்கு அறிவிக்காமலும் பதவி ஏற்றார். இதனால் டில்லி பேரரசர் அடங்காக் கோபம் கொண்டார். உடனே வரி பாக்கியைச் செலுத்தக் கட்டளை இடுகிறார். தேசிங்குராஜன் வரிகட்ட மறுத்து டெல்லி அரசின் கோரிக்கையை நிராகரித்தார். ஆற்காட்டு நவாபு, ஆங்கிலேயர், பிரெஞ்சியரின் கூட்டுச்சதியால் தேசிங்குராஜன் தோல்வி

யுறுகிறார். பிறரிடம் சிறைப்பட்டு வாழ்வதைவிட இறப்பதே மேல் என்று எண்ணி 3-10-1714 காலை ஏழு மணிக்கு போர்க்களத்திலேயே தற்கொலை செய்து மடிந்தார் என்று கோவிந்தசாமி தெரிவிக்கிறார் (செஞ்சிக்கோட்டையின் வரலாறு, பக்.25-29).

இசக்கியம்மன் கதை தென்பகுதியில் பரவலாக வழிபடப்படும் ஒரு பெண் தெய்வத்தின் கதை. இலட்சுமி எனும் கணிகை அவளின் ஆசை வேதியன் ஒருவனால் கொல்லப்படுகிறாள். அவளது நகைகளைக் கவர்ந்து செல்லும் போது அவன் பாம்பு கடித்து இறந்து போகிறான். கணிகை இறந்ததைக் கண்ட அவள் தமையனும் தற்கொலை செய்து கொள்கிறான். தமையனும் தங்கையும் சோழ மன்னனுக்கு இரட்டைக் குழந்தைகளாக மறுபிறவியில் பிறக்கின்றனர். இரவில் சோழன் குழந்தைகள் பசியினால் பேய் உருவெடுத்து வெளியேறி மாடுகளைக் கொன்று உண்டுவிட்டு யாருமறியாமல் தொட்டிலில் வந்து படுத்துக் கொள்கின்றனர். இதையறிந்த மன்னன் குழந்தைகளைக் காட்டில் கொண்டு விடப் பணிக்க, காவலாட்கள் குழந்தைகளைக் காட்டில் கொண்டு விட்டனர். தமையன் பேயாக வேப்பமரத்தில் குடியிருந்தான். அந்த வேப்பமரத்தை ஊர் மக்கள் வெட்டவே அதிலிருந்த நீலியின் தமையன் நீலன் மாள்கிறான்.

மறுபிறவியில் வணிகனின் மகனாகப் பிறந்த வணிகனான வேதியன்முன் மன்னன் மகளாகப் பிறந்த நீலியாகிய இலட்சுமி வருகிறாள். வந்து கள்ளிக் கொப்பு ஒன்றைப் பிள்ளையாக மாற்றி அதனைச் சாட்சியாக்கி நான் உன் மனைவி என்று கூறி அவனைத் தன்னுடன் வருமாறு அழைக்கிறாள். வரமறுத்த அவனை ஊர் மக்களிடம் அழைத்துச் சென்று முறையிட்டு வெற்றி பெறுகிறாள். ஊராரும் நம்பி அவர்களை ஊர்மடத்தில் தங்க வைக்கின்றனர். இரவில் பேயான இலட்சுமி வணிகனைக் கொன்றுவிடுகிறாள். மறுநாள் வணிகனின் தாய் உருவில் வந்து ஊரார் அனைவரையும் தன் தமையனைக் கொன்றமைக்காக பழிதீர்த்துக் கொள்கிறாள் என கதை அமைகிறது.

திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களிலே இத் தெய்வம் பெருஞ்சிறப்புடன் விளங்குகின்றது. இயக்கி என்ற பெயரிலேயே இத்தெய்வம் விளங்குகின்றது. முப்பந்தல், வடசேரி, பிளவுக்கல், பாளையங்கோட்டை போன்ற பல இடங்களில் இவளுக்கென்று எடுக்கப்பெற்ற புகழ் பெற்ற கோயில்கள் உள்ளன. இவளின் பெயரில் இசக்கியம்மன் விற்கதை, பழகைநல்லூர் (பழையனூர்) நீலியம்மன் கதை என்ற பெயர்களில் நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் வழங்குகின்றன. பழையனூர் இசக்கியின் வரலாற்றைத் தெரிவிக்கும் இப்பாடல்கள் அவளுக்கென்று எடுக்கப்பெறும் திருவிழாவின் போது வில்லுப்பாட்டாக இன்றும் பாடப் பெற்று வரப்பெறுகின்றன.

நீலி வழிபாடு கி.பி 19-ஆம் நூற்றாண்டு முன்பிருந்தே திருநெல்வேலி மாவட்டப் பகுதியில் இருந்திருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. திருநெல்வேலிப் பகுதியிலுள்ள நீலிதநல்லூர் என்ற பெயர் இதற்குச் சான்றாக விளங்குகின்றது. இங்குள்ள கோயிலில் காணப்பெறும் கி.பி.10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சோழன் தலைகொண்ட வீரபாண்டியனின் வட்டெழுத்துக் கல்வெட்டிலும் இவ்வூர் நீலிதநல்லூர் என்றே குறிப்பிடப்படுகின்றது. எனவே நீலி என்ற பெயர் வழக்கு இப்பகுதியில் கி.பி.பத்தாம் நூற்றாண்டில் வந்து விட்டதையும் நீலிவழிபாடு இப்பகுதியில் அக்காலத்திலேயே இருந்துள்ளது என்பதையும் இக்கல்வெட்டின் மூலம் அறியலாம் என்று வெ.வேதாசலம் தெரிவிக்கிறார் (இயக்கி வழிபாடு, ப.108).

சின்னப்பிள்ளை நாச்சியார் கதை எனும் கதைப்பாடல் பேய்க்குளம் எனும் ஊரில் அமைந்துள்ள சின்னப்பிள்ளை அம்மன் எனும் சிறுதெய்வத்தின் வரலாற்றை இயம்புகிறது. கைலாயமலையில் சிவன் பார்வதியுடன் அமர்ந்திருக்கின்றார். சிவன் அப்போது திருநடனம் புரிகிறார். சிவனின் வியர்வை பூமியில் விழுகிறது. அதிலிருந்து சின்னப்பிள்ளை நாச்சியார் அம்மன் தோன்றுகிறாள். அம்மன் சிவனிடம் வரம் வாங்க கணநாதர் மலையடியில் வன்னிமரத்தின் அடியில் தவமிருக்கிறாள். அம்மன் தவமிருக்கும் பூமி அவளின்

வருகையால் நந்தவனமாக மாறுகிறது. உயிரினங்கள் தாயாரின் புகழைப் பாடுகின்றன. அம்மன் தவமிருக்கும் செய்தியை அறிந்து சிவன் கயிலைக்கு அழைத்து வரச் சொல்கிறார். அங்கு மிகப் பெரிய மழுவை ஏந்தினால் வரம்தருகிறேன் என்று சிவன் கூறுகிறார். விசுவகர்மன் செய்து கொடுத்த மழுவை நாச்சியார் ஏந்துகிறாள். மகிழ்ச்சியடைந்த சிவன் வரம் நல்குகிறார். அதன்பின் சின்னப்பிள்ளை நாச்சியார் அம்மன் தேரிலேறி பவனி வருகிறாள்.

சின்னப்பிள்ளை நாச்சியார் கதைக்கூறு செண்பக நாச்சியார் கதையின் கதைக்கூறினை ஒத்து அமைகிறது. கதையில் அம்மன் பிறவி செய்யப்பட்டதற்கான கூறு காணப் படவில்லை. மேலும் இக்கதை ஒரு புனைகதையாகவே தெரிகிறது. சின்னப்பிள்ளை எனும் தெய்வத்தினுடைய உண்மை வரலாறு மறைக்கப்பட்டு புனைந்துரைக்கப்பட்ட கதையாக சின்னப்பிள்ளை நாச்சியார் கதை அமைகிறது எனலாம்.

ஆரவல்லி சூரவல்லி கதை மகாபாரத புராணக்கதை ஆகும். இந்திர பிரஸ்தத்தைத் தலைநகராகக் கொண்டு பாண்டவர்கள் ஆட்சிசெய்து வந்தனர். அப்போது ஒருநாள் கண்ணன் பாண்டவரின் அரண்மனைக்கு வருகிறார். கிருஷ்ணா நதிக்கரையில் ஒரு பட்டணத்தை உருவாக்கி ஒரு கோட்டையையும் கட்டி ஆரவல்லி சூரவல்லி முதலிய ஏழு சகோதரிகள் ஆட்சி செய்து வந்தனர். அவர்கள் மாயமந்திர வித்தைகளால் பல மன்னர்களை அடிமையாக்கியும், கொன்றும், ஆண் இனத்தை அழித்து விடுபவர்போல் திகழ்ந்தனர். எனவே அவர்களின் ஆணவத்தையும் வீமன் தன்னை வெல்ல யாருமில்லை என்று என்னும் ஆணவத்தையும் ஒரு சேர அடக்க நினைத்தார் கண்ணன். கண்ணனின் சூழ்ச்சியால் பீமன் ஆரவல்லி, சூரவல்லி சகோதரிகளிடம் தோல்வியுற்று பாதாள அறையில் அடைக்கப்படுகிறான். பின்பு கண்ணன் பீமன் தப்பிக்க உதவுகிறார். அடுத்து, ஆரவல்லியரை அடக்க பாண்டவர்களால் அல்லிராஜன் அனுப்பப்படுகிறான். அல்லிராஜன் கோட்டை யை நெருங்கும்போது வந்த மாய மந்திரங்களை திரௌபதி

கொடுத்த விபூதியால் நீக்குகிறான். பின்னர் பல்வேறு போட்டியில் வெற்றி பெறுகிறான்.

ஆரவல்லியின் வளர்ப்பு மகள் பல்வரிசையை அல்லி ராஜன் மணமுடித்து திரும்பும்பொழுது ஆரவல்லியின் சூழ்ச்சியால் இறந்துபடுகிறான். செய்தி அறிந்து பாண்டவர் படை நடத்தி வந்தனர். ஆனால் கோட்டை அருகில் வந்ததும் அனைவரும் கல்லாக மாறிவிடுகின்றனர். பின்பு அபிமன்யு, அல்லி ராஜன் உயிரை மீட்கிறான். இருவரும் ஆரவல்லி, சூரவல்லி கோட்டைக்குச் சென்று விபூதியின் துணையால் கல்லான பாண்டவரின் படைகளை உயிர் மீட்கின்றனர். பின்னர் ஆரவல்லி, சூரவல்லி சகோதரிகளின் காதையும், மூக்கையும் அறுத்து பாடம் கற்பித்து விரட்டிவிட்டு அல்லிராஜன் நாடு திரும்பி மனைவியுடன் மகிழ்ச்சியுடன் வாழ்கிறான்.

ஆரவல்லி சூரவல்லி கதை புராணக் கதையாக இருந்தாலும் மாயாஜால மந்திரங்கள் கலந்த கதையாக பாடப்பட்டுள்ளது. மேலும் கதையில் பெண்கள் புதுமையான முறையில் நாட்டை ஆண்டதாகவும் கூறப்படுகிறது. பலவேந்தர்கள் அவர்களிடம் தோற்று அடிமைப்பட்டமையும் உயிரிழந்த நிலையும் கதையில் புதுமையின் அடையாளமாகும். ஆரவல்லி, சூரவல்லி கதை பெண்ணிய நோக்கில் அமைந்த தன்மை யுடன் காணப்படுகிறது.

மேற்கண்ட நாற்பது கதைப்பாடல் சுவடிகளை பெருஞ் சிரமத்திற்கு இடையில் திரட்டி சிறிய ஆய்வுக் குறிப்புடன் பதிப்பித்துள்ளேன். குறைகளின்றி எந்தச் செயலும் நிறை வடையாது. எனவே, எமது பதிப்பின் குறைகளை மன்னித்து நிறைகளை ஆய்வாளர்களும் பதிப்பாசிரியர்களும் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதனை அடுத்து மறுபடியும் மூன்று தொகுதிகளை வெளியிடக் கதைப்பாடல்களைத் திரட்டி வைத்துள்ளேன். அவற்றையும் விரைவில் பதிப்பித்து வெளியிட முயற்சிகள் மேற்கொண்டு வருகிறேன். அவையும் விரைவில் வெளிவர இறைவன் உதவி செய்வான் என்று நம்புகிறேன்.

கதைப்பாடல் தொகுதிகளில் பதிப்பு நெறிமுறைப்படி எழுத்துப்பிழைகளும் ஒரு சிலப்பொருள் மயக்கம் தரும் இடங்களும் திருத்தம் செய்யப்பட்டுள்ளன. கதைப்பாடலில் ஒற்றைச் சுவடி அல்லது தாள் சுவடி கொண்டே பதிப்பிக்கப்பட்டுள்ளது. கதைப்பாடலில் கதையின் பொருண்மையினை எளிதாக அறிந்துகொள்ளும் வண்ணம் உட்தலைப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

நான்கு கதைப்பாடல் தொகுதிகளை வெளியிடுகிறேன் என்றால் அதற்கு உதவியவர்களுக்கு நன்றி கூறுவது எனது தலையாயக்கடமை. முதற்கண் இந்தக் கதைப்பாடல் தொகுதிகள் நான்கும் வெளிவர உதவி செய்ததோடு அணிந்துரையும் நல்கிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் **முனைவர் கோ.விசயராகவன்** அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து எனக்கு ஆய்வுத் தளத்தை அறிமுகம் செய்து ஊக்கப்படுத்திய எனது நெறியாளரும் பேராசானுமான **முனைவர் பீ. டாக்டர் நசீம்தீன்** அவர்களுக்கு எனது நன்றியினைச் சமர்ப்பிக்கிறேன். கதைப்பாடல் பதிப்புத்துறையில் என்னை ஈடுபடச்செய்த மதிப்பிற்குரிய நண்பர் **முனைவர் தி. இராஜரெத்தினம்** அவர் களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து நான் உதவிப்பேராசிரியராகப் பணியாற்றத் தொடங்கிய காலம் முதல் இன்றுவரை உற்ற தோழராக இருப்பதோடு இந்நான்கு நூல்கள் வெளிவரவும் உதவிய எனது மிகுந்த மதிப்பிற்குரிய கவிஞர் சங்கமம் கணேசன் என்ற **முனைவர் ஆ. கணேசன்** அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைச் சமர்ப்பிக்கிறேன். அடுத்து கடந்த மூன்று ஆண்டுகளாக எம்மோடு நட்புக் கொண்டு எமது வளர்ச்சியில் ஆனந்தப்படும் **முனைவர் ம. செந்தில்குமார்** அவர்களுக்கும் எனது அன்புகலந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து, **முனைவர் மா. நயினார்** அய்யா அவர்களுக்கும் நண்பர் **முனைவர் செ. ரவிசங்கர்** அவர்களுக்கும் நன்றியினை உரித்தாக்குகிறேன். இக்கதைப் பாடல் தொகுதிகள் வெளிவர உதவியதோடு ஊக்கு வித்த **முனைவர் ஆ. மணவழகன், முனைவர் க.சுசீலா, முனைவர் கோ. பன்னீர்செல்வம், முனைவர் அ. சதிஷ்**

ஆகியோருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து கதைப்பாடல் திருத்தங்களுக்கு உதவி செய்த தோடு எனது நலத்தையும்·கண்ணுங் கருத்துமாகப் பார்த்துக் கொண்ட எனது மனைவி **தே. கிரிஜா** அவர்களுக்கும் எனது நன்றியினை நவில்கிறேன். நான்காவது தொகுதியினுடைய பிழைத்திருத்தங்களுக்கு உதவிய மாணாக்கர்கள் **எ.இராஜேஷ், பா.சிவரஞ்சனி, இரா.பத்மா, சு.கி.இராதாகிருஷ்ணன், வேல்முருகன்** ஆகியோருக்கும் எனது மேலான நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் கதைப்பாடல் சுவடிகளைத் தந்து உதவிய **பொ. உடையார் நாடார்** (திருமலாபுரம்) **மு. பொன்சாமி நாடார், த. பொன்னையா நாடார், அ. அப்பாவு நாடார், நாராயணன் நாடார்** (லீபுரம்), **பெ. சுப்பிரமணியன் நாடார்** (ஆமணக்கன்விளை), **ப. தங்கவேலு நாடார்** (காளாத்திமடம்), **ஆ.பிச்சைத் தேவர்** (வேட்டைக்காரன் குளம்), **ஜெ.பா. சாம் செல்வக்குமார் நாடார்** (புத்தளம்), முனைவர் **ஆ. தசரதன்** ஆகியோருக்கும் எனது மேலான நன்றியினை உரித்தாக்குகிறேன்.

பலவேசக்காரன் கதை

(தாள் சுவடி பதிப்பு)

(சிவசுப்பிரமணியபுரம் த.பொன்னையா நாடார் என்பவரிடமிருந்து தாள் சுவடி பெறப்பட்டது)

(காப்பு)

சீர்சிறக்கும் கயிலை அரன் அருளினாலே
திருநடனம் மிகவே ஆடி வியர்வை சிந்த
பார் சிறக்கும் பிரம்ம சக்தி அம்மைதானும்
பரமசிவனோடு வாதாடி நின்று
ஊர் சிறக்க பலவேச முத்தையாவை
உடையவனார் பிறவி செய்த கதையைக்கூற
கார் சிறக்க விகிட தகிட மத கம்பீர
கணபதி தன் இரு சரணம் காப்புதாமே.

ஆதிபரன் திரு நடனம் ஆடி யன்று
ஆனகோடி தெய்வார்கள் பார்த்து நிற்க
வேதியர்கள் பிரதிஷ்ட வேள்வி செய்து
வெள்ளியங்கிரியான கயிலை தன்னில்
சோதனையாய் திரு நாமமதுவும் கூறி
தொல்லுலகில் வந்த கதை தொடுத்துப்பாட
மாதுமையாள் மனமகிழ்ந்து பயின்ற பாலன்
மதகரிவாழ் முகத்தோன் காப்பாம்.

ஐந்துதலை ஆடரவம் சடையுமாட
அரைதனில் காவி வேட்டியும் புனைந்து
சந்தோசமாக தெய்வார்கள் காண
சரிந்த தலை முடிகளது சாய்ந்து ஆடிட
பைந்தமிழ் கவிவாணர் பாடி வாழ்த்த
பரிவுடைய முனிமார்கள் பணிந்து போற்ற
தந்தியுரித் தாடை யணி பரமன் மைந்தன்
நந்தவன முகத்தோன் சரணம் காப்பே.

(பாட்டு)

அரனுடைய திருமகன் கணபதிக் கன்பான
ஆறுமுக வேலாயுதன் துணை
அலைகடல் தன்னிலே மகரமதாகிய வேலனே
ஆதிசெந்தூர் வளர் கந்தனே
மயில் வாகனம்மீதில் ஏறும் வடிவேலனே
வழுகாமலே சொல் அருள் புரிவாய்

நாடமாடும் தில்லையம்பதி வாழும் மகனே
நாவில் உரை சொல் வழுகாமலே
கடலானது தன்னிலே பள்ளிகொண் டருளுகின்ற
கார்வண்ண நாராயணர் துணை
துணைசெய்ய வேணுமே சொல் வழுகாமலே
தொல்லுலகை ஓரடியாய் அளந்தவா
அளந்தவா ஆதி நாராயண கோவிந்தா
அடியேன் வினைதீர்த்தருள் புரிவீரே
புரிவாய் தமிழ்க் கதை வழுகாமலே நீயும்
பூதலத்தோர்கள் தான் மெய்க்கவே
அடியேனுடைய வில்லில் உரை தப்பாமலே
வினைதீர்த்தருள் புரிய வேணுமே
வேணுமே மானாடு திருமலை புரத்தில் வாழ்
வீரமுடையார் சுடலை முத்தவர்
பாடினேன் பலவேச முத்தையா கதை தன்னை
பண்ணுதமிழ் நான் செவியில் கேட்ட பின்
ஏறாது வில்லுக்கு தாளமில்லாத சொல்
என்று பண்டார மிது பாடினேன்
ஆனாலும் முன்னுரை கேட்டு நான் பாடினேன்
அறிவுடைய கவிவாணர் தங்கள் முன்
ஏதாகிலும் பிழை செய்தாலும் நீங்கள்தான்
மிக்க பொறுத்தருள வேணுமே
மயிலாடி வருவதைக் கண்டு வான்கோழிகள்
வட்டமிட்டாடினால் ஒக்குமோ
காதவழி ஓடுகிற வீரர் சமர்த்தர்முன்
கால் நொண்டி சப்பாணி ஒக்குமோ
அப்படி போலவே இத்தமிழ் புரிந்து நான்
அடியேன் நான் பாடி வைத்தேன் இக்கதையை.

(பாட்டு)

மங்கை பதியில் வந்துதித்த பார்வதியை
மாலையிட்டு சிவனார் கல்யாணம் முடித்தார்
சென்று படகேறி வென்று மகரம் பிடித்து
சிறந்த வடிவேலர் தன்னுடையை சாபமும் தீர்த்து
நந்தியுடனே சென்று மணம் செய்த பார்வதியுடனே
நாயகனார் கைலாசம் மீதினில் இருந்தார்
இருந்த இடமதில் பார்வதி அம்மனுடனே
ஏற்ற தெய்வார்கள் இறையோன் வந்து வணங்க
பொன்னும் கைலாசம் தன்னில் இருக்கும்பொழுது

பொற்கொடி பார்வதி அம்மனுமாக இருக்க
நல்ல தெய்வேந்திரன் வண்ண ரதத்தின் மேலேறி
நாடி சிவனாரை வந்தடி மீது வணங்க
சொல்லும் சரஸ்வதி அம்மன் பணிவிடை செய்ய
துய்ய நாவலர்கள் பாடித் துதித்து வணங்க
நல்ல கவிவாணர் எல்லோரும் வந்து தொழவே
நாயகனார் கைலாசம் மீதினில் இருந்தார்
முப்பத்து முக்கோடி தெய்வார் முனிமார்கள் சூழ
முன்பில் கணபதி மூத்த மகனும் சூழ.

(வசனம்)

முழு முதற் கடவுளாகிய சிவபெருமானும் பார்வதி தேவியும் கடலின் நடுவில் சென்று ரகசியம் பேசிக் கொண்டிருக்கப்பட்ட சமயத்தில், செந்தூர் வடிவேலனாகிய கந்தன் தாயாரின் முடியினுள் வண்டு ரூபமாகி, மறைந்து இருந்து உபதேசம் கேட்ட காரணத்தினால், இறைவன், பார்வதியைப் பார்த்து, "மலை மகளே! உன் மகனை உன்னுடைய கூந்தலில் ஒளித்து வைத்து ரகசியம் கேட்ட காரணத்தினால் முருகன் கடலில் மகர மீனாகப் போகக் கடவது. நீ அவனை ஒளித்து வைத்ததினால் மங்கைபதியில் வாழும் அதியரசனுக்கு மகளாகப் போவாய்" என்று சாபத்தைக் கொடுத்தார்.

உடனே, பார்வதியானவள், "எங்கள் சாபம் எப்போது தீரும்?" என்று கேட்க, "பெண்ணே! உனக்கு 12 வயது நிரம்புகின்ற சமயத்தில் நான் ஒரு ஆண்டியாகவும் நந்தி ஒரு சித்தாண்டியாகவும் வந்து, உன்னை மாலை மணம் புரிவேன்; முருகனுக்கு சாப விமோசனம் கொடுப்பேன்" என்று சிவபெருமான் சொல்லி பார்வதியை ஒரு பச்சிளம் குழந்தையாகப் பாவித்து ஒரு பெட்டியில் வைத்து திரை முகத்தில் தவம் இருக்கின்ற அதியரசனுடைய இடத்திலே கொடுத்தார். அப்படிக் கொடுத்துப் பக்குவப் பெண்ணாள் இருக்கப்பட்ட சமயத்தில், பார்வதியைப் பார்த்த பரமசிவன் நந்தியைத் துணையாக அழைத்துக்கொண்டு முருகனின் சாபத்தைத் தீர்த்து, பார்வதியையும் மணம் செய்து கொண்டு, கைலாச மலைக்கு வந்து, சிவசக்தி சமேதரர்களாகக் காட்சி யருளிய வேளையில், சிவனையும் பார்வதியையும் பார்க்க வேண்டுமென்று, தேவர்கள் புடை சூழ கைலாச மலையில்

வந்து, சிவனுடைய பாதத்தை வணங்கிநின்ற வேளையில், பரமசிவன் தேவர்களைப் பார்த்துச் செல்லுகிறார்.

(பாட்டு)

நல்ல தெய்வார்களே என்னைக் காண வந்தீர்
நாட்டில் உள்ள வகை ஏது நீங்கள் கொண்டு வந்தீர் என்றார்
என்ன வகை கொண்டு நாங்கள் வருவது ஐயா
இந்தக் கைலாயத்தில் இல்லாத வகை ஏதும் உண்டோ
பொன் பணமானது காணிக்கை வைத்து(த்) தொழுதால்
பொருட்டல்ல ஆதி சிவனே உமக்குச் சரியோ
கண்கொள்ளாப் பட்டு பரிவட்டம் சூடவும் மாட்டீர்
கருத்தாய் உடுப்பீர் புலித்தோலும் காவி நல்ல வேட்டியும்
வெளுக்கும் பொழுதில் நெற்றியில் சாம்பலைப் பூசி
ஒக்கவே கந்தைத் துணியும் உடுத்திக் கொள்வீரே
சறுக்காமலே கிழட்டாண்டி போல் வேடம் கொண்டு
சந்தோசம் வந்தாக்கால் தொந்தோம் என்றாடிக் கொள்வீர்
உமக்கு நாங்கள் என்னவகை கொடு வருவோம் காண
உம்மாணை சொல்லுங்கள் உமக்குப் பிரியமான வகையை
பிரியமான வகை தருவேன் என்று உரைத்தீர்
பேசுகிறீர் நீர் கொண்டு வருவதைப் பார்ப்போம்
அகிலத்தில் இல்லாத வகை தர வேணும் எனக்கு
உங்களுடனே எவ்வாறு நானுமே கேட்க
கடலில் பிறக்கின்ற மாலை கொடு வருவீரானால்
காணலாம் உங்கள் திறங்களை என்றவர் சொன்னார்
சொன்னதை(க்) கேட்டந்த தெய்வார்கள் எல்லோரும் கூடி
திகைத்து நின்றாரே ஆதிபரன் சொன்னதாலே.

(வசனம்)

இறைவன் கேட்கின்றார், "என்னை வந்து வணங்கி நிற்கும் தேவர்களே! எனக்கு என்ன கொண்டு வந்தீர்கள்" என்று சிவன் கேட்க, "தேவா! இந்தக் கைலாயத்தில் இல்லாத வகை என்ன இருக்கின்றது. தாங்களோ விருப்பு வெறுப்பு இல்லாதவர்கள்; எதையும் தாங்கள் விரும்பியது கிடையாது." அப்போது சிவபெருமான் சொல்லுவார். "தேவர்களே! உலகத்தில் கிடையாத கடலில் பிறக்கும் பொன்னரிய மாலை கொண்டு வாருங்கள். உங்கள் திறத்தைப் பார்ப்போம்" என்று சொன்னதும் தேவர்கள்...

(பாட்டு)

நல்லது எங்களால் இயன்ற மட்டும் இனி பார்ப்போம்
நாயகன் சொல்வதை மாட்டோம் என்று சொல்வதில்லை
எல்லாம் இருக்கட்டும் தெய்வாரே நாமள் இனிதான்
ஏறிக் கடல் அமிர்தம் கடையவும் வேணும்
வொல்லாத பேருக்கு புத்தி சொன்னால்தான் வருமோ
போகாதிருந்தால் கூடி எல்லோரும் சிரிப்பார்
நல்லது எங்களால் இயன்ற மட்டும் பார்ப்போம்
நடுக் கடலில் ஏறி அமிர்தம் கடைகிறோம் எனச் சொல்லி
சிவனாரை தெய்வார் தொழுதுமே கொண்டு தோத்திரம் செய்து
சிவனுண்டு சிவனுண்டு என்று வழி நடந்தாரே.

(விருத்தம்)

நடந்தார் தெய்வார் அனைபேரும் நாமள் இனிமேல் செய்வதென்ன
மனம்தான் கலங்கி தடுமாழிந்து மனதுதேறி உறைப்பாக
தினம்தான் முழுங்கும் திரைகடலில் தெய்வார்சேர மிகத் திரண்டு
வனம்தான் கடந்து வழி நோக்கி வந்தார் திருப்பாற்கடலில்.

(வசனம்)

இறைவன் சொல்லைத் தட்டாத தேவுக்கள், பொன் னிய மாலை கிடைக்க வேண்டுமே, அதனால் திருப்பாற் கடலில் சென்று அமிர்தம் கடைய வேண்டுமென்று மனதைத் திடப்படுத்திக் கொண்டு, திருப்பாற் கடலில் வந்து,

(பாட்டு)

கடலில் வந்தாரே தெயவா ரனைபேரும்
காட்சி செய்யும் சிவனைக் கருத்துன்னியே
உன்னியே ஒரு கோடி தெய்வார்தான்
உற்றதோர் திருப்பாற்கடல் மீதிலே
கண்ணனே வெண்ணை முன்னாள் திருடிய
கார்வண்ணா உன் தஞ்சம் என்றுதான்
உன்னியே அஞ்செழுத்தை சிவன் பேரிலே
உற்றதோர் மலையை மத்தாக ஆக்கினார்
எண்ணியே திருமாலை நினைத்துடன்
ஏக வாசுவை தான் பதுமை யாக்கினார்
நல்ல கணபதி தன்னை வணங்கியே
நாள் கொண்டு குரவையுமிட்டனர்
மடமட வென்று குரவை முழக்கியே
மகாதேவர் சரண மெனச் சொல்லியே

சிவ சிவா என்று நெஞ்சில் நினைத்துடன்
திருப்பாற் கடலில் ஏறி ஒடுக்கமாய்
மலைகளெங்கும் கிடு கிவடன் றாடிட
மாமுனிவர் மயங்கி தியங்கிட
குரவை சப்தம் மிகுதி எழும்பிட
கூடி தெய்வார் அமிர்தம் கடைந்தாரே.

(வசனம்)

தேவர்கள் நல்ல நாளைத் தேர்ந்தெடுத்து மந்திரகிரி மலையை மத்தாகவும் வாசுகியைக் கயிறாகவும் கொண்டு அமிர்தம் கடைய எட்டுக் கடலும் கிடுகிடு என்று ஆடுகின்றது. மேலும்,

(பாட்டு)

கிடு கிவடன்று கடல்கள் நடுங்கிட
கேட்டிருப்போர் தலைகள் கவிழ்ந்திட
சுருதி கொண்டு அமிர்தம் கடைந்திட
தோன்றும் மச்சம் கடலில் மிதந்திட
அலைகடலது சுழாய்க் கலங்கிட
ஆகவே தெய்வார் அமிர்தம் கடைந்திட
கை அயர்ந்து சடைத்துமே தெய்வார்கள்
கலங்கிக் கடல்மீதில் இருக்கவே
வாய் சொல்லாத சிவனுக்கு நாமள்தான்
வாய் சொல்லிப் பிழைப்போமோ நாமள்தான்
என்ன செய்யலாம் என்று தெய்வார்கள்
எண்ணியே மனம் புண்ணாய் உளைந்தவர்
அந்நேரம் தெய்வார் வாடியவர் நிற்கவே
அறிந்து ஈசனார் கண் குளிர்ந்தனர்.

(வசனம்)

கடலைப் பலமாகக் கடைந்தும் பலன் இல்லமல் தேவர்கள் கை சடைத்து கால் சடைத்து நிற்கும் நேரத்தில்,

(பாட்டு)

வாராய் நீயும் பிரம்ம தேவா இப்போ
வையகத்தில் கரு வுரு செய்தவா
போடா நீயும் திருப்பாற் கடலிலே
புகழதாகக் கருப் பிடித்துப்போட
கருப்பிடித்துதான் உருவும் திரளுமோ

காணலாம் பிரம்ம தேவா என்றனர்
என்றுதான் சிவன் சொன்ன மொழி கேட்டு
ஏற்றதோர் கடல் தன்னில் வந்தனர்
ஏனடா தெய்வாரே மண்டையை உடைக்கிறீர்
என்னை அல்லாது உங்களால் ஆகுமோ
பாரடா என் பலவித வித்தையும்
பண்பாக கரி எடுத்தே இட்டார்
ஆகவே உரு ஓடி வளர்ந்துடன்
ஆனைதான் மதயானை பிறக்குமாம்
பிறந்ததோர் மதயானையைக் கண்டுதான்
பெருக தெய்வார்அனைபேரும் கூடியே
அறந் தழைக்கும் சிவனார் இடத்திலே
ஆனையைக் கொண்டுதான் அவர் இட்டனர்
விட்ட யானையைக் கண்டு சிவன் முதல்
வெகுண்டு தெய்வாரை ஏறிட்டுப் பார்த்தார்
ஆனை ஏறித் திரிவதைக் கண்டீரோ
ஆண்டிக்குத்தான் ஆனை யாகுமோ தெய்வாரே
கோபம் கொண்டு தெய்வார் நடந்துடன்
கூடியே அமிர்தம் கடைந்தார்கள்.

(வசனம்)

தேவர்களெல்லாம் ஒன்றாகக் கூடி அமிர்தம் கடைந்த வேளையில் கரி என்னும் யானை பிறந்தது. யானையை சிவபெருமான் இடத்திலே கொண்டுவிட்டார்கள். சிவ பெருமான் தேவர்களைப் பார்த்து, "நான் யானை ஏறித் திரிவதை நீங்கள் பார்த்தது உண்டா? ஆண்டிக்கு இந்த யானை எதற்கு" என்று கேட்டார். எனவே மீண்டும் தெய்வார்கள் அமிர்தம் கடைகிறார்கள். அப்போது,

(பாட்டு)

நாடியே பிரம்மன் புள்ளி மனம் கண்டு
நல்லதோர் கருவாகவே தூண்டினார்
கருவுருவும் புலி உருவாகியே
கடல் மீதிலே புலி வந்து தோன்றுமாம்
தோன்றும் புலியானதைக் கண்டுதான்
தோகை பங்கன் இடதில் கொடு வந்தனர்
விட்டபோது புலி வாகனமதை
வெட்டினார் கிட்ட நின்றவர் கூடியே
புலித் தோலை உரித்து சிவன்முதல்

புனைந்து கொண்டார் அரையில் அணிந்தவர்
பார்த்து நின்ற தெய்வார்கள் அப்போதிலே
பாரு பாரென்று அமிர்தம் கடைந்திட
கோபம் கொண்டு அமிர்தம் கடைந்தனர்
கூண்டதோர் மழு வந்து பிறக்குமாம்
ஆகட்டென்று மழுவை எடுத்தவர்
அரனார்க்குக் கொண்டு போய் வைத்தனர்
வைத்ததோர் மழுவை வாங்கியே சிவனாரும்
வலது கைதனில் ஏந்தித் தரித்தனர்
நித்தம் இப்படி தெய்வார்க்கு வேலைதான்
நினைந்து தில்லை சிவன் முதலார்க்கு

(வசனம்)

தேவர்கள் மீண்டும் அமிர்தம் கடையும்போது வரிப்புலி பிறந்தது. சிவனார் அதன் தோலை உரித்து ஆடையாக அணிந்தார். மீண்டும் தேவர்கள் அமிர்தம் கடையும்போது மழு என்னும் ஆயுதம் பிறந்தது. அதையும் சிவனார் தனக்கென்று வைத்துக் கொண்டார். மேலும் தெய்வார் அமிர்தம் கடையும்போது,

(பாட்டு)

கத்திக் கத்தியே கருங்கடல் ஏறியே
கருதி தெயவார் அமிர்தம் கடைந்தனர்
மறுத்து தெய்வார் கடைந்திட
வந்துதான் திருவெண்ணீறு உதிக்குமாம்
திருவெண்ணீறு உதிக்கும்படி கண்டு
சிவ சிவா என்று கையில் எடுத்தனர்
சாம்பல் பூசுகிற ஆண்டிக்குக் கொண்டுபோய்
சந்தோசமாக வைத் தடி தொழுதனர்
வைத்த வெண்ணீறை வாரி அணிந்துடன்
வளமையாய் பூசி அணிந்திருந்தார் சிவன்
இந்த வேலைகள் போதும் தெய்வார்களே
இறங்கடா கடலைவிட்டு இனி நீங்கள் என்றாரே.

(விருத்தம்)

கடலதிலே நீங்கள் கனதூயர் படவும் வேண்டாம்
அலைகடலை சேறதாக்கி அமிர்தமும் கடைந்தீர் நீங்கள்
உலைவதே யல்லால் வேறு உற்றதோர் வரிசை காணோம்
மலைவதாய் தெய்வார் கேட்டும் மறுத்தவர் கடலில் வந்தாரே.

(பாட்டு)

வந்தாரே தெய்வார்கள்
மறுத் தமிர்தம் கடைவதற்கு
எந்தவகை ஆனாலும்
இயலாது நமக்கெனவே
அலைகடலை விட்டிறங்கி
அழகு தெய்வார்கள் அனைபேரும்
கை அயர்ந்து கால் அயர்ந்து
கமல முகம் தான் கோணி
அய்யாவே சரணமென்று
அரன் பிரம்மன் இடத்தில் வந்தார்
வந்த தெய்வார்கள் தனைப் பார்த்து
வளர் பிரம்மன் ஏது சொல்வார்
ஏதடா தெய்வார்களே
என்னிடத்தில் வந்த தென்ன
அலை கடல்தான் ஏறி
அமிர்தமது தான் கடைந்தேம்
ஒரு பலனும் கண்டதில்லை
உடையவர்க்கும் ஏற்றுதில்லை
குருவில்லாத சீடருண்டோ
கருவில்லாத வித்தையுண்டோ
எங்களுக்காய் நீரும் வந்து
இன்னும் ஒரு கரு பிடித்து
அங்கு கடல் மீதிலிட்டால்
அறியலாம் பிரம்மதேவா.!

(வசனம்)

இப்படியாக தெய்வார்கள் மீண்டும் அமிர்தம் கடைய எண்ணிக் கடலில் வந்தார்கள். ஆனால் ஒன்றும் பிறக்க வில்லை. வாடி மனம் புண்பட்டு, இந்த தெய்வார்கள் படைக் கும் தேவனாகிய பிரம்மதேவனை அழைத்து, கடலில் கரு பிடித்துப் போடச் சொன்னார்கள். அப்போது பிரம்மதேவன்,

(பாட்டு)

உங்களுக்கு இது வேலை
ஒரு நாளும் தீராது
தங்களுக்கும் உங்களுக்கும்

தானவரே இனிவாரும்
வாரும் என்றுதான் கூட்டி
வந்தாரே கடலதிலே
ஏறுமடா தெய்வாரே
எல்லோரும் கடலதிலே
சிவந்த அரளிப் பூவெடுத்து
சிருஷ்டித்து கடலி லிட்டார்
மடமடென்று அமிர்தமது
மறுத்தவர்கள் கடைந்திடவே
கடலில் அமிர்தமது கடைய
கறை கண்டனார் திருவருளால்
சடையாமல் தெய்வார்கள்
சந்தோசம் ஆகும்படி
மகாதேவர் திருவருளால்
மாலைவந்து பிறந்திடுமாம்
பொன் னரிய மாலையது
புகழ்கடலில் பிறந்திடுமாம்
கன்னியர்கள் குரவையிட
கண்டாரே மாலைதன்னை
பிறந்த நல்ல பொன்னரிய மாலை
பேருலகில் கிட்டாது
இதுபோல மாலை
இவ்வுலகில் கண்டதில்லை
சிவனார்க்கும் அல்லாது
தேவர்களுக்கும் தாங்காது
மாலை கண்டாலே ஒருவர்
மனம் பொறுக்கக் கூடாது
இப்படியே கொடு போனால்
இடைவழியில் பறிப்பார்கள்
மாலை வைத்துப் பூட்டுதற்கும்
வர்ண செப்பு வேணுமென்றார்
வண்ணமுள்ள கடலதிலே
வந்து செப்பு பிறந்திடுமாம்
பொன்னும் செப்பும் தானெடுத்து
மறைத்து வைத்துப் பூட்டுவாராம்
ஆரொருவர் காணாமல்
வைத் தடைத்தார் மாலை தன்னை
தங்கச் சுமடாக மாலையதை
தானெடுத்தார் தலைமேலே.

(வசனம்)

இந்தவிதமாக, தெய்வார்கள் கடலிலே வந்து அமிர்தம் கடைய பிரம்மதேவன் அரளிப் பூவெடுத்து உருப்பிடித்துப் போட கடலில் பொன்னரிய மாலை வந்து பிறந்தது. பிறந்த மாலையை வைப்பதற்கு பொன்னரிய செப்பு ஒன்றையும் கடலிலே எடுத்து அதனுள் மாலையை வைத்து, தேவர்கள் மனது மகிழ்ந்து இதுபோல் மாலையை இவ்வுலகில் நாம் கண்டதில்லை என்ற மகிழ்ச்சியோடு, தலைமேலே சுமடாக எடுத்துச் சுமந்து கொண்டு, எங்கே வருகிறார்கள் என்றால்,

(விருத்தம்)

மாலையைத் தலையில்வைத்து மகிழ்ந்தவர் நடக்கும் போது
ஆலயமாகத் தேவர் அரனுக்குச் சேரத்தக்க
காலை நல்ல பொழுது தன்னில் கருங்கடலில் பிறந்த மாலை
வாலை நல்ல பருவத்தேவர் வழிகொண்டு நடந்தாரன்றே.

(பாட்டு)

நடந்தாரே தெய்வார்கள் – எங்கள்
நாயகரைக் காண வேணுமென்று
உலைந்தார் அனைபேரும் – அங்கே
ஓராயிரம் பேர்தான் போனார்
போனார் அதில் சிலபேர் – அவர்
புத்தி விஸ்தாரம் இல்லாதார்
சேன முள்ளபேர்கள் –வெகு
தெய்வார்கள் கூடி வழி நடந்தாரே
ஒருநாள் போற பாதை –தேவர்க்கு
ஒருநாள் தெரியாது
தடமான பாதைவிட்டு –வழி
தப்பி நடந்தாரே தெய்வார்கள்
மலையாம் மலையடிவாரமாம் –அது
கண்டு நடந்தாரே தெய்வார்கள்
மஞ்சள் இஞ்சி விளையும் மலை – நல்ல
நாகம் வரிவேங்கை வாழும் மலை
இஞ்சி பிஞ்சி படரும் மலை – ஏற்ற
முனிவர் இருந்து தகையாறும் மலை
கடுவாய் புலி கரடி – அதில்
காட்டானை கூடியே வாழும் மலை
மலையில் வரும்போது – ஏற்ற

மாமுனிவரும் இருக்கக் கண்டார்
இருள்தானும் உறைந்த மலை – ஏற்ற
மலைக்காவு தன்னில் வந்தாரே.

(வசனம்)

சிவபெருமானைக் காணவென்று, தேவர்களெல்லாம். மலை வழியாக மாலையைக் கொண்டு வந்தார்கள். இஞ்சி,பிஞ்சி விளையும் மலையைக் கடந்து புலி, கரடி,கடுவாய் போன்ற மிருகங்கள் வாழுகின்ற மலையை எல்லாம் கடந்து, மாமுனிவர்கள் வாழுகின்ற மலையை நோக்கி வந்தார்கள். மேலும்,

(பாட்டு)

கண்ணும் விரியாத்து
காலால் நடந்து தகனமுற்று
வண்ணமுடன் தெய்வார்கள்
வந்தார் முனிவர் இடமதிலே
தலைகீழே கால்மேலே
சடைதான் வளர்ந்து தரைமேலே
விரைவாக வேரூன்றி
வெகுண்டு முனிமார்கள் இருக்கக் கண்டார்
கண்டு நமஸ்கரித்தார்
கடுக முனிமார்கள்தான் பார்த்தார்
இந்த நல்ல மலைதனிலே
ஏனடா தெய்வாரே வந்ததென்ன
வந்தோம் விதிவசத்தால்
வழியும் திசையும் தெரியாமல்
உங்களுடைய அடைக்கலம்தான்
உற்ற பாதை காட்டிடுவீர்
முன்னாள்இந்த மலைதனிலே
முழுதும் தெய்வாரே வந்ததுண்டோ
ஆனாலும் நீங்கள்
அரனாரிடத்திலே போவதற்கு
வாணாள் மறுகாமல்
வழி காட்டிடுவீரே முனிவோர்களே.

(வசனம்)

இந்த தேவர்களெல்லாம் மலைவழி நடந்துவரும்போது ஒரு நாள் போற பாதை ஒரு நாள் தெரியாது. கண் சடைத்து

கால் சடைத்து இவர்கள் வரும் போது தலைகீழாகவும், கால் மேலாகவும் ஒரு முனிவர் தவம் செய்வதைப் பார்த்தார்கள். அவரிடத்திலே நடந்த விபரங்களைச் சொன்னார்கள். அப்போது, அந்த முனிவர் தேவர்களுக்கு வழி சொல்கிறார். எப்படி,

(பாட்டு)

இந்த மலைக்கு அப்பால்
இரத மலை வந்து தோணும்
அந்த மலை தான் கடந்து
அப்பால் வெகுதூரம் போகயிலே
இருண்ட மலைதான் தோணும்
ஏற்ற வனவாசமும்தான் தோணும்
அந்த மலைதனைக் கடந்தால்
ஆன பர்வதமும் தோணும் கண்டீர்
இந்த நல்ல மலை வழியே
ஈசன் கயிலை போமெனவே
சந்தோச மாகவே தான்
சங்கரனாரிடம் போன துண்டால்
எங்கள் நல்ல வரலாறு
ஈஸ்பரர்க்குச் சொல்லு மென்றாரே.

(விருத்தம்)

சொல்லுவீர் தெய்வாரே துரிதமாய் நீங்கள் போனால்
வல்லமையாக நாங்கள் வருந்திடும் வளமை எல்லாம்
கல்லுமே உருகும் கண்டீர் எங்கள் கருமம் தெளியவில்லை
நல்லது என்று தெய்வார் நடந்தனர் மாலை கொண்டு.

(வசனம்)

இந்த விதமாக முனிவர்கள், தேவர்களுக்கு வழி சொல்லிக் கொடுத்து, சொல்கிறார்கள். "ஐயா! தேவர்களே! நீங்கள் கயிலாயத்துக்குச் சென்றால், நாங்கள் இத்தனை வருடம் தவம் இருந்து இறைவனைக் காணமுடியவில்லை. ஆகையால் ஆண்டவனாகிய சிவபெருமானிடத்திலே எங்கள் நிலைமையைச் சொல்லுங்கள்" என்றதும் தேவர்கள், நல்லதென்று மனமகிழ்வழியாக நடந்து வருகின்றனர்.

(பாட்டு)

(இரட்டை சீர்)

மாலைகொண்டு தெய்வார்கள் மாமுனிவர் இடமும்விட்டு
மறுமலையை நோக்கி நடந்தாரே (மறுமலை...)

மாண்புடைய தெய்வார்களெல்லாம் சேர ஒன்றாய்க் கூடி
சுமடதுவும் தலைமேல் வைத்து (சுமடது...)

சிறந்த வட மலையதிலே வந்தார்
சிவனே நீர் துணை என்று எண்ணி (சிவனே...)

இருட்டு மலையானதிலே இருமலையும் ஒரு மலையாய்
இரத மலை கண்டு நடந்தாரே (இரத...)

குங்குமப் பொய்கைகளும் சந்தனக் காவுகளும்
குமடுகளும் அடவிகளும்விட்டு (குமடு...)

நெருங்கி வாழும் மலையுமிட்டு
தப்பரவி தெய்வார் நடந்தாரே (தப்பரவி...)
கனக் குரவை கேட்டு வடமலை யானதிலே
கண்டு தெய்வார்கள் வரும்போது
(கண்டு...)

மடமடன்று கேட்டதொரு குரவை ஒலி சப்தமது
மலைக் கன்னிமார் குரவை கேட்டாராம் (மலைக்...)

அந்த மலை அடிவாரமிட்டு அப்பாலே தெய்வார்கள்
அழகான நழுகு மலை கண்டார் (அழகான...)

நழுகுமலை யானதிலே தெய்வார் வார வழிபார்த்து
நாங்கு மலை யானதிலே வந்தார் (நான்கு...)

அழகான ஏழெட்டு மலை அடிவாரமும் கடந்து
ஆன தெய்வார்கள் வரும்போது (ஆன...)

பல நாளும் வார வழி அறியாமல் தெய்வார்கள்
படி மலை மீதிலே வரவே (படி...)

கனபேர்களாகவேதான் அறுபது பேர் கவனமோடி
கன கூட்டமானதிலே வந்தார் (கன...)

தட தடென தெய்வார்கள் விரைவினுடன் தான் வரவே
தானிருந்த கவனமோடி கண்டார் (தானிரு...)

அறுபது பேரும் ஒருமித்து விரைவாக தானெழுந்து
அதட்டினார் அவர்கள் வலுவாக. (அதட்டி...)

(வசனம்)

இந்த தேவர்கள் எல்லாம், பலவிதமான மரங்கள் வாழுகின்ற மலை வழியாக பொன்னரிய மாலையைக் கொண்டு வரும்போது ஒரு மலையில் வருகிற சமயம், அங்கு வாழுகின்ற 60 பேர் கவனமோடிகள் பார்த்தார்கள். உடனே அவர்கள் தேவர்களை மறித்து,

(பாட்டு)

ஏதடா தெய்வாரே
இந்த மலை வார மதிலே
எங்களிடம் வந்ததென்ன **(எங்க...)**

தலை யதிலே இருக்கும் சுமடதும் ஏதடா
தங்கமான செப்பதுவும் ஏதடா
சடையாமல் சொல்லுவீர்கள் என்றார்

மலைமேலே அறுபது பேர் கவனமோடி தனைக் கண்டு
மாலை யென்றார் அவர் பதறி
மட மடென்று கையும் காலும் ஆடி

ஏதடா மாலை யது எங்கேதான் கொடுபோறீர்
எனக் கறிய சொல்லு மென்றாரே
ஈனர் அந்த கவன மோடி எல்லாம்

பொன்னரிய மாலையது
புரிசடை யோனுக்காக
புகழ் கடலில் மாலைகொண்டு போறோம்

பொன்னரிய மாலை என்று
அவர்களும் சொல்லிடவே
மனம் பூரித்து கவனமோடி நின்றார்

இம்மாலை ஆனதையும் எங்களுக்காய் கொண்டு வந்தீர்
இறக்கடா தலை சுமடானதை
எதிர்த்து வார்த்தைப் பேசுகிறீர் என்றார்.

(வசனம்)

"டேய்! தேவர்களே! இந்த மலை வழியாக வந்த காரணம் என்ன? உங்கள் தலைமேல் இருக்கிற சுமடு என்ன?" என்று கேட்க, சொல்கிறார்கள் தேவர்கள். "ஐயா! தலையில் பொன்னரியமாலை சிவபெருமானுக்குக் கொண்டு செல் கிறோம்; வழியை விடுங்கள் ஐயா!" என்றனர். அப்போது

அந்த கவன மோடி, "டேய் ! தெய்வார்களே! இந்த மாலையை நாங்கள் அணிந்தால் என்ன? எங்களை விடவும் சிவன் உயர்ந்தவரா? மரியாதையாக மாலையை இறக்குங்கள்" என்று சொல்லவும்,

(பாட்டு)

ஏனடா கவனமோடி
இடும்புகளை செய்யாதே
ஈஸ்பரனார் அறிந்தாக்கால் மோசம் (ஈஸ்பர...)

அலைவிதமாய் உங்களுக்கு
மோசம் வரும் கண்டீரே
அதட்டாதே பகட்டாதே மோடா (அதட்டா...)

அறுபது பேரும் நீங்கள்
ஒருமித்து கூடினாலும்
ஆவதென்ன செய்வதென்ன நீங்கள் (ஆவதென்ன...)

சனம் வரும் உங்களுக்கு
சண்டாள பாவிகளே
சண்டை செய்து மிண்டுகள் செய்யாதே (சண்டை...)

(வசனம்)

"டேய் கவனமோடிகளே! இது இறைவனுக்குக் கொண்டு செல்லும் மாலை. இதை நீங்கள் பறித்தால் உங்களுக்கு அழிவு வரும்." மேலும்,

(பாட்டு)

பரமசிவனார் தனக்கு
அபிஷேகப் பால் கொண்டு வந்த
பாதையிலே முப்புராதி கூடி (பாதை..)

வண்டத் தனம் செய்தவர்கள்
அபிஷேகப் பால் பறித்தவர்கள்
வாழ்ந்திருக்கக் கண்டீரோ நீங்கள் (வாழ்ந்..)

தலைமிஞ்சி அறுபது பேர்
சண்டையிட்டு பறிக்க வந்தீர்
தலை சுமடு இறக்குவதும் இல்லை (தலை...)

அழகு தெய்வார் சொன்ன மொழி
அறுபது பேரும் கேட்டு
அதில் ஒருவன் நல்லவனும் சொல்வான் (அதில்..)

ஏனடவா கவனமோடி
இடும்புகளைச் செய்யாதீர்
ஈஸ்பரனார் அறிந்தாக்கால் மோசம். (ஈஸ்பர..)

(வசனம்)

"கவனமோடிகளே! அன்று உங்களைப் போல் முப்புராதி கள் இறைவனுக்குக்கொண்டு சென்ற அபிஷேகப் பாலைப் பறித்த காரணத்தினால் திரிபுரத்தை ஈசன் சிரித்து எரித்தார். அவர்கள் நன்றாக வாழ்ந்தார்களா? 'கம்பை எடுத்தவன் கம்பினால்தான் அழிவான்' " என்றதும், அந்த 60 பேர்களிலும் இருந்த ஒரு நல்லவன் கூறுகின்றான், "டேய் கவனமோடி களே! வம்பை விலை கொடுத்து வாங்க வேண்டாம்" என்றதும்,

(பாட்டு)

தாக்குடைய தெய்வார்க்கு
வழிகாட்டி போவோம் என்று
தடத்தின் வழி அவர்களை அனுப்பினார் (தடத்தின்...)

அந்த மலை வார மிட்டு
தெய்வார்கள் அனைபேரும்
ஆதாளி செய்து வரும் நேரம் (ஆதாளி...)

சண்டமுண்டன் கவனமோடி
சண்டாள பாவியவன்
தானிருக்கும் மலையதிலே வந்தாரே. (தானிரு...)

(விருத்தம்)

வந்தார் தெய்வார் ஒருப்போலே மாலையது தானும் கெண்டு
சென்றார் சண்டமுண்டனவன் சிறந்து வாழும் மலையதிலே
கண்டே சண்டமுண்டனவன் கடுங்கோபமாய் எழுந்திருந்து
வந்த தெய்வார்கள் தனை மறித்து வம்பதுவும் செய்யலுற்றானே.

(பாட்டு)

ஆரடா நான் வாழ்கிற மலையது தன்னில்
ஆதாளிகள் செய்கிற தாரு

ஏதடா தெய்வாரே இதுவழியோ முன்
எங்கடா வருகிற அங்கடா நில்லு
ஊர் மனைவழியே போகிற தெய்வார்கள்
உள் மலைக் காவிலே வருகிறதேது
பாரடா என்னுட திறமது என்னவே
பல்லுகளானது நறுநறு நறென
ஏதடா உங்கள் தலையது தன்னிலே
இறக்கடா சுமடானது தன்னை
தலையிலே சுமடதுதான் ஏது
தங்கமான செப்புகள் ஏது
சுமடு மேலே செப்புகளேது
செப்பும் பூட்டும் திறவுகோல் ஏது
சினத்து வந்தான் உரைத்து மனது
திண்டுக்கு முண்டன் கவனமோடியும்
தடியோடு ஆயுதம் தன்னை எடுத்து
சண்டைகள் இட்டான் சண்ட முண்டனும்
நடு நடுங்கியெ தெய்வாரெல்லாம்
நண்டுகள் கண்ட குரங்கது போலே
கிடுகிடென தெய்வார்கள் தானும்
கெஞ்சி பல்லது அஞ்சி உரைப்பார்
உனக் கெனக் கென்ன உரமது பேசி
உன்னுடைய மண்டையை உடைக்கிறேன்
நடுக்கடலானதில் நாங்களும் இப்போ ஏறி
நலமுடன் வருடம் ஈராறாக
உரைத்து நாங்கள் அமிர்தம் கடைய
உடையவனார் செயலாலே உதித்த
உதித்த பொன்னரிய மாலை தன்னை
உடையவனார்கு கொடுபோறோம் நாங்கள்
போகிறோம் என்று தெய்வார்கள் சொல்ல
புத்தி இல்லாதவன் சீறின வகைபோல்
இரைச்சலாகவே ஓடி எழும்பி
இரு கண்ணும் சிவப்பேறிய அவனும்
அடிக்கிறேன் இனி பாரடா எனவே
அதட்டியே மலைபோலே நிமிர்ந்தான்
உலுக்கினாக்கால் அஞ்சுவதில்லை
உடையவனார்கு கொடுபோறோம் எனவே
சறுக்குமோ புலி நரிக்கு அஞ்சிடுமோ
சாகப் போகிறாய் வீணிலே நீதான்

வேந்தன் சீறி சார்ந்துணை யுண்டோ
வெள்ளஞ்சீறி சிறுபயிர் மீண்டதுண்டோ
பரிக்கு யானை பயப்படுமோ தான்
பட்டுப் போகிறாய் சண்டமுண்டா நீ
எருது மாடு பொதிக்கு அஞ்சிடுமோ
ஏத்தின பொதிகள் சுமக்கவும் வேணும்
கடும் பொதி கொண்டு குறுக்கினில் வைத்தால்
காலும் நடுங்கும் குறுக்கும் நெளிக்கும்
சினத்து எங்கள் மாலையைப் பறித்தால்
திட்டென உன் தலை அற்றிடுமோ தான்
தலையது அறு மென்ற உரை கேட்டு
சண்டமுண்ட னவன் தடி கொண்டு ஓங்க
அடிப்பா என்று தெய்வார்கள் நெருங்க
ஆகாயத்திலே ஓடி எழும்பி
எழும்பி தலை மீதி லிருந்த
ஏற்ற பொன்னும் செப்பும் நொறுங்க
அடித்தான் மண்டையில் கொண்டு உசத்தி
அடியது கொள்ள தெய்வார்கள் தலையில்
நடுக்கமாய்க் கொண்டவர் அடியதுபடவே
நல்லதோர் செப்பும் நொறுங்கினபோது
வெளிச்சமாகவே மாலை தெரிய
விண்ணில் எழும்பியே மாலை பறித்தான்

(வசனம்)

"சண்டமுண்டனே! உனது சமர்த்துகள் இங்கே காட்ட வேண்டாம்; பொதி சுமக்கும் எருது பொதியை முதுகில் வைத்துக் கொண்டு முதுகை நெளித்தால் அதன் கால்கள் நடுங்கி முதுகு வளைந்துவிடும். அதுபோல் நீயும் சாகப் போகிறாய்." அப்போது, கவனமோடி "எனக்குப் புத்தி புகட்டுற பேடிகளே! இதோ" என்று ஒரு தடியால் மாலை இருந்த செப்பில் எழும்பி சாடி அடித்தான்; செப்பு நொறுங்கியது. உடனே மாலையானது சூரியப் பிரகாசம் போல் ஜொலிப்பதைக் கண்ட பாவி என்ன செய்கிறான் பாருங்கள். மாலையை ஒரே தாவாகத் தாவிப் பறித்தான்.

(பாட்டு)

புகழ் பெரிய பொன்னரிய மாலை தன்னை
போட்டானே கவனமோடி கழுத்திலே

கழுத்தில் மாலையைக்கண்டு தெய்வார்கள்
கையை எடுத்து கண்ணிலே வொத்தி
ஆகாயத்திலே பறந்து நின்றுதான்
பறந்து விண்ணிலே போகிறபோது
பார்த்து நின்ற தெய்வார்கள் சொல்வார்
எங்களை நீதான் அடித்து மாலையை
ஏகியே ஆகாயத்தில் பறந்து
உரத்து மாலையைக் கொடுபோனாய் நீயும்
உன்னுடைய ஊரும் பேரும் உரைப்பாய்
இருக்கும் இடமது சொல்லவே கேளு
ஈக்கள் இருந்தால் அயர்ந்து போய்விடும்
இந்திராணி மலை இருக்கும் இடமே
இருட்டு மாமலை நடு மலை தன்னிலே
எழுபது பாகம் புடையது உண்டு
புடைக்குள் ஏழு கதவுகள் உண்டு
வருகவே நான் வாழ்கிற புடையில்
உனக்கு நான் இதுவாக உரைத்தேன்
உன்னுட நாயகனோடு சொல்லு
சொன்னால் அவனால் என்ன செய்திடலாம்
சோழியல் பூண்ட ஆண்டியவன் தானும்
தெய்வார்கள் காண கவன மோடியும்
திட்டன மாலை கொண்டு பறந்தானே.

(வசனம்)

இப்படி பறித்ததொரு பொன்னரிய மாலையைக் கழுத்தில் போட்டுக்கொண்டு கவனமோடி செல்கிறபோது தேவர்கள் அவனிடத்தில், "நீ எங்கே இருக்கிறாய்; உன் நாடு என்ன?" என்று கேட்டனர். அப்போது, "டேய்! இந்திராணி மலைக்கு நடுவில் எழுபது பாகம் புடை உள்ள ஒரு பெரிய குகை இருக்கின்றது; அந்தப் புடைக்கு ஏழு கதவுகளுண்டு; அங்கே வந்து என்னைப் பாருங்கள். உங்கள் ஊதாரிக் கடவுளால் என்னை என்ன செய்ய முடியும்? அந்தப் பரதேசியிடம் போய் கூறுங்கள்" என்று கூறிப் பறந்து சென்றுவிட்டான் கவனமோடி இவ்விதமாக.

(விருத்தம்)

மாலையும் பறித்துக் கொண்டு வம்புகள் பலதும் பேசி
ஊர்தனை நோக்கிப் போனான் உற்ற மலை நோக்கி

காசினியோர்கள் மொய்க்க கலியுகமாகவே தான்
பாவிதான் கவனமோடி பறித்தவன் மலையில் போனானே

(பாட்டு)

பொன்னரிய மாலை தன்னை பறி கொடுத்த தெய்வார்கள்
புரமெரித்த சிவனார்க்குசெய்தி சென்று சொல்லவென்று
இந்த உலகானதிலே வம்பு செய்த முண்டனவன்
இவன் தலையை அறுப்பதற்கு திறம் விடுமோ அறியோம்
குன்றுதனைப் பிடித்த கோபாலருண்டு
கூண்ட கைலாசபதி ஆண்டவனாருண்டு
அரிய கணபதியும் உண்டு வடிவேலரும் உண்டு
ஆன நல்ல எமதர்ம ராஜாவும் உண்டு
கைலையிலே இவர்களுண்டு மாலையைப் பறிக்க
கடிதாக ஓடுகின்ற ஆதித்தனும் உண்டு
சொல்லியந்த தேவர்கள் மனதைத் தேற்றிக் கொண்டு
சூழச் சூழ நடந்தவர் நேரே நடந்தாரே
பவள மலை நேராக தேவர்கள் நடந்து
பலம் பெறலாம் என்றிருந்தோம் இடைவெளியில்
தலைநாளில் விபீஷணன்தான் சொன்னசொல் கேளாமல்
தட்டழியப் பட்ட பின்பு தடுமாறினானே
அலைகடலில் பள்ளி கொண்டார்அறுத்த வகை போலல்லவோ
அகமெல்லாம் தான் குளிர தெய்வார்கள் நடந்தாரே
பலநாளும் வார வழியாக தெய்வார்கள் நடந்து
பரமசிவனார் இருக்கும் கைலையிலே வந்தார்
சடைத்து முகம்தான் கோணி தட்டழிந்து தெய்வார்கள்
தங்களிலே கூடி அவர் அன்று சிவன் முன்பில்

(வசனம்)

பாடுபட்டு இறைவனுக்குக் கொண்டுவந்த பொன்னரிய மாலையை பாவியாகிய சண்ட முண்டனிடம் பறிகொடுத்த தெய்வார்கள், "கடவுளே! நாங்கள் என்ன செய்வோம் என்று கலங்கி, பின்பு எப்படியும் ஆகட்டும், இந்த மாலையை வாங்கக் கண்ணன் கணபதி, கதிர்வேலன், இந்திரன், எமன் இப்படி பலர் இருக்கிறார்கள். இந்த சண்ட முண்டனின் தலையை அறுப்பதற்கு தெய்வ சக்தி இல்லாமலா போய் விட்டது?" என்று ஆலோசித்தவர்களாக நேராக இறைவன் இருக்கும் கைலாச மலைக்கு ஏகினார்கள். அங்கே,

(பாட்டு)

வாடி யவர் சிவனிடத்தில் வந்தவரைத்தான் பார்த்து
மகாதேவர் ஆனவரும் மனமகிழ்ந் தேது சொல்வார்
ஏதடா தெய்வாரே என்னிடத்தில் நீங்கள்
இந்த மனப் பீடையோடு வந்த வகை சொல்வீர்
நல்ல தினமதிலே அமிர்தமது கடைந்து
நாங்கள் பட்பாடு சொன்னால் வாங்கத் திறனுண்டா
வொன்னரிய மாலைகொண்டு வார போதுதான்
புகழாகவே வழிகள்தப்பி வரும் நேரம்
ஆகாச சண்டமுண்டன் கவனமோடி ஒருவன்
அடித்து எங்கள் வொன்னரிய மாலை பறித்தானே
மாலையதைதான் பறித்து மலைநோக்கிப் போனான்
வரலாறு சொல்ல வந்தோம் கேள்வியுண்டே கேளுமென்றாரே

(வசனம்)

"இறைவா! எம்பெருமானே! தங்களுக்காகத் திருப்பாற் கடலில் சென்று அமிர்தம் கடைந்து, அதில் பிறந்த பொன்னரிய மாலையைக் கொண்டு வரும் போது, மலைப்பாதையில் நாங்கள் பாதை மாறி வந்த காரணத்தினால் கவனமோடி என்ற சண்டாளன் செப்பையும் உடைத்து மாலையையும் பறித்துச் சென்றுவிட்டான்" என்று,

(விருத்தம்)

கேள்விதான் உண்டால் கேளும் கிருபையாய் உமக்கு வேலை
வாள்விசேர் கடலில் நாங்கள் மாலைதான் பிறந்ததாலே
ஆளவே உமக்கு சாத்தி அடியினைத் தொழலாம் என்று
மீளவே வாரபோது வெட்டியே பறித்துக் கொண்டான்.

(பாட்டு)

பறித்தானே மாலை கொடுத்தோமே நாங்கள்
பட்டதுபோதும் இனிமேலும் நாங்கள்
உமக்குப் பணிவிடை செய்வதும் இல்லை
உம்முடைய சொல்லைக் கேட்பதுவுமில்லை
இடைவெளிதனிலே பறிகளுமாச்சே
ஏழை சிவனே கோபப்படாதீர்
சோதனை செய்ய திறமில்லையானால்
தூரத்தில் குடி ஓடியே போறோம்
ஆகட்டும் தெய்வாரே போங்கோ எனவே

அரனார் திருவாக்கு விடையும் கொடுத்தார்
விடையது கொண்டு அவர்களும் போக
மிக்க சிவனார் அதி கோபமானார்
கோபம் கொண்டு பார்வதியாளை
கோபித்து அரனார் ஏதுரை சொல்வார்
மாலை திரும்ப வருத்தாதே விட்டால்
வானவர் தேவர்கள் நம்மை நகைப்பர்
ஏதுவகையாலே நாமும்தான் மாலையை
எப்படி இங்கே வருத்திடுவோம் நாமும்
ஆனாலும் உமையே நீ யாகிலுமோ
அறிவது சொல்வாய் ஆண்டிக்கென்றார்
நானேது அறிவேன் சிவன் முதலாரே
நம்மைக் கெணியார் தெய்வார் இனிமேல்
போனால் மாலை போகட்டுமய்யா
புத்தி உண்டானால் சித்தம் இரங்கும்
ஆனால் நம்முடைய மக்கள் தானுமுண்டு
ஆதித்த பகவானுமே உண்டு
காலன் தூதன் எமனுமே உண்டு
கற்பித்தார் சிவன் அப்போது நந்தியும்
ஓடியே சென்று எமதர்ம ராஜாவை
உடனே அழைத்துக் கூட்டியே வந்தார்.

(வசனம்)

சிவபெருமான் தேவர்களை அனுப்பிவிட்டு என்தாய் உமையவள் சொல்படி எமராஜனை அழைத்து வந்தார்கள். எமராஜன் சொல்லுகிறார்.

(பாட்டு)

ஏது காண் ஐயா எனை அழைத்தீர்
என்று வணங்கியே தெண்டனிட்டாரே
தெய்வார் கூடி அமிர்தமது கடைந்து
திருப்பாற் கடலில் பிறந்தது மாலை
மாலையைக் கொண்டு வருகிறபோது
வம்பன் ஒருவன் கவனமோடிதான்
தெய்வார்கள் தன்னை அழைத்து நகைத்து
சினமதில் மாலையைக் கொண்டு போனானே
அவனையும் வென்று மாலையைப் பறிக்க
ஆனதினாலே உன்னை நானும் அழைத்தேன்
இயலுமோ உன்னால் அவனுடன் போர்செய்ய
எந்தனுக்கு வேலை நித்தமும் உண்டு

ஆயிரம் உயிர் நித்தம் பிடிக்க
அரனார் கட்டளை இட்டதும் உண்டு
அங்கே போனால் இங்கே பிடிக்க
ஆரால் ஆகும் கை விரைவாக
வானம் தன்னில் பறக்கும் முகடன்
வம்புகள் செய்வான் அவனோ டெதிர்த்தால்
போருக்கு அவனுடன் போவேனே யானால்
பெருமை உயிர்கள் பிடிப்பார்களுமில்லை
ஆனால் நீர் என்னைச் சொன்னதற்காக
அடியேன் போனால் குறைதீராது
சண்டமுண்டன் தலை அறுக்க
தானொரு பேரை வேற அழைத்து
வேறே ஒருவரைக் கூட்டி அனுப்பும்
வேலைகள் செய்வதால் கூலி கிடைக்கும்
ஆனால் இப்படி எமனும் சொல்ல
அரனார் அவரைப் போமென உரைத்தார்
உரைக்கவே எமன் அவனுமே போக
உடனே ஆதித்தன் தன்னையும் அழைத்தார்
அழைத்த பொழுதிலே ஆதித்த பகவான்
அரனாரைச் சென்று அடியினைத் தொழுதான்
என்னை அழைத்த பணிவிடை ஏது
இயம்புமய்யா என்றுபணிந்தான்
புகழும் தெய்வார் அமிர்தம் கடைந்து
பொன்னரிய மாலை கொண்டு வந்தார்
கொண்டு வரவே மலை வழியாக
குமண்டைகள் செய்து கவனமோடியும்
சீக்கிரம் மாலையைக் கெண்டு போனானே
போனவன் தன்னுடன் போர் பொருதி
பொன்னரிய மாலையைப் பறித்துவா என்றார்
ஆனால் அடியேன் போருக்குப் போனால்
ஆகவே உலகம் இருள்மூடி விடுமே
கால் நாழிகை இருப்பிடமில்லை
கதிர் கொண்டு உலகம் ஆனதிலே போக
விண்ணிலே போனால் வேலைதீராது
வெட்டவே அவனைக் கைக் கூடாது
என்னைக் கண்டு பறப்பான் அவனும்
சன்னப்போர் செய்யவே மாட்டான்
எத்தனை நாளது செல்லுமோ போரும்
இருளது உறையும் உலகமெல்லாம்

என்று ஆதித்த பகவானும் உரைக்க
உரைத்த மொழிகேட்டு உடையவனாரும்
உத்தரவு நீ போ என்றுரைத்தாரே.

(வசனம்)

இப்படியாக, மாலையைப் பறித்து வரும்படி எமதர்ம ராஜனையும் ஆதித்தனையும் பார்த்து சிவனார் சொன்னார். அப்போது இருபேருமே எங்களால் இயலாது என்று மறுத்துச் சொன்னார்கள். ஆகையால் இருபேரையும் அனுப்பிவிட்டு, சிவன் பார்வதியைப் பார்த்துச் சொல்லுகிறார். "பார்வதி...

(விருத்தம்)

போவென்று அரனார் உரைத்தபோது புகழ்ந்து ஆதித்தன்போக
ஏதோ வென்று சொல்லியவன் எண்ணி மனது புண்ணாகப் போக
வீணே உமையே பார்வதியே ஒருவர் விரைந்து போக
நானோ நீயோ போவோம் இனி நல்வாக்குரைப்பாய் பார்வதியே.

(பாட்டு)

உரையும் என்று சொன்னீரே
உற்றவரே அடியவளை
உம்முடைய மக்கள்தன்னை
உடன் அழைத்து அனுப்புமென்றாள்
பார்வதியாள் உரைகேட்டு
பரமசிவம் அப்போது
வாரும் பிள்ளாய் கணபதியே என்
வார்த்தை யொன்று நீ கேளாய்
பொன்னரிய மாலை தன்னை
புகழ்ந்து தெய்வார் கொண்டு வரும்போது
தன் நினைவை அறியாத
சண்டமுண்டன் கவனமோடி
தெய்வார்கள் தனை யடித்து
சிவனென்று எண்ணிப் பாராமல்
கை ஏற்றம் செய்தவனும்
கலகம் செய்து கொடுபோனான்
ஆனதினால் அவனை வென்று
அழகுமாலை பறித்துவர
நானும் உன்னை வரவழைத்தேன்
நடந்து சென்று நீ கடிதாய்

(வசனம்)

பரமசிவன் தன்னுடைய மூத்த மகனை அழைத்து மாலையைப் பறித்து வரும்படி சொன்னார். அப்போது கணபதி சொல்லுகிறார்,

(பாட்டு)

மாலை தன்னைப் பறித்துவர
மதியும் உண்டு திறமும் உண்டு
மாட்டோம் என்றால் கோபமுண்டு
சதியதுவும் செய்வாரோடே
தான் பொரவும் மாட்டேனே
பேழை வயறு கனத்து
போர் செய்யப் போகாது
சந்தியிலே போயிருக்க
தலைநாளாய் எனக்குக் கடன்
மண்டி யந்த கவனமோடி
மடக்கியவன் போர் செய்வான்
சண்டித்தனமாய்ப் போர் செய்வான்
சதிவு செய்யக்கூடாது
தலையில் குட்டி தந்தாலும்
சந்தோசமாய் ஏற்றுக் கொள்வேன்
இதுவேலை அடியேனுக்கு
இயலாது பரம்பொருளே
மரியாதை பாராமல்
மாட்டேன் என்று சொன்னவுடன்
அரனாரும் கோபமுற்று
ஆனைமுகவா போய்வா என்றார்
கணபதியும் போன பின்பு
கன்னி உமைபார்வதியாள்

(வசனம்)

இந்தவிதமாக கணபதி, "என்னால் போருக்குப் போக முடியாது.என்னுடைய பேழை வயிற்றை வைத்துக் கொண்டு போர்செய்ய இயலாது. சந்தியில் இருப்பதை விட்டு விட்டு சண்டனுடன் போர்பொருத முடியாது" என்ற வார்த்தையைக் கேட்டதும் சிவபெருமான் கணபதியை அனுப்பிவிட்டுப் பார்வதியைப் பார்த்து ஆலோசனை கேட்க, பார்வதியாள் பரமனைப் பார்த்து,

(பாட்டு)

அரனாரே இது உமக்கு
ஆன நல்ல பேதமையோ
வடிவேலன் தனை யழைத்து
வாய்மொழிகள் கேளுமையா
இவனைப்போலே அவனும் சொல்வான்
இயலாது பார்வதியே இயலாது
என்று சொன்னீர்
ஏழை பங்கா பரமசிவா
சூரனுடன் போர்வொருத
தூடியறிய மாட்டீரோ
ஆனாலும் வேலவனை
அழைத்து மொழி கேளுமென்றாள்
வடிவேலர் தனை யழைத்து
வாய்மொழிகள் கேட்கலுற்றார்
ஈராறு கரமுடைய
ஏற்ற வடிவேல் முருகா
கார் வண்ணரின் மருமகனே
கந்தா செந்தூர் வடிவேலா
போக ஒரு எளிதான
புகழ் வேலை சொல்லுகிறேன்
காணாத சரவணையில்
கண்டெடுத்த மரகதமே
வீண்வேலை சொன்னதுண்டால்
வேலவா நீ தட்டாதே
தெய்வார்கள் தான் சூடி
சிறந்த நன்மைக் காண்பதற்குப்
பொன்னரிய மாலையது
போய்க் கடைந்தார் கடலதிலே
கடைந்த அந்தக் கடலதிலே
கண்டாரே மாலை தன்னை
மாலை தன்னை மிக எடுத்து
வழியில் அவர் கொடுவரவே
உன்னையும் நான் அழைத்தேன்
உண்மையுள்ள வடிவேலா.

(வசனம்)

பார்வதியின் வார்த்தைக்கேட்டு, சிவபெருமான், கந்தனாகிய முருகனை அழைத்து, "சண்டமுண்டனிடம்

இருக்கும் பொன்னரிய மாலையைப் பறித்து வந்து உன்னு டைய வீரத்தை நிரூபிக்க வேணு''மென்று சொன்னார். அப்போது முருகன் சொல்லுகின்றான். . .

(பாட்டு)

ஆனாலும் நீர் சொன்னதற்கு
அல்லவென்று சொல்வேனோ
இயலாது என்று சொன்னால்
எல்லோரும் தான் சிரிப்பார்
மாட்டேனென்று சொன்னாக்கால்
மனக்குறைவு தான் உமக்கு
காட்டகத்தில் வாழு மந்த
கள்ளனவன் சண்டமுண்டன்
முண்டனவன் பொல்லாத
முகடனவன் என்று சொல்வார்
சண்டித னவனோடே
கை கலர மாட்டேனே
தூரவழி பறந்திடுவான்
தொலையில் நிற்பான் காணாமல்
காதவழி பறந்திடுவான்
காணாது கண்ணதிலே
ஓடியவன் பறந்திடுவான்
ஒருவருமே காணாமல்
அவனுடனே போர் சொய்ய
அய்யா நான் போகிறது
பலநாளும் சூரனோடு
பாடுபட்ட தறியீரோ
இவனோடு போர்செய்ய
இப்போது கூடாது
நம் மாமனார் யிருப்பார்
நல்ல புகழ் மாயவனார்
சொன்னாலும் அவர் போவார்
சொல் பெரிய பரமசிவா
பெண்மேலே ஆசை கொண்டாய்
போவாய் நீ வேலவனே
என் முன்நின்று சொல்லாதே
இயலாவிட்டால் போவென்றாரே.

(வசனம்)

வடிவேலரை சிவபொருமான் சண்டமுண்டனிடம் போர் பொருத போகச் சொல்ல, அவரோ, "என்னால் முடியாது; என்னுடைய மாமன் உங்கள் மைத்துனரைப் போகச் சொல்லுங்கள்" என்றார். அப்போது,

(விருத்தம்)

போவெனவே அவரும் கூற பொருந்தி வேலவரும் போக
ஆம் எனச் சொல்வாரில்லை அழைத்திடும் பேர்களெல்லாம்
வேளைதான் ஆச்சு என்னவினை செய்த முண்டன் தன்னை
ஆரைத்தான் விடுவோமென்று அறிந்து சொல்லும் உமையே என்றாரே.

(பாட்டு)

மாட்டேனென்று சொல்லி வேலவர் போகவே
மகாதேவர் ஆனவரும்
மாதுமையாளோடு கோபமாகவே
மகாதேவர் ஏது சொல்வார்
மாறி ஆடியே முன்பில் உதித்த
வாணுதலாள் பிரம்மசக்தி
மாதுமை அல்லாது வேறொருவரால்
மாலையைப் பறிக்கலாகாது
ஆனாலும் அவளைப் பிறவி செய்ய
அரனே அருளுமையா
அழகுடனே அந்த மாலையைப் பறித்து
அன்புடன் கொடு வரவே
அருளுமையா என்று பார்வதி சொல்ல
அரனார் அது கேட்டு
அழைத்தாரே கிங்கிலியர் தங்களை
அனல் குழி வெட்டிடவே
ஆயிரம் பேர் கிங்கிலியர் வந்து
அரனாரைத் தொழுதிடவே
அரனாரே எங்களைத்தான்
அழைத்த பணிவிடை அருளும் சிவனாரே
உங்களைத்தான் அழைத்த பணிவிடை
உரைக்கவேதான் கேளும்
ஒரு நாழிகைக்குள்ளே வேள்விக்குழியது
உடனே வெட்ட வேணும்.

(வசனம்)

மாலை கொண்டுவர வேலவரும் முடியாது என்று சொல்ல உமையவள் சொல்படி பிரம்மசக்தி தன்னைப் பிறவி செய்ய என்று கிங்கிலியரை அழைத்துச் சொல்கின்றார். "நீங்கள் ஒரு நாழிகைக்குள் வேள்விக் குழி வெட்டவேணும்" என்று செல்லவும். அப்போது,

(பாட்டு)

வெட்ட வேணுமென்று அரனாரும்
விரைந்து செப்பிடவே
விரையவே தெய்வார்கள் ஒருப்போல சென்று
விரைந்து கூடியவர்
கூடியே தெய்வார்கள் கூந்தாலி மண்வெட்டி
கொண்டவர் சேகரமாய்
கூண்ட கைலாசம் ஒருபுறமாகவே
ஆண்டவனார் அருளால்
ஐம்பத்தோரடி நீளமதாகவே
அளந்து தலங் குறித்து
அறுபத்தி மூன்றடி சதுரமாகவே
அளந்து சதுரமிட்டு
ஆதிபரனை நினைத்து தெய்வார்கள்
அனல்குழி வெட்டுவாராம்
வெட்டவே வேள்விக் குழியதுதானும்
விரைந்து தெய்வார்கள்
சதுரத்துக்கு சதுரமாகவே
தானவர் வெட்டிடவே
சடைத்தந்த தெய்வார்கள் வெட்டிட
வேள்வி தானங்கள் கண்டாரே
ஓர் யோசனை தூரமாகவே தெய்வார்
உகந்த நல்ல வேள்வியிலே
உடனே இருபத்தொரு படிகள் வைத்து
உடனவர் தானுங் கண்டார்
ஏறப் படியாம் இறங்கப் படியாம்
ஏழு நல்ல மூலைகளாம்
அரைத்த சந்தனம் சாந்து ஜவ்வாது
அரைத்தவர் பூசுவாராம்
வேள்விக் குழியது வெட்டி முடித்தோம்
விமல யரனாரே
விறகுகள் கொண்டு வருவீர் நீங்கள்

மிக்கவர் தெய்வாரே
சந்தன மாமலை தன்னிலே
சென்று தறித்த விறகதுதான்
சடுதியிலே கொடு வருவீரென்று
அரன் உரை செய்தனராம்
அந்த மொழியை அரனார் உரைத்திடவே
ஆனதோர் தெய்வார்கள்
சந்தன மரமோடு கிங்கிலியர்
மரம் தறித்து வெட்டிடவே
தடவரைக் கைலை மலையது தனிலே
சங்கரனார் திருவருளால்
வெட்டிய விறகதை வண்டியிலேற்றி
விரைவுடன் கொண்டு வந்தாரே.

(வசனம்)

வேள்விக்குழி வெட்ட வேணுமென்று கிங்கிலியர் எல்லோரும் சேர்ந்து, வேள்விக் குழி 51 அடி நீளம் அளந்து 64 அடி சதுரமாக அளந்து வெட்டினார்கள். வேள்விக்குழி வெட்டி முடித்தவுடன், "தகுந்த விறகு வெட்டி வாருங்கள்" என்று சொல்ல...

(விருத்தம்)

வந்தனர் விறகு கொண்டு வளமுடன் தெய்வாவெல்லாம்
கண்டனர் சிவனார்தானும் கன்னியைப் பிறவி செய்ய
விந்தையாய் மூன்று கோட்டை சம்பிராணி அன்று
நன்றியாய் தீபம் காட்டி நலமுடன் வேள்வி செய்தாரே.

(பாட்டு)

வேள்விதானும் விரைவாய் வளர்ந்திட
வெள்ளியங்கிரி வள்ளலைக் கும்பிட்டார்
தாழ்வில்லாதோர் வேள்விக் குழிக்குள்ளே
சங்கையாக துருத்தி போட்டுதினார்
காட்டு யானைத் தோலை உரித்தவர்
கடல் முழக்கம்போலே ஊதினார்
ஆனாலும் தீ எழும்பினால் வேள்வியில்
அக்னி சற்றும் சோபிக்கவில்லையே
தீ எழும்பவில்லை சிவனாரே காண்
சிருஷ்டிக்க வேணும் அக்னியானதை
தெய்வார் சொல்ல சிவனார் கேட் டிளகியே
சீக்கிரத்திலே வேள்விக் குழி தன்னை

கண்ட போதிலே வேள்விக்குழி தன்னை
கண்ணால் கோபித்து ஏறிட்டுப் பார்த்தனர்
ஏற்றமுள்ள சிவன் நெற்றிக் கண்ணிலே
எரியுதாம் தீக்கட்டி அனல் வேள்வியிலே
கண்டுநின்ற தெய்வார்கள் அப்போது
கப்பறை கொண்டு ஏந்தினார் தீயதை
ஏந்திய தீயை வேள்வியில் இட்டிட
எரியுதுகாண் கனலாய்க் குமுறியே
செவ்வரளிப் பூ மஞ்சணை யானதும்
திட்ட வேள்வி தன்னில் கரு செய்தார்
கருவுருவாக மஞ்சணை தன்னில்
கன்னியாடி மாரி முன் பிறந்தவள்
பிறந்தவள் பிரம்ம ராக்கு சக்தியும்
பெண் கொடிமார் வேள்வியில் குரவையுமிட்டனர்
இட்டதோர் நல்ல குரவை ஒலி சப்தம்
ஏழு யோசனை தூரமே கேட்குதாம்
கட்டழகி பிரம்ம ராக்கு சக்தியும்
கைதனிலே திரிசூலம் கப்பறை
கப்பறையும் திரிசூலம் ஆனதும்
கண்மலருடன் நெற்றிப் பிறைகளும்
தண்டைப் பாடகம் பொன்னால் சிலம்புகளும்
சதங்கை கிண்கிணி நாற்புறம் கொஞ்சவே
மங்கைமார்கள் குரவைகள் பாடிட
மாது பிரம்ம ராக்கு சக்தி தோன்றினாளே.

(வசனம்)

சந்தனம், இந்திரிகம், ஐவ்வாது, போன்ற மரங்களைக் கொண்டு வந்து வேள்விக்குழியில் அடுக்கி, சாம்பிராணியும் குந்தரிகமும் போட்டு, காட்டானை துருத்திக் கொண்டு தெய் வார்கள் அனல் ஊதினார்கள். தீ எழும்பவில்லை. கிங்கிலியர் கள் சிவனிடத்திலே சொல்ல. இறைவன் கோபித்துப் பார்க்க; அவரது கண்களில் தீப்பொறி எழும்ப; அதனைக் கப்பறையில் பிடித்து வேள்விக் குழியில் போட்டனர். மேலும் அதில் செவ்வரளிப்பூ, மஞ்சணையும் உரு ஜெபித்துப் போட அந்த மஞ்சணையில் என் தாய் பிரம்மராக்குச் சக்தி தோன்றினாள்.

(பாட்டு)

தோன்றினாள் அழகான மலைகளும் கொஞ்சவே
தோட்டின் மேல் குஞ்சம் தொந்தோம் என்றாடவே

ஆடவே முத்து வர்ண சரப்பணி
ஆடரவம் சடைமீதில் ஆடவே
மேகவர்ண பீதாம்பரப் பட்டுடன்
வெண் குழலில் அடைத்திடும் பட்டுகள்
பட்டு கொய்தகம் இடையில் துவழவே
பாவை மாதர்கள் குரவைகள் பாடவே
இட்ட முட்டாங்கு பட்டு பரிவட்டம்
எல்லை இல்லாத பட்டரைஞாணுடன்
பட்டரைஞாண் பதக்கண் பிரகாசிக்க
பாவை மாதர்கள் குரவை முழக்கிட
தூட்டரை வெல்லும் பிரம்மரா(க்)கு சக்தியும்
தொந்தோம் தொந்தோ மென்றாடத் தொடங்கினாள்
ஆடினான் வேள்விவிட்டு குதித்தம்மை
அரனார் முன்பிலே மாறி யாடினாள்
ஏதுகாணும் பரம சிவனாரே
என்னை நீரும் பிறவி செய்ததென்ன
பூவுலக விலை கொள்ளும் மாலைதான்
பிறந்தது மாலை சமுத்திரம் தனிலே
பிறந்த மாலையை தெய்வார் கொண்டுவர
பல முறுக்காலே பறித்தானே முண்டனும்
முண்டனான கவனமோடி யவன்
மோசம் செய்தவன் மாலையைக் கொடு போனான்
அவனைக் கொன்று மாலையும் பறித்திட
ஆனதினால் உனைப் பிறவி செய்தேனே
நல்ல காரியம் சொன்ன மொழியது
நமக்கு உதவியாய் உமக்கு உபகாரம்
எனக்கு ஏற்றதோர் தம்பியும் வேணும்
என்னுடனே அவனும் முன்னோடிட
கவனமோடியும் ஆணல்லவோ சிவனே
கிளிமொழியாள் நான் அவனோடு எதிர் சென்று
அவனோடு எதிர்த்து அமர் செய்யப் போவது
அரனே உமக்கு சம்மதம் ஆச்சுதோ
எனக்கு உண்மையாய் தம்பியும் வேணுமே
ஏகினால் அவன் தலையை அறுத்திட
நமக்கு நல்லவனாக உதவியாய்
நாயகமே நீர் பிறவி செய்யும் என்றாரே.

(வசனம்)

பலவிதமான ஆபரணங்கள் அணிந்தவளாக பிரம்மசக்தி வந்து பிறந்ததும், "தேவா! என்னைப் பிறவி செய்யக் காரணம்

என்ன?" என்று கேட்டாள். அப்போது சிவன், "எனக்கென்று தேவர்கள் கொண்டு வந்த பொன்னிய மாலையைப் பறித்தான் சண்டமுண்டன் கவனமோடி. ஆகையினால் நீ சென்று அவன் தலையை அறுத்து மாலையைப் பறித்துக் கொண்டு வரவேண்டும். எனவே உன்னைப் பிறவி செய்தோம் என்றார். அப்போது பிரம்ம சக்தி, "ஆண்டவா! அவன் ஒரு ஆண். அவனோடு நான் சென்று எதிர்ப்பது முறை அல்ல. ஆகையால் என்னோடு எனக்குத் துணையாக குணமுடைய தம்பி ஒருவன் வேண்டும். எனவே எனக்கொரு தம்பியைப் பிறவி செய்யுங்கள்" என்றதும். . .

(விருத்தம்)

என்றாள் பிரம்மராக்கு சக்தி ஈசன் அதுகேட்டு அகமகிழ்ந்து
நன்றே பிரம்மசக்தி சொன்னாய் நல்லகாரியம் ஆச்சுதென்று
வெற்றியுடைய தெய்வாரை விரைவாய் சிவன் வரவழைத்து
இன்றே இனி நாம் திருநடனம் இயல்பாய்க் காண வேணுமென்றாரே.

(பாட்டு)

ஆடினாரே திருநடனம் புரிந்தாடினாரே
ஆடினாரே திருநடனம் புரிந்தாடினாரே

ஆடும் பிரம்மன்அறுபத்து நால்கோடி
அம்பததாறாயிரம் சங்கத்தார் சூழவே
ஓசை வேள்விக்குள் ஒளிவுற்ற ஞானிகள்
ஒவ்வுக்கும் அவ்வுக்கும் அடங்காத உட்பொருள்

(ஆடினாரே...)

காவி வேட்டியும் அரையில் புனைந்தவர்
கண்ட கோடாலியை தோளிலே இட்டவர்
சோழியல் மாலையைப் பொக்கணம் போட்டவர்
தொம்தோம் தரிகிட தொம்தோம் திமிதிமியென

(ஆடினாரே...)

உத்திராட்ச மாலைகள் கொத்துகளாடிட
யோக வேட்டி கொண்டு வியர்வை துடைத்திட
பக்தியாய் தெய்வார் குரவை முழக்கிட
கட்டுக்கடங்காத உட்பொருளானவர் **(ஆடினாரே...)**

வியர்வை எழும்பவே காலது தூக்கியே
வேள்விக் குழி சுத்தி ஆதி சிவன் முதல்

கோடி தெய்வார் நின்று கும்பிட்டுப் போற்றிட
குதித்துக் குதித்து திருநடனம் ஆடினாரே (ஆடினாரே...)

தண்டை சிலம்பு புலம்பி நின்றாடிட
தார்குழல் மாதர் குரவை முழக்கிட
கண்ட கோடாலி கிடுகிடென்றாடிட
கந்தையும் பொக்கணமும் தொந்தோ மென்றாடிட
(ஆடினாரே...)

ஞாயிறு திங்கள் செவ்வாய் புதனும்
நல்லதோர் வியாழன் வெள்ளி சனியும்
வற்றாத சித்திரை வைகாசி ஆனியும்
மார்கழியும் தையும் மாசி பங்குனியும் (ஆடினாரே...)

பூலோகம் மெய்க்க பரமசிவன் முதல்
பூண்டதோர் மாலைகள் எங்கும் புரண்டாடிட
தாண்டவமாடும் சிவன் முதலானவர்
சங்கடம் தீர்த்து அடியாரை ரட்சிக்கவே (ஆடினாரே...)

பொன்னார் மேனியன் புலித்தோலைத் தரித்து
பொற்கொடி பார்வதி அம்மையும் காணவே
மேலோக வெட்டா வெளியிலே உச்சாணி
வெள்ளியங்கிரி வள்ளல் பராபரன் (ஆடினாரே...)

கண்ணில்லா பேர்க்கு கண்ணைக் கொடுத்திடும்
காசினியோர்க்கு கண்கண்ட தெய்வம்
மண்ணுக்கும் விண்ணுக்கும் ஒன்றாக நின்றவர்
மாயன் தனக்கு நேர் மைத்துனர் ஆனவர் (ஆடினாரே...)

கண்ட கோடாலிகள் தொந்தோ மென்றாடிட
கால்முறை வைத்து வேள்வியைச் சுற்றியவர்
மண்டலம் புகழும் மகாதேவரானவர்
வளமுள்ள வேள்வியை வலமிடம் சுற்றியே (ஆடினாரே...)

கோடி நூறாயிரம் தெய்வார்கள் சூழவே
கும்பிட்டு நின்றவர் தானும் வணங்கவே
மாதுமை பார்வதி அம்மன் மனம் மகிழவே
மடவார்கள் கூடிக் குரவை ஒலியாட (ஆடினாரே...)

சந்தோச மாகவே திருநடனமாடிட
தையல் மடவார் பொன் விசிறியால் வீச

சிந்திய திருவியர்வை கீழே விழாமலே
தெய்வார்கள் கைக் கொண்டு ஏந்தி நின்றாரே.

(வசனம்)

இந்த விதமாக எம் பெருமான் திரு நடனமாட இறைவனின் மேனியில் வடிந்த வியர்வையை தேவர்கள் கையினால் தாங்கியதும்,

(பாட்டு)

சிவனாரும் திருநடன மாடினதாலே
திருநெற்றி கண்ணதிலே தீ அனல் எழும்ப
மூன்று கண் நயனமது தீயாய் எரிய
முத்துப் போல் உருளுதே வலது நயனத்தில்
நவமணிகள் போல உருள வலது நயனத்தில்
நலமான கண்ணதிலே தீயாய் எரிய
வலது கண் நயனத்தில் நாகமணிபோல் உருள
வடிவழகும் கரு உருவதாக வளர
சிவந்த செந்தாமரைப்பூ நிறமாக
சிவனுடைய திருநயனமதில் பிறந்தார்
பிறந்தாரே அதிசூரராக உலகில்
பெண் கொடிமார் குரவை ஒலி பாட
செங்கதிரோன் ஒளியதுபோல் திரு அழகு தோண
சிவனுட வலது நயனத்தில் பிறந்தார்
பிறந்த அதி சூரனைக் கண்ட போதேதான்
பெயரது கொடுக்க பரம சிவனாரும்
பரம சிவன் திருநடனம் ஆடினதாலே
பலவேசக்காரன் என்று திருப்பெயர் கொடுத்தார்
மகாதேவர் திருநடனம் ஆடினதாலே
மாயமுத்தென்று பெயரது கொடுத்தார்
சிவனார் திருநடனம் ஆடினதாலே
தெருவில் நின்றாடிடும் முத்தென்று பெயர் கொடுத்தார்
பெயரது கொடுக்கவே குரவை ஒலி பாட
பேரழகு அதிசூரன் புகழ் மனது கூற
இவ்வுலகம் பொன்னுலகம் கண்டதும் இல்லை
இயலழன் பலவேசக்காரனைப் போலே
வடிவழகும் அவருடைய திருமேனி கண்டால்
மகா தேவருடைய திருமனது மகிழும்
மாய முத்தையாவும் மனமகிழ்ந்து
மாது பிரம்மசக்தி அம்மை தானும்

ஆதி சிவன் பொன்னரிய மாலை கொடுவரவே
இருவரையும் வழியனுப்பு மென்றாரே.

(வசனம்)

சிவனார் திரு நடனம் ஆடுகின்ற நேரத்தில், சிவனுடைய வலது கண்ணிலிருந்து தீயாய் எரிந்தது; அதிலிருந்து ஒரு பெரிய வீரன் பிறந்தான். பிறந்த சொல் பெரிய வீரனுக்கு பலவேசக் காரனென்றும் பலவேச முத்து என்றும் மாய முத்தையன் என்றும் சிவனார் பெயர் கொடுத்தார். பெயர் கொடுத்தும், மேலும்...

(பாட்டு)

அனுப்பும் எனவே பிரம்ம சக்தி அம்மை தானும்
அரனாரையும் தொழுது அடியணியவேதான்
கிணமதிலே நீங்கள் இருபேரும்தான்
திருவழகு பொன்னரிய மாலை கொடு வருவீர்
மாலையைப் பறித்துவர நீருமோ உரைத்தீர்
மண்மீதில் கால் நடையாய் நடந்துபோவேனோ
ஆகாய மானதில் தேர் ஏறிப்போக
அரனாரே தேர்வரிசை அருளும் என்றாரே
பிரம்ம சக்தி அம்மன் உரை கேட்டு
பரம சிவனாரும் ஒருதேர் அருளுவாராம்
தெய்வலோகம் வாழ்கிற மாந்தையரைக் கூட்டி
சீக்கிரத்தில் தேர் கொடுவாரும் என்றார்
மாந்தையர்கள் அப்போது தேரதுதான் சமைத்து
மகாதேவர் திருமுன்பில் கொண்டு வந்தாரே.

(வசனம்)

சண்ட முண்டனிடம் இருக்கின்ற பொன்னரிய மாலையை வாங்கி வர, பிரம்ம சக்தி அம்மையையும் பலவேசக் காரனையும் அனுப்பினார் சிவபெருமான். அப்போது அம்மை யானவள் ஏறிப்போக ரதம் கேட்டாள். தேவர்கள் உடனே ரதமானது சமைத்தார்கள். அந்த ரதத்தின் புதுமை எப்படி என்றால். . .

(பாட்டு)

அச்சுகளும் உருளைகளும் பொன்னாலேதான்
அழகான மேல் கூட்டு பொன்னினால்தான்

தங்கமொரு பொற்பலகை பொன்னினால்தான்
மேல் குஞ்சமது தங்கத்தினாலே தான்
சீரான கண்ணாடிகள் அதன் மேல் பதிக்க
சுற்றி எங்கும் மணிப்பரல் ஜொலிக்க
வங்கார சிங்கார மாம்பட்டுச் சேலை
வகைப்படியாய் செய்தாரே தேரின்மேலே
மாந்தளிர் பட்டுடன் பூப்பட்டு வகைகளும்
வகை வகையாய்த் தேரின் மேல் கட்டி
குலை வாழைத் தூண்கள் தானும் நிறுத்தி
குடமாலை தூக்கினார் கொடுமாலையாக
பிச்சிப்பூ மாலைகளும் கொழுந்துவகை பலதும்
பிரம்மாண்டமாகவே தேரிலே தூக்கினார்
அச்சுகள் தோறும் அலங்காரம் செய்து
அம்மனுட திருமுன்பில் கொண்டு வந்து விட்டார்
விட்டதேரை கண்ணில் கண்டு தேவி பிரம்மசக்தி
விரைவாகத் தம்பிக்குப் பரியருளும் என்றார்
பரிவாகனம் கொடும் என்று அம்மை யுரைக்க
பரமசிவனாரும் திருமனது கூர்ந்து
அழகான மாய முத்தையா தனக்கு
அரனாரும் குதிரை வாகனம் அருளினாரே.

(வசனம்)

தேர் வேணும் என்று கேட்ட பிரம்ம சக்தி அம்மைக்கு, சிவபெருமான் அழகான ரதம் உண்டு பண்ணி, அதில் சகல வசதிகளும் பொன்னால் செய்து அம்பிகைக்குக் கொடுக்க, அப்போது பிரம்மசக்தியானவள் தன்னுடைய தம்பிக்கு குதிரை வாகனம் கொடுக்க வேண்டுமென்று சிவனிடத்தில் உரைத்தாள். சிவபெருமான் மாயமுத்தையாவுக்குக் குதிரை வாகனம் எப்படிக் கொடுக்கிறார் என்றால். . .

(பாட்டு)

கறுத்த சுட்டிக் குதிரை கண்ணாடி வெள்ளை
கன்னத்திலே மையிட்ட கரு மறக் குதிரை
நாலுகாலும் பொன் சிலம்பன் குதிரை
நாயகனார் திரு முன்பில் கொண்டு வந்தாரே
தரிகிடதோம் என தாளம் வைத்தாடும்
சங்கை பெற ஆகாயமானதில் எழும்பும்
விண்ணில் பறக்கும் மண்ணில் குதிக்கும்
வீரத் தண்டை கொஞ்சவே ஓடி உலாவும்

கண்ணுக்குக் காணாமலே விண்ணில் பறக்கும்
கறுத்த சுட்டிக் குதிரை கால் நெடிய வீரன்
சிங்க முகக் கல்லிணை மேல் நிறுத்தி இறுக்கி
சித்திரப் பவளத்தினால் வாரும் கொடுத்து
பக்க வாரும் பவள வாரும் பொன்னாலேதான்
பச்சை மரகதம் வைத்த கல்லிணை இலங்க
கல்மணி இடைவாரும் பொன்னினால்தான்
கனகரெத்தினம் முத்துவார் தன்னிலே
பின் தட்டி வார்கள் நெற்றியில் குஞ்சம்
புகழான வாருக்கு சருகு பித்தளை
கண்களிரண்டும் பவளம் போல் இலங்க
கால்கள் நாலிலும் வீரத் தண்டை புலம்ப
அங்கவடி அதன்மேலே கொண்டுபோய் வைத்து
அழகான குதிரையைக் கொண்டு வந்தாரே.

(விருத்தம்)

வந்த குதிரையைப் பார்த்து மாயமுத்தையா மனமகிழ்ந்து
திந்தா திந்தாவென்று குதிரை திருநடனம் ஆடி நிற்க
கண்டு பலவேச முத்து மனது களி கூர
இந்தக் குதிரை மீது தன்னில் ஏறிநடப்பாய் மாயமுத்தே என்றார்.

(வசனம்)

திரிபுரம் எரித்த செஞ்சடைக் கடவுள் பலவேசக் காரனுக்குப் பெயர் கொடுத்து, தாயாகிய பிரம்ம சக்தி சொல் படி அழகான குதிரையும் கொடுத்தார். உடனேபலவேச முத்தையா என்ன சொல்கிறாரென்றால். . .

(பாட்டு)

தெய்வார்கள் காண பலவேசமுத்து
சீறிக் குதிரையைக் கண்ணாலே பார்த்தார்
பார்த்த பொழுதிலே தெய்வம்புரவிதான்
பதித்துக் கால் வைத்துப் பம்பர மாடுமாம்
ஆடிடுமாம் புரவி ஆனது தானுமே
ஆன நட்டுவ கூத்துப் போல் ஆடுமாம்
சேர நின்று குரவை முழக்கிட
தித்தி தித்தி என்றாடி எழும்புமாம்
ஓடுமாம் கைலாசமது தன்னிலே
வடிவழகன் பலவேசக் காரனும்
தீரனுக்குப் பணிவகை ஆனதும்

தெய்வார் தன்னை அணியுமென்றார் சிவனாரும்
முத்தினால் பதித்த தலைப் பாகையும்
மோகன மாலை முன்கைச் சரப்பளி
காது இரண்டுக்கும் தங்கக் கடுக்கனும்
கைகள் இரண்டுக்கும் கொத்து முன் கைகளும்
கூண்டவில்ல சரப்பளி மாலையும்
இடையில் பட்டரைஞாணும் பூட்டியே
ஏற்ற பத்து விரலுக்கும் மோதிரம்
சட்டைக் கீழே நிலையங்கி யொன்னாலே
கொண்டை மீதிலே பூ உருமால் பூட்டி
கொழுந்து பிச்சி மணக்கவே சூட்டினார்
முத்து ரெத்தின மாலைகள் தாவடம்
முதுகெல்லாம் செவ்வரளி பூப்போல் நிறம்
பச்சை மேனியும் இடையில் இலங்கவே
பலவேச மாய முத்தையாவும்
கச்சை கட்டி ஜரிகை அணிந்துடன்
கால் சிலம்பு கலீர்கலீர் என்னவே
ஜாதி லிங்க உடைவாளும் ஆயுதமும்
தங்கத்திலே சதிராடும் சேர்த்தனர்
ஐந்து மணி வல்லயமும் பொன்னாலே
ஆன அங்கவடியது சேர்த்தனர்
எறி ஈட்டி தீட்டி உடைவாளும்
ஏறிக் கண்டு சமுதாடு தூக்கினார்
உடைவாளும் பரிசையமாகவே
உற்றதோர் குறட்டு கம்பு ஈட்டியும்
கட்டாரியும் சக்கரமானதுவும்
காவலவர் எடுத்து அணிவாராம்
பதினெட்டு ஆயுதமும் அணிந்துடன்
பலவேசம் சிவனை வணங்கிட
கலியுக மென்று தெய்வார் கண்டு தொழ
காட்சி செய்தார் பலவேச முத்துவுக்கு
மயில்போலே பிரம்ம ராக்கு சக்தி
மகாதேவரைப் போற்றி வணங்கினாள்
சலியாமலே மாய முத்தையாவும்
சங்கரனாரை வந்து வணங்கினார்
சலியாமல் நாங்கள் இருபேரும்
சண்டமுண்டன் தலையை அறுத்திட
அரனாரும் வரங்கள் கொடுத்த பின்பு
ஆயிளை உமைபார்வதி ஏது சொல்வாள்
இருபேரும் போறீர் கிணமதிலே

எங்கே ஆனாலும் தேடிப்பிடித்து உடன்
தலைக் கொண்டு வர வேணும் நீங்கள்தான்
தாடாள்வான் பலவேசக்காரனே
இருபேரும் தொழுது வணங்கியே
ஏறினாள் அம்மை தேர்மீது தன்னிலே
பகவான் ஒளிபோலே பிரம்மசக்தி
பார தேர் மீது ஏறிப் புறப்பட்டாள்
வீரன் எங்கள் பலவேச முத்தையா
விரைவாகப் பரிமீதில் ஏறுவார்
தொழுது கொண்டு சிவனை வணங்கியே
சூரன் பலவேச முத்தையா புறப்பட்டாரே.

(வசனம்)

இவ்விதமாக அம்மை பிரம்ம சக்திக்குத் தேரும், பலவேச முத்தையாவுக்குக் குதிரையும் கொடுத்து சிவபெருமான், "நீங்கள் இருபேரும் சண்ட முண்டனைக் கொன்று, அவன் தலையை அறுத்து, மாலையைப் பறித்து வர வேண்டும்" என்றார். அப்போது இறைவனை வணங்கி பலவேச முத்தையா...

(விருத்தம்)

தேரின் மேலே அம்மை ஏறி சிவனையும் தொழுது கொண்டு
கூறிட சிவனார் தானும் குதிரைமேல் மாய முத்தையா
ஆகவே தெய்வாரெல்லாம் அம்மனைத் தொழுது நிற்க
ஓடியே மாலைகொண்டு வாரும் என்றனுப்பினாரே.

(பாட்டு)

வழியனுப்பிடக் குதிரை வாகனம்
மாயமுத்தவர் ஏறியே
வளமான தேரின் மேலே
மாது பிரம்ம சக்தி அம்மனும்
இவர்கள் தங்களைச் சூழ்ந்து வருகிற
ஏற்றதோர் தெய்வார்களும்
இணங்கி பொன் குதிரையில் மாய முத்தவரும்
இன்பமாய் அவர் ஏறியே
ஏற்ற கைலாசம் கடந்தவர்
இருபேரும் எழுந்தருளியே
ஈஸ்பரர் தஞ்சமே கைலையில்
இன்பமாய் வலம் வந்தனர்

வடக்கு முகமாய் தேவர்கள் சூழ்ந்துவர
மாயமுத்தவர் குதிரையில்
மகாதேவா உமது தஞ்சமெனவே
வட கைலாசபுரம் விட்டேன்
உடைவாள் பரிசையுடன் வல்லயங்களும்
உட னரிய பரிசைதான்
உற்ற தெய்வார்கள் சூழ்ந்துவர
உடனே கடுநடையாகவே
உடையவர் கைலாசம் விட்டவர்
உகந்த பலவேச முத்தையாவும்
உற்ற குதிரையது வட்ட மிட்டாட
உடனே குரவை ஒலியாட
கைலையில் சிவனார் தமக்கெனவே
கடைந்த பொன்னரிய மாலையை
கள்ள சண்ட முண்டனவன்
கண்டுதான் கொடுபோனதால்
காட்டிலே மலைவாரமானது
கண்டு தேடியே நாம் இனி
கருணை வைத்து மகாதேவர் மன மகிழ
காடு நாடு வனமோடேதான்
எங்குத் தேடலாம் எங்குக் காணலாம்
என்றே மாய முத்தையாவும்
ஈஸ்பரன் துணை உண்டு என்னவே
இசைந்தவர் இருபேருமாய்
இருள் உறைந்திடும் காடுதன்னிலே
இவர்கள் வரும் வேளையில்
அங்கே நிற்கிற பேய்கள் ஓடிவந்து
அவர்கள் அடிதொழவேதான்
அதிசயமாக நீங்கள் இருபேரும்
அழகு மாமலை நோக்கியே
வந்த வகை ஏது காரணமேது
வணங்கி ஏது கேட்குமாம்
வலமுகடனவன் வாழ்மலை இதோ
என்று மாயமுத்தவர் கேட்கவே
நாங்கள் அறியோமோ தம்புரானே
நாடி அது வணங்குமாம்
பச்சை நீலமது விளையும் ஆறுகள்
பவளம் விளையும் ஆறு அடவியும்
பண்டு முந்நாளில் கண்டறியாத
பார மணலாறு தன்னில் வந்தாரே.

(வசனம்)

என் தாயாகிய பிரம்ம சக்தி தாயார் தேரின் மீதும், பலவேச முத்தையா குதிரை மீதும் ஏறி, பல பல மலைகள் ஆறுகள் கடந்து, மணலாறு என்கிற ஆற்றில் வந்தார்கள்.

(விருத்தம்)

வந்தார் மண லாற்றங்கரையில் மாது பிரம்ம சக்தியுடன்
கொந்தார் குழலார் தோழியர்கள் கூண்டிருந்து குரவையிட
இந்த ஆற்றங்கரை தன்னிலே இருநீ மலையில நான் போகிறேன்
என்றே மாய முத்தவரும் இறங்கு தேர் விட்டாளே.

(பாட்டு)

தேர் இறங்கு ஆத்தாளே
சேயிழையே பிரம்ம சக்தி
போறேன் நான் சண்ட முண்டன்
வொருப்பிட மெல்லாம்தான் தேடி
நீ சடைத்துக் கால் கடுக்க
நெடுந் தூரம் வருவானேன்
பாவையரே மணலாற்றில்
பார்த்திரு நீ அவன் வரவைத்தான்
ஆகாசம் தன்னில் வருவான்
அப்போது நீ எழுந்திரு
காணாத மலைகளெல்லாம்
கண்ணாலே நான் தேடி
அவன் வாணால்தனை வதைத்து
வருவேன் நான் வடிவழகி
போறேன் நான் என்று சொல்லி
புகழ் மாய முத்துரைக்க
அதனாலே பிரம்ம சக்தி
அனுப்புவாளாம் மாய முத்தை.

(வசனம்)

"என்னுடைய தமக்கையே! நீ இங்கே தேரைவிட்டு இறங்கி இருப்பாயாக. நான் சென்று, அந்த இரக்கமில்லாத, தட்டி ஏசும், முட்டாள்தனம் படைத்தவனைக் கண்டு, அவன் தலையை அறுத்து வருகிறேன். ஒரு வேளை அவன் இந்த மார்க்கமாக வானில் பறந்து வந்தாலும் வருவான். நீ பார்த்துக்

கொள்" என்று மாயமுத்து சொல்ல அப்போது என் தாயாரா கிய பிரம்ம சக்தி மாய முத்தையாவுக்கு விடை கொடுத்ததும்,

(பாட்டு)

வழியனுப்பி விடை வாங்கி
மன்னன் பலவேசமுத்து
அழகு தெருவில் ஆடும் முத்து
அவர் குதிரை திடுதிடென
மடமடென நடக்குதல்லோ
வடிவழகன் குதிரையது
திடுதிடென நடக்குதல்லோ
தீரனுட குதிரையது
குதிரையின்மேல் ஏறிக் கொண்டு
கூண்ட பலவேசமுத்து
அதிரவே தன் உறை வாளும்
ஐந்து மணி வல்லயமும்
நவ மணிகள் கிடுகிடென
நாடி அது அதிர்ந்திடவே
வடமலைமேல் கேட்குதல்லோ
மணிகளுட ஓசையது
கடுவாய் புலி கரடிகள்
கண்டு பயந்து ஒடிடுமாம்
பலவேச முத்து வரும்
பவனி சொல்லக் கூடாது
திடு திடென வருகுதல்லோ
தீரனுட குதிரையது
வருகுதல்லோ மலைமேலே
மாயமுத்து குதிரையது
கடுநடையாய் நடக்குதல்லோ
காவலவன் கருங்குதிரை
அடிவார மலையுமிட்டு
அதன் நடுவே காவுமிட்டு
மழை தினமும் பொழியும் மலை
மஞ்சள் இஞ்சி விளையும் மலை
மாமுனிவர் கூண்டிருக்கும்
வளர் மலையும் தான் கடந்து
தேவாதி தேவர் வந்து

தினம் காட்சி கொடுக்கும் மலை
அந்த மலை வாரமெல்லாம்
அயராமல் தேடுவாராம்
ஒரு இடமும் காணாமல்
உற்ற புகழ் மாயமுத்து.

(வசனம்)

இந்த விதமாக கவனமோடியைப் பல இடங்களிலும் தேடினார். ஒரு இடமும் காணாத பலவேசமுத்தையா மலையின் மீது ஏறி உள் மலைக்குள் பிரவேசித்தார்.

(பாட்டு)

சிவனாரை மனதில் வைத்து
தேடிவரும் வேளையிலே
தலைகீழாய் ஒரு முனிவன்
தங்கி யிருக்கும் மலையில் வந்தார்
மாமுனியே இங்கு வந்தேன்
வலுமுகடனையும் கண்டீரோ
என்று கேட்க மாயமுத்து
ஏது சொல்வார் மாமுனியும்
முண்டனவன் கவனமோடி
முகடனையும் காணவில்லை
நழுகுமலை கழுகுமலை
நாங்குமலை கோங்குமலை
அந்த மலை வாரமெல்லாம்
அயராமல் தேடுவாராம்
ஒரு இடமும் காணாமல்
உள் மலையில் ஏறுவாராம்
சடை முனிவன் வாழும் மலை
தவசி முனிவன் இருக்கும் மலை
அந்த மலை சிகரத்திலே
ஆண் வீரனுட குதிரையது
சிந்தை தன்னில் மன மகிழ்ந்து
தேடிவரும் வேளையிலே
முந்தை ஒரு தவசி முனி
முதுகிழவன் வனத்திலிருந்தான்
எந்தனுட தம்புரானே
இங்கு வரக் காரணமேன்
மாமுனியே உந்தனுட

வாய்மொழிகள் கேட்க வந்தேன்
வம்பன் ஒரு சண்டமுண்டன்
வலுமுகடன் கவனமோடி
நம்பி அவன் வாழும் மலை
நான் அறியச் சொல்லுமென்றார்
சொல்லிடுவேன் இப்போது
சொகுசான உன் பெயர் ஏது
நல்ல வண்ணம் முனி உரைக்க
மாயமுத்து ஏதுரைப்பார்
வடிவழகன் என் பெயர்தான்
மாயமுத்து என உரைத்தார்
தவமுனிவன் அப்போது
சாற்றலுற்றான் மலைவளமை
இதுக்கு அப்பால் ஏழுமலை
ஏறி அங்கு போகும்போது
சறுக்காத பலவேச முத்து
சந்திரகிரி மலை தோன்றும்
சந்திரகிரி மலை தனிலே
தானிருப்பார் அறுபது பேர்
வலுமுகடன் வாழுகிற
மலைகாட்டி திருவார்கள்
தாடாள்வான் மாயமுத்தே
சண்டாளன் தலையறுப்பாய் என்றாரே.

(வசனம்)

அந்த வனத்தில் மாயமுத்து வரும்போது ஒரு வயதான முனிவன் தவமிருப்பதைப் பார்த்தார். அப்போது, "தவ சீலரே! சண்ட முண்டன் வாழும் இடம் ஏது? அது எங்கே இருக்கிறது?" என்று கேட்டார்.

மாயமுத்துவிடம் "ஐயா! இந்த மலைக்கு அப்பால் 7 மலைகள் இருக்கின்றன. அதற்கு அப்பால் 60 பேர் கவனமோடிகள் இருப்பார்கள். அந்த மலைதான் அந்தப் பாவி வாழும் மலை. அய்யா நீங்கள் சென்று அவன் தலையை அறுத்து வாருங்கள்" என்று சொன்னதும்,

(பாட்டு)

என்று முனி சொல்லி சாபமது கூற
இயலழகன் பலவேசமுத்து மனது மகிழ
சந்தோசமாகவே முனிவர் உரைகேட்டு

தட்டினார் குதிரையை விரட்டினார் அப்போது
விட்டார் குதிரையை வெகு கோபமாக
வீரன் பலவேச முத்தையா தானும்
தட்டினார் குதிரையை மலைமேலே
சந்திரகிரி மலைதன்னையும் நோக்கி
மட்டில்லா வாவி சுனை யாறு கடந்து
வருகுது குதிரை திடுதிடென
சோலையில் வாழுகிற பட்சிப் பறவைகள்
தொடுபிடியாகவே மடலெடுத்து ஓட
காட்டானை வீறிட்டு அலறியே ஓட
கடுவாய் புலிகள் கதறியே சாட
மானோடு வரையாடு புல்வாய்களும்
மடலெடுத்து ஓடுது தீரனைக் கண்டு
மலையிலே உயரம் சந்திரகிரி மலை
மடமடென குதிரையை விரட்டியே
சந்திரகிரி மலைதன்னில் வரவே
தானே இருந்த அறுபது பேரும்
அறுபது பேர்கள் கவனமோடியர்கள்
அவரவர் தங்களில் கிடுகிடென
ஏகமாய் அறுபது பேரும் எழுந்து
எரிகிற சுடர் போல் வருகிறதாரு
கதிரவன் ஒளியதுபோலே அழகு
கண்ணும் மருளுதே இவரையும் கண்டு
பரமசிவனுட திருமகனாரோ
பார்தன்னில் இப்படிக் கண்டதுமில்லை
மன்மதனோ இவர் ஜீவகன் தானோ
மழைதான் இருட்டினால் விளக்கது வேண்டாம்
கைவிரலானதை மூக்கிலே வைத்து
கண்டு வணங்கினார் பலவேசமுத்தை
அய்யா இந்தமலை தனிலேதான்
அடியேன் எங்களிடம் வந்தது ஏது
வந்தது ஏதென்று அவர்களும் கேட்க
வண்ணமுள்ள பலவேச முத்தவர் சொல்வார்
திருப்பாற் கடல் தன்னில் தெய்வார்கள் கூடி
சிறந்த அமிர்தம் கடைந்தபோது
கடைந்தபோது கடலது தன்னிலே
கடுகவே பொன்னரிய மாலையது தான்
மாலை பிறந்ததைக் கண்டு எடுத்து

வளமுடன் தெய்வார் கொடு வரும்போது
கண்டந்த சண்ட முண்டனவனும்
கருதியே மாலை பறித்தவன் யாரு
ஆரெனவே அவரும் கேட்க
அய்யா உம்முடைய பேர்தான் ஏது
பேரும் பலவேசமுத்தெனவே
பெருகவே மாலை பறித்தவன் யாரு
ஆரடா என்று அழகுள்ள தீரன்
அதி கோபமாகவே கேட்ட பொழுது

(வசனம்)

பலவேச முத்தையாவைக் கண்டபோது சந்திரகிரி மலையில வாழ்ந்த 60 பேர் கவனமோடிகளும், இவர் இறைவனின் அம்சம் என்று வணங்கி நின்றனர்.

உடனே பலவேசமுத்து, "டேய்! கவனமோடிகளே! தெய்வார் கொண்டு வந்த மாலையை இந்த மலையில் வைத்து பறித்துக் கொண்டு போனது யார்?" என்றதும், "அய்யா...

(பாட்டு)

மாலை பறித்தது நாங்களுமில்லை
வழியிலே மாலையைக் கண்டதும் உண்டு
மாபாவி அவன் எங்கள் இனத்தில்
வலுமுகடனவன் உண்டுமே ஐயா
அவனும் இருக்கும் மலையது எங்கே
அடைகிற இடமும் வாசலும் எங்கே
எங்கே என்றவர் கேட்கிறபோது
இயம்புவார் அந்தக் கவனமோடிகள்
அழகுள்ள மலை அதோ தெரியுது
ஆன கவனமோடிகள் சொல்ல
ஈயது இருந்தால் அயர்ந்து போய்விடும்
இந்திராணி மலை ஆனது தன்னிலே
எழுபது பாகம் புடையது உண்டு
ஏற்ற நல்ல மலையது தன்னிலே
புடைக்குள் ஏழு கதவுகள் உண்டு
பெருகவே வாழ்வான் அதிலொருமுண்டன்
அறுக்கவே வேணும் அவனுடைய தலையை
அய்யா போவென்று அவரும் உரைக்க
இருக்கிறோம் நீர் போமெனவே
எல்லோரும் தொழுதனுப்பினாரே.

(வசனம்)

இப்படி கவனமோடிகள் சண்டமுண்டன் வாழும் இடத்தைக் கூறி வழியனுப்பியதும், பலவேசக்காரன் அவர் . . .

(விருத்தம்)

அனுப்பவே மாயமுத்தை அறுபது பேரும் கூடி
சினத்திலே போகவென்று தீரன் பலவேசமுத்து
வனத்திலே தேடிவந்தோம் வலுமுகடனையும் காணோம்
புனத்தில் வாழ் மலையைத் தேடிப் புறப்பட்டார் மாயமுத்து.

(பாட்டு)

தேடியே சண்டமுண்டனவன் தன்னையும் நாடி
தீரன் பலவேசக்கார சுவாமி நடந்தார்
காணக் கிடைக்குமோ கல்புடையானது தன்னை
கையில் உறைவாளும் வல்லயமும் ஆனது கண்டு
இடையில் இருக்கிற பர்வத வாழ்மலையும் விட்டு
இந்திராணி மலை தேடி வருகிறபோது
கூடு கொம்பன் மலை குமடு பர்வதமும் விட்டு
கூண்டங்கிருக்கும் குமடுகளெல்லாம் கடந்து
தேடி வருகிறபோது இந்திராணி மலைதான்
அந்த மலையில் குதிரை திடுதிடென ஏறி
ஓடிக் குதிரை குதித்தோடும் அதிர்ச்சி
உற்ற மிருகம் கலைந்தோடி யங்கே ஒளிக்க
தேடி புடைவாசல் வாற அதிர்ச்சியைக் கண்டு
சினத்து புடைக்குள் இருந்தவன் வெளியில் வந்தான்
மாலை கழுத்தில் கிடக்க வெளியில் வந்து
வந்த பலவேசமுத்து சந்தோசமானார்
ஏனடா இந்தப் புடைவாசல் வந்தது என்ன
இந்தப் புடைவந்து கண்டது ஏதடா என்றார்
ஆரடா என்று பறையாதே முண்டனே நீதான்
அரனார்க்குக் கொடுவந்த மாலையைப் பறித்தது நீயோ
மாலை என் கழுத்தில் கிடக்குது இதோ பாரு
வாளோடு வல்லயம் கொண்டு நீ வெட்டவோ வந்தாய்
இயலும் என்றால் பாரு மாலையைப் பறிக்கவும் உன்னால்
என்னையும் வெல்ல உன் ஈஸ்பரனா லாகாது
போருக்கு நீயும் வந்தால் பூஜையிடுவேனோ நானும்
புறப்பட்டு அவனுட ஆயுதமெல்லாம் எடுத்தானே.

(வசனம்)

பலவேச முத்தையா! குதிரையைக் கடுவேகமாக நடத்தி, இந்திராணி மலையில் கவனமோடி இருக்கும் 70 பாக புடை பக்கத்தில் வந்ததும், "என் இடத்தில் வந்தது யாரது?" என்று அந்தப் பொன்னரிய மாலை கழுத்தில் கிடக்க கோபத்துடன் வந்தான் அந்த சண்ட முண்டன். அப்போது பலவேசக்கார சுவாமி, "டேய் கவனமோடி! இறைவனுக்குக் கொண்டு சென்ற மாலையைப் பறித்த குடிகேடனே! என்னையா யார் என்று கேட்கிறாய்? உன்னுடைய ஜாதகத்தைக் கணித்து; உன்னை வதைக்க வந்திருக்கிறேன்" என்றார்.

அப்போது, கவனமோடியவன், "டேய் கொள்ளிவாய்ப் பிசாசே! நான் பறித்த மாலை இங்கே என் கழுத்தில் கிடப்பதைப் பார். உன்னால் என்ன? அந்த ஈசனால்கூட என்னை ஒன்றும் செய்ய முடியாது" என்று அவனுடைய ஆயுதத்தை எல்லாம் எடுத்துக் கொண்டு வெளியில் வந்தான். அப்போது,

(விருத்தம்)

எடுத்தான் வாள் ஆயுதங்களெல்லாம் இடும்பன் சண்டமுண்டனவன்
தொடுத்த குதிரை மீதே சூரன் பலவேசமுத்தவரும்
அடுத்தான் கவனமோடியவன் ஆயுதம் பரிசைத் தானெடுத்தான்
வகுத்தான் படாமல் இருபேரும் வந்து பெரும்போர் உண்டாக்கினாரே.

(பாட்டு)

உடக்கினார்கள் இருபேருமாக
ஒரு முழப்பரிசை உடைவாள் வல்லயம்
எடுத்தார் சமுதாடு ஆயுதமெல்லாம்
ஏறக்கண்டு பதினெட்டு ஆயுதங்களும்
சினத்து இருபேரும் முறைத்துப் பொருதனர்
சுவடு வைத்தவர் குன்னிக் குன்னியே
வாளைத் துளைக்கிற வகையது போலவே
வந்து உலாவியே வளைந்து சென்றனர்
ஓங்கி வெட்டவே மாய முத்தையா
ஒரு முழப் பரிசைக்குள்ளே குன்னினார்
சீறி வெட்டவே மாயமுத்துமே
சென்றான் ஒதுங்கியே கண்டு தட்டினார்
மீறி வெட்டவே கவனமோடியும்
விலகினார் அந்தப் பரிசையிலேதான்

கால் பகுந்துடன் மேலே குழைந்துடன்
கண்டு குத்தினார் வல்லயத்துடன்
வல்லயம் கண்டு கவனமோடியும்
வலது கால் பின்னி விலகினாள் அவன்
குத்து வல்லயம் விலக்கினா னென்ன
கொண்டு கோபமாய் மாயமுத்துமே
சண்டமுண்டனை விடுவதில்லையே
தானும் இடதுகால் பின்னி வைத்தனர்
குதிரையின்மேல் வரிந்து கொண்டுதான்
கொண்டு வெட்டினார் மண்டை மீதிலே
கவனமோடியும் மின்னலாகவே
கீழும் மேலுமாய்த் தானெழும்பினான்
பரிசையால் உடைவாள் விலகியே
பதுங்கிக் கொண்டானவன்
எழும்பி சாடினான் சண்ட முண்டன்
என்னை வெல்லவும் உன்னாலாகுமோ
முட்டு போரது வாருத வேணுமே
முண்டன் சண்டனை விடுவதில்லையே
சொல்லியே மனம்தான் துணிந்துதான்
கிட்ட வா வென்ன முட்டுப்போர் செய்ய
கீழும் மேலுமாய் தானெழும்பினான்
பரிசைத் தட்டியே குதிரை விட்டனர்
பாரத் தொங்கலாம் கவனமோடியும்
நரிதான் அஞ்சுமோ கோழிக்காகவே
நல்லது தானென்று துள்ளினார்களே
புலிகள்போல் முன்னே எழும்பியே
பிடரிதன்னைக் கொண்டு வெட்டினார்
வெட்டின வெட்டு தட்டி விட்டவன்
விண்ணில் நின்றுதான் கர்ணம் இட்டனன்
எத்தனை போரது செய்தாயானாலும்
என்னை வெல்லவும் உன்னால் ஆகுமோ
சண்ட னென்றும் பாராமல் வீண் நடந்தாயோ
இப்போ பாரென கவனமோடியும்
எழும்பிச் சாடியே ஓடி வெட்டுவான்
வெட்ட வாரது கண்டு விலகியே
வீரனான பலவேச முத்தையாவும்
தட்டினாரந்த முட்டுக் கம்பினால்
முறிந்தது வாள் முனையானது
பட்டுப் போவாய் நீ கவன மோடியே
பாரு பாரெனத்தான் எழும்பினார்
தூட்டனான கவனமோடியும்

தூர நின்றவன் யாது சொல்வான்
இந்தப் போரது சரியாய்ப் பொருதாயே
என்னையும் வெல்லவும் உன்னால் ஆகுமோ
உனக்குக் குதிரைதான் எனக்குக் கால்நடை
என்றிருக்கு உன்னுட மனதிலே
நான் இருக்கிற மலையில் வந்து நீ
நல்லதோர் புடை கண்டு கொண்டாயே
ஓடி விண்ணிலேதான் பறப்பேன் என
ஒருவராகிலும் பிடிப்பாரில்லையே
நான் பறக்கிறேன் நீ பிடிப்பாயோ
நாடியே வனத்திலே ஓடிப் பறப்பானே.

(வசனம்)

இந்த விதமாக இருபேரும் வெகு நேரமாகப் போர் புரிந்து, கடைசியாக கவனமோடி ஆகாயத்தில் ஓடிப் பறந் தான். அதைக் கண்ட பலவேச முத்தையா என்ன சொல்லு கிறார் என்றால். . .

(விருத்தம்)

பறந்தவன் கவனமோடி பலவேச முத்தையாவைப் பார்த்து
கவுந்தன் பறக்கு முன்னே கையினால் குதிரை தட்டி
மகிழ்ந்துதான் குதிரைமேலே மாயமுத்து இருந்துகொண்டு
நிலங்களும் கிடுகிடென நின்றவர் முன் பறந்தாரே.

(பாட்டு)

மல்லாந்து பறக்க கவனமோடி அவன்தானும்
மாய முத்தையா அவனுக்கு முன்னே பறக்க
ஒரு காதம் ஓடிப் பறக்க கவனமோடி அவன்தானும்
ஒன்றரை காதம் பறந்தார்அவனுக்கு முன்னே
இரண்டுகாத வரி ஓடிப் பறந்தான் அவனும்
இரண்டுக்கு மூன்றாகி மூன்று காதம் பறந்தாரே
காத வழிக்கு முன் ஓடிப் பறக்கிறார் என்று
கடைக் கண்ணால் பார்த்து கவனமோடி ஏது சொல்வான்
எதுக்கு ஆகாயம் தன்னில் ஓடி நீதானும்
என்னோடே நீயும் பறந்து வாரா யென்ன
ஆகட்டும் எந்த விதத்தாலும் உன்னை நான் வெட்டி
அறுத்துத் தலை கொண்டு போகாதிருப்பேனோ நானும்
ஓடிப் பறப்பதைப் பார்ப்போம் இனி என்று நானும் சொல்லி
உடனே பறந்து கவனமோடியை மிதித்தார்

தீரன் குதிரையது தரிகிட தோமென ஆட
தெய்வார்கள் கூடிக்குரவை ஒலியது முழங்க
ஓடிக் குதித்து கவனமோடியவன் தானும்
உடைவாளெடுத்தான் அதிகோபமாகத் துணிந்து
நாடித் தலையை அறுக்கவந்த பலவேசம்
நல்ல காரியம் இப்போ தெரியும் உன் வீரம்
காலிலிட்ட வேட்டியைக் கட்டி இடையிலிறக்கி
கண்ணும் அதிகோபமாக சிவப்பேறவேதான்
தரிகிடதோம் என குதிரைக் கால் முன்வைக்க
கையில் உடைவாள் உறையது தன்னை உருவி
உருவியே ஓங்கித் தலைமேலே கொண்டுபோய் வெட்ட
உற்ற பரிசையினால் அவன் தட்டி விட்டானே
தட்டிவிட்டு பின் குதித்து கவனமோடியும்
ஆகாயத்தில் மாலைகொண்டு பறந்தானே
தேடியே சண்ட முண்டனவன் தன்னையும் நாடி
தீரன் பலவேசக்கார சுவாமி நடந்தார்
கையில் உறைவாளும் வல்லயமானது கொண்டு
இடையிலிருக்கு மந்த பர்வதவாழ் மலையும் விட்டு
கூடு கொம்பன் மலை குமடு பர்வதமும் விட்டு
கூண்டாங்கிருக்கும் குமடுகளெல்லாம் கடந்து
தேடி வருகிறபோது இந்திராணி மலை தன்னை
சிறந்திருக்கும் அடிவாரமது கண்டார்
ஆரும் ஏறமுடியாத இந்திராணி மலைதான்
அந்த மலையில் குதிரை திடுதிடென ஏற
ஓடிக் குதிரை குதித்தோடிப் போற அதிர்ச்சியை
உற்ற மிருகம் கலைந்தோடி அங்கொளிக்க.

(விருத்தம்)

மாமலையைக் கண்டு தானே வனத்தில் அவனும் போக
கனலாய் எரியுமந்த கதிர்மலை காவுநோக்கி
வானிலே போறபோது மாயமுத்தவரும் அப்போது
ஓடியே குதிரையை விட்டு உடனவர் மறித்துக் கொண்டாரே.

(பாட்டு)

மறித்தார் குதிரையை விட்டவர் தானும்
மலையது சந்திரகிரி மலையது தன்னிலே
சந்திரகிரி மலை உச்சியின் மேலே
தடவரை தனிலே வந்து எதிர்த்தான்
எதிர்த்து இருபேரும் போரு முடக்கி
இருந்த கவனமோடியர் காண

அறுபது பேரும் காண இவர்கள்
அதட்டி இருபேரும் மடக்கிப் பொருதார்
இடத்தே வெட்ட வலத்தே பிடிக்க
வலத்தே வெட்ட இடத்தே பிடிக்க
தலையிலே வெட்ட மறுபடி பிடிக்க
தத்தியே காலது தத்தி வெட்டி குன்னி
குன்னி குன்னியே முன்னே எழும்ப
குதிரை காலுக்குள்ளே பதுங்க
இடத்தே வீசி வலத்தே வெட்ட
ஏறிக் குதிரை மீறியே சாட
வாளை விறால் அது துள்ளின வகைபோல்
வற்றின குளத்தில் மீன் வற்றினாற் போலே
காளைகள் துள்ளி கயிறு அற்றாற் போல்
கன்றுக்கு இரங்கின காராவைப்போல்
ஆகவே இருபேரும் போரது பொரவே
ஆனைகள் தான் மதம் மீறின வகைபோல்
நின்று தான் துள்ளினார் இருபேருமாக
நெட்டூரம் துலைங்கிட வென்று தான்
வெட்டுக்குச் சரியாகவே வெட்டி
விண்ணிலே இருபேரும் போரது பொரவே
பொருதார் இருபேரும் மலையது தன்னிலே
புகழ்பெறும் முனிவர்கள் கண்டு மகிழ்ந்தார்.
எத்தனை போரது பொருதினாலுந்தான்
இம்மாலை தருவேனோ உனக்கு
சித்திரமாகவே போரது பொருத
திட்டன வெட்டியே அப்புற மீண்டார்
ஓடவே மாலை கழுத்தில் போட்டு
உடனே பறந்தான் ஆகாயத்தில்
மாலையைக் கொண்டு போனான் எனவே
வர்ண புரவியைத் தட்டி விட்டாரே
தட்டின புரவியை முன்னே விட்டுத்தான்
சந்திரகிரி மலை தன்னையும் விட்டு
ஓடிப் பறக்க ஆகாயத்தில்
உடனே பறந்து முன்னே மறித்தார்
போனாலும் உன்னை விடுவேனோ மூடா
பொட்டான் உன் தலை வெட்டி அறுப்பேன்
அறுப்பேன் என்று பலவேசமுத்து
அவனுக்கு முன்னே ஓடிப்பறந்தார்
கனத்த குதிரை சினத்திலே பாய
காரிகை பிரம்ம சக்தி அம்மை இருந்தாள்
இருக்குமந்த மணலாறதிலே

எல்லையை நோக்கி முன்னே பறந்தான்
முன்னும் பின்னுமாய் வருகிறபோது
முழித்து நின்ற பிரம்ம சக்தியும்
அம்மன் எறிட்டுக் கண்ணாலே பார்க்க
அதோ வருவது ஆரோ எனவே
கவனமோடியை முன்னும் பின்னுமாய்
வெட்டியே குதிரையை விட்டுப் பறக்க
தொடுத்த குதிரை அதிர்ச்சியாக
தொலைவிலே வருவதை அம்மனும் கண்டாள்
கண்டபோதே பிரியமாக அம்மையும்
தேரின் மேல் ஏறி இருந்தாரே.

(வசனம்)

சண்டமுண்டன் கவனமோடியின் ஆயுள் காலம் முடியும் நேரம் வந்துவிட்டபடியால். அவன் என் தாய் பிரம்மசக்தி இருக்கும் மணலாறு நோக்கிப் பறந்தான். அதைக் கண்ட என் தாயானவள் உபாயமாகத் தேரில் ஏறி அமர்ந்தாள். பின்னால் பலவேசக்காரன் துரத்திவர, அந்தப் பாவி. . .

(விருத்தம்)

இருப்பதைக் கவனமோடி இவனுமோ அறியமாட்டான்
சினத்தில் நாமள் ஓடி ஜீவன்தான் பிழைக்க வென்று
மனதிலே உரைத்துக் கொண்டு மலை எல்லாம் தான் கடந்து
கனத்ததோர் மணலாற்றங் கரையதிலே வந்தாரே.

(பாட்டு)

வந்தானே ஆகாசம் தன்னில் பறந்து
வளமான பொன்னரிய மாலையும் கொண்டு
சந்தோஷமாகவேதான் உயிர்களும் பிழைக்க
சண்டமுண்டன் கவனமோடியவன் தானும்
கொண்டுதான் போனானே பொன்னரிய மாலையை
கொடியிடை பிரம்ம சக்தி முன்னே மறித்தாள்
ஆகாசம் தன்னில் முன்னே மறிக்க
ஆத்துக்குள்ளே வந்து பையப் பதுங்க
எங்கேயடா போவாயினி என்று சொல்லி
என்று பலவேசக்காரனும் முன்னே வந்தான்
வந்து இருபேரும் போரது உடக்க
மணலாற்றில் இருபேரும் போரது பொருதார்
ஒரு முழப் பரிசை உடைவாளும் கொண்டு
உக்கிப் பொருதார் இருபேருமாக

அரனார்க்குக் கொடுபோன மாலை பறித்தவன்
ஆற்றுக்குள் வந்து அகப்பட்டான் என்ன
பிரம்மசக்தி அம்மனும் பார்த்து மகிழ
பலவேசக்காரசுவாமி முன்னே குதிக்க
சடையாமலே இருபேரும் உடக்கி
சண்டமுண்டன் வந்தகப்பட்டான் எனவே
அவர் வெட்ட இவன் தட்ட ஆதாளியாக
அம்மன் பிரம்மசக்தியவள் மகிழ
கண்டவர் கொண்டாட பலவேசமுத்தையா
கையிலுட வாள்கொண்டு தலையிலே வெட்ட
சண்டமுண்டனவன் எழும்பியே குதிக்க
முடிமுழிக்குமுன் ஓடிப் பறக்க
ஆகாசம் தன்னில் பறக்க ஒட்டாமல்
அம்மனும் ஆகாயத்தில் நின்று கொண்டாளே
ஓடிப் பறக்க இடமில்லை என்று
உள்ளே விழுந்த கள்ளரைப்போல்
எப்படித்தான் இருபேரும் கூடிப் பொருதாலும்
இம்மாலை நான் தருவதுமில்லை
ஆற்று மணலுக்குள்ளே புகுந்தால்
ஆருதான் என்னைப் பிடிக்கிறதென்று
ஓடினால் நம்மை விடுவதுமில்லை
உள்ளே மணலில் ஒளிப்போம் எனவே
திட்டென ஆற்று மணலில் பதுங்க
தேடியே பார்க்க பலவேசமுத்து
சினத்து பலவேச முத்தையாவும்
சேர்த்துப் பிடிக்கலாம் என்று வெகுண்டு
காற்றுபோல் ஓடும் பரிவிட்டிறங்கி
காலால் ஆற்றுக்குள் பைய நடந்து
பாதக் குறடிட்டு பலவேச முத்தையாவும்
பகவான் ஒளிபோல் உடைவாள் இலங்க
தேடியே பார்த்தார் மண்ணில் ஒளிந்தான்
தேவி பிரம்மசக்தி அம்மனும் சொல்வாள்
சொன்ன மொழி கேட்டு சண்ட முண்டன் தானும்
தூரத்தில் ஓடலாம் என்று துணிந்து
விம்மிப் புடைக்கின்ற வெள்ளெலிபோலே
மேனிகள் எங்கும் மணலாயிருக்க
துள்ளி எழும்பினான் ஆற்றுக்குள்ளே
சூரன் பலவேச முத்தையாவும்
எத்தனை துள்ளி எழும்பினாலுந்தான்
இறுதி முடுக்கினால் எழும்பினால் போமோ
ஐந்து மணி வல்லயமும் கையிலெடுத்து

ஆயுதம் பதினெட்டும் ஒருபோலே எடுத்தார்
பஞ்சில் பற்றிய தீயது போலே
பார்க்க கருங்கனல் போல் சினத்து
சினத்து பலவேச முத்தையாவும்
சீறியே இருபேரும் மீறிப்பொருதார்
பொருதாரே காலுக்குக் கால் முறை வைத்து
புள்ளிமான்கள் துள்ளினது போல்
இடது கைப் பரிசையில் வாள் கொண்டு தட்டி
எழும்பி ஆகாயத்தில் வாள் கொண்டு வெட்ட
மீறிப் பொருதானே கவனமோடிதான்
முன்னே நகண்டு சென்று வீறுடனே
துள்ளும் எலியது போல வெகுண்டு
குதிரைக் காலுக்கு உள்ளே பதுங்கி
சண்டைக்கிடாவு கனைத்தது போலே
சண்டமுண்டனவன் தட்டழிந்தானே
எண்ணம் பெருத்து மனதில் நினைத்து
எப்படியும் நம்மை உயிர் வைக்க மாட்டான்
கண்ணதும் காணாமல் ஓடிப் பறந்தால்
கண்டு கொள்வாள் பிரம்மசக்தி என்றேதான்
இன்னும் தருவேனோ பொன்னரிய மாலையை
என்றவன் ஆற்று மணலில் ஒளித்தான்
கண்டு பலவேச முத்தையாவும்
காலால் மிதித்து மாலையைப் பறிக்கலாம்
சண்டித்தனக்காரன் எங்கே பிழைப்பான்
சண்டாளப் பாவியை முதுகில் சமுட்டி
சக்கராயுதமது தன்னை எடுத்து
தேவர்களும் குரவையுமிட்டனர்
அறுத்தார் தலையை மிதித்து சமுட்டி
அரிவையர்கள் பூமாதிரி ஆற்றில் சொரிந்தாரே.

(விருத்தம்)

அறுத்தார் சண்ட முண்டனுட தலையை பாரதிலே
கதித்தே துர்க்கை மாகாளி தனக்கு வெட்டும் கிடாய்போல்
துடித்தான் உடலும் கிடுகிடென சூறாவளிக் காற்றதுபோல்
மிதித்தே இடும்பு செய்வார்க்கு இந்த நிலை வாரது போல்.

(பாட்டு)

அறுத்த தலைதனை எடுத்து
அவர் ஏறும் குதிரைக் காலில்
காலில் வைத்துக் கட்டியவர்
கடுக ஆற்றில் மெழுகுவாராம்

ஆற்றில் அவர் தான் மெழுகி
அழுக்கதெல்லாம் நீங்கிய பின்
பட்டதுவும் தானுடுத்து
பரமணங்கள் பூசுவாராம்
சாந்து ஜவ்வாது பன்னீர்
சந்தனங்கள்தான் பூசி
வொற் ஜரிகை சட்டையிட்டு
புகழ் தலைப்பாகை முடியில் வைத்து
கைக் கடயம் ஆபரணம்
கழுத்திலே தான் பூட்டி
வீரத் தண்டை சிலம்பணிந்து
மேகவர்ணத் துகிலெடுத்து
ஆயுதமெல்லாம் எடுத்தணிந்து
அழகுபரி ஏறுவாராம்
வாடாத மணமுடையோன்
மன்னன் பலவேசமுத்து
ஏறுவாராம் பரிமேலே
ஈஸ்பரன் துணை எனவே
அம்மன் பிரம்மராக்கு சக்தி
ஆகாசம் விட்டிறங்கி
வர்ணமணி மாலை தன்னை
வைத்தாரே அடைக்கலமாய்
அழகு ரதம் மீதேறி
அம்மன் முன்னே நடக்க
கன்னியர்கள் குரவையிட
கயிலாசம் தானோக்கி
தித்தி திமிதோமெனவே
திருநடனம் ஆடுங்குதிரை
பகவான் ஒளியதுபோல்
மன்னன் பலவேசமுத்தையாவும்
உடைவாளும் தானிலங்க
உற்றதேர் முன் நடக்க
கைலாசம்தான் நோக்கி
கடுக வர தேரதுதான்
தேருக்கு முன் குதிரைவர
சிவ சக்தி அம்மனுடன்
வீரன் பலவேசமுத்து
வெகுமானம் பெற்றவர்தான்
ஆருக்கும் உதவி செய்வார்
அழகு நல்ல பலவேசமுத்து

மரகதங்கள் விளையுகின்ற
மாணிக்க ஆறுதான் கடந்து
பச்சை நீலம் விளையுகின்ற
பல ஆறும் கடந்தேகி
வச்சிராங்கி மலையது தன்னில்
வந்தாரே இருபேரும்
பச்சை யாறும் தான் கடந்து
பல அணையும் ஏரியும் விட்டு
சரவண வாழ் பொய்கை விட்டு
தான் நடந்து இருபேரும்
மயில்போலே பிரம்ம சக்தி
வலது கையில் கப்பறையும்
அச்சமறவே தான் நடந்து
அரன் கைலை தன்னில் வந்தார்
வந்தார் கைலை சிவனிடத்தில்
மாலை பறித்து இருபேரும்
செந்தாமரைப்பூ வடிவழகி
தீரன் பலவேசமுத்தவரும்
கொந்தார் குழல் மடவார்
கூடிக் குரவைதான் இடவே
கண்டே சிவனை அடிவணங்கி
கைத் தொழுதார் இருபேரும்
சிவசங்கரனார் இடமதிலே
வந்தார்கள் இருபேருமாய்

(வசனம்)

சண்ட முண்டனுடன் போர் செய்து அவனின் தலையை அறுத்துக் கொண்டு, பிரம்ம சக்தி அம்மனும், பலவேச முத்துவும் கைலாச மலைக்கு வந்து, பொன்னரிய மாலையை ஆண்டவனிடம் கொடுத்தார்கள்.

(பாட்டு)

(இரட்டைச் சீர்)

வந்தவளும் தேரிறங்கி பிரம்மசக்தி அம்மனவள்
மகாதேவர்தனை வணங்கி நின்றார் (மகா...)

பலவேசமுத்தவரும் பரியை விட்டுத் தானிறங்கி
பரமசிவனை வணங்கி நின்றார் (பரம...)

அதிபரிசமாகவே சிவன் முதலார் அப்போது
அவர் மனது சந்தோஷமாகவே (அவர்...)

அடக்கமாய் வைத்ததொரு மாலையைக் கையாலேதான் வாங்கி
கோர்வையுடன் அழகது கண்ட பின்பு (கோர்வை...)

இந்த நல்ல மாலையதுபோல் எந் நாளிலும் இவ்வுலகில் கண்டதில்லை
கண்ணிலும் முகத்திலும் முத்தியே மாலையை (கண்ணி...)

கன்னி உமை பார்வதி கையில் மாலையை உமையவளும் வாங்கியே
கையாரவே மடியில் வைத்தனள் (கையார...)

இந்த மாலையைப் போலழகு இவ்வுலகில் கண்டதில்லை
என்று மனம் சந்தோஷமாக (என்று...)

நம்முடைய கைலையில் உள்ள பேர்களெல்லாம்
நாடியே வரிசை கொடும் என்றாரே (வரிசை...)

மாட்டோம் என்று போன நீங்கள் எல்லோரும்
மாயமுத்தவர்க்கு வரிசை செய்ய இனசூரன் பலவேசமுத்து
(இனசூரன்...)

நீங்கள் இருபேரும் மலைஏறி பழிகாரன் சண்டமுண்டன்
தலையறுத்து வந்தவகை பகருவாய் பலவேசமுத்தே
(பகருவாய்...)

மலைமீதில் ஏறியே மாலைகொண்டு வந்த வகை
வகை வகையாகவே சொன்னார் (வகை...)

அதிசூரன் சண்டமுண்டன் தலையதைக் கொண்டுவந்து
அடியறையாகவே வைத்தார் (அடியறை...)

வைத்த தலை தன்னைக் கொண்டு மகாதேவர் அப்போது
வருத்தினார் தெய்வாரை எல்லாம் (வருத்தி...)

தலைகொண்டு போவெனவே தெய்வாரை அருளவே
தானே கொண்டு போனார்கள் தலையை (தானே...)

கைலாச மானதிலே தெய்வார்கள் கூடியே கனக தீபம் காட்டினார்
பலமாய் ஊட்டுணவு வரமது அருளும் (பலமாய்...)

வீரன் பலவேச முத்தையாவுக்கு வேண்டிய
வரமதுவும் கொடுவும் என்றாரே.

(வசனம்)

இந்த விதமாகக் கொண்டுவந்த தலையை, சிவன் தேவர்களிடத்திலே கொடுத்தனுப்பிவிட்டு பலவேசமுத்தைப் பார்த்து, தலையைக் கொண்டு வந்த வகையைப் பற்றிக் கேட்டார். நடந்த சம்பவம் அனைத்தையும் சொன்னார் பலவேசமுத்து. ஆகையால், புகழ்பெற்ற வீரனுக்கு சிவன் வரம் கொடுக்க வேணும் என்று. . .

(பாட்டு)

பார்வதி அம்மனும் உரைத்திடவேதான்
பரமசிவனாரும் கேட்டு மகிழ்ந்து
தேசமதில் போய் பூஜைகள் கொள்ளவும்
சிவனார் வரமது கொடுப்பது கேளாய்
கொல்ல வரங்கள் வெல்ல வரங்கள்
கொடிய பிணிகள் தீர்க்க வரங்கள்
புகழும் பிரம்ம ராக்கு சக்திக்கு
பூஜைகளுண்டு இருக்க வரங்கள்
அம்பாள் பிரம்ம ராக்கு சக்தி துணை என்று
அவளை நினைத்து திருநீறு இட்டால்
என்ன பிணியது வந்தாலும்
ஏந்தியே உன் சரணம் என்றாக்கால்
வந்த பிணி ஓட வரங்களும்
மந்திரவாதியை அடக்க வரங்களும்
பிள்ளை இல்லாமல் உணத்த வரங்கள்
பெருமலடாக இருக்க வரங்கள்
பூவோடு பூஜை உண்ண வரங்கள்
புகழ் வறவே பூஜையுண்ண வரங்களும்
நீயே துணை அம்மா என்று
திருநீறிட்டால் பிணி ஓட வரம்
சக்தி துணை என்று நினைத்த பேருக்கு
சகல பாக்கியமும் கொடுக்க வரங்கள்
வம்புகள் செய்கிற வலுமுகடருக்கு
மாறாமல் பிணிபோட வரங்கள்
சங்கடம் என்று நினைத்த பேருக்கு
தண்ணீர் போலவே நினைத்த வரங்களும்
எங்கும் புகழ் வறவே அம்மா சரணம்

சரணமென்று கும்பிட்டால் வெற்றி கொடுப்பாய்
பேரது அறியேன் ஊரது அறியேன்
வெற்றதாயே என்று கும்பிடும் பேர்க்கு
ஆதரித்து வினையானது தீர்த்து
அழகுள்ள பாக்கியம் மிஞ்சவே நல்கி
தீரா வினையது தீர்த்து ரட்சித்து
தேடும் அடியார் தீவினை எல்லாம்
பூலோகத்திலே வாழ்வு கொடுத்து
புகழவே பூஜையது வேண்டி
நீயே சக்தி வரமது உனக்கு
நிச்சயம் என்று சிவனார் கொடுத்தார்
பலவேசக்கார சுவாமியவர்க்கு
மாய முத்தென்று பேரது கொள்ளவும்
வடிவான தெருவிலாடும் பெருமாள்
அவருக்கு வரமது இப்படிக் கொடுக்க
அழகுள்ள இணைசூரன் ஆனவர்க்கு
அப்படியே வரம் தப்பாதெனவே
அழகுள்ள பலவேசமுத்தவர்க்கு
ஆன நல்ல வரங்கள்எல்லாம்
இப்படியே வரமானது நல்கி
எல்லா தேவரும் இப்படி மகிழ
வரமது வேண்டி பலவேசமுத்தையா
வடிவான பலவேசக்கார சுவாமி
நல்ல புகழ் மடவார்கள் குரவைகள் பாட
நாடியே கைலாசமது தனிலே
தீரன் பலவேசக்கார சுவாமி
தோளில் வல்லயம் உடைவாள் இலங்க
அப்போது பரமசிவன்
அவரேது சொல்லுவாராம்
காக்காச்சி பொன்மலையில்
கட்டழகன் குருதவசி
பேய்ப் படையைப் பிறவி செய்து
பூவுலகில் விட்டிடுவீர்
சேவுகர்கள் என்றபோதே
தேன்மொழியாள் பிரம்மசக்தி
அடங்காத வரம் வேணும்
ஆதிசிவனே எனத் தொழுதாள்
தொழுது நின்ற இருபேர்க்கும்
தூட்டரிய வரம் கொடுத்தார்
மட்டில்லா வரம் கொடுத்தார்
மட்டில்லா வல்லவர்க்கு
கொல்லவரம் வெல்லவரம்

கொடுத்தாரே பரம சிவன்
நினைக்கு முன்னே கொல்வதற்கு
நிதியுள்ள வரம் கொடுத்தார்
கேட்ட கேட்ட வரங்களெல்லாம்
கிருபையுடன் தான் கொடுத்தார்
வணங்கி நின்ற பேர்களையும்
வதை செய்யாதே மாயமுத்து
போற்றி நின்ற பேர்களையும்
புகழ் பெறவே கொல்லாதே
கொல்லாதே மாயமுத்தே
கும்பிட்ட குடி வளர்ப்பாய்
கும்பிட்ட பேர்களுக்கு
குற்றம் குறை தீர்த்து வைப்பாய்
கருங்கோழி பலநிறமும்
கருங்கிடாயும் வெட்டிக் கொடை தருவார்
செங்கிடாயும் கருங்கிடாயும்
கருஞ்சுட்டியும் செப்பேரு வெள்ளையும்
பல நிறக் கிடாயுடனே
பாருலகில் கொடை தருவார்
தருவார்கள் மாயமுத்தே
சங்கையுடனே உந்தனுக்கு
இப்படியே வாங்கியுண்டு
எல்லோரையும் குடி வளர்த்து
வளர்த்து நல்ல குடி காத்து
வளரும் நல்ல பயிரது போல்
வாடாமல் குடிவளர்க்க
வையகத்தில் போமென்றாரே.

(விருத்தம்)

பூவுலகில் போகவென்று பெண்கொடியாள் பிரம்மசக்தி
பொற் பிரகாசத் தேர் ஏறி புரிசடையோன் கையிலைவிட்டு
கருஞ்சேவகக் குதிரையிலே கட்டழகன் மாயமுத்து
இறையவனார் தனைத்தொழுது இறைஞ்சி நமஸ்காரம் செய்தாரே.

(முற்றும்)

(கதைப் பாடலை இயற்றிய புலவர் சுடலை முத்து நாடார்.)

சங்கிலிபூதத்தார் கதை

(ஓலைச் சுவடி பதிப்பு)

(சிவசுப்பிரமணியபுரம்
த. பொன்னையா நாடாரிடமிருந்து
ஓலைச் சுவடி பெறப்பட்டது.)

(காப்பு)

முந்தி முந்தி வினாயகரே முக்கண்ணார் தன் மகனே
சந்தி வினாயகனே சைய நல்லாள் புத்திரனே
விந்தைக்கு வந்தோனே இக்கதைக்கு விக்கினங்கள் வாராமல்
கந்தனுக்கு முன்பிறந்த கணபதியே காப்பு தானே.

(துதி)

ஏறி மயி லேறி விளையாடு முக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறு மடியார்கள் வினை தீர்க்கு முகமொன்றே
குன்றுருக வேல்வாங்கி நின்ற முக மொன்றே
மறுபடு சூரரை வதைத்த முக மொன்றே
வள்ளியை மணம் புணர வந்த முகமொன்றே
ஆறுமுக மான பொருள் நீ யருள வேண்டும்
ஆதி யருணாசலம் அமர்ந்த பெருமாளே.

(குருவணக்கம்)

நாடு நல்லோ நல்லநாடு நாவலர்கள் புகழும் நாடு
கோடை மழைபொழியும் நாடு குளிர்ந்த தென்றல் வீசும்நாடு
இஞ்சிஞ்சி பூக்கும் நாடு இருவாச்சி மலரும் நாடு
தேனிருந்து தேன்பொழியும் தென்கைலாசம் நன்நாடு
தாயே சரஸ்வதியே தற்காக்க வேணும் தாயே
நாவு நல்லோ தடுமாறாமல் நற்குரலோ மங்காமலே
வாக்கு நல்லோ தடுமாறாமல் வந்துதவவேணும் தாயே
எனக்குச் சத்துருவான பேரை ஈரலெடுத்து மாலை போட்டு
குத்தி ரெத்தம் குடித்திடுவாய் குமரிநல்லோ பகவதியே
உயிர்தன்னைக் கொன்றிடுவாய் குமரி நல்லோ பகவதியே
சபை கெட்டியம்மா குடியிருந்து தற் காக்கவேணும் தாயே
என் குருவே சற்குருவே யெனக் குபதேசித்த நாற்குருவே
நானோருநாள் மறந்தாலும் நாவொருநாள் மறப்பதில்லை
குரு விருந்த விடந்தனியே கூட்டிசால் நீட்டறியேன்
அருகிருந்து சாரஞ் செய்தேன் அடியேன் பணிந்து தெண்டனிட்டேன்
குருதொட்ட செருப்பும் அடியேன் சிரசில் கொண்டேன்.

(கயிலாயமலை வர்ணனை)

கைலை மலை சிறப்புப்பாட கடவுளே துணையுண்டு
அப்பெரிய மலையினுட அதிசயத்தைச் சொல்லுகிறேன்
புலியும் நல்ல புல்வாயும் புனலருந்தி விளையாடு மலை
வேங்கை கிளி நரகினங்கள் வீரியங்கே குலாவுமலை
வாய்வு வந்து பெருக்க வருணன் வந்து மழைபொழியு மலை
தப்பட்டை தவுல் முரசு தவண்டை மல்லரி முழங்கு மலை
வீர சின்னம் யெக்காளம் வெற்றிச் சங்கு முழங்கு மலை
டம்மானம் நாகசுரம் சங்கீத வாத்திய முழங்குமலை
செகண்டி பம்பையோடு ஜெயபேரிகை முழங்குமலை
கனிவகைகள் பழுத் துதிர்ந்து காக்கை பக்ஷி தின்றுலாவு மலை
அரகரா வென்ற சப்தம் அரனார்க் குகந்த மலை
தபோதனர்கள் ரிஷி ஈஸ்பரர்கள் தவம் செய்து முத்தி யடையு மலை
அப்பெரிய மலைதனிலே அங்கே யாரெல்லாங் கூட்டமுண்டு
முப்பத்தி முக்கோடி தேவர்களும் நாற்பத்தி நாக்கோடி தேவர்களும்
கின்னரர்கள் கிம்புருடர்கள் கின்னரி நாரதர்களுடன்
வாழும் பிரமாவும் இந்திரனும் வரிசைப் புலத்தியர் அகத்தியரும்
அட்ட திக்கு பாலர்களும் அதைச் சேர்ந்த தேவர்களும்
வைகுண்ட வாசகரும் வந்திருக்கும் சமயத்திலே
நடனமிடும் பெண்களும் நாட்டிய கீதம் பாடி நிற்க
கவிவாணர் கவிபாட கட்டியகன் கட்டியங்கூறி நிற்க
எச்சரிக்கைக்காரர் நின்று யெச்சரிக்கைக் கூவி நிற்க
சந்தடிக்காரர் நின்று சந்தடி விலகி நிற்க
மாணிக்கக் கைலையிலே மரகதச் சிம்மாதனமதிலே
ஆனிப் பொன்மணி குலுங்க அரனார் கொலுவிருந்தார்

(சித்திரபுத்திரர் கணக்குப் பார்த்தல்)

பக்கத்தில் தேவி பார்வதியும் பதிவு தோழி யேழுபேரும்
காளி கூளி ஏவல் செய்ய கவிந்தக்காரர் காத்திருக்க
மூத்த பிள்ளை முன்பிருக்க முருகன் பக்கம் அருகிருக்க
நாரத மாமுனிவர் நின்று நாட்டு விசேஷம் சொல்லி நிற்க
ஏகாந்த சமேதராக ஈஸ்வரர் இருந்தாரே கொலுவதனில்
பல்லாயிரங்கோடி அண்டத்திற்கும் பதிவுகணக்கு சித்திரபுத்திரர்
பிரம்மா இந்திரர் பக்கம் நிற்க பிரித்தெடுத்து அறிக்கை செய்தார்

(தேவர்கள் முறை)

சனன மரண கணக்குகளைத் தெரிவிக்கும் வேளையிலே
தேவரெல்லாம் ஒன்று சேர்ந்து தெரிவித்தார் ஈஸ்பரர்க்கு
பிறப் பிறப்பு நீக்கி வைத்து பெருமானே காக்கவேணும்

காக்கவேணும் கர்த்தாவே கைலையங்கிரி வாசகனே
வைகுண்ட வாசகரே மனது வைத்துக் காக்கவேணும்
தேவ ரெல்லாம் மரியாதை செய்து வைக்கவேணுமய்யா
ராச்சதர்கள் பிறந் திறந்து நாங்களும் பிறந் திறந்தால்
மும்மூர்த்திகளைக் கண்ணால் கண்டும் முடச் சென்மம்போலே
மாண்டிறந்து பின்பிறந்தால் யெங்களுக்கு மரியாதைக் குறைவையா
செத்திறந்து பின் பிறந்தால் தேவர்கள் என்றும் மதியார்கள்

(அமிர்தம் கடைதல்)

அரனாரும் பெருமாளும் அமத்தியே தேவர்களை
ரகசியமா யிருபேரும் நயஞ் செய்ய வேணுமென்றார்
ஆலோசனை செய்து அப்போ அமிர்தங் கடைய நாள் பார்த்தார்
திருவாடு சோதியிலே திருப்பாற் கடல் தனிலே
அருணகிரி மையேந்திரகிரி யெமகிரி உதயகிரி
சதுரகிரி கைலாசகிரி மகாமேருகிரி நீலகிரி
எட்டுகிரி பருவதத்தில் ஈச னிருப்பிடம் கைலையங்கிரி
கைலையங்கிரிக் கடுத்த மகாமேருகிரி பருவதமாம்
மகாமேருகிரி பருவதத்தை மத்தாகத்தானே தானாட்டி
வாசுகி ஆதிசேடனை வடக்கயராய்தான் பூட்டி
வானோர்கள் ஒரு பக்கமும் வாலியொரு பக்கமும்
ஈசன் பெருமாள் தேவரோடு ரிஷி தபோதன ரெல்லோரும்
பக்கத்தில் பார்வதித்தாயும் பதிவு தோழி பெண்களுடன்
செய்யும் சடங்குகளைச் செய்து வைத்து சிவனார் உரைத்திடவே

(பல்லுயிர்கள் பிறத்தல்)

அரனா ருரைத்திடவே பாற்கடலில் அமிர்தங் கடையிற வேளையிலே
முகஞ்சலித்து வெகுசடவாய் மூதேவி யம்மை முன்பிறந்தாள்
சீதேவி யம்மை பின்பிறந்தாள் திரும்ப அகலிகையும் தான் பிறந்தாள்
சட்டநாதன் சேத்திரபாலன் தடியுடன் பூதம் பிறந்தவுடன்
அரனாருட கிருபையாலே அமிர்த மெல்லா மொன்று சேர்ந்து
வாரியெடுத் தடைத்தார் வைகுந்தவாசர் மனது சந்தோஷமானார்
கைலையங்கிரிவாசர்

(ஆதிசேடன் விஷத்தைக் கக்குதல்)

அதிகமா யிழுத்தாலே ஆதிசேஷன் விஷத்தைக் கக்க
அந்த நல்லோ விஷந்தானும் அண்ட மொகடுவரை தான் படர்ந்து
ஆலகால விஷம்போலே சீறி அடந்து வருவதை வானோர் கண்டு
செத்திறந்து போவோமென்று தேவர்கள்முதலான பேர்களும்
ஈசனுட பின்பக்கத்தில் யாபேர்களும் கூச்சலிட்டார்

(சிவன் நஞ்சை விழுங்குதல்)

அபய சத்தந்தான் கொடுத்து அடர்ந்து வருகிற விஷமதனை
ஈஸ்வரனார் வாய்திறக்க உள்ளடங்க மகாதேவி பார்வதியும்
ஈசனுட திருக் கண்டத்தை இருகப் பிடித்திடவே
கண்டத்தில் கீழ்போகாமல் கரமத்தில் அமைந்திடவே
ஆலமுண்ட கண்ட னென்றும் அரனார் நஞ்சு உண்டாரென்றும்
நஞ்சுண்ட யீசனென்றும் நமஸ்கரித்தார் தேவரெல்லாம்

(ராட்சதன் மறைந்திருந்து அமிர்தம் உண்ணுல்)

திருக் கூட்டந்தன்னை யமர்த்தி திருமாலும் அமுர்தத்தை
அகப்பை கொண்டு விளம்பிவர ஆதித்தன் சந்திரன் மத்தியிலே
ராச்சத னொருவன் மறைந்திருந்து அமிர்தமதை யருந்திடவே
பக்கமுள்ள சந்திர சூரியர் பார்திருந்தார் பெருமாளிடம்
கண் சைகை காட்டிடவும் கையிலே யிருந்த அகப்பையாலே
துண்டு துண்டாய் வெட்டிடவே துடித் தங்கே வுயிர்போகாமல்
நவக்கிரகத்துடன் சேர்ந்து ராகு கேதாகச் செய்து வைத்தார்

(அகலிகைக்காகச் சண்டையிடல்)

அகலிகப் வெண் தனக்காக ஆசைப்பட்டார் சகலரும்
உனக் கெனக் கென்று சொல்லி ஒன்றுக் கொன்று சண்டை போட்டார்
சண்டை செய்ய வேண்டாமென்று சகல பேரையும் தானமர்த்தி
அலைகடலில் ஐயாயிர வருஷம் மூழ்கித் தவமிருந்தால்
இப்பெண் கிடைக்குமென்று யீஸ்பரனா ருரைத்திடவே
ராட்சதர்கள் தேவ ரிஷி நடுக்கடலில் தாழ்ந்தார்கள்

(கயிலாய காவலர்கள் அட்டாதுட்டிச் செய்தல்)

சேத்திரபாலன் சட்டனாதர் கிருஷ்ணமூர்த்தி வேணுமென்றார்
வைகுண்ட காவலுக்கு வழியனுப்பி வைத்தார்கள்
கைலாசங் காவலுக்குக் கணனாதர் பூதமதை
ஈசானிய மூலையிலே இருத்தி வைத்தார் யீஸ்வரரும்
வைகுண்ட வாசரிடம் வரும் தேவரிஷிகளையும்
சட்டனாதர் சேத்திரபாலர் சங்கடங்கள் செய்து வைத்தார்
கைலாசங் காத்திருக்கும் கணனாதர் பூதத்தாரும்
அட்டாதுட்டி அக்கிரமங்கள் அதிகமாகச் செய்து வந்தார்

(பூத கணங்களைப் பூலோகம் அனுப்புதல்)

என் பெருமாள் யீஸ்வரரும் இருந்துமே ஆலோசித்து
அரிகர புத்திரருடன் அனுப்பி வைக்க வேணுமென்று
சட்டநாதர் சேத்திரபாலர் பூதத்தையும் வரவழைத்து

கொல்லு வரம் வெல்லுவரம் கொடுக்கும் வரம் அழிக்கும்வரம்
அள்ளியிடும் விபூதியால் அக்னியாய் வளரும் வரம்
சங்கு வைத்துப் பூரித்தால் தனல் பத்தி எரியும் வரம்
எம்பெருமாள் ஈஸ்வரரும் இவ்வரங்கள் தான் கொடுத்து
அட்டா தூட்டி யக்கிரமங்கள் யதிகமாகச் செய்யாமல்
பூலோகந் தன்னிலே புகழ்பெரிய அய்யனாரிடம்
போய் வாழ்ந்திருங்களென்று புத்தி சொல்லி யனுப்பி வைத்தார்
கீழ்விழுந்து நமஸ்கரித்தார் சேத்திரபாலர் சட்டனாதர்

(பூத கணங்கள் மரத்தில் குடியிருத்தல்)

பூதத்தாரும் கீழ் விழுந்து போத்தி விடை தான் வாங்கி
கைலாசந்தன்னை விட்டு கடல் கீழக்கரையோரமாய்
வருகிற வழிப்பாதை மலை யொன்றைக் கண்டார்கள்
அட்டகிரி எட்டதிலும் அதற் குவமையான மலை
மலையை நாடி மூவர்களும் வந்து அங்கே பார்க்கையிலே
ஓங்கி நல்லோர் வளர்த்த மரம் ஒரு கணுவில்லாத மரம்
சந்தணத் தேக்குமரம் தலையைச் சாய்ந்து பார்த்தாலும்
உச்சந் தெரியாதாம் உருண்ட மலை போலுள்ள மரம்
அப்பெரிய மரமதிலே அமர்ந்திருந்தார் மூபேரும்

(செட்டிமார் கப்பல் செய்ய மரம்வெட்ட வருதல்)

வெகு காலம் வெகு வருஷம் வீற்றிருக்கும் நாளையிலே
சித்திரக் கூடமுள்ள செட்டியார் ஏழுபேர்கள்
ராமன் செட்டி சுப்பன் செட்டி நடராஜ சோமத்தஞ் செட்டி
கருப்பஞ்செட்டி முத்தஞ் செட்டி கைலாசஞ் செட்டியுமாய்
கப்பல் செய்ய வேணுமென்று நினைத்து கடலுக்கப்பாலே தான் போய்
மரம் வெட்டிக் கப்பல் செய்து வருவோமென்று ஒன்று சேர்ந்து
செல்லுமான திரவியங்கள் சேகரித்து ஒன்று சேர்த்து
தச்சர் கொல்லர் கோடாலிக்காரர் மட்டாள்கள் கொத்தமார்கள்
இரும்பு ஆணி செம்பு ஆணி வெள்ளியீயம் காரியீயம்
செம்புத் தகடு திருத்தகடு பித்தாளைத்தகடு ஊசிக் காந்தம்
அனுப்பும்படி ஒப்பந்தம் அவரவர்க்குச் செய்து வைத்து
ஒப்பந்தம் முச்சரிக்கை உடன்படிக்கை வாங்கிக் கொண்டு
வழிக் கரிசி கட்டமுது வகை வகையாய் பண்டங்களும்
தாக சாந்திப் பண்டங்களும் தகையாறு மார்க்கமுடன்
ஏழு செட்டிப்பிள்ளைமாரும் ஏத்தியே கப்பல் தன்னில்
தச்சர் கொல்லர் கோடாலிக்காரர் மற்றுமுள்ள ஆட்களுடன்
திரவியமும் கையுடனே செட்டியார்க ளேழுபேரும்
கப்பலேறி ஏழுபேரும் கடல் தாண்டிக் கீழக்கரை யோரந் தானடுத்தார்

(பூத கணங்கள் இருந்த மரத்தை வெட்டி கப்பல் செய்தல்)

கப்பல் விட்டுக் கீழிறங்கிக் கண்டார்கள் யுயர்ந்த மரம்
வானமதிலே மரம்பார்த்து வருகிற வேளையிலே
சந்தன தேக்குமரம் ஒரு கணுவில்லாத மரம்
உச்சந் தெரியாத மரம் உருண்ட மலை போலுள்ள மரம்
அந்த நல்லோ மரத்தைக் கண்டு அனைவோர்களும் சந்தோஷித்து
ஏழுகப்பல்போக இன்னுங் கப்பல் செய்யலாம்
இருங்களென்று செட்டியார்கள் இருந்தன ரவ் விடத்தில்
இடம்பார்த்து சாய்கை போட்டு இருந்தமுது கொண்டார்கள்
சூரியனும் அஸ்தமாய் வருண னுதயத்திலே
தச்சர் கொல்லர் கோடாலிக்காரர் தங்கள் குல தேவதைக்கும்
மலையிலுள்ள தேவதைக்கும் மண்தோண்டி யடுப்பு போட்டு
மூத்த பிள்ளை விநாயகரை முன்பாகத் தானிருத்தி
பொங்கப்பானையே வைத்து பொறிகடலை முன்பு வைத்து
தேங்கா யுடைக்கையிலே சிதறுதய்யா துண்டுதுண்டாய்
பொங்கப் பானை கொதித்ததுவும் பொறிப்பொறியாய் பத்தியது
கேடுவரும் பின்னே யென்பார் மதிகெட்டு வரும் முன்னே யென்பார்
இக் குறிப்பை யறியாமல் யேழு செட்டி பிள்ளைமாரும்
பலி கொடுத்துக் கோடாலியைப் போடச் சொன்னார் மரமதிலே
ஆந்தை யங்கே யலறிடுமாம் அழுகணித் தேவாங்கு கரைந்திடுமாம்
கோட்டான் வலியன் குளறிடவும் கொக்குப் பறவைக் கூச்சலிட
நரி ஓரி யூளையிட நல்லபாம்பு இரைச்சலிட
முதல்வெட்டுப் போடையிலே மொளிச்சென்று தும்மலாச்சு
இரண்டாம் வெட்டுப் போடயிலே ரத்தமாக வடியக் கண்டார்
மூன்றாம் வெட்டுப் போடயிலே முழங்காலில் வெட்டுப்பட்டதையா
குதிரை முகத்தோடே வெட்டியதை குறிப்பறிந்து நிறுத்தாமல்
தட புடலாய் வெட்டச் சொல்லி சாய்த்தார் மரம்தன்னை
அலறியங்கே வீறிட்டு அம் மரஞ்சாய்ந்த ஓசையினால்
மலையி லுள்ள மிருகங்கள் மனங் கலங்கி ஓடியதாம்
பக்ஷி பறவையெல்லாம் பயந்தங்கே ஓடியதாம்
அப்பெரிய மரமதனை அளந்தங்கே துண்டித்து
துண்டித்துத் துண்டித்து கரைக்கு மெள்ளக் கொண்டுவந்து
ஆசாரிமார்களாலே அத்தனையும பணிப்படுத்தி
ஏழு கப்பல் தான்முடித்து இருக்கும் மிச்ச மரம்தன்னை
கப்பல்களில் தானேத்தி காணாததுக்கு வெட்டி யேத்தி
பொங்கலிட்டுப் பலி கொடுத்து போத்தி வணங்கி நமஸ்கரித்து
பாய் விரித்துக் கப்பல் மேற்கு பறந்தோடி வருகையிலே

(பூதகணங்கள் அனைவரையும் கொல்லுதல்)

மேலக் கரைத் தேடிக் கப்பல் விரைவாய யோடி வருகையிலே
ஓலப்பூக்கடல் தேடி ஓடி வரும் கப்பல் தன்னை
சட்டனாதர் சேத்திரபாலர் சங்கிலி பூதத்தாருமே
கப்பல்வர நடுக்கடலில் கண்டார்கள் மூபேரும்
கொல்லர் தச்சர் கோடிக்காரர் காமட்டாள்கள் செட்டியார்கள்
கப்பல் ஓட்டும் வேலைக்காரர்கள் கவுத்தான் முதல் சகலரையம்
ஏழு கப்பல் தன்னோடே கவுத்தினார்கள் நடுக்கடல் தன்னில்
கப்பல் கவுந்தவுடன் கப்பலிலுள்ள பேர்களெல்லாம்
செத்தார்கள் மடிந்தார்கள் சிவலோகம் சேர்ந்தார்கள்
வங்குலையாய் மாண்டிறந்தார் மகாதேவர் பூதத்தாலே
துஷ்ட தெய்வ பூதத்தாலே துயரடைந்தே மாண்டார்கள்

(திருச்செந்தூர் முருகனை வழிபடல்)

சட்டனாதர் சேத்திரபாலர் சங்கிலிபூதத்தாருமே
கப்பல் தன்னை கவிழ்த்துவிட்டு கரை மேற்கு பார்க்கும் போது
கோபுரமும் கொடிமரமும் கோ வென்ற யிரைச்சலுடன்
டம்மானம் பேரிகையும் டவண்டை மல்லரி வீராணம்
எக்காளம் நாகசுரம் இருண்ட பம்பை மத்தாளம்
சேகண்டி கைத்தாளம் திருச்சங்கு தவிலோசை
தவளச் சங்கு ஓசைகளும் தான் கேட்டார் மூபேரும்
ஒடிவரும் வேளையிலே யுகந்த சண்முக விலாசத்திலே
செந்தில் ஆறு முகவர்க்கு தீவாராதனைச் சமயமாம்
ஏழடுக்குத் தீபத்தை யெடுத்துயர்த்தும் வேளையிலே
கண்டார்கள் கண்குளிர்ந்தார்கள் கைகூப்பி தெண்டனிட்டார்கள்

(முருகப் பெருமான் அவர்களை விசாரித்தல்)

பார்த்துமே ஆறுமுகவேலவர் யிவர்களைப் பாதுகாக்க வேணுமென்று
எங்கிருந்து யெங்குவந்தீர் இங்கு வந்த காரியமேன்
ஒளியாம லுள்ள தெல்லாம் யுரைக்க வேணுமென்று கேட்க
கைலைாச வைகுண்டம் காத்திருந்தோம் யீஸ்பரரே
தேவரிஷி மற்றுமுள்ளோர் தேவர்க்கோன் முதலாக
சங்கரன் தன்னிடத்தில் சடைந்து நின்று ஓலமிட்டார்
என்ன சொல்லி யோலமிட்டார் யெம் பெருமா னீசனிடம்
அட்டா துட்டி யக்கிரமங்கள் அகிர்த்தியங்கள் செய்வதாக
வேளை தப்பி வேளையிலே வார பேரை போற பேரை
தொந்தரவு செய்வதாகச் சொல்லிடவே யீசனிடம்
பூலோகம் நீங்கள் சென்று போய்ச் சுத்திப் பார்த்துக் கொண்டு
அரிகர புத்திரனார் அய்யரையுங் கண்டு கொண்டு

சிலகால மங்கிருந்து திரும்பிவர விடை கொடுத்தார்
உத்திரவுப் படியாக நாங்கள் உடனாக மூவருமே
கீழக்கரை பாதையாகக் கிலேசமாக வரும்போது
அட்டகிரி பருவதத்தில் அமைந்த கிரி யொன்று கண்டு
வெகுகாலம் வெகுவருஷம் வீற்றிருக்கும் மந்நாளையிலே
சித்திரக்கூடமுள்ள செட்டியார்கள் யேழுபேர்கள்
மரம் வெட்டிக் கப்பல் செய்ய வந்துமே யம்மலையில்
தங்கி யிருந்த மா மரமதனை தடபுடலாய் தானும் வெட்டி
கப்பல் செய்து கடலில் விட்டார் கப்பலுடன் கூட வந்து
உட்கடலில் வாரபோது யுடைத்துமே கப்பல் தனை
இருந்த மன்னரத்தனையும் யெமனுக்கு ஒப்புவித்து
மேலக்கரை தேடியங்கே விரைவாய் வரும் வேளையிலே
அரகரா வென்ற சப்தம் அங்கே அதிகமாக கேட்டது
தம்பட்டம் தவில்முரசு டவண்டை மல்லரி வீராணம்
எக்காளம் நாகசுரம் கைத்தாளம் மத்தாளம்
அதிர்வேட்டு மணி யோசை யதிகமாகக் கேட்டபோது
ஒட்டமும் நடையுமாக அய்யா ஓடி வந்து பார்க்கும்போது
தீபாராதனைச் சமயம் தெரிஸனை கிடைத்ததய்யா
ஆதரித்துப் பாதுகாக்க அன்பு வைக்க வேணும் சுவாமி

(பூத கணங்கள் விடைபெற்று புறப்படல்)

பசியமர்த்தி சிலகாலம் பக்க மதில் யிருக்கையிலே
சட்டநாதன் கேத்திரபாலர் சங்கிலி பூதத்தாருமே
வாய்பொத்தி கைகெட்டி வணங்கி நின்று யேது சொல்வார்
பொதிகை மலை சுற்றிப்பார்க்க போக விடை தரவேணும்
தீர்த்தங்கள் திருநீறும் திருக்கையினால் தரவேணும்
வாங்கியே விடைபெற்று வருகிறார்கள் மூவருமே
மேலக்கரை பாதையாக விரைவாய் வருகையிலே
கன்னியா குமரியம்மையைக் கண்டவுடன் கைகுவித்து
பகவதியை தெரிஸித்து பசியமர்ந்திருக்கு மந்த நாளையிலே

(பூதகணங்கள் நம்பிகோயிலைக் காவல் செய்தல்)

பொதிகை மலை யன்ன திக்கு போக விடைபெற்றுக் கொண்டு
மகேந்திரகிரி பாதையாக வரும்போது திருக்குறுங்குடி
அழகிய நம்பி குறுங்குடிநம்பி அந்த நம்பி கோவிலிலே
உதய மாத்தாண்டம் காலசந்தி உச்சிக் காலம் கூடும்போது
மத்தாளம் மேளவாத்தியம் மட மடென்று சப்தமது
வெகு துலைவுக்குக் கேட்டிடவே விரசாய் நடந்து மூவருமே
திருக்குறுங்குடி நம்பியுடத் திருக்கோவில் யுட்சேர்ந்து
கரங்கூப்பி கைக் குவித்து கால் விழுந்து நமஸ்கரித்தார்

எழுந்திராமல் கீழ் விழுந்து இருக்கிற வேளையிலே
அரி அயனுந்தான் பார்த்து அவர்களை யெழும்பச்செய்து
பசியமர்த்தி மூவரையும் பார்த்துமே யேதுரைப்பார்
மலை நம்பி கோவிலுமே மற்றுமுள்ள மலைகளுடன்
குத்துப்பாறைக் காளி காவல் கொடிதான் காவலுண்டு
அப்பெரிய காளிக்குள் அடக்கமாய் முவருமே
முன்னோடுஞ் சேவுகராய் முதல் பிள்ளையாய் நீங்கள் நின்று
காத்துவர வேணுமென்று கட்டளை யிட்டா ரய்யனாரும்
கரங்கூப்பி கைகுவித்து கட்டளைப்படி நடப்போமென்றார்
வாக்கிஷங்கள் வுன்காவல் பூட்டுத்திறவு கோல் உன் காவல்
மலைங்காடு உன் காவல் யென்று சொன்னார் அய்யனாரும்
ஈசானிய மூலையிலே சம்மதித்து இருந்தார்கள் மூவருமே

(தொழுத நம்பியும் அவர் மனைவியும் தவமிருந்து குழந்தையைப் பெறுதல்)

அழகிய நம்பி கோவிலிலே அர்ச்சகர் தொழுத நம்பி
தொழுத நம்பி பெண்சாதி ருக்குமணியாச்சி யம்மாள்
மலடிருந்து மனமுருகி மைந்தனுக்குத் தவஞ்செய்து
நேராத கோவிலெல்லாம் நேர்ச்சை செய்து பூஜை செய்து
கனி விரதம் பவரணைகள் தப்பாமல் தானிருந்து
எம்பெருமான் கிருபையாலும் ஈசனுடக் கிருபையாலும்
ஆண் குழந்தைப் பிறந்திடவே அதிக சந்தோஷமாகி

(குழந்தைக்குப் பேரிட்டு சீராட்டி வளர்த்தல்)

பதினாறாம் நாளையிலே பந்துக்கள் தனையழைத்து
வேணு மட்டும் சாதமிட்டு வெத்திலை பாக்குதான் கொடுத்து
ஆர்பேரிடுவோ மென்று ஆலோசித்தார் தொழுத நம்பி
தன்னுடைய தகப்பன் பேரு சாத்தினார்கள் பந்துக்கள்
குண்டல வாசகனென்று கூப்பிட்டார் தொழுத நம்பி
பந்துக்க ளனைவர்களும் பயணமிட்டே போய்விட்டார்
பொன்னொரு தட்டாயும் பூவொரு தட்டாயும்
தரையிலே விட்டாக்கால் தண்டைக்கால் நோகுமென்று
பூமியிலே விட்டாக்கால் புழுதிமண் பிரளுமென்று
மடியிலே சேரகட்டி வளர்த்து வந்தாள் ருக்குமணியாச்சி

(குண்டலவாசனுக்குக் கல்வி புகட்டல்)

கோவிலம்மாள் புரமதிலே குடியிருந்து வரும் நாளிலே
ஒரு வயது குண்டலவாசனுக்கு ஆனவுடன் தொழுத நம்பி
பள்ளிக்குத் தானிருத்திப் படித்து வந்தான் குண்டலவாசன்
படிப்படியாய் யேணிவைத்து படியேறினாப் போலே

முன்படித்த பிள்ளைகளுக்கு முதல்படியாய் குண்டலவாசன்
தண்ணீர் வந்து பெருகினாப் போல் தடதடவென்று படித்து வந்தான்

(தொழுத நம்பிக்குப் பூசைமுறை வருதலும் குழந்தை உடன் செல்லுதலும்)

அப்படி யிருக்கிற வேளையிலே அறிவுள்ள குண்டலவாசனுக்கு
திருக்குறுங்குடி கோவில் முறை திகைந்து நல்ல தொழுத நம்பி
மறுபடியும் முறைவரவே மைந்தனுக்குத் தெரியாமல்
வழி கூடி நடந்திடவே மைந்தனுமே தாயினிடம்
அழுது புலம்பிக் கொண்டு குண்டலவாசன் அம்மா வென்று பின் தொடர
அழுது கொண்டு பின்வந்த அருமையுள்ள மகனைக் கண்டு
அலறாதே கதறாதே அப்பா இப்போ வந்திடுவார்
வாழைப்பழம் பலகாரம் மாங்கனியும் நான்தாரேன்
கொண்டு போய் பிள்ளைகள்கூட விளையாடு வென்று சொன்னாள்
என்னதான் சொன்னாலும் யேற்காமல் குண்டவாசன்
தகப்பனிடம் விடவே சொன்னான் தாய் ருக்குமணியாக்ஷி யம்மாள்
பையனைக் கைபிடித்துப் பாதைகூடி வழிநடந்து
தொழுத நம்பி போறவழி தூடர்ந்துமே யங்கு சென்று
பாலகனைப் பத்திரமாய் கூட்டி பார்த்து வாருமென்று
புருஷனிடம் ஒப்புவித்து பிறப்பட்டு யூர் தனக்கு
வந்துமே ருக்குமணியாச்சி மன வருத்தமா யிருந்தாள்
பிள்ளை நல்ல கவலையாய் பெருங்கவலையா யிருந்தாள்

(குழந்தையை அமர வைத்துவிட்டுப் பூஜை செய்தல்)

தொழுத நம்பி பிள்ளையுடன் தூடர்ந்து வழிநடந்து
திருக்குறுங்குடி நம்பி கோவில் சென்றுமே பிள்ளைக்கு
தின்பண்டம் வேண்டியது சவுகரித்துத் தான் கொடுத்து
தின்று பசியாரும் பிள்ளாய் சீக்கிரமாய நான் வாரேன்
நம்பி கோவில் பூஜை செய்து நா னிச் சணத்தில் வருகிறேன்
இவ்விடத்தை விட்டு நீயும் யேகாதே யென்மகனே யென்று
புத்திமதிகள் சொல்லி பிறப்பட்டார் ஸ்தானஞ்செய்ய
நேம நிஷ்டை யனுஷ்டானம் நிறைவேற்றி முடிந்த பின்பு
அசையா மணியைத் தட்டி அதன் பின்பு குச்செடுத்து
துறவு கோலால்தான் திறந்து தூண்டா விளக்கைச் சரியார்த்தான்
அபிஷேக யலங்காரம் அக்கம்பக்கம் கோவில்முதல்
சாயலச்சை சோடசங்கள் சகலமும் முடிந்தவுடன்

(குழந்தையை அழைத்து வந்ததை மறந்து நம்பி வீடு திரும்புதல்)

அத்த சாமப் பணிவிடைள் அப்படியே தான் முடித்து
திருக் காப்புத் தானுமிட்டு திரும்பினான் தன்னூருக்கு

மைந்தன் கூட வந்ததுவும் மயங்கி நித்திரை செய்கிறதும்
பாலன் கூட வந்ததுவும் படுத்து நித்திரைப் போனதுவும்
நினைவு சற்று மில்லாமல் நெடுந்தூரம் போய்விட்டார்

(பாலகன் ஞாபகம் வந்ததும் கோயிலுக்கு வந்து கதவை திறத்தலும் பூதம் தடுத்தலும்)

பாலன் தன்னை ஒப்புவித்த பாதகத்தி கிட்ட வந்தவுடன்
பிள்ளைப் பிரதாபம் பெரியதாய் தான் ஒடி
மைந்தன் பிரதாப மல்லோ மனச் சலிப்பாய் தானோடி
ஓட்டமும் நடையுமாக ஓடிச் சென்று திருக்குறுங்குடி
கோபுரவாசலுக்குக் கூச்சலெடுத்து திறக்கையிலே
சங்கு நல்லோ பூதத்தார் தானறிந்து அன்னேரம்
தாப்பாள் துறக்க வொட்டாமல் தடைப்படுத்தி ஏது சொல்வார்

(காலையில் வந்தால் பிள்ளையைப் பத்திரமாகத் தருகிறேன் என்று பூதம் கூறுதல்)

வாரும் பிள்ளாய் தொழுத நம்பி வார்த்தை யொன்று சொல்லக் கேளும்
அர்த்த சாமங்கூடி அடைத்த கதவுதன்னை
மைந்தனுடைய ஆசையினால் மகவாசை தன்னிலே
பிள்ளையுட ஆசையினால் பித்து பிடித்ததுப் போலே
என்னுடைய காவலென்று யெண்ணாமல் புத்தி கெட்டு
தாள் திறக்க யாரம்பித்தாய் சற்றும் பயமில்லாமல்
உன்னுடைய பாலகனை யுயிர்ச் சேதமில்லாமல்
இரவு மட்டுங் காத்திருந்து நான் தாரேன் பாலகனை
மயங்காமல் தியங்காமல் கவலை வையாமல்
ஊர் போய் யுதயம் வந்தால் உன் பிள்ளையைத்தான் தாரேன்
அழகிய நம்பி குறுங்குடி நம்பி அவ ராணை தப்பாது
இல்லாத போனாக்கால் யெமன் லோகஞ் சேர்த்து வைப்பேன்
இவ்வார்த்தைதனைக் கேட்டு யேகியே தொழுத நம்பி
குடியிருப்பை நாடியல்லோ கோவிலம்மாள்புரம் வந்தான்

(தொழுத நம்பி நடந்ததை மனைவியிடம் கூறுதல்)

தலைவாசல் கதவை யடைத்துத் தாள்ப்பாளிடக் கண்டு
ருக்மணியாக்ஷியைக் கூப்பிட்டே யோலமிட்டார்
சத்தமிடக் கேட்டவுடன் தன் மகன் வந்தானென்று
தன்மகன் வந்தானென்று சந்தோஷத்துடனே
சந்தோஷத்துடனேதான் தாள் திறந்தாள் தாப்பாள் தனை
அமுதைக் கீழே யிறக்கிவைத்து அய்யர் தொழுத நம்பிபுமே
சாயலச்சை அர்த்தசாமம் தான் நடக்கும் வேளையிலே
குண்டலவாசனுக்குக் கொடுமுறக்கம் வந்ததினால்

பக்கமுள்ள யறை தன்னிலே படுக்கவே வைத்திருந்தேன்
கோவிலுக்காலங் கூடியபின் கொப்பரைச் சாதமெடுத்தேன்
நியாபகத் தப்பாக நடையடைத்து வந்து விட்டேன்
ஓட்டமும் நடையுமாக ஓடிவரும் வேளையிலே
மைந்தனுடைய ஞாபகம் வந்ததினால் ஓடிப்போய்
கோபுரத் திட்டிவாசலுக்கு திறவு கோலெடுத்துத் திறக்கையிலே
தாள் திறக்க மாட்டாமல் தயங்கி நிற்கும் வேளையிலே
சங்கிலி நல்லோ பூதத்தாரும் தடைப்படுத்தி யேது சொல்வார்
பத்திரமாய் பாலகனைப் பாதுகாத்துத் தருவேனென்றும்
காலங் கூடி முடிந்தவுடன் கதவு திறக்கக் கூடாதென்றும்
அழகிய நம்பி குறுங்குடி நம்பி அவர்கள் மேலாணையிட்டு
மறுநாள் காலத்தே வரும்படிக்கும் குழந்தைக் காத்து ஒப்பிப்பதாயும்
வழியனுப்பிப் போகச் சொல வந்து விட்டேன் யென்றானே
இப்போ குழந்தைதான் வேண்டுமானால் கொன்று தரும் தப்பாது
அப்படியே யுந்தனிடம் அறிக்கைசெய்ய ஓடிவந்தேன்

(தொழுத நம்பியின் மனைவி உடனே குழந்தையைக் கொண்டு வரச் சொல்லுதல்)

அய்யோ சிவனே யென்று அலறி ருக்குமணியாக்ஷி
தலையிலடித்து முகத்திலடித்து தரையில் கிடந்துருண்டு
என்னுடைய பாலகனை இச்சணத்தில் கொண்டு வராவிட்டால்
நாக்கு நல்லோ பிடுங்கிக் கொண்டு நான் சாவேன் இச்சணத்தில்
நஞ்சு தின்று கயறு போட்டு நாண்டு கிட்டுச் செத்திடுவேன்
அலுங்காக் கஜமதிலே ஆவிறங்காப் பொய்கையிலே
கல்கெட்டிறங்கிடுவேன் கசத்தி லுயிர் விட்டிடுவேன்
ஒரு பழிக்கு இரண்டுபழி உம்மாலே வாங்கிக்கொள்ளும்
இல்லாதே போனாக்கால் இச்சணத்தில் பிள்ளையை
என்னைக் கூட இட்டுப்போய் யென்னிடத்தில் ஒப்பிவியும்

(பூதம் கோபத்தில் குழந்தையைக் கொல்லுதல்)

வாரும் நடவுமென்று வழிநடந்தா ரிருபேரும்
திருக்குறுங்குடி வந்து சேர்ந்து கோவில் முன்பு வந்து
கோபுரத் திட்டி வாசலிலே திறவு கோலை யெடுத்துத் திறக்கையிலே
கூவென்று கூச்சலிட்டார் கோபம் வந்து சங்கிலிபூதம்
கலையிலே குண்டலவாசகனைக் காத்துத் தாரேனென்று சொல்லி
ஆணையிட்டுத்தான் கொடுத்தேன் அதையும் நீ நம்பாமலே
பெண்சாதி வார்த்தைக் கேட்டு புத்திகெட்டு வந்ததினால்
மக னிப்போ வேணுமென்றால் வாங்கிக்கோ தொழுத நம்பி

திறவுகோல் தொண்டுமுன்பு துணியேந்திக் கொள்ளு மென்று
துண்டுத்துண்டுடாய் பிச்செடுத்து திறவுகோல் தொண்டு வழியே
போட்டதுவே

(பிள்ளை இறந்ததால் தொழுதநம்பியின் மனைவி உயிரைவிடல்)

கண்டார்க ளிருபேரும் கைகொண்டு முகம் அறைந்து
அலறியே கீழ் விழுந்து அய்யோ சிவனே யென்றார்
அழகிய நம்பி குறுங்குடி இந்தனியாயம் செய்தீர்களே
ஊழி பூழி தலைமுறைக்கு உங்களை நம்பியிருந்ததற்கு
வன் குலையாய் மாளவைத்த இந்த வன்கொடுமை தீராதே
ஆரிடம்போய் முறையடுவேன் அபையம் யாய மய்யா
சேலை போட்டு நாவிழுத்து செத்திறந்தாள் ருக்குமணியாக்ஷி

(பூதங்களை அடக்க மலையாள மந்திரவாதியிடம் செல்லுதல்)

தொழுதநம்பி தானறிந்து தோகயரைத் தானெடுத் தடக்கி
ஏழு நம்பி யெம்பெருமா னிவர்கள் காவல் சங்கிலி பூதங்களை
அட்டாதுட்டி செய்வதினால் அடக்கி வைக்க வேணுமென்று
மலையாளம் போய்வர மற்றுமொரு யாள்பிடித்து
ஏழு நம்பிக்கோவில் பூசை யிடையூறு வராமல்
தொழுத நம்பியு மாள் பிடித்து தொண்டு செய்ய வைத்துவிட்டு
மலையாளம் போவோ மென்று தொழுத நம்பி வழிநடக்கும் வேளையிலே

(அழகிய நம்பி விசயமறிந்து தொழுத நம்பிக்கு ஆறுதல் கூறி தடுத்தல்)

எம்பெருமான் யேழு நம்பிச் சேதிதானறிந்து
மலைநம்பி தான்போய் வழிமறிக்கத் தொழுதநம்பி
சாஷ்டாங்கமாய்த் தெண்டனிட்டு தன்னுடைய சங்கடத்தை
மைந்தனுடன் மனைவியுமாய் மாண்டிறந்து போனதுவும்
பூதஞ்செய்த நிஷ்டூரத்தால் புறப்பட்டு வந்ததுவும்
தெரிவித்து முக மறைந்து தீர்த்தருள வேணுமென்றார்
மலைநம்பி தானமத்தி மயங்காதே யென்று சொல்லி
முன்னாள் யமைப்புப்படி முடிந்ததை நீ விசனியாமல்
இன்னாளில் மனைவி மைந்தன் யீகுவே நான் தப்பாது
சங்கு நல்லோ பூதத்தாரைத்தான் போகச்செய்து வைப்பேன்
மயங்காமல் தியங்காமல் மனச் சடவை நீக்கி வைத்து
தொழுத நம்பி அர்ச்சகரைத் துருசாகக் கூட்டி வந்து

கோவில் முறைப்பணிகள் கொண்டு முடிக்கச் செய்து
திருமாங்கிலியம் முகூர்த்தம் வைத்து தொழுத நம்பி
திடச் சித்த மாயிருக்கிற திருத்த நாளையிலே

(சங்கிலி பூதத்திற்கு அழகிய நம்பி அறிவுரை கூறுதல்)

சங்கிலி நல்லோ பூதத்தாரைத் தானங்கே வரவழைத்து
சட்டனாதர் சேத்திரபாலர் தானிருவ ரிங்கிருப்பார்
மலை வளத்தைக் காத்திருந்து மகிழ்ந்து நீ யிருந்திடுவாய்
ஏழுமலை வடக்கயறாய் யெங்கும் நீ நிறைந்திருப்பாய்
அச்சங்கோவி லாரியங்காவு சொரிமுத்தையர் கொளத்துப்புளி
திருவாலி யய்யர் முதல் சேவித்து நீ யிருந்திடுவாய்
அட்டாதுட்டிகள் பண்ணாதே அக்கிரமங்கள் செய்யாதே
மலையேறுஞ் சனங்களை வன் கொடுமை பண்ணாதே
உன்னுடைய சுருபமதை ஒருவருக்குங் காட்டாதே
பாலகனாய் சிறுபிள்ளையாய் பதுங்கி நீ நடமாடியிரு
என்று சொல்லி யெம்பெருமாள் யோகினாரே சங்கிலி பூதம்

**(காவல் செய்து மலையை
பூதம் சுற்றிப் பார்த்தல்)**

மேலநல்லோ சிகரத்தில் யேழுபுரிக் கல்லுத்தள்ளி
தெக்குப்புற சிகரமதில் தென்கொப்பு மதுர மரத்தில்
அய்ந்து நல்லோ குழந்தை போல் அழகில் மிகுந்தவராய்
பிராமணப் பிள்ளைப் போல் பிறப்பட்டு வழிநடந்து
மலை நம்பி கோவில் வந்து மகேந்திரவாடிச் சுத்திப் பார்த்து
காத்தடித்தால் யிலையாடாதக் காக்காச்சி மலையில் சென்று
அம்மலை வனங்களையும் அறிந்து சுத்திப்பார்த்துக் கொண்டு
மணிமுத்தானதினுட மலை வளத்தைத்தான் பார்த்து
நாகப் பொதிகை யேகப் பொதிகை அஞ்சுதலைப் பொதிகையும்
ஆனை மொட்டைத் தேரியும் அகத்தீசர் தெரிசனமும்
சுத்தி வலம் வந்து சுறுசுறுப்பாய்க் கீழிறங்கி
வான தீர்த்தம் தானாடி வழிகூடி வடமுகமாய்
நீண்ட கசமதிலே நின்று மங்கே பார்க்கையிலே
அய்வராசாக்கள் கோட்டையை அதின் மேற்கே பார்க்கையிலே
மான் கனி பிலாக்கனி வாழைக்கனி வாடை கண்டு
சங்கு நல்லோ பூதத்தாரும் ஒரே தாவாகத் தானே தாண்டி
வாச்சால் போல வாச்சுதென்று வாயாரத் தின்று கொண்டு
ஒங்கி நல்லோ வளர்த்த மரம் ஒரு கணுவில்லாத மரம்
அப்பெரிய மரங்கண்டு அமர்ந்து விளையாடிடும்போது

(பூதம் துயில் கொள்ளுதல்)

அய்யர் சொரிமுத்தையார் கோவிலிலே அந்த சாமங்கூடும்போது
சேகண்டி மணி ஓசை திடதிட வென்று கேட்டிடவே
அவ் விருப்பிடத்தை விட்டேகி யெழுந்திருந்து விரைவாக
சொரி முத்தய்யர் தென்பக்கமாய் தோட்டப் பூங்காவில் சென்று
புஷ்பப் பூக்களைத்தான் பரித்து பூங்காவில் விளையாடி
அயர்ந்து நித்திரை செய்து கொண்டு அங்கிருக்கும் வேளையிலே

(பூரண பொற்கலைத் தாயார் பூதம் மீது இரக்கங்கொள்ளுதல்)

பூரண பொற்கலைத் தாயறிந்து போற்றி வணங்கிப் புருஷனிடம்
அய்யர் சொரி முத்தையரிடம் அறிக்கை செய்யத் துடங்கினாளே
அழகில் மிகுந்தவனாய் ஐந்து வயதுப் பாலகனாய்
பிராமணப் பிள்ளை போலே பேதலித்துப் பூங்காவில்
ஆகாரந்தானு மற்று அன்னக் களைப்புக் கொண்டு
வாடி மனந்தளர்ந்து மயங்கி நித்திரை போகுதய்யா
அக்குழந்தை யெங்களுக்கு அறிக்கை செய்ய வேண்டுஞ் சுவாமி

(சொரி முத்தையர் பூதம் பற்றி தயார்க்குக் கூறுதல்)

போம் பிள்ளாய் பூரணப் பொற்கலை பொல்லத வம்பனவன்
சமுத்திர அமிர்தங் கடையயிலே சங்கிலியுடனே பிறந்த பூதம்
கைலாசம் ஈசானியம் காவல் காத்துவரு மன்னாவில்
தேவரிஷி யீஸ்வரர்கள் தெக்ஷணம் வரும் வேளையிலே
துஷ்ட நல்லோ தடிகொண்டு துரத்தியங்கே விரட்டுரதும்
கைச் சங்குதானெடுத்து தானே யங்கே ஊதுரதும்
தவஞ் செய்யும் தபோதனரை தட்பழியச் செய்கிறதும்
ராட்சதரைக் கண்டாக்கால் நடுக்கடலில் தாக்கிறதும்
எம்பெருமாள் யீஸ்வரரும் யெவ்விடம் சென்றாலும்
அவ்விடம் கூடச் சென்று அட்டாதுட்டாஞ் செய்கிறதும்
கேதாரம் வைகுண்டம் சேத்திர பாலர் சட்டனாதர்
இவ்விதமா யிருபேரும் இப்படி அங்கே செய்கிறதை
அரியனும் தானறிந்து அனுப்பி வைத்தார் பூலோகம்
சட்டனாதர் சேத்திர பாலர் சங்கிலி பூதத்தாருமே
கை கவ்பி கைத்தொழுது கவலையாய் நிற்கையிலே
வாட்ட மென்ன கோட்டமென்ன மனச்சலிப்பே னுங்களுக்கு
எக்காலமு முங்காளுக்கு இருப்பிடங்க ளிவ்விடமே
அட்டாதுட்டி யக்கிரமங்கள் அகிரத்தியஞ் செய்வதினால்
பூலோகம் சென்றாக்கால் புத்தி மிக நேராகுமென்று
அனுப்பிவைத்தார் அரி அயனார் அதினாலிங்கே வந்தவன்காண்

(பூதத்திற்கு விலங்குபூட்டிக் கொணர்ந்து அறிக்கையிடச் சொல்லுதல்)

பூங்காவில் மெள்ளச் சென்று பிள்ளைப் போ லாதரித்து
கைவிலங்கு கால்விலங்கு மாராப்பு விலங்கு பூட்டி
எனக் கறிக்கை செய்தாக்கால் யெழுந்திருந்து நான் வாரேன்
சோதி நல்லோ வாய்திறந்து சொரிமுத்தையர் சொல்லிடவே

(பூரண பொற்கலையம்மன் விலங்கு பூட்டிக் கொணர்தல்)

போத்தி யடி வணங்கி புறப்பட்டு பூரண பொற்கலை
பூங்காவில் தானே சென்று பிள்ளை தனைக் கையிலெடுத்து
கைவிலங்கு கால்விலங்கு மாராப்பு விலங்கு பூட்டி
அய்யர் சொரிமுத்தய்யருக்கும் அறிக்கைவிட அன்னேரம்
ஆனை வாகன மீதேறி அதைச் சேர்ந்த படையுடனே
பூங்காவில் செல்லயிலே பூதத்தாரும் தானறிந்தார்
கைவிலங்கு கால்விலங்கு மாராப்பு விலங்கு கண்டார்

(அரிகர புத்திரர் அறிவுரை கூறி முன்பூசை வாங்க வழி செய்தல்)

கைச்சலிப்பு மெய்ச்சலிப்பு கனச் சலிப்புக் கொண்டழுந்து
அரி அயனார் விடை கொடுத்த அரிகரபுத்திர ரவர் தாமென்று
கரங்கூப்பி கைதொழுது சாஷ்டாங்கத் தெண்டனிட
தொண்டனிட்ட பிள்ளைதனை தனக்குத் தென்பக்கமாய் தானிருத்தி
இருப்பிடத்தில் கொண்டு வந்து இருத்தி வைத்து புத்திசொல்வார்
அட்டாதுட்டி யகம்பாதம் அக்கிரமங்கள் செய்யாதே
காடேறும் சனங்களை கடுங்கோபஞ் செய்யாதே
மலையேறும் சனங்களை வன்கொடுமை செய்யாதே
வேட்டையாட வருவோரை விரட்டி பயங்காட்டாதே
ஏழுமலை உன்காவல் யிருப்பிடங்கள் உன்காவல்
வாக்கிஷங்கள் உன் காவல் பூட்டுத்திறவுகோல் உன்காவல்
முன்னோடும் சேவகனாய் முதல் பிள்ளையாய் தானிருந்து
அய்யங்காக்கி பெரும்படையை ஆதரித்துக் கொண்டு வந்தால்
முன்பூசை உந்தனுக்கும் பின் பூசை எந்தனுக்கும்
கைப்பூட்டுத்தான் களத்தி கனத்த சங்கிலி பூதமென்றும்
பேர் கொடுத்து அய்யனாரும் பேய்ப்படைக்கு முதல் பிள்ளையாய்
தென்பக்கத் திருந்திடவே தெண்டனிட்டார் சங்கிலி பூதம்
மலை வளங்களைச் சுத்திப் பார்த்து சங்கிலி பூதம்
மகிழ்ச்சியுடன் தானிருந்தார்

(பூதம் குற்றால நாதரை வணங்கி காவல் பணி ஏற்று அமருதல்)

அப்படியிருக்கிற நாளையிலே அழகு பிள்ளை சங்கிலிபூதம்
சட்டனாதர் சேத்திரபாலர் அய்யங்காட்சி பெரும் படைகள்
காளி கூளி பூதப்பேய்கள் கருப்பன் மேல வாசப்பனுடன்
தண்டியலை நடத்திக்கொண்டு பிறப்பிட்டார்கள் எல்லோரும்
வனதீர்த்தம் தானுமாடி பாவனாச லிங்கரை சேர்வை செய்து
அந்த நல்லோ தலத்தைவிட்டு கலியாணி தீர்த்தம் வந்து
அங்கு நல்லோ திர்த்தமாடி சிவ சைலம் பாதைக்கூடி
சிவசைலம் தானும் வந்து அக்காள் தங்கையைச் சேர்வை செய்து
அந்த நல்லோ இடத்தைவிட்டு ஆலை மலைப்பாதைக் கூடி
கடையத்து விலக்கும் விட்டு வந்து சேர்ந்தார் தென்காசி
காசி விசுவேசரை சேர்வை செய்து உலகம்மாளையு மடிவணங்கி
அந்த நல்லோ தலத்தைவிட்டு புறப்பட்டார்கள் குற்றாலம்
தேனிருந்து தேன்பொழியும் செண்பகா தேவில் வந்து
தான பானம் நேமநிஷ்டை செய்து மாவடித்துறை வந்து
மாவடித்துறையில் ஸ்நானம் செய்து வழி நோக்கி திருக்குற்றாலம்
வட வரிவியில் ஸ்நானம் செய்து வந்து சேர்ந்தார் குற்றாலிங்கரிடம்
வந்து நல்லோதான் பணிந்து வணக்கமா யிருப்பதைத்தான் பார்த்து
வாரும் பிள்ளாய் சங்கிலிபூதம் வார்த்தை யொன்று சொல்லக்கேளு
யென்னுடைய வடக்குவாசல் யெப்போதும் நீயிருந்து
காத்துக் கொண்டு வந்தாயானால் வருஷத்திலொரு குடையுமிட்டு
முப்பொலியும் முன்பூசையும் கொடுக்கச் செய்கிறேன்
என்று சொன்னார் குற்றாலலிங்கம் அப்போது சங்கிலிபூதம்
சங்கிலிபூதம் சட்டனாதர் சேத்திரபாலர் அய்யங்காக்ஷிபடையும்
பதினெட்டாம்படியில் கருப்பன் யென்றும் பேறுபெற்று
வடக்கு அய்யனாரை சேர்வை செய்து அமர்ந்திருந்தார் யெல்லோரும்
அப்படியே கொலுவருந்தார் அந்த யீஸ்வரனார் வாசலிலே.

(முற்றும்)

பொன்னுருவி தவநிலை கதை

(ஓலைச் சுவடி பதிப்பு)

(சிவசுப்பிரமணியபுரம் அ. அப்பாவு நாடார்
அவர்களிடமிருந்து
ஓலைச் சுவடி பெறப்பட்டது.)

(காப்பு)

ஓம் நமோ நாரண சீதை மணவாள
புவனபதி யீரேழும் ஒன்றாய் அளந்தாய்
அனவாச கலியாண ரெகு ராமச்சந்திரர்
ஆதிநாராயணர் கொலுவாய் இருக்க
உத்தண்ட வீரன் யிளைய பெருமாள்
லோகத் தூயோன் கொலுவாய் இருக்க
செம்பவள வாயழகு கோதண்ட ராமன்
சிரீரங்க நாராயண வாழ்வு தானும்
என் பெருமா ளரி கோபால ராமன்
இரணிய சம்பாரம் ஆடும் பெருமாள்
ஆழி சுற்று ஏழு மரம் ஊடுருவி எய்த
அலை கடல் ஊஞ்சலிலே அமர்ந்த பெருமாளே
பஞ்ச பாண்டவ ரஞ்சுபேருக் குதவியாக
பார்தனிலே போய் சூதும் வாதுகளு முரைத்தாய்
எந்த வினை வந்தாலும் வந்தயிடம் போக
ஈஸ்பரனும் பார்வதியும் எப்போதும்
என் முன் நிற்க வேணுமே.

(தென்காசி நாட்டுவளம் கூறுதல்)

(வேறு)

நாடான நல்ல நாடதிலே நல்ல வட நாடதிலே
தேசமான நல் தேசத்திலே தென்காசி பதிதனிலே
பொன்காசி மிக வழங்கும் தென்காசி பதிதனிலே
பாலிருந்து புளிக்கும் நாடு பழமிருந்து கொஞ்சுநாடு
தேனிருந்து கனி சொரியும் தென்காசி பதிதனிலே
கொக்கிருந்து யிற குணர்த்தும் குளிர்ந்த நல்ல நாடதிலே
அந்த நல்ல நாடதையும் ஆண்டு வாரான் ராசமன்னன்
மனுநீதி தவறாமல் மகுட முடிராசன்ஆண்டு வாரான்
ஆண்டு வார நாளையிலே ஒரு ஆயிளையை மணமுடித்தான்
மணமுடித்து வெகுநாளாய் வாழ்ந்திருக்கும் நாளையிலே
ஆண்டிருக்கும் நாளையிலே ஆயிளைக்கு குழந்தை யில்லை
ஆதிபரனை நோக்கியல்லோ அழகு தவம் செய்வாளாம்
பரமனுடைய திருவருளால் பாவை நல்லாள் திருவயத்தில்
திருதேவி திருவயத்தில் சிறந்த கெர்ப்பம் தரித்திடுமாம்.

(சீவல மாறன் பிறப்பும் வளர்ப்பும்)

(வேறு)

பத்தான திங்களிலே பாலகனை யீன்றெடுத்தாள்
பாலன் பிறந்தபோது பாவையர்கள் குரவைபாட
பாலூட்டி நீராட்டி பாலகனை தான்வளர்த்தாள்
ஆராரோ பாடியல்லோ ஆயிளையாள் அன்னேரம்
பிறந்த மகன் தனதனுக்குப் பேருமிட வேணுமென்று
ஆருடய பேரிடவோ அழகு பாலனுக்கு
மாமன்மார் பேரிடவோ மற்றுமுள்ளோர் பேரிடவோ
சிவனிங்கு தந்த மகன் **சீவலமாற்பனென்று** பேருமிட்டார்
பேரு மிட்டுத் தாலாட்டி பெருமையுடன் தான் வளத்தார்
வாழ்ந்தானே பாலகனும் வானமதில் சந்திரன்போல்
அய்ந்து வயது செல்ல அழகுடைய பாலகனுக்கு
ஏழு வயதான போது எழுத்தோத பள்ளியில் வைத்தார்
அகரவரியோடு கொன்றை வேந்தன் அன்னை பிதாவோடு மூதுரையும்
எழுதிப் படித்ததொரு எண் சுவடி லெக்கமது
அத்தனையும் தான் படித்து அழகு பாலன் இருக்கையிலே

(பொன்னுருவி பிறப்பும் வளர்ப்பும்)

இருக்கிற நாளையிலே ஈஸ்பரனார் திருவருளால்
பின்னும் வளத் திருவயத்தில் பெருங் கெர்ப்பம் தரித்திடுமாம்
பின்னு மவள் திருவயத்தில் பெண்ணு ஒன்று பிறந்திடுமாம்
பெற்றெடுத்த பிள்ளைக்குத்தான் பேருமிட வேணுமென்று
புரிசடையன் தந்த மகள் **பொன்னுருவி** யென்று சொல்லி
பொன்னுருவி யென்று சொல்லி பிரியமுடன் தாலாட்டி
தாராட்டி ஓராட்டி தாய் தனப் பாலமுதூட்டி
ஆராடும் பாம்பதுபோல் அருமையுடன் தாலாட்ட
வளந்தாளே பொன்னுருவி வானமதில் சந்திரன்போல்
அளந்து குறித்தது போல் அச்சதிலே செய்ததுபோல்
ஒன்று ரண்டு மூன்று நாலு அஞ்சி ஆறேழு
ஏழு வயதானபோது ஏந்திளையாள் யேது சொல்வாள்
ஒப்பினையும் உடலழகும் ஒரு பாகம் தலை முடியும்
காரிளையும் பொன்னுரு கமல முகத்தழகு கொஞ்ச
அஞ்சு விழி மடவார்க்கு அழகு பணி பூட்டுவாராம்
விற் சதங்கை தண்டை விரலாழி மோதிரமும்
சிற்றாடை கொய்துடுத்து சிறு தங்கைதான் பூட்டி
கொண்டைக் கிசைந்த தொரு கொப்பு குழல் காதாம்
தண்டை சரப்பளியும் தானணிந்தாள் பொன்னுருவி
இளந் தரத்து தோழியுடன் யேந்திளையாள் பொன்னுருவி

(செண்பகராசன் பொன்னுருவியைக் கண்டு மயங்குதல்)

அப்படியே பொன்னுருவி அவள் வளரும் நாளையிலே
பன்னிரண்டு திருவயதில் பாவை நல்லாள் பொன்னுருவி
சுனையாட வேணுமென்று தோகை நல்லாள் தோழியுடன்
தென்காசி ஆறதிலே தீர்த்தமாட வேணுமென்று
தோழியர்கள் முன்னடக்க தோகை அன்னம்போல நடந்தாள்
வந்தவர்கள் எல்லோரும் மகிழ்ந்து தீர்த்தம் ஆடுவாராம்
தீர்த்தமாடி மாத்துடுத்து சேயிளையாள் நிக்கயிலே
மணக்கரை வாழ் படைவீட்டில் மன்னன் செண்பகப்பூ ராச மன்னன்
செண்பகப்பூ ராச மன்னன் சேனைப்பெரும் படை யோடே
தென்காசி நாட்டை சுத்தி சிறந்த வேட்டை யாடுவாராம்
வேட்டையாடிதான் தகைத்து விரைவுடனே ராச மன்னன்
தென்காசி ஆறதிலே சிறந்த தண்ணீர் குடிப்பதற்கு
அன்பாக வந்தல்லவோ அழகு தண்ணீர் குடித்தல்லவோ
தண்ணீரும் தான் குடித்து தகையாறி நிற்கயிலே
வண்ணமுடன் நிற்கயிலே வானுதலாள் பொன்னுருவி
பொன்னுருவி அழகு கண்டு பேதலித்து வாடிவிட்டார்
வாடி விட்டு மனம் கோடி வார்த்தை யேதே சொல்லுவாராம்
ஆருடைய பிள்ளை என்று அரச மன்னன் ஏது சொல்வான்
மந்திரி மா ரெல்லோரும் மறு வார்த்தைச் சொல்லுவாராம்
தென்காசி பதிதனிலே சேயிளையாள் திருத்தேவி
திருத்தேவி வெற்ற மகள் சேயிளையாள் பொன்னுருவி
பொன்னுருவி அம்மை என்று பேர் விவரம் சொன்னபோது
உரைத்த மொழிதனைக் கேட்டு உற்ற செண்பகராச மன்னன்
வேட்டையது தானாடி வீடதிலே வந்தல்லவோ
மணக்கரைவாழ் படைவீடில் வந்து அரசிருந்தாரே.

(செண்பகராசன் பொன்னுருவியைப் பெண்கேட்டல்)

(வேறு)

உண்ணாமல் உறங்காமல் ஒரு சுனை நீராடாமல்
அன்னந் தண்ணீர் குடியாமல் அமுதேற்றம் கூடாமல்
காம நல்ல துயராலே கண்ணுறக்கம் யில்லாமல்
சந்தணப்பூ மெத்தையிலே தலை வலிக்குதென்று சொல்லி
பட்டாலே மூடிக் கொண்டு பழக்க மொழி பேசாமல்
உம்முடய மனவருத்தம் உடனே தான் தீருவதற்கு
தென்னவரே மணவோலை சீக்கிரத்தில் எழுதுமையா
சேவுகன் சொல் கேட்டு செண்பகப்பூ ராச மன்னன்
அன்னேரம் மணவோலை ஆதாரவாய் எழுதுவாராம்
ஓலையது தானெழுதி ஒட்டனுட கையில் கொடுத்து

மட மட திடு திடென்றும வாய்த்த ஒட்டன் வழி நடந்தான்
மணக்கரை வாழ் படைவீடும் வரிசையுடன் கடந்து
தென்காசி பதிதனிலே சிறந்த ஒட்டன் வந்தல்லவோ
ராசனுட கையில் கொடுக்க ராசனுமே ஏது சொல்வான்
ஈசன் எழுதியதில் எள்ளளவும் குறையாது
சடுதியிலே மணமுடிக்க வரவே சொல்லுமென்று சொன்னார்

(செண்பகராசன் மணக்கோலம் பூணுதல்)

அந்த வார்த்தைச் சொன்னபோது அழகு ஒட்டன் ஓடிவாரான்
அங்குள்ள விசயமெல்லாம் அரசனுக்குச் சொல்லுவானாம்
உரைத்த மொழிதான் கேட்டு உற்ற செண்பகப்பூ ராச மன்னன்
அரிசி கறி போசனங்கள் அன்பாக வாங்கியல்லோ
செண்பகப்பூராச மன்னன் சிறந்த மணக் கோலமானார்
மந்திரவாள் கையிலெடுக்க மடக் கொடிமார் குரவைபாட
சேனர் சைனியம் புடைசூழ சிறந்த முடி ராச மன்னவரும்
மதயானை மீதேறி மன்னவனும் வாரபோது
கான வனம்தான் கடந்து கடுக ரதம் வருதல்லோ
தென்காசி பட்டணம் ஆனதிலே சிறந்த ரதம் வாரபோது
அங்கிருந்த மன்னவர்கள் எல்லோரும் ஒன்று போலே
எதிர் மாலை யிடபார்கள் ஏற்ற நல்ல ராசனுக்கு
மன்னவரை கூட்டி வந்து வைத்தார்கள் பந்தலிலே
அது வேளையது சமயம் ஆயிளையைக் கூட்டி வந்தார்
பொன்னுருவி யம்மையாரை போதரவாய் நீராட்டி
நெத்தியிலே பொட்டு மிட்டு நீர் விழிக்கு மை யெழுதி
பெண்ணை யலங்கரித்து பிரியமுடன் கூட்டி வந்தார்.

(வேறு)

(செண்பகராசன் பொன்னுருவியை மணமுடித்தல்)

அரனுடைய திருவருளால் அழகு மாலை பூட்டுவாராம்
மாலையது பூட்ட மட மட வென்று குரவை பாட
அரகரா என்று சொல்லி அணிந்தாரே மாங்கிலியம்
பிராமின் முடி மூன்று போட்டாரே அன்னேரம்
சுண்டு விரல்தான் பிடித்து சுத்துவாராம் மணவறையை
முக்காலும் பிறபீடம் முகனையுடன் சுற்றுவாராம்
கைப்பிடியும் கூடிய பின் காதலியும் மன்னவனும்
செண்பகப்பூ ராச மன்னன் சீதனம் நடத்துவானாம்
பட்டரங்கு மாளிகையும் பணப் பெட்டிம் நவமணியும்
கண்டதிலே பாதியென்று கைதனிலே நீர் வார்த்தான்
சீதனங்கள் வாங்கியல்லோ சிறப்புடன் இருக்கும்போது

மணக்கரைவாழ் படை வீட்டில் வாழ்ந்திருக்கும் காலமதில்
சேவலு பேடையும் போல சாரபகம் நடத்துவாராம்

(பொன்னுருவி குழந்தையின்றி வாடுதல்)

பன்னிரண்டு திரு வயதில் பகுசுபெற மணமுடித்தார்
இருபத்தொரு வயதளவும் இருந்தாளே மலடாக
முப்பத்தி ரண்டு வயதளவும் முழு மலடாய் தானிருந்தாள்
மதலை பலன் யில்லாமல் வாடி மனம் கோடிவிட்டாள்
முன்னெற்றி நரைத்தேனே முழு மலடாய் ஆனேனே
என்று சொல்லி பொன்னுருவி ஏந்திளையாள் அன்னேரம்
அங்கமெல்லாம் வேறுபட்டு அரசனுடன் ஏது சொல்வாள்
மன்னவனே மணவழகா நாமள் வாழ்ந்திருந்து என்ன பலன்
பொன்னிருந்து என்ன பலன் பொருளிருந்து என்ன பயன்
சொத்திருந்து என்ன பலன் சுகமிருந்து என்ன பலன்
பாலிருந்து என்ன பலன் பாலகனும் இல்லாமல்
ஏல யிசம்பயை போல இருபேரும் வாழ்ந்திருந்தோம்
என்ன பாவ மாயமதேனோ எந்தனுக்குக் குழந்தையில்லை
ஆண்டியை அடித்தேனோ அநியாயம் செய்தேனோ
பிச்சை என்று வந்தவரை பின்ன வரச் சொன்னேனோ
கொத்தைக் குறைத்தேனோ குறை மரக்கா ளளந்தேனோ
பட்டறை நெல்லதிலே பல சாவி கலந்தேனோ
நாலு மாந் தோப்பதிலே நடு மரம்போல நின்றேனே
மூன்று மரம் பழுத்துதிர நான் மொட்ட மரமானேனே
பூக்கு மந்த பருவத்திலே பூமாறி நின்றேனே
காய்க்கு மந்த பருவத்திலே காய் மாறி நின்றேனே
என் தரத்து பெண்களெல்லாம் ஏளொட்டு பிள்ளைக்குத் தாயானார்
நான் மலடாய் இருக்கிறேனே நாயகனே என் கணவா
மாலையிடும் வேளையிலே மடத்தவன் பிடித்தானோ
தாலி கெட்டும் வேளையிலே சனியன் வந்து பிடித்தானோ
என்று சொல்லி பொன்னுருவி ஏந்திளையும் தானழுதாள்
மழை பெய்த முத்தமதில் மண்ணளய பாலன் இல்லை
மண்ணளைந்த கையால் மகன் மடியில் வரக் காணேனே
கறிக் கரைக்கும் தேங்காயில் கையேந்த பாலனில்லை
திண்ணை மனை தனிலிருந்து சிறு கலத்தில் சோறுமிட்டு
உண்ணு மகனே என்று உடன் மடியில் தூக்கி வைத்து
கையினால் வாரிதான்கொடுத்து கவலை தீர மாட்டேனோ
திண்ணையிலே மணல் பரத்தி மகன் சிறுதடத்தைப் பாரேனோ
மடிமே லெடுத்து வைத்து மகன் தனக்கு பாலூட்டி மடியில் வைத்து
மகனே என்று சொல்லி வாய்மொழிகேட்க மாட்டேனோ
தெக்குத் தெருவதிலே செல்ல மகன் கலியாணம்

ஒக்கரையில் பிள்ளை பாத்து உடனே நின்று பாரேனோ
வெத்துடலாய் நின்றேனே விமலனிட்ட கட்டளையோ
வேறு கொச்சை வெளிமடவார் மெல்லி நல்லார் எனை பாத்து
பாலு கொச்சையிர்த்த தென்று பாராரோ என்னையுந்தான்
வேத்து குழந்தையுடன் மகன் வெளியில் வந்து விளையாடானோ
உன் பிள்ளை அடித்ததென்று ஒருத்தி வரக் காணேனே
மாத்தால் அடிப்பேனென்று மாறு கொண்டு போகேனோ
இந்த உலகாண்டு நாமள் யிடுகாடு போம்போது
நீர்க்குடம் தலையில் வைத்து மகன் நெட்டோலம் விட்டழுது
அங்கம் கடைசிவரையும் அழுதுவர பாலன் யில்லை
முந்தி தணல் மூட்ட மகன் முடியிறக்க வேண்டாமோ
மலடி மலடி என்று மானிலத்தோர் சொல்லும்போது
மலடி என்று சொல்லும் போது மனம் பொறுக்க கூடுதில்லை
இருளி என்று சொல்லும்போது யீரல் துடிக்குதையா
மாண்டிடுவேன் யிருப்பதில்லை மலடி என்று பேர் படைத்தே
பசியியால் வருந்துகின்ற பண்டாரம் தனை போல்
நான் யிருந்ததிலே பயனுமில்லை என்றழுதாள் பொன்னுருவி
வருந்தி யழுதல்லவோ மன்னருடன் ஏது சொல்வாள்
நற்றிரி சேர் என் கணவா நாயகனே என்ன செய்திடுவேன்
மலடி என்று சொல்ல பொறுப்பேனோ மன்னவனே நான் தானும்

(பிள்ளை வேண்டி தவம் செய்ய மன்னனிடம் விடைகேட்டல்)

(வேறு)

குன்றாத செல்வம் குழந்தை நமக்குப் பிறந்தால்
இந்த இடத்தில் நமக்கு வேறு குறை நமக்குண்டோ
தோண்டியை போட்டுத் துலாவை நிறுத்தி விட்டேனோ
சொல்லத் துலையாது சந்ததி யில்லாத பாவம்
இருந்தழுது பொன்னுருவி ஏது சொல்வாள் அன்னேரம்
மன்னனுட முகம் நோக்கி மாது நல்லாள் ஏது சொல்வாள்
போறேன் நான் ஊருவழி பிள்ளை தவம் செய்வதற்கு
வெற்றியுள்ள கோவில் கண்டு வாங்கி வாரேன் பாலன் கெதி

(செண்பகராசன் பொன்னுருவியைச் சமாதானம் செய்தல்)

என்ன சொன்னாய் பெண்கொடியே எனை மதி வார்த்தையினால்
இங்கு யில்லாத தங்கு உண்டோ யீசன் எழுதினது பிசகிடுமோ
செவ்வையுள்ள வெண்கொடியே தார்குழலே நீ கேளு
இப்பெரிய பட்டணத்தில் ஒரு ஏற்ற சிறு பாலகனை
தெப்பெடுத்து நான் தாரேன் சேயிளையே மலங்காதே

(பொன்னுருவி பிள்ளைவேண்டி தவம் செய்ய புறப்படுதல்)

என்ன சொன்னீர் மன்னவரே ஏலாத காரியத்தை
தெப்வெடுத்த பிள்ளையது தென்காசி ஆளாது
வழக் கெடுத்த பிள்ளையது வையகம் ஆளாது
அம்மை அப்பா என்றிடுமோ ஆசையெல்லாம் தீர்ந்திடுமோ
காதவழி போகும்போது நம்ம காலை கட்டிபிடித்திடுமோ
தூரவழி போகும் போது துடையை எட்டிப் பிடித்திடுமோ
கோடிப் பணம் கொடுத்தாலும் கொண்ட பிள்ளை என்பாரே.

(வேறு)

ஏழு நல்ல தோழியரை ஏந்திளையாள் வரவழைத்து
மூத்த தோழி தனை யழைத்து முன்னூறு வொன் கொடுத்தார்
இளைய தோழி தனை யழைத்து இருநூறு வொன் கொடுத்தாள்
வழியில் சிலவு செய்ய வாரி பணம் கட்டுவாளாம்
கடடுடனே ஆபரணம் காதில் பணி பூட்டுவாளாம்
பெட்டகத்துக் குள்ளிருந்த பட்டுச்சேலை கட்டுவாளாம்

(மதுரை சொக்கநாதரிடம் பிள்ளைவரம் கேட்டல்)

மன்னவரை யடிதொழுது வழிநடந்தாள் பொன்னுருவி
தென்காசி பதி கடந்து சீக்கிரமாய் வழிநடந்தாள்
அன்பான தோழியுடன் அன்ன நடை பொன்னுருவி
சித்திரம் போல் வழிநடந்து சிறந்த மதுரைபதியில் வந்தார்.

(வேறு)

வந்தாள் மதுரைபதியில் வானுதல் பொன்னுருவி
சந்தோசமாக வல்லோ தார்குழலாள் ஏது சொல்வாள்
செகந்நாதனே தொல்லை வினைதீர்ப்பாய்
வையகம் தன்னில் வாழ்வது சீருடன் தந்தாய்
ஆண்டு அரசாள பாலன் எனக்கு மில்லை
பாலன் கெதி தந்ததுண்டால் படித்தளம் கட்டி வைப்பேன்
கோபுரமும் கெட்டி வைப்பேன் கொடிமரமும் நாட்டி வைப்பேன்
அன்ன விளக்கு ஒன்று அடியாளும் வைத்திடுவேன்
சித்திரமும் எழுதி வைப்பேன் சிறந்த பூசை நடத்திடுவேன்
தேரதுவும் வொன்னாலே சிறந்த குதிரையும் வொன்னாலே
தேரை நடத்துகின்ற சாரதியும் வொன்னாலே
நேராத நேர்ச்சை எல்லாம் நேர்ந்தாளே பொன்னுருவி

(ஆலங்குளம் பத்திரகாளி அம்மனிடம் பிள்ளைவரம் கேட்டல்)

அங்கும் பலன் காணாமல் அழுது கொண்டு பொன்னுருவி
தோழியரை அருகழைத்து சொல்லுவாளாம் ஒரு வார்த்தை
எனி எந்த தலம் போயிடுவோம் என்னுடைய தோழியரே
தோழியர்கள் கை தாங்க தோகை யன்னம் போலநடந்தாள்
சாலை வழி நடந்து சடுதியிலே வாரபோது
ஆயிளையாள் பொன்னுருவி ஆலங்குளம் கண்டாளே

(வேறு)

ஆலங்குளம் தன்னில் வந்து அம்மை பொன்னுருவி
ஆயிளையாள் வட பத்திரகாளியைத் தொழுதாள்
காளி கலையேறி முகிலாழி வர்ணன் தங்கையே
காரிளையே வடபத்திர காளியே நீ கேளு
தென்காசி நாடதுதான் செப்பமுடன் தான் ஆள
சிறுவனொன்று தரவேணும் சேயிளையே தாயே
கைக்குழந்தை எந்தனக்கு காரிகையே தருவாய்
கைக்குழந்தைத் தந்ததுண்டால் காரிழையே தாயே
உந்தனுக்கு கொடிமரமும் உண்மையுடன் தருவேன்
கை நிறைந்த பொன்னை வாரி காணிக்கையு மிட்டாளே
சந்ததியை தந்தனுப்பு காளியரே யம்மா யென்றாள்

(நாட்டாத்தி அம்மனை வழிபடல்)

அதனாலே ஒரு பலனும் ஆயிளையும் காணாமல்
அன்னநடை பொன்னுருவி அசந்து முகம் வாடிவிட்டாள்
ஆலங்குளம் தன்னை விட்டு ஆயிளையாள் பொன்னுருவி
ஏழு தோழிமார்களோடு ஏந்திளையாள் வழி நடந்தாள்
தோழியர்கள் கை தாங்க தோகை யன்னம் போல் நடந்தாள்
அழுதழுது பொன்னுருவி ஆயிளையும் வழி நடந்தாள்
காலிலிட்ட பாடகங்கள் கலகலவென ஓலமிட்டன
நடந்து வருகையிலே நாட்டாத்தியம்மன் கோயில் கண்டாள்
நட்டாத்தியம்மனுட நல்ல பதி வந்தாளே.

(வேறு)

திட்டமுடன் வந்தல்லவோ சேயிளையாள் பொன்னுருவி
தெப்பக் குளத்திலே சேயிளையும் தானிறங்கி
முங்கி குளித்தல்லவோ முத்து போல பட்டுடுத்து
மூன்று நல்ல நாளாக ஒரு சத்தியாய் தானிருந்தாள்
நட்டாத்தியம்மாளே நானடியாள் சொல்லுகிறேன்

தென்காசி நாடாள செல்வ மகன் தாருமம்மா
உற்ற கலை வாகனமும் உண்மையுடன் நான் தருவேன்
சிந்தையுடன் உந்தனுக்கு தேரதுவும் செய்து வைப்பேன்
பொன்னாலே வாகனமும் பூச்சக்கரக் குடையதுவும்
பச்சைக் கிளி பொன்னாலே பாவினையாய் செய்து வைப்பேன்
அன்ன ஊஞ்சலாடு ஆயிளையான பொன்னுருவி
கைக்குழந்தைத் தாருமென்று தார் குழலாள் சொன்னபோது
தாருமென்று பொன்னுருவி தவ மிருந்தாள் கோயிலிலே
கை நிறைந்த பொன்னை வாரி காணிக்கையுமிட்டாளே
ஆணிப்பொன் முத்துவடம் அவள் நேர்ந்தாள் அப்போது
இன்பமுள்ள பாலனொன்று இவள் தனக்குக் கிடையாமல்
பழுத்த பழம் போலே பாவை நலலாள் பொன்னுருவி
வாரும் எந்தன் தோழியரே வார்த்தை ஒன்று சொல்லக் கேளும்
இங்கு வந்தோம் தோழியரே ஏது பலன் கண்டதில்லை
மறுபதியில் போவோமென்று மங்கையர்கள் வழி நடந்தார்கள்

(நாச்சியார் அம்மனை வணங்கி பிள்ளைவரம் கேட்டல்)

நட்டாத்தி யம்மனுட நல்ல பதியும் விட்டு
எந்த பதி போவோம் ஏந்திளையே தோழியரே
நடந்து வருகையிலே நாச்சியார் கோயில் கண்டாள்
வெள்ளை பிள்ளையார் தனக்கு விடலை ஒன்று போடுவாளாம்
இந்த தலமதிலும் ஏதும் பலன் காணவில்லை
பின்னல் சடையருக்கு புலி குட்டி நேருவாளாம்
ஆலமுண்டோன் திருவருளால் அங்கும் பலன் காணாமல்
மாலோன் திருவருளால் மதலை பலன் காணாமல்
கைக் குழந்தை யில்லாமல் கண்ணிரும் மார்பொழுக
ஒரு பலனும் காணாமல் ஓட ஓட வழி நடந்தாள்
நேரிளையாள் பொன்னுருவி நெல்லையப்பர் கோயில் கண்டாளே.

(நெல்லையப்பரை வணங்கி பிள்ளைவரம் கேட்டல்)

(வேறு)

நெல்லை பதி யம்மனுட நீண்ட பதி தன்னில் வந்து
வரலாச்சியம்மா நீ வரமருளு பாலகனுக்கு
பொய்கையிலே தானிறங்கி பொற்கொடியாள் ஸ்னானம் செய்து
சுத்திவந்து கும்பிடுவாள் தோகை நலல பொன்னுருவி
நனைந்த முந்தி துவராமல் நாப்பது நாள் தவமிருந்தாள்
உடுத்த முந்தி உலையாமல் ஒன்பது நாளிருந்தாள்
சந்தோசமாக வல்லே தார்குழலாள் ஏது சொல்வாள்
தென்காசி நாடாள சேயிளையே தாயே

சிறுவனொன்று தந்ததுண்டால் சில காலம் உனைத் தொழுவேன்
பொன்னிலே வாகனமும் பூவாலே பந்தலதும்
கோபுரமும் பொன்னாலே கொடி மரமும் பொன்னாலே
என் மனம் போலிடுவேனே மண்டல மாள மகன் பிறந்தால்
உடையவனார் திருவருளால் ஒரு கோட்டை பணம் தருவேன்
காணிக்கையு மிட்டாளே கைக்குழந்தைத் தாருமென்று
அதினாலும் ஒரு பலனு மாயிளையும் காணாமல்

(பொன்னுருவி புலம்பி வழி நடத்தல்)

வண்மையுடன் பொன்னுருவி நெல்லைபதி கடந்து
அந்த தலங்கடந்து அப்பால் வழிநடந்தாள்
கடந்து வரும்போது நன்னுதலால் ஏது சொல்வாள்
நெல் காய்க்கும் மரமறியேன் நீண்ட கரை கண்டறியேன்
பொன் காய்க்கும் மரமறியேன் வாழுதடையும் திசையறியேன்
நடந்த கால் கடுக்க நடந்தேனே தோழியரே
கும்பிட்ட கை குறுகினேனே குழந்தையது யில்லாமல்
சலிப்படைந்தே தேசமெல்லாம் கால்கடுக்க நடந்தேனே
வீடதிலே யிருந்திடாமல் பரிதாவில் வந்தேனே
புல்படந்த தேசமெல்லாம் புழுதிபட நடந்தேனே
மன்னவர் சொல்கேளாமல் மாபாவி வந்தேனே
பாடகங்கள் யிட்டிருந்த படங்களெல்லாம் நோகுதடி
தண்டயது போட்டிருந்த கெண்டைக்கால் நோகுதடி
மாறுபடா மேனியெல்லாம் மாறாடி முறிந்தேனே
இசங்கம் பழம் போலே யிருகாலும் கொப்பளிக்க
நான் நடக்கும் வழிதனிலே நல்ல பாம்பு கடியாதோ
பாங் கிணறு காணேனோ பாய்ந்திறந்து சாகுதற்கு
இப்படித்தான் வருமானால் இருப்பேனோ வையகத்தில்
ஒருபலனும் காணாமல் உலகத்திலே யிருப்பதில்லை
பொற்றெடுப்பார் தங்கள் முன்னே பெருமலடானேனே
வாடாப்பூ போல வாடி வானுதலாள் பொன்னுருவி
அம்புபட்டு அங்கிருந்து அழுந்துகின்ற மான்போலே
இனி எந்த பதிதனிலே இனிபோவோம் தோழியரே

(கருக்குவால் ஐயனை வழிபடல்)

மானாட்டு தேரியிலே வடக் கிழக்கு மூலையிலே
கால் நாட்டி குடியிருக்கும் கருக்குவாலய்யனுடன்
கருக்கு வாலய்யனுட காலதிலே வந்து நின்று அடி தொழுதாளே.

(வேறு)

கோயிலிலே வந்து நின்று கோதையந்த பொன்னுருவி
தெப்பக் குளமிறங்கி தீர்த்தமாடி மாத்துடுத்து

மாத்துடுத்து நடையதிலே வயனமது தானிருந்தாள்
வயனமது தானிருந்து வரலாறு தானிருந்தாள்
தென்காசி நாடாள சிறுவனொன்று தாருமையா
ஏறிவரும் வாகனமும் யிசம்பமும் நான் தருவேன்
மாடன் தடிக்காரனுக்கு வல்லயமும் பொன்னாலே
பொன்னாலே புலி குட்டியும் போதரவாய் நான் தருவேன்
நாய் உருவும் பொன்னாலே நானடியாள் செய்து வைப்பேன்
எட்டுந் தோறுமல்லோ எண்ணை காப்பு சாத்திவைப்பேன்
ஆண்டுக்கொரு திருவிழாவும் அடியாளும் செய்திடுவேன்
தேரதுவும் பொன்னால் சிறந்த பரி பொன்னாலே
கோபுரமும் பொன்னாலே கொடி மரமும் செய்திடுவேன்
இத்தனையும் நான் தருவேன் யிளங் குழந்தைத் தாருமையா
கை நிறைய பொன்வாரி காணிக்கை வைத்தாளாம்
தாருமென்று பொன்னுருவி தவமிருந்தாள் கோயிலிலே
உடுத்த முந்தி துவறாமல் ஒன்பது நாள் தவமிருந்தாள்
நனைந்த முந்தி துவறாமல் நாற்பது நாள் தவமிருந்தாள்
கோயிலிலே தவமிருந்தாள் கொடியிடையாள் பொன்னுருவி
அதனாலே ஒருபலனு மாயிளையாள் கண்டாளில்லை
கருக்குவாலய்யனுட காலதிலே வந்து நின்று
எந்தப்பதிதனிலே இனிபோவோம் தோழியரே

(திருச்செந்தூர் முருகனை வழிபட்டு பிள்ளை வரம் கேட்டல்)

வனங்க ளென்ற வனங்கடந்து வாராளே பொன்னுருவி
அலைவாய்க் கரையோரம் அமந்திருப்பார் வடிவேலர்
அவருடைய கோயிலிலே ஆதரவாய் போனதுண்டால்
பிள்ளையில்லா பேர்களுக்குப் பிள்ளை பல்ன் தந்திடுவார்
கண்ணில்லா பேர்களுக்குக் கண் ஒளி தந்திடுவார்
நொண்டி முடமானவரை நொடிக்குள்ளே தீர்த்திடுவார்
அந்த நல்ல பதிதனிலே ஆயிளையே போய் வருவோம்
போவோம் என்று தோழி சொல்ல பொன்னுருவி நாயசியும்
அய்யனுடை கோயில் விட்டு ஆயிளையாள் பொன்னுருவி
தருவை தடமுமிட்டு தானே உடங்காடுமிட்டு
கச்சுரத்துதான் கடந்து காரிகையாள்தான் கடந்து
கச்சுரத்து தான் கடந்து கண்டாரே கோபுரத்தை
கோபுரம் தெரியுதம்மா கொடியிடையே பொன்னுருவி
என்று சொன்ன தோழியர்கள் யேந்திளையை மனம் தேற்றி
கடத்தியே தோழிப் வெண்கள் கந்தனுட கோயில் கண்டார்
வேலுகந்த நாதருக்கும் வேறு மாலை நேருவாளாம்
சேயிளையாள் பொன்னுருவி செந்தூர் பதியில் வந்தாளே.

(வேறு)

செந்தூர்பதி தன்னில் வந்த தாயார் சிறப்பெல்லாங் கண்டபோது
தெய்வத்தலம் என்று பொன்னுருவியம்மன் சிந்தை களி கூர்ந்தாள்
நந்தி மடமு மலைவாக்கரையும் பொன்னான கோபுரமும்
நால் தெரு வீதியும் பொன்னுருவி யம்மை நாயகி காச்சி கண்டாள்
கண்டு புதுமை எல்லாம் அறிந்து கண் கண்ட தெய்வமென்றாள்
இந்தத் தலந்தன்னில் தவ மிருந்தோ மானால் ஈன்றிடலாம்
குழந்தைக்காய் கன்னி கடலில் தீர்ததமாடி கரையேறி மாத்துடுத்து
சுத்தி சேவித்து கும்பிட்டு வாராளே சன்னதி முன்னாக
உண்ணாமல் ஒரு சந்தியிருந்து ஓதுவாள் வேலவரை
ஆதரவான குமரகுருபர அப்பா வடிவேலா
பாதகி நானொரு பாலனுக்காகக் கனபாடுபட்டேன்
ஆதிசிவன் மகனே அருளுமய்யா மழலையொன்று
மயில் வாகனமும் மாணிக்கத்தால் செய்து வைப்பேன்
இடது கையில் யிருக்கிற எறிவேலும் பொன்னாலே
பொன்னாலே செய்து வைப்பேன் பிள்ளைத் தரவேணுமய்யா
கோபுரமும் பொன்னாலே கொடிமரமும் தங்கத்தாலே
திருக்கோயில் கட்டி வைப்பேன் தேரதுவும் முடித்து வைப்பேன்
மாதத்துக் கொரு தடவை மாதாந்தம் நடத்திடுவேன்
ஆண்டுக் கொரு திருவிழா அடியாளும் நடத்திவைப்பேன்
கை நிறைந்த பொன்னை யள்ளி காணிக்கையுமிட்டாளே

(வெள்ளைப் பிள்ளையாரை வழிபடல்)

இங்கு வந்த தோழியரே யேதும் பலன் கண்டதில்லை
வன் பலியாய் இக்கடலில் மாண்டிறந்து சாகப்போறேன்
தவத்திலுத்தவளும் தான் மெல்ல ஓடிவாராள்
ஆயிளையாள் தோழியுடன் அழுது வழிநடந்தாள்
ஆனை கட்டு சாவடியும் ஆயிரங்கால் மண்டபமும்
நாடார் மடங்கடந்து நல் அய்யருட தெருவும்விட்டு
தேரடி வாள் மாடனையும் சேயிளையாள் அடிதொழுதாள்
திடுதிடென்று வழிநடந்து தெப்பக்குளம் கரையில் வந்தாள்
தெப்பக்குளம் தனிலிறங்கி தீர்த்தமாடி மாத்துடுத்து
அரசடிவாழ் நாதருக்கு அடை பழமும் நேருவாளாம்
வெள்ளைப் பிள்ளையார் தனக்கு விடலை ஒன்று போடுவாளாம்

(குரங்கண்ணியம்மனை வழிபடல்)

அதிலே ஒரு பலனும் ஆயிளையும் கண்டாளில்லை
தெப்பக் குளமுமிட்டு திரும்பினாளே தெற்கு முகம்
தெக்கு முகமாக தேன் மொழியாள் வாரபோது

மணப்பாடுதான் கடந்து வாராளே பொன்னுருவி
கோதையர்கள் வழிநடந்து குட்டத்தூர் தன்னில் வந்தார்
குட்டத்தூர் தன்னில் வந்து குரங்கண்ணியம்மனை யடிதொழுதார்
குரங்கண்ணியை அடிதொழுது கூடுதாழை பாதையாக
நன்னுதலாள் பொன்னுருவி நாடார் உவரி வந்தாள்
உவரி தலமானதிலே உற்ற பொன்னுருவி வந்து கண்டாளே

(சுயம்புலிங்க சுவாமியை வழிபட்டு பிள்ளை வரம் கேட்டல்)

உவரி தலமதிலே உற்ற சுயம்பு லிங்க சுவாமி கோயிலிலே
கடலதிலே தானிறங்கி காரிகையாள் தீர்த்தமாடி
தீர்த்தமாடி மாத்துடுத்து சேயிளையாள் பொன்னுருவி
வாசலிலே வந்து நன்னுதலாள் ஏதுசொல்வாள்
தென்காசி நாடாள சிறுகுழந்தைத் தாருமையா
பாலனொன்று தந்ததுண்டால் பச்சைக் குடை பொன்னாலே
தேரதுவும் செய்து வைப்பேன் திருவிழாவும் நடத்தி வைப்பேன்
அர்ச்சனை நடத்தி வைப்பேன் அழகு பாலன் தாருமையா
என்று சொல்லி பொன்னுருவி ஏந்திளையாள் அடி தொழுதாள்
அங்கும் பலன் கண்டாளில்லை அன்ன நடை பொன்னுருவி

(குன்னிமலை ஐயனை வழிபடல்)

என்னுடைய தோழியரே எந்தபதி போயிருவோம்
என்னருமை தோழியரே ஏந்திழையே சொல்லுகிறேன்
இருந்ததிலே பலனுமில்லை யிறந்திடுவேன் சத்தியமாதான்
என்ன வார்த்தைப் பேசுகிறாய் ஏழை மதி வார்த்தையாலே
இன்னும் ஒரு பதிதான் யிருக்குதம்மா பொன்னுருவி
இருக்கென்று பொன்னுருவி ஏந்திளையைக் கூட்டி வாராள்
அழுத கண்ணும் சிந்தையுமாய் ஆயிளையும் வழிநடந்தாள்
ஊமை கண்ட கனவது போல் உள்ளுடைந்து தள்ளாடி
குன்னி மலை அய்யனே குழந்தை யது தாராய்
குஞ்சரம் பொருளெல்லாம் தருகிறேன் அய்யா
ஆண்குழந்தை தந்ததுண்டால் அராவுரு பொன்னாலே
பொன்னாலே புலிக்குட்டியும் போதரவாய் செய்து வைப்பேன்
நாய் உருவும் பொன்னாலே நானடியாள் செய்து வைப்பேன்
கைநிறைந்த பொன்னைவாரி அம்மை காணிக்கையிட்டாளே
பாலனுக்காக
பரம சிவனுடைய கிருபையினாலே பாலன் பலனது காணாமலேதான்
உடையவன் விதியோ சிவனார் செயலோ வருந்தி மிகவே யழுது
பொன்னுருவி அழுகிறதைப் பார்த்து பூமரமும் பாத்தழுமாம்
மங்கை யழுகிறதைப் பார்த்து மாமரமும் பார்த்தழுமாம்
அமைத்தபடி நடக்குமல்லால் நினைத்தபடி நடக்காது

அன்று எழுதினவன் அழித்தெழுத போறதில்லை
என்று சொல்லி பொன்னுருவி ஏழு தோழிமார்களோடே
குன்னிமலை அய்யனுட கோயிலுமிட்டு கன்மகுறிச்சியில் வந்தாரே.

(பொன்னுருவி புலம்புதலும் தோழியர் ஆறுதல் கூறுதலும்)

(வேறு)

கன்ம குறிச்சி வந்து காரிளையாள் ஏது சொல்வாள்
என்ன செய்வேன் தோழியரே எந்தன் தலைவிதி வசமே
கெட்டி வந்த பொன்னை எல்லாம் கொட்டிவிட்டேன் கடலதிலே
கண்ட கண்ட கோயிலுக்குக் காணிக்கையு மிட்டேனே
பொன்னை எல்லாம் தோற்றேனே புத்திரனைக் கண்டதில்லை
வாய்த்த நல்ல தோழியரே வயது முப்பது ஆச்சி
முன்னெற்றி நரைக்கும்வரை முழுமலடாய் ஆனேனே
காணிக்கைக்கு யாருகிட்ட கடன் கேள்கப் போறேன்
ஆத்தங்கரை சாத்துக்குள்ளே வீற்றிருக்கப் போறேன்
என்ன சொன்னாய் தாயாரே எனை மதி வார்த்தையாலே
என்று சொல்லி யிளைய தோழி ஏது மொழி சொல்லுவாளாம்
வாள் மயிலே கொங்கை ரெண்டு தலை சரியவில்லை
மடக்கொடியே பதினாறு வயது வரவில்லை
விரித்த முடியானதிலே முளைத்த நரையதுதான்
வெள்ளை நரையானதுவும் வெளியே வரவில்லை
மலங்காதே பொன்னுருவி பாலன் கெதி உண்டு
மடக்கொடியே எங்கள் சொல்லைக் கேளுமம்மா தாயே
திருவனந்தாபுரம் மட்டும் சென்று தவம் செய்வோம்
கோதை நல்லாள் சாலை வழியாகவே நடந்தாள்
கன்மகுறிச்சியில் கண்ணனையும் அடிதொழுது
அங்கும் பலன் காணாமல் அன்ன நடை பொனனுருவி
கான வனங் கடந்து காரிளையாள் வாரபோது
சிகப்பாறு புறங் கடந்து தேன் மொழியாள் பொன்னுருவி
தோழியர்கள் கைதாங்க தோகை யன்னம் போல் நடந்தாள்
சாலை வழிகடந்து சாத்தாங்குளம் கண்ணில் கண்டாள்

(சாத்தான்குளம் ஈஸ்பரனை வழிபடல்)

(வேறு)

சாத்தாங்குளம் யீஸ்பரனுக்குச் சரப்பளியும் நேருவாளாம்
வடக்கு வாசல் செல்விக்கும் மணிக்கும்பம் நேருவாளாம்
ஆணிப் பொன் முத்துவடம் அவள் நேர்ந்தாள் பொன்னுருவி
சாத்தான் குளம் கடந்து தானடந்தாள் பொன்னுருவி
ஊழி விதிப்படியாலே ஒரு பலனும் காணாமல் மத்தியான

வேளையிலே என் தலையில் மதிகெட்டவன் எழுதினானோ
விஸ்தார தோழியுடன் விம்மி அழுதாளே
ஒய்யார நடையழகி உயிலடி வாழ் மரமும் விட்டு
சாதங் கறி அருந்தாமல் தார் குழலாள் வழி நடந்தாள்
வேகமாய் பொன்னுருவி நாராயணபுரத்தில் வந்தாளே.

(விசயநாராயணரை வழிபடல்)

(வேறு)

விசய நாராயணர்க்கு வெள்ளி வாகனமும் நேருவாளாம்
உம்மை நம்பி நானடியாள் ஓடிவந்தேன் இத்தூரம்
ஆதரவாய் தென்காசி யன்பாக அரசாளா
பாலன் கெதி தந்ததுண்டால் பச்சைக் குடை பொன்னாலே
பத்து லச்சம் பொன்தருவேன் பாலன் கெதி தாருமையா
முத்து மணித் தேரதுவும் முடித்து வைப்பேன் பொன்னாலே
அள்ளி காணிக்கை யிட்டாள் அன்னநடை பொன்னுருவி
கோபுரம் போல் விளக்கேற்றி வைத்தாளே பொன்னுருவி
உண்ண நலல போசனமும்உடன் கொடுப்பேன் வேதியர்க்கு
உண்டு மென்றும் யில்லை யென்றும் உத்தரவு தாருமையா
அங்கும் பலன் காணவில்லை அன்னநடை பொன்னுருவி
சித்திரம்போல பொன்னுருவி சித்தூர் பதியில் வந்தாளே.

(தென்கரைவாழ் ஐயனை வழிபடல்)

(வேறு)

சித்தூரு ஆனதிலே சென்று அம்மை தீர்த்தமாடி
தீர்த்தமாடி மாத்துடுத்து சேயிளையாள் பொன்னுருவி
கீழ்வாசல் ஆனதிலே கிருபையுடன் வந்து நின்று
சித்தூரு நல்ல தலம் என்று நான் ஓடி வந்தேன்
தென்காசி நாடாள சிறுவனொன்று தந்ததுண்டால்
குதிரை வாகனமும் பொன்னாலே கொண்டுவைப்பேன்
சோணமுகம் பொன்னாலே சிறப்புடனே செய்து வைப்பேன்
நாய் உருவும் பொன்னாலே பாசங்களும் பொன்னாலே
தீவெட்டி பொன்னாலே பாசங்களும் பொன்னாலே
தீ வெட்டி பொன்னாலே திருக்கோயில் பொன்னாலே
காணிக்கையு மிட்டாளே காரிகையாள் பொன்னுருவி
போற்றியே அஞ்சாறு நாளாய் தவத்தால் புத்திரர்க்காய்த் தவமிருந்தாளே
தென்கரை வாழய்யன்பேரில் நினைவாய் தேன்மொழியாளும் தவமிருந்தாளே
அங்கும் பலன் காணாமல் அன்ன நடை பொன்னுருவி
கண்ண நல்லூர் கிராமமிட்டு கன்னியரும் வழி நடந்தார்

அன்புடனே வழி நடந்து ஆனைகுளம் தான் கடந்தாள்
வட்டமிட்டு மயிலாடும் வள்ளியூர் பதியில் வந்தாளே.

(மூன்றுயுகங்கண்ட அம்மனை வழிபடல்)

(வேறு)

வந்தாளே பொன்னுருவி வண்மையுள்ள தோழியுடன்
மூன்று முகங் கொண்டாளுட கோயிலிலே வந்து நின்று
வந்து நின்று பொன்னுருவி வார்த்தை ஏதோ சொல்லுவாளாம்
மூன்று முகங் கொண்டவளே முக்கண்ணியே என்தாயே
தென்காசி நாடாள சிறுவனொன்று தந்ததுண்டால்
தேரதுவும் பொன்னாலே திருக்கொடியும் பொன்னாலே
தாழ்மையுடன் பொன்னுருவி தவமிருந்தாள் கோயிலிலே
அங்கும் பலன் காணாமல் ஆயிளையாள் பொன்னுருவி

(முருகப் பெருமானை வழிபட்டு பிள்ளை வரம் கேட்டல்)

வண்மையுடன் வழிநடந்து வடிவேலர் சன்னதியில்
சன்னதியில் வந்தபோது தார் குழலாள் ஏது சொல்வாள்
தெப்பகுளமானதிலே தீர்த்தமாடி மாத்துடுத்து
மாத்துடுத்து பொன்னுருவி வல்வினையைத் தீருமென்றாள்
வல்வினையைத் தீர்ப்பாய் என்று உன் சன்னதியில் வந்தேன்
தென்காசி நாடாள சிறுவனொன்று தந்ததுண்டால்
சங்கை வடிவேலனுக்கு வடிவேலும் பொன்னாலே
பொன்னாலே கொடிமரமும் பூசை பண்ணும் மண்டபமும்
பொன்னாலே புலிக்குட்டியும் பேதரவாய் நான் தருவேன்
சிவலியும் நடத்திவைப்பேன் சிறு குழந்தை தாருமையா
கை நிறைய பொன்னை வாரிக் காணிக்கையுமிட்டாளே
அங்கும் பலன் காணாமல் ஆயிளையும் வழிநடந்தாள்
வண்ணமுள்ள தோழியுடன் வள்ளியூர் பதியுமிட்டு
சட்டமுடன் பொன்னுருவி சாலை வழி நடந்தாள்
பிலாகொட்டை பாதை விட்டு பேடை மயில் வழி நடந்தாள்
பாம்பங்குளம் தான் கடந்து பணகுடி பாதையாக
பணகுடிவாழ் நாதருக்கு பட்டாடை நேருவாளாம்
தாட்டிக மாலை உந்தனுக்குத் தருவேன் நான் தங்கக்குடை
தருவேனென்று பொன்னுருவி சந்ததியைத் தாருமென்றாள்

(குமரி பகவதியம்மையை வழிபட்டு குழந்தைவரம் கேட்டல்)

ஒரு பலனும் காணாமல் உண்மையுடன் வழிநடந்தாள்
பணகுடி ஊருமிட்டு தொட்டிச்சிறுகுளங் கடந்து
அய்யாமடமும் விட்டு ஆயிளையாள் பொன்னுருவி

செய்ய நலல தோழியுடன் திடுதிடென்று வாரபோது
காவல்கிணறும் விட்டு கடந்தாளே பொன்னுருவி
மண்பொத்தைக் காடும் விட்டு வாராளே பொன்னுருவி
பாடி வழிநடந்து பழவூரதுவும் விட்டு
காரிளையாள் பொன்னுருவி கருங்குளம்தான் கடந்து
சடசடென்று வழி நடந்து சாலைபுதூர்தான் கடந்து
ஆயிளையாள் பொன்னுருவி அஞ்சிகிராமம் பாதையாக
பாக்குளம் ஊருமிட்டு பழய ஒத்தபனை கோட்டை விட்டு
காரிளையாள் பொன்னுருவி கல்விளை மடமுவிட்டு
சகனாக்குளங்கடந்து தானே குண்டல் வழியாக
கன்னியாகுமரியதைக் கண்டாளே பொன்னுருவி
ஏழு தோழிமாரோடே ஏந்திழையாள் பொன்னுருவி
கடலதிலே தீர்த்தமாடி கன்னி நலலாள் தோழியுடன்
தென்காசி நாடாள சிறு குழந்தைத் தாருமம்மா
கும்பிடாத கோயிலில்லை கொடி யிடையே பகவதியே
உன்னுடைய கிருபையாலே ஒரு குழந்தைத் தாருமம்மா
சிறுகுழந்தை தந்ததுண்டால் தேரதுவும் பொன்னாலே
ஆனைகொட்டும் சாவடியும் ஆயிளையே செய்து வைப்பேன்
கோபுரமும் பொன்னாலே கொடிமரமும் தங்கத்தாலே
ஒரு குழந்தைத் தந்ததுண்டால் உன்னுடைய பேரிடுவேன்
கை நிறைந்த பொன்னை வாரி காணிக்கையுமிட்டாளே
அடி வணங்கி பொன்னுருவி ஆயிளையாள் யிருக்கையிலே

(சுசீந்திரம் தெய்வார்களை வழிபடல்)

இங்கு வந்தும் தோழியரே ஏதும் பலன் கண்டதில்லை
ஏழு தோழிமாரோடு எழுந்திருந்து வழிநடந்தாள்
அன்னம் போலே பொன்னுருவி அகஸ்தீஸ்புரங்கடந்து
சுசீயந்திர மானதிலே சேயிளையாள் வந்தல்லவோ
சிவநாதருக்குத் திருமால் பூசை சாத்துவாளாம்
வண்ணமுள்ள திருமதிலும் வாகனமும் பொன்னாலே
தாருமையா ஒரு குழந்தைத் தானுமாலயனாரே
வேணுமென்ற ஆபரணம் விதவிதமாய் நான் தருவேன்
பொன்னாலே பேயன் பழம் புகழ்பெற செய்து வைப்பேன்
தருவேன் என்று பொன்னுருவி தவமிருந்தாள் கோயிலிலே
பத்மநாபபுரத்தில் பத்மநாபசுவாமியை வழிபடல்
அங்கும் பலன் காணாமல் ஆயிளையாள் பொன்னுருவி
கோதை நல்லாள் பொன்னுருவி கோட்டாத்து ஊரில் வந்தாள்
கோட்டாத்து ஊரதிலே கொம்மண்டை வாழும்மனுக்கு
கொம்மண்டை வாழும்மனுக்கு கம்மண்டையும் நேருவாளாம்
நேராத நேச்சை எல்லாம் நேந்தாளே பொன்னுருவி
அங்கும் பலன் காணாமல் அழுதழுது வழி நடந்தாள்

செட்டியார்கள் வெட்டி வைத்த செங்குளத்தாங் கரையுமிட்டு
பஞ்ச வர்ண காடுமிட்டு பார்வதியாள் புரமும்விட்டு
சுட்ட பலகாரம் தட்டி வைக்கும் சுங்கன்கடைத் தெருவுமிட்டு
பாவை நல்ல பொன்னுருவி பல்பநாதபுரத்தில் வந்தாள்
பல்பநாத பெருமாளுக்குப் பதைக்க மாலை நேருவாளாம்
முத்துச் சரப்பளியும் முகனையுடன் நேருவாளாம்
கிளிப்பிள்ளையும் பொன்னாலே கருட வாகனமும் பொன்னாலே
வண்ணமுள்ள திருமதிரும் வைப்பேன் நான் கோபுரமும்
எட்டு நாள் தவறாமலே எண்ணைக் காப்பு செய்து வைப்பேன்
திட்டமுடன் சிறு குழந்தைத் தாருமென்று அடி தொழுதாள்

(திருவனந்தபுரத்திற்கு வழிநடத்தல்)

அங்கும் பலன் காணாம லாயிளையாள் பொன்னுருவி
சங்கையுள்ள தோழியுடன் சாலை வழியாக நடந்தாள்
பல்பநாதபுரமு மிட்டு பாவை நல்லாள் வழிநடந்தாள்
தக்கலை ஊருமிட்டு தார் குழலாள் வழி நடந்தாள்
திருவட்டாபுரமதிலே சென்றாளே பொன்னுருவி
ஆதிகேசவபெருமாளுக்கு ஆனை உரு நேருவாளாம்
ஆனை உரு பொன்னாலே அடியாளும் நேருவாளாம்
பாலகனொன்று தாருமென்று படிதனிலே தானிருந்தாள்
அங்கும் பலன் காணாமல் அன்னநடை தோழியுடன்
பாறசாலை மகாதேவருக்குப் பச்சைக்கிளி நேருவாளாம்
கார சர வெடியும் கைக் கடயம் நேருவாளாம்
ஆதரவாய் எனக்கு ஒரு ஆண்குழந்தைத் தாருமையா
தாருமென்று பொன்னுருவி தவமிருந்தாள் கோயிலிலே
அங்கும் பலன் காணாள் ஆயிளையும் காணாமல்
பாறசாலை வழிநடந்து பாவையரும் வழிநடந்தாள்
தவணைக்கரை யாத்துக் குளம்தான் கடந்து வாரபோது
நேரிளையாள் பொன்னுருவி நெய்யாத்தங் கரையுமிட்டு
கூட்டப்பனை தான் கடந்து கொம்பனையாள் வழி நடந்தாள்
காட்டூரு தான் கடந்து கரும்பனை ஆறுங் கண்டாள்
சோலைக் கரும்பனை யாற்றைச் சொல்லத் துலையாதெனவே
ஏழு நல்ல தோழியோடே ஏந்திழையாள் பொன்னுருவி
சேயிளையாள் பொன்னுருவி திருவனந்தர்புரம் கண்டாளே.

(பத்மநாப சுவாமியிடம் பிள்ளை வரம் கேட்டல்)

(வேறு)

ஆண்டியை அடித்தேனோ எங்கள் பெருமாளே
அறக்கொடுமைச் செய்தேனோ எங்கள் பெருமானே

பசுவை யடித்தேனோ பட்டியிலே சேத்தேனோ
ஏழை எளியவரை யிடுக்கங்கள் செய்தேனோ
கோயி லழித்தேனோ குற்றம் தெண்டம் வாங்கினேனோ
பிச்சைக்கு வந்தவரை பின்னே வரச் சொன்னேனோ
கொத்தைக் குறைத்தேனோ குறைமரக்கா லளந்தேனோ
தாயில்லாப் பிள்ளைகளைத் தலையி லெட்டி அடித்தேனோ
தென்காசி நாடதுதான் செப்பமுட னாள சிறுவன்கெதி
எனக்குத் தந்ததே உண்டானால் எம்பெருமானே
கெருட நல்ல வாகனமும் கிருபையுடன் பொன்னாலே
கண்வியக்கும் வனப்புடனே ஆயிளையாள் நான் தருவேன்
தேடின பொன்னை எல்லாம் தேசத்திலே கெட்டேனே
கைக்குழந்தை யிது வரையும் கண்டதில்லை தோழியரே
திருவனந்தாபுரமிட்டு செல்லுவாளாம் மறுபதியில்.

(வேறு)

அனந்தயிலே வீற்றிருக்கும் அழகுடைய மாயவரே
நானொருத்தி பெண் பிறந்து நாட்டுவழி அலைந்தேனே
காணாத கோயிலெல்லாம் கண்டேனே மாயவரே
வீட்டிலுள்ள பொன்னை எல்லாம் வீணிலே நானழித்தேன்
உம்மை நம்பி நானடியாள் ஓடிவந்தேன் யிதுவரையும்
கவலையது தான் தீர்க்க கைக்குழந்தைத் தாருமையா
பாரிரோ என் முகத்தைப் பள்ளி கொண்ட பெருமாளே
தாருமையா எனக்குப் பாலன் சங்கை யுள்ள மாயவரே
மான் போலே வாடுகிறேன் மதலை பலன் இல்லாமல்
அம்புபட்ட மான்போல அலைந்து வந்தேன் மாயவரே
தென்காசி நாடாள சிறுகுழந்தைத் தந்ததுண்டால்
தந்ததுண்டால் உந்தனுக்குத் தானடிமைத் தொழுது நிற்பேன்
பிறந்த பிள்ளை உனக்கடிமை பேரும் உந்தன் பேரிடுவேன்
மதலையது தான் பிறந்தால் மாயவன்பெருமாளே
மாதம் ஒரு தடவை மாதாந்தம் நடத்துவேனே
ஆண்டுக்கொரு திருவிழா அடியாளும் நடத்துவேனே
தங்க நல்ல கொடிமரமும் தாழ்மையுடன் முடித்து வைப்பேன்
தேரதுவும் பொன்னாலே புலிக்குட்டியும் பொன்னாலே
பொன்னாலே குதிரையது புகழ் பெறவே செய்து வைப்பேன்
நித்தம் பூசை செய்திடுவேன் நீரிரங்கும் பாலனுக்கு
தந்திரமாய் தந்ததுண்டால் சரப்பளியும் பொன்னாலே
கண்ணுறக்க மில்லாமல் காரிளையாள் வாடுறேனே
மண்ணுலகை அரசாள மைந்தனொன்று தாருமையா
கை நிறைந்த பொன்னை அள்ளி காணிக்கையு மிட்டாளே

திருச் செவியும் கேள்க்கலையோ சேயிளையாள் படும்பாடு
வாடாப்பூ போல் வாடி மங்கை நல்லாள் பொன்னுருவி

(மாயவனார் மனமிரங்கி பிள்ளை பலன் உண்டு என்று கூறுதல்)

அன்னனடை பொன்னுருவி அழுதழுது தவமிருந்தாள்
வேரொருவ ரறியாமல் விம்மி விம்மி தானழுதாள்
இருந்தாளே நடையதிலே ஏந்திளையாள் பொன்னுருவி
மங்கை நலலாள் அழுதபோது மாயவரும் மனமிறங்கி
சென்று அந்த மங்கையுடன் செய்தி சொல்வார் மயாவரும்
இத்தலத்தில் பாலனில்லை ஏந்திளையே பொன்னுருவி
மனக்குறை யாது பொன்னுருவி குழந்தைப் பலன் உந்தனுக்கு
உண்டு மென்று பெருமாளும் உரைத்தாரே அன்னேரம்

(மாண்டு போக பொன்னுருவி மலை ஏறுதல்)

என்னுடைய தோழியரே ஏந்திழையே சொல்லுகிறேன்
திருவனந்தாபுர மளவும் சென்று தவம் செய்தேனே
ஒரு பலனும் கண்டதில்லை என்னுடைய தோழியரே
நாட்டு வழி போனாலும் நாட்டிலுள்ளோர் நமை நகைப்பார்
கடலருகே போனாலும் கடலரசன் நகைப்பான்
மலை தன்னிலே தானேறி மாண்டுவிடப் போறேனம்மா
உங்களூர் பதிதனிலே ஒன்றொடியே நீங்கள் போவீர்
என்ன சொன்னாய் தாயாரே எனை மதி வார்த்தையாலே
இருந்தாலும் உன்னோடே இறந்தாலும் உன்னோடே
உன்னை விட்டு நாங்கள் போனல் உடையவர்க்கு ஏக்காது
தோழியர்கள் உரைகேட்டு தோகை நல்லாள் பொன்னுருவி
திருவனந்தாபுரத்தை விட்டு சேயிளையாள் பொன்னுருவி
ஏழு நல்ல தோழியுடன் ஏற்ற மலை ஏறுவாளாமே.

(மலங் குறத்தியைத் தேடி வருதல்)

(வேறு)

மலையில் வந்தாளே பொன்னுருவி யம்மை
வண்ணமான பருவதந் தன்னிலே
அலைவில்லாத அகஸ்தியர் வாழ் மலை
அச்சுதனார் அமர்ந்திடும் வாழ் மலை
புகழான குரவர்கள் வாழ் மலை
பூதமோடு புலிகளும் வாழும் மலை
கடிதான தொரு காக்காச்சி பொன்மலை
கருநிறவண்ணன் காலி மேக்குமலை

துலையாத முனிவர்கள் வாழ்மலை
தோகை பாங்காள் இருக்கின்ற மலை
சினத்திடும் நல்ல தெய்வார் வாழ்மலை
சிறந்த இஞ்சி வாழ்கின்ற வாழ்மலை
கனத்த முதல் கொண்டு வொன்னுருவி தாயார்
கான மலங்குறத்தி பதிதேடி நடந்தாளே.

(மலங்குறத்தி பெண்கள் பொன்னுருவியை குறிசொல்லும் குறத்தியிடம் அழைத்துப் போகுதல்)

(வேறு)

மலைகளெல்லாம் தான் கடந்து வாராளே வொன்னுருவி
மலையிலுள்ள மிருகமெல்லாம் வாழுதலைக் கண்டு கொண்டு
சிங்கமது கரடி புலி எதிரே நின்ற கடுவாயும்
ஏந்திளையைக் கண்டபோது ஏற்றதொரு மிருகமெல்லாம்
இவளை இன்று தின்ற துண்டால் ஈஸ்பரர்க்கு ஏக்காது
பிள்ளை யில்லா பாவிதன்னைத் தின்றாலும் வெரும் பாவம்
அப்போது வொன்னுருவி அவளேது சொல்வாளாம்
மலை வாழ் மிருகத்துக்கும் மா பாவியானேனே
அந்த மலைதான் கடந்து அடுத்தமலை வரபோது
மலை நாகங் கண்டல்லவோ மங்கயரை வழிமறித்து
இவளை நாமள் விழுங்கவேணும் என்று வருகுதல்லோ மலைப்பாம்பு
மலடியைத் தின்றோமானால் மகாதேவருக்கு ஏக்காது
தாரா மலைப்பாம்பு ஓடி ஓடினது அப்பாலே
பரும் புதரில் இருக்கின்ற பாம்புக்கும் பாவியானேன்
அந்த மலைதான் கடந்து அப்பாலே வாரபோது
அதிகாலை நேரத்திலே அழகு குறப் பெண்கள்
கூடை பெட்டித் தன்னுடனே குடுக்கையது ஏந்தி
கொடியிடையாள் குறக் கன்னிமார் பழம்பொறக்க வந்தார்
பழம் பொறக்க வந்ததொரு பாவை குறப்பெண்கள்
பாவையர்கள் பொன்னுருவி மலையில் வரக் கண்டார்
கண்டவரை துண்டாய் வெட்டும் காட்டுக்கிடா பெண்கள்
கன்னி நல்ல பாவையர்க்கு ஏது மொழி சொல்வாள்
கடுவாய் புலி மிருகமுள்ள மலைகளல்லோ தாயே
வெறுப்பாய் வந்த பொன்னுருவிக்கு விவரமது சொல்லி
கைப்பிடியாய் கொண்டு போனார் கானக் குறப்பெண்கள்
குறத்தியுட குடுலடியில் குளிந்த சுனைக் கரையில்
கூட்டிப்போவோம் பொன்னுருவி தன்னை என்று சொல்லி

(குறப் பெண்கள் உபசரணையும் குலப்பெருமை கூறுதலும்)

கூட வந்த தோழிகளைக் கூடியங்கே யிருத்தி
பருத்த பிலாக் கனியுடனே பருவாழைக் கனியும்
பரிவுடனே பிடிக் கிழங்கு சிறுகிழங்குக் கொடுத்தார்
கொடுத்த பண்டம் தன்னை வாங்கி கோதையும் திங்காமல்
கொறஞ்சக் குலமல்லவோ குறக் குலங்கள் என்று
என்று அந்த பொன்னுருவி யிருக்குமந்த நேரம்
கொம்பனையார் குறக் கன்னிமார் ஏது மொழிசொல்வார்
எங்கள் குலம் பெரிய குலம் அறியாரோ
இந்திரர்க்கும் வேலவர்க்கும் பெண் கொடுக்கும்சாதி
காக்காய்தின்னோம் கழுகு தின்னோம் கள்ளக் குடியோம்
கனமலையில் மணவாளன் எங்கள் மச்சானடி தாயே
மாமலை யடவி எல்லாம் சீதனமாய் கொடுத்தோம்
இஞ்சி மஞ்சள் விளையுகின்ற ஏற்ற மலை எல்லாம்
எங்கள் வடிவேலருக்குச் சீதனமாய் கொடுத்தோம்
குறத்தியர்கள் தங்களுட குலத்தருமைக் கூற
கொடுத்த பண்டம் தன்னை வாரிக் கோதையும் அருந்த
குளிர்ந்த சுனையதிலே தண்ணீர் குடித்து கரை ஏறி

(குறத்தி குறிபார்த்தல்)

வாடியம்மா பொன்னுருவி வலது கையைத் தாடி
இந்திரனே வேலவனே வந்து குறி சொல்லு
என் மலையின் கன்னிகளே இப்போது வந்து சொல்லு
வந்து சொல்லு செந்தூரில் வடிவேலப் பெருமாள்
வள்ளிதனை மாலையிட்ட புள்ளி மயில் வாகனனே
மலையிலுள்ள தேவதையே மாடன் தம்புரானே
மந்திரத்தி லடங்காத தந்திரமூர்த்தி கேளு
முத்தழகா கருப்பழகா முழு முத்துராசா
முன்னே வந்து சொல்லடவ நல்ல தம்பிவாடா
திருநீரை எடுத்து நெற்றியிலே பூசி
தெய்வங்களை யடி தொழுது பூவை யள்ளி போட்டு
முத்து நிரை நாழி வைத்து திருவிளக்கு ஏத்தி
முக்கண்ணரை யடி தொழுது பூவெடுத்து போட்டு

(மலங்குறத்தி குறி சொல்லுதல்)

காப்பு பச்சை வளையலது கலகலவென
கருத்துடனே எந்தன் குறி கேட்டிடுவாய் தாயே
கொத்தரளி பூவுடனே தீபதூபம் நடத்தி
கையதிலே பிரம்பெடுத்து உடலை மிகக் குலுக்கி

வாடியம்மா வலது கையைத் தந்து குறி கேளு
உன்னுடைய நாடு தேசம் தென்காசியம்மா
உன் கணவன் செண்பகப்பராசன்டி தாயே
பொன் பணங்கள் இல்லை என்று உனக்கு குறையில்லை
பிள்ளையில்லா மனச்சடவு வுண்டுமடி தாயே
செந்தூருபதி வரையும் திருவனந்தாபுரமும்
சென்று தவம் புரிந்து பாலன் கண்டாய் இல்லை
கண்ட கண்ட கோயிலெல்லாம் காணிக்கையு மிட்டாய்
கருவலத்தின் பொன்னை எல்லாம் கை வசமாய் அளித்தாய்
அளித்ததினால் ஒரு பலனும் அம்மை கண்டாய் இல்லை

(குலதெய்வத்தை வழிபட்டால் குழந்தை வரம் கிடைக்கும் எனல்)

ஆயிளையே பொன்னுருவி குறி வளமைக் கேளு
விளக்கிருக்கத் தீ தேடி திரிந்த வகைபோலே
விருதாவில் நீ திரிந்து மெல்லியரே தாயே
உரியதிலே வெண்ணைத் தயிர் உருக்காலே இருக்க
ஊருக்குள்ளே நெய் கேட்டால் ஒருத்தர் தருவாரோ
பண்டு முன்னால் காரணவர் ஆண்ட குலதெய்வம்
பழைய மதிலிடிந்து கிடக்குதடித் தாயே
தெக்கு மதில் மேல் மதில் கீழ்மதில் எல்லாம்
சிறப்பாக மதிலிடிந்து கிடக்குதடி தாயே
திருக்கோயில் தனைக் கட்டி சிறப்பித்து நீ விட்டால்
சிறுவன் கெதி நீ பெறுவாய் சேயிளை யென்றாள்
அன்புடன் தென்காசி பகவதிக்கு நீதான்
ஆதரவாய் பூசை செய்தால் பாலன் உண்டு தாயே
செந்திருவே உந்தனுட பேரு வழி தெய்வம்
தென்காசி பகவதிக்குத் திருக்கோயில் வைத்து
தேரும் திருநாளும் வைத்தால் பாலனுண்டு தாயே
என் குறிதான் பொய்யாது ஏந்திளையே தாயே

(பொன்னுருவி குறத்தியைப் போற்றுதல்)

இள மலையாள மட்டும் சென்று குறி சொன்னேன்
உரைத்த குறி மெய்யானால் குறக் கன்னியே உனக்கு
குடுக்கை முட்ட பொன் தருவேன் கோதையரே உனக்கு
அய லறிய அஞ்சி மாதம் ஆனதே உண்டானால்
ஆயிளையே உங்களை நான் அங்கழைப்பேன் நானும்
குறத்திக் குறிகேட்டு பொன்னுருவி யம்மை கூற
கூண்ட மலை மிருகம் வாய்கட்டி வழியனுப்பினாரே.

(தென்காசி பகவதியை வழிபட்டால் குழந்தைக் கிடைக்கும் என கணவனிடம் கூறுதல்)

(வேறு)

மலைகளெல்லாம் தான் கடந்து வாராளே பொன்னுருவி
பாவனாசக் கரையில் வந்து பாவை தீர்த்தம் ஆடுவாளாம்
குத்தால நாதருட கூண்ட திருப்பதியுமிட்டு
நாடும் பலதேசமிட்டு நடந்தாளே பொன்னுருவி
தென்காசி பதிதனிலே தெக்குத்தெருவினிலே வாரநேரம்
பிள்ளை தவத்துக்குப் போனதொரு பொன்னுருவி வாராளென்று
மண்ணேறி பாப்பாரும் மதிலேறி பாப்பாரும்
அன்று வைத்த மண்ணை எல்லாம் அழித்தோடிப் பாப்பாரும்
பிள்ளை தவம் பெற்று வந்தால் பெரும் வயத்தில் தோன்றாதோ
வயத்தில் சோமம் வளராதோ மதலை பலன் பெற்று வந்தால்
பச்சை நரம் போடாதோ பாலன் கெதி பெற்று வந்தால்
கொங்கை ரண்டும் விம்மாதோ குழந்தைப் பலன் பெற்று வந்தால்
வீண் மலடு வீண் மலடு மெல்லி நல்லாள் பொன்னுருவி
என்று சொல்லி பெண்களெல்லாம் இருக்கிறதோர் நேரத்திலே
ஏழு தோழிமாருடனே ஏந்திழையாள் மனைநோக்கி
தன்னுடைய மாளிகையில் தன் கணவன் திருமுன்பில் வந்தாளே.

(வேறு)

போன தென்ன வந்ததென்ன புகலுமென்றார் மன்னவரும்
மன்னவனார் கேட்டபோது மங்கையரும் ஏது சொல்வாள்
செந்தூர்பதிவரையும் திருவனந்தாபுரம் வரையும்
திருவனந்தாபுரம் வரையும் சென்று தவம் நான் புரிந்தேன்
ஒரு பலனும கண்டதில்லை உண்மையுள்ள என் கணவா
மலைதனிலே தானேறி மாண்டுவிட வேணுமென்று
மாண்டுவிட வேணுமென்று மலைவழி வாரபோது
மாதாவை போலே ஒரு மலங் குறத்தி யானவளும்
கைபிடித்து குறிகள் சொன்னாள் க்குழந்தை உண்டு மென்று
தென்காசி பகவதிக்குத் திருக்கோயில் முடித்து வைத்தால்
கோயில் வைத்து பூசை செய்தால் குழந்தைப் பலன் உண்டுமென்று

(தென்காசி பகவதியம்மன் ஆலயம் கட்டுதல்)

(வேறு)

அந்த வார்த்தைதனைக்கேட்டு
அக மகிழ்ந்து மன்னவனார்
தென்காசி பகவதிக்கு

சிறப்புடனே கோயில் வைக்க
மாந்தையரை வரவழைத்து
மரங்கள் வெட்டிவரவே சொன்னார்
வார்த்தைக் கேட்டு மாந்தையர்கள்
மழு உளியும் தானெடுத்து
மலைதனிலே தானேறி
மாந்தையர்கள் அன்னேரம்
சந்தனமாம் கார்குயிலாம்
தக்க நல்ல பிலாமரமாம்
விரைவாய் யிலுப்பன்
வெண் நாங்கு மரமும்
இட்டமுடனே யிலுப்பை மரமும்
திட்டமுடனவர் வெட்டியே
நன்றாய் சேரப்பணிவகை செய்துமுடித்தார்
அழகான தூணது செய்து முடித்தார்
அழகான சித்திரம் போலே முடித்தார்
வண்ணமுடனே மாலை செய்துமுடித்தார்
பட்டி யலது செய்து முடித்தார்
பரிவுடன் உத்திரத் தூணும் முடித்தார்
முந்தவே நன்றாய் பணிகள் முடித்தார்
ஆழியும் சிங்கமும் அணிப்பிள்ளை
அழகான கோழி பறவை குருவி
திட்டமுடனே வண்டியில் ஏத்தி
தென்காசி பதிதன்னில் வரவே
வந்த மரங்களைக் கண்டு மகிழ்ந்து
செண்பகப்பூராச மன்னன்
தென்காசி பகவதிக்குத் திருக்கோயில் கட்டுவாராமே.

(வேறு)

நாயனுட அருளாலே நாள் பாத்து தலங் குறித்து
நாளான நாளையிலே நல்ல வெள்ளிக் கிழமையிலே
உத்திர நச்சத்திரத்தில் உத்ரவேலை துடங்குவாராம்
கன்னக் கால் நாட்டிடவே கன்னியர்கள் குரவையாட
அன்புடனே திருமதிலும் அழகுடனே கட்டுவாராம்
தேரோடும் வீதி வைத்தார் தெப்பக் குளம் வெட்டி வைத்தார்
மண்டபமும் மடப்பதியும் மாட குட மேடைகளும்
கோபுரமும் தான் முடித்து கொடி மரமும் நாட்டுவாராம்
வண்ணங்களைத் தான் முடித்து வைத்தாரே மாந்தையர்கள்
கோயில் வைத்த மாந்தையர்க்குக் கொடுத்தாரே வருசையது
வருசையது தான் வாங்கி மாந்தையர்கள் போனபோது

(பகவதிக்குக் பூசை செய்து பிள்ளைவரம் கேட்டல்)

ஆயிளையாள் பகவதிக்கு அழகு பூசை நடக்குதல்லோ
காலையிலும் மாலையிலும் கனத்த பூசை நடக்குதல்லோ
கொடியேற்றி திருவிழா குணமுடனே நடக்குதல்லோ
ஓரான திருவிழாவும் இன்பமுடன் நடக்குதல்லோ
ஒன்பதான திருவிழாவில் ஓடுதய்யா தேரதுவும்
பத்தான திருவிழாவில் ஓடுதய்யா தேரதும்
சேயிளையாள் பகவதிக்குத் திருவிழாவும் முடித்த பின்பு
பகவதியாள்அம்மனையும் பாவை நல்லாள் பொன்னுருவி
தெப்பகுளம் மானதிலே தீர்த்தமாடி மாத்துடுத்து
உடுத்த முந்தி துவறாமல் ஒன்பது நாள் தவமிருந்தாள்
படிதனிலே தவமிருந்தாள் பாலனொன்று வேணுமென்று

(நற் கனவு காணுதலும் கணவனிடம் கூறுதலும்)

இப்படியே பொன்னுருவி இருக்கு மந்த வேளையிலே
காரிளையாள் பகவதியும் காட்டுவாளாம் கனவது தான்
உடுத்திருந்த பருவட்டத்தில் உள்முந்தி முகப்பதிலே
குழவி வந்து கூடுகட்டி குஞ்சு கொடுபோகக் கண்டாள்
பாம்பு வந்து மடியேறி படம் விரித்து ஆடக் கண்டாள்
மந்திரவாள் உறை கழத்தி மடிதனிலே வைக்கக் கண்டாள்
கட்டோடு வெத்திலையை காம்பொதிக்கித் தரவும் கண்டாள்
குடிம்பியோடு தேங்காயைக் கொண்டு வந்து தரவும் கண்டாள்
காரிளையாள் பொன்னுருவி கனவதுதான் கண்ட பின்பு
கண்ட கண்ட கனவை எல்லாம் கட்டுரைத்தாள் தோழியர்க்கு
மலங்காதே பொன்னுருவி மதலையுண்டு நாமளுக்கு
உண்டு மென்று சொன்னபோது ஒண்நுதலால் ஏது சொல்வாள்
தலைவாசல் தான் கடந்து தன் கணவன் முன்னே வந்தாள்
மன்னவனார் முன்னே வந்து மங்கை நல்லாள் ஏது சொல்வாள்
கண்ட கண்ட கனவை எலலாம் கணவருக்குச் சொல்லுவாளாம்
குடுமியோடு தேங்காய் தந்தால் குஞ்சரமும் பொய்யாது
மங்கை நல்லாள் சொன்னபோது மன மகிழ்ந்து மன்னவரும்
பாலனுண்டு நாமளுக்குப் பாவையரே மலங்காதே
சந்தோசமாக வல்லோ தானிருந்தார் இருபேரும்

(பொன்னுருவி வயிற்றில் குழந்தை உருவாதல்)

வெத்திலையும் தின்று மென்று விடியுமட்டும் விளையாடி
மனமகிழ்ந்து யிருபேரும் வாழ்ந்திருக்கும் நாளையிலே
இருக்கு மந்த நாளையிலே யீஸ்பரனார் அருளாலே
மகாதேவன் அருளாலே வாய்த்த கெர்ப்பம் தரித்திடுமாமே.

(பேருகால மாற்றங்கள்)

(வேறு)

பகவதியாள் அருளாலே பாவை நல்லாள் பொன்னுருவி
ஒன்றாகி மாதம் இரண்டாகி உயிர் மூன்று நாலாகி
அஞ்சான மாஸ்தயிலே அரை வயறு சூலானாள்
மஞ்சள் முக நிறத்தழகி வாடி யிணல் தேடுவாளாம்
தேடுவாளாம் சிறு புளிப்பு தேங்காயும் மாங்காயும்
வாழ வீட்டு பூந்தோட்டம் மண்ணாங்கட்டி வுணவாச்சி
காரிளையாள் பொன்னுருவி கண்ட பண்டம் தேடுவாளாம்
ஆறான மாஸ்தயிலே அயலறிந்தார் எல்லோரும்
ஏழான மாஸ்தயிலே இருந்தால் எழுந்திரியாள்
வாழைப்பழம் மாம்பழமும் மாதளம் பழமுடனே
சிங்க வாழைப் பழமும் திணை மாவும் தேடுவாளாம்
ஆயிளையாள் பொன்னுருவி அழுந்துவாளாம் மனஞ்சடைத்து
ஒன்பதான மாஸ்தயிலே திட்டனவே உருவளர
கட்டாக தலை நோவும் கண்விழியும் சோருதென்பாள்
வம்பாக தவமிருந்தேன் என்வாணாலும் போகுதய்யோ
பத்தான மாஸத்திலே பகவானுக்குப் பொங்க லிட்டாள்

(ஈத்துப்புரை கட்டுதல்)

பத்தான மாஸத்தியிலே பார யீத்துப் புரை முடிக்க வென்று
மாந்தயரை வரவழைத்து மரங்கள் வெட்டி வரவே சொன்னார்
வாச்சி உளி மழுவெடுத்து மலைதனிலே ஏறுவாராம்
மலைதனிலே தானேறி மாந்தயர்கள் ஒன்று போலே
ஈத்துபுரைக் கேத்த மரம் என்ன மரம் வெட்டிடுவோம்
அத்தியோடு ஆலரசி மா விலுப்பை புங்கு புளி தேக்கு
அத்தனையும் வெட்டி வண்டிதனில் ஏத்தி தென்காசியதி வந்தார்.

(வேறு)

தென்காசி நகர்தனிலே வந்து செண்பகப்பூராசன்அரண்மனை தன்னில்
பார்த்தவர்கள் மனமகிழ பார யீத்துப் புரை முகித்தாரே
தோழியர்கள் வந்து நிற்க தூண் கடைந்து நடுவாராம்
மருத்துவத்தாள் வந்திருக்க வாய்த்த முக்காலி செய்து வைத்தார்
வருசையது தான் கொடுத்து மாந்தயரை அனுப்பி விட்டார்

(மருத்துவச்சியை அழைத்துவரச் சொல்லுதல்)

மாந்தயர்கள் போனபோது வானுதலாள் பொன்னுருவி
பொன்னாலே குடமெடுத்து பூஞ்சுனையில் நீர்க்கோரி
வலதுகால் முன்னே வைத்து வாய்த்த யீத்துப் புரை புகுந்தாள்

வயிறு மெத்த நோகுதென்பாள் வானுதலாள் பொன்னுருவி
அப்போது மன்னவனார் அவரேது சொல்லுவாராம்
வாரும் பிள்ளா தூதுவரே வார்த்தை ஒன்று நீ கேளாய்
வாய்த்த நல்ல மருத்துவத்தை வரவழைத்து நீ வருவாய்
எத்தனையோ மருத்துவத்தாள் இருந்தாலும் போறாது
கைராசி உள்ளவள்தானடி காமாட்சி என்றவளை
அந்த நலல மருத்துவத்தை அழைத்துவாடா தூதுவனே

(தூதுவன் மருத்துவச்சியை அழைத்தல்)

கச்சை கட்டி எண்ணை யிட்டுக் கையிலே கடப்ப பிரம்பெடுத்து
மஞ்சள் யிஞ்சி வனங் கடந்து மதுர கன்னி தோட்டமிட்டு
ஆயத்துறை சாய் கல்லு அமுது சம்பா வயல் கடந்து
கடந்து சென்று தூதுவனும் காரிளையாள் வீட்டில் வந்து
குத்துக்கல் மீதேறி கூப்பிட்டானே மூன்று சத்தம்
அப்போது மருத்துவமும் அவளேது சொல்லுவாளாம்
ஆரடா என்னுடைய அகரமதில் சத்தமிட்டாய்
நானல்லவோ மருத்துவமே நாடி உன்னை அழைக்கவந்தேன்
என்னடவா தூதுவனே யிங்குவரக் காரணமேன்
தென்காசி பதிதனிலே தேன்மொழியாள் பொன்னுருவி
மலடிக்குந்தான் யித்தனை நாள் மாதம் பத்து திகைந்தது தான்
மாதம் பத்தும் திகைந்ததுதான் வரவேணும் மருத்துவமே

(மருத்துவச்சி வர மறுத்தல்)

தூது வந்தவன் சொன்னபோது சொல்லுவாளாம் மருத்துவமும்
தெரிவேன் தெரிவேனடா தென்காசி வளப்பமெல்லாம்
ஆருடய பதி எனவே அந்த மருத்துவத்தாள் கேட்டபோது
செண்பக ராசனுட திருப்பதியில் என்று சொன்னான்
பண்டு முன்னால் அவர் கிளையில் பட்ட சளன் மெத்த உண்டு
தலைக்கு எண்ணை நான் கேட்டேன் தந்ததில்லை தேய்த்ததில்லை
குளிக்க மஞ்சள் நான் கேட்டேன் கொடுத்ததில்லை குளித்ததில்லை
ஒரு பணம் கேட்டதற்கு அரை பணம் தந்தானில்லை
அப்படிப்பட்ட தென்காசி அங்கு நானும் வரமாட்டேன்
வேற மருத்துவம் கூட்டிப்போடா விரைய வந்த தூதுவனே

(தூதுவன் சமாதானம் சொல்லி மருத்துவச்சியை அழைத்து வருதல்)

அப்போது தூதுவனும் அவனேது சொல்லுவானாம்
உன்னையுமே காணாவிட்டால் ஒரு நொடியில் இறந்து விடுவாள்
பொன்களஞ்சி தந்தாயானால் புறப்பட்டு நான் வருவேன்
கணையாளி மோதிரமும் என் கணக்கில் நான் தருவனென்று

தென்காசி பதிதனிலே தெக்குத் தெருவிலே வாரபோது
பொன்னுருவி போடும் சத்தம் காதிலே கேட்டாளே மருத்துவமும்

(மருத்துவச்சி பொன்னுருவிக்கு ஆறுதல் கூறுதல்)

அரண்மனையில் வந்தல்லவோ ஆயிளையும் ஏது சொல்வாள்
அஞ்சாதே மகளே என்று அறை புகுந்தாள் பொன்னுருவி
ஓடிவந்த தூதுவன் பின் உடன் வராத காரணம் ஏன்
உண்மையுள்ள மருத்துவமே பிந்தி வந்ததென்ன
குழந்தைக ளஞ்சாரு உண்டு கஞ்சிக் கில்லை தாயே
பிள்ளைகள்க்கு அன்னந் தண்ணி பேதரவாய் கொடுத்து
கள்ளர்கள் என்வீட்டில் கொள்ளை யிடாமல் காத்திருக்கச் சொல்லி
ஆளுமிருத்தி தாயமாடினேன் அதனாலே செற்றே தாமசம்
வரும்போது நல்ல எருப்பது கண்டேன் மயக்குள்ளே மோசம் வராது
மருத்துவமும் வந்து சேர வாய்த்த வயற் நொந்திடுமாமே

(மருத்துவச்சி பேறுகாலம் பார்த்தல்)

(வேறு)

மருத்துவமே நீ கேட்ட பொன் பணங்கள் எல்லாம்
பதறாதே நாங்கள் தந்து அனுப்பிடுவோம் அம்மா
மங்கையர்கள் சொன்னபோது மருத்துவமும் சொல்வாள்
நாலுதிச காவண தக்க பருவட்டமும் வேணும்
நன்மையுடன் நூத்தெட்டு பொன் கட்டி வைக்க வேணும்
பெரிய முத்தார கோத்தியர்க்குக் குருணி நெல்லு வேணும்
முனைமுறியா மஞ்சளது மூன்று வைக்கவேணும்
மூன்று வெத்திலை மூன்று பாக்கு வேணுமடி தாயே
பாலன் பிறந்தால் கிடத்த பொன்னும் கலம் வேண்டும்
எண்ணை வுத்தி போடுதற்கு கிண்ணி வட்டில் வேணும்
கேட்ட வகைகளெல்லாம் கிருபையுடன் கொடுத்து
கொடுத்த வகைகளெல்லாம் கிருபையுடன் வாங்கி
வட்டிலிலே எண்ணை வுத்தி திருவயத்திலே போட
வானுதலாள் பொன்னுருவி திருவயறு நொந்தாளே

(பொன்னுருவி வலியால் புலம்புதல்)

(வேறு)

நொந்தாள் திருவயறு நொம்பலப்பட்டு வருகிறதென்பாள்
சந்து இருக்குமிட்டு சரிந்தாள் தன்னுடைய தோழியர்மேல்
அம்மா மலங்காதே ஆண்டவனார் உன்னை காத்திடுவார்
அம்மா பகவதியே என் ஆத்தாமா சேருதென்பாள்
இப்படி வரும்மானால் இருப்பேனோ பாலன் தவம்

பிள்ளையினால் யிருந்தாசை போதுமடி தோழியரே
என்று மனங் கலங்கி ஏந்திளையாரும் புலம்புவாளாம்
மடிகிறேனே தாய்மாரே என் மன்னவர்க்குச் சொல்லிடுங்கோ
கைக்குழந்தை வேண்டாமம்மா என் கணவருக்குச் சொல்லிடுங்கோ
அஞ்சி பயந்தாளே பொன்னுருவி தாயார்
அஞ்சாதே என்று அங்கிருந்த தோழி சொல்வாள்
வெஞ் சினத்தாலே அழுது முறையிட்டாள்
சாவேனோ பிழைப்பேனோ சங்கையுள்ள மருத்துவமே
பாடகங்கள் போட்டிருந்த படங்களெல்லாம் நோகுதம்மா
பாடகத்தைத் தளத்திடுங்கோ பகவானுக்கு நேர்ந்திடுங்கோ
மோதிரங்கள் யிட்டிருந்த மொழிகளெல்லாம் நோகுதல்லோ
தண்டையது போட்டிருந்த கெண்டைக் கால் நோகு தென்றாள்
மன்னவர்தான் எனக்கு வேணாம் மகன் எனக்கு வேண்டாம்
இப்படித்தான் வருமானால் யிருப்பேனோ பாலன் தவம்
நஞ்சோடு நடுவயத்தில் நாகம் வந்து தரித்ததடி
வம்புக்கு தவமிருந்தேன் வாணாலும் போகுதம்மா
கணவனை யறியாமல் கரு மருந்தைக் குடித்தேனில்லை

(குழந்தைப் பிறத்தல்)

பதறாதே பொன்னுருவி பாலகனைப் பெற்றெடுப்பாய்
பதறாதே என்று சொல்லி மருத்துவத்தாள் இருந்தாள்
அய்யய்யோ இதை யார் பொறுத்திடுவார்
தலை நாளையில் ஈஸ்பரன் எழுத்து யிதுதானோ
கதறி பதறிடவே கன்னிக் குடமுடைய
கன்னிக் குடமுடைய கண்டாள் மருத்துவமும்
கையிலே பொன்னுங் கலத்தை எடுத்தாள்
பொன்னுங் கலத்தில் வாழை யிலை போட்டாள்
வாழை யிலையில் சீரு பாலன் பிறந்தான்
கோதையர்கள் குரவையாட கொப்புளது அறுத்தாரே.

(தோழியர் வருசை கொடுத்து மருத்துவச்சியை வழி அனுப்புதல்)

(வேறு)

மங்கையர்கள் குரவையாட
வார்த்தாளே சேனையது
கெம்பீரமாய் பிள்ளை பிறந்ததெனவே
உச்சி குடமெடுத்தாட ஒருத்தி
சாலிலே மஞ்சள் கலக்க ஒருத்தி
தட்டி கவிழ்த்து போட்டாள் ஒருத்தி

குண்டுணி கொடிய பொய் சொல்வாள் ஒருத்தி
குட்டி மண்தட்டி விழுந்தாள் ஒருத்தி
மலடிருந்தாள் பொன்னுருவியம்மை
மாணிக்கம் போல ஆண்பிள்ளைப் பெற்றாள்
இருள யிருந்தாளே பொன்னுருவியம்மை
ஈந்தம் பழம் போல ஆண்பிள்ளைப் பெற்றாள்
நாடாள ஒரு பாலன் பிறந்தான்
நல்ல பிள்ளை ஒரு பாலன் பிறந்தான்
தேசமாள ஒரு பாலன் பிறந்தான்
செல்லப் பிள்ளை ஒரு பாலன் பிறந்தான்
வாருங்கோ என்னுடைய தோழிமார்களே
மருத்துவத்தாளுக்கு வருசையது செய்வோம்
முந்தி வந்த தோழி ஒருத்தி
முத்து பருவட்டம் தன்னைக் கொடுத்தாள்
காரை களத்தி கொடுத்தாள் ஒருத்தி
களத்தி மணிகள் கொடுத்தாள் ஒருத்தி
ஒன்றுமில்லை ஒன்றுமில்லை என்றாள் ஒருத்தி
உக்கட்டு கொண்டு கொடுத்தாள் ஒருத்தி
ஒரு பணந்தன்னைக் கொடுத்தாள் ஒருத்தி
தோழியர் கொடுத்த வருசையது
வாங்கிக் கூண்ட மருத்துவம் வழிநடந்தாளே.

(பிள்ளையைத் தாலாட்டிப் பேர்சூட்டுதல்)

(வேறு)

அந்த மருத்துவம் போனபோது ஆயிளையாள் பொன்னுருவி
பிறந்த பிள்ளை தனை எடுத்து பிரியமுடன் தாலாட்டி
மோர்ந்த நாழியிலே முத்தளக்க வந்தவனோ
பாலளந்த நாளயிலே பணமளக்க வந்தவனோ
மலடிருந்தாள் என்று சொல்லி வையகத்தோர் ஏசாமல்
மலடி என்ற சொல் தவிர்க்க வந்த நல்ல பாலகனோ
இருள யிருந்தாள் என்று சொல்லி இவ்வுலகில் ஏசாமல்
இருளி என்ற சொல்தவிர்க்க என் வயிற்றில் பிறந்தவனோ
ஆனை குதிரை கட்டும் அரசனோடு வாதாடி
சேனை படைகளெல்லாம் சேகரிக்க வந்தவனோ
எனக்கு தலைமகனோ எல்லோர்க்கும் ராசாவோ
தங்க முடி சூட்டி தரணியாள வந்தவனோ
ஆனை தந்த தொட்டிலிலே அருமை மகனே நித்திரை போடு
ஆராரு பேரிடுவேன் அழகுடைய பாலனுக்கு
தாய் தகப்பன் பேரிடவோ சண்முகனார் பேரிடவோ

மாமனார் பேரிடவோ மச்சினமார் பேரிடவோ
அந்த அந்த பேர்களெல்லாம் ஆகாது என்று சொல்லி
சிவனருளால் பெற்ற மகன் **சிவனணைந்த பெருமாளென்று**
செப்பமுடன் பேர் கொடுத்தாரே.

(குழந்தையைச் சீரும் சிறப்புடன் வளர்த்தல்)

(வேறு)

பேருமிட்டு தாலாட்டி பிரியமுடன் வளத்து வாரார்
ஆராட்டி சீராட்டி தான் வளத்தாள் பாலகனை
ஆவினுட கன்றது போல் அருமையுடன் வளத்தாளே
வீரருக்கு இணங்கியதோர் விரலுக்கு மோதிரமும்
பொன்னாலே சதங்கைகளும் போத நல்ல ஆபரணம்
மூன்றுசுத்து பொன்னரஞ்சாண் முருக்குவளை கெருசங்களும்
அஞ்சு வர்ண பட்டுடுத்து ஆபரண மாலைகளும்
இப்படியே பணிகளெல்லாம் இன்பமுடன் தானணிந்து
கொற்ற நல்ல பாலகனைக் குறையில்லாமல் வளத்தாளே

(சிவனணைந்த பெருமாளுக்கு கல்வியும் போர்க்கலையும் கற்றுக் கொடுத்தல்)

வளருகின்ற நாளையிலே நல்லணஞ்ச பெருமாளுக்கு
வயது ஒன்றாகி ரெண்டாகி உயர மூன்று நாலாகி
அஞ்சான திருவயதில் அழகுடைய பாலகனுக்கு
தன் தரத்து தோழரோடுதானே வீதியில் விளையாடுவாராம்
ஆறான வயதுசெல்ல அருமையுள்ள பாலனுக்குக் கல்வி வருத்தவென்று
பாடறியா நாளையிலே படிக்க வைத்தார் தாய் தகப்பன்
வாத்தியார்முன்னே வந்து வணக்கமது செய்தானே
அடித்தொழுத பாலகனை அண்ணாவி அருகழைத்து
வாரும் பிள்ளா பாலகனே வாய்த்த பள்ளிக் கூடத்திலே
துருசமுடன் பள்ளியிலே சேர்ந்தானே பாலகனும்
நாளான நாளையிலே நல்ல வெள்ளிக் கிழமையிலே
சாந்தாலே தரை மெழுகி சந்தணத்தால் கோலமிட்டு
திருவிளக்கு ஏத்தி வைத்து தெச்சணையும் வைத்தாரே
தேங்காய் உடைத்தபோது திருக்குடும்பி முறுக்கி வைத்தார்
அருமையுள்ள பாலன் அணைஞ்ச வருமாள்
வாய்த்த திரு எழுத்து தானும் படித்தான்
அரி ஓம் நமோ என்று அண்ணாவி எழுத்தோத
அப்படியே பாலகனும் அன்புடனே தான் படித்தான்
அகரவரிசை கொன்றை வேந்தன் அன்னை பிதா மூதுரையும்
எழுத படித்ததொரு எண் சுவடி அதிகாரம்

கண்ணனையும் தான் போற்றி கணக்கதிகாரம் படித்தான்
வார நீட்டை வாசிப்பாராம் மறு நீட்டு எழுதுவாராம்
ஆயனிலும் ஜரெட்டியாய் அழகு பாலன்தான் படித்தான்
பாட்டு கவிதான் பாடி கற்றாரே வித்தை யெல்லாம்
ஒன்பதான திருவயதில் உடைவாள் வெட்டு படிக்க வென்று
தடயறவே ஆயனை தானழைத்து ஏது சொல்வார்
உடைவாள் வெட்டு படிக்கவென்று உடன் அழைத்தார் ஆயனை
உற்ற நல்ல நாளையிலே உத்திர நட்சத்திரத்தில்
கணபதியைத்தான் போற்றி கையில் உடைவாள் எடுத்தான்
ஒன்று சொன்னால் பாலனுக்கு ஒன்பதாகத்தான் படித்தான்
வலத்தே தட்டின வாள் முறைச்சத்தம் வானத்தில் மின்னல் போலே எழும்ப
இடத்தே தட்டின வாள் முறைச் சத்தம் பிடியிடித்தது போலே யல்லோ
கோழி போரது போலேயல்லோ கூண்ட உடைவாள் வித்தை படித்தான்
ஆனைக்கிடையிலே பாய்கிற தொழிலும் ஆணையைச் சேத்து
பிடிக்கிறத்தொழிலும்
குதிரைக் கிடையிலே பாய்கிற தொழிலும் குதிரையை சேத்து பிடிக்கிற
தொழிலும்
வெட்டுமாறும் தட்டுமாறும் விதவிதமாய் தான் படித்தான்
படிக்கும் நல்ல வித்தை எல்லாம் படித்தாரே அணஞ்சவனார்
எல்லாங் கற்று வல்லவனாய் இருக்கிறதோர் நாளையிலே
தென்காசி பதிதனிலே சிறப்புடனே ஆண்டு வாரான்
எதிரி எவரும் யில்லாமல் எல்லை அரசாண்டு வாரார்
ஆனை சேனை படையுடனே அரசிருந்தார் தென்காசி.

(சின்னணைஞ்சி பிறப்பு)

(வேறு)

அரசிருக்கு மந்த வேளையிலே அழகு சிவனணைஞ்சவனார்
இருக்கு மந்த காலமதில் யிளங்கொடிசேர் வாணுதலாள்
கரும்பு வில்லுக் கிணையான காமனுட மோகினிபோல் பெற்ற மகள்
முருக்கிதழ்வாய் வெண்கொடியாள் வெளுத்தெடுப்பார் பெற்ற மகள்
பாரும் புகழும் சின்னணைஞ்சி வந்த கதை கேளுமையா
கேளும் ஒரு வரலாறைக் குவலயத்தில் உள்ளவர்கள்
வாழும் வட நாடதிலே வன்னியர்கள் சீமை மட்டும்
ஏழு பிடாகைதனிலே எடுத்தழுக்கு தான் வெளுத்து
ஆணழகன் **துவரை வண்ணான் அரசிவிளை** பதிதனிலே
அரசிவிளை குடியிருப்பு ஆத்தங்கரை வெள்ளாவியும்
கரை சிறந்த பதிதோறும் கையாச்சி காணி கொண்டான்
வரை சிறந்த துவரை வண்ணான் வாழ்ந்திருக்கும் காலமதில்
தாட்டிகன் **சடய வண்ணான்** தன்னுடை தேவியவள்

தேடரிய கருவலம் போல் சிறந்த கெர்ப்பம் உருவளர
வளருதல்லோ கருவதுதான் வானம் தினச் சந்திரன் போல்
கட்டி வைத்த திரவியம்போல் கைக்குழந்தைப் பெற்றெடுத்தாள்

(சின்னணைஞ்சி அழகில் சிறந்து விளங்குதல்)

சிவபெருமான் திருவருளால் **சின்னணைஞ்சிதான்** பிறந்தாள்
பிறந்து நன்றாய் வளந்தபோது பேரும் சின்ன அணைஞ்சி என்று
கறந்த பால் போலே யல்லோ கன்னியந்த பெண் கொடிக்கு
சிறந்த நல்ல பணியுடுத்து சித்தாடை பட்டுடுத்து
பட்டுடையும் ஒப்பினையும் பணிந்த மலர் குணவழகும்
அறந்தழைக்கும் துவரை வண்ணான் அழகுடனே வளத்தானே
வளந்தாளே சின்னணைஞ்சி வார்ப்புருக்கி வார்த்ததுபோல்
அளந்து குறித்தது போல் அச்சதிலே சேத்ததுபோல்
இலந்தைக் கிளிபோலே ஏந்திழையாள் சின்னணைஞ்சி
குழந்தை போல சொல்லழகும் குமிழ் மூக்கு வாயழகும்
ஒப்பினையும் உடலழகும் ஒரு பாகம் தலை முடியும்
செப்புத் தனமுடையாள் சின்னணைஞ்சி வண்ணாத்தி
விற்புனையும் பூங்குழலாள் மேனியெல்லாம் பளபளென
கற்பனையான சின்னணைஞ்சி கமலமுக அழகு கொஞ்ச
துஞ்சலிட்ட பொட்டதிலே திருநீறு பூச்சழகும்
அஞ்சனக் கண்மை யழகும் ஆடும் கொப்புக் காதழகும்
மஞ்சணை பூசுங் கழுத்தில் மார்பிலிட்ட பொற்பணியும்
பணியணிந்த பூங்குழலாள் பூச்சுடம்பு ஒப்பினையும்
கிளி வகுத்த சின்னணைஞ்சி கீழ் மாறி பாத்த கண்ணும்
மணியுகந்த சின்னணைஞ்சி வலத்தோளில் ஏத்தாப்பும்
ஏத்தாப்பு நடையழகும் இருகை வீச்சழகும்
மாத்தாப்பாய் சின்னணைஞ்சி வளையலிட்ட கையழகும்
பாத்தவர்க்கு அழகு பெற பத்துவிரல் மோதிரமும்
சின்னணைஞ்சி வாழ் மயிலாள் தெய்வ ரம்பைபோல் வாழ்ந்தாள்

(சின்னணைஞ்சியை வண்ணாரமாடன் திருமணம் செய்தல்)

பன்னிரெண்டு திருவயதில் பாவையந்த பெண் கொடிக்கு
மண்ணுலகில் வெளுத்தெடுக்கும் **வண்ணார** மாடருக்கு
கன்னி சின்ன அணைஞ்சி தன்னை கருத்துடனே மாலையிட்டார்
மாலையிட்டு வண்ணானும் மங்கை சின்ன அணைஞ்சியுமாய்
சேவலும் பெட்டையும் போல சேர்ந்து அவர் வாழ்ந்துவாராரார்
சேலை சுத்தும் பூங்குயிலாள் தேன்மொழியாள் பெண்ணவளும்
சாலை மதி பூங்குயிலாள் சாமத்தியம் ஆனாளே
சாமத்திய சடங்கு செய்ய தன் இனத்தார் கூடி

சோமத்திய வட நாடடில் தென்காசி வண்ணார்கள்
மாமன் உரைமுறையார் வந்து சடங்குதான் முடித்தார்

(சின்னணைஞ்சியைக் கண்டு ஊரார் மயங்குதல்)

சடங்கெல்லாம் தான் முடித்து தன் இனத்தார் போனபோது
மன்னவனும் தேவியுமாய் வாழ்ந்திருக்கும் நாளையிலே
அடந்த தென்காசியிலே அவரவர்கள் மனைதோறும்
நடந்து சென்று அழுக்கெடுத்து நன்னுதலாள் வரும்போது
வரும் வழியில் சின்னணைஞ்சி வடிவு தன்னைக் கண்டவர்கள்
பெரும் விரலை மூக்கில் வைத்து பேதலித்து மயங்கிடுவார்
ஒருவருண்டோ இவள் தனைபோல் ஒப்பமுள்ள பெண்ணவள் தான்
தெருவதிலே கண்டவர்கள் தியங்கிடுவார் மயங்கிடுவார்
வண்டாடும் பூங்குழலாள் மதிமுகத்தைக் கண்டவர்கள்
கண்டாசை பட்டிடுவார் காமப் பேய் கொண்டிடுவார்
மையல் கொண்டு சிலபேர்கள் மதிமயங்கிதான் கிடப்பார்
நம்மோடே தானிணங்கி யிருந்து முகம் பாராளோ
பாராளோ பஞ்சணைமேல் வந்தவள்தான்
சேராளோ இன்றிரவு சின்னணைஞ்சி தம்மோடே
நேரான வார்த்தைச் சொல்லி நேசமுடன் நம்மிடம்தான்
சீராக நாடுகளும் திரவியமும் கொடுத்திடலாம்
கொடுத்திடலாம் அவள் தனக்கு கொடியிடையாள் வந்துவிட்டாள்

(சின்னணைஞ்சியின் நற்குணநலன்கள்)

அடுத்தவரோ டுறவாடாள் அவர்களுடன் பேசறியாள்
தொடுத்த தெருவர் தன்னோடு தூரவழி நடந்தறியாள்
வெளுத்தெடுப்பான் தன்னை விட்டு பிரிந்தறியாள்
விட்டுப்பிரிந்தறியாள் வேத்தூரில் தங்கறியாள்
கட்டுத் தறியை விட்டு கடராத ஆவினம் போல்
மட்டு வீடு காடறியாள் வரம்பு தம்பி நடக்கறியாள்
தனித்து வழி நடக்கறியாள் தங்கு நில போக்கறியாள்
இனத்து வண்ணார் தன்னோடேயிருந்து விளையாடறியாள்
வஞ்சகம் நினைத்தறியாள் வரம்பு தப்பி நடக்கறியாள்
தப்புவரக் காரரோடு சரசமிட்டு விளையாடாள்
அற்புதஞ்சேர் நடையழகி அமுர்த குண வாயழகி
ஒப்புரவாய் அழுக்கெடுத்து ஊரு சுத்தி வரும்நேரம்
ஊரிலுள்ளோர் தங்கள் முன்னே ஒழுங்குதப்பி நடக்கறியாள்
பேர் சொல்லி விளித்தாலும் பெரும் வழியில் நிற்கறியாள்
ஆரோடு வரக்கண்டாலும் அவர் முகம் பாத்தேதும் சொல்லாள்
ஏக்க முள்ள கசடருடன் எதிர்த்து நின்று வார்த்தைச் செல்லாள்
வாய் சரசக் காரர்களை வழிதனிலே கண்டுவிட்டால்

உரை சேரும் பெண் கொடியாள் உரைத்த தங்கம் போலவேதான்
விரை சேரும் மானது போல் விரைந்து வழிநடந்து
வரை சிறந்த துவரை வண்ணான் அவன் மகள்தான்
அரசி விளை குடியிருப்பு ஆயிளையாள் மனையில் வந்தாளே.

(சின்னணைஞ்சி பசியாறுதல்)

(விருத்தம்)

வந்தாள் மனையில் பிடவை கொண்டு வண்ணாரமாடன் மனம் மகிழ
இந்தா வெனவே சுமடுதனை இறக்கி கீழே வைத்து
கொன் றார் குழலாள் மனை புகுந்து குறையாய் அமுது பசியாறி
செந்தாமரையாள் சின்னணைஞ்சி சிறப்பாய் வெளியில் வந்தாளே.

(துணிச் சலவை செய்யப் புறப்படுதல்)

(வேறு)

வந்தாள் வெளியே சந்தோசமாய் சின்ன அணைஞ்சி
வண்ணானும் தானும் மகிழ்ந்து துறைதனில் போக
கொன்றார் குழலாள் கோதையர் தானும் பிடவை
குல்லாவும் சல்வாரி சேலை முழுப்பணிச்சேலை
சேலை முறுக்கன் பரு முறி துப்பட்டி வேஷ்டி
சித்திரம் போலே சருகை தலைப்பா உருமாலும்
வாலப் பருவமதாகிய சின்னணைஞ்சி தானும்
வாக்குடன் சேலை வகை வகையாகவே வைத்தாள்
வைத்த பிடவை எல்லாம் அடையாளம் பாத்து
வண்ணானும் தானும் மகிழ்ந்து துறைதனில்போக
சேயிளையாளந்த சின்னணைஞ்சியவள் தானும்
சேலை மடித்தொரு கட்டாக கட்டி யெடுத்தாள்
எடுத்தாள் குளி தாளி சட்டியும் கையில் இடுக்கி
ஏத்தாப்பு தோளில் எடுத்தொரு மாராப்பு போட்டாள்
பருக்கன் பரிமுறி சேலையைக் கீழே விரித்து
பச்சரிசி கஞ்சி வைத்து முடிந்து கொண்டாளே
கஞ்சிக் கரிசி கச்சை வைக்க நீலமும் கொண்டு
கட்டி சுண்ணாம் பொரு பொட்டணமாய் கட்டிக் கொண்டாள்
வஞ்சிக் கொடி யிடையாளைக் கொண்ட வண்ணான் தானும்
வாக்குடன் சேலை எடுத்தொரு மாராப்பு போட்டான்
போட்டான் விறகு பிளக்க கோடாலியும் தோளில்
போதரவாய் யொரு மண்ணுப் பொதி யேந்திக் கொண்டான்
கோட்டானை சூவென்று தட்டி நடத்தி வண்ணானும்
கொம்பனையாளோடு அன்பாய் துறைதனில் வந்தானே.

(வண்ணானும் சின்னணைஞ்சியும் வைத்து துணிச்சலவை செய்தல்)

(விருத்தம்)

துறைத்தலம் வந்தபோது தோகை சின்னணைஞ்சி தானும்
விறகது பிளந்து போட்டு வெள்ளாவி விளைய வென்று
தரைதனில் விழுந்த ஒரு சாணாங்கி முறுக்கிச் சேலை
கறையற வெளுக்கவென்று கன்னியும் ஆற்றில் வந்தாளே.

(வேறு)

ஆத்தங்கரையும் வெள்ளாவி துறையும்
அழகான நல்ல யிளம் மரத்தோப்பும்
ஊத்தங்கரையும் ஊத்துக்கிணறும்
ஒழுங் கொழுங்காகவே வெள்ளாவிக் கல்லும்
கல்லுந் துறையும் கலுங்கு முகமும்
கட்டான வட்டத் தருவையும் தோப்பும்
அல்லும் பகலும் அனுதினமும் வண்ணான்
அவரவர் கூடி வெளுக்கும் தலத்தில்
வெளுக்கும் தலத்தில் அழுக்கையும் போட்டு
வெள்ளத்தையும் குளி தாளியிலிட்டு
செப்பத்துட னந்த சின்னணைஞ்சி தானும்
உல்லாசமாய் சேலை கொய்து மடித்து
கொய்து மடித்து பிடித்தவள் சேலை
கொஞ்சத் தண்ணீரிலே மிஞ்சத் துவத்தி
மெய்த்ததுடன் வேஸ்டி துப்பட்டிவேஸ்டி
நீரிலடித்து சாணாங்கி முருக்கி
சாணாங்கியோடு மண்ணுமுருக்கி
சாயமும் கெட்டி வெள்ளாவியில் வைத்து
வெள்ளாவி பானைக்குத் தண்ணீரும் விட்டு
மேலே பருவட்ட சேலை வளைந்து
கிள்ளை மொழியாள் சின்னணைஞ்சிதானும்
கெம்பீரமாய் தீ அடுப்பிலே யிட்டாள்
தீ யாவி கொள்ள புகைச்சம் யேற
தீட்டுக் கறையும் அழுக்கும் உருக
மாயச் சொரூபி யந்த சின்னணைஞ்சிதானும்
வைத்த வெள்ளாவி திறம் வந்தபோது
போதரவாய்ச் சேலை ஒக்க யிறக்கி
பொதிந் தெடுப்பானே வெளுத்தெடுப்பானும்
ஆதரவாகவே சின்னணைஞ்சி தானும்
ஆத்திலே தப்பி அடித்தாளே பிடவை

அடித்தார் பிடவை யிருபேருமாக
ஆ ஊ வென்று புலம்பி புலம்பி
அடித்த பிடவை எடுத்து வண்ணானும்
வாக்குடன் சேலை விரித்தெடுப்பானாம்
ஒப்பத்துடன் சேலை துப்பட்டி வேஷ்டி
ஒக்கவே கொக்கதைப் போலே வெளுத்து
செப்பத்துட னந்த சின்னணைஞ்சி தானும்
சேலைக்கு நீலத்திரியுமே வைத்து

(சின்னணைஞ்சி துணிகளை
வீடுகளில் கொடுக்கச் செல்லுதல்)

வைத்த பிடவை வரித்து வண்ணாத்தி
வண்ணானும் சந்தோசமாக மகிழ்ந்து
ஏத்த சருகை பணி சேலை எல்லாம்
எடுத்து அடையாளம் பார்த்து மடித்து
எடுத்த பிடவை எல்லாங் கட்டி வைத்து
வண்ணாத்தியோடே வண்ணானும் சொல்வான்
குடி காட்டிலே கொண்டு சேலைக் கொடுத்து
கொத்து வாங்கிக் கொண்டு சீக்கிரம் வாடி
சேலைக் கொடுத்து மறு மாத்து வாங்கி
மாத்துடன் சோர்த்து அரிசியும் வாங்கி
மாலை மயங்கும் முன் வாடி நீ என்றான்
பூத் தானமாகிய சின்னணைஞ்சியை
போவென்று சொல்லி அனுப்பிவிட்டானே

(தீயச் சகுனம் தோன்றுதல்)

(விருத்தம்)

அனுப்பிய வண்ணான் நிக்க அழகு சின்னணைஞ்சி தானும்
தன்னுட பிடவை எல்லாம் தலைதனிலே எடுக்கும் போது
மெய்யுடன் கெவுளி சொல்ல மடந்தையர் யிடத்தே தும்ம
காப்புடன் துள்ளி கோட்டான் காவென விளிகேட்டனளே.

(சின்னணைஞ்சி மனம் கலங்கி வழி நடத்தல்)

(விருத்தம்)

கேட்டவள் தடை கண்டஞ்சி கிளி மொழி மனது நொந்து
வாட்டமாய் சின்னணைஞ்சி வலது கால் வைக்கும் போது
இட்டமாய் விருது சாட இடமாக ஒரு காகம் ஓட
கேட்டு மா தனத்தாள் முன்னே குசவன் வரவும் கண்டாள்.

(விருத்தம்)

கண்டோம் நமக்கு கொரு தடை காலம் நமக்கு போறாது
சென்ற யிடத்தில் பகை வருமோ சேலை பிடவை பறிபோமோ
கொண்ட கணவன் தனக்கேதோ கொடியாள் நமக்கேது விதியோ
என்ற புலம்பி சின்னணைஞ்சி யிதமாய் நடந்தாள்.

(விருத்தம்)

நடக்கும் கடவுள் நடத்தி வைத்தால் நம்மாள் இனிமேல் என்செயலாம்
படைத்த பிரம்மன் விதித்தற்க்குப் பதறி யறைக்குள் யிருந்தாலும்
அங்கும் வருமே வரும் விதிதான் எடுத்த பிடவை யிறக்காமல்
எடுத்தமாத்து யிறக்காமல் யிதமாய் மயில்போல் நடந்தாளே.

(அழகு சின்னணைஞ்சி தென்காசிபதி வருதல்)

(வேறு)

நடந்தாள் மயில் போலே நன்னுதலா ளந்த சின்னணைஞ்சி
குடந்தாங்கும் வேல்விழியாள் கோல மெழுதின சித்திரம் போல
அடந்த மரத்தோப்பும் ஆத்தங்கரை சுமை தாங்கிவிட்டு
படந்த பிரடு மிட்டு பைங்கொடியா ளந்த சின்னணைஞ்சி
மடந்தை கிளியது போலே மஞ்சணை வாடை யழகு கொஞ்ச
அழகான வொற்பணியும் ஆசார சொல்லும் கை வீச்சழகும்
இள மயில் போலே யிங்கிதமான குறு நடையும்
நடையும் தூடியிடையும் நாணயச் சொல்லும் கைவீச்சழகும்
மடவாள் மதிமுகமும் அவள் வர்ண வரிபரி பொட்டழகும்
அழகான வொற்பணியும் நல்ல ஆடும் கொப்புக்குழல் காதழகும்
திட்டமாய் எடுத்துடுத்து சேலையில் கஞ்சி கசகசவென
கஞ்சி கசகசவென அவள் கையில் வளையல்கள் கலகலவென
வஞ்சி கொடி யிடையாள் மையிட்ட கண்ணும் மதிமுகம்
கொஞ்சும் குமிழ்மூக்கும் கோதி முடித்த தலை முடியும்
முடியும் தூடியிடையும் முந்தாணி சேலையும் யேத்தாப்பும்
பிடிபோல் நடையழகி பேடை மயில் போல சின்னணைஞ்சி
கடிதாய் வழிநடந்து தென்காசி புரமென்ற பட்டணத்தில்
வடிவழகி சின்னணைஞ்சி பொன் மயிலாள் வரும் நேரம்

(சிவனணைந்த பெருமாள் சின்னணைஞ்சி அழகில் மயங்குதல்)

படை வீட்டில் சேவுகரும் பக்கத்தில் சிறுக்கனுமாய்
தூடியழகன் மணிமார்பன் சிவனணைந்த பெருமாளும்
பேரால் அழகன் என்றும் பூலோக யிந்திரன் போல்

செண்பகப்பூராசன் மகன் சிங்காணி வில்லெடுத்து
கருமுகில் போ லழகன் காவல் பண்ண அணைஞ்சவனார்
திருவான பூங்குழலாள் சின்னணைஞ்சி தெருவில் வந்தார்
மோதி வளந்திருக்கும் மிக்கான சாலை மரங்களிலே
கோதுங் குயி லன்னமும் கொண்டஞ் சீராடி கரிக்குருவி
கூவுங் குயி லன்னமும் கோல நெடுந் தெரு வீதியிலே
பருவத் திள மடவாள் பக்குவமாகிய சின்னணைஞ்சி
வரும் போதவள் வடிவு கண்டு மையல் கொண் டேங்கினாரே.

(வேறு)

மையல் கொண்டேங்கி மடலெடுத்தாரே
வடிவன் சிவனணைந்த பெருமாளும்
கையில் தெறி வில்லொரு புறம் சோர
கண்ட வண்ணாத்தியைக் கொண்டாடி
கொண்டார் கொண்டாடிக் காமக் குளிரும் பிடித்து
கோமான் சிவனணைந்த பெருமாளும்
மண்டலந் தன்னில் இவள் தன்னைப் போலே
பாக்குச் சுவடு வடிவது போலே வடிவது கண்டு
வண்ணாத்தி பேரில் ஆசை கொண்டாரே
ஒப்புடன் அவள் உடலழகுக் கண்டு
உள்ளாசை கொண்டார் சிவனணைந்த பெருமாள்
செப்புத் தனமும் சிறந்த மூக்கும்
தேசத்தில் இப்படி கண்டது மில்லை
இல்லை நமக்கு இவள்தனைப் போலே
இப்படிப் பெண்கள் ஒருத்தி கிடையாது
அல்லும் பகலும் இருந்து நம்மோடே
ஆசார வார்த்தைப் பேச வாராளோ
வாராளோ சின்ன அணைஞ்சி என்று சொல்லி
வாய் வந்த மட்டும் உளறியே நின்றார்
தாராளமாகிய சின்னணைஞ்சியை
தாழ்ந்த குலத்தில் பிறக்க வைத்தாரே
விதித்த பிரம்மனுக்கு என்ன தீவினை செய்தாளோ
வெளுத்தெடுப்பான் குலத்தில் பிறக்க விதித்தானே பிரம்மன்
சிரித்த முகச் சின்னணைஞ்சியைக் கண்டு
சிவனணைந்த பெருமாள் உள்ளாசைக் கொண்டார்

(சிவனணைந்த பெருமாள் சின்னணைஞ்சியை வழி மறித்தல்)

பூவிலே வண்டு துடந்தது போலே
பொன்னணைந்த பெருமாளும்

சின்னணைஞ்சியைக் கண்டு
கோயிலும் கொட்டார வாசலும் விட்டு
குருவான நந்தி மடமும் கடந்து
ஆவலுடன் சிவனணைந்த பெருமாள்
அன்பான சின்ன அணைஞ்சியைக் கண்டு
தாகத்தினால் காம மோகத்தினாலே
தையலே போகாதே நில்லு என்று மறித்தாரே.

(விருத்தம்)

நில்லு என்ற வார்த்தை நேரிளை காதில் கேட்டு
மெல்லவே திரும்பி பார்த்து விழியினா லருவி சாட
மை விழியானவள் தான் மனமது சினந்து வாடி
தொல்லையோ சிவனே என்று தோன்றியே எண்ணினாளே.

(சிவனணைந்தபெருமாள் தனது ஆசையை சின்னணைஞ்சியிடம் கூறுதல்)

(வேறு)

நின்ற வடமயில் சின்னணைஞ்சி முகம் நோக்கி
நேரிட்டு பார்த்து அணைஞ்சவனார் ஏது சொல்வார்
கெண்டையைக் கொண்ட மடவாளே உனைத்தேடி நானும்
கீழத் தெருவெல்லாம் சூழத் திரிந்து வந்தேனே
வந்தேனடி பெண்ணே சின்னணைஞ்சி உனைத்தேடி
வாழ்மயிலே ஒரு மாத்தெனக்குத் தருவாயோ
மாத்தென்ற சொல் கேட்டு வானுதல் சின்ன அணைஞ்சி
மறுத்தொரு உத்தரம் சொல்லவும் மாட்டேனே அய்யா
நில்லென்று சொல்லி நிறுத்தாதேயும் சுவாமி
நேத்து வரைக்கும் மதுரைக்கு நான் போகவுமில்லை
வல்லவர் பொன்னும் அணைஞ்சபெருமாளே கேளும்
ஒரு வாக்கு சொல்லி விட்டால் மாத்து கொடுத்து விட்டேனோ
மாத்துக் கல்ல சின்னணைஞ்சி உனைத்தேடி
வாழ்மயிலே நானும் வந்த கருமத்தைக் கேளு
பூத் தனமாகவே நாம் யிருபேரும் ஒன்றாய்
பூவணைமேலே யிருந்து நலம் செய்ய வாராய்

(சின்னணைஞ்சி மறுப்பும் சிவனணைந்தபெருமாள் சீரழிப்பேன் எனலும்)

வாடி நீ என்றென்னை மோடி பறைந்தீரேஅய்யா
வையகம் எங்கும் துரைபாலன் அணைஞ்ச பெருமாளே

தேடியே வீணான வார்த்தைகள் பேசவும் வேண்டாம்
தேடிய பொன்னும் திரவியமும் தருவேன்
தேனே மரகத வாழ் மயிலே சின்ன அணைஞ்சி
பொன்னும் பணமும் புதையல் நமக்கது வேண்டாம்
உங்கள் பேர் சொல்லி கஞ்சி குடித்துப் பிழைப்பேன்
கன்ன மிட்டு கன்னம் மருட்டின சித்திரம் போலே
வாக்குச் சொல்லி வழி போக்கிவிடாதேடி பெண்ணே
பெண்ணாலே சாவு மண்ணாலே சாவென்று வேணாம்
பூவாலே நாரும் கொதிபெற்ற வளமை யறியாயோ
முன்னமே நாமள் இருபேர்க்கும் சொந்தக் கூருண்டு
மோசப்படுத்தாதே ஆசை கொண்டேன் உந்தன் மேலே
ஆசை கெண்டீரானால் மாமி மகள் உண்டு போவும்
ஆகாத துவரை வண்ணாத்தியை நீ தொட வேண்டாம்
நீ யென்று சொன்னால் பொட்டைக் குலைத்து விடுவேன்
தாசி தொழில் செய்யும் வேசை மடவார்கள் உண்டு
கண்டவர்க்கு முந்தி விதிக்கும் கசமாலியல்ல
அன்னமே சின்ன அணைஞ்சியே வண்ணாரப் பெண்ணே
ஆசை கொண்டேன் நானும் மோசப்படுத்தாதே நீயும்
தென்னவனே சிவனணைந்த பெருமாளே கேளும்
தேசத்துக்குச் சேராத மோசமொழி பறைந்தீரே
மோசம் வந்தாலும் விடுவதில்லை உன்னை நானும்
வேரொரு கேசி உண்டோ உனை கூறு செய்தால்
வாசம் புகழும் மடக்கொடியே சின்ன அணைஞ்சி
சொன்னபடியே சீரை யழிப்பேன் உனை நானும்

(சீவல மாறன் மகளை மணமுடித்துக்கொள் என்று கூறிசின்னணைஞ்சி வழி நடத்தல்)

பெண்ணுக்கு பெண்ணான ராசதுரை மகளுண்டு
பொல்லாத துவரை வண்ணாத்தியை நீர் தொடவேண்டாம்
கண்ணுக்குக் கண்மணியே சின்ன அணைஞ்சி
காமனுக்குக் கண்கண்ட யிட மறியாயோ
கண்டவர்க் கேறாத வண்டத்தனம் செய்ய வேண்டாம்
காமத்தைத் தானும் கடவுள் அறியவும் மாட்டார்
திண்டுக்கு முண்டான விசனத்தை நீர் பறைந்தீரே
சித்திர வார்த்தைகள் மெத்த படித்தவர் போலே
மெத்த படித்தாலும் சுத்தம் இல்லாச் சாதி நாங்கள்
பண்புடன் நாளை நான் அன்புடனே வாரேன் என்றாரே.

(சிவனணைந்த பெருமாள் சின்னணைஞ்சியை நினைத்து வாடுதல்)

(விருத்தம்)

நாளை நான் வாரேன் என்று நன்னுதல் சொன்னபோது
வீராதி வீர வேந்தன் மெத்தவே மனது நொந்து
ஆளில் அழகான அணைஞ்சவ ராசன் தானும்
வேளை யின்றில்லை யென்று விளங்கும் மாளிகையில் வந்தாரே.

(வேறு)

மாளிகைக்குள் வந்திருந்து மன்னவனும் அரசிருந்தான்
வந்த நல்ல சின்னணைஞ்சி ஒரு வார்த்தைச் சொன்னதில்லை
கண்ட நல்ல நாள் முதலாய் கண்ணுறக்கம் வருகுதில்லை
அன்றுவிட்ட பெருமூச்சு ஆனை விழி எரிந்ததுபோல்
ஆசை கொண்டு நாவுழன்று அங்கமெல்லாம் தடுமாறி
வாசம் புகழ் மணிமார்பன் வடிவ னந்த ராச மன்னன்
காச்சலுடன் குளிர் பிடித்து கவலையுடனே யிருந்தார்
என்னுடைய மாளிகையில் யிருந்து நலம் பாராளோ
பாராளோ வாராளோ பஞ்சணைமேல் தானிருக்க
நீலக் கருங்குயிலாள் நினைத்தபடி வாராளோ
சீராகும் குழவி நம்மை சேராளோ இன்றிரவு
சின்னணைஞ்சி தன்மேல்தான் சினேகம் வைத்தார்அணைஞ்சவனார்
வண்ண முகம் விளக்காமல் மஞ்சணை நீராடாமல்
அன்னந் தண்ணீர் குடியாமல் அமுதேற்றம் கூடாமல்
படுக்கையிலே தானிருந்து பலவிதமாய் எண்ணுவாராம்
புலம்புவாராம் தனித்திருந்து பொருள் பறிகொடுத்தவர்போல்
நலம் புகழும் மணிமார்பன் நல்லதொரு ராச மன்னன்
தலமதையும் ஒரு குடைக்குள் தரணி யரசாளாமல்
குலம் பகைக்க வேணாமென்று கொஞ்ச வண்ணார் பெண்ணாலே
பெண்ணாலே காதல் கொண்டுப் பேதலித்து முகம்வாடி
எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணுவாராம் அப்போது
விடியும் மட்டும் தனித்திருந்து வேந்தன் சிவனணைஞ்சவனார்
கொடியிடையாள் சின்னணைஞ்சி கொம்பனையைக் காணாமல்
ஆடரங்கு மாளிகையில் அருகில் வரக் காணேனே
பாத்திடுவார் நாலுதிக்கும் பறிகொடுத்தபேர்களைப் போலே
வேத்திடுமாம் மேனி எல்லாம் வெளுத்தெடுப்பான் மகளாலே
பூத்தச் செந்தாமரை முகத்தாள் பொற்கொடி மேலாசைக் கொண்டு
ஆத்திடவும் மாட்டாமல் அழுவார் எழுந்திருப்பார்
எழுந்திருந்து பரிதவித்து ஏதுமொழி சொல்லுவாராம்
அன்று கண்ட மயிலாளை என்று இனி கண்டிடுவேன்

மானைப் பிரிந்த கலையது போல மதிமுகமும் வாடிடுமாம்
கஞ்சி குடிதனை மறந்து கை சோர்ந்து வாள் போடார்
கொஞ்சு வெள்ளை உடை மறந்தார் கொலுவிருப்பு தான் மறந்தார்

(சிவனணைந்தபெருமாள் சின்னணைஞ்சியைத் தேடிவரல்)

மஞ்சி கவிழ்ந்தே திரியும் மலையிலுள்ள வேடரைப் போல்
வேடரைப்போல் காடதிலே வெழுத்தெடுப்பாள் தனைத்தேடி
ஆடரங்கு மேடைவிட்டு அழகிய பூஞ் சோலைவிட்டு
தேடரிய சிறுக்கனுடன் சிவனணைந்த பெருமாளும்
கூட ஒரு குடைக்காரன் குஞ்சுராம சிறுக்கனுமாய்
ஆக இவர் மூன்றுபேரும் அருள் அணைஞ்ச பெருமாளும்
தோழன்மார் எல்லோரும் தெருக் கடந்து வாரபோது
மாது நல்லாள் வாராதே சின்னணைஞ்சி வாரதொரு வழிதனிலே
பெரும் வழிக்கு நேர் வடக்கே பேராழிக் குளக்கரையில்
திருமாலின் செயலெனவே சின்னணைஞ்சி தனைத்தேடி
இருவிழியால் தேடுவாராம் எங்கு வருவாளேனவே
மங்கை சின்ன அணைஞ்சி வரும் வழியில் வந்திருந்தாரே.

(வேறு)

இப்படி வழிதனிலே எங்கு வருவாளெனவே
என்று அணைஞ்சவ ரிருக்கும் நேரம் (என்று...)

ஒப்புடைய மாது மின்னாள் கற்புடைய சின்னணைஞ்சி
ஊழி விதி வார தறியாமல் (ஊழி விதி...)

நாற்புடைய தேன்காசிப் பட்டணம் தனிலே சென்று
நல் பருவாட்டங் கொடுக்க வென்று (நல் பருவாட்டங்...)

மெய்யுடன் புடவை துகில் துப்பட்டி வேஷ்டி உருமால்
வெண்மையுடனே வெளுத்துக்கட்டி (வெண்மை...)

கெட்டிப் பருவாட்டமோடு கட்டி தலைமேல் வைத்து
கெம்பீரமாய் சின்னணைஞ்சி தானும்
(கெம்பீரமாய்....)

சிட்டுக் கருக்சன் முறுக்கி கட்டி விரலாளி பட்டு
சேலை முடிந்து தோளில் போட்டாள் (சேலை...)

மட்டிருக்கும் வேல்விழியாள் மங்கை யிளம் பெண்கொடியாள்
வாழ் மயிலாள் சின்னணைஞ்சி தானும் (வாழ் மயிலாள்...)

பொட்டுக் குறியும் முகமும் பிரகாசம் போலிலங்க
பேடை மயில் போலே நடந்தாளே (பேடை மயில்...)

நடந்தாளே தென்காசி துரை ஊரும் சுமைதாங்கி விட்டு
நாட்டுகல் விளையுங் கடந்தாளே (நாட்டுக்கல்....)

படந்த பிரடுமிட்டு மறையதுவுங் கடந்து
பட்டக சாலியன் வைத்த மடம் விட்டாள்
(பட்டகசாலியன்...)

துடந்தங் கிளை மரத்தில் சோலையான சோலை விட்டு
துங்க மயில் போல நடந்தாள் (துங்க மயில்...)

மடந்தை கிளி மொழியாள் வாணுதலாள் சின்னணைஞ்சி
வாடை யுடையும் நடையுமாக (வாடையுடை...)

நடையும் துடியிடையும் நாணயக் கை வீச்சழகும்
நன்னுதலாள் சின்னணைஞ்சி தானும் (நன்னுதலாள்...)

இடையும் உடலழகும் இலை போல வயறழகும்
இவ்வுலகில் கண்டதில்லை என்று (இவ்வுலகில்...)

விடையில் எழுந்திருக்கும் விமலன் திருவருளால்
வெல்ல வந்த சின்னணைஞ்சி என்று (வெல்ல வந்த...)

குடையாய் மலை யெடுத்த கோவலன் குண்டோதரனை
கொல்ல வந்த கோலமது போலே (கொல்ல...)

கோல மயிலணையாள் மாமரச் சோலைவிட்டு
கொம்பனையாள் சின்னணைஞ்சி தானும் (கொம்பனை...)

கோலமிடும் மாதர் சுனையாடும் சுனையுங்கடந்து
ஒசை மணிநாதன் கோயில் கண்டாள் (ஒசை...)

ஏல நெடும் பூங்குழலாள் சாலை வழியுங் கடந்து
எல்ல வரத்துக் கடையும் விட்டாள் (எல்லவரத்து...)

மாலை வட மார்பசைய மங்கையவள் சின்னணைஞ்சி
வழி நடந்து பேராழிக் குளக்கரையில் வந்தாளே.

(சிவனணைந்த பெருமாள் சின்னணைஞ்சியைத் தடுத்து நிறுத்துதல்)

(விருத்தம்)

வந்தாளே குளத்தங் கரையதிலே வானில் கதிரோன் உதித்ததுபோல்
செந்தாமரையாள் சிறந்திலங்கத் தேனார் மொழியாள் சின்னணைஞ்சி
கொத்தார்புகழும் அரச கோமான் சிவனணைந்தவனார்
இந்தா வந்தாள் நா னினைத்த யிளமயிலாள் என்றெதிர்த்தாரே.

(வேறு)

எதித்து நின்று தான் மறித்து யிலங்கும் சிவனணைந்தவனார்
மதத்து வந்த ஆனையைப் போல் வழிமறித்தா ரப்போது
சொல்லுவாரா மப்போது சூரனந்த ராச மன்னன்
நில்லு நில்லு போகாதே நேரிளையே சின்னணைஞ்சி
போகாதே என்று சொல்லி வரும் வழியில் தான் மறித்தார்

(சின்னணைஞ்சி தனக்கு திருமணமாகிவிட்டதைச் சொல்லி அறிவுரை வழங்குதல்)

ஆகாது காணுமக்கு அழிவு வரும் கண்டீரோ
அழிவுவரும் என்று சொன்ன அரணங்கே நீ கேளு
மொழிவ தெல்லாம் நீ கேளு மோசம் வந்தாலும் விடுவதில்லை
விடுவதில்லை என்று சொல்லி வீணிலே நீர் ஆசை கொண்டீர்
படுவது தான் நிச்சயமே பாரளந்தான் தன் ஆணை
உன்னாலே படுவதற்கு ஊழி விதி உண்டானால்
என்னாலே செய்வதென்ன ஏந்திளையே சின்னணைஞ்சி
ஊழி விதி தானுமக்கு ஒருவரில்லா கானகத்தில்
பரிதவித்தேன் உனைத் தேடிப்பார்த்து முகம் வாடி விட்டேன்
வாடி விட்டேன் உன்னாணை மறுக்காதே சின்னணைஞ்சி
தொல்லை வழக்கிடவேண்டாம் தூர நிக்கும் சாதியல்லோ
தூர நிக்கும் சாதியல்லோ சொல்லுகிறேன் கேளுமையா
குடியடைகள் உமக்கானால் எனைக் கொண்ட வண்ணார் வேறவுண்டு

(சின்னணைஞ்சி புத்திமதி சொல்லுதலும் சிவனணைந்த பெருமாள் பிடிவாதம் செய்தலும்)

கேளுமையா ராசமன்னா கீர்த்தி பெற்ற வாசகத்தை
ஊரும் வெளுப்பீரோ உற்ற வண்ணார்க்கும் சேருவீரோ
ஆகட்டும் சின்னணைஞ்சி அதற்கும் இல்லையென்று சொல்லமாட்டேன்
கழுதை பத்தும் கம்பெடுத்து கடுந்தூரம் போவீரோ
ஆகட்டும் சின்னணைஞ்சி அதற்கும் இல்லையென்று சொல்ல மாட்டேன்

கலியாண வீடதிலே மேல் கட்டும் கட்டுவீரோ
ஆட்டாட்டும் சின்னணைஞ்சி அதற்கும் இல்லை என்று சொல்ல மாட்டேன்
குழந்தை பெற்ற வீடதிலே மாத்து குடுப்பீரோ மறு மாத்து கொடுப்பீரோ
இழவு வீடு ஆனதிலே ஏற்ற தலை வாசலிலே
பட்டம் கட்டும் யிட மதிலே ஒற்ற பந்தல் கட்டுவீரோ
இடுகாடு போம்போது நடை மாத்து கொடுப்பீரோ
சவமடக்கி வரும்போது கை வளமை வாங்குவீரோ
ஆட்டாட்டும் சின்னணைஞ்சி இல்லை என்று சொல்ல மாட்டேன்
மாடனுட கோயிலுக்கு மணிப்பந்தம் கட்டுவீரோ
குட்டி வெட்டும் வேளையிலே கால் பிடித்துக் கொடுப்பீரோ
கஞ்சி எடுப்பீரோ நாச்சிமாரைக் கை வணங்கி நிற்பீரோ
அந்த நல்ல வேலை எல்லாம் அரசனுமே சம்மதித்தார்
குழந்தை யழுதுவிடும் மாட வண்ணானும் தேடுவாரே
மாட்டேன் என்று சொன்னதுண்டால் மடிப்பிடிப்பேன் சின்னணைஞ்சி
மடிப் பிடிக்க உன்னுடைய மாமன் மகள் இல்லையோதான்
பெண்ணாலே அழிந்தவர்கள் பேருலகில் மெத்த உண்டு
ஆணாலே கெட்டவர்கள் ஆருமில்லை வையகத்தில்
அண்ணாமலையானைப்போல் அழிந்திடுவீர் வண்ணாத்தியால்
உன்னாலே படுவதற்கு ஊழி விதி உண்டானால்
அடுத்து உன்னை தொடுவதுவும் ஆயனிட்ட கட்டளைதான்
இழுத்து மடிப் பிடித்ததுண்டால் யினத்தில் உள்ளோர் ஏசாரோ
இனத்தில் உள்ளோன் பகைத்தாலும் எத்தனை பேர் காய்ந்தாலும்
புனத்தில் வாழும் கிளியாளே பெண்ணே உன்னை விடமாட்டேன்
கிளிபோல் மொழியாளே கொஞ்சு வாய் ரெஞ்சிதமே
வழிமேல் உனைத்தேடி வாடிவிட்டேன் மானே
மானே மரகதமே வஞ்சியர்க் கெல்லாம் அரசே
தேனே பசுங்கிளியே தெகிட்டாத தெள்ளமுதே
அமுர்த குணத்தாளே ஆசாரச் சொல்லாளே
தூக்கம் வருகுதில்லை தூய ரொருநாள் மாறுதில்லை
மாறாத காதலுக்கு மனது விடு சின்னணைஞ்சி
ஆறாத படியாலே ஆயிளையே சின்னணைஞ்சி
தேடிவந்தேன் புதைத்து வைத்த புதையலது எடுப்பவர்போல்
கோடி முகம் வாடிவிட்டேன் கொலுவிருக்க வாடி பெண்ணே
கொலுவிருப்பு உங்களுக்கு கோச் சீமையும் உங்களுக்கு
வலுவிருப்பு எங்களுட வண்ணார்க்குச் செல்லாது
செல்லாத யிட மதிலே சென்ற துண்டால் மோசம் வரும்
விளைவதெல்லாம் நம்முடைய விதியை வெல்ல யாருமில்லை
சிவனடியைப் போற்றி செய்து சிறந்திருந்து வாழாமல்
யுகம் முடிய வேணுமென்று ஊரி லழுக்கு எடுக்க வந்தீர்
அழுக் கெடுத்து வெளுப்பதுவும் ஆசாரம் எங்களுக்கு
இழுக்கில்லை காண் எங்களுக்கு இவ்வூரு அறியாதோ

ஊரு சுத்தி மாத்தெடுத்து ஊருவழிதோறும் சென்று
ஆருமத்தார் போல் திரிந்து அலையவுந்தான் விதிதானோ
அலையாமல் நீரிருப்பீர் அரசமன்னா கொலுவதிலே
துலையாத கல்போட்டு துயிலடிக்கும் சாதியல்லோ
நீயும் கல்லதிலே மல்பொருதக் காரணமோ சின்னணைஞ்சி
அல்லரிய குழலாளே ஆடரங்கு வாடி பெண்ணே
ஆடரங்கு வருவதற்கு அம்மான்மார் மக்களுண்டு
வீரியங்கள் பேசாதே ஊரிடத்தில் போவோம் வா என்றாரே.

(ஆசையை தீர்த்துவைக்க வேண்டுதல்)

(வேறு)

உன்னுடைய ஆசையது ஒருநாளும் மறக்குதில்லை
ஆசையுடனே அடியானை வைத்து ஆதரித்தால்
ஆத்திலே தப்பி அடித்து பிடவை தருவேன்
தப்பி பிடவை சலுகைச் செய்து தரவேண்டாம்
தையலே என்னுடைய மையலை தீரு சின்னணைஞ்சி
மையும் யிருளும் மழைக்கா யிருளென்று இருப்பேன்
மறுத் தொரு வார்த்தைகள் உத்தரம் சொல்லவும் வேண்டாம்
உத்தர வார்த்தைகள் ஒருக்காலே பேசுறாய் பெண்ணே
கூடம் ஒன்று போட சித்தியல் ரெண்டு போட்டாப்போல்
சித்தச் சுழலிகள் எத்தனை பேருண்டு போவும்
சுட்ட மண்ணும் பச்ச மண்ணும் துணையாகி விடுமோ
மண்ணைப் படைத்தொரு பெண் ணுருவாக்கிய முன்னே
வம்புக்கு துன்பம் வகுத்து பிரம்மன் படைத்தானே
கண்ணைப் படைத்தவர் உன்னையும் பெண்ணையும் கண்டு
எட்டா பழத்துக்குக் கொட்டாவி விடச் சொல்லி
இல்லை என்றால் யிந்த தொல்லை கணக்கு வருமோ
எனைப் பறையாதே ஏந்திளையே என்றுரைத்தாரே.

(சின்னணைஞ்சியைத் தடுத்து நிறுத்தி ஏற்றுக்கொள் எனல்)

(விருத்தம்)

உரைத்தோர் மொழியைச் சிரித்தவர் மகிழ
உறுதியுடன் சிவணைந்த பெருமாளும்
அரகரா சிவனே குருபரா முருகா
அம்புவிதனில் இந்த வம்பியைக் காணேன்
கணேன் இந்த மானிலந் தன்னில்
காரிளையாளயென்று பெருமாள் தானும்
தாகத்தினால் காம மோகத்தினாலே
தையலே போகாதே என்று வழிமறித்தாரே.

(வேறு)

சொல்லுவாராம் ஒரு வார்த்தை
சோதி முகத்து வாய் திறந்து
பொட்டணமாகவே மாத்தெடுத்து
பெண் கொடியா ளந்த சின்னணைஞ்சி
கேலிக்காரி உனைத் தொடர்ந்தேன்
கச்சி வார்த்தைப் பேசாதே
பறையாதே என்ற வார்த்தை
அணஞ்சவனார் சொன்னபோது

(சின்னணைஞ்சி மறுத்து உரையாடுதல்)

இன்பமுடன் சின்னணைஞ்சி
ஏது மொழி சொல்லுவாளாம்
வையகத்தி லுள்ளோர் வணங்கும்
வேந்தா மாலணைஞ்ச பெருமாளே
அழிவதும் பெண்ணாலே யல்லோ
அழகு வேந்தா சொல்லுகிறேன்
மொழியுங் கொந்தியில் வேந்தன் வள்ளிக்காக
முதலும் தோத்து மதிகெட்டா னில்லையோ
மாட்டிலேறிக் கொண்டா ரந்த யீசனார்
நீதியுடனே மதியச் சடைக்குள்ளே
நல்ல சரத்தையும் சூடவும் இல்லையோ
சூட்டினார் புலித்தோலையும் மேனியில்
துவரை வண்ணான் மகளே உனக்கென்ன
கோபியர் கலைத் துகிலதை வாரியே கொப்பன்
குருந்தேறி ஒளிக்கவும் இல்லையோ
முன்னமே உள்ள தொல்லைகள் சொல்லி
மோகத்தாலே எனைப் பற்ற நீதியோ
தென்னவர் போற்றும் வீராதிவீரனே
தேசம் மெய்க்கும் அணைஞ்ச பெருமாளே
மெய்க்கும் மாதர் வெளுத்தெடுக்கும் பெண்ணே
மேதினியில் உனைப் போலில்லையே

(சின்னணைஞ்சியைப் பொட்டைக் குலைத்து அனுபவிப்பேன் எனல்)

ஆசார வார்த்தைப் பறைந்து நீ என்னோட
சரிக்குச் சரியான வார்த்தை உரைக்கிறாய்
ஊக்கமான உன் செய்தியும் சொல்லையும்
உன்னுடைய தூடி தூடிப்பானதுவும்
கை சரசமிட்டு நால்பேரும் காணவே

சந்தியில் விட்டு பந்து போலாட்டியே
ஆட்டம் கண்டு உன் மேட்டித் தனத்தையும்
ஆகட்டும் நீ சொன்ன அதிகார வார்த்தையும்
சுட்டி சொன்னதற்காகவே நானுன்னை
கோட்டிச்செய் துந்தன் பொட்டைக் குலைத்து நான்
கூத்துப் பாத்து குரங்காட்டம் கொள்ளாவிட்டால்
வாழும் காசி புறநகர் ஆளுகின்ற
மண்டலீகன் துரை மகன் நானல்ல
கோழிக் குஞ்சைக் கெருடன் எடுத்தாப்போல்
கொண்டுப் போகாமல் போனேனே யாமாகில்
பூழிய னென்றே சூழலகு ஏழுக்கும்
பொன்னணைஞ்ச பெருமாள் நானில்லைவென்றே சவாலிட்டாரே.

(சிவனணைந்த பெருமாள் மனம் வாடி மாளிகைக்குத் திரும்புதல்)

(விருத்தம்)

என்றவர் வாது சொல்லி ஏந்திளையாயளை விட்டு
சென்றவர் தோழரோடு சீக்கிரம் காசி நாட்டில்
மண்டலத் தரசன் வந்து மாளிகை புகுந்தபோது
கண்டு மற்றுள்ளோ ரெல்லாம் தொழுது நின்றாரே.

(மறத்தலைவன் முக வாட்டத்திற்கான காரணம் கேட்டல்)

(வேறு)

ராசனுமே வீற்றிருக்க நாட்டியங்க ளாடி வர
பிள்ளையைப் போல வளத்த மறத்தலைவன் சூழ்ந்திருக்க
மறவன் **வல்லாளத் தேவன் வன்னியப்பத்தேவனோடு**
மாடப்பன் னோடும் **வன்னியப்பன்** முன்னே நிற்க
இப்படியே கொலுவதிலே இருந்தாரே அணைஞ்சவரும்
சின்னணைஞ்சி பெண்ணாலே உள்ளுடைந்து வாடினரே.

(வேறு)

இப்படியே ராசமன்னன் என்ன செய்வோம் என்று சொல்லி
என்ற றணைஞ்சவ ரிருக்கும் நேரம்

(என்றணைஞ்சவர்...)

செப்பணி விடைகள் செய்து கொண்டு அருகாக நிக்கும்
தூதரோடும் மறந்தலைவன் சொல்வான் (தூதரோடும்...)

கட்டுடனே உம்முடைய கமல முகம் சோர்வதென்ன
கவலை கொண்டு நீ ரிருப்ப தென்ன (கவலை ...)

அட்டதிசை எட்டு மொரு மட்டுப்படுத்தி யுலகம்
ஆண்டிருந்த எங்கள் தம்பிரானே (ஆண்டிருந்த...)

தம்பிரானே என்னுடைய வொன்னுமுடி காவலனே
உந்தனுக்கு வந்த குறை என்ன (உந்தனுக்கு...)

எம்பிரானையும் தொழுது தம்பிரானே வீதியிலே
எழுந்திராமல் இருப்பதென்ன (எழுந்திராமல்...)

என்னக் குறை உமக்கு வண்ணமுகம் வாடுவானேன்
என்னோடு உறையும் தம்பிரானே (என்னோடு...)

வொன் னறைக் கருவூலத்தில் வொக்கிசம் அழிந்ததுண்டோ
போர்க் களத்தில் வீரர் மடிந்தாரோ (போர்க்....)

வீரருடனே வும்முடைய ஆள்களில் சில பேரை
வெட்டிச் சிறைகொண்டுப் போனதுண்டோ (வெட்டிச் ...)

பற்றுப்படர் வாள் திகழ் வீரர் மடிந்ததுண்டோ
பர்ணக சாலை யழிந்ததுவும் உண்டோ (பர்ணக...)

மாற்றான் படையெடுத்து வந்து தோரணமும் கட்டி
வந்து கப்பம் கேட்டதுவும் உண்டோ (வந்து கப்பம்....)

ஏற்ற துரை மக்களிலே யாவராருவர் உம்முடைய
இட்ட சட்டம் மீறினதும் உண்டோ (இட்ட ...)

அந்தணரை வருந்தச் செய்து தானங்கள் தனைத் தவிர்த்து
ஆகம சாலை அழிந்ததுவும் உண்டோ (ஆகம சாலை....)

(சிவனணைஞ்ச பெருமாள் சின்னணைஞ்சி மீது கொண்ட மோகத்தைக் கூறுதல்)

நித்தமுடனே தொழுது மந்திரி உரைத்தபோது
சிவனணைந்த பெருமா ளேது சொல்வார் (சிவனணைந்த....)

புத்தியுள்ள என்னுடைய மந்திரி மறத் தலைவா
சீர் பெறவே நானும் சொல்லக் கேளு (சீர் பெறவே..)

சூழ்ந்து நின்ற பேர்களையும் தூர நிற்கச் சொல்லிவிட்டு
துயரமெல்லாம் தானும் சொல்வாராம் (துயரமெல்லாம்...)

கந்த மலர் சேயன்ன கண்ணான சேவுகனே
காரியத்தை நானுரைக்கக் கேளு (காரியத்தை.....)

எந்தன் மனச் சங்கடத்தை யானுரைக்க நீ கேளு
எந்த வகை யானாலு மிப்போ (எந்த....)

மேதனைய பூந்தனத்தாள் வெளுத்தெடுப்பான் பெற்ற மகள்
மேதினியில் இவள்தனைப் போல் இல்லை (மேதினியில்..)

ஆளில் அழகி மின்னாள் அன்னமென்னுட சின்னனைஞ்சி
ஆயிளையாள் தன்னுடைய அழகு (ஆயிளையாள்....)

துவரை வண்ணான் மகள் தனைப் போல் சீமையிலே கண்டதில்லை
தொட்டவர்கள் விட்டுவிட மாட்டார் (தொட்டவர்கள்.....)

கண்டவுடன் மதிமயங்கி காதல் கொண்டேன் அவள்மேலே
கவலையது தீர்க்கவேணும் என்றாரே.

(மந்திரி அறிவுரை கூறுதல்)

(வேறு)

சொன்ன மொழியானதெல்லாம் சூச்சியமாய்தான் கேட்டு
என்னமொழி சொன்னீர் காண் என்னுடைய ராச மன்னா
முன்னிருந்த ராசாக்கள் மூதாக்கள் அனைபேர்கள்
மன்னவனே இப்படித்தான் வரம்பு தப்பி நடந்ததுண்டோ

(சிவனணைந்தபெருமாள் அறிவுரையை ஏற்க மறுத்தல்)

வரம்புதப்பி நடக்கலையோ வாழும் மலங்குறத்தி தன்னை
யுகம் பெரிய வேலவனார் வுகந்தெடுத்து போகலையோ
கானத்தில் மழுவேந்தும் கடவுள் பரமேஸ்வரனார்
பரப்பில் மீன்போட்டு விக்கும் பார்வதியை எடுக்கலையோ
நல்லதொரு பாண்டி மன்னன் நாடறிய முன் னாளில்
பல்லியங்கள் பாடிவைத்த பரதேசியவள் மகள்தான்
இல்ல கூத்தி லவதரித்து இடுப்பில் தாங்கிப்போகலையோ

கரும் பூத்த சின்னணைஞ்சி காரிளையைப் பழித்தாயே
மரு பூத்த பொய்கையிலே மாணிக்கம் உதித்தாப்போல
வாரி கடல் சுப்பியிலே விளைந்த முத்தை எடுத்தது போல்
வரிசையுடன் பணிமுடித்து மகுடமதில் சேத்தது போல்
பூத்த செந்தாமரை முகத்தாள் பூவை சின்னணைஞ்சி தன்னை
பாத்த கண்ணு மாறுதில்லை பரிதவிப்பு தீருதில்லை

(மந்திரி சின்னணைஞ்சியை அழைத்து வருகிறேன் எனல்)

பரிதவிக்க வேண்டாங் காண் பண்புடைய ராசமன்னா
எந்த விதத்தாலும் ஏந்திழையைக் கொண்டு வாரேன்
கூட்டி நான் வாரேன் என்று குளித்த மொழி சொன்னபோது

(வேறு)

நாட்டமுடன் நீயவளை கூட்டி வந்தா லுனக்கு
நாடறிய நானுந்தனுக்குக் கூலி தருவேனே
மண்டலீகன் அணைஞ்சபெருமான்
ஞாலச் சூரியன் போலே யிருந்தான்

(சின்னணைஞ்சி கன்னிகழியாதவள் என்று அறிந்து வந்து கூறுதல்)

சட்டமாக வெளுக்கும் வண்ணாத்திதான்
தொட்ட மாத்தொரு தோளில் போட்டவள்
கால் சிலம்பு மேலிட்ட தண்டைகள்
கம்பி படகம் முன்வெட்டி யாகுதாம்
பாடகத்தின் மேல் கிடக்கின்ற
பட்டுச் சேலை கண்ணைப் பகட்டுதாம்
எட்டிப் பார்க்கின்ற போர்க்குத் தீவெட்டிபோல்
இரண்டு பக்கமும் பிரகாசிப்பாளாம்
மெள்ள கச்சிட்ட கொங்கைச் சுருக்கிலே
கொச்சி மஞ்சள் சிகப்பு மணக்குதாம்
பாத்தபேருக்கு அழகு பிரகாசிக்க
பதைக்கங்களும் பிரகாசிக்க
வெள்ளை காப்பிட்ட மோதிர செங்கையால்
வீசிடும் வீச்சொன்று நூறுக்கு மேல் வறும்
ஒற்ற மூக்குத்தி யிலங்கிய பிரகாசம்
இந்தரலோகம்போல் ஒக்க யிலங்குமாம்
பச்சபாக்குச் சிகப்பு மணத்திலே
பாத்தபேருக்குப் பல்லொளி பாயுதாம்
உச்சி கொண்டைக்கு மேலிட்ட பிச்சிப்பூ
ஊரும் சந்தியும் ஒக்க மணக்குதாம்

திருவிழாவில் சிறப்பது காணுமே
சின்ன அணைஞ்சி அழகதைப் பாத்திட்டால்
நரை முகத்து கிழவர்கள் கண்டாலும்
நாலு நாழிகைப் பாராமல் போகமாட்டார்
தொண்ணூறும் பத்தும் சென்ற கிழவனும்
தூரவே அவன் கால்வாங்கி போமாட்டான்
தங்கக் காப்பிட்ட செங்கையை வீசியே
சற்றே வந்து தலை குளிரூட்டுதாம்
கன்னி மயில் இருப்பது காணவே
காமக் காச்சலடிகு துடம் வெல்லாம்
கடிய நெத்தியில் பொட்டழகைக் கண்டு
காமமோடு ஏக்க மெடுக்குதாம்
செண்டு போலந்த கொங்கையைக் கண்டவர்
மெத்தை மேலே கிடந்து விறைக்குறார்
அம்மை வாயில் சிகப்பது கண்ட பின்
அய்யயோ வென்று தெய்வத்தை நேருவார்
என்னைப் பார்த்தவள் சற்றே சிரித்தாக்கால்
இலச்சம் பொன்னைக் கொடுப்பேன் தெய்வமே
கன்னிப் பெண் பிள்ளைக் கையில் கிளிப்பிள்ளை
கண்ட செய்தியை நின்று நீ சொல்லுவாய்
என்றுதான் சிவனணைந்த பெருமாள்
இருளனோடே இவள்தனைக் கேட்டனர்
மன்னனாகிய மார்பனும் ஏகிட
மாத்தெடுத்து வெளுக்கும் வண்ணாத்திதான்
இன்னும் கன்னி அழியாத வெண்தான்
இருளனும் மாட்சிமையாய் சொன்னாரே.

(சின்னணைஞ்சியை மாத்தெடுக்க வென்று சொல்லி அழைத்துவருமாறு கூறுதல்)

(வேறு)

வண்ணாத்தி என்று சொல்லி வசையாக நீ உரைத்தாய்
கண்மணியே பெண்ணரசே கடைந்தெடுத்த மாணிக்கமே
அஞ்சாமல் சொன்னாயே அழுக்கெடுக்கும் சாதி என்று
தென்காசிப் வெண்களுக்குச் சிறந்த நல்ல பால்குடத்தை
எல்லோர்க்கும் யிழிவாக இருப்பாளோ வண்ணாத்தி
வல்லமையாய் அவளை மாத்தெடுக்க வரச்சொல்லடா
என்று அவர் சொன்னபோது சொல்வான் இருளனுமே
வண்ணாத்தி யானாலும் வாய் வீரக்காரியவள்
எப்படிதான் சொன்னாலும் இங்கே யவள் வரமாட்டாள்
வாராமல் அவள் இருந்தால் என் வாணாலும் போகுமடா

தாராளமாய் கூட்டிக்கொண்டுத் தருவதற்குச் சடையாதே
உன்பேரில் ஆணையிட்டேன் உயிர் இருக்கமாட்டாது
சொன்னதொரு வார்த்தை எல்லாம் செவிகொடுத்து கேட் டிருளன்
மங்கை சின்ன அணைஞ்சிதனை மாறாமல் கூட்டிவாரேன்
கூட்டிங்குவாரேன் என்று சொல்லி குளிந்த மொழி சொன்னானே
வாட்டமற்ற மறத் தலைவனுக்கு வருசை பலதும் தாரேன் என்றாரே.

(வேறு)

வந்து அவள் சந்தோசமாக அவள் இருந்தாள்
வடகரையில் நாற்பது மானிலந் தருவேன்
வீட்டிற்குள்ளே வைத்திருப்பேன் வெளியில் விடமாட்டேன்
மடி பிடித்தாகிலும் அவளைக் கொண்டு வாடா என்றார்
கூட்டமிட்டு யாவரும் வந்து அறியாமல் செய்தால்
கேசிகளும் நானல்லாது கேள்ப்பாரும் உண்டோ
உண்டான வார்த்தை எல்லாம் உரைத்தேன் மறத்தலைவா
வண்டாடும் பூங்குழலை கொண்டு வரும்மட்டும்
மரகதப் பூ மேடையிலே வழி பாத்திருப்பேன்

(இருளன் சின்னணைஞ்சியை அழைத்துவர புறப்படுதல்)

கொடுத்த வருசை எல்லாம மறத்தலைவன் வாங்கி
எடுத்ததொரு காரியத்தை முடிப்பேன் என்று சொல்லி
பூத்த மலர்க் குழலழகி சின்னணைஞ்சி தன்பால்
வெண்ணைக் களவு செய்வதற்கும் மறத்தலைவன் புறப்பட்டானே.

(இருளன் சின்னணைஞ்சியைத் தேடிச் செல்லுதல்)

(வேறு)

காச்சக் கட்டின கொண்டையும் சிங்கியும்
சங்கையான சமுதாடு கொஞ்சவே
பூசும் சந்தனப்பொட்டும் அழகாய்
போட்டானே தோளிலே யேத்த புதுவட்டியும்
பூ வட்ட மிட்ட யேத்தாப்பு தொங்கலும்
துலங்கும் கட்டாரி சொட்டை உடைவாளும்
தூய்ய வெள்ளித் தடியும் குரடுமாய்
குரடும் கையில் வளைத்தடி சேர்த்தபின்
கொம்புபோல முறுக்கினான் மீசையை
திருட்டுக் கள்ளன் மறத்தல வீரனும்
சேத்துக் கொண்டான் சமுதாடு யிடையிலே
இடையிலே சமுதாடு இலங்கவே
ஏற்ற மார்பில் யிலங்கிய தாவடம்

உடையும் பாவனையும் சிங்காரமாகவே
மறத்தலவனும் சிறுக்கனுமாகவே
தந்திரமாய் வழி நடந் தேகினான்
களப கஸ்தூரி வாசம் மணக்கவே
கையில் சிங்கார வில்லும் இருக்கவே
வில்லும் தோளில் அம்பராக் கூடுமாய்
சின்னணைஞ்சியைக் கூட்டிவாரேனென நடந்தாரே.

(இருளனுடன் சின்னணைஞ்சி வாதம் செய்தல்)

(வேறு)

வாரானே மறத்தலைவன் நல்லதொரு சாமத்திலே
வழிநடந்து சடுதியிலே வண்ணாக்குடி தெருவில் வந்தான்
சின்னணைஞ்சி வாசல் வருகிற சிரத்தியுள்ள இருளனுமே
கிடக்கும் ஒரு கடி நாய்சத்தம் கேட்டு இருளனுமே
கிழக்கே சுத்தி வீட்டி வாசல் கிட்டவே இருந்தானே
இருந்தாளே அவள் வீட்டில் விளக்கதுதான் ஏற்றிக்கொண்டு
நாயனக்கம் கேட்ட உடனே ஆரென்றுதான் கேட்டாள்
என்பேரு இருளனல்லோ உன்னை தேடியே வந்தேனம்மா
சின்னைஞ்சி உன் செய்திகேட்டுத் தென்காசியில் ஒருவர்
சீலையது வெளுப்பதற்குச் சீக்கிரம் உனை அழைத்தார்
செய்தியுடன் நீ வரவே சீக்கிரம் உனை வரவழைத்தேன்
காலையுமல்ல மாலையுமல்ல வலுவாய் நடுசாமத்திலே
மட்டி வார்த்தைகள் வீட்டிவாசலில்வந்து தானின்று பேசுகிறாய் நீயும்
காமப் பேய் பிடித்து யிங்கு வந்தாய் கழுவதுதான் கூப்பிடுதோ
கடுவாயிடம் நரிபோகிற காரணம்போல இருக்கிறது
வஞ்சம் பெற்ற தொழில் பேச்சை வலுவாக நீயுரைத்தாய்
மாளாமல் பிழைக்கும் பழி வழிதான் அறியாயோ
பெண்ணே சின்னஅணைஞ்சி உனைப் பிள்ளையாகநினைத்தேன் நான்
பிடி என்பதும் அடி என்பதும் பேசவுந்தான் நியாயமுண்டோ
வண்ணார் கண்மணியே ஒரு மாதாவல்லோ நீ எனக்கு
மறுபடியும் யிதுவேளையில் வர உனக்கு நீதியுண்டோ
ஆசையாய் இங்கு வந்தேன் ஆபத்துக்கு இரங்காயோ
நமக்காக உதவி செய்தால் நட்டந்தான் வந்திடுமோ
தேன் போலே வார்த்தைபேசி மழுப்பாதே திருடா நீ
வீட்டிவாசல் தான்திறந்து வெளியில்வந்து கோபம் கொண்டாளே
வாலியட்ட பாடுகளும் சுக்கிரிவன் பட்டபாடுகளும்
வாசித்து அறியாத முழு மட்டிகளோ நீங்கள்
ஆலிலைப் போல் குலை களவு செய்ய வந்தாய்

ஊரிருந்தால் நீயும் இனி உடம்பெடுக்கமாட்டாய்
ரோகப்பட்டு நீயும் இனி மோசப்பட்டு போவாய்
பேரறிவேன் சிவனணைந்த பெருமாளையும் அறிவேன்
பெண்ணை களவாங்க வந்த பிச்சைக்காரா கேளு
என்னை ஒரு சின்னணைஞ்சி என்றிருக்க வேண்டாம்
ஏவி உனை விட்டவனும் யிசம ராசன் தானே
காசினியை ஆளுகின்ற மட்ட அரசனுக்கு
கல்லில் சேலை தப்பி ஒரு கழுதை மேய்க்கலாமோ
இச்சையுடன் என்மேலே ஆசைபட்டான் ஆனால்
இப்புவியில் தானறிய கைபிடிக்கச் சொல்லு
தொட்ட பின்பு தள்ளிப் போட்டுப் போவானேயானால்
சோலி வேண்டாம் வேசைகளைத் தாலிகட்டச் சொல்லு
நன்றி கெட்டு ஆளனுப்பி கொஞ்சுவானோ யானால்
நாளைக்குள்ளே நஞ்சி தின்று சாகச் சொல்லு அவனை
வண்ட முடுக்காக என்னை பெண் பிடிப்பானால்
பல்லு பறிபோகுமென்று மெள்ள செய்தி சொல்லு
கொண்டைக் கெட்டு சிந்திப்போகும் கொஞ்ச தனக்காரா
குத்திகிட்டுச் சாகுதற்குக் கத்தி தீட்டித் தாறேன்

(இருளன் சின்னணைஞ்சியை மிரட்டுதல்)

வண்டத்தமாக பெண்ணே சண்டைக்காரி நீதான்
மாப்பிள்ளை பெண்கேட்டு வந்தால் வைய நீதியுண்டோ
உன்னை கேட்டு வந்ததற்கு என்னை வைய வந்தாய்
ஊருக்குள்ளே சொல்லுதற்கு வாரியோ வண்ணாத்தி
மனக் கட்டா கட்டி உன்னை கொண்டுப்போற நேரம்
பேதை வண்ணார்கள் உன்னை மறிக்கத் திறம் உண்டோ
மாத்தெடுக்க வீடதிலே வலிய வந்து சொன்னால்
வைய நீதியோ இருளன் செய்தி யறியாயோ

(சின்னணைஞ்சி இருளனைத் திட்டி விரட்டுதல்)

சொன்னபோது சின்னணைஞ்சி தூர நின்று சொல்வாள்
தூது சொல்லி தேசம் எங்கும் நாணுதற்கே வந்தாய்
கன்னிமார்க்கு நீ ஒருவன் களவுக்காரன் ஆனாய்
பெண்டுகள்தான் சிரிப்பதற்குக் கொஞ்சிக் கொண்டு வந்தாய்
களவு உண்டு வெட்டுதற்கு மழுவும் உண்டு கிட்ட
பிடித்துக் கொள்ளும் வேளையிலே சிறுத்துக்கொள்ளும் உலகம்
பண்டாரங்கள் பிச்சை பாட்டுப்பாடி வந்தாய் இல்லை
அந்தமுள்ள பயிருகளைக் காத்தவனும் இல்லை
தின்ற பயிர் கழுதைகளைக் தூரத்தி வந்தாய் இல்லை
துவரை வண்ணானின் யினம் சொல்லி வந்தாய் இல்லை

வளத்த கிடா இவளெனவே அழைத்துப் போக வந்தாய்
மட்டித் தனமாக வந்த கெட்ட புத்திக்காரா
வழக்கறிய பேச்சு என்று உளத்திக் கொண்டு வந்தாய்
வட்டலாத்த போடுகிறாய் பட்டுக்கிடப் போறாய்
உங்களுக்கு ஊந்திலே உம்பளமும் உண்டோ
வத்தக்காய் போல கரிக்க வைத்தால் நித்திரை வாராது
தொட்டுவிட்டால் சும்மா உன்னை விட்டு விடுவேனோ

(இருளனின் சபதம்)

தொண்டை பாட்டி நாக்கை சும்மா நீட்டி பேசுவாயோ
இட்ட பாசை இன்னும் எட்டுநாளில் தீராவிட்டால்
இருளன் என்ற பேருமில்லை என்று சொன்னான்

(சிவனணைந்த பெருமாள் மயங்கி விழுதல்)

சிங்கம்போல சிவனணைந்த பெருமாள் அவர் தனக்கு
செல்வமுள்ள செய்தியெல்லாம் தெரிந்திடாம இருந்தார்
மங்கை வருவாள் எனவே மனம் குளிரபார்த்து
வாய்த்த குலதேவதைக்கு நேந்து நேந்து இருப்பார்
என்னும் வரக் காணவில்லை ஏதெனவே இருக்கார்
எட்டிப்பார்க்க வேணும் தீவெட்டி விளக்கென்றான்
சின்னணைஞ்சியோ டிருளன் சொன்ன தெல்லாம் சொல்ல
இருளனவன் சொன்னபோது மூச்சில்லாமல் கீழே விழுந்தான்

(சிவனணைந்த பெருமாள் மயக்கம் தெளிந்து விபரம் கேட்டல்)

மூர்ச்சையது துறந்த பின்பு அணஞ்ச பெருமாள்
போனதொரு விபரமதைப் பொறுதியுடன் சொல்லிடுவாய்
ஆயிளையாள்அவளுடை பூச்சியங்கள் எல்லாம்
அரசனே அஞ்சாறு நாளையிலே தெரியும்
மாச்சிமையாக நீரு மயங்கவும் வேண்டாம்என்றாரே.

(இருளன் மலைக் குரவரிடம் வசிய மருந்து வாங்கச் செல்லுதலும் குரவர் அறிவுரையும்)

(வேறு)

மழுவையும் பரிசையும் தோளிலே வைத்து
வண்ணாத்தி மேலே கோபம் கொண்டாரே
விரைவாய் நடந்து மலைக் குரவரிடம் வந்து
அன்பறிய உரைத்தானே பெண் செய்தி எல்லாம்
அப்போ மலைக் குரவன் மனமது நொந்து

மற்று ஒரு பெண் இல்லையோ வுலகில்
சக்கரை இனிப்பாக இருப்பளோ அவள்தான்
தலைகீழாய் நீங்கள் சாதிக்கிறீர்கள்
பெண்களைச் சிறை பிடித்த மனிதர்
பெரும் வியாதியில் மாளுவார் என்றான்
மனமில்லாத நெஞ்சிக்காரி யானால்
உங்களுடைய மண்டையை உருட்டிவிடுவாள்
கொள்ளாத ஊசி மருந்து உள்ளபடியில்லை
கூத்தி மகள் மருந்தாலே குடியிருக்க ஒட்டாள்

(குரவர் வசிய மருந்தினைத் தரச் சம்மதித்தல்)

முகமாத்து மருந்து இல்லை என்று சொன்னால்
வானாலும் இரண்டு பழி வாங்கிடுவீர் என்றான்
வெற்றி பெற மருந் தெனக்குத் தராமல் விட்டால்
வெட்டிவிட்டால் மெத்தநலம் கிட்டுமென்று சொன்னான்
வேடருட வீட்டில் விருந்துண்பீர் ஆனால்
வேறு மருந்தாகிலும் தந்திடுவேன் உனக்கு
நலமான சோறு கறி சரியாக உண்பேன்
சொக்குப் பொடி இல்லையானால்
செத்திடுவேன் நானும் இப்போ
இருளன் சொன்ன மொழி கேட்டு

(குரவர் எங்கள் குலத்தாரோடு அமர்ந்து விருந்துண்டால் வசியமருந்து தருகிறோம் எனல்)

குரவர் எல்லாம் ஒன்று கூடிக்
கூடாத சாதியிலே சோறுகறி தின்றால்
கூடுவதும் அல்லாமல் குலங் கெடுவதில்லை
காரியமும் உனக்கு வீரியமும் உண்டு
மண நெல்லு குத்தி மணல் அரிசியாக்கி
அரிசியும் தீட்டி அழகாய் சமைத்து
பார மரந்தன்னிலுள்ள பெரும்பாம்பை வெட்டி
இருளனுட கண்காணச் சோறுகறி சமைத்தார்
சமைத்ததொரு சாதமதை இலைதனிலே போட்டு
குரவருடன்போய் இருளனும் போய் இருந்தான்
சாப்பிடும்போது இருளன் கையை எட்டிப்பிடித்தான்
மனவுறுதி இவனிடத்தில் இருக்குதென்று சொல்லி
அழகு திணை மாவுடனே பிடி கிழங்கும் கொடுத்து
சிமிள் மருந்து தான் கொடுத்து
மலைமிருகம் வாய்கட்டி வழி அனுப்பினாரே.

(இருளன் வசியமருந்தைச் சோதித்துப்பார்த்தல்)

(வேறு)

மலை எல்லாம் தான் கடந்து வாரானே நல் இருளன்
தனி வழியே கைவீசி தாள எடுப்பாய் பாடிக்கொண்டு
மலை சார்பில் மேய்ந்ததொரு மாட்டு நிரைக் கூட்டத்திலே
தந்த மருந்ததுதான் வாய் மருந்தோ மெய்மருந்தோ
வண்ணாத்திக் கிணையான வயது சென்ற கிடாரியின்மேல்
எண்ணமுள்ள மருந்தையள்ளி இட்டானே இருளனுமே
எருமையதுதான் கனைத்து யிருளன் பின்னே ஒடிவர
அருமையுடன் மறு மருந்தை அள்ளியிட்டு மாத்திவிட்டான்
உள்ளபடி கண்டபோது உல்லாசமாய் வழி நடந்தான்

**(இருளன் வசியமருந்து பற்றிக் கூறுதலும்
மன்னன் மகிழ்ச்சியடைதலும்)**

அணைஞ்சவெருமாள் மண்டபத்தில் அழகு யிருளன் வந்தானே
மருந்து வந்த விவரமதை இருளனுமே சொன்னபோது
செப்பமுடன் ராசனுக்குச் சீவனது வந்திடுமாம்
இனிமேலும் சாக்காலம் இல்லை என்று தெரிந்துக் கொண்டார்
கனிவாயில் பாக்குமிட்டார் கைலாசம் கண்டவர் போல்

(இருளன் சின்னணைஞ்சியை மயக்கி அழைத்து வருதல்)

வெத்திலையில் மருந்தூட்டி மடிதனிலே வைத்துக்கொண்டார்
அவள்வார பாதையிலே வழிபாத்து பாத்திருந்தான்
மற்றும் ஒரு தெருவோடே வருவாளே சின்னணைஞ்சி
வண்ணாத்திக்காகவென்று மருந்து வெத்திலையில் வேற வைத்து
காணவேணுமென்று சொல்லி காத்திருந்து கண்ணில் கண்டானே.

(வேறு)

வாய் மூக்கு சளி வடிய வாரானே நல் லிருளன்
முடவனைப்போல் முச்சந்தியில் இருந்து கொண்டு
அம்மா வெரியவளே அஞ்சாறு நாளுண்டு கஞ்சியுண்டு
சும்மா தரவேண்டாம் பழம் சோத்துக்கு வெத்திலை விக்க வந்தேன்
உனக்கேற்ற வெத்திலை தான் இதில் ஒன்றிரண்டு தாறேன் தின்றுபாரு
புன் கோலமாய் இருக்க மெள்ள போகலாம் வெற்றிலை
போட்டுக்கொள்வாய்
உதிரச் சிவப்பாக உனக்கென்று ஒரு பாக்குக் கொண்டு வந்தேன்
எதிராக நின்று கொண்டு எடுத்தான் மடிக்குள் அடக்காயதை
கள்ள பயல் சிறுக்கன் பல்லைகாட்டியே சிங்கிபூட்டிவிட்டான்

வேஸ்டிக்குள் யிருந்த வெத்திலை மெருட்டால் மதிமறந்தாள்
திண்டி பிடித்தவளும் திரட்டி உருட்டி பிடித்துக்கொண்டாள்
வாயில் கொடுக்கயிலே வண்ண முகமுள்ள சின்னணைஞ்சி
வாயும் புல மருந்தால் வயத்துக்குள் சுள் என்று தான் பிடிக்க
வேர்வை முகத்துக்குள்ளே வேத்து தலையும் கிறுகிறுக்க
சோர்ந்து தான் கீழ் விழவே தாங்கிடக் கால்களும் தள்ளாடி
எனக்கோர் படியாச்சி வழி எங்கடா இனி நான் வரவோ
துணைத் தோழிமார்கள் எங்கே என்று சொல்லி சிறுக்கன்மேல் கோபமாகி
பார்க்கச் சொருகியதே சில பாவைக் குணங்கள் பலித்ததுவே
வாக்கு உளறுதம்மா புலமாடன் இருளன் பிடித்தானோ
மூட்டாங்கை யிட்டிடுங்கோ மூப்புள்ள வண்ணாரை கூப்பிடுங்கோ
நடந்தாளே சின்னணைஞ்சி நல்ல யிருளன் வழிகாட்ட
இட்ட இளையாச்சி முன்னேகிட மெள்ள நடவுமென்றாள்
துடந்து அவள் பிறகே தூத்தில் வாரதை ராசன் கண்டான்
பத்தி அவள் நடையைப் பாத்துக்கொண்டாரே அணஞ்சவனார்

(சின்னணைஞ்சியுடன் சிவனணைந்தபெருமாள் கூடி இன்புறுதல்)

சூரியன் போலே முகத்தழகும் தோகை நல்லாள் அந்த சின்னணைஞ்சி
கொண்டைக்குப் பிச்சிப் பூ சூடிக் கொண்டாள்
கோலக் கண் ரெண்டுக்கும் மையுமிட்டாள்
அம்மை அழகு கண்டார் அபிராமி என்று சிரித்துக் கொண்டார்
கைமீதில் மெத்ததையிட்டார் தங்கக் கட்டிலில் வா என்று கண் காட்டினார்
வாரானோ மண்டபத்தில் மாயத்தினால் களவாண்ட கள்ளன்
தருவேனே மாத்துனக்குச் சீலை தந்து அனுப்ப சளக்காரா
நிலைமேலே நிற்பேனே நெஞ்சடிக் காச்சல் வருகுதில்லை
மலையாதே என்று சொல்லி மடிபிடித்து யிருத்தி வைத்தாரே.

(வேறு)

வைத்து ராசனும் சந்தோசமாக
சின்னணைஞ்சி மனம் களி கூர
கொடிய இருளனும் தானேது சொல்லுவான்
மண்டு மாமலை மீதிலே ஏறினோம்
மா மயிலாளும் ராசனும் வாழ்கவே
எல்லோரும் கைலாசம் சேரலாம்
என்று இருளனும் வாயாரச்சொல்லவே
என் றணைஞ்சவர் சின்னணைஞ்சியை

பூவின் மெத்தையின் மே லிருத்தினார்
சின்னணைஞ்சியை மெத்தைமேல் வைத்தல்லோ
திலர்தம் தீட்டினார் காமம் கொள்ளவே
அமுர்தமாகிய சின்னணைஞ்சியும்
அழகுள்ள சிவனைணைந்த பெருமாளும்
கொண்டை குலையவே கூடியாடினார்
தொடுத்த காரியம் கிடைத்த வாழுதிலே
சொல்ல போகுமோ செல்வ மோகத்தை
மெத்தை மீதிலே முத்தமிட்டனர்
உனக்கு நான் கண்டேன் இனக்கு நீ கண்டாய்
உயிர் உடம்பெல்லாம் உச்சிதமாகுதே

(மனையில் தாய் தேடுவார் என்று சின்னணைஞ்சி கூறுதல்)

மனையில் தாய்மார்கள் நினைத்துத் தேடுவார்
வந்து மூன்று நாள் ஆகிவிட்டதே
வீட்டில்போய் முகம் காட்டி வருகிறேன்
வேந்தனே உன்னை அடவு வேண்டினேன்

(இருவரும் பிரியாமல் இன்புற்றிருத்தல்)

உடைய நாயகா அடியாள்கிட்டவே
ஊர் கடந்திடில் நாடு சிரிக்குமே
சேரவே நாமள் போகவேண்டாம்
மாநிலந்தன்னில் யாரும் காணாமல்
மண்டபத்தில் வாழ்ந்திருந்தாரே.

(சின்னணைஞ்சியின் தாயார் சீவலமாறனிடம் முறையிடல்)

(வேறு)

வாழ்ந்திருக்கும் காலமதில் வண்ணார்கள் தான் கூடி
இலந்தை கிளியாளை எங்கும் அவர்தேடுவாராம்
தேடிய இடமெல்லாம் தேன்மொழியைக் காணாமல்
பாட்டி யந்த தாய்க் கிழவி பறிதவித்து அழுதாளே
வீதி தோறுந் தென்காசி வீதியெல்லாங் காணாமல்
வாடியந்த தாய்க் கிழவி மகளே யென்று அழத்தொடங்கினாள்
தென்காசி சீவலமார்பனிடஞ் சென்று அறிக்கையிட்டாள்
தென்காசி தென்குமரி மட்டு அரசாளும் மன்னவனே
மாத்தெடுத்து வரப்போன மகளை இன்னும் காணலையே
நால் திசையில் என் மகளை நேத்துவரக் காணேனே
கெட்டிக்காரன் யாரும் வந்து தொட்டு மடிபிடித்தானோ
மாறு செய்து முகமாத்து மருந்து செய்து அழைத்தானோ

கைப்பொருள் உடமையினால் கள்ளர் வெட்டிப் போட்டாரோ
எப்படியோ நானறியேன் என்று வாய்த்தோ படித் தழுதாள்

(சீவலமாறன் காவலரைத் தேடிக் கண்டுபிடிக்கச் சொல்லுதல்)

காவலுள்ள சேவுகரை கண்காட்டி அழைத்து தேடுமென்றான்
ஏவல் செய்யும் வண்ணாத்தி எங்கென்று தேடுமென்றார்
இந்த நல்ல துயரமெல்லாம் சடைய வண்ணான் காதில் கேட்டு
என் மனைவி எங்கே அய்யோ நான் எப்போது கண்டிடுவேன்
பெண்ணழகைக் கண்டவர்கள் இப்புவியில் வைக்க மாட்டார்
கன்னியரைத் தொட்டவனைக் கை காலை வாங்கிடுவேனென்றான்

(காவலர் சின்னணைஞ்சியைக் கண்டுபிடித்தல்)

தேடி எங்கும் பார்த்தார்கள் சிறப்புடைய தூதுவர்கள்
தென்காசி பதிதனிலே படை வீட்டில் இருக்கக்கண்டார்
சிவணைந்த பெருமாளுக்கு ஏவல் பணி செய்பவன்
அவிர்பாகச் சோறு கறியாக்கி உறிமே லடுக்கி
காவிக் கொண்டு வருகையிலே போய் பிடித்தார்
சீவலமார்பன் மருமகன் சிவனணைந்த பெருமாளுக்கு
சோறு கறி தானாக்கி சொகுசுபொறவே கொடுக்கவென்று
சீறிய அந்த ஏவலனிடம் சேவுகர்கள் ஏது சொல்வார்
கொலு விருக்கும் மண்டபத்தில் வந்து கொடுப்பானேன்
வலுவுடைய வீட்டிலுண்ண வருவதற்கு நேரமில்லை
வாழையிலை ஒருவனுக்கு ரெண்டு கொடு வருவானேன்
நாள் வறையில் இருப்பவளை நாங்களும் அறிவோம்
உள்ளபடி எங்களுக்கு ஒளியாமல் சொல்லு மென்றார்
வெள்ளி மணி மண்டபத்தில் மேடையிலே சின்னணைஞ்சி
அழுக்கெடுக்க வந்த தொழில் ஆகாது என்று சொல்லி
கொழுப்பெடுக்க வந்திருக்காள் கொடுபோறேன் சோறு கறி

(சீவலமாறன் சின்னணைஞ்சியை அழைத்துவரச் சொல்லுதல்)

என்றுரைக்க சேவுகள் இனி பிழைத்தோம் என்று சொல்லி
சென்று சொன்னார் தென்காசி சீவலமார்பன் தனக்கு
சின்னணைஞ்சி வண்ணாத்தி சிவனணைந்த பெருமாளை
மன்னியவள் கடன்தீர மறித்து வைத்தாளென்று சொல்லி
வண்ணார் தன் மருமகளை மந்திரிபோய் வரச்சொல்லவே
கண்ணான மந்திரிபோய் கதவருகே சென்று நின்றாரே.

(மந்திரி சிவனணைந்த பெருமாளை அழைத்தலும் அறிவுரை கூறலும்)

(வேறு)

மன்னவனே புகழ் சீவல மார்பன் மருமகனே
மாப்பிள்ளை ராஜாவே மாமன் அழைத்தார் வருவாய்
மின்னிடை வண்ணாத்தி தன்னை வெளியில் விரட்டுவாய்
மேலுங் கலியாண செய்திகளைச் சொல்லி விட்டு
வண்ணாத்தி தன்னோடே காலம் கடத்தவும் வேண்டாம்
மாசற்ற தென்காசி தேசத்துக்கெல்லாம் வசைதான்
கண்ணான மாமன் மகளான மாவின் கனிமேல்
காதல் கொள்ளாமலே ஆசைகொண்டாய் வேப்பங்காய்மேல்
தீண்டாத சாதியைத் தீண்டினா னென்று சிரிப்பார்
தீர்த்தமு மாடி அழுக்கைத் தொடுவாயோ சீ சீ

(மந்திரியை அவமதித்தல்)

வேண்டாத வார்த்தை யுரைக்கிறாய் வீணா யென்னோடே
வெட்டி கடிநாயின் குட்டிக்கிடுவேன் விருந்தாய்
மாமன் மகளுக்கு மாப்பிள்ளை யில்லையே யானால்
மட்டச்சியைத் தாலி கட்டி மடத்திலே வைப்பாய்
ஈமத்துப் போலே யெழுகிறாய் வண்ணாத்தி யென்றே
இரண்டு துண்டாக்குவே னென்று மந்திர வாளெடுத்தார்
வொட்டிட்ட பெண்ணோடு பட்டுக்கிடக்கப் போகிறாய்
புத்திகெட்டா யென்று மந்திரி யப்பாலே போறான்
தொட்டவள் தன்னை விடுவேனோ யென்றவர் சொன்னார்

(பொன்னுருவி மகனுக்கு அறிவுரை கூறி அழைத்தல்)

சொல்லத் தக்க பேரை விட்டினி காரியஞ் சொல்வாய்
தங்கச்சி யாகிய பொன்னுருவி யவளுக்கு
சற்றே பொருள் சொல்லி விட்டாரே மூத்த தமையன்
பொங்கிச் சினத் தந்த தூதன் சொல்லவே கேட்டு
பொன் மண்ட வாசல் புகுந்தாளே பொன்னுருவிதான்
வண்ணாத்திக்காகவோ கண்ணாளா வுனை வளர்த்தேன்
மாத்தோடு சேலை வெழுத்திட வாடா மகனே வளர்த்தேன்
என்றெண்ணி மண்ட ராஜாக்கள் கோவில்க் காலேறி
இருக்கின்ற பொண்ணுக்குச் செத்தாலும் ரோசங்க ளில்லை
கள்ளியைத் தள்ளாம லுள்ளாக வைத்திருந்தால்
கல் தூணில் முட்டியே சாகிறேன் என் பழி காண்பாய்

(தாயின் வார்த்தையை அணைஞ்சவனார் மீறுதல்)

பிள்ளையை யிப்படியே சத்துருதியோ அம்மா
பொன் சின்னணைஞ்சிக்கு வேண்டி யுன் கிட்டப்பிறந்தேன்
மாது அணைஞ்சியோடே வாழாமல் மறித்தாலென்ன
வால சன்னாசியைப் போலவே போவேன் மலையில்
கோதை யிவளை நான் விட்டிட்டால் செத்திடுவேன்
குற்றம் பொறுத்தருளென்று தாயாரைக் கும்பிட்டார்

(சீவலமாறனிடம் மகனைக் கழுவில் ஏற்றவேண்டாம் எனல்

மாதாவுந் சென்றந்தச் சீவல மாறனுடனே
வண்ணாத்தியாலே மகனைக் கழுவில் வையாதே
சூது வையாமலே பொன்னுருவி சென்று சொல்ல
சுற்றி நின்ற தளகர்த்தர்களை வரச் சொன்னார்

(சீவலமாறன் மருமகனைப் பிடித்துவர படையை அனுப்புதல்)

(வேறு)

தங்கை வார்த்தையைத் தட்டினா ரென்றே
தக்க சாலை புலி போலச் சினந்தார்
மங்கை வண்ணாத்திதனைச் சிறைவைத்து
வண்டனைப் பின் கட்டாய் கொண்டுவா வென்றான்

(போரில் சிறுக்கன் மரணமடைதல்)

வெங்கலப் பம்பை கிடுபிடி கொட்ட
வேலயுதக்காரர் வந்தே நிறைந்தார்
பளபள குதிரை படை பதினாயிரம்
பத்தியே கோவில்கால் சுத்தி வளைத்தார்
வந்த படைக்கு நானெதிராளி யென்றே
வல்லயந்தன்னை எடுத்தான் சினத்து
சிந்தும் படிக்கு நூறுபேரைக் குத்தி
செங்குருதி சேரச் சிறுக்கனும்பட்டான்

(இருளன் போரில் உயிர் விடுதல்)

வாசலைக் காத்தங் கிருந்து யிருளன்
வாளும் பரிசையும் வாங்கிச் சென்றான்
பூசி நெற்றியில் திலகம் பொட்டிட்டு
பொற் கச்சை கட்டிப் புகுந்தானே போரில்
வேலாளுங் காலாளுங் கூடிப் புகுந்து

வீசினான் நூறுபேர் விழுந்தார் களத்தில்
கோலச் சமுதநாடு கொண்டவர் பாய்ந்து
குத்திச் சரித்தான் குதிரை வீரனை
வில்லைப் பிடித்துச் சரங்களைத் தூவி
வீரர்கள் ஐநூறு பேர்களைச் சாய்த்தார்
சொல்லியே யானைத் துதிக்கையற வெட்டி
சுட்ட வெடியால் இருளனும் பட்டான்

(வாயிலை இடித்தலும் சிவனணைந்த பெருமாள்

போர் செய்தலும்)

மற்றுள்ள சேவுகர் சுற்றி வளைத்து
மதயானை விட்டந்த வாயிலை இடித்தார்
சண்டை கண்டே சிவனணைஞ்ச பெருமாள்
சட்டமாய் கச்சியைக் கட்டிக் கொண்டு
சிங்காடியும் பெரிய சக்கராயுதமும் கொண்டு
இங்குள்ள பேர்களைச் சங்காரஞ்செய்து
இலங்கா புரிக்கு அனுமன் பாஞ்சது போல் பாய்ந்தான்

(சின்னணைஞ்சியும் வாளெடுத்து போர் செய்தல்)

சீவலமாறன் மருமகனார் தன்னோடு
செங்கிடாய் போலே பிளக்கிறேன் பாராய் யென்று
கோபமுடன் வாள் தனைக் கையிலெடுத்து
கொடுங்கை பிடித்தவள் கும்பிட்டு நின்றாள்
என்னுடைய நாயகா நானும் வருகிறேன்
எனக்கொரு சமுதாடு தாரு மென்றாளே
உன்னோடு செல்லாது தினி இங்கிருந்தென்ன
உடுதுகில் நீக்கி யோடி சண்டையிட்டார்
கொங்கைகள் சாய்ந்து குலுங்காமல் நிற்க
கொச்சி மஞ்சள் பட்டு கச்சையுங் கட்டி
மங்கையுங் கோவில்கால் மண்டப மிடித்த
மதயானை மத்தகத்தில் வெட்டினாளே
அலறியே யானையது பட்டு விழும்போது

(அணைஞ்சவனார் சின்னணைஞ்சியைக் கொன்றுவிட்டு

தானும் உயிர்விடல்)

அணைந்து பெருமாள் சின்னணைஞ்சியை விலக்கி
மங்காம லெந்தன் வலக்கரம் பாத்து
மண்டபத் துள்ளே யிருந்திடடி வண்ணே
குன்றாமல் வந்தொருவன் உனைத்தொட்டால்

கொண்ட கற்புக்கொரு குந்த முண்டென்பார்
உடனே யெடுத்தவளை ஒக்கரையில் வைத்து
உன்னை யல்லால் வேறு ஒரு துணையும் உண்டோ
ஆகாச வீட்டில் போயிருக்கலா மென்று
அரகரா என்றவள் கழுத்தை யறுத்தான்
கொண்டதொரு கோபமாய் தன்னுடய நெஞ்சில்
குத்தினார் அணைஞ்ச பெருமாள் சமுதாடு கொண்டு
குத்தி யுடலின் குடலைச் சாய்த்து
குருதியாறாய் ரத்தம் கொப்பளித்து ஓட
கைத்திறத்தல் இவர்கள் இருபேரும் மாண்டு

(சிவனிடம் வரம் பெற்று தெய்வமாதல்)

கைலாச நாதரிடந்தனில் சென்றார்
சென்று இவர்கள் இருபேருமாக
சிவனாரிடத்திலே வரங்களை வாங்க
வரங்களை வாங்கிச் சிவனணைந்த பெருமாள்
மண்டலந் தன்னில் அணைஞ்சி தெய்வமென்று
நாமங்கள் இட்டுமே சந்தோசமாகவே
நல்ல சிவனணைந்த பெருமாளாய் பூசை வாங்கி வீற்றிருந்தாரே.

நிறைவு பெற்றது)

(கதைப் பாடலை இயற்றிய புலவர் ஆறுமுகப் பெருமாள் நாடார்.)

வண்ணாரமாடன் கதை

(ஓலைச்சுவடி பதிப்பு)

(சிவசுப்பிரமணியபுரம்
அ. அப்பாவு நாடாரிடமிருந்து
ஓலைச்சுவடி பெறப்பட்டது.)

(காப்பு)

பொன் மடந்தையும் சிறக்க பூ மடந்தை வாழ்க
மோராறு வீரமகள் நாள் மாறு பெருக
நன் மடந்தை மாதுமையாள் நண்பன்னருளாலே
நாயகன் குன்றாத நந்தி பாதமதைப் போற்றி.

(வணக்கம்)

இக்கதையை யான் சிறிது உன்(ஞ)சவி(யி)லே சொன்னேன்
எண்ணெழுத்தும் செந்தமிழும் ஈன்றோர்கள் பேருமே
பூங்காவனப் பெருமை புகல்வேன்காண் தோழர்களே
அன்னப்பச்சி பூஞ்சிட்டுகள் ஆனந்தக் கூத்தாடுதுபார்.

சங்குமுகராசன் பிறப்பு

நாடான நாடதிலே நல்ல மக்கத்தூர் பதிதனிலே
மக்கத்தூர் பதிதனிலே வாழ்ந்திருந்தார் காங்குமுகராசன்
காங்குமுக ராசனுக்கு சங்குமுகராசன்தான் பிறந்தான்
அவன் வளர்பிறை போலாக வள(ர்)ந்து வாரான் பாலகனும்
வள(ர்)ந்து வரும் நாளையிலே வையகத்தை ஆளும் மன்னன்
அவர்காலமது முடிவாகி கைலாசம் போய் சேர்ந்தார்
கண்ணீர்விட்டு(ப்) பாலகனும் கதறியே தானழுதான்
செய் கருமம் அத்தனையும் சிறப்புடனேதான் முடித்து
சிறப்புடனேதான் முடித்து சீமை அரசாண்டிருந்தான்

(சங்குமுகராசன் மணமுடித்தல்)

இருக்குமந்த நாளையிலே மற்ற மந்திரிமார் ஏது சொல்வார்
முடிபெருத்த மன்னனுக்கு மணம் முடிக்க வேணுமென்று
சங்குமுகராசனோடு தானுரைத்தார் மந்திரிமார்
தாயுமில்லை தந்தையில்லை எனக்கோர் தார்குழலை தருவாருண்டோ
மனமுடைந்து சொன்னபோது மந்திரிமார் ஏது சொல்வார்
உங்கள் தாய் தகப்பன் வணங்குகிற தனிப்பெரிய அய்யனாரும்
அய்யனுட கோயிலிலே ஆலோசனை கேள்க்கலுற்றார்
மடமடவென்று அய்யனாரும் உத்தரவுதான் கொடுத்தார்
இசங்கநாடு ஆனதிலே இருக்கிறாள் வெண்கொடியும்
இசங்க என்ற நாடதிலே யிசங்கராசன் திருமகள் வளருகிறாள்,

இளங்கொடியாளை வாய்த்த மணம் செய்யுமென்றார்
அப்படியே ஆளனுப்பி அந்த ஆயிளையை மணமுடித்தார்
மாதரசை மணமுடித்து மக்கத்தூரில் ஆண்டிருந்தார்
ஆண்டிருக்கும் வேளையிலே ஆயிளை இசங்கயரும்
ஆறிரண்டு வருட மட்டும் ஆயிளையும் மலடானாள்

(ஆண்குழந்தை வேண்டி பல பெண்களை மணமுடித்தல்)

மந்திரியை வரவழைத்து மன்னவனும் ஏது சொல்வான்
ஆண்குழந்தை இல்லாமல் அரசு ஆண்டு என்னபலன்
என்று சொல்லி ராசாவும் ஏது சொல்வார் மந்திரிமார்
நாகை என்றதோர் தேசத்திலே நாகராசன் திருமகளை
நாகமணி என்ற பெண்ணவளை நல்ல மணம் முடித்தார்
மாலையிட்டு மணமுடித்து வாழ்ந்து வரும் நாளையிலே
நாகராசன் திருமகள்தான் நாயகியும் மலடானாள்
மூன்று பெண்ணை மணமுடித்து முத்தமிட பிள்ளையில்லை
ஆண்குழந்தை யில்லாமல் அரசாண்டு என்னபலன்
என்று சொல்ல ராசாவும் ஏது சொல்வார் மந்திரிமார்
பூங்கை என்ற தேசத்திலே பூங்கைஎன்ற ராசன்மகள்
வளருகிறாள் யிளங்கொடியும் செப்புருக்கி வார்த்தது போல்
அந்தப் பெண்ணை மணமுடிக்க ஆளனுப்ப மந்திரிமார்
பூங்கை என்ற பெண்கொடியைப் பூவையரை மணமுடித்தார்
அருங்கிளியாள் பூங்கம்மயும் ஆயிளையும் மலடானாள்

(குழந்தையின்றி வாடலும் மீண்டும் ஒருமணம் செய்தலும்)

நாலு பெண்ணை மணமுடித்து நல்ல பாலர் இல்லாமல்
ஆண்குழந்தை யில்லாமல் ஆயிளைமார் முகம் வாட
கசங்குகின்ற பூப்போல கருத்திழந்து வாடுகின்றார்
மங்கையரும் முகம் வாட மன்னவனும் ஏது சொல்வான்
வாடவேண்டாம் கோட வேண்டாம் மங்கைமார்களே நீங்களுந்தான்
மந்திரிமார்களை வரவழைத்து மன்னவனும் ஏது சொல்வான்
இன்னு மொரு மாலை மணம் இன்பமுடன் செய்யலுற்றார்
இசங்க தேசம் ஆனதிலே இசங்க ராசாவின் திருமகளை
அந்த பெண்ணை மணமுடித்து ஆயிளைக்கும் குழந்தையில்லை

(தேவியர் புலம்பல்)

பெண்கொடிமார் ஐந்துபேரும் பிள்ளையில்லை என்று சொல்லி
மன்னவரை தான் பார்த்து மடக் கொடிமார் ஏதுசொல்வார்
ஒருத்தியல்லோ மலடியிருப்பாள் உலகத்திலே உள்ளமுறை
ஐந்து பேரும் மலடியிருக்க ஆதிசிவன் கற்பனையோ
எங்கள் தலைவிதிவசமோ யீஸ்பரன் சோதனையோ

ஆருசெய்த தீவினையோ நாங்கள் ஐயிந்து பேரும் மலடிருக்க
எங்கள் தாய் தகப்பன் செய்த தீவினையோ நாங்கள் செய்த தீவினையோ
ஆண் குழந்தை யில்லாமல் அரசிருந்து என்ன பலன்
பிள்ளையில்லா வாழ்வதுதான் வாழ்ந்தாலும் வசையல்லவோ
சந்ததிதான் யில்லாமல் தரணியாண்டு என்னபலன்
ஆரு இருந்தாலென்ன ஆனை கெட்டி வாழ்ந்தாலென்ன
மன்னவரே நீரிருந்தால் மகன் ஒருவன் வேண்டாமோ
என்று சொல்லி பெண் கொடிமார் எல்லோரும் கவலை கொண்டார்
மக்கத்தாபதி நாட்டில் வாழ்ந்துதான் என்னபலன்
இருந்தாலும் பலனுமில்லை இறந்தாலும் மோச்சமுண்டு
காய்க்கும் பிராயமல்லோ கனிபழுக்கும் காலமாச்சே
பூக்கும் பிராயமல்லோ பிஞ்சிருக்கும் காலமது
தெய்வக்குறை யுண்டானால் தென்னவனே பாருமையா

(குழந்தை வேண்டி தானதர்மம் செய்தல்)

பெண்கொடிமார் சொன்ன போது சங்குமுகராசாவும்
கோயிலென்ற கோயிலெல்லாம் கொற்றவனும் தவமிருந்தார்
நேராத கோயிலெல்லாம் நேர்ந்தாரே நெய்விளக்கு
கண்டகண்ட கோயிலெல்லாம் கொற்றவனும் தவமிருந்தார்
காணாத கோயிலுக்குக் காணிக்கையும் அனுப்பிவைப்பார்
அழிந்திருந்த கோயிலெல்லாம்அன்புடனே கட்டிவைத்தார்
ஆயிரம் பிராமணர்க்கு அன்னதானம் தான் கொடுத்தார்
மண்டபமும் மடப்பதியும் மன்னவனும் கட்டிவைத்தார்
ஆண்டி பரதேசியர்க்கு அன்னதானம் தான் கொடுத்தார்
இப்படியே தவங்கள் செய்து இன்பமுடன் தானிருந்தார்
தாய் தகப்பன் வணங்கும் தெய்வம் கள்ளபிரான் அய்யனாருந்தான்
இரக்கமில்ல நான்பாவி எள்ளளவும் தெய்வமில்லை
நானாண்ட கருவலத்தை இனி யாராளப் போறாரோ
என்று சங்குமுகராசாவும் அன்னந்தண்ணி அருந்தாமல்
பெண்கொடிமாரை வரவழைத்து மனச் சலிப்பு கொண்டாரே

(காளியம்மனை வேண்டுதல்)

அரண்மனையில் இருக்காமல் அரசமன்னன் எழுந்திருந்தார்
வீடதிலே இருக்காமல் வேகமுடன் எழுந்திருந்தார்
காடாறு மாதமாக கானகத்தில் திரிந்தலைந்தான்
இப்படியே திரிந்தலைந்து ஏங்கி மனம் வாடுகின்றான்
வேடரைப் போல் கோலம் கொண்டு வேனலிலே அலையுகிறான்
ஒருநாளைத் தினமதிலே ஒத்த சங்குமுகராசாவும்
ஊருக்கு வடபுறமாய் உற்ற காளியம்மன் கோயிலொன்று
காளியம்மன் கோயில் வந்து கைஎடுத்து கும்பிடுவார்
நாடாளப் பிள்ளையில்லை நான் வாடி தவிக்கிறேனே

மத்தியான வேளையிலே மன்னனின்று அடிதொழுதார்
அடிதொழுத அரசமன்னன் ஆலமரம் இணலதிலே
இருக்கிறதோர் வேளையிலே ஏற்ற காளியம்மன் கோயிலிலே
மண்டபத்திலொரு கெவுளி மடமட வென்று சொல்லிடுமாம்
கொவுளி சொன்ன சாஸ்திரத்தைப் பார்த்தாரே ராசமன்னன்
பல்லி மூன்றுயிட மாச்சி பாவினைக்கு இடமும் இல்லை
ஏக்கங் கொண்டு ராச மன்னன் யின்பமுடன் மனையில் வந்தார்

(மந்திரிமார் ஆலோசனைக்கூறல்)

அரண்மனையில் வந்து நின்று ஆயிளைமாரோடு ஏது சொல்வான்
காடதிலே திரிந்தலைந்து கதை பலன் கிட்டுவதில்லை
ஆயிரத்தோர் மந்திரியை எல்லோரையும் வரவழைத்தார்
வாரும் பிள்(ை)ள மந்திரியே வசனம் ஒன்று சொல்லக் கேளும்
நாடாள பிள்ளை வேணும் எனக்கு யோசனைகள் சொல்லவேணும்
அப்போது மந்திரிமார் அரசனுக்கு யேது சொல்வார்
இன்னுமொரு மாலை மணம் இன்பமுடன் முடிக்க வேணும்
மத்திய தேசத்தரசர் மகளை மங்கையரை மணமுடித்து
ஆறுகுடி மணமுடித்து அரசாண்டு இருக்கயிலே
ஆண்டாலும் பலனுமில்லை அரசிருந்து என்னபலன்
பிள்ளையில்லா வாழ்வதுதான் வாழ்ந்தாலும் வசையில்லவோ
பெண்கள் பாவத்தை ஏற்றோம் என்று பெருமூச்சிவிட்டானே

(ஊரார்கள் யோசனை)

வாருங்கடி பெண்ணரசே மங்கைமார் எல்லோரும்
மக்கத்தூர் பதிதனிலே வாழ்ந்திருக்க லாகாது
உறை முறையார் இடமதிலே ஒருசெய்தி சொல்லிவிட
ஆறு பெண்ணைத்தானிறுத்தி அரசனவன் வழிநடந்தான்
பொன்னை மெத்த படைத்தாலும் பொருளை மெத்த படைத்தாலும்
அன்னை சுற்றம் இருந்தாலும் ஆனைப்படை இருந்தாலும்
பிள்ளையில்லை என்றிருந்து பேருலகை ஆளலாமோ
நேராத கோயிலெல்லாம் நேர்ந்தேனே நெய்விளக்கு
ஆயிரம் கலம் அரிசி அன்னதானம் செய்தேனே
இன்னும் பாவம் தீரலயே என்ன மொழி சொல்லுமென்றார்
தேசராசாக்கள் யிடமதிலே சிறந்தமுடி ராசமன்னன்
வந்து அவர் நின்றுகொண்டு வார்த்தை ஒன்று சொல்லுவாராம்
நாலாறு பெண்ணை மணமுடித்து அரசாள பிள்ளையில்லை
தேசமதை ஆளுதர்க்கு செல்வமகன் வேண்டாமோ
நான் வாடித்திரிகிறது நாட்டார் அறியலையோ

என்று சொல்ல ராச மன்னன் ஏது சொல்வார் ஊரார்கள்
அஞ்ச வேண்டாம் பதறவேண்டாம் அழகுடைய ராசமன்னா
மக்கத்தூர் பதிதனிலே ஒரு ஓமகுண்டம்தான் வளத்து
தீக்குழியும் தான் வளத்து சிறந்த வெண்கள் ஆறுபேரும்
அக்னியைசுற்றி வந்தால் அரும்பாவம் தீருமய்யா
முன்பிறப்பில் செய்த பாவம் முறையோடு தீருமென்றார்
என்றுமே சொன்னார்கள் ஏற்றதொரு ராசாக்கள்
சங்குமுகராசவும் தானே அவர் சம்மதித்தார்
மக்கத்தூர் பதியில் வந்து மங்கையர்க்குச் செய்தி சொன்னார்
அப்படியே சம்மதித்து ஆயிளைமார் நல்லதென்றார்
வேள்வி ஒன்று வளர்ப்பதற்கு விரைவாக தலம் பார்த்தார்

(குழந்தைவேண்டி ஓமகுண்டம் வெட்டல்)

மக்கத்தூர் பதிதனிலே வாய்த்த பூமி நிலமதிலே
வேந்தர்களை வரவழைத்து வேள்வி யொன்று வெட்டுவாராம்
அம்பத்திரண்டடி அகலத்திலே அறுபத்திமூன்றடி நீளத்திலே
ஆழதாள ஓமகுண்டம் அகலம் பெற வெட்டுவாராம்
முக்கோண வெட்டும் வெட்டி மூலைகள் சற்றும் கோணாமல்
கரண்டகம் கொண்டு தான் மினிக்கி கண்ணுக்கழகான வர்ணம் செய்தார்
ஏறப் படியோட இறங்கப்படி இருபத்தோரு படியும் வைத்தார்
கூடை கொண்டு மண்கள்தானே வெட்டிகண்ட வேள்வியை தான் முடித்தார்

(ஓமகுண்டம் வளர்த்தமுறை)

என்ன என்ன விறகதுதான் ஏற்ற வேள்வியில் தானடுக்க
சந்தனம் தார்குயில் மஞ்சணத்திவில்லை
தக்கபிலா ஆலரசு வெட்டி வந்தார்
குண்டதோர் வேள்வியில் தானே அடுக்கி
எண்ணைக் குடத்திலே தொண்ணூறு விட்டார்
எலுமிச்சம் பழத்தில் எண்ணூறு போட்டார்
வாடாமலரில் ஒரு கோட்டை போட்டார்
மஞ்சள் பொடியிலே ஒரு கோடி போட்டார்
எள்ளுப்பொரியிலே ஒரு கோட்டை போட்டார்
கொத்தரளி செவ்வரளி வேள்வியில் போட்டார்
குடமாலை வடமாலை வேள்வியில் போட்டார்
வாடை பொடிகளும் வேள்வியிலே போட்டார்
பூவும் பொரியும் வேள்வியிலே போட்டார்
கூடவே நல்லெண்ணை நறுநெய்யும் விட்டார்
நிறைநாழி வைத்து நிறை விளக்கும் ஏற்றி
நிறுத்தியே கும்பக் குடங்களும் வைத்தார்

(பெண்கொடிமார் தீக்குழி மிதித்தல்)

ஓமக்குழியின் அருகிலேவந்து பெண்கொடிமார்
எல்லோரும் ஒரு வார்த்தை சொல்வார்
சந்திரனே சூரியனே சிவனே உன்பாதம்
பிள்ளைக்கு முகம் வீங்கி பெரும் வனத்தில் வந்தோம்
ஏழையாண்டி சடையரனே யெங்களுக்குக் குழந்தை அருளும் அய்யா
மூன்று நேரம் சுற்றி வந்து மெய்குழலாள் ஆறுபேரும்
அக்கினியில் தானிறங்கி அந்த ஆறுபேரும் மூழ்கிவந்தார்
மக்கத்தூர் பதிதனிலே வாழ்ந்திருந்தார் பெண்கொடிமார்
அப்படியும் அவர்களுக்கு ஆண்குழந்தைப் பிறக்கவில்லை

(மன்னன் மீண்டும் மணமுடித்தல்)

மன்னவனும் மனம் சலித்து வாடி நிற்கும் வேளையிலே
பட்டத்து தேவியரும் பாவினையாய் ஏது சொல்வார்
மன்னவனார் முகம் நோக்கி மடக்கொடிமார் ஏது சொல்வார்
ஆசையுள்ள மன்னவரோடு அருமையுள்ள என்கணவா
நாடெல்லாம் நாம் அலைந்தோம் நல்ல பலன் கிடைக்கவில்லை
நாங்க ளாறு பேர்களுக்கும் நாயகனும் நீரல்லவே(ர)
என்னு(ம்) ஒரு பெண் கொடியை ஏற்ற மணம் செய்யுமையா
மங்கையர்கள் சொன்ன போது மன்னவனும் நல்லதென்று
மந்திரிமார் சொன்னபோது மன்னவனும் மணமுடித்தார்

(குழந்தை வேண்டி கைலாசமலை புறப்படல்)

மணமுடித்து வெகுநாளா வாழ்ந்திருக்கும் காலமதில்
ஏழு பெண்ணை மணமுடித்து எடுப்பதற்குப் பிள்ளையில்லை
மங்கையர் யேழுபேரும் மலடிருக்கும் வேளையிலே
சங்குமுகராசாவும் தட்டாளன் மனங்கலங்கி
ஆரு செய்த வினையோ அரும்பாவி யானோமோ
ஆண்குழந்தை யில்லாமல் யிருப்பதில்லை நாடதிலே
இத்தேசம் மானதிலே எனக்குதவி யாருமில்லை
நேராத கோயிலெல்லாம் நேர்ந்து தவம் இருந்தேனே
செய்யாத தவங்களெல்லாம் செய்து வந்தேன் இதுவரையும்
ஈசனுட கையிலையிலே ஏந்திழையே போகவேணும்
ஆறு பெண்ணை தானிருத்தி அரசன் சங்குமுகராசாவும்
நாச்சியார்அம்மனைத்தான் நாயகியை கூட்டிக்கொண்டு
மக்கத்தூர்பதி கடந்து வாழ்ந்திருந்த சீமைவிட்டு
வனங்களென்ற வனங்கடந்து வாய்த்த மலைக்காவும் விட்டு
இஞ்சி என்ற வனங்கடந்து எலுமிச்சம் தோப்புவிட்டு

அருணகிரிநாதர் மலைகடந்து அழகுசன்னாசிகள் வாழும்மலை
கடந்தார்
கைலாசமலை அருகாக கனத்த முடி மன்னன் தானே வந்தான்
அந்தக் கைலாச மலைதனிலே ஆதி சிவனாரைதான் வணங்கி
ஆயிரங்கட்டுக் காவலிலே அரசமன்னன் வந்து நின்று
கட்டுக்கு ஆயிரம் பொன்காவலனும் தான் கொடுத்தான்
ஆயிரம் கட்டுக் காவலுக்கும் பால்மாடு ஆயிரமாம்
இப்படிக்குதான் கொடுத்து ஏற்ற சங்குமுகராசாவும்
ஈஸ்பரனை கண்ணில் கண்டு இன்பமுடன் அடிதொழுதார்

(சிவனிடம் குழந்தைவரம் கேட்டல்)

ஈஸ்பரனே ஏழைபங்கா எங்கள் பாவம் நீக்குமையா
ஏழுகுடி மணமுடித்தும் எடுத்தணைக்க பிள்ளையில்லை
ஏழு நல்ல பெண்களுக்கும் ஒரு பெண் குழந்தை யிருக்குதையா
ஆண்குழந்தை வேணுமென்று அனேக தவம் செய்தேனையா
இப்படிக்கு தவங்கள் செய்து எனக்கு பலன் கிடையாமல்
உம்மிடத்தில் வந்தேனையா ஒரு ஆண்குழந்தை அருளுமய்யா

(சிவன் அருள்புரிதல்)

என்று சொல்ல ராஜமன்னன் ஏதுசொல்வார் யீஸ்பரனும்
உனக்கு பிள்ளை தந்ததுண்டால் உன் உயிருக்கு ஆகாது
எந்தனுயிர் போனாலும் எனக்குப் பிள்ளை தாருமைய்யா
கண்டுநான் இறந்தாலும் கவலையது தீருமையா
அப்போது யீஸ்பரனும் அரசனுக்கு ஏது சொல்வார்
பெண் கொடியை முகம் பார்த்து பேர் பெரியோன் ஏது சொல்வார்
உனக்கு மைந்தன் தந்ததுண்டால் உன் மன்னனுக்கு ஆகாது
பிள்ளை தரித்த நாற்பதாம் நாள் உன் மன்னனுக்கு ஆகாது
பிள்ளை பிறந்த ஐந்தாம்நாள் பெண் கொடிமார்க் காகாது
அயிந்தான் திருவயதில் உந்தனுக்கு ஆகாது
இத்தனைக்கும் சம்மதித்தால் உனக்கு பிள்ளை தாரேனென்றார்
என்று சொன்னார் யீஸ்பரனும் ஏந்திளைமார் சம்மதித்தார்
அத்தனைக்கும் சம்மதித்தோம் அருளுமையா ஈஸ்பரனே
அப்படியே வரம் வாங்கி அரசனும் தேவியுமாய்
மன்னவனும் தேவியுமாய் மக்கத்தூர் பதியில் வந்தார்

(நாச்சியாரம்மனுக்குக் குழந்தை உண்டாதலும் சங்குமுகராசன் இறப்பும்)

அப்படியே இருக்கயிலே ஆயிழையாள் திருவயத்தில்
நாச்சியாரம்மன் திருவயிற்றில் நல்ல கெர்ப்பம் தரித்திடுமாம்

ஒன்றான மாஸ்த்தயிலே ஓ(ல)லப்பூ நிறமானாள்
நாற்பதாம் நாள் செல்லுமுன்னே நலமுடனே ராசமன்னன்
முன்பிறந்த பெண் கொடிக்கும் இனிப்பிறந்த ஆண்பிள்ளைக்கும்
பள்ளிக்கு வைப்பதற்கும் பாவினையாய் ஏது சொல்வார்
பொன்னாலே எழுத்தாணி பொற்பலகை தங்கத்தாலே
நல்ல நல்ல சரப்பளியும் தாவடமும் மாலைகளும்
வைர வைடூரியமும் வாய்த்த கொத்துச் சரப்பளியும்
தங்க நல்ல கிணுக்குவாரி தானணிந்தார் பொன்னாலே
இத்தனையும் உண்டு பண்ணி ஏற்ற சங்குமுகராஜாவும்
ராஜ மன்னன் தானிறந்தார் நாயகிமார் தானிருந்தார்
அழுதுமுறையுமிட்டு அரசனையும் அடக்கம் செய்தார்

(முண்டுசாமி பிறப்பும் தாய்மார் இறப்பும்)

இப்படியே இருக்கயிலே ஏந்திழையான மங்கையர்க்கு
இரண்டான மாஸ்த்தயிலே கண்ட பண்டம் தேடுவாளாம்
மூன்றான மாஸ்த்தயிலே முத்துப் போல உருவழகானாள்
நாலான மாஸ்த்தயிலே நாகப்பழ மேனியானாள்
ஐந்தாம் மாஸ்த்தயிலே அரைவயது சூலானாள்
ஆறான மாஸ்த்தயிலே அடிவயறு பூரணமாம்
ஏழான மாஸ்த்தயிலே எழுந்திராக் கிடையானாள்
எட்டான மாஸ்த்தயிலே தொட்டயோகம் தவறிடுமாம்
ஒன்பதான மாஸ்த்தயிலே உடையவர்க்குப் பொங்கலிட
பத்தான மாஸ்த்தயிலே பாலகனும்தான் பிறந்தான்
பாலகனும் பிறந்தபோது பாவையர்கள் குரவையிட்டார்
பாவையர்கள் குரவையிட்டார் பைந்தொடிமார் தானிறந்தார்கள்
ஐந்தான மாஸ்த்தயிலே தோழியரும் தானிறந்தார்கள்

(அக்காளும் தம்பியும் அழுதுபுலம்பல்)

தாய் தகப்பன் இறந்தபோது தானே அழுது புலம்பலுற்றார்
அழுது பரிதவித்து அக்காளும் தம்பியரும்
தம்பியரைதான் பார்த்து தானே அக்காள் ஏதுசொல்வாள்
அண்ட இடமுமில்லை ஆதரிப்பார் ஆருமில்லை
என்ன செய்வோம் தம்பி நாம் இங்கிருக்கக் கூடாது
தாய்தகப்பன் இல்லாமல் தனித்திருந்து வாடுகிறோம்
தம்பி நீ பிறப்பதற்கு தவங்கள் எத்தனையோ செய்தார்கள்
பெற்ற அருமை என்ன பேரிட்ட நேர்த்தி என்ன
உன்னை வளத்த அருமை என்ன வைத்திருந்த நேர்த்தி என்ன
இந்த வயதிலே தூயரப்பட எழுதினானோடி மாதேவன்
இப்படியே இருபேரும் ஏங்கி ஏங்கி மனந்தளர்ந்தார்

(மந்திரிமார் மனம்தேற்றலும் முண்டுசாமியின் குறும்புத்தனமும்)

மந்திரிமார் அருகில் வந்து மதலைகளை மனம் தேற்றி வைத்தார்
இப்படியே இருபேரும் இருக்கிற நாளையிலே
ஏழுவயதான போது எழுத்தோத வைக்க வென்று
அக்காளும் சம்மதித்து அருமை தம்பியை படிக்க வைத்தாள்
இப்படியே முண்டுசாமி படித்துவரும்) நாளையிலே
அரண்மனையில் வருகிற ஆள்களை மதியாமல் பேசுறது
குழந்தைப் புத்தியானதினால் குறும்புதனம் செய்தானாம்

(இனமுறையார் சதியும் மந்திரிமார் குழந்தைகளைக் தப்பித்துக்கொள்ள அறிவுறுத்துதலும்)

குறும்புத்தனம் செய்கிறதும் கோல் கொண்டு அடிக்கிறதும்
இவர் நடத்தும் நடத்தைகளை இன சனங்கள் கண்ணில் கண்டார்
குழந்தை வயதிலே இப்படி குறும்புதனம் செய்தவன்தான்
ஆள்பருவம் வந்ததுண்டால் அரசர்களைக் காண ஒட்டான்
இளமையிலே இவனைக் கொன்று இத்தேசம் ஆளவேணும்
என்று சொன்னார் இனமுறையார் ஏதுசெய்தார் மந்திரிமார்
சின்னஞ்சிறு பிள்ளைகளே உங்கள் சின்னையாமார் எல்லோரும்
உங்கள் தலையை அறுத்துவிட்டு உலகாளவென்று எண்ணம் கொண்டார்
இன்று இங்கு இருந்ததுண்டால் நித்திரையில் கொன்றிடுவார்
என்று சொன்னார் மந்திரிமார் ஏது செய்தாள் அக்காளும்

(குழந்தைகள் அழுதுபுலம்பல்)

செவியிலே கேட்ட போது தம்பி முகம் பார்த்து ஏதுசொல்வாள்
உள்வீட்டு சத்திராதி நம்மை உலகாள விடமாட்டான்
இங்கு நாம் இருந்ததுண்டால் யிருவரையும் கொன்றிடுவான்
நித்திரையில் கொல்வதர்க்கு நினைத்துமே இருக்கிறார்கள்
என்று சொல்லி இருபேரும் ஏங்கியே அழுதார்கள்
அன்று ராத்திரி வேளையிலே அக்காளும் தம்பியுமாய்
நடுச்சாம வேளையிலே ஆள் ஒதுக்கம் தான் பார்த்து
தம்பி நித்திரை செய்கையிலே தார்குழலும் தான் பார்த்து
எழுந்தெழுந்து தம்பியரே ஏற்ற வனம் ஓடிடுவோம் என
தம்பியு மங் கெழுந்திருந்தான் தானெடுத்து இடுப்பில் வைத்தாள்

(ஆபரணங்களை விட்டெறிதல்)

பொன்னின் ஆபரணம் எல்லாம் பெண்கொடியாள் விட்டெறிந்தாள்
வைர வைடூரியங்கள் வகை வகையாய் விட்டெறிந்தாள்
கொத்து நல்ல சரப்பளியை கோலமுடன் விட்டெறிந்தாள்

முண்டுசாமி காலிட்ட தண்டை சதங்கை விட்டெறிந்தாள்
பத்துவிரல் மோதிரத்தைப் பாவினையாய் விட்டெறிந்தாள்
உடுத்திருந்த புடவைகளை அக்காளும் உரிந்தெறிந்தாள்

(தம்பியின் அறிவுரையும் தமக்கை மறுமொழியும்)

அக்காள் சேலை விட்டெறிய தம்பியவன் ஏதுசொல்வான்
ஆபரணம் போனாலும் ஆடை துயிலோடு ஓடிடுவோம்
தம்பியவன் சொன்னபோது தானே அக்காள் ஏது சொல்வாள்
சொத்திழந்தோம் சுகமிழந்தோம் தூங்கும்மஞ்சம் நாமிழந்தோம்
ஆயிரத்தொரு மந்திரியும் அம்பலக் கணக்கரையும் நாமிழந்தோம்
அய்யா அரசாண்ட வீடிழந்தோம் ஆயிரம் கப்பலையும் நாமிழந்தோம்
தங்கச் சிம்மாதனம் இழந்தோம் தாய் தகப்பனை நாமிழந்தோம்
தோழி(ப்) பெண்களை நாமிழந்தோம் தாய்மார்களை நாமிழந்தோம்
குப்பயிலே போட்டாலும் குன்றுமணி மங்கிடுமோ
அரைத்தாலு(ம்) சந்தனம்தான் அதன் மணந்தான் குன்றிடுமோ
ஏழுகுலத்துக்கும் முதல்குலம் தான் சூரியகாந்தி ராஜகுலம்
என்று சொல்லி இருபேரு(ம்) எழுந்திருந்தார் அந்நேரம்
உயிர்தப்பி பிழைத்திடுவோம் உண்மையுள்ள தம்பியரே

(குழந்தைகள் தப்பியோடல்)

குயில்கூவும் நேரத்திலே இருபேரும் எழுந்திருந்தார்
உயிர்தப்(பி) பிழைத்திடுவோம் உற்ற வனக் காடதிலே
என்று அக்காளும் சொன்னபோது தம்பியரும் ஏதுசொல்வான்
இரந்துக் குடித்தாலும் இத்தேசம் ஆகாது என்று
எழும்பு நீ தம்பியரே என்பிறகே வாருமென்றாள்
அக்காள் இவையுரைக்க தம்பியவன் ஏது சொல்வான்
மக்கத்தூர் பதியைவிட்டு மறுதேசம் ஓடிவந்தார்
வனவாச கருங்காட்டில் வந்தாரே இருபேரும்
வனமதிலே வருகையிலே தம்பியுந்தான் ஏதுசொல்வான்
வாழவொழி தெரியுதில்லை வடக்கு தெக்கு தெரியுதில்லை
மரமட்டை தெரியுதில்லை மையிருட்டாய் இருக்குதக்கா
இந்த வனக்காடதிலே எங்கே தான் போவதென்று
ஆள்மூச்சியில்லாத வனம் ஆண்சிங்கம் உள்ளவனம்
காட்டானை உள்ள வனம் கரடி புலி தூங்கும் வனம்
வேடருட பிள்ளைகளே வெடுக்கெடுத்து போகும் வனம்
புலிகடுவாய் வந்து நம்மை புசித்திடுமோ நம்மை என்று
ஒன்றுக்கும் பதறவேண்டாம் ஓடிடுவோம் தம்பியரே
என்று அந்த வனம் கடந்து அடுத்தவனம் வாரபோது
தண்ணீர் தகை எழும்பி அக்காளிடம் தான் கேட்டான்
தண்ணீர் என்று கேட்ட உடன் அக்காளும் பரிதவித்தாள்

வனவாசக் காடதிலே வாய்த்த தண்ணீர் கிடையாது
ஊர்மனைகள் காணவேணும் ஓடிவாடா தம்பியரே என்று
அந்த வனம் கடந்து அடுத்த வனச்சோலையிலே வந்தார்
அடுத்த வனச் சோலையிலே ஒரு ஆலமரம் கண்டார்கள்
ஆலமரச் சோலையிலே அமர்ந்தார்கள் இருபேரும்

(குயிலவண்ணான் வீட்டைக் காணல்)

தம்பியை கீழே விட்டு அக்காள் மரத்திலே ஏறிப்பார்த்தாள்
ஏறிபார்க்குற வேளையிலே பாரவனம் ஆனதிலே
விடிகிறதோர் நேரத்திலே குயிலவண்ணான் வீடதிலே
வெள்ளச் சிறகு தட்டி கூவிடுமாம் சேவலது
கோழிச்சத்தம் தான்கேட்டு கொடிய மரம் விட்டிறங்கி
கொடியவனம் விட்டேகி ஓடிவாராள் இருபேரும்
குயிலவண்ணான் மனைதனிலே வந்தார்கள் இருபேரும்
பொன்னாலே வளை நிறுத்தி பொற்பவள தூண்நிறுத்தி
தங்கத்தால் கால் நாட்டி அரண்மனைக் கட்டிஇருந்தான்
அப்படி கொத்த மனையை அக்காளும் கண்ணில் கண்டாள்

**(குடிக்க தண்ணீர் கேட்டலும் தண்டல்காரன்
யாரென வினவலும்)**

ராசாக்கள் மனைதானென்று எண்ணியே இருபேரும்
குயிலவண்ணான் வீடதிலே கோட்டை வாசல்தனிலே வந்தார்
வந்து நின்று இருபேரும் தண்ணீரென்று சத்தமிட்டார்
தண்ணி என்ற சத்தமதைத் தண்டைகாரன் காதில் கேட்டான்
விடிய ஒரு சாமத்திலே இங்கு வந்தவன் யாரு என்றான்
தண்டைகாரன் ஓடிவந்து தானேயவன் பார்க்கலுற்றான்
அக்காளும் தம்பியுமாய் அங்கே வந்து நின்றார்கள்
கண்ணில் கண்டா னிருபே(ர)ரயும் காவலன் ஏது சொல்வான்
எந்த தேசம் எந்த ஊரு எங்கிருந்து வந்தீர்கள்
என்று கேட்டான் தண்டக்காரன் ஏதுசொல்வா ரிருபேரும்
இரந்து குடிப்பவர்கள் தேசம்விட்டு தேசம் வந்தோம்
தண்ணீர் தாகம் பொறுக்காமல் வந்தோமைய(ர) இருபேரும்

தண்டல்காரன் குயிலவண்ணானிடம் தகவல் தெரிவித்தல்)

அப்போது தண்டக்காரர் அவசரமாய் ஓடிப்போனார்
குயிலவண்ணான் இடமதிலே குழந்தைகளை அறிக்கையிட்டான்
குயிலவண்ணான் பஞ்சனையில் படுத்துறங்கும் வேளையிலே
அய்யா அய்யா என்றெழுப்பி எழுந்தானே குயிலவண்ணான்
விடிய ஒரு சாமத்திலே நம்மு(ட)டைய வீடதிலே
ஆசாரவாசலிலே அரண்மனை முகப்பதிலே

ஆணும் பெண்ணும் வந்திருவர் இருக்கிறார் அரண்மனையில்
பார்த்தாக்கால் ரெண்டு பேரும் சூரிய ஒளிவு போலே
இத்தேசமானதிலே இப்படி குழந்தைகளைக் கண்டதில்லை
என்று சொன்னான் தண்டக்காரர் ஏது சொல்வான் குயிலவண்ணான்

(குயிலவண்ணான் குழந்தைகளை அழைத்துவரச் சொல்லுதல்)

வந்திருக்கும் குழந்தைகளை எந்தன் முன்னே நிறுத்து என்றான்
அப்படியே காவலவன் அவசரமாய் ஓடிவந்து
அரண்மனைக்கு வரவழைக்க வரமாட்டோம் என்று சொன்னார்
ஏழுதண்டக்காரர்களும் இழுத்துக்கொண்டு விட்டார்கள்
குயிலவண்ணான் முன்பதிலே வந்தார்கள் இருபேரும்

(குயிலவண்ணான் கேள்வியும் குழந்தைகள் பதிலும்)

அப்போது குயிலவண்ணான் இருவரையும் பார்த்துரைப்பான்
எந்த ஊரு எந்த தேசம் எங்கிருந்து இங்கு வந்தீர்
வந்த வகை சொல்லுமென்று வண்மையுடன் கேள்க்கலுற்றான்
நாங்கள் இருப்பது மக்கத்தூர் சங்குமுகராஜன் மக்கள்
தாய்தகப்பன் இறந்து போனார் தன்னுதவி யாருமில்லை
ஆண்டிருந்த சீமை எல்லாம் அத்தனையும் பிடித்து(க்) கொண்டார்
இரந்துதான் குடிப்பதற்கு இத்தேசம் வந்தோமையா
தண்ணிதாகம் பொறுக்காமல் தானே வந்தோம்அரண்மனையில்

(குயிலவண்ணான் வீட்டில் வேலை செய்யக்கூறுதலும் குழந்தைகள் மறுப்பும்)

எறுனு சொல்ல இருபேரும் ஏது சொல்வான் குயிலவண்ணான்
என்னு(ை)டய வீடதிலே நீங்கள் இருபேர்களுமாய்
தண்ணிதானருந்தி எனக்கு வேலை செய்யுமென்றான்
நாங்கள் என்றால் ராஜகுலம் உனக்கு வேலை செய்யமாட்டோம்
சூரியகாந்தி ராஜகுலம் சோற்றுக்கு வேலை செய்வதில்லை
வீட்டு வேலை செய்யாமல் விடுவதில்லை இருபேரையும்
வீட்டு வேலை என்றபோது வெம்பிழையாய் இருபேரும்
நீ யென்றால் புரத வண்ணான் நான் என்றால் ராஜகுலம்
அந்த வண்ணானுட வீடதிலே நாங்கள் வேலை செய்வதில்லை

(சாதியைக் குறைகூறியதால் குயிலவண்ணான் கோபம் கொள்ளல்)

வண்ணான்என்று சொன்னபோது கோபங்கொண்டான் குயிலவண்ணான்
என்பேரு சொன்னவர்கள் இந்த தேசத்தில் ஒருவரில்லை

இரந்துண்ண வந்தவர்கள் என்பேரை சொல்லலாச்சே
என்று கண்ணுரெண்டும் தீபறக்க கடும் கோபம்கொண்டானே
தூதுவரை தானழைத்து துடித்து ஏது சொல்வான்
பவளநல்ல தூணதிலே கட்டுங்கள் இருவரையும்
அப்போது தண்டகாரர் பிடித்திறுக்கி கட்டுவாராம்
என்னுடைய பட்டியிலே நீங்கள் இருபேர்களுந்தான்
அழுக்கெடுத்து வெளுப்பதற்குக் கையெழுத்துத் தாருமென்றார்
ஏழுவருஷத்துக்குக் கையெழுத்து தாருமென்றான்

(குழந்தைகள் மறுப்பும் தண்டனையும்)

அக்காளும் தம்பியுமாய் அழுதழுது ஏது செய்தார்
உன்னுடைய யிடமதிலே கையெழுத்துத் தரமாட்டேன்
தரமாட்டேன் என்றவுடன் கட்டிவைத்து தானடித்தார்
வெங்கலக் குரடுகொண்டு வேகமுடன் தானடித்தார்

(சிலுவை வண்ணான் அடிக்கவிடாமல் தடுத்தலும் இறத்தலும்)

அடிபொறுக்க மாட்டாமல் அக்காளும் தம்பியும் அழுவது கேட்டார்
சிலுவை வண்ணானும் வண்ணாத்தியும் சீக்கிரமாய் ஓடிவந்தார்
தமயனுட வீடதிலே தாஷ்டீகமாய் வந்து பார்த்தார்
குழந்தைகளைக் கட்டிவைத்து கொடும்பாவி அடிக்கிறதை
கண்ணில்கண்டு **சிலுவை வண்ணான்** கட்டழகன் ஏதுசொல்வான்
இரந்துண்ண வந்தவரை இந்த வேலை செய்யலாமா
இராஜருட வம்சம் போல் தோணுதையா எந்தனுக்கு
அடியாதே அண்ணாவே அரும்பாவம் பிடித்துவிடும்
என்று சொன்னான் சிலுவைவண்ணான் ஏது சொல்வான் குயிலவண்ணான்
இரந்துண்ண வந்தவர்கள் என் பேரை சொல்லலாமா
பேர் சொன்னால் குற்றமில்லை பிள்ளைகளை அடியாதே
அடிக்க வேண்டாம் என்று சொல்லி அவனும் நின்று தடுக்கலுற்றான்
அப்போது குயிலவண்ணான் அவன் மேலில் கோபம் கொண்டான்
உறைவாளைதான் கழற்றி ஒரே வெட்டாய் வெட்டிவிட்டான்
வெட்டியதோர் வெட்டோட சிலுவை வண்ணான் கீழ்விழுந்தான்

(சிலுவை வண்ணாத்தி அழுதுபுலம்பலும் விரட்டப்படலும்)

சிலுவை வண்ணான் பட்டபோது சிலுவை வண்ணாத்தி தானழுதாள்
இரக்கமில்லா மாபாவி இந்தப் பழி செய்யலாமோ
தம்பியை நீ வெட்டலாமா சண்டாளக் குயிலவண்ணான்
மன்னவரைக் கொன்றாயே மாபாவி குயிலவண்ணான்
அடிவயத்தில் தானடித்து வீழுந்தாளே பக்கத்திலே
எனக்குதவ ஒருவரில்லை என்பழியை ஏற்றுக்கொள்வாய்

என்று சொல்லி சிலுவை வண்ணாத்தி ஏங்கி விழுந்தாள்
குயிலவண்ணான் எழுந்திருந்து கோபமுடன் ஏது சொல்வான்
என் தம்பியை வெட்டினாப்போல் நானுன்னை வெட்டிடுவேன்
அப்போது குயிலவண்ணாத்தி அரண்மனைவிட்டு வெளியில் வந்தாள்
பெண்பாவம் சுற்றுமடா பிழைகள் வரும் உந்தனுக்கு
மாபாவி உன் வீட்டில் மண்மாரி பெய்யுமடா

(பயந்து குழந்தைகள் அடிமைவேலை செய்ய கையெழுத்துப் போடுதல்)

என்று அவள் சொன்னபோது நிஸ்ருளன் ஏது சொல்வான்
தம்பியைத் தானெடுத்து தகனமது செய்துபோட்டு
அக்காளையும் தம்பியையும் அரும்பாவி ஏதுசெய்தான்
கையெழுத்து தாரீர்களா கண்ட துண்டம் பண்ணட்டா
இந்த வார்த்தைச் சொன்னபோது இருபேரும் மனம்பதறி
தம்பியைத்தான் கொன்றபாவி நம்மையுந்தான் விடுவானோ
குப்பையிலே போட்டாலும் குன்றுமணி மங்கிடுமோ
நம் காலம் கழியுமட்டும் கையெழுத்தை(க்) கொடுத்திடுவோம்
ஏழரை வருஷத்திற்கு இவன்வீட்டில் வேலை செய்வதற்கு
அக்காளும் தம்பியுந்தான் கையெழுத்துதான் கொடுத்தார்

(குழந்தைகள் அழுதுபுலம்பி துணிவெளுக்கச் செல்லல்)

கையெழுத்தை தான் வாங்கி கட்டவிழ்த்துவிட்டானே
இப்படியே இருபேரும் இங்கிருந்து வேலை செய்தார்
ஒரு நாளை தினமதிலே அக்காளும் தம்பியுமாய்
அழுக்குச் சேலைதான்எடுத்து ஆளுக்கொரு பொட்டலமாய்
வேலை செய்ய தெரியாமல் விம்மி விம்மிதானழுதார்
அழுது பரிதவித்து அக்காளும் ஏது சொல்வாள்
எழுகுலத்துக்கும் முதல்குலமாய் பிறந்தோமே
வண்ணானுட குலமதிலே வந்து நாம் அடிமையானோம்
தூங்கு மஞ்சம் படுத்திருந்தால் தோழியர்கள் வீசுவரே
அழுக்கெடுத்து வெளுப்பதற்கு ஆயனவன் எழுதிவிட்டார்
வெள்ளாவி அவிப்பதற்கு(ம்) சேலை தட்டி வெளுப்பதற்கும்
ஏதுவகை அறியோமே என்னு(ன்)டய தம்பியரே

(சிலுவை வண்ணாத்தி தொழில் கற்றுக்கொடுத்தல்)

இப்படியே அழுகையிலே கண்டாள் சிலுவை வண்ணாத்தி
எதுக்கு அழுதீர்கள் ஏற்ற சிறுபிள்ளைகளே
அழவேண்டாம் என்று சொல்லி அருகழைத்து முத்தமிட்டாள்
முந்தானை தனை எடுத்து முகமதையும் தான் துடைத்து

வெள்ளாவி வைத்திடவும் நீலம் சிவப்பு ஏற்றிடவும்
சேலைகள் அடித்திடவும் பாடம் சொல்லித் தான் கொடுத்தாள்
எல்லா வேலையும் பாடமாக இன்பமுடன் படித்துவிட்டாள்
படித்து நன்றாய்தான் கொடுத்து சிலுவை வண்ணாத்தியும் ஏதுசெல்வாள்
என் பேரை சொல்லாதிங்கோ ஏற்ற சிறுபிள்ளைகளே
என் புருஷனைக் கொன்ற பாவி என்னையும் கொன்றிடுவான்

(குயிலவண்ணான் மகிழ்ச்சியும் குழந்தைகள் பசியும்)

என்றவளும் சொன்னபோது இன்பமுடன் இருபேரும்
அழுக்கு சேலைதானெடுத்து இருபேரும்தான் வெளுத்தார்
ஆளுக்கொரு வொட்டணமாய் இருபேரும் தோளிலிட்டு
குயில வண்ணான் வீட்டிற்கு வந்தார்கள் இருபேரும்
அன்று நல்ல வேளையிலே அவனு(ை)டய வீடதிலே
முகவெண்டலக் கிடாரியை தானடித்தான் அந்நேரம்
வேகமுடன் கறிசமைத்து கடித்த நல்ல முட்டெலும்பு
எச்சிப் பருக்கையும் தண்ணீரும் நாய்குடிக்கிற ஓடதிலே
கொல்லைபுறத்தில் தான் கொடுத்தார் இருபேர்களுக்கும்
அக்காளும் தம்பியுமாய் ஏங்கி முகம் வாடி
எத்தனை உலகம் ஆண்டிடுவோம் என்ன பாவினையாய் நாமிருப்போம்
இந்த தண்ணீர் குடிப்பதற்கு எழுதினானோ பிர(ம்)மதேவன்
வயிற்று(ப்)பசி பொறுக்காமல் அள்ளி பொசித்தார் இருபேரும்
அரைவயிறு நிறையாமல் அக்காளும் தம்பியுமாய்

(குயிலவண்ணான் மகள் பக்குவதியாதல்)

மறுநா ளுதயத்திலே குயிலவண்ணான் பட்டியிலே
அன்று வெள்ளைதான் கொடுத்து அடுத்தநாள் அழுக்கெடுத்தார்
இப்படியே சிலநாளாய் இருந்து வேலை செய்தார்கள்
குயிலவண்ணான் மகளொருத்தி தங்க நிற சிவப்பு ஒழிவு
பக்குவதி யானாளாம் உடன் பாவினையாய் குயிலவண்ணான்

(மகளை தனிவீட்டில் அமர்த்தல்)

தன்மகள் சிகப்பொழிவை தாஷ்டீகன் குயிலவண்ணான்
தன்மனையில் வைக்கலாக(ா) தென்று தார்குழலாள் சிகப்பொழிவை
காதவளிக் கப்பால் கான வனம் ஆனதிலே
மகளுக்கு அரண்மனையும் மாளிகையும் கட்டிவைத்து
அம்பலச் சாவடியும் ஆசார வாசல்களும்
சந்தடிக்கும் மேடைகளாம் பகடை போட கூடங்களாம்
ஏழடுக்கு மெத்தைகளாம் எழுந்தேற மண்டபமாம்
காரைபூசம் மண்டபமாம் கண்ணாடி சன்னல்களாம்

இப்படியே மனையும் கட்டி ஏற்ற மகள் சிவப்பொழிவுக்கு
அறுபத்தொரு தோழியோடு ஆயிரம் கிங்கிலியர்

(மாதம் ஒருமுறை மகளை எடை பார்த்தல்)

இப்படியே குயிலவண்ணான் இவனிருக்கும் நாளையிலே
அங்கிருக்கும் தோழியரோட அரசிபோ லங்கிருக்க
அப்படியே சிவப்பொழிவு அரசாண்டு இருக்கயிலே
குயிலவண்ணானும் வண்ணாத்தியும் மாதம் ஒருதரம் இடைபோடுவாராம்
தங்க இலுமிச்சம் பழமெடுத்து திராசியும் படியும் தானெடுத்து
தன்மகள் சிவப்பொழிவை தானிடைகள் போடுவாராம்
இலுமிச்சம் ஒரு பக்கமும் ஏற்ற மகள் ஒரு பக்கமும்
சரிநிறையாய் தானிருந்தால் தன் மனைக்கு வந்திடுவார்

(முண்டுசாமி சிகப்பொழிவுக்கு வெளுத்த துணிக்கொண்டுச் செல்லல்)

இப்படியே குயிலவண்ணான் இருக்கிற நாளையிலே
ஒரு நாளைய வேளையிலே அக்காளும் தம்பியுமாய்
காகம் பறக்காத ஆறதிலே கடுக வந்துஇருபேரும்
சேலையது தானடித்து சிறந்த பொட்டணம் தானேகட்டி
அப்படி நிற்கிறதோர் வேளையிலே முண்டு சுவாமியும் ஏது சொல்வான்
ஆள்பருவம் ஆனபோது அக்காள் முகம் பார்த்து சொல்வார்
குயிலவண்ணான் பட்டியெல்லாம் நீ சேலை கொடுக்க வேணும்
சிவப்பொழிவு அரண்மனைக்கு நான் சேலை கொண்டு போகவேணும்
தம்பி அவன் சொன்னபோது தார்குழலாள் யேது சொல்வாள்
உன்னை கண்டால் விடமாட்டாள் வண்ணான் மகள் சிவப்பொழிவு
என்று அக்காளும் சொன்னபோது தம்பியவன் யேதுசொல்வான்
அப்படியும் பிடிப்பாளோ அழுக்கு சேலை வெளுப்பவனை
நான் போய்வாறேன் என்று சொல்லி பொட்டணமும் தோளிலிட்டான்
தம்பியரை வழியனுப்பி அக்காளும் தானிருந்தாள்

(சிகப்பொழிவு முண்டுசாமி அழகுகண்டு மயங்கல்)

தெய்வராசன்போல் வருகையிலே அந்த தேன்மொழியாள் சிவப்பொழிவு
கூதாக தானிருந்த தோகை நல்லாள் சிவப்பொழிவு
அந்த நல்ல வேளையிலே அறுபத்தாறு தோழியோடே
அறுபது பாகம் கெங்கையிலே ஆயிழையாள் தீர்த்தமாடி
தீர்த்தமாடி மாத்துடுத்து சேயிளைமார் எல்லோரும்
அரண்மனை வீதிலே ஆயிழையாள் சிவப்பொழிவு
காரை பூசின மண்டபத்தில் கண்ணாடி சன்னலிலே
தங்கச் சீப்பாலே தலைகோரி நிற்கயிலே
முண்டுசாமி வருகிறதைக் கண்டாளே சிவப்பொழிவு

சூரியன் போல் இலங்கிறதைத் தோகையரும் கண்ணில் கண்டாள்
இத்தனை நாள் இதுவரையும் இவர் அழகைக் கண்டதில்லை
இத்தேசம் ஆனதிலென்ன தகப்பன் குயிலவண்ணான்
இப்படி ஒரு மன்னவனை எனக்கு மணம் செய்வதற்கு
மாலைதரிக்க வென்று வாராரோ மன்னவரும்
என்று மனதில் எண்ணி ஏங்கி மயக்கம் கொள்வாள்

(முண்டுசாமியை அழைத்து வருமாறு தோழிகளுக்குக் கட்டளையிடல்)

மதிமயங்கி இருந்தவளை தோழியர்கள் கண்ணில் கண்டார்
இந்த மயக்கம் வந்ததென்ன சிவப்பொழிவே உந்தனுக்கு
என்று கேட்டார் தோழியர்கள் ஏது சொல்வாள் சிவப்பொழிவு
எங்கள் வீட்டில் வேலை செய்யும் ராசனை கண்ணில் கண்டேன்
கண்டு கண்மயக்கம் வந்ததடி என் கண்முன்னே வருத்திடுங்கோ
ஏந்திழையே தோழிகளே என் முன்னேகொண்டு விட்டிடுங்கோ

(தோழியர் அழைப்பும் முண்டுசாமி மறுப்பும்)

தோழிமார்கள் ஓடிவந்து வாருமென தானழைத்தார்
சிவப்பொழிவு அழைக்கிறா ளுனை அரண்மனைக்கு வாரும் ஐயா
அரண்மனைக்கு வாரதற்கு அவசரமோ எந்தனக்கு
சிவப்பொழிவு வருந்துகிறாள் அவண் நேரே வாருமையா
நான் அரண்மனைக்கு வரமாட்டேன் ஆயிழையே போங்களென்றான்
அப்போது தோழியர்கள் சிவப்பொழிவு இடத்தில் வந்தார்
வாருமம்மா மன்னவர்தான் வரமாட்டேன் என்று சொன்னார்
மாட்டேனென்று சொன்னதுண்டால் வலுமுக்காய் கொண்டுவந்திடுங்கோ
என்று சொல்ல சிவப்பொழிவு தோழியர்கள் ஓடிவந்தார்
முன்னே எட்டிதான் மறித்து மெய்குழல்மார்தான் பிடிக்க
என்னைத்தான் பிடியாதிங்கோ என்று சொல்லி ஓடிவிட்டார்
அப்போது தோழியர்கள் ஆயிழைக்கு வந்து சொன்னார்
மன்னவரை போய் பிடித்தோம் மாட்டேன் என்று ஓடிவிட்டார்
தோழிமார்கள் சொன்னபோது துக்கம் கொண்டுதான் படுத்தாள்

(முண்டுசாமி நடந்ததை அக்காவிடம் கூறல்)

முண்டுசாமி ஓடிவந்து அக்காளிடம் சொல்லலுற்றார்
சிவப்பொழிவு அரண்மனைக்குச் சேலை கொண்டுப் போனதுவும்
வண்ணான்மக சிவப்பொழிவு என்னைக் கண்டு மசங்கினதும்
தோழியர்கள் என்னை வந்து துடந்து வந்து(ப்)பிடித்ததும்
ஒன்றுக்கும் அகப்படாமல் ஓடிவந்தேன் உன்னிடம்
தம்பியவன் சொன்னபோது அக்காளும் சிரிக்கலுற்றாள்
கிலுகிலு என்றுதான் சிரித்து கிளிமொழியாள் ஏதுசொல்வாள்

தேச ராசா மகள் உன்னைக் கண்டு மசங்கி விழுந்தாளே
இதுவும் ஒரு சோதனையோ என்றாளே அக்காளுமே
நாளை உதயத்திலே இருபேரும் போவோம் மென்றார்

(அக்காளும் தம்பியும் சிகப்பொழிவு இருக்குமிடம் செல்லல்)

மறுநாள் உதயத்திலே அக்காளும் தம்பியுமாய்
சிவப்பொழிவு அரண்மனையில் சேலை கொண்டுவந்தார்
கண்டாரே தோழியர்கள்அக்காளையும் தம்பியையும்
சிவப்பொழிவு யிடமதிலே சேதி சொன்னார் தோழியர்கள்
நேற்று வந்த மன்னவர்தான் அக்காளோடு வந்துவிட்டார்
என்று சொன்னார் தோழியர்கள் ஏது சொல்வாள் சிவப்பொழிவும்
எனக்கும் மசக்கமது தீரவேணும் இங்கு இரு பேரையும் அழைத்திடுவீர்
அப்போது தோழியர்கள் அக்காளையும் தம்பியையும்
ஆதரவாய் தானழைத்து அரண்மனைக்குக் கொண்டுபோனார்

(சிகப்பொழிவு முண்டுசாமியை சேர்த்துவைக்க வேண்டுதல்)

இரு பேரையும் கண்டபோது சிங்காசனம் விட்டிறங்கி
ஆயிழையாள் சிவப்பொழிவு அன்புடனே ஏது சொல்வாள்
கிண்ணியிலே சந்தனமும் கிளிமூக்கு வெற்றிலையும்
தாம்பலத்தில் தானெடுத்து தார்குழலும் கொண்டு வைத்தாள்
வெற்றிலையைக் கண்டவுடன் வேகமுடன் ஏது சொல்வாள்
உன்னுடைய இடமதிலே வெற்றிலையே தின்பதில்லை
வெற்றிலையைத் தின்னுவிட்டால் உங்கள் இருபேர்களுக்கும்
வெள்ளிமாலை தங்க மாலை வொன்னுமாலைதான் கொடுப்பேன்
சீதனமாய் வழங்கிடுவேன் சிறந்த நாடு அத்தனையும்
என்று சொன்னாள் சிவப்பொழிவு ஏதுசொல்வார் முண்டுசாமி
இந்த மொழி குயிலவண்ணன் கேட்டால் பிழை மோசம் வரும்
இப்படியவர் சொன்னபோது ஏது சொல்வாள் சிவப்பொழிவு
எத்தனையோ சொன்னாலும் எழுந்திருக்க மாட்டேன் என்றாள்
மோகமது வொறுக்குதில்லை முகம் பார்க்க மாட்டேன் இனி
பயித்தியங்கள் எழும்புறது பார்ப்பதில்லை இனிமேலும்
கோபம் கொண்டு சிவப்பொழிவு கோலவிழி கண்சிவந்தாள்

(அக்காளும் சம்மதம் தெரிவித்தல்)

அக்காளும் கண்ணில் கண்டு தம்பியர்க்கு ஏதுசொல்வாள்
வைதிடுவாள் பேசிடுவாள் வம்பழிகள் செய்திடுவாள்
குப்பையிலே போட்டாலும் குன்றுமணிமங்காது
அரைத்தாலும் சந்தனந்தான் அதன் மணம் குறைந்திடுமோ
ஏழுகுலத்திற்கு முதற்குலந்தான் சூரியகுலம் மங்காது
வாரதெல்லாம் வரட்டெனவே அவளுடனே சேர்ந்திருப்பாய்

(சிவப்பொழிவும் முண்டுசாமியும் பள்ளியறையில் இன்பம் துயித்தல்)

அக்காளும் சொன்னபோது அருமை தம்பி தலைகவிழ்ந்தான்
தலைகுனிந்த ஜாடைகண்டு தார்குழலாள் சிவப்பொழிவும்
பஞ்சணையில் இருந்தவள் தான் பாவினையாய் கீழிறங்கி
ஆசையோடு சேத்தெடுத்தாள் அழகு மணிமார்போடே
கொங்கையோடு தானணைத்து கொலுமுகத்தில் வந்துவிட்டாள்
தீண்டு தலையணையைத்தான் விரித்து தேர்ந்த மலர் மெத்தையிலே
வெற்றிலையைத் தின்று கொண்டு விடியும் மட்டும் விளையாடி
கட்டியணைத்து அவர்கள் கனமுடனே இருக்கயிலே
ஈருடலும் ஒருடலாய் இருந்தார்கள் அன்னேரம்
ஆசையெல்லாம் தீர்ந்தவர்கள் அகமகிழ்ந்து வீற்றிருந்தார்

(சிகப்பொழிவு வயிற்றில் கற்பம் தரித்தல்)

இப்படியே அவளோடு இணைசேர்ந்து வீற்றிருந்தார்
இப்படியிருக்கிறதோர் நாளையிலே ஏந்திழையாள் திருவயற்றில்
சிவப்பொழிவு திருவயிற்றில் சிறந்த கெர்ப்பம் தரித்திடுமாம்
சிவப்பொழிவு படித்தவித்தை அத்தனையும் சொல்லிவைத்தாள்
ஆக இருபேர்களுமாய் வித்தைகளைத் தான்படித்தார்

(குயிலவண்ணாத்தி மகளை எடைபார்க்க வருதல்)

இப்படியேதான் படித்து இருக்கிறதோர் நாளையிலே
மாதம் வந்து திகைந்த போது மங்கை குயிலவண்ணாத்திதானே
மகளை யிடைபார்க்க வென்று மாமயிலாள் சந்தோசமாய்
திராசிபடி தானெடுத்து தார்குழலாள் வழிநடந்தாள்
மகள் அரண்மனைதனில் வந்து மகிழ்ந்து குயிலவண்ணாத்தி

(குயிலவண்ணாத்திக்கு சந்தேகம் வருதலும் மகளை வினவலும்)

தன்மகள் சிவப்பொழிவை சந்தோஷமாய் வரவழைத்து
என்மகளே சிவப்பொழிவே ஏந்திழையே எழுந்திருப்பாய்
தாயவளும் வரவழைக்க தார்குழலாள் சிவப்பொழிவு
பஞ்சணை மெத்தையிலே மலர்விரித்து படுத்திருந்தாள்
பொய்யுறக்கம் கொண்டவள்தான் பூவணையில் படுத்திருந்தாள்
படுத்திருந்த சிவப்பொழிவை பாவை நல்லாள் வந்தெழுப்ப
தட்டி எழுப்பயிலே தார்குழலாள் தானெழுந்தாள்
மங்கையரை தானெழுப்பி அரண்மனையே தான்பர்த்தாள்
பத்தினியே என்மகளே நீ படுத்திருந்த பஞ்சணையில்
பூவாடியிருப்பதென்ன பொற்கொடியே சிவப்பொழிவே

பூவாடி யிருக்கிற தென்று பெற்றவளும் கேட்டபோது
ஒன்றுமே சொல்லாமல் ஒன்றொடியாள் நின்றுவிட்டாள்
மனசிலே கிலேசம் கொண்டு மங்கையரைக் கூட்டிவந்தாள்
திராசியில் மகளை வைத்து தானே யிடை பார்க்கலுற்றாள்
இலுமிச்சம் பழம் வாடிடவே ஏற்ற மகள் முறுகிடவே
மனம் கலங்கி குயிலவண்ணாத்தி திராசிவிட்டு கீழிறக்கி
சிவப்பொழிவு தன்முகத்தை சீராகப் பார்க்கலுற்றாள்
பருத்தயிடை சிறுத்ததென்ன உனக்கு பல்கறுத்து(ப்) போனதேன்
கழுத்தடிகள் தேய்திருக்க கால்படங்கள் பருத்ததென்ன
ஆலிலைபோல் இருந்த வயற் அடிவயற் கனத்ததென்ன
அறுபத்தாறு முழம் கூந்தல் அழுக்கடைந்து போனதென்ன
உன்அழகு தேகம் கெட்டுப்போனதென்ன
என் மகளே சிவப்பொழிவே உனக்கு இந்த விதி வந்ததே
நீயிருந்த காவலிலே இந்த இடையூறு வந்ததென்ன
இங்கு வந்தவரை சொல்கிறாயா என் வாழ்நாளை போக்கிடட்டா

(மகளின் மறுப்பும் தாய் புலம்பலும்)

வந்து தாயவளும் கேட்டபோது தானே மகள் ஏது சொல்வாள்
நான் இருந்த காவலிலே வேறொருவர் வருவாரோ
ஆடவர்கள் வந்ததில்லை வேறு அலங்கழிவு நடந்ததில்லை
என்று சொன்னாள் சிவப்பொழிவு ஏது சொல்வாள் தாயவளும்
தோழியர்களை முகம் நோக்கி தோகையரும் செய்திகேட்டாள்
தோழியரே பாங்கியரே சொல்லிடுங்கோ வந்தவரை
வந்தவரை சொல்லிடுங்கோ என்மகளை மணம்முடிக்கவேணும்
வந்தவரை சொல்லாவிட்டால் உங்களை வாளாலே வெட்டிடுவேன்
எங்களுட காவலிலே வேறே ஆடவர்கள் வந்ததில்லை
ஆகட்டும் நல்லதென்று ஆயிழையாள் வண்ணாத்தி
வாயுவேகமாக வந்து விட்டாள் மனைதனிலே

(மகளுக்கு நேர்ந்த அலங்கழிவினைக் குயிலவண்ணானிடம் தெரிவித்தல்)

மன்னனுட முன்பதிலே மடக்கொடியும் வந்துநின்று
ஆசையுள்ள மன்னவரே அருமையுள்ள என் கணவா
ஆசைமகள் சிவப்பொழிவு அரசிருந்த காவலிலே
காவலும் அழிந்ததையா கள்ளர் பயம் வந்ததய்யா
அம்பலத்தில் இருக்கலாமா ஆசாரம் பேசலாமா
சிங்காசனம் இருக்கலாமா இருந்தரசு செய்யலாமா
நம் நாக்கை யறுத்தாளே மகள் நடுக்கேடு செய்தாளே
மூக்கை யறுத்தாளே முறைகேடு செய்தாளே
நானினிமேல் இருந்ததுண்டால் இகழ்வரும் பூமியிலே

மாண்டிடுவேன் என்று சொல்லி மங்கையவள் புலம்பலுற்றாள்
குயிலவண்ணான் காலடியில் வாள்நிறுத்தி முறையமிட்டாள்
நான்வாளதிலே பாய்ந்திடுவேன் வையகத்தில் இருப்பதில்லை
என்று சொல்லி குயில வண்ணாத்தி இணைவாளை நாட்டலுற்றாள்
வாளையும் தான் தடுத்து வாய்த்த நல்ல குயிலவண்ணான்

(குயிலவண்ணான் கோபமும் தோழியர் கிங்கிலியர் மரணமும்)

அநியாயம் வந்ததென்று அண்டம் கலங்கி எழுந்திருந்தான்
மடமடவென்று வழிநடந்து மகள் மனையில் வந்து சேர்ந்தான்
அரண்மனையில் வந்து நின்று அவசரமாய் குயிலவண்ணான்
என்மகளே சிவப்பொழிவே எழுந்து எழுந்து என்கிறான்
தகப்பன் சொல்லை காதில் கேட்டு தார்குழலும் எழுந்திருந்தாள்
அன்னம் போல் நடை நடந்து அருமையுடன் முன்னே வந்தாள்
திராசியிலே மகளை வைத்து தானே யிடை பாக்கலுற்றான்
பார்க்கின்றதோர் வேளையிலே பைங்கொடியாள் சிவப்பொழிவு
இலுமிச்சம் பழம் வாடிடவே ஏந்திளையாள் முறுகிடவே
சந்தேகம் கொண்டு குயில வண்ணான் மகளை கீழேயிறக்கி விட்டான்
கோபங்கொண்டு குயிலவண்ணான் தோழியர்கள் யிடறி வதைத்தான்
ஆடவர்தான் வந்தாரோ எல்லோரும் சொல்லுமென்றார்
வந்தவரை சொல்லிடுங்கோ என் மகளை மணம் முடிக்க வேணும்
எங்களுட காவலிலே வேறொருவர் வந்ததில்லை
கள்ளர் வருவதறியாமல் இருந்தீரோ காவலிலே
அவரை கைபிடியாய் தான் பிடித்து சண்டாள குயில வண்ணான்
ஒவ்வொரு பெண்ணாக வெட்டிவிட்டான் குயிலவண்ணான்
பெண்களையும் கொன்றுவிட்டு கிங்கிலியர்யிடத்தில் வந்தான்
வந்து நின்று குயிலவண்ணான் அவர்களையும் வெட்டலுற்றான்

(குயிலவண்ணான் மகளை மிரட்டிக் கேட்டலும் மகளின் பதிலும்)

கிங்கிலியரைக் கொன்றுவிட்டு கிருவை கொண்டவன் போல்
உருவான வாளுடனே சிவபொழிவுயிடத்தில் வந்தான்
காவலரை கொன்று போட்டுடன் கன்னியரே சொல்லுமென்றான்
வந்தவரை சொல்மகளே வாய்த்த மணம் கூடவேணும்
மணம் கூட்ட வேணுமென்று மன்னவனும் சொன்னபோது
தகப்பனுட யிடமதிலே தயவுடனே சொல்லுவாளாம்
பட்ட பட்ட பாட்டை எல்லாம் தகப்பனோடே சொல்லுவாளாம்
நம்முடைய வீட்டிலே வேலை செய்யும் மன்னவரை
கண்டுமே நான் மசங்கி கன்னியரை விட்டழைத்தேன்

மாட்டேன் என்று சொல்லிவிட்டார் வலுப்படுத்தி அழைத்து வந்தேன்
என்று சொன்னாள் சிவப்பொழிவு ஏதுசொல்வான் குயிலவண்ணானும்
உன்னாலே எந்தனக்குப் பலன் கிடைக்குமென்றிருந்தேன்
உன்னை பிள்ளையென்றல்லவோ நானிருந்தேன் பிழைமோசம்
செய்துவிட்டாய்
கொத்து வேலை செய்தவனோடு சேர்ந்து உறவாடலாமோ
உண்ட சோற்றுக்கு ரண்டகம் செய்தவன் உன்னை மோசம் செய்தானோ
ஆகட்டும் நல்லதென்று சொல்லி அரண்மனைக்கு வந்து விட்டான்

(குயிலவண்ணான் கோபமும் கொலை வெறியும்)

அரண்மனையில் வந்து நின்று ஆலோசனை செய்யலுற்றான்
வாளால கொலை செய்யவொண்ணாது வன்பலியாய்க் கொல்ல வேணும்
அக்காள் தம்பியைக் கொல்லுதற்கு ஆறுவகை பாசனம் தான் சேர்த்தான்
பாஷனம் தான் சேர்த்து படுபாவி குயிலவண்ணான்
அக்காளும் தம்பியுமாய் அவர்கள் இருபேரும் வரு(கை)யிலே
சாதம் கறிதான் சமைத்து நஞ்சை அதில்தான் கலந்து நலமுடனே
வீற்றிருந்தான்

(அக்காளையும் தம்பியையும் சாப்பிட அழைத்தல்)

அக்காளும் தம்பியும் இருபேரும் வந்தபோது
தலைவாழை யிலைதனிலே சாதம் கறிதான் வைத்தான்
தண்டல்காரன் ஓடிவந்து அக்காளும் தம்பியையும்
அன்னமது புசிப்பதற்கு அரண்மனைக்கு வாருமென்றான்
அரண்மனைக்கு வந்து வழக்கமில்லை யென்றாரே இருபேரும்
ஏழு தண்டல்காரர்களும் இழுத்துக் கொண்டு போகலுற்றார்
சாதமது வைத்திருக்கு சாப்பிடுங்கோ என உரைத்தான்
என்று இருபேரையும் கொண்டு இருத்தி நடைகூட்டி வைத்தான்

(சதியை அறிந்து இருவரும் தப்பித்தல்)

சிகப்பொழிவு அரண்மனையில் சிறந்த பழி செய்ததையும்
காதில் கேட்டு இருபேரும் கள்ளத்தனமாகவே தான்
நஞ்சு கலந்திருக்கும் நாம புசிக்கக் கூடாது
சோதனைப் பார்த்து தம்பி சோறுதனைப் புசிக்கவேணும்
குயிலவண்ணான் அரண்மனைக்குள் கொப்பனையாள் பார்க்கயிலே
அன்னமோடு கிள்ளைகளும் பன்றி நாய் பூனைகளும்
நாலுபிடி அன்னம்வைத்த மிருகம் நாலும் பட்டிடவே
கதவுநடைதான் திறந்து தண்டல்காரன் பார்க்கலுற்றான்
மிருகம் நாலுமிறந்து போச்சு இருபேரும் சாகவில்லை

(இருவரும் சதியிலிருந்து தப்பியதைக் குயிலவண்ணானிடம் தெரிவித்தல்)

கண்ணில் கண்டுதண்டல்காரன் குயிலவண்ணானிடத்தில் வந்தான்
வந்து நின்று தண்டல்காரன் வாய்மொழி ஏதுசொல்வான்
சாதமது திண்ணாமல் இருபேரும் இருக்கிறார்கள்
நஞ்சு என்று அறிந்து கொண்டு நாலு மிருகத்துக்கு வைத்துவிட்டார்
பட்டுக்கிடக்குதய்யா அரண்மனைக்குள்ளேதான்

(அக்காள் தம்பி இருவரையும் கட்டிவைத்து அடித்தல்)

அப்போது குயிலவண்ணான் கோபமது தானுங்கொண்டு
இருபேரையும் தான் பிடித்து என் முன்னே கொண்டு வாருமென்றார்
குயிலவண்ணா னிடமதிலே கொண்டுவிட்டா ரிருபேரையும்
ஆண்பிள்ளையைத்தான் பிடித்து தங்கத்தூணிலே கட்டுமென்றார்
வெண்கலக் குரடுகொண்டு அடியுங்கள் இருபேரையும்
அப்படியே தண்டல்காரன் கட்டியே தானடித்தான்
கன்னம் கன்னம் செவிடு என்று சொல்லி அடித்தார்கள் இருபேரையும்
அடிபொறுக்க மாட்டாமல் அக்காளுமத தம்பியுமாய்
பொன்னான மேனியெல்லாம் சில்லி ரத்தம் பாயுதையா
தங்கநிற மேனியெல்லாம் தாறுமாறாய் குலையுதையா
விதனம் பொறுக்க மாட்டாமல் விம்மி விம்மி ஏதுசொல்வாள்
சண்டாளப்பெரும் பாவி என் தம்பியைத்தான் அடியாதே
பாவி உந்தன் மகளாலே பங்கப்பட்டுச் சாகவந்தோம்
நாங்கள் சொன்னபடி கேட்கிறோம் எங்களை பங்கப்படுத்தாதே
அக்காளும் தம்பியும் அவர்களையும் கெஞ்சலுற்றார்
குயிலவண்ணா னிடமதிலே தண்டல்காரர் வந்து நின்று
சற்றும் சீவனில்லாமல் தான் வதைத்தோமென்று சொன்னார்

(இருவரையும் கொல்ல குயிலவண்ணான் கட்டளையிடல்)

அப்போது குயிலவண்ணான் தண்டல்காரனுக்கு ஏது சொல்வான்
ஆண்பிள்ளை கண்ணிரெண்டும் வெள்ளெலி போல் உரியுமென்றான்
அப்போது தண்டல்காரன் வெள்ளெலிபோல் தான் உரித்தான்
அக்காளையும் அப்படியே உரித்து கறியாக்கலுற்றான்
அக்காளுக்கும் தம்பிக்கும் உயிர் அந்தரத்தில் போகுதையா
உதிரம் சிதற உயிர் கண்ணாலே போகுதையா
சற்றும் சீவனில்லாமல் கொன்றானே தண்டல்காரன்

(அக்காள் தம்பி இருவரும் சிவனிடம்செல்லுதல்)

சீவனது சூரையாக்கி சிவலோகம் போகுதுகான்
அப்போது குயிலவண்ணான் அரும்பாவி ஏதுசொல்வான்

பெருவிரலில் கண்ணியிட்டு பார் கண்ட இடங்களெல்லாம் பார்
கண்ட இடங்களெல்லாம் சன்னல் பின்னல் ஆக்கச்சொன்னான்
அப்போது தண்டல்காரர் பெரு விரலில் கண்ணியிட்டு
கண்ட கண்ட பரல்களெல்லாம் தாறுமாறாய் இழுக்கலுற்றார்
அறையுடைய தலை அதிக வனம் கொண்டிழுத்தார்
சன்னல் பின்னலாய் தாறுமாறாய் பிச்செறிந்தார்
சதை சதையாய் பிச்செறிந்து தண்டல்காரர் வந்துவிட்டார்
அப்போது ஈஸ்வரனும் உயிர் கொடுத்தார் அந்நேரம்
அக்காள் தம்பி இருபேருக்கும் அவர்கள் உடல்தான் பொருந்தி
கைலாசமானதிலே கறைகண்டனா ரிடமதிலே
அக்காளும் தம்பியுமாய் ஆதிசிவனிடத்தில் வந்தார்

(இறந்தவர்களின் உடலைக் கண்டுவருமாறு குயிலவண்ணான் காவலரை ஏவுதல்)

குயிலவண்ணானிடமதிலே வந்து சொன்னான் தண்டல்காரன்
கானல் வனமதிலே கசக்கி எறிந்து வந்தேமென்றார்
அப்போது குயிலவண்ணான் அவர்களுக்கு ஏதுசொல்வான்
நீங்கள் போட்டுவிட்ட பிரேதமதைப் போய்பார்த்து வாருமென்றார்
காவலர்கள் வந்து பார்க்க காணுதில்லை இருவரையம்
குயிலவண்ணானிடத்தில் வந்து காவலர்கள் ஏது சொல்வார்
போட்டயிடம் போய்பார்த்தோம் காணுதில்லை இருவரையும்
என்றவர்கள் சொல்லிடவும் இருந்தானே மனைதனிலே

(அக்காளும் தம்பியும் சிவனிடம் வரம்கேட்டல்)

அக்காளும் தம்பியுமாய் ஆதிசிவன் தன்னிடத்தில்
ஏழையாண்டி பரமசிவம் எங்களுக்கு வரம் தாருமையா
இவர்கள் பட்ட பாட்டை எல்லாம் ஈஸ்பரனும் தானறிந்து
என்ன என்ன வரங்கள் வேணும் என்று கேட்டா ரீஸ்பரனும்
கொல்லவரம் வெல்லவரம் கூடுவிட்டு பாயவரம்
அக்கினியில் பாயவரம் ஆகாயத்தில் பறக்கவரம்
பூமிக்குள்ளே நுழையவரம் புகையாகப் போகவரம்
கண்ணுக்குள்ளே தானிருந்து கனமயக்கம் கொள்ள வரம்
ஆறுமாஸ்தை சூலிகளை அடிவயிற்றை கலக்க வரம்
பத்து மாஸ்தைச் சூலிகளை வெறுவயிறாய் ஆக்கவரம்
சூலிகள் பிள்ளை பிறக்கும்போது நடுநடுங்கிப் போகவரம்
தடிதழைத்து பூசை கொள்ள கோடிவரம் தாருமையா
படுத்துறங்கும் வேளையிலே பதறி முழிக்கவரம்
கண்டயிடங்களெல்லாம் கனத்த பூசை கொள்ளவரம்
கண்டுபிடியாமல் காற்றாய் பறக்கவரம்
இருதுண்டாய் வெட்டினாலும் மறுபடியும் பிறக்கவரம்

கெங்கையிலே போட்டாலும் தண்ணீராய் போகவரம்
இத்தனை வரங்களெல்லாம் எங்களுக்குத் தாருமையா
கேட்டவரம் அத்தனையும் இருபேருக்கும் தந்தோமென்றார்

(வரம்பெற்று இருவரும் பூலோகம் வருதலும் பழிவாங்கலும்)

ஈசனிடம் வரம் வாங்கி இருபேரும் வந்து சேர்ந்தார்
வண்ணானுட அரண்மனையில் வந்து சேர்ந்தார் இருபேரும்
ஏழுமாத்த சூலியாக இருந்தாளே சிவப்பொழிவு
இருந்தவளைதான் தூக்கி இசவாக கீழ்கிடத்தி
சுண்டுவிரலாலே நெஞ்சைக் கிள்ளி சூலிப்பிள்ளையைத் தானெடுத்தார்
குடலை பிடுங்கி மாலை போட்டு குரவையிட்டார் இருபேரும்
பைங்கொடியாள் சிகப்பொழிவு பட்டு மடிந்துவிட்டாள்

**(சிவப்பொழிவு இறந்ததை குயிலவண்ணான்அறிதலும்
அழுதுபுலம்புதலும்)**

சிகப்பொழிவு படுகளத்தைச் சேடியர்கள் வந்துகண்டார்
வண்ணானிடமதிலே வந்து சொன்னார் சேடியர்கள்
உந்தன் மகள் சிகப்பொழிவு பட்டு மடிந்துவிட்டாள்
பட்டு மடிந்தாளையா பாரநல்ல மலை போலே
என்று சொல்ல சேடியர்கள் ஏங்கி விழுந்தானே குயிலவண்ணான்
மகள் பட்ட படுகளத்தை மன்னன் கேட்டு எழுந்திருந்து
குயிலவண்ணானும் வண்ணாத்தியும் ஓடியேவாராக்கள்
வழிநடந்து வருகையிலே வாய்த்த நல்ல குயிலவண்ணான்
கையில் திருநீற்றையள்ளி கண்ணால் முக்கோணம் வெட்டி
முக்கோண சக்கரம் வெட்டி முன்னும் பின்னும் பார்க்கலுற்றான்
அக்காளும் தம்பியுமாய் அவர்கள் என்று தெரியக்கண்டான்
வன்பழியாய் கொன்றோமே வதை வாணால் செய்தோமே
என்றறிந்து குயிலவண்ணான் இருபேரும் வந்து சேர்ந்தார்
பட்டிறந்த மகள்தனையும் தான்கண்டான் குயிலவண்ணான்
இந்த விதிவருமென்று எள்ளளவும் அறிந்தேனில்லை
பொன்மகளே மின்னொளியே பூங்கிளியே செங்கரும்பே
மணியே கருவலமே உனைக்காணுவது மெக்காலம்
பெற்றெடுத்த அருமை என்ன உன்னை வைத்திருந்த நேர்த்தி என்ன
வாடாத பூப்போலே மகளே நானும் உன்னை வைத்திருந்தேன்
மங்கையை வைத்திருந்தும் ஒரு பலனும் கண்டதில்லை
மாலையிட்டு மணமுடித்து மணக்கோலம் பார்த்திடாமல்
மன்னவனே என்கணவா மாறுபாடு செய்தாயோ
என்று குயிலவண்ணாத்தி ஏங்கி விழுந்தாளே மகள் மேலே
அரை குலைய தலைகுலைய அடிவயிற்றோடு அடித்தழுதாள்
என் மகளே சிவப்பொழிவே ஏற்ற சிறு கண்மணியே

உன் பொன்னான மேனியெல்லாம் பூமியில் புரளலாச்சே
உன் தங்கநிற மேனியெல்லாம் தரையில் புரளலாச்சே
அழகான உன் கூந்தலது அலங்கழித்து கிடக்குதே
என்றுமே அழுதுகொண்டு இருந்து பின் புலம்புவாளாம்
இன்று உன்னை கண்ட கண்ணால் என்றைக்கு காணப் போகிறேன்
இத்தனைக்கே பேறுபெற்றேன் என்மகளே சிகப்பொழிவு
ஆரைநான் சதமென்பேன் அன்னியரை தஞ்சமென்பேன்
அன்னநடை மின்னொளிவே அருமையுள்ள சிகப்பொழிவே
ஆசையுள்ள என்மகளே இனி ஆர்முகத்தைப் பார்க்கப் போறேன்
பிள்ளை பெற்றும் மலடானேன் பிள்ளையற்ற பாவியானேன்
தாயும் தகப்பனும் தன் மகள் சிகப்பொழிவை
சந்தனக் கட்டை வெட்டி தகனமது செய்யலுற்றார்
தலை மேலே கையை வைத்து தகனம் செய்தான் குயிலவண்ணான்

(அக்காளும் தம்பியும் அரண்மனையில் கோரணிகள் செய்தல்)

மகள்பட்ட கவலை எல்லாம் மனதிலே எண்ணி எண்ணி
மூலையிலேதான் படுத்தான் முக்காடு போட்டுக்கொண்டு
குயிலவண்ணானும் வண்ணாத்தியும் துக்கமுடனிருக்கயிலே
அக்காளும் தம்பியுமாய் அரண்மனை தன்னில் வந்தார்
குயிலவண்ணான் மனைதனிலே ரொம்பக் கோரணிகள் செய்யுவாராம்

(இருவரையும் பூமிக்குள் பிடித்தடைக்க குயிலவண்ணான் முடிவு செய்தல்)

அப்போது குயிலவண்ணான் மனதிலே கவலை கொண்டான்
இவர்கள் இருபேரையும் தான் பிடித்து பூமிதானம் செய்ய வேணும்
என்று சொல்லி குயிலவண்ணான் வித்தைகள் பாடம் பண்ணுவானாம்
மறந்திருந்து மந்திரத்தை மனப்பாடம் பண்ணுவானாம்
தலைப்பிள்ளைக் கருவெடுத்து சருவ சண்டாளன் மை சேர்த்தான்
கூவின வெள்ளைக் சாவல் பச்சைப் பானைச்சட்டி பச்சைக்குடம் சேகரித்தான்
தடியம் பூசணிக்காய் தானே நெல்லும் சேகரித்தான்
தேங்காய்ப் பழத்துடனே பூக்குலையும் சேகரித்தான்
வெள்ளிக்கிழமையிலே விடிய ஒரு சாமத்திலே
இடுகாடு மயானத்தில் அன்று அடக்கின சுடலையிலே
பிறந்த நல்ல கோலத்துடன் பிசாசுபோல வடிவெடுத்து
அன்று எரித்த சுடலையிலே அவன் தானும் வந்திருந்து
தென்முகமாயிருந்து கொண்டு பீடமதுதான் போட்டான்
ஆயிரத்தெட்டு முக்கோணம் அம்பத்தோர் அச்சாரமும்
அட்டகாளி ஆவகாணம் செய்து அட்டதிசை எட்டும் கட்டலுற்றான்
அந்தரத்தில் பறந்திடாமல் ஆகாசத்தை கட்டலுற்றான்

பூமிக்குள் நுழைந்திடாமல் அண்ட புவனத்தைக் கட்டலுற்றான்
வெற்றிலையில் மைதடவி மந்திரத்தை உச்சரித்தான்
வயிரவனைத் தியானம் செய்து வரவழைத்தான் இருபேரையும்
அக்காளும் தம்பியர்க்கும் அண்ட ஒருயிடமுமில்லை
அக்கினி பற்றி எரியுதங்கே ஆக யிருபேர்களுக்கும்
என்னுடைய தம்பியரே இனி எங்கே போய் ஒழித்திடுவோம்
தண்ணீருக்குள் பாயுதற்கு தண்ணீரும் கொதிக்குதடா
அந்தரணத்தில் பறந்தாலும் அங்கமது எரியுதல்லோ
பூமிக்குள்ளே பறந்தாலும் பூமியும் நெரிப்பாச்சே
சமூகத்தில் வருகையிலே அக்காளும் தம்பியும் துன்பம் கொண்டார்

(முண்டுசாமி குயிலவண்ணானைக் கொல்லுதல்)

குயிலவண்ணான் மகளைப் போலே முண்டுசாமி வடிவெடுத்தான்
தண்டை சங்கை கிலுகிலென தாவடங்கள் அசைந்தாட
தம்பியைப் பிறகேவிட்டு அக்காளும் ஒடிவந்தாள்
குயிலவண்ணான் மனைதனிலே கொம்பனையாள் வந்து நின்றாள்
அப்போது குயிலவண்ணான் அவளைபார்க்கும் வேளையிலே
மகளைபோல் தெரியக்கண்டு மையை மெள்ள தாழவிட்டான்
என் மகளே கெடுத்தாளே என்று ஆசையோடு முத்தமிட்டான்
இதுதான் நல்ல சமயமென்று எட்டி அடித்தானே முண்டுசாமி
அடித்த நல்ல அடியோடே அலறிவிழுந்தான் கூடலையிலே
அக்காளும் தம்பியுமாய் அவன் நெஞ்சை கீறிப் போட்டார்
பட்டுவிட்டான் குயிலவண்ணான் பார யிடுகாடதிலே

(குயிலவண்ணான் வம்சத்தை அழித்தல்)

அதில் நின்று குரவையாடி அக்காளும் தம்பியுமாய்
குயில வண்ணான் வீடதிலே கோபமுடன் ஓடிவந்தார்
மண்டபமும் மடப்பள்ளியும் மடமடென்று இழுத்தெறிந்தார்
குயிலவண்ணான் பட்டி எல்லாம் கூண்டபழி செய்தார்கள்
ஆனை பந்தி குதிரை பந்தி அடியோடே கொன்றுவிட்டார்
குயிலவண்ணான் வைப்பு பெண்கள் கொம்பனைமாரைக் கொன்றுவிட்டார்
குயிலவண்ணான் சேவகரை தண்டல்காரரையும் கொன்றுவிட்டார்
குயிலவண்ணான் மனையிலுள்ள குயிலவண்ணாத்தியையும்
கொன்றுவிட்டார்
குயிலவண்ணான் மகனும் பட்டான் கொடிய சனம் இறந்துவிட்டனர்

(முண்டுசாமி வண்ணாரமாடனாகக் கொலுவிருத்தல்)

இத்தனையும் பழிகள் செய்து ஏற்ற அக்காளும் தம்பியுமாய்
வண்ணானுட அரண்மனையில் வாய்த்த கோரணிகள் செய்துவிட்டார்
சிலுவை வண்ணான் சிலுவை வண்ணாத்தி சேயியாள் சிகப்பொழிவு

அத்தனை படைகளையும் அழைத்துக்கொண்டு
அக்காளும் தம்பியரும் மறுநாள் உதயத்திலே மறுதேசம் போகவென்று
மலையாளம் போகவென்று மறுரூபம் தானெடுத்து
வரார்கள் மலையாளம் மறுரூபம் தானெடுத்து
அலைவாய் கரையோரம் அனையோருமுடன் வருகயிலே
ஆறுமாதம் ஓடும் கப்பல் அங்கே நிற்கக் கண்டார்கள்
அந்த கப்பலில் தானமர்ந்து அக்காளும் தம்பியுமாய்
இனி பாண்டி தேசம் போகவென்று இருபேரும் வாரபோது
கப்பலிலே இருந்தபேரை கனமுடனே கொன்றவர்
எந்தபதி சென்றிடுவோம் எனதருமை தம்பியரே
கீழ்முகமாய் வருகையிலே கீழ சிவசுப்பிரமணியபுரம் தெரியக்கண்டார்
இந்த நல்ல தலந்தனிலே இருந்திடுவோம் தம்பியரே
குடிதழைக்க வைத்தோமானால் கோடிபூசை வாங்கிடலாம்
குயிலவண்ணான் ஆனவளை கொடிய தூதனாக வைத்திடலாம்
நாமும் வண்ணார மாடனாக வாழ்ந்திடலாம் தம்பியரே
பேரும் பெற்று வரம் பெற்று பிரியமாக இருந்திடலாம்
சிவசுப்பிரமணியபுரம் ஊரதிலே வண்ணாரமாடன்
வந்து கொலுவிருந்தான்.

(முற்றும்)

(கதைப் பாடலை இயற்றிய புலவர் அருத(ன) குட்டி நாடார்.)

கசமாடசாமி கதை

(வாய்மொழிப் பதிப்பு)

(வேட்டைக்காரன் குளம்
திரு.பிச்சைத் தேவர் அவர்கள் பாட ஒலிப்பேழையில்
பதிவு செய்து பிரதி செய்யப்பட்டது.)

(காப்பு)

ஆதியிலே வேத நாதா
அருள் அம்பலத்திலாடும் மைந்தா
சோதியிலே மாலையர்க்கு
துண்டாமல் நின்ற மாலை
அடிமுடியை நான் காணேன்
அம்பலவாணா உன் திருப்பாதத்தில்.

(துதி)

கானக் குறவள்ளி மணவாளா
கதைக்கு வந்து அருள்புரிவாய்
கந்தனுக்கு முன்பிறந்த
கணபதியே அருள்புரிவாய்
கதிர் வேலனுக்கு முன்பிறந்த
விக்ன விநாயகனே அருள்புரிவாய்
இடம் இருக்கும் சரஸ்வதியே
எந்தனுக்கு அருள்புரிவாய்
வலம் இருக்கும் விநாயகனே
வந்தெனக்கு அருள் புரிவாய்.

(பாட்டு)

ஆதிவெள்ளி கைலாசத்தில்
ஆராரெல்லாம் கொலுவிருந்தார்
பகவானும் பார்வதியும்
பச்சைமாலாம் லெட்சுமியாம்
பிரம்மாவும் சரஸ்வதியும்
இந்திரரும் வருசக் கலைக்கோட்டு மாமுனியும்
கிண்ணரராம் கிம்புருடர்
கருடர் கார் துருவர்
அகஸ்தியர் புனஸ்தியர்
அழகு கும்பமாமுனியும்
அட்டதிக்குப் பாலகர்கள் எட்டு பேர்களுடன்
ஆனந்தமாக கொலுவிருந்தார்.

(வசனம்)

அப்படி கொலுவிருக்கும்போது, பிரம்மாவும் விஷ்ணுவும், பகவானுக்கும் பார்வதிக்கும் அறுபதுக்கு அறுபதாம் கல்யாணம் முடிக்க வேண்டுமென்று சொல்லி நாள்பார்த்து, தினம் குறித்து, நல்ல வெள்ளிக்கிழமையிலே...

(பாட்டு)

கொட்டக்கைக்குக் கால்கள் நாட்டி
பந்தலது அலங்கரித்து
பந்தலிட்ட கால்களுக்கு
பச்சை வாழைக் குலைநிறுத்தி
மாத்துகளும் சாலறையும்
மாங்குலையாம் தோரணமாம்
ரஸ்தர்களும் குளப்புகளும்
சதுருகிரம்தான் தூக்கி
மாப்பிள்ளைக்கும் பொண்ணுக்கும்
ஒரு மணவறையும் அலங்கரித்தார்.

(வசனம்)

கொட்டகைக்கு பந்தலிட்டார், குளப்புகளும் தூக்கினார். பந்தலிட்ட கால்களுக்கு பவளமுத்தால் அலங்கரித்தார். ஈச்சங் கொழ கொண்டுவந்து இருபுறமும் அலங்கரித்தார். வன்னியமரம் கொண்டு வந்து வாசலைத்தான் அலங்கரித்தார். பகவானை அலங்கரித்து, பிரம்மாவும் விஷ்ணுவும், பகவானை கைப்பிடித்து மணவறையில் அமர வைத்தார். பாமாவும் ருக்மணியும் பார்வதியை அலங்கரித்து மணவறைக்கு கொண்டு வந்து பகவான் பக்கத்தில் அமர வைத்தார். இவ்விதமாக இருக்கும்போது விஸ்வகர்மா ஏது செய்வார். மணவறை பந்தலிலே எக்க வளர்த்தி கொள்ளிக் கட்டையால் இரு மரப்பாவை செய்து கட்டியிருந்தார்.

அப்படி இருக்கும் போது, பகவான் பார்வதியைத் திருப்பூட்ட வேண்டும் என்று திரு மாங்கல்யம் தான் எடுத்து திருப்பூட்டினார். பார்வதியை அப்படி திருப்பூட்டிய நேரத்தில் பார்வதி மணவறை பந்தலை ஏறெடுத்து பார்க்கும்போது, இரு பொம்மைகளையும் கண்ணால் கண்டாள். அதை, "சுவாமி! இது யார் செய்து வைத்தது?" என்று கேட்கும்போது, பகவான், "இது விஸ்வகர்மா அன்பளிப்பாக செய்து வைத்தது"

என்று சொல்லும்போது, பார்வதி அந்த இரண்டு மரப் பொம்மை களுக்கும் உயிர் கொடுக்கச் சொன்னாள். பகவான், பார்வதி வார்த்தையைத் தட்டாதபடி, அந்த இரு மரப் பொம்மைகளையும் கட்டை அவுத்து, கீழ் இறக்கி அந்த இரு பொம்மைகளுக்கும் உயிர் கொடுத்தார். உயிர் கொடுத்த நேரத்தில், அந்த இரு மரப்பொம்மைகளும் பகவானுடைய இடத்தில் என்ன கேட்கிறதென்றால், "ஐயா பகவானே! எதற்காகப் பிறவி செய்தீர். எங்க ஊரு என்ன? பேரு என்ன?" என்று கேட்கும்போது, பகவான் ஏது சொல்வார், "மாலை மணத்தில் பிறந்ததினால் மறவர் என்றும்; தேவர் சபையில் பிறந்ததினால் தேவர் என்றும்; மரத்தீயில் பிறந்ததினால் மறத்தி என்றும்; மாடப்பதேவர் என்றும் மாடிப்பிள்ளை என்றும் பேர் கொடுத்தார். உங்களுடைய இருப்பிடம் காஞ்சிவனம் பூஞ்சோலை. கயவருட தேசத்தில் மன்னவனும் தேவியுமாய் மகிழ்ச்சியுடன் ஆண்டு வருவீர்கள்" என்று பகவான் சொல்லி வழியனுப்பி வைத்தார். அப்படி இருக்கும் போது, பகவானுக்கும் பார்வதிக்கும் 60க்கு 60 திருக்கல்யாணம் முடிந்து பந்தி போசனம் முடித்து, சாப்பாட்டினுடைய கம்பீரத்தினால் அட்டதிக்கு பாலகர்கள் எட்டு பேரும், வட கைலாசத்தை நழுவ விட்டனர். அப்படி நழுவவிட்டதும் வடகைலாசம் தணிந்தும் தென் கைலாசம் உயர்ந்தும் விட்டது. அப்போது பகவானுக்கு கோபம் வந்து, அட்டதிக் குப் பாலகர்களை அழைத்து "எட்டு பேரும் சாம்பலாகப் போவீர்கள்" என்று சாபமது கொடுத்தார்.

(பாட்டு)

இந்த சாபம் எப்போது
எங்களுக்குத் தீருமென்று கேட்கும்போது
பகவான் ஏது சொல்வார்
அத்தாள நல்லூரில்
ஆதிமூலம் வருமாள் மேலவாசலில்
வவ்வால் ஓடிய கசத்தில்
மோட்சம் அடைவீரென்று
பகவான் சொன்னார்.

(வசனம்)

அப்படியாக இருக்கும்போது, தென் கைலாசத்தைக் கை அமர்த்த யாரை அனுப்பலாம் என்று தேவர் சபையில் பேசும்

போது, அந்த வழியாக அகஸ்தியர் வந்தார். அப்போது பகவான் பார்த்து, அகஸ்தியரை, "நீர்தான் தென் கைலாசம் கை அமர்த்தப் போக வேண்டும்" என்று சொன்ன போது, அகஸ்தியர் அதற்கு மறுப்பு அளித்தார். அப்போது, அகஸ்தி யருக்கும் பகவானுக்கும் தாவா வந்தது. அப்படி தாவா வந்த போது, பிரம்மாவும் விஷ்ணுவும் சேர்ந்து ஏது சொல்வார். விஸ்வகர்மாவை அழைத்து, தராசு கொண்டு வரச் சொல்லி தேவரெல்லாம் ஒரு தட்டிலும் அகஸ்தியரை ஒரு தட்டிலும் இருக்க வைத்து யார் அதிகமாக இருக்கிறாரோ அவர்தான் தென்கைலாசம் போக வேண்டுமென்று சொன்னார்கள். அப்படி இருக்க ஆண்டவன் பகவான் யாரை வரவழைத்தார்.

(பாட்டு)

வாடா வாடா விஸ்வகர்மா
வார்த்தை ஒன்று சொல்லக்கேளு
தட்டுத்தராசு உண்டு செய்து
கொண்டுவாடா கைலாசம் என்று
பகவான் சொன்னபோது
விஸ்வ பெருமான் ஏது செய்தான்
தட்டுத்தராசு செய்யும்போது
அகஸ்தியருக்கு என்று சொல்லி
அடித்தாரடா கள்ளத்தராசு
கள்ளத்தராசு உண்டுபண்ணி
கொண்டுவாரார் கைலாசம்

(வசனம்)

விஸ்வகர்மாவை அழைத்து தராசு கொண்டுவரச் சொல்லி, தேவரெல்லாம் ஒரு தட்டிலும் அகஸ்தியரை ஒரு தட்டிலும் வைத்து எடை பார்க்கும் போது, அகஸ்தியர் இருந்த தட்டு அதிகமாக இருக்கவே, அகஸ்தியர் விஸ்வகர் மாவை பார்த்து சாபம் கொடுத்தார். கள்ளத்தராசு பிடித்ததினால், 'இருந்து அடிக்க பறந்து போவாய்' என்று சாபம் கொடுத்தார். அப்போது விஸ்வகர்மா அகஸ்தியரை பார்த்து, "வண்டு தும்பை அடையும் பொதிகை மலையில் இருப்பாய்" என்று எதிர் சாபம் கொடுத்தார். அவரிட்ட சாபம் பலித்து. தென் கைலாசத்தை கை அமர்த்தி, பொதிகைக்கு வாரபோது, அகஸ்தியர் கையிலுள்ள கமண்டலத்தில்

அட்டதிக்கு பாலகர்கள் மூன்று பேரை கமண்டலத்தில் அடைத்து அகஸ்தியர் தென் பொதிகைக்கு வருகிறார்.

(பாட்டு)

கைலாச வாசல் விட்டு
கருணைச் சங்கிலி மலை கடந்து
வறியாறாம் மயில்பாலம்
நேரே கல்லாறாம் ஒரு சுணையாம்
ஒத்த காலன் சீமைவிட்டு
வாராரே அகஸ்தியரும்
எங்கே எங்கே வாறாரானால்
ராமேஸ்வரம் தனுஷ்கோடி
திருப்பதியும் சேர்வை செய்து
திருச்சிராப்பள்ளி நாடதிலே வாரபோது
அங்கே பஞ்ச நாடாய் இருப்பதினால்
அங்கே அகஸ்தியர் வாரபோது

(வசனம்)

திருச்சிராப்பள்ளி பஞ்சநாடாக இருக்கிறது. அப்போது ஊரார் எல்லாம் சேர்ந்து அகஸ்தியரிடம் முறை இட்டார்கள். அப்போது அகஸ்தியர் ஊரார் இடத்தில் ஏது சொல்வார், "நீங்கள் கணபதியைப் பூஜை செய்தால் பஞ்சமது நீங்குமெ"ன்று சொன்னபோது, ஊரார் எல்லாம் ஒன்று கூடி, "எங்களால் கணபதி பூஜை செய்ய முடியாது. நீங்களே கணபதி பூசை செய்யுங்கள்" என்று சொன்னார்கள்.

உடனே அகஸ்தியர் கமலண்டலத்தை கீழே வைத்து விட்டு, கண்களை மூடி பூஜை செய்யும்போது, கணபதி யானவர், காகம்போல் வடிவெடுத்து கமலண்டலத்தை தட்டிவிடவே, அகஸ்தியர் கண்முழித்துப் பார்க்கும் போது, கமண்டலத்தைத் கையிலெடுத்து காகமதை விரட்டினார். அப்போது காகமது திருச்சிராப்பள்ளி உச்சி மலைமீது ஏறி காக சொரூபம் மாறி கணபதி பிள்ளையாராய் அகஸ்தியருக்கு காட்சி அளித்தார். அப்போது அகஸ்தியர் கணபதி பிள்ளை யாருக்கு உச்சிமலைமீது ஏறி, காட்சி கொடுத்ததினால் உச்சி மலைக்கோட்டை பிள்ளையார் என்று பேர் கொடுத்தார். திருச்சிராப்பள்ளி நாடதில் பஞ்சமது தான் தீர்ந்து, தென் பொதிகை நோக்கி வருகிறார். எங்கே எங்கே வாரா றென்றால்...

(பாட்டு)

வடமதுரை தென்மதுரை
பூமதுரை என்று சொல்லும்
மதுரை மா நகரத்தில்
மதுரை வாழும் சொக்கரையும்
மீனாட்சியையும் சேர்வை செய்து
கழுகுமலை குருவி குளம் கந்தன்
வள்ளியாரை சேர்வை செய்து
தென் முகமாக திரும்புவாராம்
சங்கரன் கோவில் நாடதிலே
கூளவாய் சங்கரரையும்
கோமதி ஆவுடையும் சேர்வை செய்து
எங்கே எங்கே வருவாரானால்
தலத்திலையும் பெரிய தலம்
அதிகதலம் குற்றாலம்
குற்றால தலமதிலே தீர்த்தமாடி
மாத்துடுத்து திருநீருக் காப்பணிந்து
குற்றால நாதர் வாசல் வாரபோது
வாசலில் இருக்கக்கூடிய
காவலாளி தூதுவர்கள்
அகஸ்தியரை அடித்துவிரட்டிடவே
அகஸ்தியர் செங்கோட்டைப் பாதைவழியாக
திருமலை யாண்டவர் வாசலில்
மவுனமாக வந்து நின்றார்
குற்றால நாதரை சேர்வைச் செய்ய போனீரானால்
காவலாளி தூதுவர்கள் தூர விலகிவிடுவார்கள்
என்று திருமலையாண்டவர் சொன்னபோது
அகஸ்தியர் திருமலையாண்டவரை சேர்வைச்செய்து
திருமலையாண்டவரிடம் விடை பெற்று
எங்கே எங்கே வருவாரானால்
செங்கோட்டைப் பாதை வழியாக
குற்றாலம் வந்து சேர்ந்தார்
குற்றாலத்தில் தீர்த்தமாடி மாத்துடுத்தி
இட்ட நாமம் இருபத்தொன்னும்
தொட்ட நாமம் தொண்ணூற்றி ஒண்ணும்
பட்ட நாமம் பழுக்கச் சாத்தி
திருக்குற்றால நாதர் வாசல் வாரபோது
காவலாளி ஒதுவர்கள் தூரவிலகி விட்டனர்
அப்போது அகஸ்தியர் காவலாளிகளிடம்
குற்றால நாதருக்கு என் கையால்

அபிஷேகம் செய்ய வேண்டும்
என்று அவர் சொன்னபோது
அத்தனைக்கும் காவலாளிகள் சம்மதித்து
உடனே அகஸ்தியர் குற்றாலநாதர்
முன்புபோய் நின்று கொண்டு
குற்றால நாதரை உச்சித்தலையில்
ஓங்கி ஒரு அடி கொடுத்தார்
அப்படி அடித்தவுடன் குற்றால நாதர்
குறுகுறு பாதாளம் நோக்கி செல்லும்போது
அகஸ்தியர் குற்றாலநாதர் குடுமியை பிடித்து
ஒரு அடி மேலே தூக்கி வைத்து
குற்றாலநாதருக்கும் குழல்வாய்மொழி அம்மனுக்கும்
குடிசீர்போட்டு குடிநீரால் அபிஷேகம் செய்து
குற்றாலநாதருக்கும் குழல்வாய்மொழி அம்மனுக்கும்
மாறாத தலைவலியும் வற்றாத குடிநீரும்
என்று அவர் சாபம் கொடுத்தார்
சாபம் கொடுத்து எங்கே எங்கே வருவாரானால்
தென்காசி பாதைக் கூடி அன்பு நகர்தனை கடந்து
டானா விலக்குமிட்டு தலத்திலையும் பெரியதலம்
அதிகதலம் பாவநாசம் பாவநாசம் நாடதிலே
பாபநாசப் பெருமாளையும்
உலகாளையும் சேர்வைசெய்து
மேல் முகமாத் திரும்புவாராம்
ஒட்டந்தளம் முருக்கந்துண்டு வழியாக
வன தீர்த்தப்பாதை கூடி
தென் பொதிகை வந்து சேர்ந்தார்
பொதிகை வந்து கையிலிருந்த
கமண்டலத்தைக் கவிழ்த்திடவே
கமண்டலத் தண்ணீரானது
ஐந்து பிரிவாக பிரிந்துவர
தாமிரபரணி கவுதலையாறு
பாம்பாறு மயிலாறு கோதையாறு
இப்படி ஐந்து பிரிவாக பிரிந்துவர
கமண்டலத்தில் அடைத்திருந்த மூன்று ரிஷிகளும்
கருமூக்கு முதலையும் செம்மூக்கு முதலையுமாய்
வெள்ளையானைக் குட்டியுமாய் தாமிரபரணி ஆற்றில்
வெள்ளத்தோடு வெள்ளமாய் வருகிறது
அப்படிவந்து அத்தாள நல்லூரில்
ஆதிமூலம் மேல வாசலில்
வவ்வாலோடிய கசமதில்

கருமூக்கு முதலையும் செம்மூக்கு முதலையும்
வொல்லாத மிருகமாய்
வவ்வால் ஓடிய கசமதில் தாமதித்து இருக்கிறது
வெள்ளையானை குட்டியானது
ஆதிமூலப் பெருமாளுக்கு அபிஷேகம் செய்ய
ஆதிமூலப் பெருமாள் வாசலில் வாழ்ந்து வருகிறது.

(பாட்டு)

நாட்டுலேயும் நல்ல நாடு
நாவலர்கள் புகழும் நாடு
இஞ்சி மஞ்சள் பூக்கும் நாடு
இருவாச்சி மலரும் நாடு
சார மழை பொழியும் நாடு
சர மிளகு விளையும் நாடு
கோடைமழை பொழியும் நாடு
கொடி மிளகு விளையும் நாடு
சன்னல் பின்னல் விளையும் நாடு
சிறுகதலி பழுக்கும் நாடு
வர்க்கை நல்ல பலாமரங்கள்
வள(ர்)ந்தோங்கி செழிக்கும் நாடு
காஞ்சி வனமென்னும் பூஞ்சோலை
கயவரோட தேசத்தில்
யாரார் எல்லாம் வாழ்ந்து வாரார்
மாடப்பதேவரும் மாடிப்பிள்ளை வண்கொடியும்
மன்னவனும் தேவியுமாய்
மகிழ்ச்சியுடன் ஆண்டுவாரார்
கணவனும் மனைவியுமாய்
கட்டுடனே வாழ்ந்து வாரார்
தேங்காயும் தண்ணியும் போல
சேகரமாய் வாழ்ந்து வாரார்.

(வசனம்)

அப்படி வாழ்ந்து வரும் வேளையிலே, அவர்களுக்கு பிள்ளையில்லா பெருங்கவலை வந்து சேர்ந்தது. அப்படி பிள்ளை இல்லாமல் வாழ்ந்து வரும்போது, காசி நாட்டிலேயிருந்து ஒரு பிராமணர் தென்னாட்டுக்கு வாரபோது, எங்கே எங்கே வாரார் ஆனால், காஞ்சி வனமென்னும் பூஞ்சோலை கயவரோட தேசத்தில் வாரபோது, மாடப்ப தேவர் அரண்மனைக்கு முன்பாக நிற்கும்போது, அரண்மனை

காவலாளி ஒருவன், அந்த காசி பிராமணர் இடத்தில், "ஐயா! எந்த ஊரு?" என்று விசாரிக்கும்போது, பிராமணர் அவருடைய பெயர் ஊர் விவரத்தை சொன்னார். அப்போது, காவலாளி மாடப்ப தேவரிடம் அழைத்துச் சென்று மாடப்ப தேவர் முன் கொண்டு நிறுத்தினான்.

மாடப்ப தேவரிடத்தில் காசிபிராமணர் இரண்டு பாதச் சுவடுகள் கேட்டார். அப்போது மாடப்பத் தேவர் இரண்டு பாதச் சுவடுகளைக் கொடுத்தார். உடனே காசி பிராமணர் அந்த சுவடுக்கு ஐந்து பொன் எடுத்துக் கொடுத்தார். அதற்கு மாடப்ப தேவர் என்ன செய்வாரானால்...

(பாட்டு)

வான்னும் வேண்டாம்
வாருளும் வேண்டாம்
புகழும் வேண்டாம்
புதுமை வேண்டாம்
மழலை வேணுமையா
மனக்கலக்கம் தீருமையா.

(வசனம்)

இப்படி மாடப்பத்தேவர் சொல்லும் போது, அதற்கு பிராமணர், மாடப்பதேவர் பிறந்த சாதகத்தையும் மாடிப்பிள்ளை பூத்த நட்சத்திரத்தையும் கொண்டு வரச் சொல்லி பார்க்கும்போது, "ஐயா மாடப்பத் தேவரே! நீங்கள் இரண்டு பேரும் காஞ்சி வனம் பூஞ்சோலை கயவரோட தேசத்தில் கம்ப காமாட்சி அம்மன் வாசலில் 41 நாள் ஒரு மண்டலம் பூசை செய்து, நாற்பத்தி ஒன்றாவது நாளையிலே, பச்சரிசி அமுது பொங்கி காமாட்சி வாசலிலே பெறங்கை கட்டி சாதத்தை அருந்தினால், கம்ப காமாட்சி அருளினால் உங்களுக்கு ஆண்குழந்தை பிறக்கும்" என்று காசிப் பிராமணர் சொன்னார். அப்போது, காசிப் பிராமணருக்கு வேண்டிய பொன் பொருளைக் கொடுத்து வழியனுப்பி வைத்தார். அப்படி இருக்கும் போது மாடப்பதேவரும் மாடிப்பிள்ளை பெண் கொடியும் பகவான் ஏகாம்பர நாதருக்கும் கம்ப காமாட்சிக்கும் 41 நாள் ஒரு மண்டலம் எண்ணெய் காப்பும், தேனும், பாலும், இளநீர், அபிஷேகம் செய்து, 41வது நாளையிலே மாடிப்பிள்ளைப் பெண்கொடியாள் செப்பு நல்ல

குடமெடுத்து, கம்பா நதியில் தீர்த்தமாடும்போது, செங்கமல தீர்த்தமானது வெடித்து ஒரு செந்தாமரை தாளம்பூ ஆற்றில் மிதந்து வருகிறது. அப்படி செந்தாளம் பூ ஆற்றில் வருவதைக் கண்டு, அதை எடுத்து மாடிப்பிள்ளை கையில் கொடுத்தார். அந்த செந்தாளம் பூவை வாங்கி மாடிப்பிள்ளை வாசம் பார்த்தாள். வாசம் பார்த்த நாள்முதலாய் அன்று முதல் குளி மறந்தாள். பத்துத் திங்களும் சென்று பரிபூரணக் கர்ப்பமாக இருக்கும்போது, மாடப்பதேவர் மருத்துவத்தைக் கூப்பிட வருகிறார்.

(பாட்டு)

ஓராயிரம் பொன் தாறேன்
வாராயோ மருத்துவமே
வரமாட்டேன் ராசாவே
ஈராயிரம் பொன்தாறேன்
வாராயோ மருத்துவமே
வரமாட்டேன் ராசாவே
மூவாயிரம் பொன்தாறேன்
வாராயோ மருத்துவமே
வரமாட்டேன் ராசாவே
நாலாயிரம் பொன்தாறேன்
வாராயோ மருத்துவமே
வரமாட்டேன் ராசாவே
ஐயாயிரம் பொன்தாறேன்
வாராயோ மருத்துவமே
வரமாட்டேன் ராசாவே
ஆறாயிரம் பொன்தாறேன்
வாராயோ மருத்துவமே
வரமாட்டேன் ராசாவே
ஏழாயிரம் பொன்தாறேன்
வாராயோ மருத்துவமே
வரமாட்டேன் ராசாவே
எட்டாயிரம் பொன்தாறேன்
வாராயோ மருத்துவமே
வரமாட்டேன் ராசாவே
ஒன்பதாயிரம் பொன்தாறேன்
வாராயோ மருத்துவமே
வரமாட்டேன் ராசாவே
பத்தாயிரம் பொன்தாறேன்

வாராயோ மருத்துவமே
வாரேனே ராசாவே.

(பாடல்)

பத்தாயிரம் வொன்னதற்கு
பணிந்தாளே மருத்துவமும்
பத்துத் திங்களும் சென்று
பரிபூரண கற்பமாகி
நாளான நாளையிலே
நல்ல வெள்ளிக் கிழமையில
விடியற் கருக்கலில்
வெங்கொலி சத்தத்தில்
அரண உதயத்தில்
ஆதித்தன் உதிப்பதற்கு முன்னால்
அசுபதி நட்சத்திரத்தில்
அடிவிடியாய் வயிறு வலித்து
ஒரு ஆண்குழந்தை வந்து பிறந்திடுமாம்
பிறந்ததொரு குழந்தைக்கு
கொப்புளது தானறுத்து
குளிப்பாட்டி சேனையூட்டி
குழந்தைப் பிறந்த பதினாறாவது நாளயிலே
பேர் கொடுக்க வேணுமென்று
நினைத்து என்னபேர் கொடுத்தானானால்
கம்ப காமாட்சி வாசலில்
தவமிருந்து பெற்றக் குழந்தைக்கு
கசமுத்து பாலகன் என்று பேர் கொடுத்தார்.

(வசனம்)

கசமுத்து ஆயக் கலைகள் அனைத்தும் கற்றுத் தேர்ந்தான். 12வது வயதில் வீரர் பட்டம், சூரர் பட்டம் வாங்க வேணுமென்று தாயிடம் சொல்லும்போது, மாடிப்பிள்ளை ஏது சொல்வாள். "நாம சொத்து சுகத்தைத் தலைமுறை தலை முறையாக வைத்து சாப்பிடலாம்" என்று மாடிப்பிள்ளை சொல்லும் போது அதற்கு கசமுத்து பாலகன், "தாயே! செக்களவு பொன் இருந்தாலும் செதுக்கித் தின்ன காணாது" என்று தாயிடம் சொல்லி, தாய் மனதை தேற்றிவிட்டு, கசமுத்து பாலகன் எங்கே வருவாரானால், மதுரை மாநகரத்தில் சோழராஜா அரண்மனையில், அரண்மனை முன்பாக வந்து நிற்கும்போது, "அரண்மனை வாசலில் என்ன எழுதி

இருக்கிறது'' என்று கேட்டார். ''இந்த அரண்மனையில் அடங்காத பேய்க் குதிரை ஒன்று இருக்கிறது. ஆனால் யார் அதை அடக்கு கிறார்களோ அவர்களுக்கு என்னுடைய அரண்மனையில் ஐந்து மந்திரிகள் இருக்கிறார்கள். அந்த ஐந்து மந்திரிக்கும் அண்ணாவி, முதல் மந்திரி என்ற பட்டமும் கொடுத்து, வீரர் பட்டம், சூரர்பட்டம் வழங்கப்படும்'' என்று எழுதி இருந்தது. அதை கசமுத்து மந்திரி வாசித்துப் பார்த்தார். அதைப் படித்துவிட்டு அரண்மனை முதல் வாசல் காவலாளியிடம் நான் இந்த குதிரையை அடக்குகிறேன் என்று சொன்னான். இதனை முறையாக முதல் வாசல் காப்பாளர் வரிசையாக தெரிவித்து 10வது வாசல் காப்பாளனிடம் தெரிவித்த பொழுது, பத்தாவது வாசல் காப்பான் சோழ ராஜாவிடம் சொன்னபோது, சோழராஜா ஏது சொல்வார். ''நல்லவனாக இருந்தால் அவனை அழைத்து வாருங்கள்'' என்று சொன்னார். உடனே சேவகன் ஓடோடி வந்து கசமுத்து பாலகனை அழைத்துக் கொண்டு வந்து சோழராஜா முன் நிறுத்தியதும், சோழ ராஜா என்ன கேட்பாரானால், ''பாலகனே! உமக்கு எந்த ஊரு? எந்த தேசம்? இங்கு வந்த விபரம் என்ன?'' என்று கேட்கும் போது கசமுத்து பாலகன் ஏது சொல்வான்.

(பாட்டு)

ஐயாவே சோழராஜா
அடியேனோட வார்த்தை கேளும்
நான் பிறந்ததொரு நாடதுதான்
காஞ்சிவனம் பூஞ்சோலை
கயவருட தேசத்தில்
மாடப்பதேவர் மகன்
மாடிப்பிள்ளை ஈன்ற பிள்ளை
காரண மறத்தி வெத்தக் கருங்குயிலாம்
கசமுத்து பாண்டிதான்
நான் சேதுபதி மறவரல்ல
நான் சிறுதாலிகட்டி மறவரல்ல
நான் வன்னிய மறவரல்ல
நான் மருவ கட்டி மறவரல்ல
நான் கள்ள மறவனல்ல
நான் கொத்தாளி மறவரல்ல
நான் குலத்துலயும் உயர்ந்த குலம்
நான் கொண்டயன் கோட்டானுந்தான்
ஐயாவே சோழராஜா

அழகு பாலகனின் வார்த்தை கேளும்
உங்களோட அரண்மனையிலுள்ள
பொல்லாதக் குதிரையைதான்
அடங்காத குதிரையைதான்
அடக்கவே வந்தேன் என்றார்.

(வசனம்)

அப்படி கசமுத்து பாலகன் சொன்னபோது, அதற்கு சோழ ராஜன் ஏது சொல்வார், "அய்யா கசமுத்து பாண்டியரே! அதை உங்களால் அடக்க முடியாதே" என்று சொன்னதும், அதற்கு கசமுத்து பாண்டியர், "நான் அந்த அடங்காத குதிரையைக் கட்டாயம் அடக்கியே தீரவேண்டும்" என்றார். அப்போது, உடனே கசமுத்து பாண்டியரை குதிரைக் கட்டக் கூடிய சாவடியில் அழைத்து வந்து நிறுத்தியதும், அந்தக் குதிரை கசமுத்து பாண்டியனைப் பார்த்து பல்லைக் காட்டிச் சிரித்தது, அப்படி சிரித்த குதிரையை கசமுத்து பாண்டியர்தன் இடது கையால் தட்டிக் கொடுத்தார். அப்போது,

(பாட்டு)

அவரோ கச்சை நல்ல வரிந்து கட்டி
கருங்கச்சை சொங்கல் வைத்து
வலதுபுற சொங்கலில் வாழ்வுட அச்சரமாம்
இடதுபுற சொங்கலிலே எமனோட அச்சாரமாம்
அவரோ துள்ளித்தானே பாய்ந்தாரே
கடிவாளம் இல்லாத குதிரையைதான்
பிடரி மயிர்தான் பிடித்து குதிரை சவாரி போடுவாராம்
குதிரை வரும்வேகத்திலே கருந்தூரம் செந்தூரம்
அங்கே கலந்துதானே பறக்குதய்யா
குதிரை மதுரை மாநகரத்தைச் சுற்றி வந்து
குதிரைச்சாவடியில் வந்து வெண்னுரை
வெண்னுரையாக கக்கி கீழே மண்டியிட்டு படுத்தது
அப்படி படுத்ததும் சோழராஜா ஓடிவந்து
கசமுத்து பாண்டியன் கையைக் குலுக்கி
ஐந்து மந்திரிக்கும் அண்ணாவி கசமுத்து மந்திரி
என்று பட்டத்தைக் கொடுத்தார்
உடனே ஐந்து மந்திரியும் நேற்று வந்த மந்திரிக்கு
முதல் மந்திரி பட்டத்தைக் கொடுத்ததென்ன
என்று அய்ந்துபேர்களும் கோபப்படும்போது
சோழராஜா வேறு ஒரு பந்தயம் வைத்தார்
ஐந்து மந்திரி கையிலும் துப்பாக்கி கொடுத்து

கசமுத்து மந்திரி கையிலும் துப்பாக்கி கொடுத்து
தொண்ணூறு அடிக்கு அப்பால்
ஒரு வெள்ளி அணாவை வைத்து
உருகும்படி யார் சுட்டார்களோ
அவர்களுக்கு முதல் மந்திரிபட்டம்
என்று மன்னர் சொன்னதும்
உடனே ஐந்து மந்திரியும்
சுட்டபோது குறிதவறி நின்றனர்
அடுத்து கசமுத்து குறியாக சுட்டார்
உடனே ஐந்து மந்திரிக்கும்
கசமுத்து முதல் மந்திரி
என்ற பட்டத்தை கொடுத்து
சோழ ராஜா அரண்மனையில்
இருந்துவரும் நாளையில்
கசமுத்து மந்திரிக்கும்
கல்யாணம் முடிக்கும் வயதில்
சோழராஜா ஐயா கசமுத்து மந்திரியே
உங்களுக்கு கல்யாணம் முடிக்க வேண்டும்
முறைப் பொண்ணு எங்கயாவது இருக்கா
என்று கேட்கும்போது
கசமுத்து மந்திரி ஏதுசொல்வார்
எனக்கு முறைப்பொண்ணு இருக்கிறது
அகப்பநாடு முகப்பநாடு ஆறுபங்கு நாட்டில்
முத்துசாமி தேவர் மகள்
கசத்தியவள் இருக்கிறாள்
கசத்தியரை கொண்டு வந்து
எனக்கு கல்யாணம் முடிக்கவேண்டும்
என்று கசமுத்து சொன்னதும்
உடனே சோழராஜா காஞ்சிவனம்
பூஞ்சோலை கயவர் தேசத்தில்
வாழ்ந்துவரும் கசமுத்து மந்திரி
தாய் தகப்பனுக்கு ஒருஓலை எழுதினார்கள்
ஓலையை மந்திரி கையில் கொடுத்து
காஞ்சி வனத்திற்கு அனுப்பினார்கள்
மந்திரி வந்து ஓலையை
தகப்பனாரிடம் கொடுத்தார்
கையில் வாங்கி வாசித்துப்பார்த்து

தாயும் தகப்பனும் மதுரைமாநகர் வந்து
சோழராஜாவும் தாயும் தகப்பனும்
முத்துசாமி தேவர் மகளை பெண்பார்த்து
பெண்பேசி இருக்கும்போது தான்
கசத்தி பெண்கொடியா ளவள்
மிக்க அழகுடன் திகழ்ந்தாள்
பெண்ணவளைக் கொண்டு வந்து
மதுரை மாநகரத்தில் நாள்பார்த்து
தினம் குறித்த வெள்ளிக்கிழமையில்
கொட்டகைக்குக் கால்நாட்டி
சிறந்த பந்தலது போடுகிறார்
மணவறையை அலங்கரித்து
மாப்பிள்ளைப் பெண்ணையும்
அமரவைத்து மாங்கல்யம்
கையிலெடுத்து மாலை சூடுகிறார்
திருமாங்கலியமது கையிலெடுத்து
கசத்தியரைத் திருப்பூட்டினார்
கசத்தியரைக் கூடியிருந்தோர்
பெண்களெல்லாம் குலவையிட்டார்களே.

(வசனம்)

கல்யாண பந்தலில் சோழராஜா கழுத்திலிருந்த முத்துச் சரபொழி மாலையை கழற்றி கசமுத்து மந்திரி கழுத்தில் போட்டார். அன்று முதல் சோழராஜாவுக்கு கல்யாண சோழராஜா, கலுங்குவாதேவி என்று பெயர் கொடுத்தார். அப்படி இருக்கக்கூடிய நாளையிலே ஒரு நாள் தினத்தில் கல்யாண சோழராஜா ஏது சொல்வார். "ஓய் கசமுத்து மந்திரி! எனக்கோ நெடுநாளா நெடு வருஷம் குழந்தை இல்லை. அதனால் 108 சிவத்தலமும் 108 திருப்பதியும் சுத்திப் பார்க்கப் போறேன். நாடுநகரம் எல்லாம் நீ பார்த்துக் கொள்" என்று கல்யாண சோழ்ராஜா சொல்லவும், கசமுத்து மந்திரி ஏது சொல்வார், "ராஜா எனக்கும் கல்யாணமாகி ரொம்ப நாளாகின்றது. எனக்கும் குழந்தை இல்லை. நானும் வாரேன்" என்று கசமுத்து மந்திரி சொன்னார். இரண்டு பேருக்கும் தனித்தனி கூடாரம் கட்டித் தளப் படைகளோடு 108 திருப்பதியும் 108 சிவத்தலமும் சுத்திப் பார்த்துவிட்டு, பாபநாசத்தலத்தில் வந்து இருக்கும்போது சோழ ராஜா ஏது சொல்வார், "ஓய் கசமுத்து மந்திரி! நம்ம நாட்ட விட்டு வந்து

நெடுநாள் ஆகிறது. தண்டியலை நாட்டுக்குத் திருப்பும்" என்று சொல்லும் போது, கசமுத்து மந்திரி ஏது சொல்வார்...

(பாட்டு)

ஐயாவே சோழராஜா
தலத்திலையும் பெரியதலம்
இன்னும் ஒரு தலம் இருக்கு
அத்தாளநல்லூர் ஆதிமூலப்பெருமாள்
அய்யனைச் சேர்வை செய்துவிட்டு
நாட்டுக்குப் போவோம் என்று
கசமுத்து மந்திரி சொல்லவும்
உடனே சோழராஜா சம்மதித்து
வீரன் கசமுத்து மந்திரியும்
கசத்தி என்ற வெண்கொடியும்
கல்யாண சோழராஜாவும்
நல் கலுங்குவா தேவியரும்
பாபநாச தலமதிலே தீர்த்தமாடி
பாபநாச பெருமாளையும்
உலகாளையும் சேர்வை செய்து
கீழ்முகமா திரும்புவாராம்
பாபநாச விலக்கும்விட்டு
விக்கிரமசிங்கபுரம்தான் கடந்து
அம்பா சமுத்திரம் பாதைகூடி
நம்பந் தட்டை வந்து சேர்ந்தார்கள்.

(வசனம்)

நம்பந்தட்டையில கூடாரம் அடித்து இருக்கக்கூடிய காலத்தில், என்ன என்ன நடக்குதானால், அப்படி இருக்கக் கூடிய காலத்தில் ஆதிமூலப் பெருமாளுக்கு பூஜை செய்ய வேண்டும் என்று ஆனை குட்டி அய்யர் என்ன செய்வார், வெள்ளை யானையின் துதிக்கையில் ஒரு குடத்தைக் கொடுத்து, அந்த யானை, தாமிரபரணி ஆற்றில் நீந்தி குளித்து, ஆதிமூலப் பெருமாளுக்கு அபிஷேகத் தண்ணீர் கொண்டு வருவது வழக்கம். அன்றைய தினத்தில் வழக்கப்படி ஆற்றில் யானை குளிக்கும்போது, யானையை ஆதி மூலம் மேல வாசலில் வவ்வால் ஓடிய கசத்தில் உள்ள செம்மூக்கு முதலையும் கருமூக்கு முதலையும் காலை இழுத்தது. உடனே யானை ஆகாயத்தைப் பார்த்து ஆதிமூலம் என்று அலற ஆதிமூலப் பெருமாளானவர் வந்து யானைக்கும் முதலைக்கும்

உள்ள தாவாவைத் தீர்க்கும் போது, கோயிலுக்குப் பூஜை செய்யும் ஆனைகுட்டி அய்யர் பார்த்து யானைக்கு இந்த கதி என்றால் நமக்கு என்ன கதியோ என்று நினைத்து, கோவிலை பூட்டி தர்ம கர்த்தாவிடம் சாவியை கொடுத்து, விபரத்தைச் சொல்லி, "அந்த முதலையை என்று பிடித்தீரோ, அன்றைக் குத்தான் ஆதிமூலத்துக்கு பூஜை செய்வேன்" என்று சொன் னார்.

அப்படி இருக்கும்போது, அந்த ஊர் தலையாரி அய்யா நம்பந்தட்டை நகரத்தில், எந்த ஊரு ராஜாவோ வந்து தங்கி இருக்கிறார். அவர்களிடம் நாம் போய் இந்த முதலையைப் பிடிப்பதற்கு ஆள் இருக்கிறதா? என்று கேட்போம் என்று சொல்லி, தர்மகர்த்தா ஆயிரம் பொன் எடுத்துக் கொண்டு, நம்பந்திக்கு நகரத்தில் வந்து கல்யாண சோழராஜா இடத்தில் விபரத்தைச் சொல்லி ஆயிரம் பொன்னையும் ராஜா கையில் கொடுத்ததும், ராஜா சேவகனை அழைத்து, "கசமுத்து மந்திரியை போய் நான் அழைத்ததாகச் சொல்லி வாரும்" என்று சொன்னதும், உடனே சேவகன் ஓடோடி வந்து, "ஐயா கசமுத்து மந்திரி! உங்களை ராஜா அழைத்தார்" என்று சொன்னதும், கசமுத்து மந்திரி என்ன கேட்டார்.

"ராஜா என்னை கோபமாக அழைத்தாரா? சந்தோசமாகத் தான் அழைத்தாரா?" என்று கேட்டார். அதற்கு சேவகன், "சந்தோஷமாகத்தான் அழைத்தார்" என்று சொன்னான். அவன் கூப்பிடும் நேரத்தில் கசமுத்து மந்திரி எண்ணெய் தேய்த்து தலை முழுகி சிணுக்கோலி கொண்டு தலையைச் சிக்கு எடுத்து உடனே கசமுத்து மந்திரி உடை மாற்றிக் கொண்டு, ராஜா இடத்தில் வந்து விபரத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்டு, "முதலையை பிடிப்பதற்கு நானாச்சு; பொன்னை வாங்குங்கள்" என்று சொன்னதும், ஆயிரம் பொன்னையும் வாங்கி வைத்துவிட்டு தூண்டி அடிப்பதற்கு அத்தாள நல்லூரில் ஆனை கொல்லர் ஆசாரி வீட்டில் வந்து, அவரை பார்த்து விபரம் சொல்லி, தூண்டி அடிக்க வேண்டும் என்று சொன்னதும், அதற்கு ஆசாரி, "கரி வாங்க காசும் இல்லை; உலை ஊத ஆளும் இல்லை" என்று சொன்னார். உடனே "நான் காசு தாறேன்; நான் உலை ஊதுகிறேன்" என்று சொன்னார். உடனே...

(பாட்டு)

ஏழு தலாம் இரும்பு எடுத்து
முதல் தூண்டி அடிக்கும்போது
முனை முறிந்து போய்விட்டது
இரண்டாம் தூண்டி அடிக்கும்போது
இரு துண்டாக முறிந்துவிட்டது
மூன்றாம் தூண்டி அடிக்கும்போது
நாக்கு மூக்குடனே சமைந்தது.

(வசனம்)

உடனே தூண்டியை வாங்கிக் கொண்டுவந்து, 70 பாகம் கயர் வாங்கி தூண்டிக்கு இணைப்பதற்கு ஈக்கி வண்ணாத்தி வீட்டில், ஒரு நாய் இரு குட்டிகள் போட்டிருப்பது அறிந்து, ஒரு நாய் இரு நாய் குட்டி போட்டிருக்கு, கருமரை நாய் குட்டி, செம்மரை நாய்குட்டி. அதை எடுக்க வேண்டும் என்று எண்ணி, அவள் வீட்டில் வந்து, "வயிற்றுவலிக்கு சுருட்டு பத்தவைக்க நெருப்பு கொடு" என்று கேட்டார். அவள் "நெருப்பு பெட்டி இல்லை; நெருப்பு தாறேன்" என்று சொல்லி, நெருப்பு எடுக்கச் சென்றதும் திண்ணையில் படுத்திருந்த இரு நாய் குட்டியையும் தோள்பையில் எடுத்து போட்டுவிட்டார். அதை கொண்டு வந்து அத்தாள நல்லூரில் ஆதிமூலம் மேல வாசலில் வவ்வால் ஆடும் கசத்தில் கருமரை நாய் குட்டியை தூண்டிலில் கொருத்து, கருமறை முதலைக்கு போட்டார். அப்போது கருமூக்கு முதலை அகப்பட்டதும், அதை இழுத்து கரையில் போட்டார். அப்போது கசமுத்து மந்திரி மனைவியான கசத்தி மந்திரிக்குச் சாதம் கறி கொண்டு வந்ததும், சாப்பிட்டு இளைப்பாறி, கரு மூக்கு முதலையை தன் மனைவியின் தலையில் தூக்கிவைத்துவிட்டு, "இதை இன்றைக்கு 21 வகை கறி சமைத்து, எனக்கு சாதம் கொண்டு வா" என்று சொல்லி வழி அனுப்பி வைத்துவிட்டு, செம்மரை நாய்குட்டியை தூண்டியில் கொருத்து செம்மூக்கு முதலைக்குப் போட்டு விட்டு, தூண்டில்மேல் ஞாபகமும், மிதப்புக் கட்டையின் மேல் கண்ணுமாக இருக்கும்போது இருட்டி விட்டது. இருட்டில் ஒரு ஒத்தப் பந்தத்தைக் கொளுத்தி வைத்துவிட்டு இருக்கும்போது,

(பாடல்)

வடநாட்டில் வன்னிக்கலந்தை தேவர் குலத்திலிருந்து
ஆயிரம்பேர் கள்ள நாட்டார் வந்து
அம்பாசமுத்திரம் தாலுகாவில் வந்து தங்கி
நாமின்று எங்கேபோய் களவு செய்யலாம்
என்று எண்ணி இருக்கப்போன அன்று
இரவு களவு செய்ய ஆயிரம்பேர்களும்
அம்பா சமுத்திரம் ஊர்விட்டு
ஊய்க்காடு நம்பந்தட்டை வழியாகவந்து
ஆற்றில் இறங்கி தண்ணியைத் தட்டி
பேசிக்கொண்டு வந்தார்கள்
அப்போது தென்கரையில் இருந்த
கசமுத்து மந்திரி ஏது சொல்வார்
அண்ணே வடக்குக்கரையில் வருபவர்கள்
தண்ணியை அலப்பாமல் வாருங்கள்
நான் வொல்லாத மிருகத்துக்கு
தூண்டில் போட்டிருக்கேன் என்று சொன்னார்
உடனே ஆயிரம்பேரும் ஏறெட்டு பார்த்தார்
ஒத்தப்பந்தம் வெளிச்சத்தில் பார்க்கும்போது
கசமுத்து மந்திரி கழுத்தில் இருந்த
முத்து சரப்பொழி மாலை மின்ன
ஆயிரம்பேரும் என்ன நினைத்தாரானால்

(வசனம்)

"நாம் ஆயிரம்பேர்க்கும் இந்த மாலை ஒன்றே போதும்" என்று நினைத்து, கசமுத்து மந்திரி இடத்தில் வந்து, "இந்த மாலையை தாராயா இல்லையா? உன்னை கொல்ல வேண்டுமா?" என்று கேட்கும்போது, "அய்யா! இது என் கல்யாண சொத்துன்னு, எனக்கு பரிசா, என் கல்யாண சோழ ராஜா கொடுத்தது. அதனால் இதை நான் தரமாட்டேன்" என்று சொன்னார். உடனே 1000 பேரும் கசமுத்து மந்திரியை கொல்லவேண்டும். இந்த மாலையை கட்டாயம் கொண்டு போக வேணுமென்று நினைக்கும்போது, இதை அறிந்து, கசமுத்து மந்திரி என்ன செய்தாரானால்...

(பாட்டு)

அவரோ துள்ளித்தானே பாய்ந்தாரே
தொண்ணூறுபேர் தலையறுத்தார்

அடக்கி பாய்ந்து நூறுபேர் தலையறுத்தார்
எட்டி பாய்ந்தார் எண்ணூறுபேர் தலையறுத்தார்.

(வசனம்)

1000 பேர்களையும் கொன்றுவிட்டு, தாமிரபரணி ஆற்றில் குளித்து, கம்பைக் கழுவி வன்னிமரத்தில் சாத்தி வைத்துவிட்டு, தூண்டி மேல் ஞாபகமும் மிதப்புமேல் கண்ணுமாக இருக்கும்போது, ஆயிரம் கள்ளர்களில் ஒரு ஒண்டிக்கள்ளன், இறந்தவர்களோடு படுத்துக் கிடந்தான். அவன் எழுந்து பார்க்கும் போது, "தன்னுடன் வந்த 999 பேரும் மாண்டு விட்டனர். நாம் மட்டும் இருந்து என்ன செய்ய என்று எண்ணி, நாம் இவனைக் கொல்ல வேண்டும். இல்லையேல் இவன் கையால் நாம் குத்துப்பட்டுச் சாக வேண்டும்" என்று வன்னி மரத்தில் சாத்திவைத்திருந்த குத்துக்கம்பை எடுத்து, தூண்டிமேல் ஞாபகம் மிதப்பு மேல் கண்ணுமாக இருந்த கசமுத்து மந்திரியை கொடி விலாவில் குத்தினார். குத்திய குத்தில் கொடிகுடல் வந்து சரிந்தது. இடது கையால் ஏந்திக் கொண்டு, குத்துக்கம்பைப் பிடுங்கி அவனையும் குத்திக் கொன்றார். ஒண்டிக்கள்ளன் தான் மடிந்தான். கசமுத்து மந்திரியும் தான் மடிந்தார்.

(பாட்டு)

பட்டு விழுந்திடவும் பாரமுடி சாய்ந்திடவும்
செத்து மடிந்திடவும் மந்திரி சிவலோகம் சேர்ந்திடவும்
அன்றைக்கு ராத்திரியில் கசத்தி அழியகனா கண்டாளே
அடுக்குப் பானை அடியோடு சாயக் கண்டாள்
அடிக்கழுத்து அறுந்து விழ கனவு கண்டாள்
உறியோ உறிக்கலசம் உருவி விழ கனவு கண்டாள்
உள்கழுத்து மாங்கல்யம் சிதறிவிழ கனவு கண்டாள்.

(வசனம்)

"ஐயையோ பகவானே! நான் கண்ட கனாபோறாது என் கணவனுக்கு ஆகாது. நான் பார்த்த கனா போறாது. என் பர்த்தாவுக்கு ஆகாது." படுத்திருந்த கசத்தியவள் பதறியவள் தான் முழித்து ஓட்டமும் பெருநடையுமாய் ஓடி வாராளே கசத்தியரும். "மாடுமேய்க்கும் அண்ணன்மாரே! மாற்றான் சிறு குழந்தை என் மன்னவரை பார்த்தீர்களா? ஆடு மேய்க்கும் அண்ணமாரே ஆட்டான் சிறுகுழந்தை என் ஆளனையும் பார்த்தீர்களோ?"

"யக்கக்கா கசத்தியரே! உன் ஆளனையும் பார்க்கலையே. ஆதிமூலம் மேல வாசல் வவ்வால் ஆடும் கசமதிலே 2 கழுவாட கண்டோமக்கா." இந்த வார்த்தை காதில் கேட்டு, கசத்தியான பெண்ணவளும் கால் நடையாய் தானோடி, கணவன் படுகளத்தை வந்து கண்டாள்.

(பாட்டு)

என் கணவா ராசமன்னா
புல்லோ தலைவாணி
புழுதி மண்ணோ வாய்க்கரிசி
உடலைப் பொருத்துவாளாம்
உள் அழகை கண்டு அழுவாளாம்
தலையை பொருத்துவாளாம்
தன் அழகை கண்டழுவாளாம்
மன்னா ஆற்று கருமணலாம்
ஆனைக்கட்டும் கல்தூணாம்
ஆனை முகம் அழிஞ்சதென்ன
ஆயிரம்பேர் மாண்ட தென்ன
குளத்துக் கல்தூணாம்
குதிரை முகம் அழிஞ்சதென்ன
கோடிபேரு மாண்ட தென்ன
ஆற்றுக்கு அந்தப் புறம்
அடங்காத தந்தி மரம்
அமர நிழலு மில்லை
ஆதரிப்போர் யாருமில்லை
குளத்துக்கு அந்தப்புறம்
குலுங்காத தந்திமரம்
குளிர்ந்த நிழலுமில்லை
கொண்டு அணைப்பார் யாருமில்லை
பால் ஊற்றி பாத்திகட்டி
பாக்குமரம் தழைய வச்சேன்
பாக்குமரம் தழையலேயே
பாதிநாள் வாழலையே
நெய்யூற்றி பாத்தி கட்டி
நெல்லிமரம் தழையலையே
நெடுநாளும் வாழலையே
மனக்கு தலையும் தலைப்பாவும்
சந்திரனை பேலேயல்லோ
இடுப்பு இடை கட்டும்
இந்திரனை போலேயல்லோ

மண்டைகட்டி வீதியில்வந்தால்
மதுரை சொக்கன் என்பார்களே
வேஷ்டி கட்டிவீதி வந்தால்
வீமர் சொக்கன் என்பார்களே
கடுகு சிறுதாலி கல்பதித்த ஓடாளி
கல்பதித்த ஓடாளியை
கழத்திவிட நாளாச்சோ
செப்புச் சிறுதாலி சிகப்பு வச்ச ஓடாளி
சிகப்பு வச்ச ஓடாளி
செப்பில் இட நாளாச்சோ
பட்டுத் துயிலெடுத்து
பார்த்துடுத்தும் நாளையிலே
கஞ்சி துயிலெடுத்து
என் கழுத்திலிட நாளாச்சோ
மஞ்சள் துயிலெடுத்து
மடித்துடுத்தும் நாளையிலே
இளமையிலே தாலி வாங்க
இனத்தாருக்கு சம்மதமோ
கையில் கிளி வளர்த்தேன்
கரையோரம் மேய விட்டேன்
கரையோரம் போன கிளி
என் கையில்வந்து சேர்வதெப்பம்
மடியில் கிளிவளர்த்தேன்
மலையோரம் மேயவிட்டேன்
மலையோரம் போனகிளி
மடியில் வந்து சேர்வதெப்பம்
மண்டபமும் கட்டி வச்சு
மயிலையும் பிடித்தடைத்தேன்
மண்டபமும் இங்கிருக்க
மயில் போன மாயமென்ன
கோபுரமும் கட்டி வச்சு
குயிலையும் பிடித்தடைத்தேன்
கோபுரமும் இங்கிருக்க
குயில்போன மாயமென்ன
முத்து முத்தா கண்ணீரை
முகங்களெல்லாம் சோரவிட்டாள்
பவளம்போல் கண்ணீரை
பக்கமெல்லாம் சோரவிட்டாள்
அழகுபோல் கண்ணீரை
அங்கமெல்லாம் சோரவிட்டாள்
முட்டி முட்டி அழுதாளே

முத்துமாலை அறுந்துவிழ
அடித்து புரண்டழுதாள்
ஆபரணம் அறுந்துவிழ
அக்கம்பக்கம் இருப்பவர்கள்
இந்த அநியாயத்தைப் பாராதீங்க
கூழ இருப்பவர்கள் எல்லாம்
இந்த தீவினையைப் பாராதீங்க
என்னைப்போல பெண்களெல்லாம்
ஆணுக்கு ஆண் பெற்று
பெண்ணுக்குப் பெண்ணு பெற்று
பெருவாழ்வா வாழவேண்டும்
காடதிலே எரு பெறக்கி
அவசரமாய் கொண்டு வந்து
கல்லடுக்கி கட்டையடுக்கி
கட்டைக்கு மேல் எருவடுக்கி
பரத்தி அங்கு எருபரத்தி
மந்திரியை தூக்கிவைத்து
உருக்க உருக்கணைத்து
ஒருகையை மேல போட்டு
பத்தினி நானானால்
என்னுடைய பர்த்தாவும் இவரானால்
பாரடுப்பு தீ போல
பத்திதானே பிடிக்கவேண்டும்
உத்தமி நானானால்
உத்தமரும் இவரானால்
ஊதடுப்பு தீ போல
ஓங்கிதானே பிடிக்கவேண்டும்
உடன்கட்டை ஏறுவாளாம்
அருமையுள்ள கசத்தியவள்
அக்கினியாய் எரியுதையா
அழகு மந்திரி உடலதுவும்
கொழுந்துவிட்டு எரியுதையா
கசத்தியாள் திருஉடலும்
நெஞ்சுருக நெய்உருக
ஆகாயம் பறக்குதையா
எரிஞ்ச தணிஞ்சதையா
மந்திரி திருஉடலும்.

(வசனம்)

கசமுத்து மந்திரியும், கசத்தி பெண் கொடியும் எமராஜன் கோட்டை சென்றவுடனே, இவர்கள் கணக்கெடுத்து

பார்த்து, "வங்கொலையாய் மாண்டவர்கள் வையகத்தில் வாழ இடமிருக்கு" சித்திர புத்திர நயினார் சொல்லவும், ஆண்டவனாகப்பட்ட பகவான் கசமுத்து மந்திரிக்கும் கசத்தியான பெண் கொடிக்கும், அத்தாள நல்லூரில் ஆதி மூலப் பெருமாள் மேல வாசலில், எப்படி பெயர் கொடுத்தார் என்றால்...

(பாட்டு)

முன்பிறவி மனித குலம்
பின்பிறவி தெய்வ குலம்
முன் பிறவி கசமுத்து
பின் பிறவி கசமாடன்
முன் பிறவி கசத்தியம்மா
பின் பிறவி கசமாடத்தி
பெயர் கொடுத்த நேரத்திலே
மாடனும் மாடத்தியும்
கசமாடசாமியுமா
கச மாடத்தி அம்மனுமா
ஆதிமூலம் மேல வாசலில்
வவ்வால் ஆடும் கசமதிலே
முதல் நிலையம் வாங்குவாராம்
அங்கு ஒரு நிலையம் வாங்கி
சொரி முத்தையர் வாசலிலே
பொதிகை மலைச் சாயலிலே
முன்னோடும் தெய்வமாக
கசமாட சுவாமியுமா
கசமாடத்தி அம்மனுமா
வடக்கு நல்ல திருமுகமாய்
கொலுவிருக்கும் நாளையிலே
கசமாடசுவாமி எண்ணுவாராம்
மனமதிலே எண்ணாத எண்ணமெல்லாம்
எண்ணுவாராம் மனமதிலே
ஆயிரத் தெட்டு மாடனுக்கும்
அண்ணாவி தளவாய்மாடன்
தூசி மாடசுவாமி இடது புறத்தில்
வடக்குத் திருமுகமாய்
கொலுவு இருக்கார்.

(சுபம்)

கபாலக்காரன் பிறவிக்கதை

(ஓலைச்சுவடி பதிப்பு)

(திருமலாபுரம்
பொ.உடையார் நாடாரிடமிருந்து
ஓலைச்சுவடி பெறப்பட்டது.)

(குருவே துணை)

மங்கை(ப்) பதி நாட்டில் வளருகின்ற பார்பதியை
மணமுகித்து(ப்) பரமசிவன் வளர் கயிலை வருமளவும்
கயிலாசங்காத்து நிற்க(க்) கட்டழகர் மூவரையும் பிறவி செய்த
கதை தனை யிப் பூதலத்தில் நா னடியேன் புகலுகின்றேன்.

(சிவன் நயினாருக்குக் கட்டளையிடல்)

வெள்ளி கயிலாசமதில் வீத்திருந்தார் பரமசிவன்
வீத்திருந்த பரமசிவன் விரிசடையோன் மன மகிழ்ந்து
நயினாரை முகம் நோக்கி நவிலுவாராம் ஒருவார்த்தை
மங்கைபதி யானதிலே வளருகின்ற பார்வதியை
மணமுகித்து வருமளவும் வளர்கயிலைதனிலிருந்து
பிறக்கும் உயிர் ஆயிரமும் இறக்கும் உயிர் ஆயிரத்தொன்று(ம்)
அடக்குடக்குச் சோதித்தல்லோ அழகு கயிலாசம் யிருவுமென்றார்

(கயிலாசம் காக்கக் காவலர்களைப் பிறவி செய்தல்)

கயிலையிலே நானிருப்பேன் கன பிறவி செய்திடுவேன்
கயிலாசங் காத்து நிற்க காவலர்கள் வேணு மென்றார்
சடையரனார் மனம் மகிழ்ந்து தங்க வேள்வி வள(ர்)க்க வென்று
புகழ்பெரிய பரமசிவன் பூவாலே ஒரு வேள்வி
கயிலாசம் வட புறமாய் கறை கண்டனார் ஒரு வேள்வி
தீட்டித்தாரே ஒரு வேள்வி சிறு மலை யது போலே
வளருதல்லோ வேள்வியது வான முட்டத் தீயெழும்ப
புவன மெல்லாம் புகை மூடப் புகழ் பெரிய கயிலையிலே
வளரும் வேள்விதனைக் காண மகுட(த்) தெய்வார் குரவையிட
நடதிடி மனதிடி படவே நல்ல வேள்வி ஒரு புறமாய்
தம்பட்ட மல்லரி கொம்பு தான் முழங்க(க்) கூத்தாட
சின்னங்கள் பணிமாறத் திசைபெரிய வேள்வியிலே
பார்த்து நின்று பரமசிவன் பார்வை செய்தார் வேள்வியிலே
பொன்னைத்தான் கருவாகப் போட்டாரே வேள்வியிலே

(கபாலக்காரன் பிறப்பு)

பொன்னதுதான் கருவாகப் புகழ் பெரிய வேள்வியிலே
உருவளர உடல் வளர ஒலைப் பூ(ப்) போல் நிறமாய்
செங்கதிரோன் போலழகுஞ் செந்தாமரை(ப்) புசத்தழகும்

பத்து விர லொப்பினையும் பயித்தங்காய் போலழகும்
குமிழ் மூக்கும் புச மழகுங் கோவன் பழம் போலழகும்
செந்தாமரை போல் முகம் செவ்வதலிப் பூ நிறத்தார்
கையகுழம் ஒப்பினையும் கதலி வாழைப் பழமது போல்
காலிட்ட சிலம்பு கொஞ்ச கைக் கபாலம் அக்னியும்
தூடியிடையும் மார்பழகும் தூட்டர் கையில் அக்னியும்
கைக் கபாலம் தானிலங்கக் கட்டழகர் தான் பிறந்தார்
பிறந்தவக்குப் பேரிடவே புரி சடையோன் கயிலையிலே
கன்னியர்கள் குரவையிடக் கறை கண்டனார் பேரு மிட்டார்
கபாலமுத்தென்று பேருமிட்டார் கறை கண்டனார் மன மகிழ்ந்து
கபாலக்காரர் பிறந்தபோதே கன்னல் முத்தைத்தான் போட்டார்

(கவுத்துக்காரன் பிறப்பு)

போட்ட முத்து உருவள(ர்)ந்து பொற் பிரகாசம் போலழகாய்
ஒப்பில்லாத கவுத்துக்காரர் உடையவனார் திருவருளால்
செப்பும் பந்துஞ் சேர்ந்தாப்போல தீரர் வந்துதான் பிறந்தார்
பிறந்தாரே கவுத்துக்காரர் பூவையர்கள் குரவையிட
குரவை யொலி மொழு மொழனக் கோபத்துடனே பிறந்தார்
கெட்டக் கயறுங் குரட்டுக்கம்பும் கோபத்துடனே பிறந்தார்
மழுவரை சூலஞ் சக்கரம் மன்னர் கையில் பாசங்களும்
பிறந்தார் அதிகோபத்துடன் பொன் கயறு தானிலங்க
இருபேரு(ம்)பிறந்தபோது இறையவனார் மன மகிழ்ந்து
துளசி மணி தானெடுத்துத் தூட்டரிய வேள்வியிலே
வேள்வியிலே தான் போட்டார் விரிசடையோன் மன மகிழ்ந்து

(இடைவெட்டும் பெருமாள் பிறத்தல்)

துளசி மனிதானெடுத்து(த்) தூட்டரிய வேள்வியிலே
வேள்வியிலேதான் போட்டார் விரிசடையோன் மன மகிழ்ந்து
அப்போது உரு வளர்ந்து ஆதி சிவன் திருவருளால்
உரு வளர உடல் வளர்ந்து ஓவியம் போல பிறந்தார்
பிறந்தாரி டை வெட்டும் பெருமாளென்று பேருமிட்டார் பரமசிவன்
தூட்டத்தடியுங் குரடுமாகத் தூடியுடனே தான் பிறந்தார்

(மூவரும் பிறவி செய்தக் காரணத்தை வினவல்)

பிறந்தாரே மூபேரும் புகழ்பெரிய கயிலையிலே
தெய்வார்கள் குரவையிடத் திருமா லயன் மன(ம்) மகிழ
குர(ை)வயொலி மொழு மொழனக் கும்பிட்டாரே மூபேரும்
ஈசு(வ)ரனே மகாதேவா யெங்களை நீர் பிறவி செய்தீர்
பிறவி செய்த காரியந்தான் புகழ் பெறவே சொல்லுமென்றார்

(சிவன் கயிலையைக் காவல் செய்யக் கூறல்)

தொழுது நின்ற சேவுகர்க்குச் சொல்லுவாராஞ் செய்தி யவர்
உங்களை நான் பிறவி செய்தேன் ஒரு வார்(த்)தைக் கேளுமென்றார்
கயிலை வாசல் காத்து நிற்க காவலரே பிறவி செய்தேன்
பார்வதியை மணமுடித்துப் பாரக் கயிலையிலே வருமளவும்
தூட்டர்களே உங்களுக்குத் தூடியுடனே வார்த்தைத் தந்தேன்
உங்களிலும் வல்லவர்தான் ஒருவரில்லைப் பூவுலகில்
ஆரு மொருவரு(ம்) யெதிரியில்லை அழகு வெள்ளி(க்) கயிலையிலே
ஆரு மொருவரும் வாராமல் அழகு கயிலாசங் காருமென்றார்

(மூவரும் திருமாலைத் துதித்து காவல் செய்யப் புறப்படல்)

கயிலாசங் காத்த பெருமாளையுங் கண்டு தொழுதாரே மூபேரும்
மன மகிழ்ந்து பெருமாளும் வாசல் மூன்றுங் காரு மென்றார்
கும்பிட்டவர் விடை வாங்கிக் கோலக் கயிலையிலே தொழுது நின்றார்
தொழுது நின்ற மூபேருந் தெய்வக் கயிலாசமதை
வரத்தாலே கயிலாச வாசல் தன்னைக் காற்க வென்று
காற்கவே வேணுமென்று கட்டழகர் போனபோது
மத்துமுள்ள பேர்களெல்லாம் வரமழகரைக் கண்டபோது
வண்டுகள் தும்பிபோல மன்னவர்கள் பதறியோட
கண்டுதான் பேய்ப் படைகள் கயிலை விட்டு ஓடுமாமே

(சிவன் பிரம்மனுக்குக் கட்டளையிடல்)

மங்கை(ப்) பதி போகவென்று மன மகிழ்ந்து பரமசிவன்
பிர(ம்)மா தனை யழைத்துப் புகல் வரா(ம்) மொரு வார்(த்)தை
மங்கை(ப்)பதி போய் வருமளவும் வையகத்தில் பிறவி யெல்லாம்
சங்கையுடனே கருப்பிடித்துத் தவறாமல் நீர் நடத்துமென்றார்
தவறாமலம் கருப் பிடித்துச் சடையரனார் போடுமென்றார்
அப்போது பிர(ம்)ம தேவர் அடிவணங்கித் தொழுது நின்றார்
தப்பாமல் நீங்களுந்தான் தானிருங்கோ கயிலையிலே
பிறப்பு யிறப்பான தெல்லாம் பிறவி செய்தது யிருவுமென்றார்
பிறக்கும் உயிர் ஆயிரத்தொன்று இறக்கும் உயிர் ஆயிரமும்
கொண்டு வா சீவனையுங் கொடுமை செய்த பேர்களையும்
அடக்குடக்கு(ச்) சோதித்தல்லோ அழகு கயிலாசம் இருவுமென்றார்

(சிவன் நந்தி தேவருடன் புறப்படல்)

அழகு நந்தி தேவரையும் ஆதி சிவன் வரவழைத்தார்
வந்து நின்று நந்திதேவர் வணங்கி நின்றார் சிவன் பாதத்தை
சிவன் பாதததை வணங்கி நின்று சொல்லுவாராம் நந்திதேவர்
ஏதேது யீசு(வ)ரனே எனை யழைத்த காரியந்தான்

அழைத்த தெல்லாம் வேறில்லை காண் அழகு நந்தி தேவா யென்றார்
பன்னி ரெண்டு வருடமாகப் பார்வதியும் இங்கில்லை காண்
பார்வதியை மணமுடிக்கப் பரமசிவன் போகவேணும்
நந்தி தேவா நாமளிப்போ நடந்து மங்கை(ப்)பதி சேர்வோம்
குன்று வெள்ளி(க்) கயிலைவிட்டுக் கொத்வனார்தான் போக(ப்)
பண்டார வடிவாகப் பரமசிவன் கோலங் கொண்டார்
ஆண்டியாக வேசங்கொண்டு ஆதி சிவன் வழி நடந்தார்

(அரனை அனைவரும் தொழுது நிற்றல்)

அப்போது நயினாரும் அடிவணங்கித் தெண்டனிட்டார்
பிர(ம்)மதேவர் வணங்கி நின்றார் பிள்ளையாருந் தொழுது நின்றார்
எம தர்ம ராசாவும் எல்லோருந் தொழுதுநின்றார்
மத்துமுள்ள தெய்வாரும் வணங்கி நின்றார் சிவன் பாதத்தை
எல்லோரும் நில்லுமென்று ஈசு(வ)ரனார் வழி நடந்தார்
வழி நடந்து நந்தியுடன் மங்கை(ப்)பதி சென்றுக் கண்டார்

(கயிலாயத்தின் நிலை)

பரம சிவன் போனபோது பார வெள்ளிக் கயிலையிலே
அடக்குடக்கு அதிகாரமும் அழகு கயிலையிலே பெருமாளும்
கயிலாசங் காத்திருந்து கனபிறவி செய்தனராம்
படியளந்து நயினாரு பரமசிவன் கயிலையிலே
எல்லோர்(க்)கும் படி யளந்து இருந்தாரே நயினாரும்

(காலன் உயிர் பிடித்து வரலும் கபாலக்காரன் விரட்டியடித்தலும்)

அப்போது காலனுட அடங்காத பேய்படைதான்
காலதூதர் யெமராசன் கனத்த பெரும் படையுடனே
உயிரதுதான் ஆயிரமும் ஒன்று போல தான் பிடித்து
கொண்டு வார வேளையிலே கண்டாரே கபாலக்காரர்
கபாலக்காரர் கவுத்துக்காரர் கட்டழகர் கண்டனராம்
தூட்ட ரென்றுந் துதவென்று(ந்) துடியுடனே பேய்ப் படைதான்
மூன்று கோடி தூதர்கள் முகனையுள்ள சேவுகர்தான்
ஆயிரம் உயிர் பிடித்து ஆரா வாரத்துடன் வரவே
வாரதொரு வேளையிலே வடிவழகர் கண்டனராம்
காலனுட பேய் படைதான் கடிதாக வாரா னென்ன
மணிச்சத்த வோசையது வருகுதல்லோ கிடாவதுதான்
காலனவன்தான் வரவு கண்டாரே கபாலக்காரர்
கிடாவேறி வாரவனைக் கன்னத்திலே போடுமென்றார்
ஆரு மொருவரும் வராமலே அழகு கயிலாசம் காருமென்றார்
காற்கச் சொன்னார் பரமசிவன் கன்னத்திலே போடுமென்றார்

அடித்தாரே கபாலக்காரர் அழகு(ை)டய காலனையும்
அடித்த அடி ஆத்தாமல் அபயமிட்டு ஓடுவானாம்
ஓடுவானாங் கயிலைவிட்டு ஒக்கவுமே துரத்துவாராம்
செவிடு செவிடென் றடித்து செப்புக் குடந்தான் பறித்தார்
வலை கயிறு உயிர்களையும் வரமுடையார்தான் பறித்தார்
கொண்டு வந்த உயிரை யெல்லாங் கொடுத்து விட்டு ஓடுவானாம்

(எமதர்மனிடம் காலன் முறையிடல்)

எமதர்ம ராசாவுட கோட்டையிலே சென்றிவர்கள்
அரசிருப்பு ராசாவோட அபயமிட்டான் காலனவன்
ஏதேது காலா நீ இப்ப வந்த காரியந்தான்
எங்களிலும் வல்லவர்தானில்லை என்று தானிருந்தேன்
எங்களிலும் வல்லவர்தான் இப்போ கண்டோம் ராசாவே
உம்முடைய பொருட்டாலே உயிர் பிடித்தோம் சீமையெல்லாம்
ஓட ஓடத் தானடித்து ஓட்டத்திலே துரத்தி விட்டார்
பாசங்களும் வலை கயிறும் பறித்துக் கொண்டார் செப்புக்குடம்
பறித்ததுவும் போதாமல் பல் தவிற அடித்துவிட்டார்
அடித்ததுவும் போதாமல் அழகு கிடாவையுமே பறித்துக் கொண்டான்
எதிர்த்துப் பொர மாட்டாமல் இங்கு வந்தோம் ராசாவே

(எம ராசன் படை திரட்டிச் செல்லுதல்)

படை திரட்டி ராசாவும் பரம சிவன் தந்த வரம்
நமக்கே யல்லாமல் வேறேயில்லை நல்ல காலா வாடா யென்றார்
பாசங்களும் வலை கயறும் பறித்த தவன் தானாரடவா
மூன்று கோடி தூதரோட முகனையுள்ள காலனுமாய்
சே(ர்)த்தாரே ஆயுதங்கள் சுவடுடனே ஆயுதம்
பருசை சமுதாடுடனே பதிஞ்சி வெட்டும் ஆயுதமும்
எமதர்ம ராசாவும் எள்க் குறுணி பேய் படையும்
ஒக்கவே படை திரண்டு ஒன்று போல செல்லுவாராம்
மடியாமல் வெட்ட வென்று வாளெடுத்து வீசுவாராம்
எம தர்ம ராசாவும் ஏவுவானாம் பெரும் படையை
வாசல் காத்த மூவோரையும் மடிய வெட்டிப் போடுமென்றார்

(கபாலக்காரன் எமதர்மனையும் விரட்டியடித்தல்)

போடுமென்ற சொல் கேட்டுப் பொன்னுங் கபாலக்காரருந்தான்
நயினாரைக் கை(த்) தொழுது நல்ல ஆயுதமெடுத்தார்
இரும் புலக்கை சக்கரமும் எடுத்தா ருடை வாள் பருசை
குந்தம் யெறி யீட்டி பாரவளையம் கோண வழுதடி சக்கரமிலங்க
எதிர்த்தாரே படையோடே யிவர்கள் எங்கும் நெருங்கவே பொருதாரே
துடியுடன் வுடைவாள் கையிலெடுத்து துட்டருட பேய்ப் படைகளை வெட்ட

வெட்டுற வுடைவாள் கூர்மை கண்டு வெருண்டு படைகள் ஓடிடுமாமே
தூட்டரிய பொன் கபாலக்காரர் சிறந்த படைகளை வெட்டுவாராம்
பூமிகளெலலாங் கிடுகிடுகிடென பொன்னின் கபாலக்கார(ச்) சுவாமி
மட்டுக் கடங்கா காலன் படையை வரத்தால் பெரியவர் மூபேருந்தான்
எதிர்த்தா ரிடை வெட்டு பெருமாளும் இருகையில் ஆயுதங் கேடயமிலங்க
தூட்ட காலன் படை யோடே தூடியுடன் இவர்களும் பொரு(து)கிறார் பாராய்
வெட்டத் தட்டியே சிலபேர்கள் வெகுண்டு சிலபேர் ரோடிடுவாராம்
வெட்டுங் குத்துஞ் சிலபேர் வெகுண்டு பூமிதனிலே விழுவார்
பொல்லாதவர்கள் மூன்று பேரும் போக வொட்டார்கள் நம்மையுமென்று
பார்த்து நின்று காலனுந்தான் பாரவளையங் கையிலெடுத்து
பாரு பாரு பாரெனவேதான் பண்ணிப் பா(ய்)ச்சல் பாய்கிறார் பாராய்
எதிர்த்துப் பொருதார் காலதூதர் இயல்புடன் யெமதர்ம ராசாவும்
இனி(ப்) பாரு பாரெனவேதான் ஏறிச் சென்று வெட்டிடுவானாம்
பார்(த்)து நின்ற கவுத்துக்காரர் பாரவாள் கொண்டு வெட்டிடுவாராம்
வெட்டுங் குத்துந் தட்டி யெமராசன் விரய வெருண்டங் கோடிடுவானாம்
தூட்டரல்லோ மூபேருந்தான் சீமை தனில் கண்டது மில்லை
ஒருவருந்தான் யெதிரியுமில்லை ஓடிப் போவோங் காலா யென்றார்
கொண்டு வந்த படைகள் தனையும் கொல்வா னிப்போ நம்மையு மென்று
என்று சொல்லி யெமராசாவும் ஏத்த பெரும்படையோடு ஓடிடுவானாம்

(நடந்தவற்றைக் கபாலக்காரன் நயினாரிடம் கூறல்)

மகிழ்ந்து அவருங் குரவையிட்டு வடகயிலாச மானதிலே கொண்டு வந்த
உயிரானதுதான் ஆயிரமும் உத்த செப்புக் குட(மு)ம் பறித்து
வல்ல நயினார் இடமதிலே வைத்துத் தொழுது வணங்கி நின்றார்
தொழுது நின்றோர் முகம் பார்த்துச் சொல்லுவாராம் நயினாரும்
முன்னமே தான் உயிர் பிடித்தோர் மூன்று கோடி தூதருண்டே
காலனுட பேய் படையுங் கண தூதரெங்க யென்றார்
எமதர்ம ராசாவும் இவர் தனக்கு முதலாளி
எங்கே யென் கபாலமுத்தே என்னுடைய சேவுகரே
கயிலையிலே பரமசிவன் காத்திருகச் சொன்னதினால்
ஆரு மொருவரும் வாராமல் அவர்களையுந் தூரத்தி விட்டேன்
எமதர்ம ராசாவும் எதிர்த்துப் பொருதார் படையோடே
உம்முடைய பொருட்டாலே ஒக்கவுந்தான் தூரத்திவிட்டேன்
எல்லோரும் ஓடிவிட்டார் எம காலனும் ஓடிவிட்டார்

(காவலர் உயிர் பிடித்தல்)

உயிர் பிடிக்கப் போறவர் ஆர் உகந்த வரம் பெத்தவனே
உயிரதுதான் ஆயிரமும் நான் ஒரு கயத்தால் பிடித்துவாரேன்
உயிர் பிடித்து நான் வருவேன் உம்முடைய பொருட்டாலே
சடையாமல் பிடித்து வாரேன் சடையரனார் தந்த வரம்

விடை தாரும் நயினாரே விரி சடையோன் திருவருளால்
உயிர் ஆயிரமும் பிடித்துவர உடையவனார் திருவருளால்
விடை கொடுத்து நயினாரும் வெள்ளதலிப்பூ கொடுத்தார்
அப்போது கயிறெடுத்து அவர் போனார் உயிர் பிடிக்க
உயிர் பிடிக்க அவர் போனார் உலகில் பிறந்திட்ட உயிரை யெல்லாம்
பதறப் பதற உயிர் பிடித்துப் பாசத்திலே கெட்டுவாராம்
குத்துவாராம் மணிக்குடலைக் கொல்லுவாராஞ் சீவனையும்
சீமையிலே உயிர் பிடித்துச் செப்புக் குடந்தனி லடைத்தார்
அஞ் செழுத்தோ டெட்டெழுத்து அது வகுத்துப் பிடிக்கிறாராம்
சத்திய வேத முறை(த்) தங்களையுந்தான் பிடித்துப்
பாவிகளைத்தான் பிடித்துப் பதற உயிர் கெட்டுவாராம்
கொடும் பாவியினரையுங் கொன்று வதை செய்கிறாராம்
தவித்த வாய்க்கு(த்) தண்ணீர் தராத சண்டாளப் பாவிகளை(ப்)
பிரடியிலே கல்லேத்திப் போட்டு வதைச் செய்கிறாராம்
காலொருநாள் கையொரு நாள் கடுக உயிர் போகாமல்
வதைகள் செய்து உயிர் பிடித்து வாணாலை வதைகள் செய்து
பாவிகளை வுயிர் பிடித்துப் பருங் கழுவில் போட்டிழுப்பார்
தர்மங்கள் செய்தபேரைத் தானடத்திக் கொடு போவார்
பரவரோடு துலுக்கரையும் பரு முள்ளுக் காட்டுடே
இரைகள் தோரும் முள்ளேற இவர்களையும் போட்டிழுப்பார்
கள்ளமார நாயைவிட்டுக் கறி கறியாய் தான் பிடுங்கி
கொன்று மந்தப் பாவிகளை(க்) கொடுபோவார் கயிலையிலே
வகை தெரிந்து நாலுமுறை உயிர் ஆயிரமுங் கொடு போனார்

(நயினார் உயிர்களுக்குத் தீர்ப்பு வழங்கல்)

கயிலாசத் திருவுளமுங் கண்டு மனந்தான் மகிழ்ந்து
உன்னைப போல் சேவுகந்தான் ஒருவரையும் நான் காணேன்
உயிர் ஆயிரமுங் கொண்டு வந்தாய் உத்த நல்ல சேவுகந்தான்
நித்தம் இப்படிக் கொடு வருவாய் நீதியுள்ள சேவுகனே
கொடுபோன உயிரை யெல்லாங் கோலக் கயிலையிலே சோதிப்பாராம்

(அளவு குறைத்தவருக்குத் தண்டனை)

கொத்தைக் குறைத்தவனை கு(ன்)ற மரக்கால் அளந்தவனை
கொடும் பாவி யீனரையுங் கொல்லுங்கடா சேவுகரே
ஆயிரம்பேர் கிங்கிலியர் அசைக்க வொண்ணாச் செக்கதிலே
செக்கதிலே தான் போட்டுத் திரியுங்கடா சேவுகரே
எண்ணையும் புண்ணாக்குமாக எடுத்தெறியும் நரகத்திலே
மறுபிறவி(யில்) அவன் தனையும் வாணியனாய்(ப்) பிறவி செய்தார்
வாணியனாய்(ப்) பிறவி செய்து வருத்துங்கடா பிணி நோவை
குட்டங் குற நோயுங் கு(ன்)ற மரக்கால் அளந்தவனை

(பெற்றோரைப் பசியால் வாட விட்டவருக்குத் தண்டனை)

மத்துமொரு கணக்கெடுத்து வாசித்தாரே நயினாரும்
மாதா பிதா பசித்திருக்க வயிற் வள(ர்)த்த பாவிகளை
மண்ணோடு மண் பிசைந்து வாணாலை வதையுமென்றார்
வாணாலைத் தான் வதைத்து வன்னரகில் போடுமென்றார்
புழுவெடுத்துத்தான் முழுங்கப் போடுமென்றார் புழுக்குழியில்
மறு பிறவியவன் தனையும் வண்டுக் கரிச்சலாக
கருச்சலாக பிறவி செய்து காசினியில் திரியுமென்றார்

(பெற்றோரை அடித்தவர்களுக்குத் தண்டனை)

மறு கணக்குத்தானெடுத்து வாசித்தாரே நயினாரும்
தாயை மிதித்தவர்கள் தகப்பனையும் அடித்தவர்கள்
அவர்களையுந்தான் பிடித்து அரையுங்கடா அம்மியிலே
போடுங்கடா நரகமதில் பொல்லாத பாவிகளை(ப்)
பதினாறு வருசமாகப் பரும் புழுக்கள் பங்கிடவே
மறு பிறவி அவன் தனையும் மானிடவர் தானறிய
சப்பாணியாக வல்லோ தரணியில் பிறவி செய்தார்

(பொய்வழக்கு உரைத்தவருக்குத் தண்டனை)

மறு கணக்குத் தானெடுத்து வாசித்தாரே நயினாரும்
சந்தியிலே தானிருந்து சாங்க வழக் குரைத்தவனை(ப்)
போடுங்கடா கழுவதிலே புழுக் குழியிலே அழுந்த
அழுந்த வல்லோ வெகுநாளாய் அவனையுமே தான் போட்டு
காலைப் பத்திப் புழு விழுங்கக் கடு நரகில் போடுமென்றார்
மறு பிறவி யவன் தனையும் வருசம் பன்னிரெண்டு சென்றபோதே
வாய் பேசா வூமையாக மனிதனாகப் பிறவி செய்தார்

(காவல் பணி செய்தவர்க்குக் கொத்தளக்காத பாவிகளுக்குத் தண்டனை)

காட்ட(க)த்தில் பயிரேத்திக் காவல் காற்க வைத்தவன் தான்
காத்த கொத்துக் குடாத தொரு கள்ளனையும் தான் பிடித்து
கழுகுக்களொடு கழுகுக்கள் திங்கக் கண்ட துண்ட மாக்குவாராம்

(வழியில் கடன் கேட்டவருக்குத் தண்டனை)

வழி மறித்துக் கடன் கேட்ட மாபாவி தங்களையும்
மலத்தியே நான் கிடத்தி வாய் தனிலே கூடு சுட்டு
மலத்தியே தான் கிடத்தி வரிக்கல்லை நெஞ்சிலேத்து மென்றார்
மறு பிறவியவன் தனக்கு வாய்க்கரிசி மிஞ்சாமல்
இப்படியே கள்ளனையும் என் பெருமாள் பிறவி செய்தார்

(கந்து வட்டி வாங்கியவர்க்குத் தண்டனை)

ஒன்று கொடுத்து ஒன்பது பத்து ஒருக்காலே வாங்கினபேர்
மண்ணோடே விண்ணும் மண்ணும் வையகங்களுள்ள மட்டும்
எண்ணும் வெறுமையாக எழுதுவாராம் மறுபிறவவி

(கோள் சொன்ன பாவிகளுக்குத் தண்டனை)

ஒரு வீட்டுக் குண்டணிகள் ஓடி ஓடிச் சொனன்னபேர்கள்
முள்ளு முனையதிலும் முனை நாக்குக் கூர்மையிலும்
எண்ணும் புழுவரிக்க இழுத்துக் கிடத்து மென்றார்
மறு பிறவியவன் தனையும் வாயிலே குட்டம் பத்தி
குட்டமது பத்திடவுங் குவலயத்திலே பிறக்க

(மனைவி பிள்ளைகளைக் காக்காதவனுக்குத் தண்டனை)

மறு கணக்குத்தானெடுத்து வாசித்தாரே நயினாரும்)
பிள்ளைகளும் பா(ர்)த்திருக்க பெண்சாதி பா(ர்)த்திருக்க
வயறு வள(ர்)த்த தொரு மாபாவிப் பயல் தனையும்
வன் னரகில் தான் போட்டு வதையு மடா சேவுகரே
மறுத்து யெட்டாம் வருசமது மாடாகப் பிறவி செய்தார்
மாடாகப் பிறந்தாலும் வழக்கிலே திரிந்தலைய
நாலுபேர்க்கும் பொதுமாடா நடுவே திரிந்தலைய
இப்படியே யென் பெருமாள் எழுதுவாராம் ஒரு கணக்கு
எச்ச முகம் பாராத ஏழைப் பயல் தனையும்
சாதிக்குள் கீழாகவே சடையரனார் திருவருளால்
எப்போதும் யிரந்துண்ணியா எழுதுவாராங் கணக்கதிலே

(பெண்ணைக் கற்பழித்தவருக்குத் தண்டனை)

கற்புடைய மங்கையரைக் கருதிப் பிடித்தவரை
கள்ளனையுங் கொண்டுவந்து கவைக் கம்புதனில் கோதி
அக்னி(த்) தூணருகே அவனைக்குத்தி அமுக்குமென்றார்
மறு கம்பால்தான் கோதி வன் னரகில் போடு மென்றார்
பின்னு மந்தப் பாவிதனைப் பூவுலகில் பிறவி செய்ய
வண் பிள்ளையாய் தான் பிறந்து வெரு வியாதி கொண்டவனும்
கலியாணம் முடிக்காமல் கழித்தவனைத் தள்ளிடவும்
இப்படியே நயினாரும் எழுதுவாராங் கணக்கதிலே

(பெண்ணை வசியம் செய்தவருக்குத் தண்டனை)

கற்(ப்)புடைய மங்கையரை(க்) கருக மருதிட்டவரை
மருந்திட்டுத்தான் பிடித்த மா பாவி தங்களையும்
மலை போலே தானெரியும் வளரும் அக்னி(த்) தூணருகே

தழுவச் சொல்லியவன் தனையுந் தணல் தணலா யெரியுமென்றார்
பதினாறு வருசமாகப் பரும் புழுக்கள் பங்கிடவே
இப்படி யே நயினாரும் எழுதுவாரா மொரு கணக்கு

(ஏமாற்றுபவருக்குத் தண்டனை)

ஒன்று வைத்து ஒன்று பண்ணும் ஊரிலுள்ள சனங்களையும்
நாரசங் காச்சிவிட்டு நடுங்கவேதான் அடியுமென்றார்
மறு பிறவி யவன் தனையும் வண்டிக் கிடவாக
வையகத்திலே பிறக்க மறு கணக்கு எழுதுவாராம்

(சுமடுக் கூலி தராதவர்க்குத் தண்டனை)

துர வழி போகயிலே சுமந்த கொத்துக் குடாதபேரை
மாபாவி தங்களையும் மாடாகப் பிறவி செய்தார்
எருது மாடென்று சொல்லி எழுதினாரே நயினாரும்

(கலப்படம் செய்தவருக்குத் தண்டனை)

அடித்து(க்) களம் அளக்கயிலே அதில் சாவி கலந்தவனை
வங் காத நரகமதில் வன் னரகிலே போட்டு
பதினெட்டு வருசமாகப் பரும் புழுக்கள் பங்கிடவே
மறு பிறவி யவன் தனையும் மயிலை(க்) கழுதையாக
உருளையிலே தான் முறிந்து ஓடிப் புல்லு மேயாமல்
இப்படியே நயினாரும் எழுதுவாரா மொரு கணக்கு

(ஓர வஞ்சனைக்காரருக்குத் தண்டனை)

ஒரு விளையில் கொத்துதான் உய(ர்)ந்த கொத்துப் போடயிலே
மறு விளையில் போடயிலே மசங்கு மட்டும் வேலை கொண்டான்
வேலை கொண்டு படி குறைத்து விதனஞ் செய்தான் மாபாவி
சேத்திலே சுமை வாரிச் சுமவுமென்று தானடித்தார்
அடியாத்த மாட்டாமல் அறு நரகில் போய் விழுந்தான்
வெகு நாளாய் நரகத்திலே விரய அங்கே போட்டு விட்டார்
சடைக் கழுதையாக வல்லோ தரணியில் போடுமென்றார்

(மதமடக்காகக் கற்பழித்த பாவிகளுக்குத் தண்டனை)

மறு கணக்குத் தானெடுத்து வாசித்தாரே நாயினாரும்
மத மடக்காக் கற்பழித்த மா பாவி தங்களையும்
மலத்தியவன் தனைக் கிடத்தி மணி நாக்கைத்தான் பிடுங்கி
வண்டியில் கல்லேத்தி வந்து வரிக் கல்லை நெஞ்சிலேத்து மென்றார்
பின்னு மந்தப் பே(ய்)ப் பயலை பூவுலகில் பிறவி செய்தார்
குட்டங் குறை நோயுங் குடல் பழுவன் (ஏ)பரு வியாதி
தீராத வியாதியாகச் சீமையிலே போடுமென்றார்

(வலக்காரம் பேசிவிட்டு ஒன்றும் கொடாதவருக்குத் தண்டனை)

மகிழ்ந்திருந்து மாதரோடே வலக்காரம் பேசயிலே
பூவாகிலுங் கொடுத்துப் போகாத பாவிகளை
வாசல் படிக் கல்லாக மாதர் சமட்டி மிதிக்க
இப்படியே நயினாரு எழுதுவாரா மொரு கணக்கு

(முறை மசக்கிப் பெண் பிடித்தவருக்குத் தண்டனை)

முறை மசக்கிப் வெண் பிடித்த மூதேவி தங்களையும்
அவனுமொரு அம்மியாக அவளுமொரு குளவியாக
இப்படியே நயினாரும் எழுதுவாரா மொரு கணக்கு

(தர்மம் செய்தவர் கணக்குப் பார்த்தல்)

தர்மங்கள் செய்த பேர்(க்) குத்தான் கணக்குப் பார்(க்)குறாராம்
கொத்தைக் குறையாமல் கொடுக்கிறபேர் தனக்கு
அன்ன சுத்தத்தார் கிளையும் அவரும் நன்றாய் வள(ர்)ந்தேற
தாய்(க்)குச் சோறூட்டினபேர் தர்மபதம் பெறுவார்
எச்சமுகம் பார்(த்)தவர்கள் இவரே பதம் பெறுவார்
உசந்த கொத்துக் குடுத்தபேர்கள் உடனே பதம் பெறுவார்
தவித்த வாய்(க்)குத் தண்ணீர் கொடுத்த பேர்கள் தம்ம பதம் பெறுவார்
பசித்த முகம் பார்த்தவர்கள் பதம் பெறுவார் நாள்தோறும்

(பெண்கள் கணக்கைப் பார்த்தல்)

ஆண் கணக்குத்தான் போட்டு அதிய வெண் கணக் கெடுத்தார்
பெண் பிள்ளை கணக்கது தான் பெருமாளும் தானெடுத்தார்

(சோறு திருடிய கள்ளிக்குத் தண்டனை)

தாய் சோறும் மகள் சோறுந் தானிருந்து வேகயிலே
தாய் சோத்தில் ஒரகப்பை தானவளுங் கோரி விட்டாள்
வாரியிட்ட கள்ளிக்குத்தான் வயறொரு நாள் நிறையாது
கோரியிட்ட சோறதுதான் குறையாது ஒரு நாளும்
வாரியிட்ட கள்ளியைத்தான் மணி நாக்கைப் பிடிங்கி
மணி நாக்கைத்தான் பிடுங்கி வன்னரகில் போடுமென்றார்
மறு பிறவி யவள் தனையும் வயத்தில் கர்ப்பந் தரிக்கையிலே
பத்து மாதஞ் சென்று மந்தப் பாலகியுந்தான் பிறந்து
பிறந்து மூன்றாம் மாதத்தையிலே வத்த தாய் செத்திடவும்
தாய் உயிர்தான் போய்விடவும் பிள்ளை தட்டழிந்து வாடிடவும்

(பிச்சையிடாதவர்க்குத் தண்டனை)

மறு கணக்குத் தானெடுத்து வாசித்தாரே நயினாரு
பிச்சைக்கு வந்தவரைப் பெருக நிறுத்தி வைத்து
அச்ச மிலாதிருந்த தொரு அறிவு கெட்ட கள்ளியையும்
அரையுங்கடா அம்மியிலே அறுநரகில் போடுமென்றார்
கொத்திக் கொத்திப் புழுக்களெல்லாங் கூறு செய்து பங்குவைக்க
பங்கு வைக்கப் புழுக்களெல்லாங் பாவியவள் தன் தனையும்
மறு பிறவியவள் தனையும் வவ்வாலாய் பிறவி செய்தார்

(தாகத்திற்குத் தண்ணீர் கொடாதவருக்குத் தண்டனை)

தவித்து தண்ணீர்தான் கேட்டுத் தானொருவ னோடி வந்தான்
வெந்த தண்ணீர் தானிருக்க வெறுந் தண்ணீரில்லை யென்று
பச்சைத் தண்ணீரில்லை யென்று பாவியவள் விரட்டி விட்டாள்
கிடாரத்திலே வென்னீர் போட்டுக் கெம்பீரமாய் தீபோட்டு
தண்ணீர் தவிக்கு மட்டும் தலை தலை யென்றே அடித்து
அண்டாவில் கொதிக்குந் தண்ணீர் அதையுங் கெண்டிதனில் கோரி
வாய்தனிலே வென்னீரை மட மட டென்று வூத்திவிட்டார்
உடம்பதுதான் வெந்திடவும் உடனே புழுக் குழியதிலே
வெகுநாளாய் தான் கிடந்து விதனப் பட்டாள் மெல்லியரும்
அதின் பிறகு ஒரு பிறவி அவளையுமோ பிறவி செய்தார்
மறுபிறவியவள் தானும் மர நாயாய் தான் பிறந்தாள்

(கணவனை மதிக்காதவர்க்குத் தண்டனை)

மறு கணக்குத் தானெடுத்து வாசித்தா ரென் பெருமாள்
கொண்ட கணவனையும் கூசாமல் பேசுகின்ற
கொடும் பாவி நீலியையுங் கொல்லுங்கடா சேவுகரே
தூட்டிடை வெடும் பெருமாளே துடியிடையைத் தான் பிடித்து
ஈயமதுதான் கா(ய்)ச்சியவள் நாக்கில் விடுவு மென்றார்
குலுங்க வல்லோ அவள் சரீரங் கொழுக் கா(ய்)ச்சி (இ)டுவு மென்றார்
பதறப் பதற அவள் தனையும் பாழ் நரகில் போடு மென்றார்
நரகத்திலே தான் போட்டு நாக்குட்டிப் புழுவைவிட்டு
நாலாறு பங்கு வைத்து நற்(ப்)புழுக்கள் விழுங்கிடவே
விழுங்கிடவே புழுவதுவும் விதனப்படத்தான் போட்டார்
மறு பிறவி அவள் தனையும் வகை தெரிந்து யெழுதுவாராம்
மாட்டில் புழுக்கும் புழுவாய் வகை தெரிந்து யெழுதுவாராம்
இப்படியே பிறவி யென்று எழுதுவாராம் நயினாரும்

(கணவனுக்குத் துரோகம் செய்தவர்களுக்குத் தண்டனை)

தன் கணவனானவர்(க்)குத் தான் முறைகள் செய்யாமல்
மறு கணவனானவர்(க்)கு வணங்கி நின்றாள் மாபாவி

மாபாவி யானவளை வடிவழகா(ய்)தான் பிடித்து
அஞ்ஞாறு கிங்கிலியர் அ(சை)க்க வொண்ணாச் செக்கதிலே
அவள் பாவி துரோகியைப் போட் டாட்டுங்கடா சேவுகரே
கொத்திக் கொத்தியவள் தனையுங் கொடிய செக்கில் போடுமென்றார்
ஆட்டிடுவார் கிங்கிலியர் அசைக்க வொண்ணாச் செக்கதிலே
இப்படியே வெகுநாளாய் இவளையுமே தானாட்டி
மறு பிறவி அவள் தனையும் மாட்டினுட சாணியிலே
சாணாங்கிப் புழுவாகச் சபித்தாரே நயினாரும்

(திமிராக நடந்தவர்களுக்குத் தண்டனை)

மறு கணக்குத் தானெடுத்து வாசித்தாரே நயினாரும்
தன் கணவ னானவரைச் சத்துமோ கெ(வ்)ணியாமல்
சத்துமோ கெ(வ்)ணியாமல் சத்தியுடன் திரிந்தவளைக்
கொண்டு வந்து பாவியையுங் கொல்லுங்கடா சேவுகரே
கோழிப் புழு தன்னை விட்டுக் கொத்திக் கொத்திக் கொல்லு மென்றார்
மறு பிறவியவள் தனையும் மர நாயாய் பிறவி செய்தார்

(கணவனை மதிக்காதவர்களுக்குத் தண்டனை)

கணவனை நீ யென்று சொல்லி கை நீட்டிப் பேசியவள்
நெடுக மலத்திக் கிடத்தி நெடு நாக்கைப் பிடுங்குமென்றார்
நாக்கையுமே தான் பிடுங்கி நரகத்திலே போடுமென்றார்
மறு பிறவியவள் தனையும் மட நாயாய் பிறவி செய்தார்

(திருட்டு மற்றும் பொறுப்பில்லாதவருக்குத் தண்டனை)

கதவை அடைத்து வைத்துக் களவாண்ட கள்ளியையும்
கடு நரகில்தான் போட்டுக் காரிக் கழுதையாகப் பிறவி செய்தார்
மதலை கிடந்தலற மறு வீட்டில் போயிருந்து
மதலை முகம் பாராத மாபாவி யானவளை
மறு பிறவியவள் தனையும் மதலை யில்லா மாதராக
பிள்ளை யில்லா மலடியாகப் பிறக்கச் சொன்னார் பூலலகில்
தன் கணவன் கீழிருக்கத் தான் மேடை யிருந்தவளை
முக்காலியைக் காயப்போட்டு மூதேவியை இருத்து மென்றார்
இருத்து மென்றார் அக்னியில் நீதி கெட்ட கள்ளியையும்
மறு பிறவியவள் தனக்கு வலது கால் முடமாக
எழுதுவாராம் நயினாரும் இப்படியே கணக்கை யெல்லாம்

(கணவனுக்கு முன் உறங்கியவளுக்குத் தண்டனை)

தன் கணவன் வருகையிலே சரிந்துக் கிடந்துறங்கினவள்
சறுக்கு வண்டி தனிலெத்திக் தான் போட்டு அடியுமென்றார்
அடியுங்கடா தெருதோறும் அவள் பாவி சண்டாளியை

மறு பிறவி யவள் தனையும் வண்ணாத்தியாய் பிறவி செய்தார்
மன்னவரும் மாதருமாய் மகிழ்ந்திருந்து வாழ்கையிலே
மன்னவர்(க்)கு முன்னுறங்கும் மா பாவி சண்டாளியை
மறு பிறவியவள் தனக்கு மன்னவனு மில்லாமல்
சரடிழந்த பாவியாகத் தரணியில் பிறக்கச் சொன்னார்

(புத்திரனைக் கணவனைப் பேணாதவர்க்குத் தண்டனை)

புத்திரனை உறங்கவைத்துப் போனாலே ஒரு பாவி
போனதொரு பாவியையும் போடு மென்றார் கழுவதிலே
இழுத்தடியுந் தெருத் தோறும் எடுத் தெறியும் நரகத்திலே
மன்னவனார் சொல் கேட்டு வணங்காளே மாபாவி
மாபாவியானவளை வதையுமடா சேவுகரே
துட்டன் கவுத்துக்காரருந்தான் தூண்டலிலே போடுவாராம்
தூண்டலிலே போட்டடித்துச் சிறு நாயாய் பிறவி செய்தார்
மன்னவர்(க்)குச் சோறூட்டி வயத்துப் பசி தீராமல்
மத்து மொரு மன்னவர்(க்)கு வயத்து பசி தீர்த்தவள்தான்
வரிப் புழுக்கள் தான் முழுங்க வன்னரகில் போடுமென்றார்
மறு பிறவியவள் தனையும் மலை கடலிலேதிரியும்
காட்டாமை பிறவி யென்று கணக்கதிலே யெழுதுவாராம்
இப்படியே நயினாரு எழுதுவாராங் கணக்கதிலே

(பொல்லாதவர்க்குத் தண்டனை)

குடமதுதான் இடுப்பில் வைத்துக் கொடியிடையாள் தானொரு(த்)தி
வழி மேலே போகயிலே மயிர் குலைத்துக் குலவியவள்
நடந்து வழி போ(ல)கயிலே நடை கண்டு தானொருவன்
வாரது கண்டே ஒருவன் வழி மறித்து யேது சொல்வான்
பொல்லாத நீ யொரு(த்)தி போகலாமோ வெண் பிள்ளைதான்
அப்படியே தலை குலைந்த அவள் பாவியானவளை
செப்புத் தூண் தன்னோடே சேர்த்துக்கட்டி அடியுமென்றார்
அடிபடவே அவள் பாவி அறுநரகில் போடுமென்றார்
மறு பிறவி யவள் தனையும் வரி அழுங்காய்(ப்)பிறவி செய்தார்
இப்படியே பாவிகளை எழுதினாரே கணக்கதிலே
பாவிகளைத் தானெழுதிப் பதறப் பதற தண்டித்தார்

(நல்ல உயிர்களுக்கு நற்கணக்கு எழுதுதல்)

கொண்ட கணவனை பேணுங் குல மகளைக் கூட்டி வந்து
தாமரைப் பூ நிராவித் தண்ணீரில் நீராட்டி
மறு பிறவி பூ மாது மகிழ்ந்திருந்து வாழ்ந்திடவே
தவறாமல் மாங்கலியஞ் சாகுமட்டுங் கெட்டிடவும்
குழந்தை பெத்து யெடுத்திடவுங் குவலயததிலிருந்திடவும்

வாழ்ந்திடுவாள் நாள்தோறும் மதலை பெத்து யெடுத்திடுவாள்
இப்படியே வாழவென்று என்று வருமாள் பதங்கொடுத்தார்
பதங்கொடுத்தார் நயினாரும் பாக்கியசாலி யென்று

(மழைக்கு ஒதுங்க இடங்கொடாதவருக்குத் தண்டனை)

அப்போது ஒரு பாவி யவள் வந்து தான் னெதிர்த்தாள்
மழைக்கால யிருட்டிலே வழி தப்பியே ஒருவன்
ஒதுங்க விட மில்லமல் ஒதுக் கென்று ஓடிவந்தான்
ஒதுங்க விடம் வேணுமென்று ஒரு பா யிடங் கேட்டதற்கு(க்)
காரி நாயை விட்டேவிக் கடி யெனவே துரத்திவிட்டாள்
தலை வாசல் கடரு மட்டுந் தானடித்தாள் நாயைவிட்டு
ஓடோடு ஓடெனவே ஓட்டத்திலே துரத்தி விட்டாள்
அப் பாவி யானவளை அரையுங்கடா அம்மியிலே
அம்மியிலே தானரைத்து அறுநரகில் போடுமென்றார்
ஒன்று புழுதான் முழுங்க ஒரு புழு பங்கு வைக்க
பத்தெட்டுப் பங்காகப் பங்கு வைத்துப் புழுக்களெல்லாம்
தோன்றாத வன்னரகில் தறு தலை யானவள்
மறுபிறவியவள் தனையும் வையகத்தில் படையுமென்றார்

(உயிர்களின் பிறப்பெழுதுதல்)

என்ன யென்ன பிறவியென்று எழுதுவாராம் நயினாரும்
வூச்சிப் பிறவியென்று உலகு தனிலே திரிய
வெள்ளுச்சிப் பிறவியென்று விரய அங்கே யெழுதுவாராம்
முதுகுதனில் குடிலுங்கட்டி மூதேவி போய் பிறந்தாள்
தர்மஞ் செய்தாள் தானொரு(த்)தி தானும் வந்தே யெதிர்த்தாள்
எச்ச முகம் பார்(த்)தவள் தான் ஏழை பசி தீர்(த்)தவள்தான்
பத்தினியை கூட்டி வந்து படையு மென்றார் மறுபிறவி
எண்ணோன்பு நோத்தவள்தான் ஏத்த தவஞ் செய்தவள்தான்
முத் தொட்டிலும் வாழ்வதும் முகியாமல் வாழுமென்றார்
வாழ்வு செல்வந் தவறாமல் வாழ்ந்திரென்று யெழுதுவாராம்
தூயிலதுதான் இல்லாமல் தெருவதிலே வந்தவரை
நகைத்தாளே ஒரு பாவி நாணங்கெட்ட கள்ளியவள்
சிரித்தாளே ஒரு பாவி தெருவதிலே வாரபோது
இரு பேரையுங் கணக்கதிலே ஈயென்று பிறவி செய்தார்
நந்தவனம் வைத்தவர்கள் நல்ல பதம் பெறுவார்கள்
பூமரங்கள் வைத்தவர்கள் போதப் பதம் தான் பெறுவார்
கல்கிணறு வெட்டினபோ் கணபதவிதான் பெறுவார்
மடங்கள் கெட்டி முகித்தோர்கள் வாழ்ந்திருப்பார் நாள் தோறும்
தெய்வ நலங்கள் முகித்துத் திருப்பணிகள் செய்வோரும்
பூ விட்டுக் கும்பிட்டபோ் பெருமாள் பதம் பெறுவார்

கோவில் வை(ய்)த்து(க்) கும்பிட்டபேர் குமரேசன் பதம் பெறுவார்
சிவனே யென்று தொழுதபேர்கள் சிலகோடி பதம் பெறுவார்
நயினாரென்று தெழுதபேர்கள் நாலு கோடி பதம் பெறுவார்
பகவானென்று தொழுதபேர்கள் பாக்கியங்கள் மிகப் பெறுவார்
பிர(ம்)ம தேவர்தனைத் தொழுதோர் புண்ணியங்கள் மிகப் பெறுவார்
பிள்ளையாரைத் தொழுதபேர்கள் புத்திரனை மிகப் பெறுவார்
ஆறுமுக மென்ற பேர்கள் ஆணரசைப் வத்தெடுப்பார்
பார்வதியை(த்) தொழுத பேர்கள் பதம் பெறுவார் நாள்தோறும்
பெருமாளென்று தொழுதபேர்கள் போதப் பதம் பெற்றிடுவார்
காளி யென்று தொழுத பேர்கள் மெய்க்க வாழ்ந்திரு(ப்)பார்
தேவாதியைக் கும்பிட்டபேர் சிறப்பாக வாழ்ந்திருப்பார்
பேய்கள் தனைக் கும்பிட்டபேர் பேய்போல அலைந்து போவார்
இத்தனையும் பழித்தவர்கள் இவர் பிறப்பா றொரு பிறவி
குழந்தையில்லா மனிதரென்றுங் கொள்ளியில்லாப் பேர்களென்றும்
பாவஞ் செய்த பேர்களெல்லாம் பாவி யென்று தான் பிறப்பார்
கொள்ளியில்லாப் பேர்களென்று கூறிடுவார் நாட்டிலுள்ளோர்
மா பாவஞ் செய்தபேர்தான் வண்ணானாய் தான் பிறப்பார்
குலை பாவஞ் செய்தபேர்தான் குசவனாகத்தான் பிறப்பார்
ஒதுக்கிடங்கள் குடாதபேர் உலகத்திலே ஒரு பாவி
இடையனாகத்தான் பிறக்க எழுதுவாராங் கணக்கதிலே
இ(ை)டப் பிறவி க(ை)டப் பிறவி என் றெழுதுவாராம் நயினாரும்
அ(ை)ரப் பாவஞ் செய்தவளை அழுங்கிலியாய் படையுமென்றார்
நாள்தோறுங் கொடுமை செய்தவனை நாவிதனாய் படையுமென்றார்
கொடுமை மிகச் செய்தவனைக் கொல்லனாகப் படையுமென்றார்
பாவ மிகச் செய்தவனைப் பரவனாகப் படையுமென்றார்
மோகமது செய்தவனை முக்குவனாய் படையுமென்றார்
இடும்பு பல செய்தவனை ஈழுவானாய் படையு மென்றார்
பாவமிகச் செய்தனைப் ப(ை)றயனாகப் படையுமென்றார்
பெண்ணிடுக்கஞ் செய்தவனைப் புலையனாகப் படையுமென்றார்
தரித்திரங்கள் செய்தவனைச் சவளனாகப் படையுமென்றார்
கனக் கொடுமை செய்தவனைக் கல் தச்சனாய் படையுமென்றார்
த(ை)லமை யாகச் செய்தவனைத் தச்சனாய் படையுமென்றார்
சில நாளும் பாவஞ் செய்தவனைச் செம்மனாகப் படையுமென்றார்
கொடுமுடிகள் செய்தவனைக் கொத்தனாகப் படையுமென்றார்
வதைகள் செய்தப் பாவிகளை வாணியனாய் பிறவி செய்தார்
பாவமிக்க செய்தவனைப் பள்ளனாகப் படையுமென்றார்
ஒருக்காலே பிழை செய்தவனை ஒச்சனாய் படையுமென்றார்
தர்மமிகச் செய்தவரை(ச்) சாந்தோராய் படையுமென்றார்
மென்மேலுந் தவஞ் செய்தபேர்கள் வெள்ளாளராய் பிறப்பார்
முன்னே தவஞ் செய்தபேர்கள் முதலியாகத்தான் பிறப்பார்

நித்தியமும் பூம்போட்டு நிறைவுடனே தெர்முதபேர்கள்
பாருலகோர் தான் புகழப் பார்ப்பானாய்த் தான் பிறப்பார்
நாள்தோறுந் தவஞ் செய்தவர்கள் நல்ல கவுண்டராய் பிறப்பார்
சில தர்மஞ் செய்தவர்கள் செட்டியாகத்தான் பிறப்பார்
மகாதர்மங் செய்தவர்கள் வடுவனாகத்தான் பிறப்பார்
நீதி முறை செய்தவர்கள் ரெட்டியாகத்தான் பிறப்பார்
சோக பதஞ் செய்தவர்கள் துலுக்கராய்த்தான் பிறப்பார்
மாத்துரைகள் செய்தவர்கள் மறவராகத்தான் பிறப்பார்
கல்வி மிக(க்) கத்தவனைக் கன்னனாகப் படையுமென்றார்
முத்தர்மஞ் செய்தவனை மொச்சனாய் படையுமென்றார்
கன தர்மஞ் செய்தவனைக் கவரையாகப் படையுமென்றார்
இப்படியே ஆணும் பெண்ணும் என் பெருமாள் படையுமென்றார்
பிறக்கும் உயிர் ஆயிரத்தொண்ணு பூவுலகில் படையுமென்றார்
இறக்கும் வுயிர் ஆயிரமும் இடை வெட்டும் பெருமாளே
இப்படியே உயிர் ஆயிரமும் இங்கே கொடு வாருங்கடா
தவறாமல் உயிர் ஆயிரமுந்தான் பிடித்து வாருமென்றார்

(உயிர்களைப் பிடித்தல்)

வகை வகையாய் உயிர் பிடித்து வடிவழகர் கொடு வாருவார்
அஞ்செழுத்து பஞ்சாச்சரம் அதிலுள்ள பேர்களையும்
எட்டெழுத்தி லிருந்தவரை இமைக்கு முன்னே பிடியுமென்றார்
நாலெழுத்து வேதமுறை நல்ல நல்ல துலுக்கரையும்
மோதி உயிர்தான் பிடித்து முற் கயத்தில் கட்டிடுவார்
சத்திய வேத முறை தனி லிருந்த பேர்களையும்
சங்கிலியைத்தான் அவிழ்த்துச் சடை நாயை கடிக்கவிட்டு
பாசங் கொண்டு தா னெறிந்து பதற உயிர் கட்டுவாராம்
என் பெருமாள் கணக் கெழுதி இவர் கையில்தான் கொடுத்தார்
துட்டன் கவுத்துக் காரருந்தான் துடியுடனே புறப்டுவார்
வர மழகர் கபாலக்காரர் மகிழ்ந்து நின்றார் வாசலிலே
இடை வெட்டு(ம்) பெருமாளும் இ(ல)ண சிங்க மிருபேரும்
மறுத்தும் உயிர் பிடிப்பதற்கு வாரார் காண் கயிலைவிட்டு
கயிலை விட்டு வழி நடந்து கறை(க்) கண்டனார் திருவருளால்
பூவுலகுதனிலே வந்து பிடிக்கிறாராம் உயிரையெல்லாம்
தர்மமது செய்தவரைத் தன்மையாகத்தான் பிடிப்பார்
பாவமது செய்தவனைப் பதறப் பதறப் பிடியுமென்றார்
வர்மமது செய்தவனை மருக உயிர்தான் பிடித்தார்
கொடுமை மிகச் செய்தபேரைக் குத்திக் கவுத்திக் கெட்டுவாராம்
துலுக்கரையுந்தான் பிடித்துச் செப்புக் குடந்தனில் அடைத்தார்
வேதக்காரர் தனைப் பிடித்து விரைந்து வலையில் அடைக்கிறாராம்
அஞ்செழுத்துப் பஞ்சாச்சரம் அவர்களையும் பிடிக்கிறாராம்

அன்னம் போலேதான் நடத்தி அழகு கயிலையிலே கொடுபோவார்
எட்டெழுத்துக் காரரையும் இடுக்கஞ் செய்து உயிர் பிடித்தார்
குத்தினாரே யீட்டியாலே குடதஞ் செய்து உயிர் பிடித்தார்
இப்படியே உயிரை யெல்லாம் இலங்குங் கயிலையிலே கொடுபோனார்

(நயினார் மீண்டும் கணக்கைச் சோதித்தல்)

அப்போது நயினாரும் அவர் கணக்குச் சோதித்தல்லோ
துலுக்கருட கணக்கதுதான் சோதித்தாரே நயினாரும்
பார் புகழுந் துலுக்கரையும் பண்ணியாகப் பிறவி செய்தார்
பெரும் பாவஞ் செய்தபேரை பெரு வியாதி கொள்ளு மென்றார்
வேத முறையா பேரை விதன மொருக்காலே செய்து
தரணியிலே அவரைத் தவளையாகப் பிறவி செய்தார்
காலத்தா லெழுந்திருந்து கதிரோனும் உதிக்கு முன்னே
முத்தமது தூராத மூதேவி யானவளை
சாணங்கிதான் காச்சித் தானவளை அடியுமென்றார்
விடிய கூறு யெழுந்திருந்து மேதினியி னுள்ளவர்கள்
காலு முகஞ் சுத்தி பண்ணாள் கன்னியர்கள் யெழுந்திருந்து
கெச்சுக் கெச் சென்றே திரிவாள் கிடந்த பாய் சுருட்டறியாள்
எண்ணும் வெறுமைக்காரி யென்று எழுதுவாராம் என் பெருமாள்
அழுக்கு மிகுதி உடுத்தவள்தான் அறக்கொடுமை செய்தவளை
துயிலதுதான் இல்லாமலே திரியுமென்றார் சீமையிலே
எல்லாக் கணக்கதுவும் எடுத்தெழுதி நயினாரும்
ஆறு சாஸ்திரம் நாலுவேதம் அறிவாக யிருந்தவர்கள்
நயினாரே யென்று சொல்லி நாள்தோறும் துதித்தவார்கள்
நல்ல பதம் பெறுவார்கள் நயினாரைத் தொழுதவர்கள்
எல்லோர்(க்)குங் கணக்கெழுதி என் பெருமாள் நயினாரும்
வடிவழகர் கவுத்துக்காரர் மன்ன னிடை வெட்டும் பெருமாள்
துடியுடைய கபாலக்காரர் சூராதி சூரன் அவர்
தேசமெல்லாம் புகழ் படைத்த சுவாமியுட பதந்தொழுது
நாள்தோறும் உயிர்பிடித்து நலம் பெறவே வருகையிலே

(எமதர்மன் காலன் சிவபெருமான் வருகைக்காகக் காத்திருத்தல்)

இம காலன் தான் கூடி ஈசு(வ)ரைத் தேடி வர
வழி மேலே காத்து நின்றான் வருமளவுங் காலன் படை
எமதர்ம ராசாவும் இம கால னானவனும்
மங்கை(ப்) பதியில் போனவர்தான் வருமளவுங் காத்து நின்றான்
காத்து நின்று இம காலன் கயிலையிலே போறதெப்போ
சடைத்து நின்றான் காலனவன் தன்னுடைய பேய்(ப்)படையும்

எமதர்ம ராசாவும் இவனு மங்கே காத்து நின்றான்
மங்கை(ப்) பதியில் போனவர்தான் மாது (உ)மையை மணமுகித்து
மணமுகித்துப் பரமசிவன் வழிமேலே வருகையிலே

(எமன் காலன் சிவனிடம் முறையிடல்)

கண்டானே காலனவன் கை(த்)தொழுதான் அந்நேரம்
எமதர்ம ராசாவும் இருகையில் தொழுது நின்றான்
தேவரே வுன் பதத்தைச் சிறப்பாகத் தொழுதிருந்தோம்
அசையாமல் தானிருந்தோம் அழகு கயிலாசமதில்
ஆதிபரன் நீர் போதினால் நாங்கள் அலைந்தோடித் திரிந்தோமே
அடக்குடக்கு அதிகாரமும் அதிய வரங் கொடுத்தீரே
துரத்தி விட்டார் மூபேரும் தூட்டரவர் யெங்களையும்
பறித்தார்கள் வலைகயறு பல்லையுமே தானுடைத்தார்
அடித்தவர்கள் தான் பறித்து அநியாயஞ் செய்தார்கள்
கன்னத்திலே தானடித்து கை(க்) கயறு பறித்துக் கொண்டார்
ஓடோடு யென்றடித்து ஓட்டத்திலேதான் விரட்டி
அடியும் பட்டு உம்மைத்தேடி ஆதிபரா ஓடி வந்தோம்
கயிலாசம் அவனாச்சி கற்பதுவும் அவனாச்சி
ஒருவருந்தான் யெதிரியில்லை ஓடிவந்தோம் வும்மைத்தேடி
மூன்று கோடி யூதாக்கள் மூவுலகில் உயிர் பிடிப்போம்
உயிரதுதான் ஆயிரமும் ஒரு கயத்தால் கொடுவாரான்
படைக்கிறார் உயிர் ஆயிரத் தொன்றும் பார வெள்ளி(க்) கயிலையிலே
எல்லோர்(க்)கும் படியளந்து இருக்கிறார் கயிலையிலே
உம்மையுமோ போகவொட்டான் ஒத்த வெள்ளி(க்)கயிலையிலே
பார்வதியைப் போக வொட்டான் பார வெள்ளி(க்) கயிலையிலே
குண்டணிகள் சொல்லுவானாம் கொடு முடியாய் காலனவன்
எம தர்ம ராசாவும் எடுத்துரைத்தான் குண்டணிகள்
அட்டா தூட்டிக் காரர்களை அக்னியி லெரிக்க வேணும்
எரியாத போனாக்கால் எங்களையும் போக வொட்டான்
பாரலகில் வுயிர் பிடித்துப் பாதமது தொழுதிருந்தோம்
தொழுதிருந்த யெங்களையுந் துரத்தி விட்டான் கயிலைவிட்டு
நாங்களிங்கே ஓடிவந்தோம் நாயகமே சிவனாரே
ஓடிவந்த யெங்களுக்கு உடையவரே பதந்தாரும்

(காலன், எமன் இருவரையும் அழைத்துக் கொண்டு சிவன் கயிலை வரல்)

என்று சொன்ன காலனையும் ஈசு(வ)ரனார் கூட்டி கொண்டு
மன மகிழ்ந்து பரமசிவன் வழிநடந்தார் கயிலையிலே
எம தர்ம ராசாவும் இம கால னானாவனும்
கூட வல்லோ வழிநடந்து குண்டணிகள் சொல்லுவானாம்

(சிவனை வரவேற்றல்)

சடையரனும் பார்வதியும் வாரா ரென்று சொல்லி
வடகயிலை வாசலிலே மகிழ்திருந்து கபாலமுத்து
கயிலையிலே வாராரென்று காத்திருந்த மூபேரும்
கயிலை வாசல் அலங்கரிக்கக் கட்டழகர் மனமகிழ்ந்து
மன மகிழ்ந்து கபாலக்காரர் வர்ணக் கயிலாசமதில்
குலை வாழை கொண்டு வந்து கோல(க்) கயிலையிலே நிறுத்துவாராம்
முல்லை யிருவாச்சி பிச்சி முகனையுடன் அலங்கரித்தார்
வாச்சி பிச்சி வெள்ள மாலை மதிக் கொழுந்து அலங்கரித்தார்
செண்பகமுஞ் சிறுபாளையும் சிவந்த மாலை அலங்கரித்தார்
அலங்கரித்தார் கயிலை தன்னை அழகு நல்ல மாலைகளால்
குட மாலை யலங்கரித்தார் கோலக் கயிலாச மதை
கொத்தவர்தான் வாராரென்று கும்பக் குடம் அலங்கரித்தார்
சாந்து பச்சை அதி மணமுஞ் சந்தணத்தால் அலங்கரித்தார்
அலங்கரித்தார் கயிலை தன்னை அதி மணங்கள் கமகமென
கம கமென வாசமது கரை கண்டனார் வாராரென்று
சாம்பிராணி கூடகம் சங்கையுள்ள கயிலையிலே
இலுமிச்சம் பழத்தினாலே எங்கும் நன்றாய் அலங்கரித்தார்
கமுகின் பூவை கொண்டுவந்து கயிலை வாசல் அலங்கரித்தார்
பழுக்காய் விரித்திடுவார் பாவைகளை நிறுத்திடுவார்
பரமசிவன் வாராரென்று பட்டாலே அலங்கரித்தார்
மேக வர்ணப் பட்டெடுத்து வித விதமா யலங்கரித்தார்
சூரிய காந்திப் பட்டதுவும் சிவந்தப் பட்டால் அலங்கரித்தார்
மாந்தளிர் பட்டதுவும் வகை வகையாய் அலங்கரித்தார்
பூந்தளிர் பட்டதும் பொன் பட்டால் அலங்கரித்தார்
நீல வர்ண பட்டால் நிமைக்கு முன்னே அலங்கரித்தார்
கழுகினு பூவாலே கயிலை யெங்கும் அலங்கரித்தார்
கூந்தப் பனை ஆளப்பனை குலை வாழை அலங்கரித்தார்
நவமணியுந் தோரணமும் நல்ல பட்டால் அலங்கரித்தார்
பட்டுப் பணி தோரணமும் பகளக் குலை நாட்டுவாராம்
பச்சை வயிடூரியமும் பதித்தாரே தூணதிலே
நவ ரத்தின முத்தெடுத்து நால் திசையும் அலங்கரித்தார்
திசையுந் திசைதோறுந் திருவிளக்கு யேத்துவாராம்
குத்து விளக்கம் யேத்திக் குடமாலை அலங்கரித்தார்
இப்படியே கவுத்துக்காரர் இதமாக அலங்கரித்தார்
கபாலக்காரர் கவுத்துக்காரர் கட்டழகர மூபேரும்
தூட்ரிடை வெட்டும் பெருமாளும் சூரன் கவுத்துக் காரருமாய்
மட்டில்லாத வரமழகர் வணங்கி நின்றார்கயிலையிலே
அப்போது பரமசிவன் அம்மையுமை பார்வதியும்

பார்வதியும் மன மகிழப் பரமசிவன் கயிலையிலே
வட கயிலை வாசலிலே வந்தாளே பார்பதியும்

(சிவன் பார்வதி மகிழல்)

பார்பதியும் வந்து நின்று பரமசிவனோடுரைப்பாள்
இப்படித்தான் சேவுகரை ஈசு(வ)ரே பிறவி செய்தீர்
ஒப்பில்லையே இப்படித்தான் உலகிலுள்ள தெய்வார்கள்
இப்படி நான் கண்டதில்லை ஈசு(வ)ரே மகாதேவா
கயிலை வாசல் கார்கச் சொன்ன கறை கண்டரும் மனமகிழ்ந்து
மன மகிழ்ந்த பரமசிவன் வந்து நின்றார் கயிலையிலே

(மகிழ்வோடு சிவன் கயிலையில் வீற்றிருத்தல்)

செந்தாமரை பூவதுவுஞ் சிறப்பை யெல்லாங் கண்டார் சிவன்
நந்தவனப் பூஞ் சிறப்பை நால் திசையும் பார்த்தனராம்
பூமணங்கள் கமகமென புரிசசையோன் மனம் கிள(ர்)ந்து
சாந்து(ப்) பச்சை கமகமென சங்கையுள்ள பரமசிவன்
எம தர்ம ராசாவும் இவர்களுமோ வந்து நின்றார்
காலனோட பரமசிவன் கயிலையிலே வந்தனராம்
கண்ட போது கபாலக்காரர் கறை கண்டரை(த்)தொழுது நின்றார்
கயிலை வாசல் அலங்கரித்த கபாலக்காரா வாடா யென்றார்
இப்படியே சேவுகரை இடை வெட்டும் பெருமாளே
உங்களை போல் சேவுகரை ஒரு விடமும் நான் காணேன்
அப்போது கவுத்துக்காரர் அடிவணங்கித் தொழுதுநின்றார்
தொழுது நின்ற சேவுகரே தூட்டர்களே கேளுமென்றார்
உங்களை போல் அதிசூரன் ஒருவரையும் நான் காணேன்
மன மகிழ்ந்து பரமசிவன் வானக் கயிலையிலே வீத்திருந்தார்
கயிலையிலே போயிருந்து கறை கண்டனார் மன மகிழ
மன மகிழ்ந்து பார்வதியும் வந்திருந்தாள் கயிலையிலே
கயிலையிலே வந்திருந்து கறை கண்டரும் மனம் மகிழ
மன மகிழ்ந்து யிருக்கையிலே வந்து கண்டார் நயினாரும்

(நயினார் கணக்கை ஒப்படைத்தல்)

அப்போதும் நயினாரும் அகமகிழ்ந்து சந்தோசமாய்
பூவுலகிலுள்ள தொரு புதுமையுள்ள நற்கணக்கும்
தர்மமது செய்தவர்கள் தான் கணக்குந்தான் கொடுத்தார்
பாவஞ் செய்த பேர்களுட பாவக் கணக்குந்தான்கொடுத்தார்
நித்தமது உண்ணுகின்ற நீசருட தன் கணக்கும்
நன்மை செய்தோர் கணக்கும் நாதனுட கைக் கொடுத்தார்
கொடுமை செய்தோர் தன் கணக்குங் கொடுத்தாரே நயினாரும்
படியளந்த கணக்கதுவும் பரமசிவன் கை கொடுத்தார்

அறக் கொடுமை செய்கின்றோர் அவர் கணக்குந்தான் கொடுத்தார்
எல்லாக் கணக்கதுவும் எழுதியேதான் கொடுத்தார்
அப்போது பரமசிவன் அதில் கணக்கு வாங்கியவர்
சோதித்தார் பரமசிவன் திருமா லயன் மன மகிழ

(சிவன் நயினாரைப் பாராட்டல்)

உன்னைப் போல் கணக்கருந்தான் உலகுதனில் கண்டதில்லை
அப்படியே மன மகிழ்ந்து அவரிருக்கும் வேளையிலே
கடைக் கண்ணால் காலனவன் கை காட்டித் தொழுது நின்றான்
அப்போது பரமசிவன் அக மகிழ்ந்து சந்தோசமாய்

(காவலர் மூவரையும் அக்னித்தூண் தழுவக் கூறல்)

வாருங்கடா மூவரும் வார்த்தை யொன்று கேளுங்கடா
அக்னித் தூணேழும் அழகு கபாலமுத்தே தழுவிவாடா

(கபாலக்காரன் காரணம் கேட்டல்)

அப்போது கபாலக்காரர் அவரேதோ சொல்லுவாராம்
அக்னியைத் தழுவச் சொன்னீர் ஆதி சிவா யெங்களையும்
என்பிழை செய்தோம் நாம் ஈசு(வ)ரரே தழுவச் சொன்னீர்
தாயை மித்தவர்கள் தகப்பனையும் அடித்தவர்கள்
கொத்தைக் குறைத்தவர்கள் கு(ல)ற மரக்கால் அளந்தவர்கள்
கற்பழித்துப் பிடித்தவர்கள் கனபாவஞ் செய்தபேர்கள்
பசுவை அடித்தவர்கள் பாவமது செய்தவர்கள்
சந்தியிலே தானிருந்து சாங்க வழக்குரைத்தவர்கள்
கற்புடைய மங்கையரை கருக மருந்திட்டவர்கள்
குத்தின வுலக்கை தன்னைக் கூரையிலே சாத்தினபேர்
அரைத்த குளவி தன்னை அம்மியின் மேல் வைத்தவள்தான்
தன் வீட்டைச் சாத்திவைத்து மறுவீட்டில் போயிருந்து
அல்ல லளக்குகின்ற அரும்பாவி யானவளை
பிள்ளை யழித்துண்ட தொரு பெரும் பாவியானவளை
அப்படியே பாவஞ் செய்தோர் ஆணும் பெண் ணானவரை
செப்புத்தூண் அக்னியில் தீத் தழுவி நீ ரெரிப்பீர்
அப்படியே நாங்களுந்தான் அறப்பாவஞ் செய்தோமோ

(சிவன் பதிலுரைத்தல்)

காலனையும் நீ யடித்துக் கை வலையும் பறித்தாயே
செவிடு செவிடென் றடித்துச் செப்புக்குடம் பறித்தாயே
எம தர்ம ராசாவை இடுப்படியாய் அடித்தாயே
ஒரு வரையுங் காணாமல் ஒக்கவுந்தான் துரத்தி விட்டாய்
கயிலாசங் காத்து நிற்கக் கறைகண்டனார் சொன்னதினால்
ஆரு மொருவரும் வாராமல் அழகு கயிலாசங் காற்கச் சொன்னீர்

ஒருவருந்தான் வாராமல் ஒக்கவுமே துரத்தி விட்டேன்
சொன்னதினால் அவர்களையுந் துரத்தி விட்டோங் கயிலைவிட்டு
உயிர் ஆயிரமும் பிடித்து வந்தோம் உம்முடைய பொருட்டாலே
ஆனதினால் யெங்களையும் அக்னியைத் தழுவச் சொன்னீர்
மாட்டோம் நாமென்று சொல்லி மன்னாட்டுக் கேள்பதுண்டோ
அல்லவென்று சொன்னதுண்டால் ஆதிபரா யேத்திடுமோ
எழுத்ததுதான் தப்பிடுமோ எழுதிவிட்டால் போய்விடுமோ
கட்டளைதான் வந்ததென்றால் கறை கண்டவரே வுன் செயல்தான்
நன்மை செய்தோ மானாக்கால் நாங்கள் பிழைத்து விடுவோம்
தீமை செய்தோ மானாக்கால் தீயதிலே யெரிந்து போறோம்
கை தொழுது கணக்கரையும் கயிலையிலே தொழுது நின்றார்

(நயினார் காவலரை வாழ்த்துதல்)

தொழுது நின்ற சேவுகர்(க்)குச் செவ்வதலிப் பூக் கொடுத்தார்
நகையுடனே கணக்கருந்தான் மாலை(ப்)பூ தான் கொடுத்தார்
தழுவி வா யென்று சொல்லித் தாமரைப் பூதான் கொடுத்தார்
அக்னித் தூண் தான் அனலது தான் தணிந்து விடும்
தண்ணீர் போல் குளுந்து விடுந் தழுவி யிங்கே வாருமென்றார்
என்னுட சேவுகரே இமைக்கு முன்னே வாருமென்றார்

(காவலர் மூவரும் அக்கினித்தூண் தழுவுதல்)

வாடா யென்ற சொல் கேட்டு வாடிவழுகர் தொழுது கொண்டு
தொழுது நின்ற சேவுகருந் தூணருகே நடத்து சென்றார்
நடந்து சென்று மூபேரும் நல்ல அக்னி சென்று கண்டார்
எழு நாழிகை தூரத்துக்கப்பால் எரியுகின்ற அக்னிதான்
அடுத்தவர்கள் செல்கையிலே அக்னியுங் குளுந்திடுமாம்
தீயதுதான் தணிந்திடவே சென்று கண்டார் மூபேரும்
தாமரையில் நீராவித் தண்ணீர்போல் குளுந்திடுமாம்
குளுந்தபோது அக்னியை(க்) கோபத்துடன் பிடுங்க வென்று
பிடுங்கி யேழு தூணதையும் வருங்கடலில் தானெறிய

(பெருமாள் சிவனைத் தடுக்கக் கூறல்)

எறிய வேணுமென்றபோது என் பெருமாள் தானறிந்து
மாயவனார் தானறிந்து மனமகிழ்ந்து யேது சொல்வார்
பிடுங்கிடுவார் தூணேழும் பொல்லாத மூபேரும்
எறியுமுன்னே சேவுகரை இங்கே வருத்து மென்றார்

(மூவரையும் சிவன் அழைத்தல்)

மாயவனார்சொன்னபோது வரவழைத்தார் பரமசிவன்
கட்டழகர் மூபேருங் கயிலையிலே வந்தனராம்
கயிலையிலே வந்து நின்று கறைகண்டரை தொழுது நின்றார்

(மூவருக்கும் சிவன் வரமளித்தல்)

தொழுது நின்ற கபாலக்காரர் சிவனைப் பார்(த்)தேது சொல்வார்
தீத் தழுவச் சொன்னீரே செய்த குத்த மென்ன வென்றார்
இம காலன் சொன்னதையும் இன்பமுடன் தான் கேட்டு
காலன் சொன்ன குண்டணிதான் கபாலமுத்தே நீ கேளு
அக்னியை(த்) தழுவச் சொன்னேன் அது மனதில் வையாதே
பெருமாளோடே சேவித்துப் போகுமென்றார் பூவுலகில்
அதிய வரந் தந்ததினால் அடியேனும் போவேனென்றார்
நினைத்த வரமுனக்கே தந்தோம் நீதியுள்ள வரமழகா
மாயவனாரோடே போக வரங்கொடுத்தார் யீசு(வ)ரனாரர்

(வரம் பெற்றுப் பெருமாளுடன் மூவரும் பூலோகம் புறப்படல்)

வரங் கொடுத்து மூபேர்க்கும் வருசை செய்தார் கயிலையிலே
கன வருசைதான் வாங்கிக் கபாலமுத்து தொழுது நின்றார்
துட்ட ரிடை வெட்டும் பெருமாளுந் சூரன் கவுத்துக்காரருமாய்
திருமாலயன் மனமகிழ்ந்து தெய்வ கயிலையிலே தொழுது நின்றார்
மகிழ்ந்து நின்று தொழுதவரை மாயவனார் யேதுரைப்பார்
சேவுகரே வாருமென்றார் திருவனந்தப் பெருமாளும்
அன்னேரங் கபாலமுத்து அடிவணங்கித் தொழுது நின்றார்
சேவுகராய் வைத்திருந்த சிறந்த நல்ல கணக்கரையும்
வடகயிலை வாசல் வந்து வணங்கி நின்றார் மூபேரும்
கயிலையிலே நாங்களுந்தான் காத்திருந்த மத்தனை நாள்
பூவுலகில் பெருமாளோடே போகச் சொன்னார் பரமசிவன்
ஆனதினால் பெருமாளோடே போகச் சொன்னார் பரமசிவன்
ஆனதினால் பெருமாளோடே அடியேன்கள் போகவேணும்
வையகத்தில் போறதற்கு மட்டில்லாத வரந்தாரும்
காலனை நான் வெல்லுவதற்குக் கனத்த வரம் வேணுமென்றார்
தடையறவே நான் வரவும் தாருமைய வரமென்றார்
பூவுலகில் பிணி தீர்க்கப் போக வரந்தாருமென்றார்
என்ன என்ன வரம் வேணும் ஈசு(வ)ரனார் திருவருளால்
நினைத்(த) தொரு நேரமெல்லாம் நீதியுடன் நானிங்கே வர
எவ்வேளை யானாலும் என்னிடத்தில் வாருமென்றார்

(பெருமாளிடம் வரம் பெறல்)

வாரு மென்று விடை கொடுக்க மனம் கிள(ர்)ந்து மூபேரும்
பெருமாள் பதந்தொழுது நின்று பொன்னுங் கபாலக்காரருந்தான்
பூவலகில் போக வென்று பொற்பாதந் தொழுது நின்றார்
தொழுது நின்ற மூபேரும் திருமாலிடம் வந்து நின்று
வந்து நின்று மூபேரும் வணங்கி நின்றார் பெருமாளை

அப்போது பெருமாளும் அவ ரேதோ சொல்லுவாராம்
ஒப்பில்லாத வரமழகா உங்களை(ப்) போல் சேவுகரை
இப்படி நான் கண்டதில்லை என்னுடைய சேவுகரே

(சீரங்கத்திற்குப் புறப்படல்)

சீரங்கத்தில் போகவென்று திரட்டுவாராம் படைகளெல்லாம்
மட்டில்லாத படையோடு மாயவ நாராயணரும்
திட்டெனவே படைதிரட்டித் தீரன் கயிலாசம் விட்டு
நட திடி மன (தி)டி படவே நாராயணர்தான் வரவே
நல் கெருடன் மீதேறி நாராயணர்தான் வரவே
கைக் கபாலமேந்தி வரக் கால் சிலம்பு கலீரிடமே
பொன் கபாலமேந்தி வரப் புறப்பட்டாரே பெருமாளுமே

(பூத கணங்கள் உடன் வரல்)

சேத்திர பாலன் சங்கிலி(ப்) பூதங் கெச்சிதமாய் பின்னே வர
பூதங்கள் குடை பிடிக்கப் பெருமாளும் நடந்துவர
சங்கீதம் பாடி வரத் தாதியர்க ளாடி வரத்
ஆரத்தி யேந்திவர ஆடுவாராந் தெய்வ ரம்பை
தெய்வ ரம்பை ஆடிவரத் திருமாலும் நடந்துவர
நடந்து பெருமாள் வரவே நாகச் சரம் பாடிவர
நடதிடி மன(தி)டி படவே நல்ல தெய்வார் சேவிக்கவே
வெள்ளி கயிலாசம் விட்டு வீர நெடுமால் வரவே
முத்துக் குடை நீலவர்ணம் முகனையுள்ள குடை நடத்தி
பச்சைக் குடை தானிகழ்த்தப் பவளக்குடை நடத்தி வர
பொன்னாலே குடை பிடிக்கப் பெருமாளும் நடந்துவர
நடந்துவரப் பெருமாளும் நல்ல தெய்வார் குரவையிட
குரவை யொலி மொழு மொழனக் கோவிந்தருந்தான் வரவே
தாமரைப் பூ வரமழகர் தங்கக் கபாலமேந்திவர
பொன்னாலே காபலமது பெருமாள்க்கு யேந்திவர
ஏந்திவரப் பொன்கபாலம் ஈசுவரனார் திருவருளால்
கபாலக்காரர் கவுத்துக்கரர் கட்டழகர் மூபேரும்
திரண்டல்லவோ மூபேருந் திருமால்க்கு முன்னே வர
மாபூதஞ் சேவிக்கவே மாயவருந்தான் வரவே

(சீரங்கம் நோக்கிச் செல்லுதல்)

பரபரவென்று வழி நடந்து பள்ளிகொண்டார்தான் வரவே
கயிலைவிட்டு வழி நடந்து கறை கண்டனார் திருவருளால்
இருட்டுறைந்தான் நாடதிலே என் பெருமாள் தான் வரவே
படையும் படைத்திரளும் பாளையமுந் தான் வரவே
தூட்டர் வரம் பெத்தவர்தான் தூடியு(ல)டைய கபாலமுத்து

இருட்டுறைந்தான் நாடதிலே ஏந்துவாராங் கபாலமதை
கபாலமது யேந்திவர கன பூதஞ் சேவிக்கவே
கடந்து வழி நடந்தல்லவே கரிய நெடுமால் வரவே
பேயுறைந்தான் காடும் விட்டுப் பெருமாள்படை நடந்துவர
கல்லாறு கயத்தாறு காவேரி பூவாறும் விட்டு
ஆறும் விட்டுப் பெரும்படை தான் அணி அணியாய்தான் வரவே
ஆரத்திக ளேந்திவர அதில் நெடுமாலவர்க்கு
பொன் கபாலமேந்திவர பெருமாளைச் சூழ்ந்துவர
மணலாறு பூவாறு வந்து கண்டார் பெருமாளும்
பூவாறு தனை கழித்து(ப்) பெருமாள் படை சூழ்ந்துவர
தொண்டர் நாடு துளசி நாடு துளசி மணி விளையும் நாடு
கண்டல்லவோ பெருமாளும் கனபடைகள் நடத்திவர
தூட்டர் பொன்னுங் கபாலமுத்து சேவுகர்கள்தான் வரவே
சுருளி யென்ற நாடும் விட்டுச் சுவாமிபடை நடந்து வர
தடதடென்று படை நடத்தித்தான் கோசல நாடும் விட்டு
விலாடருட சீமை விட்டு வழி நடந்தார் பெருமாளும்
முகலுசாய்வின் சீமைவிட்டு மொழுமொழெனப் படை நடத்தி(த்)
தட தடெனப் படை நடத்தித் தானடந்தார் மாயவரும்
சீரெங்கப் பட்டணமும் சிறப்பதுவுங் கண்டனராம்
வர்ண மணித் தெருவதிலே வந்தனராம் மாயவரும்
வருசையுள்ள பூங்காவும் வளங்களெல்லாம் கண்டனராம்
வேண்டு(ம்) மன மகிழ்ந்தல்லவோ கரிய நெடுமாலவரும்
அகமகிழ்ந்து சந்தோசமாய் அழகு சீரங்கத்தில் வீத்துக் கொலுவிருந்தார்.

(விருத்தம்)

கபாலக்காரர் கவுத்துக்காரர் கட்ட ழகர் தன் கதையை
இன்பமுத்துக் கேட்டோரும் எழுதி நன்றாய் படித்தோரும்
ஆல்போல் தழைத்து அருகதுபோல் வேரூன்றி
மூங்கில் போல் அன்ன சுத்தம் முகியாமல் வாழியவே.

(முற்றும்)

(கதைப்பாடலை இயற்றிய புலவர் சுடலை முத்து நாடார்.)

கபாலக்காரன் போர்க்கதை

(ஓலைச் சுவடிப்பதிப்பு)

(திருமலாபுரம் பொ.உடையார் நாடார்
அவர்களிடமிருந்து
ஓலைச்சுவடி பெறப்பட்டது.)

(காப்பு)

சீர் பெருகும் வெள்ளியங் கிரியில் வளர் ஈஸ்பரனே
சிறுபிறையோடு கொன்றை தும்பை(யை) அணிந்தவா
பார் பெருகும் நற்றமிழைக் குறைத் தெளிய யான்
பாடிடக் காவிய இவ்வுரை பகரவா
கார் மருவும் இவ்வுலகில் தேனும் தினைமாவுடனே
கடலை விடலை காராமணி பயறு எள்ளுருண்டடை விளம்பவே
வீர்ரான செங்கையால் பாரதத்தை எழுதிய
வீரப்பன் எனக்கருள் புரிய வா வினாயகனே.

(விநாயகர் துதி)
(வேறு)

உதவுவாய் யான் மகிழ
உமை நல்லாள் திருமகனே
உபதேசம் எமக்கருள வேணுமே
உண்மையுடன் உன் கதையை யான் பாட
எத் தலமும் கீர்த்தி வெற
என் நாவில் நீ வாராய்
தக்கிட தரிகிட தோம் தாமென(ச்)
சாற்றுகிற மந்திரத்தினால் அல்லோ
அப்பமோடு தோசை பயிர்
அவல் பொறி பழம் நெய்
ஆவின் பால் சர்க்கரை எள்ளுருண்டை
ஆனதொரு தேனும் பாலும்
அழகான மாங்கனியும் படைப்பேன்.

(முருகன் துதி)

வீராதி வீரனே வீரமயில் வேலவனே
வேண்டும் கதை எனக்கருள வருவாய்
தொல் புவியில் அடியோன் கதை வாசிக்க
அடியேனைச் சூழ்ந்த வினையாவும்
அகன்றோடிப் போக வருவாய்
ஆதியே செந்தூர் கந்தா ஆறுமுக வடிவேலா.

(மரக்காயர்களின் ஆட்சிமுறை)
(வேறு)

நாடான தொரு நாட தீலே
நல்ல கீழக்கரை ஆனதிலே
தேசமானதோர் தேசத்திலே
சிறந்த கீழக்கரை நகர் ஆனதிலே
ஆறிலொரு கடமை வாங்கி
அசையா மணியும் கட்டி
கூலிக் குறை ஒன்றும் இல்லாமல்
குவலயத்தை ஆண்டுவராரர்
குட்டியாலி மரக்கியானும்
குன்னாலி மரக்கியானும்
துளாயிரத்து தொண்ணூற்று ஒன்பது கப்பல் வைத்து
துலுக்கர் கூட்டமும் ஆண்டுவாராரர்

(ஆயிரமாவது கப்பல் செய்ய விரும்புதல்)

ஆண்டு வருகின்ற சமயத்திலே
அழகு குட்டியாலி மரக்கியானும்
ஒத்த மரத்திலே தோணி வைக்க
உறுதி பூண்டானே மரக்கியானும்

(மாந்தையரை அழைத்து வரச் சொல்லுதல்)

மரங்கள் வெட்ட வேணுமென்று
மாந்தையரை வரவழைத்தார்
அழைத்து வரவேணும் என்று
அனுப்பினானே தூதுவனை
தூதுவனும் அது சமயம்
தூரிதமுடன் ஓடிவந்து
கம்மாளர் முகம் பார்த்து
கடிந்து அவன் ஏது சொல்வான்
தழைத்த புள்ளி மரக்கியானும்
சடுதியிலே வாருமென்றார்

(கப்பல் கட்டும் தொழிலாளரை அழைத்து வருதல்)

தூதுவனும் இவை உரைக்க
தூரிதமுடன் புறப்பட்டு
சிறு உளியும் பெரு உளியும்
சீரான முழக்கோலும்
நேரிட்டு வெட்டுதர்க்கு
நேரான கோடாரியும்

வாச்சிகளும்தான் எடுத்து
வாராரே ஆசாரிமார்
அவர் சிவனை தியானித்து
திருநீறும் தான் அணிந்து
தீதில்லா பண்ட மெல்லம்
சிறந்த கப்பலிலே ஏற்றுவாராம்
பெருமிதமாய் கப்பலிலே
வேண்டும் பண்டங்களை ஏற்றுவாராம்.

(பயணத்திற்கான பொருட்களைக் கப்பலில் ஏற்றுதல்)

(வேறு)

ஏற்றினார் நெல் அரிசியும் பாலையும்
இடிக்க நல்ல உரலும் உலக்கையும்
பாங்குடனே நல் உண்ணும் கலங்களும்
பானைகளும் பண்பான அகப்பையும்
வேறு அறைக்குள்ளே தண்ணீரும் ஏற்றினார்
தலை உருட்டும் மதுக்களும் கூடவே
பொங்கலும் கருவாட்டுப் பொதிகளும்
புளி மிளகு உப்பு கூடவே ஏற்றினார்
கூடவே சின்னக் குளவியும் அம்மியும்
கெம்பிறாவுஞ் சர்க்கரையு மேற்றினார்
நாட்டில் உள்ளதோர் நல் விருச்ச பழங்களும்
நல்லதோர் வெல்லம் கரும்புடன் ஏற்றினார்
மேக வர்ணப் பட்டுப் புடவையும்
மிக்கத் தோணியில் துப்பாக்கியும் ஏற்றினார்
சித்திரமாகப் பெட்டியும் பேழையும்
துய்ய குருத்தோலை பெட்டியும் ஏற்றினார்
பேழைகள் நிரம்ப நிறை நிறையாகவே
பேணிக் கருப்புகட்டியும் ஏற்றினார்
கப்பித்தானுக்குக் கொடுக்க வேணும் என்று
கருதி வருக்கைப் பலாப்பழம் ஏற்றினார்
செப்புடன் வெத்திலை பாக்குச் சுண்ணாம்பும்
தேய்க்கத் தலைக் கெண்ணை பிண்ணாக்கு மேற்றினார்
புண்ணாக்கினோடு கரும் புளி சீயக்காயும்
பேணியே தாழிப் பொடிகளு மேற்றினார்
எண்ண வொண்ணாத சரக்குகளேற்றினார்
இப்போதெனக்கு உரைக்கத் துலையாது
தண்ட வேளென்னுந் தனி தற்பரனோடே
தண்டு வலிக்கச் சீவராசிகளை ஏற்றினார்
பண்டு பண்டு வலு சாத்திரக்காரர்

படித்தபேர் தங்களைப் பண்புட னேற்றினார்
உருவதுக்குத் தடங்கல்கள் வாராமல்
உறங்காமல் சுக்கான் பிடிக்கின்ற பேர்களைக்
கருதி யனைத்தையுங் கட்டு மட்டாகக்
கட்டு மட்டாகவே கூடு போலேற்றினார்
படைகள் வந்தாலு மொர வேணுமென்று
பார் புகழ் நல்ல குழலைத் திருக்கினார்
உன்னியெ நல்ல மருந்து கல் லுருண்டைகளும்
ஒக்கவே சேர வுரு மீதிலேற்றினார்

(வியாபாரத்திற்கானப் பொருள்களை ஏற்றுதல்)

(வேறு)

ஒப்பமில்லா வீரவாளிப் பட்டுகளும் சேர்த்து
உற்ற கொல்லப் பட்டாடைகளு மேற்றி
சொப்பனமானதோ ரிந்திரக் கோமேதகத்தோடே
சிறந்த நல் நித்திலங்கள் சவ்வாதுக் குப்பியோடே
பாடி சற்றே விளையாடி வரும் பாங்கியர்களோடே
பார்த்து நல்ல குறிகள் சொல்லும் பாங்கியரும்
ஓடி வெட்டும் படைத் தலைக் காரரும்
உற்தொரு சரிகையும் வஷ்த்திரமும்
இருகட்டான சரிகை பரிவட்டமும்
இருவாச்சியும் கொத்துமல்லிகைப் பூக்களும்
உற்றதோர் திரிசம்பு கடுதாசி
உள்ள கூனிரவங்குச் சமுதாடும்
நல்ல பூம்பட்டு சந்தனக் குப்பியும்
நல்லதாக யெடுத்தங்கே யேற்றினார்
ஊனமற்றதோர் பீங்கானில் பாணியும்
ஒக்கவே கடுதாசிக் கட்டுகளும்
பானம் யேத்தியே வைத்தார்கள் பாங்கியர்
பருத்த தொரு கருப்புச் சந்தனமும்
தினம் வாராமல் வுப்புக் கெந்தங்களும்
தினுக்கான வெரியன் மருந்தும்
எண்டிசையும் புகழ் மலர்க்காவிலே
ஏறி வெட்டிடுஞ் சந்தனக் கட்டையும்
வேண்டானதோர் நட்டு வனக் கொம்பதும்
வெள்ளியும் பொன் தகடு மெழுத்ததும்
உண்டுமே சுகிக்கக் கொப்பரையதும்
உன்னிதமாக யோத்தினார் கப்பலில்
ஏடு சேர்க்கிற கடுதாசிப் பொஸ்தகம்
எண்ணை வார்க்கிற குப்பியன்னீர் செம்பு

ஒடுங்கப்பலில் ஆடுமாடுகளும்
உள்ள தீவனப் பன்றியுஞ் சாவலும்
கூட யேற்றினார் கும்பழ மாசியும்
குமர லீகிடு லீசரியானதும்
அய்ய மிட்டிடு மாண்டிக்கு முத்திரை
அரிய முத்திரை முந்திரிக் கைப் பழமும்
கொய்ய நன்றா யிணங்கி யீடேத்திடும்
கொக்கமூலி நிறுவேலிப் பூக்களும்
நன்றி செய் யமிர்தமுஞ் சீனியும்
நாடரோமக் கத்தி தேய்க்குங் கல்லும்
நின்ற னோயாளிக்குக் கெருடப் பட்சையும்
நெல்லிக் காய்க் கெந்தம் வெள்ளைப் பாசாணமும்
என்றும் நல் மணம் வீசுங் கதம்பமும்
இதரப் பொடியின் பச்சைக் கல்லுடன்
ஓசையாலே புனுகு ச(வ்)வாதுடன்
ஒக்க வெள்ளைப் பட்டு நூல் கட்டுகள்
நாக யீழத்து யானைக் கொட்ட முத்தும்
நல்லதோர் பச்சைக் கல்லும் ஏற்றினார்
மேலும் நீலம் ஆனதோர் கருப்பு மரகதமும்
பாங்குடனே நல்ல பாரக்கல்லும் ஏற்றினார்
நகைப் பெட்டியும் வைரப் பெட்டியும் ஏற்றினார்

(மரம் வெட்ட கப்பல் புறப்படுதல்)

எட்டுத் திசையும் உள்ளதோர் சரக்கையும் ஏற்றினார்
ஏற்றினார் பின்னும் கப்பித்தான் சொல்லுவான்
பண்டு பண்டு படை வெட்டும் சேவகர்
பத்துநூறு உருவில் ஏற்றினார்
தண்டி யொத்த பீரங்கி நூறாயிரம்
தானே கப்பலில் ஏற்றியே கப்பித்தான்
சரசமாகவே கப்பித்தான் அன்னேரம்
சந்தோரமாக உருவிலே கொடிகட்டி
வீர தூனோடு கொடியும் இலங்கவே
வெற்றியானதோர் விருதும் முழங்கவே
உற்றதோர் வெகு வாண வெடிகளும்
உலகம் எங்கும் அதிரவே முழக்கினார்
அரகரா அப்பனே துணை என்று
அன்பினோடு அந்த கப்பிதான் சொன்னானே
வரிசையாக காற்றும் அடித்திட
மலைநாடு நோக்கியே பாய்மரம் கொடு போனார்.

(கப்பல் பாட்டு)

(பாட்டு)

ஏல ஏலோ ஏலேலோ எலலை ஏலோ
ஏலலை ஏலோ ஏலேலோ எலலை ஏலோ
சீர் பெருகும் சீர் பெருகும் கண்ணநல்லூர்
சீர்காழியார் சீர்காழியார் பதியிடமாம்
பேர் பெருக பேர் பெருக இசைத்த கப்பல்
பிறந்த கதை பிறந்த கதை நான்பாட

(சரளி)

பூரணமாகவே உலகமெல்லாம் அமர்ந்த
பூவிடம் அமர்ந்த பிரம்மாவிடம் அமர்ந்தாய்
வித்தை தந்தென்னை புத்தி தருவாயே
வீரமான பிள்ளையார் துணையுமாம் சுவாமி
ஏல ஏலோ ஏலேலோ எலலை ஏலோ
எலலை ஏலோ எலேலோ எலலை ஏலோ
சிறந்த நல்ல சிறந்த நல்ல சரப்பளியும்
சிங்கார சிங்கார கொலுசுகளும்
வாட்ட மற்ற வாட்ட மற்ற கப்பலிலே
வந்துரைப்பார் வந்துரைப்பார் செய்தவொன்று.

(கப்பல் கடலில் பயணம் செல்லுதல்)

(சரளி)

வர்ணமது மேலிடம் கட்டி பட்டமு மாகவேதான்
வைரமோ(டு) கன மாலையும் பொன்னரிய மாலை(யும்)
மகாதேவி பூசைக்கு ஆரண பரி பொங்கலும்
வல்ல பரியங்களும் வருகுதையா பாரீர் சுவாமி
ஏல ஏலோ ஏலேலே எலலை ஏலோ
எலலை ஏலோ ஏலேலோ எலலை ஏலோ
இதம் பெரிய இதம் பெரிய கப்பலிலே
இன்பமாக இன்பமாக இவர்கள் எல்லாம்
சாதுகமாய் சாதுகமாய் சரக்கு(க்) கப்பல்
தாங்கியல்லோ தாங்கியல்லோ வருகுதையா.

(சரளி)

விரைவாகவே கப்பலில் ஏற்றியே பின்னும்
வைரமோடு கோமேதகம் மாணிக்கம் நீலம்
இதம் பெரிய கப்பலில் பாரங்கள் ஏற்றியே

இழுத்து வலித்து இதமுடனே வருகுதையா சுவாமி
ஏல ஏலோ ஏலேலே எலலை ஏலோ
எலலை ஏலோ ஏலேலோ எலலை ஏலோ.

(பாட்டு)

வார வழி வார வழி பிசகாமல்
சூறாவளி சூறாவளி அடிக்காமல்
மண்டலத்தில் மண்டலத்தில் விலை மதிக்கும்
வர்ணமணி வர்ணமணி சீன(ப்)பட்டு

(சரளி)

சுத்தி உடுத்தும் கிளி மயில் பட்டு
சொல்லி மகிழ்ந்திடும் பீதாம்பர(ப்)பட்டு
சரிகை ஒட்டியாணம் தங்க மணிச்சேலை
சாத்திய பீதாம்பரம் ஏற்றியே வருகுதையா கப்பல்
ஏல ஏலோ ஏலேலே எலலை ஏலோ
எலலை ஏலோ ஏலேலோ எலலை ஏலோ
வங்களா வங்களா கொச்சி மட்டும்
வளம் பெரிய வளம்பெரிய கப்பலது
சிங்களவர் சிங்களவர் ஏறிவரும்
சீரான சீரான கப்பலது.

(சரளி)

எக்காளம் முழங்க சுக்கானை(த்) திருப்பி
எடுத்துமே நங்கூரம் கப்பலில் வைத்து
தாராளமாகவே தனியாய் எடுத்து(க்)
தட தடவென்று வருகுதையா கப்பல் சுவாமி
ஏல ஏலோ ஏலேலே எலலை ஏலோ
எலலை ஏலோ ஏலேலோ எலலை ஏலோ
கப்பலிலே கப்பலிலே கயிற் ஆட
கடும் விரைவாய் கடும் விரைவாய் விரைந்திடவே
கொங்கணவர் கொங்கணவர் கொழும்பு கொச்சி
கொடி மரம் போல் கொடிமரம்போல் வந்திடவே.

(சரளி)

வங்காளமுள்ள மாதர் ஒருபுறம்
வாச்சியம் மழுவுடனே மாதர் ஒருபுறம்
சிங்கார குறிகள் சொல்லும் மாதர் ஒருபுறம்
சிரித்து விளையாடியே வருகுதையா கப்பல் சுவாமி
ஏல ஏலோ ஏலேலே எலலை ஏலோ

எலலை ஏலோ ஏலேலோ எலலை ஏலோ
விறகு தண்ணீர் விறகு தண்ணீர் கரியுடனே
விதம்படவே விதம்படவே மிஞ்சிடாமல்
தனி(த்)தனியாய் தனி(த்)தனியாய் வேலை செய்யும்
தண்டக் காரர் தண்டக்காரர் ஒருபுறமாய்.

(சரளி)

சிக்கனமாகவே கப்பலது திசைகண்டோம் என்று
சரியே ஒர முகமாய் விசையது கொண்டு எழும்பியே
குடி கொண்ட தலமதுவிட்டு அகன்று
கோலத்துடன் கப்பலது வருகுதையா சுவாமி
ஏல ஏலோ ஏலேலே எலலை ஏலோ
எலலை ஏலோ ஏலேலோ எலலை ஏலோ

(கப்பல் தூத்துக்குடியை அடைதல்)

(பாட்டு)

கப்பலில் சரக்கு ஏற்றியது
கரைவிட்டு உள் நோக்கி வருகுதையா
பனை யுசர அலைகளையும்
பகுத்து வெட்டியது வருகுதையா
பூதக் கண்ணாடி வைத்துப்
பிரபலமாய்ப் பார்த்திடவே
தூரத்துக் கப்பல் எல்லாம்
துணையாக வருகுதையா
பாதாளம் அது வரைக்கும்
பார்த்து நிற்கும் மச்சங்களும்
தூர நின்று பார்க்கும்போது
தூத்துக்குடித் தெரியக்கண்டார்
ஊர் முழுவதும் தெரிய(க்)கண்டார்
உற்ற ஆழிக்கரையில் வந்தார்
குட்டியாலி மரக்கியானும்
குன்னாலி மரக்கியானும்
சாம கறி சமைக்க வென்று
சமையல்காரன் தனை அழைத்தார்
சமையலுக்குத் தகுந்த மட்டும்
தட்டு முட்டுச் சாமான் வேணும்
இருந்து தகையார வேணும்
நாளைக்குப் போவோம் என்றே
நங்கூரத்தைப் போடும் என்றான்

அரிசி கறி சமைத்து உண்டு
அதில் இருந்து தகையாறி
மறுநாள் விடியுமுன்னே
வாய்த்த கப்பல் நடத்துவாராம்

(வீரபாண்டியன் பட்டணம் காணுதல்)

சூறாவழி காற்று போலே
துரிதமுடன் கப்பல் ஓடிவர
அஞ்சாமல் தெற்கு நோக்கி
அதிவிரைவாய் வருகுதையா
பிணை பொருந்தும் மரக்கியானும்
புன்னை(க்) காயல் தெரியக் கண்டான்
உல்லாசப் பெருமிதமாய் அவர்
ஒரு மிக்க பாடி(க்) கொண்டார்
மூலைக் காற்று அடிக்கும் போது
முழிப்பாக இருந்து கொண்டார்
கடும் விரைவாய் வாரபோது
காயல் பட்டிணம் தெரிய(க்)கண்டார்
விடிய மீண்டும் வாரபோது
வீரபாண்டி பட்டணம் தெரிய(க்)கண்டார்
அந்த ஊர் காரைதனிலே
அழகுடனே வாரபோது
குட்டியாலி மரக்கியானும்
குன்னாலி மரக்கியானும்
கண்ணுறக்கம் வருகுதென்று
கருத்துடனே ஏது சொல்வான்
இதிலே தகையாற லாமோ
இன்னும் வழி போகலாமோ
என்றுரைக்கும் வேளையிலே
ஏது சொல்வார் ஆசாரிமார்
வழி மெத்த இருக்குதையா
வாய்த்த மலையாளம் போவதற்கு
இன்னும் இரண்டு ஊர் கடந்து
இளைப்பாறுவோம் என்றுரைத்தார்

(திருச்செந்தூர் காணுதல்)

திடமுடனே வாரபோது
திருச்செந்தூர் தெரியக் கண்டார்
அரனார் திருமகனே
ஆறுமுக வேலவரின்

கடற்கரையில மண்டபமும்
கற் கோட்டை(யும்) தெரியக் கண்டார்
அரனார் திருமகனே
ஆறுமுக வடிவேலவா
மரம் வெட்டி வருமளவும்
வடிவேலா உன் துணைதான்

(தோட்டளவன் பட்டணம் கண்டு கப்பலை நங்கூரமிட்டுத் தங்குதல்)

வேகத்தோடு கருத்துடனே
விரைந்தோடி அவர் வாரார்
ஆடிப் பாடி வருகையிலே
ஆலந்தலை தெரியக் கண்டார்
உல்லாசமாய் வாரபோது
உற்ற குலசையது தெரிய(க்) கண்டார்
கண்டார் குலசை(ப்) பட்டணத்தை
கம்மாளர் எல்லோரும்
கை கால் தடுமாறாமல்
கடலில் நங்கூரம் போடு(ம்)என்றார்
தோட்டு அளவன் பட்டணத்தில்
சோறு பொங்கித் தானம் உண்டார்
சீனத்து(க்) கண்ணாடி தின்பண்டம்
சிறப்புடனே ஏற்றிக் கொண்டார்
சற்றுநேரம் தகையாரி
சட சட (வெ)ன்று எழுந்திருந்தார்
நேரம் விடிகாலம் ஆனதிலே
நங்கூரம் தூக்கிவிட்டார்
நிமிர்ந்து சத்தமிட்டு நேர் நோக்கி
நிறைந்த பாய்விரித்து(ச்)சென்றார்

கப்பல், பெரிய தாழை, உவரி ஆகிய ஊர்களைக் கடந்து செல்லுதல்)

(வேறு)

கப்பல் பாரம் ஏற்றியல்லோ
கரை கடந்து வருகுதையா
மட மட என்று வாரபோது
மணப்பாடு தெரியக்கண்டார்
மாவீரன் உள்ள சூரன்
மாமரமாய் முளைத்த(த்) தலம்

வடிவேலர் பார்வை யுள்ள
வண்ண மணப்பாடு தெரியக்கண்டார்
பிரபலமாய் வாரபோது
வரியதாழைத் தெரியக் கண்டார்
கொம்பன் சிறா பாய்வதுபோல்
கூடுதாழைத் தெரியக்கண்டார்
கப்பலிலுள்ள முதலாளி
கண்ணாடி பார்த்துவர
கலகம் வருவது தெரியாமல்
கைதட்டிப் பாடி(க்) கொண்டார்
எடுத்தேறி வருகையிலே
இடது கண் துடிக்குதல்லோ
நல் குறியோ பொய்க் குறியோ
நலம் பலமுந் தெரியுதில்லை
கெடுமதி கண் தோன்றாமல்
கெருவிதமாய் வருகிறாரே
கொடி முடி திரும்பு முன்னே
சுவட்டப்பனைத் தெரியக் கண்டார்
இன்று தங்கிப் போவதற்கு
ஏற்ற தலம் யிது வல்லவே
கெட்டாலும் பட்டணத்தில்
கீழிறங்கிப் போகவேணும்
மனதிலே நினைத்தபடி
வருகுதல்லோ கப்பலது

(உவரிப் பதியைக் கண்டு தங்குதல்)

ஒரு மிக்க வாரபோது
உவரி அய்யன் கோயில் கண்டார்
ஊரழகும் பேரழகும்
உவரிப்பதி தலத்தழகும்
செல்லப் பிள்ளையாய்ப் பிறந்த
செம்பு லிங்கய்யன் புகழைக்
கண்டு களி கூற வேணும்
காணிக்கைகள் போடவேணும்
இந்தத் தல மிறங்காவிட்டால்
எந்தத் தலங்காணப் போறோம்
செல்லப் பிள்ளை தம்பிமாரே
சில வெடுத்துப் போக வேணும்
நங் கூரமதி லிறக்கி
நடந்து வந்தா ராயத்தில்

அய்யனார் தன் தனக்கும்
அந்தோணியார் கோயிலுக்கும்
ஏலுமட்டும் காணிக்கைகள்
இதம் பெறவே நடத்தினரே
நல்ல தண்ணீர் கிணற்றில் வந்து
நல்ல தண்ணீர் கோதிக் கொண்டார்
ஊர் வந்து சிலவெடுத்து
உணவுண்டு உறங்கிக் கொண்டார்

(மீண்டும் கப்பல் பயணமாதல்)

கிழக்கு வெளுக்கு முன்னெழுந்து
கிருபையுடன் தண்டு வலித்திடவே
நாளைக் கடத்தாமல் போக வென்று
நடத்தினார் கப்பல் விரைவுடனே
உம்பர்கோன் தனை வணங்கி
உற்ற கப்பல் வாரபோது
கருமிளகைப் பயிர் ஆக்கிய
காரி அய்யன் கோயில் கண்டார்
துரிதமுடன்தான் இறங்கி
தொழுது அவர் மீண்டும் வாரார்
வரிசையுடன் வாரபோது
வன்னியடி தலமும் கண்டார்
நலமுடனே வாரபோது
நவல்பதி தெரிய(க்) கண்டார்
நாச்சியாரின் ஆலயமும்
நல் வேம்பும் தெரியக் கண்டார்
அம்மையாரை(த்) தான் வணங்கி
அழகு கப்பல் வருகுதையா
மாதாவை அடி பணிந்து
மரக்கியானும் அவன் வாரான்
அசைந்து கப்பல் வாரபோது
ஆத்தியடி தலமும் கண்டார்
சரசத்துடன் வாரபோது
சடவடலி தெரிய(க்)கண்டார்
எட்டி நின்று பார்க்கும் போது
ஏழுவடலியும் தெரிய(க்) கண்டார்
பாசத்துடன் பார்க்கும் போது
பாட்டுவாக் குருசடி தெரிய(க்)கண்டார்
நாட்டாறு பொழி முகம்
நலமுடனே தெரிய(க்)கண்டார்

வத்துவதும் பெருகுவது
வளம் பொருந்தும் வாவுகளும் கண்டார்
அலையின் மேலாக(க்) கப்பலது
அசைந் தாடிவரும் போது
தேரின் அலங்காரம் போலாக
தேர் புளியும் தெரிய(க்) கண்டார்
கூட்டமிட்டு வாரபோது
கூத்தன்குடி தெரிய(க்) கண்டார்
கும்பினியா ருப்பளமும்
கூத்தங்குடி நகரும் கண்டு
ஏசுநாதர் கோயில் விட்டு
இளம்பனை ஆறும்விட்டு
இசைந்த கப்பல் வாரபோது
இடையநேரி தெரிய(க்) கண்டார்
அசைந்து கப்பல் ஓடிவர
அருசிக்கரை தெரிய(க்) கண்டார்
ஏற்றுமதி செய்வதற்கு
ஏற்றதலம் காண(ப்)போறோம்
வேகத்துடன் வாரபோது
விஸ்வாமித்(தி)ர தலம் தெரிய(க்) கண்டார்
நீதிமொழி தவறாமல்
நேர் நடத்தும் அரிச்சந்திரன்
குறை தவத்தை(ப்) பறி கெடுத்த
கோசிகனார் ஆலயத்தை
உசந்தட்டிலே ஏறி நின்று
உல்லாசமாய் வணங்கி(ச்) சென்றார்
மேற்கு நோக்கி கப்பலது
விடியுமட்டும் வாரபோது

(கப்பலில் பயணித்தவர்கள் சோர்வடைதல்)

தம்பி குட்டியாலி மரக்கியானே
தக்க வார்த்தை யொன்று சொல்ல(க்) கேளாய்
திருவனந்தா புரமதுதான்
தூரம் மெத்த இருக்குதுகாண்
இன்னும் கொஞ்சம் போனால்
ஏற்ற இடம் தெரியும் என்றான்
தைரியத்தை அவன் கொடுக்க
சற்று தூரம் போனார்கள்
ஆரவாரத்துடனவர் வாரபோது
ஆனைக்கல்லு தெரிய(க்) கண்டார்

பார்த்து வழி வாரபோது
பஞ்சல் பெருமணலும்தான் கடந்தார்
கூட்டத்துடன் வாரபோது
கூட்டப்புளி தெரிய(க்) கண்டார்
வேகமாக வாரபோது
வெங்கல(ப்) பாறை தெரிய(க்) கண்டார்
வாட்டமிட்டு வாரபோது
வட்டக்கோட்டைதான் கடந்தார்

(கப்பல் கன்னியாகுமரியை அடைதல்)

முன்னும் பின்னும் வாரபோது
முக்கடலின் பக்கத்திலே
முட்டையைப்போல் வடிவுள்ள
முட்டபதி தெரிய(க்) கண்டார்
கூத்தாடி அளவன்தான்
குரவையிட்டு பாடிடுவான்
கண் சிமிட்டி முழிக்கு முன்னே
கன்னியாகுமரி தெரிய(க்) கண்டார்
ஏற்றுவதும் இறக்குவதும்
எதிரே கப்பல் வருவதும்
கூத்தாடி ஆடுவதும்
குமரி மக்கள் கொஞ்சுவதும்
பாடுவதும் ஆடுவதும்
பகவதியாள் தலத்தழகும்
கடற்கரையில் மண்டபமும்
கற்கோட்டை தூண்களும்
இத் தலத்தை(ப்) பார்ப்பதற்கு
இரண்டு கண்ணும் போதாது
இதிலே தங்கி(ப்) போகாவிட்டால்
இடை வழியில் தலமும் இல்லை
நங்கூரத்தை(த்) தூக்கியல்லே
நடுக்கடலில் போடுமென்றார்
சொல்லிவாய் மூடு முன்னே
தூக்கிப் போட்டார் நங்கூரத்தை
ஓடும் கப்பல் நின்றிடவே
உற்ற ஆசாரிமார் கரையில் வந்தார்
கடலதிலே தீர்த்தமாடி
கன்னியரை(க்) கைத் தொழுது
தட்டு முட்டு செலவெடுத்து
தலகையாரி பொங்கியுண்டார்
ஆறு மணி அடிக்கு முன்னே

அவர்களும் போகவென்று
மேக வண்ணன் கிருபையாலே
மேற்கு நோக்கி அவர் வாரார்

(கப்பல் திருவனந்தபுரத்தை அடைதல்)

பகவதியாள் தலம் கடந்து
பஞ்சலிங்கபுரம் கடந்தார்
மட மடவென்று போகயிலே
மணக்குடியும் தான் கடந்தார்
காகமது பறந்ததுபோல்
கட்டிப்பட்டம் தெரிய(க்) கண்டார்
கீழ முட்டம் மேல முட்டம்
கிருபையுடன் முடுகிவர
தவளைக் காரையான் குளமும்
தண்ணீர்க்கரை ஓடைகளும்
நீர் வளமு மெல்லை விட்டு
நிமைக்கு முன்னே வருகுதல்லோ
காகமது பறந்தது போல்
கடியப் பட்டணம் தெரிய(க்) கண்டார்
புண்ணியரே அண்ணன்மாரே
போகும் தலமது காணலையே
எட்டோடு எட்டு நாள் மட்டும்
இருந்தோமே கப்பலிலே
மனம் சலித்து இவர் கேட்க
வாய்திறந்து ஏது சொல்வார்
இன்று மனம் சலிக்க வேண்டாம்
எவ்விதமும் ஆகட்டுமே
அன்று மனம் சலித்திடவே
அயர்ந்து மிக வருகையிலே
தேறி மனம் மிக மகிழத்
திருவனந்தாபுரம் வந்தார்

(மன்னனைக் காணுதல்)
(வேறு)

கண்டார் அனந்தா புரத்தை
கப்பல் நிறுத்தியே ஏது சொல்வார்
அங்குள்ள அரசர்களை
அடிவணங்க வேணும் என்று
கதலி குலையோடு மாம்பழமும்
ஆவினோடு சர்க்கரையும்

முத்து பவளம் கோமேதகம்
முத்தி பெரு தட்டில் வைத்து
ஒய்யாரமாய் கையில் ஏந்தி
உற்ற குட்டியாலி அவன் வார(ர)ன்
பார முடி மன்னரிடம்
பாத காணிக்கை அவன் வைத்தான்
சரணம் சரணம் என்று
சாஸ்டாங்கமாய் தெண்டனிட்டான்

(மன்னன் மரக்காயரிடம் வினாவுதல்)

இரக்கத்து(ட)ன் மகராசன்
இவர்களுட முகம் பார்த்து
எந்த ஊர் எந்த தேசம்
என்னிடத்தில் வந்ததென்ன
வந்த ஒர் விபரமதை
வளமுடனே சொல்லுமென்றார்
என்றுரைக்க ராசமன்னர்
எடுத்துரைப்பான் குட்டியாலி மரக்கியானும்

(மரக்காயர் மரம் வெட்ட அனுமதி கேட்டல்)

நாங்கள் இருப்பது கீழக்கரை
நாமம் குட்டியாலி மரக்கியான்
கப்பல் தொழில் எந்தனுக்கு
கணக்கறிய(ர) செல்வமுண்டு
துளாயிரத்து தொண்ணூற்று ஒன்பது நல் கப்பலுண்டு
தூரிசமுடன் வைத்து அரசாண்டேன்
செப்பரிய கீழக்கரை
சிறப்புடனே ஆண்டுவாரோம்
ஆயிரம் கப்பலாக்க
ஆசையது மெத்த உண்டு
ஒத்த மரத்தாலே கப்பல் கட்ட
உறுதியுடன் செய்யவென்று
உம்மைத்தேடி நாங்கள் வந்தோம்
உதவி செய்ய வேணும்
உங்கள் மலைதனிலே
மரம் வெட்ட வரம் தரவேணும்

(மரம் வெட்ட அரசன் அனுமதியளித்தல்)

செப்பமுடன் இவர்கள் கேட்க
சிறந்த மகராசன் அவன்

வேண்டும் மரம் வெட்டுவதற்கு
விடையதுதான் கொடுத்தான்
மனதிற்கு ஏற்றமரம்
மரக்கியாரே வெட்டி(க்) கொள்ளும்

(மரம் வெட்ட புறப்படுதல்)

என்று வரம்தான் கொடுக்க
ஏது செய்தான் மரக்கியானும்
தண்டு தாளத்துடனே
தான மலைக்காவில் வந்தான்
கப்பல்தனில் நின்ற கொத்தன் மாரும்
கடுக(க்) கோடாலிதன்னுடனே
வாச்சி முழுக்கோல் மழு எடுத்து
வலது தோளில் போட்டுக் கொண்டார்
கப்பல் முதலாளி முன் நடக்க
கம்மாள ஆசாரிமார் பின் நடக்க
ஆறு குளம் ஏரி விட்டு
அடர்ந்த மலைக்காவில் வந்தனரே
ஏரி மலை எல்லாம் பார்க்கும்போது
ஏற்ற மரம் ஒன்றும் காணவில்லை

(கபாலக்கார சாமி உறைந்த மரம் காணல்)

எங்குச் சென்று பார்ப்போம் என்று
ஏங்கி அவர் நிக்கயிலே
கபாலக்காரசாமி அமர்ந்த மரம்
கண்ணுக்கழகாத் தெரிந்திடுமாம்
எங்கள் உயிர் இங்குப் போனாலும்
இந்த மரமது வெட்ட வேணும்
தூரிதமுடன் அவன் இவை உரைக்க
தூதுவனும் எழுந்திருந்தான்
வேகமுடன் வேட்டிகட்டி
வேண்டும் ஆயுதம் கையிலெடுத்தா(ன்)

(மரம் வெட்டுகையில் தீய சகுணம் தென்படல்)

ஒங்கி அவன் வெட்டும் போது
உச்சியில் கெவுளி அடிக்குதையா
அஞ்சி தடையது அடிக்குதென்று
அவனும் ஒருபுறம் சோர்வடைந்தான்
கூட்டமதில் நின்றிருந்த
குன்னாலி மரக்கியானும்

சாஸ்திரக் கொத்தன்தனை அழைத்து
சாதக நலம் பாருமென்றான்

(சோதிடன் கூற்று)

சாஸ்திரங்கள் பார்த்தபோது
சமர்த்துடனே ஏது சொல்வான்
கண்ணில் தோன்றிய விபரமதை
கருத்துடனே எடுத்துரைப்பான்
இந்த மரம்தனை வெட்டினாலே
இத்தலத்தில் கெடுதிவரும்
மரத்தின் அடியிலே பலம் கொண்ட
மா தெய்வம் ஒன்று இருக்குதையா
தெய்வப் பகை வருகுமையா
தெளிந்த மரமதை வெட்டினாலே

(மரக்காயர் மரத்தை வெட்டக் கட்டளையிடல்)

சாஸ்திர கொத்தன் இவை உரைக்க
சார்ந்த குட்டியாலி ஏதுரைப்பான்
எந்த விதம் ஆனாலும் நாமள்
இந்த மரம் வெட்ட வேணும்
சோர்ந்து மனம் வாடாமல்
துணிவுடனே வெட்டுமென்றார்

(மரத்தை வெட்டுதலும் கப்பலில் ஏற்றுதலும்)

சொல்லி வாய் மூடு முன்னே
துணிந்தொருவன் மரத்தை வெட்ட
தலைக்கு மேலே ரத்தம் சிந்த
தரையில் வெள்ளம் ஓடுதையா
வெட்டும் மரமது கீழே விழவே
வேகத்துடன் சுவாமி கோபம் கொண்டார்
கோபத்துடன் மரம் கீழ்விழவே
கொத்தன்மாரும் ஒடிவந்தார்
வாச்சி முழுக்கிய முழுக்கோல்விட்டு
வாசமுடன் கப்பல்தனிலே ஏற்றினார்

(கபாலக்காரசாமி மரத்தில் அமர்ந்து உடன் செல்லுதல்)

கலம் ஏந்திய கபாலக்காரர்
கண் சிவந்தவர் எழுந்திருந்தார்
மண்டை சிதறவே அடிப்பேன் என்று
மரத்துடன் சுவாமி ஏறிக்கொண்டார்

வள்ளத்திலே மரம் ஏற்றி
வந்தவர்களும் ஏறிக் கொண்டார்.

(கப்பல் திரும்புதல்)

(வேறு)

ஏல ஏலோ ஏலேலே எலலை ஏலோ
எலலை ஏலோ ஏலேலோ எலலை ஏலோ
இழுத்து வந்தார் இழுத்துவந்தார் கப்பலையும்
தோணிவிட்டு தோணிவிட்டு கப்பலிலே
துரிதமுடன் துரிதமுடன் ஏறிக் கொண்டார்
கபாலக்கார கபாலக்கார சுவாமியுந்தான்
கப்பலிலே கப்பலிலே ஏறிக் கொண்டார்
குட்டியாலி குட்டியாலி மரக்கியானும்
குன்னாலி குன்னாலி மரக்கியானும்
நாளைக் கல்லோ நாளைக்கல்லோ போகவென்று
நாடு மெய்க்க நாடு மெய்க்கப் பேசிக் கொண்டார்
தட்டு முட்டு தட்டு முட்டு செலவெடுத்து
தானே அவர் தானே அவர் ஏறிக் கொண்டார்
வந்து வெகு வந்து வெகு நாளாச்சி
வாழும் பதி வாழும்பதி போகவென்று
என்று சொல்லி என்று சொல்லி எல்லோரும்
இன்பமுடன் இன்பமுடன் தானிருந்தார்
கபாலக்கார கபாலக்கார சுவாமியுந்தான்
கைத் தட்டி கைத்தட்டி பாடி(க்) கொண்டார்
கிழக்கு முகம் கிழக்குமுகம் தனை நோக்கி
கிறுகிறுவென்று கிறுகிறுவென்று வருகுதையா
காட்டில் முயல் காட்டில் முயல் பாய்வதுபோல்
கடந்தோடி கடந்தோடி வருகுதையா.

(கப்பல் வரும் வழியில் பல ஊர்களைக் கடந்து செல்லுதல்)

(வேறு)

திருவனந்த புரத்தை விட்டுத்
திரும்பி அவர் வரும்போது
கடும் விரைவாய் வருகையிலே
கடியபட்டணம் தனை(க்) கடந்தார்
தவளைக் கரையான் குளமும் விட்டுத்
தண்ணீர்கரை ஓடைவிட்டு
மேலமுட்டம் கண்டதுபோல்
கீழ முட்டம் கண்டு கொண்டார்

பெரிய வழி பிரித்திடாமல்
பெரிய காடு தெரிய(க்) கண்டார்

(கபாலக்காரசாமி பொறுமை காத்தல்)

இத் தூரம் வருமளவும்
இடையில் ஒரு கலகம் இல்லை
கண்ணை சற்று மூடியல்லோ
கபாலக்காரன் இருந்து கொண்டான்
சனி பகவான் பிடிக்க வேணும்
நாமும் சண்டை செய்ய வேணும்
பொழுது சற்று இருக்கும் போது
பொழிக்கரையும் தெரிய(க்) கண்டார்

(கபாலக்காரன் கலகம் செய்தல்)

அதற்கடுத்து புத்தந்துறை
அழகு பள்ளத்தூரும் கண்டார்
கோலமுடன் மணக்கும்
கோவங்குளமும் கண்டார்
கன்னியாகுமரி அது
கடந்து வரும்போது
இடை வழியில் வாரபோது
இடஞ்சல் மிக செய்திடுவார்
நம் திறத்தைக் காட்டாவிட்டால்
நாட்டிலுள்ளோர் நகைத்திடுவார்
கொப்பெனவே கண் சிவந்து
கோபத்துடனே எழுந்திருந்து
கப்பலிலே நின்று கொண்டு
கபாலம் அது கையிலெடுத்து
என் திறமும் உன் திறமும்
இன்றைக் கல்லோ பார்க்க வேண்டும்
குதித் தெழும்பி வருகையிலே
குட்டியாலி மரக்கியானும்
எவ்விதம் நான் அறியேன்
இறைவனுட செயல் இதுவோ
இடையில் வந்து கலகமிட
எங்கிருந்து வந்தானோ
கொல்லாமல் விட்டு விட்டால்
கூடவே வருவானென
வேகத்துடன் எழுந்திருந்து
இடிபோல முழங்கிடுவான்

முழங்கும் ஒலியது முடியுமுன்னே
முனைவாய் இருபேரும் சண்டையிட்டார்

(போர் மூளுதல்)

அவர் அடிக்க இவர் அடிக்க
அரும்போர் செய்தார்கள்
போடு போடென படையதிர
பொன்னவர் கோன் முன் குதிக்க
எதிர் வெடி குண்டுடன்
ஆகாச வெடி மருந்தும்
படைகள் வெடி குண்டுடனே
பல படைகள் தான் நெருங்க
பல சுருதி கம்மாளர்
பயந்துமே தான் நடுங்க
கிடுபிடி தாரையுடன் தம்பட்டம்
கீர்த்தியோடொத்த முரசு முழங்க
அவருடைய படையும்
இவருடைய பேய்ப்படையும்
அடங்கலுமே நின்று தான்
அமராடிதான் முழங்க
சாணுக்குச் சாண் பிரியாமல் நின்று
சண்டை யிட்டாரே
வேகத்துடன் வெடி எடுத்து
விலகி நின்று வீசிடுவாராம்
அடிபாகம் ஒரு விதமாய்
அலறி கப்பல் கிடுகிடுயென
சண்டியர்கள் அடிக்க தண்டிகை முறிய
தாவியே ஒருவன் மேல் குதிக்க

(கபாலக்காரன் மரக்காயர் படையைச் சிதறடித்தல்)

கப்பலில் வந்த படைகள் எல்லாம்
கபாலம் கொண்டு சிதற அடித்தார்
மண்டை மூளை மயிர்களும் சிதற
வரம் கொண்ட சாமி சிதற அடித்தார்
சிதைந்து கப்பல் நெறு நெறு என்றிட
சீறியே கோபம் கொண்டு ஓடியே வராரர்
பீரங்கி வண்டியை முகமது திருப்பி
பிழைக்க வந்தவன் தன்னை சுடுவார்
திருப்பி அடித்திட சிதறுது ரெத்தம்
சினங் கொண்டெழும்பிச் சிதறவேயடித்தார்

எத்தனை கோடி படையிருந்தாலும்
இறப்பதேயின்றி எதிர்ப்பாரைக்காணோம்
ஆயுதம் எத்தனைக் கோடியிருந்தாலும்
அவருடைய கபாலமொன்றுக் கிணையோ
படைத் தலைப் பேய்கள் வாறியே தின்று
மடத்தனமாகவே போரது வொரவே

(மரக்காயர்களின் தீரம்)

மூடத்தனமாய் குட்டியாலி மரக்கியான்
முழுவதும் மோசம் போனோமே யென்றான்
எதிர்த்தவர் பலத்தை இன்னும் அறியோமே
எழுப்பினர்படையை இருபேருமாக
வெடி வெடி என்று வெடியது முழங்க
தாவியே ஒருவன் தலைகீழாய் குதித்தான்
என்றைக்கு இருந்தாலும் இறப்பது திண்ணம்
எதிர்த்து சண்டையது செய்யடா தம்பி
இனிமேல் உன்னை விடுவதும் இல்லை
இருப்பது பொய்யே இறப்பது மெய்யே
தைரியம் விடாதே சாவது திண்ணம்
சட சட வென்று தானுமே வளைய
வெடியது முழங்கும் வீரர் ஒரு பக்கம்
கைத்தடி ஈட்டிக்காரர் ஒரு பக்கம்
கம்பெடுத்தடி கொடுப்பவர் ஒரு பக்கம்
இன்றைக்கு எல்லோரும் இறந்திட விதியோ
கிருபை செய்வார் ஒருவரும் இல்லை

(கபாலக்காரசாமி வெற்றிபெறுதல்)

கண்ணது தீயதுபோலே நின்றெரிய
கருதியே பார்த்தார் கபாலக்காரரும்
எத்தனை கோடி படை நீங்கள்
இன்றைக்கல்லோ சாகப் போறீர்
என்று நினைத்து இருகண் சிவந்து
எதிர்த்து அடித்தார் கபாலக்காரரும்
மூடிய கண் முழிக்குமுன்னே
முந்நூறு பேரைச் சிதறடித்தார்
காலற்றுக் கரமற்றுக் கடலதிற்குள் விழுவார்
கண்ட மட்டெல்லாம் மண்டை உருள
தொண்டை வறண்டு சுத்தமது உளற
தூடித்த உயிரது பதைக்குது பாராய்
கபாலம் கைத்தடி பட்டபோது

கப்பல் முதலாளி அபயமிட்டோட
அல்லாவே அல்லாவே யென்று
அடியேனைக் காக்க இது வேளை வருவாய்
காட்டில் பூதப்படைகள் வந்ததுமே நின்று
கைச் சேதமாக்குதே படைகளையெல்லாம்
இதுவெல்லாமுன் திருவருளோ
இன்றைக்கு எல்லோரும் இறந்திட விதியோ
கேடு வருவதினா லிவனுக்குக்
கிருபை செய்வார் ஒருவரும் இல்லை
சிதற அடிக்கிறான் கப்பலை எல்லாம்
சிறு மரம் எல்லாம் திசை பிரிந்தோட
குந்தத் தலமில்லாமலே மரக்காயனும்
குதித்தே விழுந்தான் சமுத்திரமதிலே

(மரக்காயர் கூட்டம் அழிதல்)

அடித்த அடிபட்டவர் எல்லாமே சாக
ஆழியில் ரத்தஞ் சிதறியே நிற்க
இறந்தவ ரெல்லாம் எமலோகஞ்சேர
இடையிலே வந்து சுவாமியும் நிற்க
சிவனார் கொடுத்த வரமதிலேதான்
சிரித்துமே நிற்கிறார் கபாலக்காரரும்

(இறந்தவர்கள் உடலை மீன்கள் தின்றல்)

அந்தர மார்க்கமாய் இறந்த உயிர் போக
ஆழியில் இருக்கும் மச்சங்கள் எல்லாம்
இரத்த வாடைகள் முகத்தில் அடிக்கவே
இருக்கின்ற மச்சங்கள் எழும்பியே வந்தது
தெளிந்து அதை சொல்வார் சிறந்த அருதகுட்டியும்
சிறியவர் சொற்பிழை பெரியவர் பொறுப்பீர்
நெத்தலி குத்தா நேரிட சாளை
நீண்டிடுமுஞ்சன் சோளய முரலும்
சட்டியில் ஒட்டிடும் சருக விராலும்
தர்ப்பரைக்கனி நோஞ்சிப் பொடிகளும்
சப்பத்தலையன் பக்கரமுட்டி
தலையறுத்தானும் தனி(க்) குடல் ஒழுகியும்
பேயன் சாளை பெருமண்டை(த்) தலையன்
பிடிபடா மச்சம் பெருவாங்கணையும்
கண்ணாடிக் காரையும் காணங்காப்பூச்சியும்
கருங்கால் நண்டும் இருநிற காரையும்
நரித்தலை முட்டியும் நடுநிலம் தட்டியும்

நாரிடும் மா ஊரை நடுங்கூரல் கட்டா
பஞ்சு போல் நிறத்தான் பால கணவாய்
பால் நெய் மிதக்கும் பன்னா குதிப்பு
தீ வெட்டி(க்) கண்ணன் சிறு முகத்தழகன்
திருகிடு பூலா தேரியப் பயிந்தி
அழகிலே குறைந்த ஆமை திருக்கை
அந்தரத் துந்துமி மிதவனச் சுறா
நெய்ப்பதம் கொள்ளும் நெய்மீன் சீலா
நெத்திலி பொடியும் திருவாங்கணையும்
நடுகடல் வாழை மாங்குள்ளனோ
நாடிய கெண்டை நழுகிடும் அயிரை
சீறியே ஒடும் சிறு நரிக் கெழுறும்
சிறு துயில் கட்டடிக்காரை ஓடவழும்
ஓடம் மரித்திடும் கூனிவிராலும்
மதம் விட்டு(ச்) சீறிடும் கொம்பு(ச்) சுறாவும்
மஞ்சள் கணவாய் வளர் திமிங்கலம்
கூடவே நல்ல குருவலை மரணமும்
ஆகவே இத்தனை மீன்களும் சேர்ந்து
ஆழிக்கடல் திரு சமுத்திரமதில்
குட்டியாலி மரக்கியான் இரத்தம் குடிக்கவே
கூடி வருகுதுகாண் ஒழு ஒழுவாக
வட்ட மிட்டாடி வளையவே நின்று
வாரியே ரத்தம் குடிக்குது பாராய்
எனக்கு உனக்கு என்று எழுகடல் அதிர
எகிறி விழுந்து அதுகளும் சாக
கபாலக் காரர் கைத்தடிபட்டு
கண்ட மீன்கள் எல்லாம் மண்டை உருளுது
கபாலக்கார சுவாமி எழுந்திட்ட போது
கைலாசம் சென்று வரம் வாங்கி வந்து
அத்தி மரத்தடியில் அமர்ந்தார்.

(இறந்தவர்கள் சிவனிடம் வரம் கேட்டலும் சிவன் வரமளித்தலும்)

(வேறு)

ஈஸ்பரனே மகாதேவா
இறையோனே காருமையா
ஆதிவான் மகாதேவா
ஆண்டவனே வரம்தாரும்
பொல்லாத பூமியிலே

போய் பிறந்த துயரம் போதும்
இன்னுமங்கே அழுந்தாமல்
ஈடேற வரம் தாரும்
எங்கள் மனம் நோகாமல்
ஈஸ்பரனே வரம் தாரும்
என்றவர்கள் இவையுரைக்க
ஈஸ்பரனும் எது சொல்வார்
இறந்தபட்ட மானிடரே
என்னவரம் வேணும் என்றார்
வன்குலையாய் மாண்டதினால்
வாய்த்த பூசை வேணும் என்றார்
கொல்லவரம் வெல்லவரம்
கோடிவரம் வேணுமய்யா
பாவிகளைச் சூலிகளைப்
பால்வடியக் கொல்லவரம்
அந்தி சந்தி வேளையிலே
அனக்குத் தடி குலுக்கவரம்
அந்திக் கருக்கலிலே
முச் சந்தி பாதையிலே
தண்ணீர் கொடம் கொண்டு வரும்
தார் குழலை அதட்டவரம்
ஆடுகிடா கோழிகளும்
அறுக்கப் பலி கொள்ளவரம்
அலைவாய்க் கரையோர மெல்லாம்
அதட்டி விழி யெரிய வரம்
இந்தவரம் தாருமையா
ஏழை ஆண்டிப் பரமசிவா
இப்பிடியே வரங் கேள்க்க
ஈசுபரன் வரங் கொடுத்தார்
காபலக்காரன் ஆலயத்தில்
கணங்களாக அமர வைத்தார்
இப்படிக்கு வரங்கொடுத்து
ஈசன் கயிலையில் அமர்ந்தார்.

(முற்றும்)

(கதைப்பாடலை இயற்றிய புலவர் அருத(ன)குட்டி நாடார்.)

வெங்கலராசன் கதை

(தாள்ச்சுவடி பதிப்பு)

(சிவசுப்பிரமணியபுரம்
அ.அப்பாவு நாடரிடமிருந்து
தாள்ச்சுவடி பெறப்பட்டது.)

(விருத்தம்)

(வலங்கையர் கதை)

சீர்பெறுங் கயிலை மேவுஞ் சிவனுட அருளினாலே
கார்பெறுஞ் சோழ நாட்டில் காளிதன் புதல்வராக
பார்பெறும் புவியோர் மெய்க்கப் பண்புடைய வலங்கை வேந்தர்
தாரணி தனி லுதித்த தமிழிசை பாட லுற்றேன்.

(வருபொருள்)

இயலான ஏலாசினி யாற்றுச் சார்பில்
ஈசனரு ளாலுதித்த கெங்கை தன்னில்
அயில் சேரும் விழிமடவார் மேலோகத்தில்
அயிராணி நேர்த்தியென ஏழு பெண்கள்
ஒயிலாக வந்திறங்கிச் சுனை நீராட
உற்ற வித்தியாதரரும் புணர்ச்சியாகி
கயிலாசச் சிவனாரி னருளினாலே
காசினியில் வலங்கையர்கள் பிறந்தவாறே.

(காப்பு)

பிறந்த கதைதனை மறவா தெளிதில் யாரும்
பிரபலமா யறிந்திடவே மனதி லுன்னி
அறந் தழைக்கு மகத்திசர் புறத்துள் மேவி
அந்தரியின் புதல்வனென வந்த மேலோன்
பொருந்து கொல்லம் எழுநூற்றி எண்பத் தொன்றில்
பூட்கை மதி பன்னிரண்டாந் தெய்தி பொன்னாள்
வரும்பூச மதனிற் செந்தமிழினாலே
வருத்தினன் ஆறுமுகம் நாடான் கவியாய் தானே
கன்னிய ரேழு பெண்கள் காசினிதனிலே வந்து
நன் சுனைத் திர்த்தமாடி நலமுடன் முனி சாபத்தால்
அன்னையு மகன்று போனாள் அன்புடன் வளர்த்தாள் காளி
மன்னவர் கதையைப் பாட மதகரி முகவன் காப்பு.

(நாட்டுவளம்)

(வேறு)

சீர்சிறந்த வளநாடு செல்வம் வளர்ந் தோங்கும் நாடு
கார் சிறந்த திருநாடு கனமாரி பொழியும் நாடு

பார்புகழும் நன்நாடு பாண்டி மன்னர் வாழும் நாடு
தார் சிறக்கும் புன்னை மலர் தாழை மலருள நாடு
மயிலினங்கள் வாழும் நாடு வண்டு இசை பாடும் நாடு
குயிலினங்கள் கூவும் நாடு குதித்து மந்தி தாவும் நாடு
ஆறிலொரு கடமை கொண்டு அசையாத மணியுங்கட்டி
கூறிலொன்று குறையாத கொற்றவனாம் சோழ மன்னன்
வாளாத மன்னர்மெய்க்கும் வளநாடு சோழநாடு
சோழ மன்னன் சொல்மாறா சோழநாடு தெய்வநாடு
நெல் மிகுதி யுள்ளநாடு நீள் கரும்பு வளரும் நாடு
கல்கரடு மாவிருட்சம் கனமுனிவோர் வாழும் நாடு
அந்த வள நாடதிலே அம்மை பத்திர மாகாளி
சொந்தமதாய் வீற்றிருக்கும் துய்ய புட்டாபுர மலையாம்
புட்டாபுர மலைநாடு பூதப்படை வாழும் நாடு
கட்டாக மாமுனிவர் கருத்தாக வாழும் நாடு
ஏறாடி மலைநாடு ஏலாசினி யாற்று நாடு
மாறாத தெய்வக்கன்னி வந்து சுனையாடும் நாடு
ஆறணியு மீஸ்வரானார் அருளாலே வாழும் நாடு
வாறாக மாமலையில் மகிழுந்சுனை ஏலாசினி
ஏலாசினிச் சுனையது போல் இல்லை சுனை பூவுலகில்
வாலை மதி தெய்வப் பெண்கள் வருவார்கள் சுனையாட

(கன்னியர் மீது வித்யாதரமுனிவர் மோகம் கொள்ளுதல்)

(வேறு)

சுனையின் வளப்பமும் முனிவரவும்
தேகை அயிராணி ஈன்ற மக்கள்
வனச மடந்தைய ரேழு பெண்கள்
வந்து சுனையில் நீராடுவதும்
ஆடுஞ் சுனைதனின் பிரபலமும்
அழகு நாடதன் பிரபலமும்
தேடும் புகழ் வித்யாதர முனிவர்
சிறந்த சுனை ஏலாசினி தனிலே
ஏலாசினி யென்ற சுனைதனிலே
இருந்தார் முனி வித்யாதரரும்
கோலாகலமாகத் தெய்வப் பெண்கள்
கூடிச் சுனையாடிப் போகக் கண்டு
கண்டு முனியந்த பெண்கள் பேரில்
கருதி மையல் கொண்டு தடுமாறி
பண்டு முனியவர் ஞானம்விட்டு
பாவைமார்கள் மேல் மோகங்கொண்டு
கொண்ட மையலாலே தெய்வப் பெண்கள்

குணமுஞ் செய்கையும் அழகும் மெய்யும்
அண்ட ருலகத்துப் பெண்கொடிமார்
அழகுதனைக் கண்டு மிக மயங்கி
பெண்க ளழகதைக் கண்டு முனி
பெருத்த ஞானம் விட்ட லறிடுவார்
கண்க ளழகதைக் கண்டு முனி
காம வெறி கொண்டு மயங்கிடுவார்
இடையி னழகதைக் கண்டு முனி
ஏங்கித் தடுமாறி மனங் கலங்கி
குடைபோல் முடியார்க ளழகைக் கண்டு
கொஞ்சி விளையாட நினைவாகி
பொட்டுக் குறியுட முகத்தைக் கண்டு
புலம்பி பரதவித் தேங்கிடுவார்
வட்டத் தனத்தழ கதனைக் கண்டு
வாடினார் காம வெறியாலே
இந்த மடவார்க ளிடைதனிலே
ஏற்ற அரைஞானாய்ப் புரளேனோ
சொந்த மடவார்க ளரைதனிலே
சேலைப் பட்டாகச் சேரேனோ
கையில் வளையாகப் புரளோனோ
கழுத்தில் மாலையாய் புரளேனோ
மையார் குழலார்கள் விழியிலிடும்
மையா யிருந்தாலும் பேறுமுண்டே
இந்தப்படி முனி மதிமயங்கி
இளையார் தனை யிப்போ சேரவென்ன
தந்த மருங் கன்னிமார்கள் போன
தடத்தி னடி கண்டுதான் வரவே
மோக வெறியாலே முனி மயங்க

(சிவன் வலங்கைத் தலைவர்களைப் பிறப்பிக்க அருள்பாலித்தல்)

முக்கண்ணர் திரு வருளாலே
தாகமுடன் பெண்கள் சுனையாடும்
தக்க சுனை ஏலாசினி தனிலே
செய்யப் புகழ் வேதன் தவத்தால் வந்த
சிறந்த கங்கையி னருகாக
வையம் புகழவே ஏழு பாலர்
வலங்கைத் தலைவர்கள் பிறப்பதற்கு
என்று சிவனாரும் மனதி லுன்னி
ஏற்ற முனி வித்தியாதரரை

சென்று முனியே நீ ஏலாசினி
சிறந்த சுனை தன்னைச் சுத்தி செய்து
நாட்டுந் தவசது விட்டிடாமல்
நல்ல முனி வித்தியாதரனே
ஈட்டுஞ் சுனைதனில் நீராடி
இருந்து கொள்வாய் நீ முனியே என்றார்
ஆதிபரன் சொல்ல மாமுனியும்
அதுவுங் கருமந்தா னென்று சொல்லி
சோதி பராபர பரப்பொருளே
சுனையில் நீராடி யிருக்கச் சொன்னீர்
எந்த விதமென்று நானறியேன்
ஈசனே உந்தன் கிருபையென்ன
அந்த வுரைகேட்டு ஈசுரனார்
ஆதி முனியே நீ சொல்லக் கேளு
எந்த விதத்தாலும் சுனைதனிலே
ஏழு பாலகர் பிறப்பா ரிப்போ
அந்தப்படி சட்டம் நடக்குங் கண்டாய்
ஆன சுனையின் பா லிருவுமென்றார்
கேட்டு முனியவர் சந்தோசமாய்
கிருபையுடன் வந்தார் சுனைக்கரையில்
வாட்டந் தவிர்த் தந்த மாமுனியும்
வாய்த்த கல்குகை தனிலிருந்தார்.

(ஏறாடி மலைச் சிறப்பு)

(வேறு)

இருந்தாரே கல் குகையில் – நல்ல
ஏறாடி மாமலைச் சோலையிலே
அருந் தவத்தோர் வரியோர் – இல்ல
ஆசை வெறுத்த முனிமார்கள்
சிவ வாக்கியர் வசிட்டர் – புகழ்
சிறந்த கலைக்கோட்டு மாமுனியும்
கெவுதமுனி மச்சமுனி – குண
கும்பமுனி புற்று வாழ் முனி
சத்தி முனி கௌசிகரும்– சிவ
சட்டமுனி வேத மாமுனியும்
எத்திசையுங் கீர்த்தி பெற்ற –இயல்
நாரத மாமுனி காளிமுனி
முனியு மிருஷிகளும் – நல்ல
முப்பத்து முக்கோடித்தேவர்களும்

இனிதாகவே முனியும்- முற்று
இவர் தாமிருக்குந் தலந்தனிலே
பாசை படித்திடுவார் -நின்று
பலசாத்திரங்கள் கெணித்திடுவார்
ஆசையுடன் முனிவர் -அங்கு
அதிக விசேடமுள்ள தலங்கள்
கண்டு தீர்த்தமாடி -முனி
கல்குகை தன்னிலே வீற்றிருக்க

(வித்தியாதர முனி மோகமுற்று வாடுதல்)

அண்டர் பிரா னருளால்- விதி
அம்முனிமார்கள் தனிற் சிறந்த
சத்திரிஷி மாமுனிவர் -போற்றும்
தகைமை பெறும் வித்தியாதரரும்
எத்திசையுங் கீர்த்திபெற்ற - மிகு
ஏறாடி மாமலைக் கல் குகையில்
நித்தம் சுனையாடி- நிலை
நீங்கிடவே முனி பித்தாகி
பித்தாய் கலங்கி முனி -வெறி
பேய்கொண்டு வாரது போலாகி
பொன் போல மங்கையரை - நின்று
புணரவுஞ் சான்றோர் பிறப்பதற்கு
முன் முகூர்த்தம் வரவே - நல்ல
முனிக்கு மோக வெறி யுண்டாகி
சிவமே பரமெனவே - எண்ணி
சேர் காவி வேட்டியு மாசனமும்
தவமே பெறுமுனிவர் - புகழ்
சத்தி முனி வித்யாதரரும்
சடை சூலஞ் சக்கரமும்- வல்ல
தக்க தண்டாயுதமு மெடுத்து
வடவைக் கனலது போல் - உள்ள
வலக் கையி லேந்திய அக்கினியும்
அக்கினியுந் தானேந்தி - ஒரு
அரிய தீச்சட்டி தலையில் வைத்து
சிக் கென் றனலெரிய - மிகு
செஞ்சடை சுற்றியுலாவி வர
உலாவுங் கதிரெனவே - மிகு
ஒளியிட் டெரிந்திட அக்கினியும்
குலாவுந் திருமுனிவர் - கையில்
கண்டதோ ரக்கினி நின்றிலங்க

சந்தோசமாய் முனிவர் –தவ
சன்னாசியாகிய சற் குருக்கள்
எந்த எந்த யுகமோ – அது
இது வரைக்கும் மோகம் போகவில்லை
மோக விகாரமாய் – முனி
மொய் குழல்வாரைப் புணர வென்ன
தாகமுடன் முனிவர் –மிகு
சந்தோசமாய் கும்மி பாடிக் கொள்வார்
நன்றிந்த வேளையிலே– நாமள்
நாடிய பெண்மணி வாறாரோ
வாறாரோ ஈசுரரே –இன்று
மருவியணைந்த நான் முத்தி கொள்ள
சீரான பெண்கொடியை– இன்று
சேரேனோ நான் கலி தீரேனோ
ஆசைத் துயராலே –அந்த
ஆயிழைமாரின் வடிவு கண்டு
தேசமதில் நாலு– திக்கும்
சேயிழைமார்களைத் தேடிடுவார்
தேடி முனிவர் நிற்க– இந்தத்
தேசத்தில் சான்றோர் பிறப்பதற்கு
கூடியதோர் வேளையிலே –நல்ல
கோதை மடவர்க ளேழு பெண்கள்
சுனையாட வேணுமென்று–தேவ
தோகை அயிராணி ஈன்ற மக்கள்
வனச மடந்தையர்கள் –அங்கு
வந்து சுனையாட வேணுமென்றார்.

(ஏழுகன்னியர் நீராடுதல்)

(விருத்தம்)

சுனையது ஆட வென்று தோகைய ரேழு பெண்கள்
மனமது மகிழ்ச்சியாகி வானவர் லோகம் விட்டு
அனைவரு மறியா வண்ணம் அவர் சுனை யருகே வந்து
மனமது மகிழ்ந்து பெண்கள் வளர் சுனை யாடினரே.

(வேறு)

தேவலோகத்தி லிருக்கின்ற கன்னிமார்
தேன் மொழிமார் எழுவருங் கூடியே
ஆவலாகவே ஏலாசினிச் சுனை
அமிர்த கொங்கையிலாட மனங் கொண்டு

சுனையில் வந்த தந்தத் தோகை எழுவரும்
துகிலுரிந்து கரைதனில் வைத்தவர்
மனது வொத்து மகிழ்ந்து சுனையாடி
மங்கையர் நிற்க மாயனோர் சூட்சியாய்

**(வித்யாதரமுனி கன்னியரின்
ஆடைகளை மறைத்து வைத்தல்)**

அங்கவர் வைத்த ஆடை தனை யள்ளி
அருகில் நின்றதோர் ஆலின்மேல் வைத்தவர்
சங்கையாக ஒளித்து இருக்கவே
தையல்மார் கரையேறித் துகில் பார்க்க
ஆடை தன்னை அவர்கள் காணாமலே
ஆகம் தேடியலைந்தவர் ஆலிலே
சேரவே துகில்தனையுங் கண்டனர்
கண்டு பெண்கள் இது செய்த தாரென
கட்டுட னெண்ணிப் பார்க்கிற வேளையில்

(முனிவர் பெண்களைப் புணர்தல்)

பண்டு நின்ற முனியையவர் கண்டு
பார்வையாலே எரித்திட எண்ணினார்
திண்ணமாகவே பெண்களின் பார்வையால்
தீயதாகத் திருவுள்ள மாகினார்
கண்ணனான வித்யாதர மாமுனி
காட்டுத் தீயெனவே எரிந்திட்டனர்
அந்த வேளையில் பெண்க ளெழுவரும்
அக்கினியால் எரித்தார் முனியென
சந்தோசமாய் சுனை மீ திறங்கியே
தானவர்கள் குளிக்க முனி கண்டு
கொண்டாடி முனிதானும் மகிழ்ந்து தான்
கோதையரைப் புணருவோ மென்னவே
என்னவே முனி கன்னியர் பேரிலே
ஏவினார் குளிர் தூறலுஞ் சாரலும்
சாரலும் பெரு மாரியும் கொந்தலும்
தையலர்க்கு விறையலும் ஏவினார்
வாரமாகத் திசை தெரியாமலே
வானமெங்கும் புகையாய் படர்ந்திட
பூமி யென்றும் சுனையென்றும் தோணாமல்
பூவையர்கள் தியங்கி மயங்கியே
காமியான இடையர்கள் செய்ததோ
கானில் வாழ்முனிமாரு சூட்சியோ

மந்திரத்தால் மயக்கித் தியக்கியே
மாய்மாலஞ் செய்யவென்று துணிந்தாரோ
கொந்தலோடு விறையலும் வந்துதே
கோ கோ வென்னவே கோதையர் வாடியே
கடலுடைத்துத்தான் பூமி யழியுதோ
கனவரைகள் நகண்டு விழுகுதோ
திடமதாகக் குளிரை யகற்றிட
சேர அக்கினி யுண்டானால் பாரென்ன
எண்ணி மங்கையர் நிற்கிற வேளையில்
எம் பெருமா ளெரியென வுன்னினார்
உன்னியே சிவன் றன்னை நினைந்திட
உற்ற கங்கைக் கரையிலே அக்கினி
அக்கினியாய் முனியும் வளர்ந்திட
ஆயிழைமார்கள் கண்டு சந்தோசமாய்
ஒக்க வந்தவர் அக்கினி தன்னையும்
உள் விறைய லொதுங்கத் தழுவினார்
தழுவி மங்கையர் ஆவி வளைந்திட
சங்கரனார் அருளால் முனியவர்
வழுவிலாமலே மாதரைப் புலகிட
வயிற்றில் கெற்பம் உருவாய்த் திரண்டுதான்

(கன்னியர்க்கு ஏழு குழந்தைகள் பிறத்தலும் முனி குழந்தைகளை வாங்குதலும்)

மாயமாய் முனி கெற்பம் ராத்தங்காமல்
மங்கைமார்களும் மக்களை ஈன்ற பின்
மோசம் போனோமென மங்கை ஏழ்வரும்
முட்டி விட்டுக் குனிந்தோமென் றேங்கியே
நாமிந்த முனி நாத னிருப்பதை
நயனந் தன்னிலே காணாமற் போனோமே
மேலோகம் போக வேனுமென்றா லினி
மெல்லுடம்போடு எப்படிப் போவது
என்று பேசியே பெண்கள் மலங்கியே
எங்கள் கற்பைக் குலைத்தீரே மாபாவி
மன்றி லெம்மை மயக்கிப் புணர்ந்தீரே
மக்கள் தன்னையும் பெற்றோமே நாங்களும்
பெற்ற மக்களை நாங்கள் கொடு போனால்
பொன்னுலகுக்கு ஏற்குமோ மாமுனி
நற்றவம் போல பெற்றிடும் மக்களை
நாடறியவே வாங்குவீர் மாமுனி
வாங்கு மென்றந்த மங்கையர் சொல்லவே

(குழந்தைகளுக்குக் கன்னியர் வரம் நல்குதல்)

மாமுனியும் மனது சந்தோசமாய்
சாந்தமாகவே மங்கையரே நீங்கள்
தம்பிமார்க்கு வரங்கொடு மென்றனர்
என்றபோதவர் தங்கள் முலைப்பாலை
ஏற்ற சங்கில் கறந் தமு தீந்தபின்
குன்றாமல் மடவார்க ளெழுவரும்
கொடுப்பாராம் குழந்தைகட்கு வரம்
சென்றதோர் திசை வென்று ரென்றுமே
சேரவே ராஜ நோக்குடன் நூறாவர்
என்று பெண்கள் முனி கையிற் பிள்ளையை
ஈந்தவர் விடை கொண்டு பின் போகவே
விடை கொண்டந்த மங்கையர் போகவே

(முனிவர் குழந்தைகளுக்குப் பெயரிட்டு வளர்த்தல்)

வித்யாதர மா முனி யானவர்
தடையில்லாமல் முனியும்தான் மக்கட்கு
தக்கதான திருநாம மீவாராம்
செங்கமல னழகேசன் விக்ரமன்
சேதுங்கத்தலைவன் காளி நாதனும்
சங்கையாகவே ஏனாதி நாதனும்
தக்க ஏனாதி நாதனென்றே சொல்லி
காட்டில் மேய்கின்ற காராம் பசுக்களை
கட்டுடனே அழைத்துப் பால் வாங்கியே
ஊட்டி யாட்டி உறங்கி முழிப்பித்து
ஒப்பனைப் பாலர் சித்திரம் போலவே
சித்திரம் போல புத்திரர் கொஞ்சிட
சிறிது நேரத்தில் சிலுகிட் டழுதிட

(பாண்டிய மன்னனுடைய பசு குழந்தைகளுக்குப் பாலூட்டுதல்)

நத்தி மாமுனி புத்தி கலங்கியே
நாமும் பிள்ளைகள் பாவத்தை ஏற்றோமே
ஏற்பதாரோ யிப் பிள்ளைகளை இனி
என்று மாமுனி ஏறாடி மாமலை
சார்விலே பிள்ளை தன்னையுங் கொண்டுமே
தக்க பாண்டியன் மன்னன் வளர்த்திடும்
பசுக்கள் வந்துதான் பாலுகொடுக்கவும்
பால்குடித் தந்தப் பாலர் வளரவும்
தயக்கமின்றி முனியுஞ் சந்தோசமாய்
தனயர் பேரில் தயவா யிருந்தனர்.

(பாண்டியமன்னன் தனது பசுவில் பால் குறைந்த காரணத்தைக் கண்டறியச் சொல்லுதல்)

(வேறு)

இருந்தாரே மாமுனிவர் ஏழுபிள்ளையுடன் மலையில்
அரும்பாவி பாண்டியனும் அவன் பசுவில் பால் குறைய
ஊட்டுப்புரை பாலதிலே ஒரு கோட்டை குறைந்துதென்று
மாட்டுக்கிரை மேய்க்குகின்ற வல்லிடையர் தனைப் பிடித்து
பசுவிலே பால் குறைவதென்ன பருமென்றா னப் பொழுது
விசுவாச இடையர்களும் விளம்புவராம் மன்னவர்க்கு
காடுதனில் பசுமேய்த்து களந்தனிலே அடைப்பதல்லால்
சூடுபொலி தின்றதுண்டால் தொகை காணமாட்டாதே
நாங்க ளொன்றும் அறியோமே நாயனுக்குத் தெரியவரும்
பாங்காகப் பொறுமெனவே பாண்டியனும் மனமிசைந்து
உளவுதனைத்தான் நீங்கள் உண்மையுடன் பார்த்து வந்து
களவுதனைப் பிடியுமென்று காவலவன் ஏவிடவே

(பசுக்கள் குழந்தைகளுக்குப் பாலூட்டுவதைக் கண்டறிந்து மன்னனிடம் கூறுதல்)

மாடு நிரை தனைச் சாய்த்து மடமடென்று இடையரெல்லாம்
காடுதனில் மேய்த்திடவே கண்ணர் திருவருளாலே
பழயபடி பசுக்களெல்லாம் பால் கொடுக்க மனதிலுன்னி
இளையாமல் பசுபோக இவர்களுமே பின் தொடர்ந்து
அருங்காவில் மறைந்து நின்றார் அம்முனிவன் புத்திரர்க்கு
வருஞ் சுரபி பால் கொடுத்து மாட்டு நிரைதனில் சேர
கண்டிடையர் பயந்தோடி காவலவன் தனக் குரைப்பார்
மன்றுதனை யாளும் மன்னா வனத்தில் முனி புத்திரர்க்கு
பூங்காவில் வாழ்முனிவன் புத்திரர்க்குப் பாலை யெல்லாம்
நீங்காமல்தான் கொடுத்து நிரையில் வந்து சேர்ந்திடவே
இன்று நாங்கள் கண்டு வந்தோம் இது புதுமை வேறிலையே

(குழந்தைகளை எடுக்க மன்னன் படையுடன் வருதலும் காளியம்மன் கோபம் கொள்ளுதலும்)

அந்தமொழிதனைக் கேட்டு அரசனவன் முனிவருட
மைந்தர்களைத் தானெடுக்க மனமகிழ்ந்து ஏது செய்தான்
மந்திரிமார் பெரும்படையும் மன்னவருந் தேரேறி
வாருமினி யென்று சொல்லி மன்னர்படை விரைந்துவர
தேரும் பரி காலாளும் சேனை மன்னர் தங்களையும்
கூடிவரக் காளியம்மை குறளிகளும் தான் விரைந்து

ஒடிச் சென்று அம்மையிடம் உற்றபடை வருகுதென்றார்
அப்போது காளியம்மை அதிகோபங் கொண்டெழுந்து
இப்போது வந்துதொரு ராசன்படை யத்தனையும்
செப்பமுடன் வெட்டிவென்று திருப்பிவிட வேணுமென்ன
ஒப்பமுள்ள காளியம்மை ஓங்காரத்துடன் வரவே
கண்டு மன்னன் தான் பயந்து காளிதனைச் சென்று கண்டு
தெண்டனிட்டு மன்னவர்கள் சிவகாளிதனை நோக்கி
மாலவருக் கிளையவளே மாதங்கியே திரிசூலி
ஏலாசினிச் சுனையருகே ஏழு கன்னி பெற்ற மக்கள்
நந்தவனம் பிச்சி முல்லை நாடிடும் பூங்காவனத்தே
செந்திருவாழ் மாமுனிவன் செய்தவத்தால் வந்துதித்த
மைந்தர் தமைக் காணவந்தோம் மாதாவே என உரைத்தார்

(படைகளைக் கண்டு வித்யாதர முனிவர் கோபம் கொள்ளுதல்)

விந்தை பயில் காளியம்மை மெத்த மன மகிழ்ந்துகொண்டு
மன்னர்படை தன்னுடனே மகாளி பெரும்படையும்
புன்னை மலர் தேன் சொரியும் பொய்கைதனை நோக்கினராம்
ஏறாடி மலைதனிலே இயல் முனிவன் வாவி தனில்
மாறாத மன்னருடன் மாகாளி வந்திடவே
வீறான மாமுனிவன் விரைந்தவனும் தான் சினந்து
நீறாக எரித்திடுவேன் கொடியோனின் திருவருளால்
என் மக்களை எடுக்க வென்று இவன் வாறான் கடிதாக
தன்படையும் சேனையெல்லாம் தவிடு பொடியாக்கிடுவேன்
என்று வித்தியாதரனும் எரியெனவே விரைந்துரைக்க
நின்ற மன்னர் தான் சேனை நிலைதனை விட்டோடிடுமாம்
மன்னர்படை தான் முறிந்து வந்தவழி பார்த்தோட
பொன் னணிந்த மாகாளி பொற்கொடியு மேது சொல்வாள்

(காளி முனிவரை சமாதானம் செய்து குழந்தையை வாங்கி வளர்த்தல்)

நித்திய கல்யாணா நீ நிலைமைபெற்ற மாமுனியே
வித்தியாதர முனியே மெய்யாக நான் சொல்லக்கேள்
எத்திசையுங் கொண்டாட ஈசர் திருவாணை யுந்தன்
புத்திரரைத்தான் வளர்க்க புண்ணிய முண்டா மெனக்கு
அந்த மொழிதான் கேட்டு அருள் முனிவன் மிகமகிழ்ந்து
வந்த திரிசூலி கையில் மக்களையும் தான் கொடுத்து
ஏறாடி மலையதுவும் ஏலாசினி ஆறதுவும்
வீறான புத்திரர்க்கு வேதமுனிதான் கொடுத்து
மாதாவே ஈசனுடன் வாதாடி வந்தவளே

தாதாவே மெய்ஞானி சாமுண்டியே அபிராமி
சித்திரமாய் நீ வளர்த்தால் சிவனார்தன் பதம்பெறுவாய்
புத்திரரைத் தான் வளர்ப்பாய் பொற்கொடியே எனக் கொடுக்க
வாங்கியே மா காளியம்மை மக்களையுங் கொண்டு வந்து
தாங்கியவள் எடுத்தணைத்து தடஞ் சுனையின் நீராட்டி
ஆறணியும் ஈஸ்வரனார் அருளாலே மாகாளி
நீறணிந்து திலகமிட்டு நித்தியமாய் பிள்ளைகட்கு
வண்ண வெள்ளிக் காப்புமிட்டு வாய்த்த தங்கக் கடுக்கனிட்டு
பொன் னரைஞாண் பட்டரைஞாண் பொற்சதங்கை பல பணியும்
எண்ண வொண்ணாப் பட்டுடுத்து இலங்காபுரித் தலைவருக்கு
திண்ணமுடன் பொன்முடியும் திருக்கரத்தில் வாளதுவும்
வலங்கைப் பிரதானியருக்கு வருத்தி வைத்தாள் பல தொழிலும்
இலங்கையில் வாழ் தலைவருக்கு எட் டாயுதத் தொழிலும்
ஆனை பரி தேரெடுத்து அழகாய்த் தான் வருத்தி
சேனைப்டைத் தலைவனென்றும் சிங்கக்கொடி வீரனென்றும்
எட்டு விதத் தொழிலுடனே லட்சணமும் தான் வருத்தி
புட்டாபுர மானதிலே புகழ் பால ரேழ்வரையும்
சிங்காசன மேடையிலே செல்வர்களைத் தானிருத்தி
சங்கையுள்ள காளியம்மை தான் வளர்த்தாள் பாலகரை.

(தாருதனை வலங்கைத் தலைவருடன் சேர்ந்து காளி அழித்தல்)

(வேறு)

பாலர் வளர்ந்திட காளி மனங் களி கூர
பாவனை யாகிய நாவலந் தீவது தன்னில்
தாருத னாகிய துஷ்டன் வரத்தாலே மீறி
சடையாமல் தெய்வார்கள் தன்னைச் சிறைபிடித்தானே
சிறையி லடைத்துக் கொடுமை பலதுமே செய்ய
தெய்வார் கலங்கித் திருமாலிடத்திலே சென்றார்
ஆதிபரனை வணங்கியே சங்கடம் சொல்ல
அறிந் துங்கள் சங்கடம் அற்பத்தில் தீர்க்கிறோ மென்றார்
என்று சிவனாரும் புட்டாபுரத்தி லிருக்கும்
ஏந்திழை பத்திர மகாளி தன்னை யழைத்தார்
அன்றவர் கூடியழைத்திட மாகாளி சென்று
ஆதிபரனை வணங்கச் சிவனாரும் சொல்வார்
அக்கிரமமாக தாருதன் றன்வரம் பெற்று
அழிமதியாகவே தெய்வார் தனை மதித்தானே
மக்கள் வலங்கைத் தலைவருடனே நீ சென்று
வாணால் வதைத் தவன் கோட்டையும் தீயைக் கொழுத்தி
விட்டு நீ வாவென வேண்டும் வரங்கள் கொடுக்க

வித்தாரமாய் காளி புட்டாபுரத்திலே வந்தாள்
புட்டாபுரத்தில் வந்தவள் பேய்ப்படை யோடே
புத்திர ரேழுபேர் தன்னையுங் கூட்டி நடந்தாள்
சத்தியுட னம்மை தாருதனோடே எதிர்த்து
தன் மக்கள் தன்னையும் பேய்ப்படையு மேவி விட்டாள்
வித்யாதரன் மக்களானவர் வீரவாள் பூட்டி
மேதினி மெய்க்க எதிர்த்தா ரசுரர்களோட
வெட்டு வெட்டென்ன விருது பலதும் முழக்கி
வீர மா காளியும் மக்களுஞ் சென்று எதிர்த்தார்
கொட்டுங் குரவையும் தம்பட்டஞ் சின்னம் முழங்க
கூடி வலங்கைத் தலைவர் வளைந்து கொண்டாரே.

(வேறு)

அட்டாங்கப் பஞ்சாங்க மானதோர் காளி
ஆனந்த வல்லி அலங்கார ரூபி
புட்டாபுரத்தில் கலை யேறி யம்மை
பிள்ளை எழுபேர் பெரும்படை சூழ
எட்டாயுதங்க ளணிந் தந்தப் பாலர்
இலங்கிய தண்டோ டெறிசூல மேந்தி
தூட்டரைத் தட்டி மடக்க வென் றுன்னி
தொந்தோ மென் றாடித் திரிசூல மேந்தி
ஏந்தியதோர் சூலக்காரி மாகாளி
ஈரேழுலகமும் ரெட்சிக்க வேண்டி
பாந்தமாய் பூதகணம் பதினாயிரமாம்
படைவீரர் சூழ வலங்கைத் தலைவர்
சார்ந்திடும் பேர்களைக் காத்திடும் காளி
சறுக்காத வீரி தாருதனோடே
மாந்தளிர் போல நிறத்தாள் கெவுரி
மாகாளி வந்து வளைந்து கொண்டாளே
கொண்டாளே ஆனந்த ரூபி மகமாயி
கூத்தனோ டாடிய கோமள வல்லி
தண்டாயுதத்தை எடுத்தம்மை மக்கள்
தாருதன் றன்னைச் சமர்க்களம் மூட்டி
அண்டருந் தேவரும் மெய்க்கவே பாலர்
அசுரரை வெட்டியே போர்க்களந் தன்னில்
கண்டிக்கத் தாருதன் தானுங் கலங்கி
கடுங் கோபமாகவே காளிமுன் வந்தான்
வந்தானே தருதன் வானவ ரஞ்ச
மகாளி யம்மை கடுங் கோபமானாள்
கொந்தார் குழலாள் திரிசூலி கொண்ட

குமார ரெழுவருங் கொக்கரித்தாரே
செந் தாமரையி லுறை வல்லி வீரி
சீர் பாதம் தன்னைச் சிறப்பாகப் போற்றி
இந்தா பாரென்று வலங்கைத்தலைவர்
ஈடு செய்ய வென்று தாருதனோடே
கூடிவரக் கண்டு தாருத னோடி
கோல மழிந்தேங்கியே முகம் வாடி
ஆடு களவாண்ட கள்ளனைப் போலே
ஆஞ்சியே மெத்த அசுரனும் நின்றான்
நீடிய காளியுடன் பேய்ப் படையும்
நிருபர் வலங்கையரும் கூடி நிற்க
பாடுபட் டுள்ளங் கலங்கி மெலிந்து
பட் டசுரர் வீழத் தாருதன் நின்றான்
நின்றானே தாருதத் துஷ்டன் மேல் வந்து
நீலி திரிசூலி நெருங்கிப் பொரவே
சென்றாரே வித்தியாதரன் பெற்ற பாலர்
செல்வ ரெழுபேர் உடை வாளெடுத்து
கொன்றாரே தாருதன் தன்னை வளைந்து
கோடானு கோடி யசுரரைக் கொன்றார்
வென்றளே யானந்தவல்லி மகமாயி
மிக்க வசுரர் கிளை வேரறவே
கோட்டையும் வெட்டி யழித்துத் தீயிட்டு
கூளிகள் கூடியு திரமு முண்டு
பூட்டாகப் பேய்வர பிடாரி கலை யேறி
பொன்றுலகம் பூ உலகம் மெய்க்க
தாட்டிகனாம் காளி மக்க ளேழ்பேரும்
சந்தமாய் தெய்வார் தனைச் சிறை நீக்கி
வாட்டந் தவிர்த் தந்த பத்திர காளி
வழி நடந்தாள் மக்கள் கூட வரவே

(காளி தாகத்திற்குத் தண்ணீர் கேட்டல்)

(வேறு)

உண்டாளே தாருதன் றன் உயிர்தனை மாகாளி
கொண்டாடித் தேவரெல்லாம் குடியிருந்தா ரலையாமல்
தெய்வாரைக் குடியிருத்தி தேவி பத்திர காளியம்மை
அகிலாண்ட நாயகியாள் ஆன கடலேழும் விட்டு
மாகாளி படையுடனே வழி நடந்து வருகையிலே
தாய்காளி பெரும்படைக்கும் தனக்கும் தகை யிருப்பதனால்
என் மகனே பாலகனே இயலாதி நாதனே கேள்

பொன் மகனே எங்கிருந்தும் புனல் வருத்தி வாருமென்றாள்
என்றவுடன் பாலகர் ஏழுபேரு மோடிச் சென்று
சென்று ஒரு மரத்தேறி சிறந்தவனம் பார்க்கையிலே

(சாபம் பெற்ற வேதியனும் அவன் மனைவியும் பூலோகம் வந்து சுனை நீரை மறைத்தல்)

சித்தியுள்ள மாமுனிவன் தெய்வச் சபை யானதிலே
முத்தி தெய்வா ருரைக்கையிலே முறையழிந்த மா முனியை
தென்னவர்க்குத் தெய்வேந்திரன் சீறிவெகு கோபமதாய்
சொன்ன மொழி மறந்ததொரு சுவ வேதமாமுனியை
ஏழுலகர் தானறிய இவன் றனையும் முடியறுத்து
கீழுலகில் தள்ளுமென கேட்டதொரு தெய்வார்கள்
இந்திரனார் மனமிசைய எழுந்திருந்து ஒடிவந்து
மந்திரஞ்சேர் மாமுனியின் மார்பு நூலுந் தானறுத்து
பூமிதனிற் போ யிவரென்று புத்திசொல்ல தான் கேட்டு
நாமினி தான் போவொமென நல்முனியும் பத்தினியும்
அட்ட திக்குந் தான் மகிழ அமுதமது மிக வருந்தி
மட்டணியும் பூலோக வனமதிலே வந்திருந்தார்
வந்ததற்பின் மறையவனும் மங்கை யந்த பத்தினியும்
அந்தமுடன் சுனையதிலே அமுதமதை தான்கடைந்து
பார்த்திருந்தார் மாமுனியும் பைந்தொடியு மவ் வனத்தில்

(சுனை நீரினைக் காணாமல் காளி கோபம் கொள்ளுதல்)

வீற்றிருக்கும் சுனையில் வெள்ளம் வித்யாதரன் புதல்வர்
கண்டு மன மகிழ்ந்து அவர் காளியம்மனோ டுரைப்பார்
தாண்டாமரை மாது மின்னாள் சகலபடை தான் வரவே
வாரதொரு படையைக் கண்டு மறையவனும் பத்தினியும்
சேறளவும் நீரையுண்டு செழுங் காவிலே யொழித்தார்
மண்ணோர்தான் புகழ வரும் மாகாளி பொய்கையிலே
தண்ணீர்தான் காணாமல் தான் திகைத்து மாகாளி
இப்படியும் பொய்வார்த்தை எப்படி நீ சொன்னாயென
செப்பிடவே காளியர்க்குச் சினந்தீர ஏதுரைப்பார்
மாதாவே பொய்கையிலே மாய முண்டு நிச்சயமாய்
காதாரக் கேளாமல் கண்ணாரப் பாராமல்
வீண் வார்த்தைப் பேசுவமோ விசேடமுண்டு பாருமென

(காளியம்மன் வேதியனையும் அவன் மனைவியையும் ஆண்பனை பெண்ணையாக மாற்றுதல்)

ஆணழகர் சொல்லிடவே அபிராமி ஞானத்தினால்
படர்ந்த கங்கை நீரையுண்டு பத்தினியும் மறையவனும்

அடர்ந்த பெருஞ் செடிக்ககத்தே அங்கவர்க ளிருக்கக் கண்டு
புத்திரரைத் தானழைத்து பிடியுமென்றாள் மாமுனியை
வெற்றியுடன் தான் வளர்த்த வீர ரெழுபேருஞ் சென்று
மற்று நிகரில்லாத மறையவனை மனைவியுடன்
பத்திரமா காளி முன்னே பாங்குடனே பிடித்துவர
கோபித்து மா காளியம்மை குன்றி யெனக் கண்சிவந்து
வேகித்தந்த பத்தினியும் வேதியனையும் பிடித்து
அலையாழி நஞ்சை யெல்லாம் அடக்கும் சிவனருளாலே
தலைகீழாய் தான் நாட்டி சபித்தனளே மாகாளி
பிராமணனும் பத்தினியும் பிரமா சிவ னருளாலே
உகாரமென வேரோடி உற்பனமாய் இலையும் விட்டு
தினந்தோறும் மாரிபெய்ய தேவாதிமார் சிறந் தோங்க
பனையானார் பிராமணனும் பத்தினியும் அந்நேரம்

(பனை அமுதம் தறுமாறு காளி கேட்டல்)

மானார் சிவ காமியம்மை மக்களையும் அருகழைத்து
ஆனாலு மவர்களுண்ட அமுதமதை வாங்குமென்றார்
இடுக்கக் கடிப்பானதுவும் ஏறுதற்கு தழைநாரும்
கொடுக்க வென்று மனதிலுன்னி கோதை பத்திர காளியம்மை
தாலமதி லேறுதற்கு தானே சிலம்பது மீந்து
கபாலமது கலயமதாய் கட்டியது இடுக்குதற்கு
சூலமதைக் காளியம்மை துண்டு ரண்டாய் தான் கொடுக்க
ஆலமுண்ட அரசனருளால் ஆன காளி மைந்தா நீ
தட்டி மிகவே யிடுக்கி சகல தொழில் தான் பயிற்றி
கட்டுடனே அமுதமதை கபாலமதில் வாங்குமென்றார்
என்று பத்திர காளியம்மை இயல்பாக வரங்கொடுக்க
நன்றெனவே அதிலொருவன் நாட்டமுடன் தான் வணங்கி
நன்று நன்று என்தாயே நமச் சிவாய சிவமெனவே
குன்றாமல் அடி பணிந்து கோலாகல மாகவேதான்
தால மரந் தனி லேறி சகல தொழில்தா னமைத்து
கபாலமு தான் நிறையக் கறந்தானே அமுதமதை
கொண்டு வந்து என்தாயே குடியுமென்று தான் கொடுக்க

(வலங்கையருக்குக் காளி அருள்பாலித்தல்)

அண்டர் முத லனைவருக்கும் அமுதமது தான் பகிர்ந்து
உண்டு களி கூர்ந்தவர்கள் உபதேச மென்றறிந்தார்
வண்டுறையும் கூந்தல் நல்லார் மக்களையு மருகழைத்து
நன்று நன்று மக்காள் நீர் நமக்கு மிந்த மந்திரத்தை
இன்று போல் என்று மப்பா எந்தனக்குப் பகிர்ந்திடுங்கோ
எழு பேரும் நீங்களப்பா எழுநூறு பேராகி

வாழும் புவிதனில் நீங்கள் மனுப் பெருகி வாழுமென்று
திருந்த அம்மை தாமுரைத்து சிறுவர்கட்கு உதவிய தாய்
மருந்து மூலியானதையும் மக்களுக்குத் தானீந்து
சென்றிருந்தாள் தாயாரும் சிறந்த புட்டாபுரமதிலே

(பனங் கொட்டைத் தோன்றுதல்)

நன்றெனவே அவளிருக்க நாடதிலே வளர்ந்த பனை
பத்தினியாய் நின்றபனை பாரித்துப் பாளை வந்து
சத்தியுடன் காய்த்த கனிதனை யெடுத்துக் கடலிலிட்டார்
மஹாதேவ ரருளால் மா லயனும் ருத்திரரும்
சிவலோகத் தெய்வார்கள் சேர்ந் தமுதம் கடைகையிலே
பதினாலு உலக மெய்க்கப் பனங்கொட்டைதான் தோன்றியதே
அதை யெடுத்துத் தான் பார்த்து அல்லோரும் மனம் மகிழ
இந்திரரும் நாரதரும் இருஷிகளும் முனிவர்களும்
சந்திரரும் சூரியரும் தானவரும்தான் கூடி
ஆரும் நிகரில்லாத அருள் முனிவன் புத்திரரும்
வாருமென்று மன மகிழ்ந்து வானவர்கள் விடை கொடுத்து
வன முனிவன் புத்திரரே வாழ் வலங்கை வீரர்களே
பனங் கொட்டையைத் தான் புதைத்து பயிராக்கி நீங்களெல்லாம்
தொண் டிறை சூழ் பூலகில் தினந்தோறும் தாலமதை
பண்டுபோல் இந்தமுதை பதனமதாய் இறக்கி வைத்து
மண்ணுலகில் வாழுகின்ற மனிதருக்குத் தானீந்து
விண்ணுலகி லுள்ளோர்க்கும் வெகுவாகத் தான்படைத்து
பங்கு திரி சூலியம்மை பட்சமது மறவாமல்
நுங்கு பனங்காய் கிழங்கு நுண்ணிய தோ ரின்னமுதம்
எப்போதும் நீங்களுமோ இன்பமுடன் தானருந்தி
தப்பாமல் தாரணியை சங்கையுடன் தானாள்வீர்
தாருதனை வென்ற சிங்கம் ஜகத வீர ராஜ னென்று
பேர் கொடுத்து இவர்களுமோ பிரபலமா யிருக்கையிலே

(சமிகரன், விகடனை வெல்லுதல்)

தாருதனுக் கிளைய தம்பி சாமிகரனாம் வீரனவன்
வாரு மென்றான் போரதற்கு மகாளி புத்திரரை
அந்தவுடன் மாகாளி ஆயிழையுங் கோபமுடன்
அன்று வந்த சமிகரனின் அழகு தலை துணியுமென்றார்.

(வேறு)

மாகாளி ஏவிவிட மைந்த ரேழுபேரும்
வந்த தொரு சமிகரனை முட்டியவர் பொருது
தோதகமாய் வந்து பல தூதரையும் கொன்று

துடிய னந்த சமிகரனைத் திடீரெனவே கொன்றார்
காஞ்சங்கட்டி வச்சகராய் கெந்தருவனுக்காக
கட்டழகன் விகடனையும் வெட்டித் தர மறுத்தார்
ஆஞ்ச காயக் கெந்தருவன் பத்தினி தன் மக்கள்
ஆயிழைமா ரேழு பெண்கள் தன்னை மணஞ் செய்தார்
மணமுடித்து மக்கள் பெற்று வளர் தொழிலும் வருத்தி
மகாதேவ ரருளாலே வாழ்ந்திருக்கும் நாளில்

(கரிகாலச் சோழன் வலங்கையர்க்குச் சிறப்புச் செய்தல்)

இனம் போல வலங்கை எழுநூற்றுவர்க ளிருக்க
ஈச னருளால் சோழ ராசனையுங் கண்டு
கண்டவுடன் கரிகாலச் சோழனவன் மகிழ்ந்து
காவலர்க்கு வரிசைசெய்து ஆதரித்துச் சொல்வான்
இன்று முதலென் மேலே மறு மாற்றான் வந்தால்
எனக் குதவியாக நின்று செயித்துத் தரவேணும்
கேளக எந்நாளும் இரு மெனவே யிருக்க
கெட்டவனும் சம்பரனும் படை யெடுத்து வரவே
சோழனுட படையுடனே சான்றோருங் கூடி
சுறுக்காகச் சம்பரனை வெட்டித் தர மறுத்தார்
சம்பரனை முடியறுத்து ரெட்டைச் சங்கும் பறித்து
தா னெதிரி யில்லாமல் சோழனுட னிருக்க
வம்பாகக் கலியாணன் படையுடனே வந்து
வளர் சோழ மன்னனையும் வாக்குடனே எதிர்க்க
சலியாமல் கலியாணன் றனை வலங்கை வேந்தர்
சங்கரித்தார் சோழனுட படையுடனே கூடி
கலியாணன் தனை வதைக்க கன சோழன் மகிழ்ந்து
காவலர்க்குச் சிவிகை குடை கன வரிசை ஈந்து
சீராகச் சான்றோர்க ளிருக்கு மந்த நாளில்
திரு வளரும் சோழனுடன் அமந்திகனு மெதிர்த்தான்
ஆரும் வெல்லக் கூடாத அமந்திகனைச் சான்றோர்
அல்லோருஞ் சென்று வொரு நொடிதனிலே கொன்றார்
அமந்திகனை வெட்டி வென்று வலங்கை எழுநூற்றோர்
அவனிடத்தி லாறு மணிக் கேடயமும் பறித்தார்
அமந்திகராச னெனவே சோழனும் பேர் கொடுத்து
ஆதரித்து சகோதரன் போலிருக்குகின்ற நாளில்

(வலங்கையர் வணிகர்களுக்கு உதவுதல்)

இலங்கை வணிகர் முதலாய எழுநூற்றோர் தம்மை
இயல் சாதி பேதங்க ளில்லாத வண்ணம்
வலங்கை இடங்கை யெனவே வளமையதும் வகுத்து

மன்னவனு மாறிலொன்று கடமையதும் வாண்டி
அச்சமொன்று மில்லாமல் மன்னன் அரசாள
அரு ளிடங்கைக் குலத்தோர் அவர்கள் மதம் மீறி
இச்சையுடன் கறையானாய் பட்டு முதலாக
இயல் வணிகர் பொருளதனை எங்கும் அரித்திடவே
வணிக ரெல்லாம் மனங்கலங்கி வந்தவினை சொல்ல
வாழ் வலங்கை மன்னவர்கள் மனமது பொறாமல்
கணிசமுள்ள வணிகருக்காய் கறையானை வெல்ல
கவுதாரி வடிவெடுத்துத் தின்று குல மறுத்தார்
பாழாகக் கறையானைத் தொலைத்தற்கு மகிழ்ந்து
பத்திர மாகாளி மக்கள் தன்னைத் தோள் மேலேற்றி
தோளேறும் பெருமானெனச் சோழன் முன்னே விட்டு
சூழ்ந்த வினை தீர்ந்துதென வணிகேசர் போனார்
ஆரமணி செட்டியின் தோளேறும் பெருமாளாய்
அருள் வலங்கை எழு நுற்றோர் பட்டமதும் பெற்று
சீரணியுஞ் சோழனுடன் வலங்கைய ரெல்லோரும்
சிவனருளாலே யுலகில் சிறப்புடன் இருந்தார்

(கடவூர்தச்சன் மனைவியின் கற்புத்திறத்தால் சோழ நாட்டில் மழை பெய்தல்)

(வேறு)

இருக்கு மந்த நாளையிலே இயல் சோழன் ராச்சியத்தில்
திரு மாரி பொழியாமல் தேசமதில் விளைவு குன்றி
அனைவோரும் மலங்கிடவே அரசனவன் விசாரமதாய்
மனுக்குலத்தில் கற்பு நிலை வரம்பழிந்து போனதுவோ
என்ன குறை தானோவிது இங்கு மழை யில்லை யென்ன
எண்ணமிடும் புரவலனை இருந்தவர்கள் மனமகிழ
கற்பழிந்து போனதென்ற காவலனை முகம் நோக்கி
மற் பயிலுந் தோளானே மாந்தை குலந்தனி லொருத்தி
கற்பு நிலை கண்டேன் நான் கரிகாலச் சோழ மன்னா
அற்பமென்று எண்ணாதீர் அரிவை கற்பை நானறிந்தேன்
செப்பக் கேள் மன்னவனே சிவனாரின் திருவானை
தப்பாமல் நானுமொரு தாலமதி லேறி நின்றேன்
கண்ணாளர் வங்கிசத்தில் கடவூர்த் தச்சன் மனையாள்
தண்ணீர் தானிறைக்க வந்தாள் தனே துலாவாழ் கிணற்றில்
வாங்கித் துலா இறைக்கயிலே மாந்தையில் வாழ் தச்சன் வந்து
தாங்கி யவன் கதவு தட்டி தண்ணீர் தா பெண்ணே யென்றான்
வார னென்றந்த மங்கை வலித்த துலாதான் நிறுத்தி
கூறினாள் தண்ணீ ரவர்க்குக் கொடுத்து வரும் மட்டும் நில்லு
என்று சொல்லி மங்கை யவள் இருந்த தண்ணீர்தான் எடுத்து

சென்று தண்ணீர் மிகக் கொடுத்து திரும்பி யவள் வருமளவும்
நின்றது காணந்த மங்கை நெறியுடனே விட்ட துலா
என்றரசனவன் கேட்க ஏத்த வலங்கை யானவன்
உரைத்த மொழிதான் கேட்டு உலகாண்ட சோழமன்னன்
விரைய அந்த தச்சனுடன் மெல்லியையும் வரவழைத்து
கடவூரு தச்சா வுன் கன்னியுட கற்புநிலை
கெடுதியிலை நானறிந்தேன் கிலேசமது தொலைந்திடவே
உன் மனைவி திருவாக்கால் உலகில் மழை பொழிந்திடவே
இன்பமுடன் சொல்லிடுகில் எங்கும் மழை பெய்திடுங்காண்
என்ற மொழி தனைக் கேட்டு இன்பமுற்று தச்சனவன்
வந்த மனையாள் தனையும் மழை பெய்யச் சொல்லலுற்றான்
அன்று அந்த மங்கையரும் அருள் மாந்தைப் பதியில் வளர்
முன்னவனாம் விநாயகனை மொய்குழலு மடி பணிந்து
கற்புநிலை நிறுத்தி வைத்த கறைக்கண்டனார் திருமகனே
அற்பமென்று சோழனெனை அவமதிப்பாய் நினையாமல்
பெய்யாத பெருமழையும் பேருலகிற் பெய்ய வேணும்
கற்புரைத்த காவலவன் கழுத்ததுவும் தெறிக்க வேணும்
பூவுலகில் மாரி பெய்ய புகர் முகனே யருளு மென்ன
பூவையரும் வருந்திடவே புரமெரித்தோன் திருமகனும்
வருணனையும் நினைந்திடவே வளர் மாரி பெய்திடுமாம்

(மழை பொழிய உதவிய சான்றோரை சோழன் சிறப்பித்தல்)

அரிவை நல்லாள் கற்புநிலை அறிந்திருந்து சோழ மன்னன்
காரிகையாள் கற்பதனால் கனமாரி பொழிந்திடுமாம்
ஏரி குளம் காவணைகள் எல்லாந்தான் பெருகிய பின்
கற்புரைத்த சான்றவர்க்கு கைவளையுந் தான் கொடுத்து
இப்புவியில் தண்டிகையும் இறை கூலியுங் கொடுத்து
சான்றோனெனப் பேர் கொடுத்து தரணிதனில் வாழுமென்றார்

(காவிரியில் வெள்ளப் பெருக்கு ஏற்படல்)

ஆண்ட பத்திரகாளியுட அன்பு கொண்டு வாழ்ந்திருந்தார்
தென்னன் திருச் சோழ மன்னன் நிறையாண்டு இருக்கையிலே
வன்னமுள்ள மாரி பெய்து மறிந்து கடல் பூமி வரை
தாங்காமல் வெள்ளமது தரியாமற் காவேரி
எங்கேதான் போவோமென எழுந்தோடி வெள்ளமது
அணை யுடைக்கக் காவேரி அப்போது சோழனவர்
துணையாக ஆள்க்கூட்டி தொல் புவியி லுள்ளவரை
காவேரி ஆறுடைப்புக் கரை யடைக்க வந்தவரை
மாவேறுஞ் சோழ மன்னன் மனம் மகிழவே யுரைக்க
அணையடைக்கக் காவேரி அடைகடல் போற் சீறியதே
கண மதனில் பூமாரி காவேரி தானுடைக்க

(காவிரி அணை அடைக்க சோழன் வழி கேட்டல்)

வானவரே முனிமாரே மந்திரிமாரே நீங்கள்
கான மதி லுடைப்பெடுத்து கரையேறிப் போறவேள்ளம்
போற வெள்ளம் தன்னை யிப்போ புரமெரித்தோர் தம்மாணை
மாறாம லணைகள் கட்டி மனுநீதி தனைக் காக்க
இப்புவியில் வல்லவர்கள் எவர்காணும் செப்பு மென்ன

(வெள்ளாளன் பொறாமையால் சான்றோரால் மட்டுமே அணையை அடைக்க முடியும் எனல்)

அவ் வுரையைத்தான் கேட்டு அரசனுட முகம் பார்த்து
செப்புவானாம் கோள்வார்த்தை நூறுகுடியிலே ஒருவன்
மெய்ப்பாக புரமெரித்த விஸ்வனாத ரருளாலே
எல்லோரும் மெய்த்திடவே ராசபட்டம் பெற்று வந்த
வல்லாருந் திண்புயத்தான் வலங்கை எழுநூற்றுவரை
தானழைத்தால் வெள்ளமதை தடுப்பார்க ளென்றுரைத்தான்

(சோழன் சான்றோர்களை அணையை அடைக்கக் கூறுதல்)

ஈனமில்லா நெஞ்சனெனும் இயல் சோழ மன்னவனும்
அந்த மொழிதனைக் கேட்டு அரிய திருச் சோழ மன்னன்
சிந்தையது மிக மகிழ்ந்து சிவகாமி புத்திரரை
வாருமென்று வலங்கையரை வரைவழைத்து மன்னவனும்
சீருடனே மகிழ்ந்தவனும் சிவகாமி புத்திரரை
வீரர்களே இவ்வுலகில் வித்யாதர முனிவன்
ஆரபாரமாய் பயந்த அரிய வலங்கைத் தலைவா
சீரான அமந்திகனை சிரசறுத்த மா தீரா
காராளைக் கையானே காவேரியாறுடைப்பை
சங்கையுடன் நீங்காளிப்போ தானடைக்க வேணுமென்றார்

(சான்றோர் அணை அடைக்கும் தொழில் செய்ய மறுத்தல்)

எங்கும் புக ழெழு நூற்றோர் ஏற்ற மன்னன்தனை வணங்கி
மங்கை யிட பாகம் வைத்த மகாதேவர் திருவாணை
எங்கள் கலத்தா ரடைக்க இயல்பல்ல காண் மன்னவனே
என்று சொல்லி வலங்கை யுள்ளோர் இவ்வாறு உரைத்த பின்பு
நன்றெனவே சோழ மன்னன் நகைத்தானே சினமுடுகி
ஒன்று மறியாதவர் போல் உரைத்தீரே வலங்ககையரே
இன்று நம்மோ டுரைத்த மொழி இயல்பல்ல காணிப்போது
வீணாட்டமாய் நீங்கள் மெத்த வலுப் பேசுகிறீர்
ஆணாட்டஞ் சொல்லி மன்னன் அணையிலே மண் சுமவு மென்றான்

தென்னவன் றன் மிகச் சீறி சினத்துரைக்கத் தான் கேட்டு
வன்னஞ் சிறந்த புயத்தோர் வலங்கை உயர்கொண்டவர்கள்
என்ன பணிவிடையாலும் ஏவிடவே நாம் போவோம்
அன்ன பரி பாலகர்தான் அணை யடைப்ப தில்லை யென்றார்
சொன்ன மொழிதான் மறுத்த துரைத்தனங்கள் பேசுகிற
இன்னவராம் சான்றவரை இப்போது அரை நொடியில்
பிடியுங்கோ வென்றிடவே பேணியவர் தான் வளைந்து
அடிபிடியுஞ் சண்டையுமாய் அவர் பிடித்துக் கொண்டு வந்தார்
எனக்குதவி யென்றிருந்தேன் இப்போ வந்த இடைஞ்சலுக்கு
கனக் குறை வென்றே நீங்கள் கடுத் துரைத்தீ ரென்னுடனே
அடுத்து மண்ணைத்தான் சுமந்து அணையடையா திருந்த துண்டால்
6தாடுத்த வழக்கிழந் தொருநாள் சோழனுமோ விடுவதில்லை
விடுவதில்லை என்றுரைத்த வீறுடைய மன்னவனே
படுவதுவே காலம்வந்தால் பட்சமுள்ளோர் செறுப்பாரோ
செறுத்தாலும் விடுவேனோ தேசத்தோருடன் கூடி
மறுத்து மொழி பேசாமல் மண் சுமவும் வலங்கையரே
மண் சுமவு மென்று மன்னா மரியாதைக் கொடுத்தீரோ
மன்று இதில் கூடை தொட்டு மண் சுமப்பதில்லை யென்றார்

(சோழன் கோபம் கொள்ளுதல்)

(வேறு)

கூடை தொடோ மென்ற குலச் சான்றவரே கேளும்
கூறுமொழி கேளாட்டால் மோசம் வருமென்றார்
மோடி யுன் சொல்லிடவே வலங்கையர்கள் தாமும்
முடிவு வரு மிதனாலே பின்னறியலாங் காண்
அறியலா மென்றே யுரைத்த சான்றோரே கேளும்
அட்டி செய்து உங்களையும் கூடை தொடச் செய்வேன்

(சான்றோர் அணை அடைக்க திட்டவட்டமாக மறுத்தல்)

குறியாகக் கூடை தொடுமென்ற குல மன்னா
குலத்துக் கிழுக்கான மொழி கூறாமல் காரும்
இவ்வுலகி லெல்லோரும் செய்யும் வேலை செய்தால்
இழுக்கேது வசையேது எல்லா மொருப்போலே
எல்லோரு மொருப்போலே என்றுரைத்தீர் மன்னா
எக்குலமும் சுக்குலமோ எங்களுக்கு மொப்போ
ஒப்பாருவரில்லை யென்ற சான்றவரே கேளும்
உறவு வார்த்தைப் பேசினதால் திறமுரைத்தீர் நீங்கள்
செப்பமுட னுற வுரைத்தோம் அன்பு கொண்டு நாங்கள்
செய்யா வேலை செய்யச்சொன்னால் மோசம்வருங் காணும்
மோசம் வருமென்று மெத்த ஞாயம் பறைந்தவனை

முன்பு விட்டுப் பார்ப்பதென்ன பிடித் தடியு மென்றார்
அடித்தாலுங் கூடை தொட்டு மண்ணதையும் வெட்டி
ஆறுடைப்புக் காவிரியில் வேலை செய்யோம் நாங்கள்
வேலை செய்யோ மென்ற எழு நூற்றுவரே கேளும்
வீறுரைத்தீ ரெம்முடனே ஞாயமில்லை கேளும்
ஞாயமில்லை யென்று மன்னன் உரைத்த மொழி கேட்டு
நாங்களுமோ கூடை தொடோம் மண் சுமவோ மென்றார்
ஆலமுண்ட சிவனாணை அம்மை யுமை யாணை
ஆறுடைப்பில் வேலை செய்ய வேணுமென்றான் மன்னன்
ஏலமே நீர் சொன்ன சொல்லை எழுநூற்றார் நாங்கள்
இல்லையென்று சொல்வதில்லை இது உமக்கு அழகோ
அன்று புர மெரித்தவர் மேலாணை யிட்டீர் மன்னா
ஆனாலுங் கூடை தொட்டு மண் சுமப்பதில்லை
தண்டரள் மார்பழகா சோழ மன்னா நாங்கள்
தலை போன போதிலுமோ மண் சுமப்பதில்லை

(சோழனிடன் மந்திரிமார் சான்றோரின் பெருமையைக் கூறுதல்)

இல்லை யென்று சொன்ன எழுநூற்றுவரை யிப்போ
இட்ட அணைதனில் நிறுத்தி மண் சுமக்கச் செய்ய
வல்லவ ராரென்று சொல்லி சோழ மன்னன் கேட்க
மந்திரிமார்தான் வணங்கி ஏது சொல்லுவாராம்
வணங்கி நின்று மந்திரிமார் சோழ மன்னா வுந்தன்
மநுநீதி தா னொழியும் வலங்கை மன்னரால்தான்
குணங்கள் தனை யறிந்திலையோ தாருதனைக் கொன்று
கூளி கணமானதுக்கு உதிரமுண்ணக் கொடுத்தோன்
சமிகரனாம் வீரனுடன் வரும்படையைக் கொன்று
தர மறுத்துக் கொடி விருது பறித்து வந்த தீரர்
விரைவினுடன் சம்பரணை பொருது வெட்டி வென்று
வெற்றி ரெட்டைச் சங்குதனை வருத்த வந்த தீரர்
சீரான கலியாணன் றனை யுனக்காய் வென்று
சிறையினுடன் ஆறு மணிக் கேடயத்தைப் பறித்தோர்
மாறுபடா அமந்திகராயன் தனையே வெல்ல
மங்காமல் புட்கரத்தீ வானதிலே செல்ல
விந்தையினால் கனகமதி லோடி யவன் சென்று
வென்று கேடயம் பறித்து வந்தவர்கள் காணும்
கெந்தருவனான தொரு விகடனையுங் கொன்று
கீர்த்தியுட னேழு மக்கள் தன்னை மணஞ் செய்தோர்
காசினியில வணிகருக்காய் கறையானை வெல்ல
கவுதாரி வடிவெடுத்து தின்னு குல மறுத்தோர்
மாசில்லா வணிகருக்காய் கறையானை வென்று
மாணிபங்கள் காத்த குலச் சான்றோர்கள் காணும்

காளி வளர்த்திட்ட வீரச் சான்றவார்கள் தனையும்
காசினியில் வணிகரவர் தோளில் வைத்துச் சுமந்து
தோளேறும் பெருமாளெனத் திருப்பேரு பெற்றோர்
தொல்லுலகில் தாலமதில் அழுது கண்டோர் காணும்
கந்தர் திருவாணை யுந்தன் ஈசருக்கு முன்பில்
கலிங்கனெனப் போர் கொடுத்து வந்த திருப்பாலர்
வந்த வலங்கைத் தலைவர் வீரமது சொல்லி
மன்னவனே இன்னம் ரெம்ப வுண்டுமெனவேதான்
கண்ட வலங்கைத் தலைவர் தன்னை யிப்போ மன்னா
காவேரி யாறுடைப்பில் கரியைவிட்டு யிடற
மண்டலத்திற் சிவகாளி யறிந்ததுண்டா லிப்போ
மனுநீதி தானழியும் மன்னவனே என்றார்.

(மண்சுமக்க மறுத்தவரின் தலையை யானைக் காலால் இடறச் செய்தல்)

(விருத்தம்)

மன்னவா என்று சொன்ன மந்திரிமரை நோக்கி
தென்னவன் கரியை ஏவ சிறப்புட னேதோ சொல்வான்
தன்னிக ரொருவ ரில்லாச் சான்றவர் தலை இடற
வன்னமாகியதோர் யானை வந்து முன்நின்றவாறே.

(விருத்தம்)

ஆனைதான் வந்தபோது அருள்முனி ஈன்ற பாலர்
சேனைக்கு நடுவே நின்று செப்புவார் சோழனோடே
கோணகம் உரையா நாங்கள் கூடை தான் தொடுவதில்லை
ஆனைதான் வந்தா லிப்போ ஆனதைப் பாரு மென்றார்.

(வேறு)

ஆனை வந்து நிற்கக் கண்டு அரிய வலங்கைத் தலைவர்
தேனனையும் மொழியுடைய தென்னர் கரிகால மன்னா
தந்திதனை ஏவி யெங்கள் தலைகளைத்தான் இடறிடினும்
உந்தன் திருவாணை மன்னா ஒரு நாளுங் கூடை தொடோம்
என்று மிக வலங்கை மன்னர் இவ்வாறு தானுரைக்க
சென்று கரிகால மன்னன் சினத்தவனும் கரி யேவி
ஆங்கொருவன் தனைப் பிடித்து அணையிலிட்டு மண் சுமந்து
சான்றோரில் வொருவனையும் தலையதனை யிடறிடவே
தலையுருண்டு தானோட தானவரும் வானவரும்
அலை யாழி சூழ் புவிக்கு அனர்த்தம் வருமென்று சொன்னார்
மடமடனவே தலைதான் வானவர்கள்தான் கேட்க
குடுகுடென ஓடினும் கூடை தொடோ மென்றோட

கேட்ட பின்பும் சோழ மன்னன் கெடுமதிகன் தோற்றாமல்
ஈட்டமுடன் சான்றோரில் இன்ன மொருவனைப் பிடித்து
கொண் டணையிலே நிறுத்தி கொடிய மத கரியாலே
தண்டனைக்கா யவனுடைய தலையதனை யிடறுமென்றார்
அப்போது மந்திரிகள் ஆனைப் பாகனை யழைத்து
இப்போது இவன் றலையை இடறு மென்று தானுரைத்து
திண்ணமுடன் யானையினால் திறவணை யுள் நிறுத்தி
எண்ணமின்றி யவன் தலையை இடறிடவே தலையறுந்து
அத்தலையும் உருண்டோட அரசனுட செவி கேட்க
வாய்த் தலையோ இத்தலையும் புகழ் சோழா வென்றோட
சுற்றி நின்றோர் தாம் கேட்க சோழ மன்னன்தான் கேட்க
அத்தலைக்கு இத்தலைதான் அறிவு கெட்ட வாய்த்தலையோ
இத்தலை போ லெங்கள் தலை எல்லாந்தா னிடறிடினும்
எத் தலமும் கூடை தொடோமென்று தலை யோடியதே

(சோழன் மனம்மாறி சான்றோரை விடுவித்தல்)

அக்குரலைக் கேட்டபோது அறிவு வந்து சோழ மன்னன்
பக்குவமாய் மந்திரிகள் பழமை சொல்லக் கேளாமல்
இக் கருமம் செய்தோமே எனச் சோழன் மனதி லெண்ணி
தக்கதொரு வலங்கையரைச் சதித்தோமே யெனக் கலங்கி
நின்று மனந் தன்னிலுற்று நேருடனே யரு கழைத்து
மன்றுதனி லுங்களுக்கு மா பாவஞ் செய்தேனே
இன்று உங்கள் மனை தனிலே எல்லோரு மொருப்போலே
நன்றியுடன் போங்களென நவிலலுற்றான் மன்னவனும்

(காளியிடம் நடந்ததைச் சான்றோர் கூறுதல்)

மன்னவனா ருரைத்திடவே மாகாளி புத்திரர்கள்
அன்னை பத்திரகாளி யம்மை அகமதில் வந்தெல்லோரும்
நின்று மலரடி போற்ற நிமலை யந்த மாகாளி
கண்டு உங்கள் முகம் வாடக் காரண மேதெனக் கேட்டு
பொன்னான பாலகரே புதல்வ ரிருபேர்க ளெங்கே
என்னுரையைக் கேளாமல் எங்கு சென்றீ ரெந்தன் மக்காள்
என்றிடவே வலங்கையர்கள் ஏதுரைப்பார் தாயார்க்கு
நன்றியுடன் சோழ னெம்மை நாடியழைத்தான் போனோம்
போனவுட னெங்களையும் புகழ்ந்து மனங் கொண்டாடி
மாநிலத்தோர் கொண்டாட வரிசை பல தா மீந்து
அணையடைக்க வேணுமென்றான் அருள் சோழ னெங்களையும்
சண நேரந்தன்னி லணை தானடைக்க வேணுமென்றான்
ஆடரவில் பள்ளி கொள்ளும் அச்சுதனா ருண்டெனவே
கூடை தொடோம் அணையடையோம் கொற்றவனே யுன்பேரில்
படை வாரதுண்டானால் பாரில் வெட்டி மீண்டிடுவோம்
தடையில்லை யென்றே நாங்கள் சடையாமல் சொல்லிடவே

இவ்வரசன் கெருவமதால் ஏனெனவும் கேளாமல்
அவ்வணையில்தான் நிறுத்தி ஆனைக் காலா லெற்றி விட்டான்
மடமடென மாகாளி மக்கள் சிர மோடையிலே
குடுகுடென ஓடினும் கூடைத் தொடோ மென்றோட
அச் சத்தந் தனைக் கேட்டும் அறிவிலாச் சோழனவன்
உச்சமுடனே யடுத்து ஒருவன்தலை இடறிவிட்டான்
அத்தலை தா னோடுகையில் அருள் சோழா இத்தலையும்
பொய்த்தலையோ வென்று சொல்லிப் புலம்பியது ஓடியபின்
மங்களமாய் வாழ்ந்திருக்கும் மாகாளி புத்திரரே
உங்களுட ஊர் தனக்கு உவந்தே மென் றுரைத்தான்

(காளி கடுங்கோபம் கொள்ளுதலும் மழையின்மையும்)

என்ற மொழிதான் கேட்டு எரியெனவே கண்சிவந்து
மன்று தனில் சோழனுட வளநகரை யழிப்பேனென
பாரில் மழை பொழியாமல் பத்திர மாகாளியம்மை
சீறிய சொல் வருணனையும் சீக்கிரத்தில் தாமழைத்து
பன்னிரண்டு வருடம் மட்டும் பாரில் மழை பொழியாமல்
கன்னி நல்லாள் சட்டங்கட்டி கானகத்தில் தவசிருந்தாள்
கானகத்தில் தவசிருக்க கனசோழன் ராச்சியத்தில்
கான மழை பொழியாமல் கள்ளியிலும் பால்மாறி
பணமொன்றுக்கு உழக்கரிசி பார்மீதில் கிடையாமல்
கிணற்றிலும் நீரில்லாமல் கீழ் நோக்கிப் போய்விடவும்
மாதமொன்றில் மூன்று மழை மாறாமல் பெய்த இடத்தில்
நீதமுடன் மூன்று துள்ளி நிலமதிலே வீழாமல்
ஏரி குளம் கூவ மெல்லாம் எங்குமே நீரில்லாமல்

(சோழன் சாஸ்திரக்காரனை அழைத்து விபரம் கேட்டல்)

மாறிடவே மன்னவனும் மனங் கலங்கி ஏது செய்தான்
வேதியரில் சாஸ்திரங்கள் விவரமுடன்தான் படித்த
சோதிடனைத் தானழைத்து சொற் பொருத்தம் கேட்டனனே
சுற்றிவைத்த பொருத்தத்திலே சொல்லுவானாம் சோதிடனும்
சத்தி முனி புத்திரரைத் தான் வதைத்த பாவமது
இப்போ வந்து சூழ்ந்தது காண் இம்மட்டோடே போகாது
செப்பமுள்ள காளிதனைச் சீக்கரத்தில் வந்து கண்டால்
வினை யொழியும் மன்னவனே வேகமதில் போ நீ யென்றார்

(சோழன் காளியைத் தொழுதல்)

தனை மறந்து சோழனவன் தாய் காளிதனைத் தொழுதான்
தொழுது நின்ற சோழனைத்தான் சுந்தரியாள் தான் சீறி
பழுதுபட சபிப்பேனென படையெடுத்தாள் மாகாளி
மாகாளி கோபிக்கவே மாறி யந்தச் சோழ மன்னன்

(சான்றோர் காளியைச் சமாதானம் செய்தல்)

தாய் காளிதனைத் தொழுதான் சான்றோர்க ளது சொல்வார்
வாளனைய விழியாளே மாகாளித் தாயாரே
சோழனவன் தனை வதைத்தால் தொல் புவியோர்க் கேராது
மனக் கவலை வையாதே மாதங்கியே அபிராமி
உனக்குப் பழி வாங்கவென்றால் உத்தமியே சொல்லுவது கேள்
எங்கள் தனைப் பெற்றவளே ஈஸ்வரியே ஈசருக்கும்
சங்கையுடன் தாயாக வந்துதித்த சங்கரியே
பழிக்குப் பழியானது தான் பாரறியவே யுனக்கு
விளிக்கு முன்னோர்தான் வேந்தன் வீரியமாய் தந்ததுண்டால்
தந்ததுண்டால் என் தாயே தார் வேந்தன் செய்த குற்றம்
என் தாயே நீர் பொறுத்து ரெட்சிக்க வேணுமென்றார்

(சோழன் வெள்ளாளனைப் பலியாகத் தருதல்)

அப்போ மா காளியம்மை அக மகிழ்ந்து கொண்டாடி
மெய்ப்பான சோழனையும் விருப்பமுடன் தானழைத்து
சோழ மன்னா உந்தனக்காய் தொல்புவியி லெந்தனுட
வேழமான மக்கள் சொல்லும் மிக மறுத்துத் தட்டாமல்
உனக்காகப் பொறுத்தோமென்று உத்தமியாள் தானுரைக்க
எனக்காகப் பொறுத்தாயே என்தாயே யென்றுருகி
என்ன பழி வேண்டுமென ஏற்ற புகழ் சான்றோர்கள்
அன்னந் தருங் கொடைக்கரனே அரச மன்னா நீர் கேளும்
எங்களுக்குக் கோளதுதான் இயல்பாய் முன் நாளுரைத்த
அங்கவரைத் தான் பிடித்து அன்பாகத் தந்ததுண்டால்
செப்பமுட னெங்கள் பழி தீர்ந்திடுங் காணென் றுரைத்தார்
அப்பொழுது மந்திரிமார் அது கருமமென்று சொல்லி
குறும்பு சொல்லி அணையடைக்க கோளுரைத்தோ னவன் றனையும்
மறுத்து மொழி சொல்லாமல் மன்னனே கொடுவுமென்ன
சிறுகுடியில் **வெள்ளாளனை** சிவகாமி புத்திரர்க்கு
உறுபிடியாய் தான் பிடித்துன் உற்ற மைந்தர் பழிக்காக
தந்தேன் பழியடிமை என்று தப்பாமலே கொடுத்தும்
விந்தை செறி சோழ மன்னன் விரைய எழு நூற்றோர்க்கு
பட்டுடனே குதிரைபடை பாற் பசுவம்தான் கொடுத்து
திட்டமுடன் கூடை தொடா தீரர் குலச் சான்றோரென
அச்சமற்ற பூவுலகில் அரச ரெல்லோருங் காண
மெச்சும் புகழ் கீர்த்தி கொண்ட **வீர மார்த்தாண்ட** னெனவே
பேர் கொடுத்துச் சோழ மன்னன் பெருங்காளி தனைத் தொழுது
பார்புகழ நின்றவனும் பரிவினுடன் மழை வாங்கி
மாதமொரு மூன்று மழை வருஷிக்க விடை வாங்கி

(ஈழவனென பெயர் பெறுதலும் சிறுகுடியோர் ஏவல் செய்தலும்)

தாதுசெறி பாலகரே தக்க பழி வாங்கு மென்ன
விந்தை செறி மலர்மார்பன் வித்தியாதரன் புதல்வர்
கொண்டேன் நான் பழியெனவே குடுமிதனைப் பிடித்திழுத்து
இன்று இழு மிழுமெனவே ஈழவனென் றெல்லோரும்
ஒன்று போல தான் கூடி உரைத்திடுங்கோ என்றுரைக்க
அன்று முதலாக அவர் அருள் முனிவன் புத்திரர்க்கு
சென்று சிறு குடியோர்கள் செல்வியையும் தானிருத்தி
இன்றிவர்க்கு நாமு மிப்பே ஏது தொழில் விடுப்போமென
நன்றியுள்ள காளி மைந்தர் நன்றாக மனம் மகிழ்ந்து
ஈசனுக்கு முன்னாளில் இவர் கலிங்கம் செய்தோர்கள்
தூசு நெய்யும் வாறுதன்னை சொல்லிப் படித்தே கொடுத்து
காசி விஸ்வ ரருளாலே கங்காவி புத்திரர்க்கு
தேசிகனார் தன்னருளால் சிவபாக்கியம் கொடுத்து
தங்களுட வரிசைகளும் சான்றாண்மையும் கொடுத்து
எங்களுட பேரு சொல்லி இருந்து பிழை என்றுரைத்தார்
அந்த மொழிதான் கேட்டு அரிய சிறு குடியோர்கள்
சிந்தையது மிக மகிழ்ந்து சிறந்த எழுநூற்றுவரை
அந்தி சந்தி காலமெல்லாமல் அடி பணிந்து தானிருந்தார்
கந்தமுறும் மார்பழகர் காளி புத்திரரிருந்தார்

(வலங்கைத் தலைவன் ஈழநாட்டிற்குக் குடிபெயருதல்)

(வேறு)

ஈசர முடையா ரிட்ட கோட்டைக்கு ளிருக்கையிலே
ஏற்ற வலங்கைத் தலைவ ரேழில் (ஏற்ற ...)

காசினியோர்கள் காண கரிகால னேதுவினால்
காவிரியில் ரண்டு பேரிறந்தார் (காவிரியில்...)

காந்த ரிஷி பெற்ற மக்கள் ஏழுபேரிலே யொருவன்
கனவானாய் காவேரி யாண்டான் (கனவானாய்...)

காந்தரிஷி பெற்ற மக்கள் எழுபேரிலே யொருவன்
கண்டி நாட்டு ராசாவா யானான் (கண்டி ...)

காந்த ரிஷி பெற்ற மக்கள் ஏழு பேரிலே யொருவன்
கன இலங்கை ராச்சியத்தை யாண்டான் (கன...)

காந்தரிஷி பெற்ற மக்க ளேழுபேரிலே யொருவன்
கதிர் தொண்டை நாடதனை யாண்டான் (கதிர் ...)

அப்படியே நாலுபேர்கள் ராசாவாய் மகிமை பெற்றார்
அதி லொருவன் சோழ நாடு தன்னில் (அதில்...)

செய்முள்ள கோட்டைக்குள் விருக்கையிலேதான் திகைத்து
செய்தி பலரேது சொல்லுவாராம் (செய்தி ...)

சோழனுக்கு வேணுமென்ற உதவி செய்து நாமிருந்தும்
சூதாகக் கோள் வார்த்தைக் கேட்டு (சூதாக...)

கோள்வார்த்தைதான் கேட்டு கூடை மண் சுமக்கச் சொன்னான்
கூறும் வேலை செய்யாததாலே (கூறும் ...)

தாழ்ச்சை யின்றியே நாமும் சோழன் மேலே வந்தபடை
தன்னையுமோ வேளைதோறும் வென்று (தன்னை...)

வீழ்ச்சை யின்றி நாம் கொடுத்தும் வீறுடனே சோழனவன்
விசுவாசக் கேடு செய்தான் பாவி (விசுவாக...)

சத்தி வித்தியாதரனின் தன் பாலரென்று சொல்லி
சற்றேனும் எண்ணாமலே தான் (சற்றேனும்...)

எத்திசையோருங் காண இரக்கமின்றியே யரசன்
எண்ணி யொன்றும் பாராமலேதான் (எண்ணி...)

இட்ட அணை யானதிலே இருபேரைத் தான் நிறுத்தி
யானைக் காலா லெற்றிவிட்டனையோ (யானை...)

அட்டியின்றி பட்டதலை அற்று விழுந் தோடுகையில்
அங்கு நின்றோரல்லோரும் கேட்க (அங்கு ...)
இத்தலை போலெங்கள் தலை எல்லா மிடறிடினும்
இப்பிறப்பில் கூடை தொடோமென்று (இப்பிறப்பில்...)

அத்தலைகள் சொன்னவுடன் அறிவு வந்து சோழனவன்
அல்லோரும் போங்கோ வென்று சொன்னான் (அல்லோரும்...)

இனிமேலே எல்லோரும் இத்தலத்திலே யிருந்தால்
ஏது வினை செய்வானோ அறியோம் (ஏதுவினை...)

அறியாயப் பாவியுட தேசத்தி லிருக் கரிது
அயலூரிற் போக வேணுமென்று (அயலூரில்)

ஏழுத்து நாலானதிலே இளம் பனை யுண்டாயிருக்கு
இப்போ நாம் போகவேணு மென்ன (இப்போ ...)

வாளொத்த கண்மடவார் மங்கையரும் பிள்ளையுமாய்
மா காளியைத் தொழுது கொண்டு (மாகாளியை...)

பேணியே வழிநடந்து பின் னவரையு மனுப்பி
பெருமையுடனே நடந்து போனார் (பெருமை...)

ஆணிப் பொன் திரவியமும் தேடும் பொருளு மெடுத்து
அட்டி செய்த சோழதேசம் விட்டு (அட்டி ...)

சோழதேசம் தான் கடந்து சுறுக்காகவே நடந்து
செல்ல மக்கள் தன்னையும் நடத்தி (செல்ல ...)

ஈழதேச மானதுதான் இங்கிருக்கு தென் மக்களே
என்று வழிதான் கடந்துபோக (என்று வழி...)

நாடி நடந்து வெகுவாய் நல்ல வலங்கைத் தலைவன்
நாடிழந்து ஈழ நாட்டில் வந்தான் (நாடிழந்து...)

ஏடலரும் மலை மார்பன் எழு நூற்றோர் வங்கிசத்தோர்
இனம் பனைக் கா வானதிலே வந்தார் (இளம்பனை...)

பனையின் மகிமையதும் பசுமையுள்ள பூமியதும்
பாவனையாய் கண்டு மகிழ்ந்தாரே (பாவனையாய்...)

மனைகட்டி யிருந்திடவும் வாய்த்த தொழில் செய்திடவும்
வளமுள்ள தலமென விருந்தார். (வளமுள்ள...)

(வலங்கைத் தலைவன் பனைத்தொழில் செய்தல்)

(வேறு)

ஈழத்து நாட்டிலிருந்து வலங்கைத் தலைவர்
இளம் பனை தன்னை இடுக்கி யமுது முண்டாக்கி
தேசந்தனிற் பல ஜாதியார்க் கெல்லாங் கொடுத்து
சிறப்புடன் ரெம்பத் திரவியம் தேடி யருந்தி
வாடா திருக்க மனையது தானு முண்டாக்கி
வாழ்ந்தவர் மக்களுடன் சுகித் தானு மிருந்தார்

(வித்யாதரமுனிவன் தேடிவரல்)

சுகிக் குலாவிக் குணமா யிருக்கின்ற நேரம்
குழந்தைகள் தன்னையும் பெற்று வளர்த்த முனிவர்
மக்களைக் காண மனது சந்தோசமதாகி
மகா தலம் தெய்வத் தலங்களும் தீர்த்தமு மாடி
சிக்கனமாய் காவி வேஷ்டியுடன் ருத்திராச்சம்
சேர வணிந்து சடையுடன் கண்ட சரமும்
மெய்யிலே எங்கும் விபூதி தளதளெனவே
முப்புரி நூலுடன் தண்டு கமண்டல மேந்தி
கையினில் மாத்திரைக் கோலு மிலங்கிடவே தான்

காடெங்குந் தேடினார் மக்க ளிருக்கு மிடத்தை
தேவருந் தேடித் தியங்கி வொருவாறு தேறி
செல்வரிருக்கு மிடத்துக் கடையாள முண்டே
மூவரும் முப்பத்து முக்கோடித் தேவருங் கூடி
முந்தி யமுதம் கடைந்து பனங்கொட்டை ஈந்தார்
அந்தப் பனைமர முள்ள யிடத்தி லிருப்பார்
அறியலா மென்று முனி வார நேரத்திலேதான்
சந்த மதாக இளம்பனை தன்னையுங் கண்டு
சட்டெனக் காணலா மென்ன முனியவர் தாமும்
எய்ப்பும் இளைப்புடன் எட்டி நடந்து முனிவர்
ஈழத்து நாட்டு இளம்பனைக் காவிலே வந்து

(முனிவர் வலங்கைத் தலைவனின் குழந்தையிடம் பனை அமிதர் வாங்கிக் குடித்தல்)

நட்பாய் வலங்கைத் தலைவ னிருக்கும் மனையில்
நாடி மகளே பசிக் கமுதீயெனச் சொல்ல
தள்ள தகப்பனு மில்லாமல் ரண்டு குழந்தை
தானே யிருந் தமு தின்னம் வைக்க வில்லை யென்ன
இல்லை யென்று சொல்லும் வண்டச் சான்றோரின் மகளே
ஏந்திழை பத்திர மாகாளி தந்த பாலுண்டே
தப்பின்றி அவ் வமுதானதை ஈந்திடு மென்ன
சந்தோச மாகவே மாமுனி பாதத்தைப் போற்றி
அப்டியானால் அமுத மிருக்குது சுவாமி
அடியேங் கள் தாறோம் அருந்திடு மென்னவே
குருத்தோலையா லொரு பட்டை பிடித் தந்தப் பெண்கள்
குடிக்குமளவும் அமுது கொடுத்தார் முனிக்கு

(முனிவர் மூலிகையால் இரும்பை பொன்னாக்கி மறைதல்)

கருத்தாய் தகை தீரும் மட்டு மருந்தி முனிவர்
களிப்பா யுன் வீட்டி லிரும்புண்டா லிங்கே கொடுவா
என்று முனிவர் சொல்லக் குழந்தைகள் கேட்டு
எங்கள் தகப்பனார் பாளை யரிவாள் தானுண்டு
இன்னா இருக்குது என்று முனி கையி லீய
எடுத்து முனியவர் பச்சிலை மூலி தடவி
உகப்புடனே மனையுள்ளே அடுப்புக் கனலின்
உள்ளாக வைத்து பிறகு எடுத்துனைப் பெற்ற
தகப்பனார் வந்தால் கொடுங்க ளெனவே உரைத்து
சன்னாசியான முனியும் மறைந்தவர் போனார்

(வலங்கைத் தலைவனின் குழந்தை தந்தையிடம் விபரம் கூறுதல்)

சன்னாசி போகத் தகப்பனும் வந்து மகளே
தளை நாரும் பாளை யரிவாளுங் கொண்டுவா மக்கா
என்றவுட னந்த மக்களுஞ் சென்று மகிழ்ந்து
இன்பமா யப்பச்சரே ஒரு சன்னாசி வந்து
பசிக்க தெனக்கு அமுது கொடென்றார் முனியும்
பரமார்த்தமாகச் சமைத்த அமுதில்லை என்றோம்
இசைவாகவே முனி தானும் மனது திரும்பி
ஏந்திழை மாகாளி தந்த அமுதுண்டே யென்றார்
ஆனால் தருகிறோம் வாங்கி யருந்திடு மென்றோம்
ஆமென்று சொன்னாருட னொரு பட்டை பிடித்து
தானாய்க் கொடுத்தோ மமுது அருந்தின பின்பு
தக்க வுனக்கு உபதேச மானது தாறேன்
பாவினையாக இரும்பு கொடுவா நீ யென்றார்
பாளை யரிவாள் தனையு மெடுத்துக் கொடுத்தோம்
ஆவலுடன் முனி வாங்கி மரத்தடி சென்று
அரிவாளைக் கொண்டு முனியவர் கையிலே தந்து
இந்த அரிவாளை உங்க ளடுப்புத் தீக்குள்ளே
எரிகிற தீயிலே முக்கிவை என்றவர் சொல்லி
நன்றாய் பிழைக்கலா மொன்றுக்கு மஞ்சாதே யென்று
நான் போறே னென்றந்த நல்ல முனிவரும் போனார்

(இரும்பை பொன்னாக்கும் பச்சிலையை வலங்கைத் தலைவன் அறிதல்)

ஐயரே அந்த முனி சொன்ன வார்த்தையுங் கேட்டு
அடுப்பிற் கிடந்த அரிவா ளெடுத்துக் கொடுத்தார்
கைதனில் வாங்கவே தங்கப் பிரகாசம் போலே
கதிரோ னொளியது போலவே மின்னிடக் கண்டு
மின்னிடுந் தங்கப் பொன்னானதைக் கண்டவுடனே
முனியவர் பச்சிலை எங்கே பறித்தார் மகளே
அன்று முனியவர் போன தடத்தின் வழியே
அப்படிச் சென்றவர் கண்டாரே பச்சிலை தன்னை

(மூலிகையால் தங்கத்தைக் குவித்தல்)

மாறி மனையில் போய் மட்டை யரி வாளைக் கொண்டு
மாமுனி பச்சிலை தன்னைத் தடவியே மன்னன்
தேறியே அக்கினிக்குள் வைத்து சோதித்துப் பார்க்க
திட்ட மதாக அரிவாள் பொன்னாகிடக் கண்டான்

கண்டவுட னவர் சந்தோசமாக மகிழ்ந்து
கருத்துடன் வந்தவர் ஈழத்து ராச்சியந் தன்னில்
மண்வெட்டி கோடலி தேய்த்த கொழுமுதலாக
வாங்கி மலை போ லிரும்பெல்லாஞ் சேரக் குவித்து
பச்சிலை மூலி தடவியே பாளப் பொன்னாக்கி
பாரோர் புகழவே வெங்கலக் கோட்டையு மிட்டு
கொச்சையில்லாமற் குலாவி யிருக்கின்ற நேரம்

(மகளை வீரசோழ நாடானுக்கு மணமுடித்து வைத்தல்)

குருமுனி சொல்லாலே தங்கப் பொன் கண்ட மகட்கு
அந்த மகளுக்குத் தங்கப் பொன்னம்மை யெனவே
அருமை பெறவே அழகுப் பேரிட்டு வளர்த்தார்
சந்தமதாக வளர்ந்து பிராயம் வரவே
தக்க மகட்கு மணஞ் செய்ய வேணு மெனவே
மெய்யன் வீரசோழ நாடான் றனையும் வருத்தி
மெல்லி தங்கப் பொன்னம்மைக்கு மாப்பிள்ளை யெனவே
பையப் பரியமும் வாங்கி யுலகோ ரறிய
பாவனையாக கலியாணஞ் செய்து கொடுத்து
கோட்டைக்குள் பொன்னாலே மேடையுடன் வீடும் வைத்து
கோடானு கோடித் திரவியமானது மீந்து
தாட்டிமையாகவே ஒன்றோடொன்றுங் குறையாமல்
தங்கப் பொன்னம்மையும் சந்தோசமாக யிருக்க

(வெங்கலராசன் பிறப்பு)

இருக்குந் தருணத்தில் ஈஸ்வரனா ரருளாலே
ஏந்திழையாள் கெற்பமுற்று வோராண்பிள்ளை பெற்றாள்
பெருக்க மகனுக்கு வெங்கலராச னெனவே
பிரியமா யெல்லோருங் கூடிப் பேரிட்டு வளர்க்க
நன்றாய் வளர்த் தந்த தங்கப் பொன்னம்மை மகனை
நலமான சான்றோர் குலத்துக் கதிபதியாக
வெங்கலக் கோட்டைக்குள் வெங்கலராசப் பெருமாள்
வீராதி வீர னதிதீரனாக வளர்ந்தான்

(வெங்கலராசன் திருமணம் செய்தல்)

வந்த மகனுக்கு மாலை மணஞ் செய்ய வென்றே
மன்னர் குலத்துள்ளா ராராய்ந்து பார்த்து மகிழ்ந்து
அன்ன நடையும் மயில் போல சாயலுமான
அருமையதாக இணங்கின பெண்ணொன்று பார்த்து
தாடாள ராகிய சான்றோர் குலத்தி லுதித்த
தங்க நிறமுள்ள மங்கைத் திலகமாம் மின்னாள்

மேடை மேலழகியைத் தேடுந் திரவியம் போல
வெற்றி முரசுக ளொக்க அதிர்ந்திடவேதான்
தங்கச் சிவிகையில் வெங்கல ராசனை ஏற்றி
தாரணி மெய்க்க கலியாணஞ் செய்தார் சிறப்பாய்
வங்கணமாக வலங்கைத் தலைவர் மகிழ்ந்து
வாய்த்த மகன் வெற்ற வெங்கல ராசன் றனக்கு
வெங்கலக் கோட்டைக்குள் பொன்னாலே மேடையும் வைத்து
வித்தாரமாகவே சித்திரம் போல முகித்து
பொங்கமாய் மேடைமேல் மேடை மேல ழகியவளும்
பொன்னும் முடி மன்னன் வெங்கல ராசனுமாக
கூடிக் குலாவி மதனும் ரதியெனவே தான்
கொஞ்சி விளையாடிச் சந்தோசமாக யிருக்க

(குழந்தைகள் பிறப்பு)

பேடி யில்லாமலே வெங்கல ராச னிருக்க
பொற்கொடியா ளந்த மேடை மேலழகி யவட்கு
அத்த னருளாலே கெற்பமு மாண்டு திகைந்து
அருமையுட னொரு ஆண்பிள்ளை தன்னையும் பெற்றான்
பெற்ற மகனுக்கு சின்னத்தம்பி என்று மொருவன்
தேசம் புகழத் திரைமுகத்தழகி யம்மை
செய்யிழை சங்குமுகத்தழகியும் பிறந்தார்
சேகரமாகத் திருமலுமையாளுடனே
செல்வர் பிறந்திட சந்தோசமாய் வளர்த்தாரே.

வலங்கைத் தலைவன் தங்கப் பொக்கிஷத்தை வாழைத் தோப்பில் புதைத்து வைத்தல்)

(வேறு)

பிறந்த திரைமுகத்தழகி பேர் பெரிய சின்னத்தம்பி
சிறந்த சங்கு முகத்தழகி செல்வன் சாலக் குளத்தம்பியும்
திருமா லுமையாளுடனே செல்வர்களுந்தான் வளர
மரு மாது சேர் புயத்தான் வலங்கை உயர் கொண்டவன் தான்
தேடி வைத்த திரவியமும் சிறந்த தங்கப் பொன்னதையும்
கோடி கோடி நவகோடி குளிர்ந்த தங்க மானதையும்
கண்டு மன்னன் மகிழ்ச்சியுற்று கல் அறையிற் குவியாமல்
தெண்டிரை சூழலகிலுள்ள தேவர்களு மறியாமல்
பாளப் பொன்னும்கொழுத் தங்கமும் பாரமலை போற் குவித்து
கோழையில்லா வலங்கை மன்னன் குலாவி மனம் மிக மகிழ்ந்து
இந்த முதலானதையும் இப்படி நாம் வைத்திருந்தால்
அந்தமுள்ள வெள்ளைக்காரன் அறிந்ததுண்டால் தங்கமதை

கொள்ளையிடுவான் முதலை குமண்டை வருமிதனா லென
வள்ள லெனு மதி சூரன் வலங்கை எழுநூற்றுவனும்
இட்ட கோட்டைக் கருகாக ஏற்ற சிங்காரத் தோப்பு
கட்டாக உண்டு பண்ணி கருத்துடனே வாழையிட
இட்டமுடன் நினைத்தவனும் ஏற்ற நல்ல கிடங்கு வெட்டி
அட்டதிக்கோ ரறியாமல் அரிய பொன்னை வாரியிட்டு
தங்கப் பொன்னின் மேலாகத்தான் சுமந்து மண்ணையிட்டு
சிங்கார வாழை வைத்து சிறந்த தோட்டம் முழுவதுக்கும்
காவலது தானும் வைத்து கட்டாக வளருகையில்

(வாழை மரங்கள் செம்புநிறமாக ஒவ்வொன்றும் இரண்டிரண்டு குலை தள்ளுதல்)

ஆவலுடன் வாழையது ஆறுமாச மானபோதே
ஓங்கியது தான் வளர்ந்து உற்பனமாய் இலையுமிட்டு
வாங்குதல்லோ பர னருளால் வாழை யொன்று ரண்டு குலை
செம்பு நிறமாக வல்லோ சிறந்த குலை வாங்கியதே
அம்புவியோர் தானறிந்து அல்லோருங் கொண்டாட
வாழை யொன்றில் ரண்டு குலை வரக் கண்டான் வலங்கை மன்னன்
காள முகில் மேதினியளார் கண்ணர் திருவருளாலே

(வெள்ளைக்காரன் அதிசயம் அறிந்து வாழை மூட்டை தோண்டச் சொல்லுதல்)

நாடாள்வான் வாழையிலே ரண்டு குலை கண்ட தென்ன
ஏடலரும் பூவுலகில் எங்கெங்கும் பேராச்சு
அறிந்தானே வெள்ளைக்காரன்அறியவென்று வந்தவனும்
குறியாக வந்தவனும் கோட்டை கண்டு மனமகிழ்ந்து
வாழைத் தோட்ட மானதிலே வந்து சுற்றிப் பார்க்கையிலே
பாளப் பொன்னின் நிறமாக பைம்பொன் நிறம் தானாக
கண்டு வெள்ளக்காரனுமோ கன பிரியமாய் மகிழ்ந்து
உண்டு இதில் அதிசயந்தான் உடனறிய வேனுமென்று
வலங்கை மன்னன் தனை வருத்தி வாய்மொழியுந்தான் கேட்டு
கலங்காமல் வாழை மூட்டைக் கருத்தாக இளக்கு மென்றான்

(வெள்ளைக்காரன் பொற்குவியலைக் கண்டு பொன் வந்த விபரம் கேட்டல்)

இளக்குமென வெள்ளைக்காரன் இது வுரைக்க வலங்கையனும்
இளக்கி வங்கு பார்க்கையிலே ஏற்ற தங்கப் பொன்னைக் கண்டான்
கண்டவுடன் வலங்கையனைக் கட்டி யணைத்தே தடவி
பண்டு தந்த மது தனக்கு பணமதனைத் தந்தேனே
தங்கப் பொன்னு வந்தவகை சங்கையுடன் சொல்லு வென

அங்கு நின்ற வலங்கை மன்னன் அகங் கோடி முகஞ்சடைத்து
சொல்லாம லிருந்தாலும் துட்டனவன் கொன்றிடுவான்
வல்லமையாய் கொன்றிடுவான் மனம் பதறி யுரைத்தாலும்
ஏது வகையாலு மிவன் இடறு செய்வான் நம்மை யென்று
மாதுசெறி மலர்மார்பன் வலங்கை மன்னன் தான் தெளிந்து
பச்சிலையால் வந்த தொரு பாளப்பொன் என்றுரைத்தான்
அச்சமின்றி வெள்ளைக்காரன் அம் மூலி சொல்லுமென்றான்
சொல்லாதே யிருந்தாலும் சீற்றம் வருமதனால்

**(சாணார் காசு வெளியிட்டால் விபரம் கூறுகிறேன்
என வலங்கைத் தலைவன் கூறுதல்)**

இல்லையென்று சொல்வதில்லை எந்தனக்குத் துரையே நீ
இங் கமரும் பச்சிலையை எடுத்துரைக்க வேணுமென்றால்
தங்கப்பொன் னானதிலே தங்கக் காசி தானடித்து
ஒரு புறத்தி லுனது அச்சும் ஒரு புறத்தி லெனது அச்சும்
திரு காளி தந்த வகை சிறந் தரிவாள் மிதிப்புத்தடி
அருவாள் வெட்டி முதலாக அக்கரையி லச்சு வைத்து
தருவாயே உலகமெல்லாம் சாணான் காசுவெனவே
பூ லோக மானதிலே பிரபலமாய் விளங்கும்படி
சீலமுடன் தான் நடக்கத் திட்டம் பண்ணித் தந்த துண்டால்
சந்தமுடன் பச்சிலையை தானுனக்குக் காட்டிடுவேன்
அந்தவுடன் வெள்ளைக்காரன் ஆகட்டெனவே போனான்

**(வலங்கைத் தலைவன் வெங்கலராசனுக்கு இரும்பை
பொன்னாக்கும் மூலிகையைக் கூறுதல்)**

வந்தவனும் போனபோது வலங்கையனும் தான் திகைத்து
எவ்வித மானாலும் இவன் சதிப்பான் நமை யென்று
பேரன் வெங்கலராசனையும் பின்னுமுள்ள மனிதரையும்
பூரணமாய் அவன் கூட்டி புத்தியுவு முரைத்து
முனிவனுட பச்சிலையை மூர்க்கன் வெள்ளைக் காரனுக்கு
இனிதாகச் சொன்னாலும் இல்லை யென்று சொன்னாலும்
பலவிதமு மென்னை யவன் பாரில் வைக்க மாட்டானே
கொலைகள் செய்வா னெந்தனையும் கூறும் மொழிதான் கேளும்
தங்கப்பொன் உண்டு பண்ணும் சத்தி முனி பச்சிலையை
அங் கவனும் வருவா னிப்போ அவன் தனக்கு நானுரைப்பேன்
என்று சொல்லிப் பேரனுக்கு இயல் மூலி தானுரைத்து
அன்றவனு மிருக்கையிலே அங்கு வெள்ளைக்காரன் வந்தான்

(வெள்ளைக்காரன் சாணார்காசு வெளியிடல்)

வந்து மன்னன் தனையழைத்து வாய்த்த தங்கக் காசிதனை
சந்தோசமுடன் கொடுத்தான் தரணியெல்லாம் வழங்கும்படி

சட்டங்கட்டிக் காசியிலே சான்றோனே உனது அச்சும்
திட்டமுடன் சொன்னபடி திருக் காசிதனிற் பரப்பி
சொன்னபடி காசி யிட்டேன் தொல் புவி யெல்லாம் விளங்க
மன்னவனே காசி தந்தேன் வளர் மூலி யுரையு மென்றான்

(வலங்கைத் தலைவனை வெள்ளைக்காரன் வாளால் வெட்டிக் கொல்லுதல்)

வலங்கை மன்னன் மனம் மகிழ்ந்து வையகத்தில் நம் பேரும்
தலங்க ளெல்லாம் நடக்குமென்று தானுரைத்தான் மூலி தன்னை
இயல் மூலி சொன்னவுடன் இரும்புதனை வருத்துமென்றான்
அயலொருவ ரறியாமல் அம்மூலி தனைத் தடவி
அக்கினிக்குள் முக்கிடவே அது சாம்பு னதமாக
கைக் கிசைவாய் கண்டபோது கடும்பாவி யானவனும்
இவன்றனையும் மூலிகையையும் இங்கு வைக்கலாகாது
அவனுடனே மூலியையும் அறுத்திடவே வேணுமென்று
சத்திமுனி பச்சிலையும் சான்றோனின் தலையதையும்
வெற்றியுடன் வாளாலே வெட்டி விட்டான் மா பாவி
வலங்கை மன்னன் சாபம்பெற்று மருந்து கொண்டு அவன் போனான்

(அனைவரும் அழுது புலம்புதல்)

கலங்கி மனந் தட்டழிந்து கன்னி தங்கப் பொன்னம்மையும்
மேடை மேலழகியொடு மிக்க திரை முகத்தழகி
பேடை மயில் போலழகி பூவை சங்கு முகத்தழகி
சாலக்குளத் தம்பியுடன் தக்க சின்னத் தம்பியுமாய்
வேலனைய விழியுடைய வெங்கல ராசனுடனே
கோட்டையுள்ளே சங்கடமாய் கூண்ட தங்க மேடையிலே
பாட்டனுட தரமெடுத்து பள்ளி மெத்தை மீதில் வைத்து
தங்கப் பொன்னம்மை யவளும் தகப்பனையும் மடியில் வைத்து
சங்கை வெறவே யவளும் தானழுது புலம்பலுற்றாள்
இந்த மட்டு மெங்களை நீர் இடுக்கி வளர்த்தது போல
அந்த மன்னன் சோழனவன் அல்லல் செய்வானென்று சொல்லி
ஈழத்து நான்னாடு வந்து இயல் முனிவன் பாக்கியத்தால்
பாளப் பொன் னுண்டாக்கியதால் பழியெடுத்தான் மாபாவி
தென்னவரே அப்பச்சரே தேசமது வெறுத்தவரே
என்ன செல்வ மிருந்து மும்மை இழந்தோமே அப்பச்சரே
அன்ன சுற்ற மிருந்தாலும் அறையினிற் பொன் னிருந்தாலும்
பொன்னுமுடி மன்னவனே பேரன் வெங்கல ராசாவும்
வன்ன முகங் காணாமல் மதிமயங்கி வாடுவனே
பொன்னே என் அப்பச்சரே புவியிழந்து போனீரே
என்ன மன முருகி யழ ஏத்த வெங்கல ராசாவும்

அன்னவரைத் தானமர்த்தி ஆஞ் சடங்கு செய்ய வென்ன
காரணவர் தனை யெடுத்து கட்டுடனே தானடக்கி
நாரணனார் திருவருளால் நற் சடங்குதான் முடித்து
இட்ட கோட்டைக் குள்ளிருந்து ஏத்த வெங்கல ராசாவும்
சட்டமதாய்ச் சோழனுக்குச் சான்றோர்கள் செய்த நன்றி
சம்பரனாம் அசடனுடன் சமிக்கரன் விகடனையும்
அம்புவியிற் சோழனுக்காய் அவர்களையுந் தரமறுத்து
வந்தவினை யூடறுத்து வரிசைவெற்று இருந்தவரை
இந்த மட்டுந் திறவானாய் இருக்கையிலே சோழனவன்
கோள் வார்த்தைதான் கேட்டு கூண்ட நல்ல காவிரியில்
ஈழவனா லப்பச்சரே இரண்டு கொலை ஏற்றானே
விதிவசமே யாகுமென்று வேகமுடன் எழுந்திருந்து
சதி வருவ தறியாமல் தானுமிந்த நாட்டில் வந்து
வேணு முதலுண்டு பண்ணி வெங்கலத்தால் கோட்டையிட்டு
ஆணவமா யெங்களையும் ஆள்ப் பருவமாக்கி வைத்தீர்
பூருவமா யிருக்கையிலே பொல்லாத மாபாவி
தாறு மாறாக அவன் சதித்தானே வெள்ளைக்காரன்
பேரனையுங் கொலைகள் செய்தான் புகழறியா மாபாவி
சீராக நாமிருந்தால் தீவினைகள் செய்வானே
இங் கிருக்கலாகாது இன்னம் மறு தலமதிலே
சங்கையுடன் நாமள் சென்று தானிருக்க வேணுமென்ன
சோழனுட சீமையிலே சென்றாலு மிழுக்கல்லோ
ஈழத்து நாடதிலே இருந்தாலு மிழுக்கல்லவோ
மரியாதையோடே நாம் மறுநாட்டிற் போக வென்ன
அரிய வெங்கலராசனவன் அவர் மனது திகைத்திருந்தார்

(வெங்கலராசன் கப்பல் மூலம் இடப்பெயர்ச்சி செய்தல்)

(வேறு)

திகைத் திருந்து மனது கலங்கியே
தீரன் வெங்கல ராசனுஞ் சொல்லுவார்
இகத்தில் நாமளிருந்தாலு மாகாது
எங்கும் வேறுதலங் காண வேணுமே
சோழ நாட்டிலே போனோமே யானாலும்
சோல்லுவார்கள் வசை பல கூறவார்
ஈழ நாட்டி லிருந்தோமே யானாலும்
இழப்பமாகப் பலபேருஞ் சொல்லுவார்
கேட்டிருக்கவுங் கூடாது நாம்மாலே
கெடுதீ யில்லாமற் போகண மென்னவே
கூட்ட மிட்டு மனது தெளிந்தவர்

கூடிச் சேர்ந்த மனிதரும் சாமானும்
கோட்டை தன்னையும் வெட்டிப் பொழிப்பித்து
கூண்ட கப்பலி லேற்றண மென்னவே
கூட்டப் பொன்னுந் திரவியக் கட்டியும்
கோடாலிப் பொன்னொரு கொழுத் தங்கமும்
மண் வெட்டிப் பொன்னுஞ் செம்பொன் திரவியம்
மாடு ஆடு கிடாய் கோழி யானதும்
கொண்டு போகண மென்றந்த மன்னனும்
கூட்டிக் கொண்டு இருக்கிற வேளையில்
தங்கப் பொன்னம்மை கேட்டு மலங்கியே
தன் மகனோடு சொல்லி யழுவாளாம்
வெங்கலராச னென்னு மென் மைந்தனே
வீரமாக நாம் வாழ்ந்த இடம் விட்டு
கூறுங் கோட்டையும் வெட்டிப் பொழிப்பித்து
கூண்ட கப்பலி லெற்றி நடக்கவும்
ஆரு மற்றவர் போலே அலையவும்
அலை கடலி லுருவோடிப் போகவும்
என் தகப்பன் வலங்கைத் தலைவனும்
இறந்து போகவும் நாமள் மலங்கவும்
பெண் கொடியும் நான் பேறுபெற்றே னென
பிரண்டு ருண்டு மலங்கி யழுதிட
தங்கப் பொன்னம்மை தானு மழுதிட
தாய் மறுக்கத்தைக் கேட்டந்த மக்களும்
சின்னத் தம்பியும் சாலக்குளத்தம்பி
திரை முகத்து அழகியும் தங்கையும்
கூடி யொக்கக் குமிறி யழுதிட
கொற்றவ னந்த வெங்கலராசனும்
தேடி மக்களைக் கூட்டி யணைத்துமே
தியங்கி மன்னன் கலங்கி மலங்கியே
வாய் குழறியே மக்களைத் தேற்றியே
வரும் விதியை விலக்கவும் கூடாது
மாயமாக வருமிந்தத் தொல்லைதான்
மகாதேவர் செயலல்லோ மக்களே
இங்கிருக்கவும் கூடாது மக்களே
எண்ணிப் பார்ப்பது காரிய மல்லவே
சிந்தை நொந்து மலங்கவும் வேண்டாம்
தேறி நீங்க ளிருமெனச் சொல்லியே
வெங்கல ராசன் சந்தோசமாகவே
மிக்க மாந்தையர் தன்னை வருத்தியே
அந்த கோட்டை இசையப் பொழிப்பித்து
அயலொருவ ரறியா திரவினில்

கை வசமாக ஆளை நிறுத்தியே
கப்பல் தன்னில் கருத்துட னேற்றினார்
பொய் யில்லாமல் திரவிய மானதும்
பூட்டுங் கல்லறை சாட்டுக் கிடாரமும்
பாளப் பொன்னும் பசும் பொன்னுங் காசியும்
பாற் பசும் உருவதி லேற்றினார்
தாழ் வில்லாத உடுசீலை பெட்டகம்
தக்க உப்பு புளி மிள கேற்றினார்
சோற்றுக் கேற்ற அரிசியு மேற்றினார்
துய்ய கற்கண்டுஞ் சீனியு மேற்றினார்
நாற்றிசையும் புகழவே வெள்ளை நெல்
நல்ல காடைக் கழுத்தன் நெல் லெற்றினார்
சீரகச் சம்பா செண்பக மார்த்தாண்டன்
சிறந்த தட்டார் வெள்ளை நெல்லு மேற்றினார்
நேரகமாய் குறுவைத் தினுசுடன்
நீண்ட தோரணைக் கொம்பனு மேற்றினார்
உண்ணவே பலவாம் கறியானதும்
உத்த நல்ல பலகார மானதும்
திண்ணமாய் பல பாத்திர மானதும்
தீரமாக உருவதி லேற்றியே
மன்னன் வெங்கலராசனும் மக்களும்
மனை யாட்டியும் தாயாருடன் வர
அன்னவரை வணங்குங் குடிகளும்
ஆன சேவகர் கூடவே ஏற்றினார்
கருக்கலாகிக் கடுப் பொழுதாகவே
காவல னந்த வெங்கலராசாவும்
இருந்த வீட்டில் திரு விளக்கும் வைத்து
எல்லோரும் உருவானதி லேற்றினார்.

(கப்பல் மணக்குடி துறைமுத்திற்கு வருதல்)

(வேறு)

ஈழத்து நாட்டுப் பதியுங் கடந்து
ஏற்ற கடலி லுருவோடி வாறார்
காவேரி யாற்று பொழிமுகம் விட்டு
கருத்துடன் வெங்கல ராசனுட கப்பல்
பேராழி யாற்றுப் பொழிமுகம் விட்டு
புன்னைக் காயல் கடந்தோடு கப்பல்
தூராழி கண்டும் பின் தூண்டா விளக்கு
தொனியாக சோகைப் பட்டணம் விட்டு
பாம்ப னாற்றுப் பொழி தானுங் கடந்து

பாரெனப் பாய்விரித் தோடுது கப்பல்
காண்பார்கள் காணவே வெங்கலராசன்
காயல்பட்டணத் துறையுங் கடந்து
செந்தூர் பதியது தானுங் கடந்து
தெற்கு முகமாக ஓடின கப்பல்
விந்தையாய் மேற்கு முகமாய் திரும்பி
வீரபாண்டியன் இடமுங் கடந்து
சிலேசமுடனே கரும்பனை யாற்றுச்
சிறந்த பொழிமுகந் தானுங் கடந்து
மடமடெனவே கடல் கிழிந்தோட
மக்களும் வெங்கல ராசாவுமாக
அடைவுடன் பால்பழமோ டமுதுண்ண
ஆதரவாகத் திரு வுருவோட
மணப்பாடுடன் பெரிய தாழை விட்டு
வருகுது கப்பல் கெருவிதமாக
சணமாகவே கூடு தாழையூர் விட்டு
தானே உவரித் துறையுங் கடந்து
ஈட்டமாய் ஐயனார் கோயிலும் விட்டு
இயலான குண்டல் திசையுங் கடந்து
தோட்டா வளியுடன் தேரும் புளியும்
சுறுக்காய் விசயாபதியுங் கடந்து
இடிந்தகரை துறை தானுங் கடந்து
இயல்வா யிரிசிக் கரையுங் கடந்து
பிடியென ஆணைக் கல்லோடைப் பொழிலில்
பெருமுகமான கயத்தில் நிறுத்தி
கூட்ட முரம்பது தன்னிலே வந்து
கோட்டை யிடத் தலம் சுற்றியே பார்த்தார்
ஈட்டமா யித்தல மானதில் வைத்தால்
ஏக வெளியா யிருக்கு தெனவே
ஏற்று மதியும் இறக்கு மதியும்
இந்தத் தலத்தி லிருக்காதென் றெண்ணி
வாக்குள்ள வெங்கல ராசனு மப்போ
வந்துருவேறியே பாய்விரித்தோட
குன்னங் குடியாற்றுப் பொழிமுகம் விட்டு
கூட்டப் புளித்துறை கல்லத்தி யோடை
முன்னிட்டுத் தட்டரிப்பானும் விட்டு
முட்டப்பதி வெள்ளியாப்பாறை விட்டு
பட்டனத்தாரோடை பாலா லோடைப்
பொன்பகவதி கோவில் திருவாணைப்பாறை
தட்டின்றி யோடி அரிசித் துறையும்
தவிட்டுத் துறை கடந்தோடுது பாராய்

ஆவலுடன் பழங் கோட்டைக் கரையும்
அட்டியி லது கடந் துரு வோட
கோவை குளங்கல்லு மூலையும் விட்டு
கூண்ட வலங்கையனா ருருவோட
வல்லவன் வெங்கலராசனு மப்போ
மனது மகிழ்ந்தவர் சந்தோஷமாக
இல்லது கட்டியிருக்கத் தலமும்
இசைவுள்ள பூமியும் தோணுது வென்ன
சிங்கக் கொடிவீரன் வெங்கலராசன்
சிறந்த இடைக்காடு தானுங் கடந்து
மங்கா மணவைத் துறைமுகந் தன்னில்
வந்தவர் கப்பல் நிறுத்து மென்றாரே.

(சாமிக் காட்டு விளையில் வெங்கலக் கோட்டை கட்டி வாழுதல்)

(வேறு)

கன்னா ரோடை நேர்முகமாய் கப்பலையும் நிறுத்தி வைத்து
மன்னவனார் கரையில் வந்து மனமகிழ்ந்து தலம் பார்த்து
கழிக்கரையும் பொழிமுகம் கயமு மிட்டைக் காடதுவும்
வழிபோற பாதையது மணக்குடியி லிறங்குந் துறை
ஏற்றுமதி யிறக்குமதி வியாபார முள்ளதலம்
பார்த்தவர்கள் மனமகிழ பாரக் கோட்டை யிடவேணும்
கன்னாரோடை வெளியுடனே கழிக்கரையு மளக்கரையும்
மன்னவன் வெங்கலராசன் வாய்த்த கல்லடி விளைதனிலே
அஞ்சலுடன் பார்த்தவர்கள் அரிய தல மீதெனவே
வஞ்சி மன்னனிட்ட தொரு மண்கோட்டைக்கு மேற்காக
சஞ்சுவமாய் கோட்டையிட சாமிக்காட்டு விளைதனிலே
நெஞ்சுரமாய் மன்னவனும் நிச்சயித்து மனமகிழ்ந்து
நன்றெனவே கோட்டைதனை நாடி யதி லிறக்குமென்றார்
அன் றவர்களா மெனவே அழகுவெங்கலக் கோட்டை தனை
உருவை விட்டுக் கீழிறக்கி உடனே கோட்டை கொண்டுவந்து
அருமையுடன் மாந்தையரை அந்நேரம் தானழைத்து
இந்நேரம் கோட்டைதனை இசையுமெனவே யுரைக்க
மன்னவன் சொல் தட்டாமல் மாந்தையர்கள் கோட்டைதனை
சித்திரம் போல் தானிசைத்து சிறந்த வெங்கல முருக்கி
வித்தாரமாய் மாந்தையர்கள் வெங்கலத்தால் கோட்டை வைத்தார்
கோட்டை தனக்குள்ளாக குடியிருக்க அரண்மனையும்
வாட்டமில்லா மேடைகளும் மகரதோரணம் நிறுத்தி
அலங்காரமாக அவர் அரிசி யுப்பு புளி மிளகு

வலங்கை மன்னன் கப்பலிலே வந்தவகை யத்தனையும்
சிறப்பாகத் தானிறக்கி சிறந்த கோட்டைக் குள்ளே வைத்து
உறப்பாகக் களஞ்சியத்தில் உத்த சம்பா நெல்லுவகை
கல் லறையில் திரவியமும் காசித் தங்கம் பளபப் பொன்னும்
எல்லாரும் உருவில் நின்று இறங்கி மனைக் குள்ளிருக்க
தன் படைக்குத் தளகர்த்தராய் தன் புதல்வர் ரிருவரையும்
அன்பான சின்னத்தம்பி அழகு சாலக் குளத்தம்பியும்
கோட்டைக்குச் சேனாதிபதியாய் கூண்ட சிங்காதனத் திருத்தி
வாட்டமில்லாப் படைகளுக்கு வாய்த்தபடி தானீந்து
நாழிகைக்குள் எழுது வைத்து நலமுடனே தானருந்தி
வாழி யிடவே கயத்தில் வாய்த்த கப்பல் தான் நிறுத்தி
மட்டுடனே கோட்டைக்குள்ளே மகிழ்ந்தவர்கள் ளிருக்கு மந்நாள்
கட்டாகச் சாத்துகின்ற கதவோசை யானதுதான்
பறக்கை மட்டுங் கேட்டிடவும் பார வெங்கலக் கதவோசை
திறக்கும் புகழ் ஒசை தனைத் தேசத்தோ ரறிந்திடவும்
அப்படியே கொலுவாக ஆண்டிருந்தார் பலநாளும்
செப்பமுள்ள ராசாவும் சிறந்த களத்தடி விளையில்
பண்டுமுனி கொடுத்ததொரு பச்சிலையி னழகு கண்டு
தண்டமிழ்சேர் மலர் மார்பன் தங்கமது உண்டு பண்ணி
இப்படியே வெகுசிறப்பாய் இவரிருந்து ஏது சொல்வார்
செப்பமுள்ள நம்பாட்டன் சிறந்த வெங்கலராசாவும்
காரணவ ரெழுநூற்றோர் காசினியில் பிறந்ததுவும்
வாரணத்தா லிருபேரை வளரும் காவேரியிலே
கொலைகள் செய்தான் சோழனென்று கூண்ட மன்ன னதிலொருவன்
மலையாமல் தாலமதில் அழுதுகண்ட நம்பேரன்
ஈழத்து நாடானதிலே இருந் தாண்டார் சிலகாலம்
பாழில் வெள்ளைக்காரன் வந்து பழியெடுத்த ஏதுவினால்
தென்நாஞ்சி நாட்டில் வந்து சிறந்த வெங்கலக் கோட்டையிட்டு
வண்ணமுள்ள மாதுபுயன் வளர் சாமிவிளைதனிலே
சங்கையுட னாண்டிருந்தார் சாமிகாட்டு விளைதனிலே
மங்கை சங்கு முகத்தழகி மாது திரை முகத்தழகி
அருமையுள்ள சின்னத்தம்பி அழகு சாலக் குளத்தம்பியும்
பெருமையுட னிருக்கையிலே பேரழகி யிருபேரும்
வெங்கலக் கோட்டையதிலே வீற்றிருக்கும் நாளையிலே

(திரை முகத்தழகி ஆராட்டுவிழா காணச் செல்லுதல்)

பங்கயஞ்சேர் பூவுலகில் பறக்கை நகரானதிலே
மது சூதனப் பெருமானுக்கு வருஷத் திருநாள் நடத்தி
பதிவாகத் தேரோடி பத்தாம் நா ளாராட்டும்
ஆராட்டு வந்த செய்தி அறிந்து திரைமுகத்தழகி
வீராட்டமாக அவள் வினை வருவ தறியாமல்
எந்தனுட அப்பச்சரே ஏற்ற வெங்கலராசாவே

அந்தமுள்ள ராசாவே ஆராட்டுக் காணவேனும்
சிக்கலின்றி விடை தாரும் சீமானே என்றுரைக்க
மக்கள் சொல்ல மன்னவரும் மறுத்துமொழி ஏதுசொல்வார்
ஆராட்டு காணப்போற அழகு திரை முகத்தழகி
ஆராட்டு காணவேண்டாம் அனர்த்தம் வருமென் மகளே
சீராட்டாய் போகாதே சிலுகுகளை விளைக்காதே
ஏராரும் பூவுலகில் எல்லோரும் தான் வருவார்
ஆருபிள்ளை ஆரெனவே அல்லோரும் பார்த்திடுவார்
வாரார் பூங்குழலாளே வல்வினையை விளையாதே
ஈழத்து நம் நாடுவிட்டு இங்கே வந்தோ மென் மகளே
வாளனைய கண்ணாளே வருத்தாதே வல்வினையை
நாடாளும் ராசாவும் நல் மகளே அதில் வருவார்
சாடாதே என் மகளே சல்லியத்தை விளையாதே
புத்தி சொன்னாற் கேள் மகளே பொல்லாப்பு வருத்தாதே
சத்திய மீதென் மகளே சாற்றும் மொழி கேளெனவே
ஏற்ற புத்தி சொன்னாலும் என்னுடைய அப்பச்சரே
தீர்த்தம் திரு நாட்பார்த்தல் தேசத்தோருக் குள்ளமுறை
அத்தாளந் தனிற்போனால் ஆராய்ந்து கேட்பதுண்டோ
நித்தன் திரு நாட் பார்க்க நேரிழை நான் போறேனென
அன்னநடையாள் சொல்லவே அழகு சின்னத்தம்பி சொல்வான்
என்னுடைய தங்கையரே இலங்கு திரைமுகத்தழகி
அப்பச்சர் சொற் றட்டாதே அங்கு நிற்பார் வெகுசனங்கள்
செப்பமுடன் நம்முடைய திருக்குலத்தை யறியார்கள்
அறியார் போகாதேயம்மா அருமைதனைக் கொலையாதே
அறிவுடைய அண்ணர் சொல்லும் அப்பச்சர் சொல்லானதுவும்
எண்ண மென்ன நமக்கெனவே எழு தோழிமார்களுடன்
கொண்டைக் கெட்டி பூச்சூடி கொல்லத்து நல் பட்டுடுத்து
கோடாத மாது நல்லாள் கொலுசி தண்டை சிலம்பணிந்து
பாடகமும் காலிலிட்டு பதைக்கனுடன் சவடியிட்டு
முட்டாக்குத் தானுமிட்டு முகத்தழகுங் காணாமல்
கட்டாகவே சிறப்பாய் கன்னியரே வாருமென்றார்
வாருமென்ன தோழியுடன் வழிநடந்தார் சடுதியிலே
சீராக இட்ட தொரு சிறந்த நல்ல கோட்டை விட்டு
சாமிக் காட்டு விளையும் விட்டு தையல் திரை முகத்தழகி
நேமித்ததோர் படிநடந்து நீண்ட கன்னாரோடை விட்டு
ஊற்றுக்கழிதான் கடந்து உற்ற சாஸ்தாங்கோயில் விட்டு
ஆற்றூ ப் போக்கு ஓடைவிட்டு அடுத்த புத்தர் குளங்கடந்து
குஞ்சிப் பிள்ளை விளையும் விட்டு கூண்ட பாற் குளங்கடந்து
வஞ்சியிடை மாது மின்னாள் வாய்த்த தெங்கொம்பூரும் விட்டு
கண்டன் சாஸ்தாங் கோவில் விட்டு கல்பாறை தான் கடந்து
வண்டணிசேர் பூங்குழலாள் வாய்த்த மாட்டு மந்தை விட்டு

பூங்கடியின் மடமும் விட்டு பூவை நல்லாள் தோழியுடன்
சங்கையுடனே பறக்கைச் சன்னதி தெருவில் வந்தாள்

(மந்திரிமார் திரை முகத்தழகியின் அழகு கண்டு வஞ்சிமன்னனிடம் கூறுதல்)

அந்தமுள்ள திருநாளும் அழகு தேரோடுவதும்
வந்து கண்டு தெருவதிலே மங்கையர்கள் நிற்கையிலே
தேரோட்டம் பார்க்க வந்தோர் திருமுகத்தைப் பார்த்து நின்றார்
ஆராட்டுப் பார்க்க வந்தோர் அதிசயத்தைப் பார்த்து நின்றார்
கண்ட கண்ட இடமிருந்து கால் நடையால் வந்தவரும்
மங்கையர்கள் திருமுகத்தின் வடிவுகண்டு மகிழ்ந்திடுவார்
சங்கையுள்ள தேரோட்டம் காணவந்த ஜனங்களெல்லாம்
இவர்கள் நிற்கு மிடத்தில் வந்து எல்லோரும் நெருங்கிடுவார்
அவர்கள் நிற்கு மதிசயத்தை அறிந்து அந்த மந்திரிமார்
ஆரு சுற்றி வளைத்தாலும் அடுக்க நின்று பார்த்தாலும்
சேர மன்னர்க் கல்லாதே சேராது ஒருவருக்கும்
வஞ்சி மன்னர்க் கல்லாதே வல்லவர்க்குங் கிட்டாது
கொஞ்சுங் கிளி மொழியழகை கொற்றவர்க்குச் சொல்வோமென
மங்கையர்கள் நிற்கையிலே மன்னவனா ரருகு நின்ற
வங் கணக்கர் ரோடி மன்னவர்க்குத் தானுரைத்தார்
ஐயாவே தம்பிரானே அரச மன்னா நீர் கேளும்
வையகத்தில் கண்டதில்லை வலங்கை குலந்தனி லொரு வெண்
மன்னவனே இப்படிப் பெண் மலை நாட்டிற் கண்டதில்லை
பன்னிரு சாண் முடியழகும் பட்டுடையு மொப்பனையும்
பள்ளி கட்டிற் கொத்த பெண்தான் பாவையர்க ளிருபேரும்
கள்ளமில்லை மன்னவனே கட்டுரை வீணல்ல வென
அன்றவர்கள் தான் பேசி அரிவையரை மாலையிட
நன்றெனவே பேசி நிற்க நடப்பறிந்த மாதரெல்லாம்
திருநாளும் பார்த்தோமே செறுத்த சொல்லும் மறந்தோமே
வரும் விதி ராத் தங்காதென வழிநடந்தார் சடுதியிலே.

(திரை முகத்தழகி வீடுதிரும்புதல்)

(வேறு)

நடந்தா ரிருபேரும் கூட நாயகிமா ரேழு தோழியரும்
மடந்தை குழலார்கள் அங்கு வாய்த்த பறக்கை நகரும் விட்டு
மட்டாரும் பூங்குழலாள் இரு மங்கைய ரக்காளுந் தங்கையுமாய்
திட்டமுடன் நடந்து உடன் தெங்கொம் புதூருத் தெருவும்விட்டு
கவிழ்ந்து முட்டாக்குமிட்டு ஏழு கன்னிமடவார் புடை சூழ
துவள்ந்த கலையுடனே வரும் தோகை மயிலார் நடையழகும்
நடையு முடையழகும் துய்ய நாயகிமார்க ளிருபேரும்

இடை துவள நடந்து ஓடி ஏத்த கழிக்கரையுங் கடந்து
கன்னாரோடை கடந்து ஏழு காரிகை மாதர் புடை சூழ்
அன்னமென மடவார் வாடி அவர்களிருக்கின்ற கோட்டைக்குள்ளே
சாட்சி சிவனே யென்ன சடைவாகியே ரெம்ப முகம் வாடி
பேச்சேது மில்லாமல் நல்ல பெண் கொடிமார்களும் வீற்றிருந்தார்.

(வஞ்சிமன்னன் பெண் கேட்டல்)
(வேறு)

மண்டபத்தில் வீற்றிருக்க மங்கையர்க ளோட
மன்னன் வெங்கலராசன் மனது மகிழ
கண்டு பிரதானியர்கள் வந்தடி பணிய
கட்டுடனே மேடையில் மகிழ்ந் திவ ரிருக்க
மந்திரிமார் சொற்கேட்டு வாஞ்சிகுல மன்னன்
மங்கையர்க ளாருடைய மக்களென்று கேட்டு
சந்தோசமாக இந்தத் தாரணியோ ரறிய
தையலரை நாமு மிப்பே மாலையிட வேணும்
தான்கேட்டு வாருமென மந்திரிமார் வணங்கி
தரணி யரசாளும் மன்னா சாற்றுகிறேன் கேளும்
சான்றோர்கள் குலத் துதித்து தாரணியோர் மெய்க்க
சாமிக்காட்டு விளைதனிலே தக்க கோட்டையிட்டு
தங்கப் பொன் திரவியமும் தா னறைக்குள் வைத்து
தானிருக்கும் வெங்கலராசன் எனவே நாமம்
வெங்கலத்தாற் கதவுமிட்டு மேதினியோ ரறிய
வீற்றிருக்கும் வெங்கல ராசனுடைய மக்கள்
என்று மன்னருக் குரைக்க ஏந்தல் மன மகிழ்ந்து
இட்டமுடன் பெண் கேட்க வென்று நீட்டு மெழுதி
நன்றெனவே விபரம் வைத்து ஒட்டன் கையிற் கொடுக்க
நாடி யவ னோடிக் கையில் நீட்டதையுங் கொண்டு
காரணமதாய் பறக்கை யூரு கடந்தோடி
கழிக்கரையும் பொழிமுகமும் கன்னரோடை விட்டு
தாரணிக்குள் கீர்த்திப் பெற்ற சாமிக் காட்டு விளையில்
தங்க மணிக் கோட்டையிலை வந்து அந்த ஒட்டன்
விந்தையுடனே கதவு தான் திறந்து ஒட்டன்
வெங்கல ராசனுடைய முன்பதிலே வந்து
வந்து பணிந்தே தொழுது ஓலைதனைக் கொடுத்து
மாலையிட வேணு மென்று வளமை யெல்லாஞ் சொன்னார்

(வெங்கலராசன் பெண் கொடுக்க மறுத்தல்)

ஒட்டனுட வார்த்தையுடன் ஓலையதும் பார்த்து
உண்மை யறிந்தே யவனும் ஒட்டனுடன் சொல்வான்
நாட்டி லிந்த ராச்சியத்தில் ராமவர்மா குலத்தில்

நாடாள்வார் குலமதிலே பெண் கொடுப்ப துண்டோ
கூலிக்குக் குத்தி மகன் றான் ராச்சியத்தை யாள
கொடுப்பதில்லை ஒட்டா நீ கோட்டைக் கப்பாற் போடா
சோலி யில்லையோ போடா வென்று வெங்கல ராசன்
சுறுக்காகக் கொண்டுவந்த நீட்டதையங் கீறி
கீறி யந்த ஓலையுடன் ஒட்டனையும் வெருட்டி
கெம்பீரக் கோட்டைக் கப்பால் ஓட்டி விட்டபோதே
சீறி யந்த ஒட்டனவன் நாம் பிழைத்தோ மென்ன
திட்டனவே சாமிக்காட்டு விளையுங் கடந்தானே
கடந்து நடந் தோடியவன் கன்னாரோடை விட்டு
கழிக்கரையும் விட் டவனும் புத்தளமும் விட்டு
திட்டத்துடனே பாற்குளமும் தெங்கொம்பூரும் விட்டு
சீராகப் பறக்கை நகரானதிலே வந்து
வந்து வஞ்சி மன்னர்தனை யடிதொழுது ஒட்டன்
வடிவழகன் சொன்னதொரு வளமை யெல்லாஞ் சொல்லி

(வஞ்சி மன்னன் பெண்ணைச் சிறையெடுக்க படையுடன் வருதல்)

மந்திரிமாரு மறிய திருமுகத்துப் பிள்ளை
மனமார மன்னவர்க்கு மாறுமொழி சொல்வார்
மாலையிட்டுத் தர மாட்டோ மென்றவனுஞ் சொல்லி
மண்டலத்தில் கோட்டையிட்டுத் தானு மிருப்பானோ
சீலமுடன் சாமிக் காட்டு விளையிற் கோட்டை யிட்டு
செகமீதில் சான்றோர்க ளென்று மிருப்பானோ
ஆண்ட கப்பந் தாராமல் கோட்டையது மிட்டு
அரசருக்கு ஒப்பாக அவனு மிருப்பானோ
நீண்ட புகழாக நின்ற வெங்கலராசன் றன்
நீ ணிலத்தில் பெண் கொடுப்பதில்லை யென்று பேசி
நாட்டமுடனே யிருக்கும் மன்னவனின் மகளை
நாம் கோட்டை தானிடித்து கொடியதுவுமறுத்து
கூட்டமுடன் சென்று சிறை யெடுத்துவர வென்ன
கோடிப் படையோடே யவர் சேர நடந்தாரே.

(வெங்கலராசன் மகளைப் பார்த்து புலம்புதல்)

(வேறு)

நடந்து மன்னர் படையுங்கொண்டு நடு நடுங்கத் திடுதிடென
கடந்து வழி தானும்விட்டு கன்னா ரோடை யது கடந்து
மன்னவரும் படையுடனே வளைந்து கொண்டார் கோட்டைதனை
தென்னவனா ரதி சூரன் சிறந்த வெங்கல ராசாவும்
நாலுகோட்டை வாயிலையும் நன்றாகத் தாள் பூட்டி

வாலை மதி முகத்தழகன் மதி மயங்கித் தடுமாறி
பேடைமயில் போ லழகி பூவை திரைமுகத்தழகி
மேடையின்மேல் வந்திருந்து விளம்புவாரா மொரு வார்த்தை
ஆராட்டு பாராதே அனர்த்தம் வரு மென்றேனே
சீராட்டாய் போனாயே தீவினையை விளைத்தாயே
ஏடாரும் பூவுலகோர் எல்லோருங் கண்டிருந்தும்
நாடாளும் ராசாவும் நன்மகளே உனைக் கண்டு
மாலையிடத் தூதுவிட்டான் வம்பு சொல்லி துரத்தி விட்டேன்
மாலையிட்டுக் கொடுத்தாலும் வசை வல்லோ என் மகளே
இல்லை யென்று சொன்னாலும் இவ்விடம் விட்டுப் போகானே
சொல்லக் கேளாய் பிள்ளைப் பெற்று தொல் வினையைப் பெற்றேனே
மாய வினைதானோ யந்த மன்னவனு மிப்போது
ஆசை கொண்டு வந்த மன்னன் அநியாயம் செய்வானே
வந்த மன்னனுடன் பொரவும் வாய்த்த படை யில்லாமல்
பொந்துக்குள் ஆந்தையைப் போல் பேதலித்து வாடுகிறேன்
மன்னவனும் வேகமதாய் மகள் முகம் பார்த்் துரைத்திடவே

(திரை முகத்தழகி தலையை வெட்டி கோட்டைக்கு வெளியே எறியச் சொல்லுதல்)

என்னுடைய அப்பச்சரே இலங்கும் வெங்கலராசாவே
பெண்ணிருக்கு மிடமதிலே பிழைகேடு வருமெனவே
கண்மணியே அப்பச்சரே காசினியிற் பழமொழியை
கேட்டிருந்து மெனைப் பார்த்து கிலேசமதாய் சொன்னீரே
வாட்டமில்லா அப்பச்சரே வரும் விதிக்கு விலக்குமுண்டோ
வந்த மன்னன் தன்னை வெல்ல உபாயமது நீர் கேளும்
எந்தனுட தலை யறுத்து எடுத்தெறியும் கோட்டைக்கப்பால்
அந்த மன்னன் கண்டவுடன் அநியாய மென்று சொல்லி
சிந்தை நொந்து மன்னவனும் திசை நோக்கிப் போய்விடுவான்
என்னுடைய அப்பச்சரே ஏன் மனது கலங்குகிறீர்
பொன்னுமுடிக் காவலரே போராத காலமிது
மலங்காதே யிப்பொழுது வரும் விதி ராத் தங்காது
வலங்கை குல மன்னவரே வாணாளும் மருந்தல்லவே

(தலையை வெட்டி கோட்டைக்கு வெளியில் எறிதல்)

உன் தலையை அறுத்தெறிந்தால் உலகில் வசை சொல்வாரோ
என் தலையை நீ ரறுத்தால் இழுக்கேது வசையேது
இட்ட பய ரறுப்பதற்கு இவ்வுலகில் செறுப்பவ ரார்
நட்ட பயி ரறுப்பவரை நாட்டிலுள்ளோர் செறுப்பாரோ
செறுப்பாரோ வென்றாய் மகளே செய் பயிருக்குது சரியோ
மறுக்கமல்லோ வென் மகளே மடியில் வைத்துத் தலையறுக்க
பெற்ற மகள் தலையறுக்க பிரமனிட்ட கட்டளையோ

அத்தனுட செயல்தானோ அருமை மகள் தலை யறுக்க
என்று சொல்லி தகப்பனாரும் ஏந்திழையின் தலையறுத்து
கொண்டு வந்து தலையதனை கோட்டைக்கு அப்பா லெறிந்தார்

(வஞ்சி மன்னன் திரும்பிச் செல்லுதல்)

(வேறு)

எறிந்திடவே மன்னவரும் எண்ணருமே எண்ணாமிட்டு
ஏந்திழை திரை முகத்தழகி (ஏந்திழை...)

வருந்தவே அறுத்த தலை யானதை எடுத்தவர்கள்
வாக் குரைக்க நீதமின்றியேதான் (வாக்கு...)

இந்த விதமாக வந்த தென்னமோ கெடுதியென
எண்ணந் தப்பியே வழிநடந்து (எண்ணந்...)

சந்தன விற கெடுத்து தையல் நல்லாளின் தலையை
தாக்கி யெரித்தே யருகு நின்று (தாக்கி...)

காடாற்ற வேணுமென்று கட்டழக ரங் கிருக்கும்
கஞ்ச முறை பொய்கையில் காடாற்றி (கஞ்சமுறை...)

காடாற்றியே மனங் கசிந்து கசிந்தே நடந்து
காவலரும் சுசிந்தை நகர்விட்டு (காவலரும்...)

அழகு மரச் சோலைவிட்டு **அத்திரி முனி** வசித்த
ஆசிரம மானதுங் கடந்து (ஆசிரம...)

பழகிய மனிதருடன் பார வஞ்சி மன்னவனும்
பாங்குடனே கோட்டாறு தாண்டி (பாங்குடனே...)

சுங்கான் கடையும் விட்டு தொட்டிப் பாலமுங் கடந்து
சுறுக்காக வில்லுக்கீறி தாண்டி (சுறுக்காக...)

எங்குமுள்ள மானிடரும் இந்தமுறை கண்டுழைய
ஏந்தலெனும் வஞ்சி மன்னன் தானும் (ஏந்தலெனும்...)

நீண்ட கரைப் போக்கும் விட்டு நெல் காய்க்குந் தலமும் விட்டு
நெடிய வள்ளி யாறதுங் கடந்து (நெடிய...)

திண்டி வந்த மன்னவரும் மந்திரிமாரும் படையும்
திருவிதாங் கோட்டிரி லிருந்தாரே. (திருவிதாங்...)

(வெங்கலராசன் அழுது புலம்புதல்)

(வேறு)

இருக்கின்ற போதிலே வெங்கல ராசனு மப்போ
ஏந்திழை சங்கு முகத்தழகி தனைப் பார்த்து

வருத்தத்துடனே மகளைக் கண்ணுற்றுக் கலங்கி
வகுத்த பிரமனின் கட்டளைதானோ மகளே
கோத்திர முள்ள குலத்தில் பிறந்த மகளே
கோட்டையு மிட்டு நல் நாட்டையு மாண்ட மகளே
ஆத்திரமாக ஆராட்டுக் காணப் போனால் மக்காள்
அபத்தம் வருமெனச் சொல்லியும் கேளாமற் போனாய்
ஆராட்டுப் பார்த்து அனர்த்தம் விளைத்தாய் மகளே
ஐயோ மகளே அரும்பாவி யாகிவிட்டேனே
சீராட்டாய் தேசமாள் மன்னவன் பெண் வந்து கேட்க
செல்ல மகள் தலை தன்னை யறுத் தெறிந்தேனே
தேசம் வடநாடு ஈழத்து நாட்டையும் விட்டு
தெட்சணா பூமியில் கோட்டையு மிட்டங் கிருந்தோம்
பாசமுள்ள முனி பச்சிலை மூலியைத் தந்து
பாருலகர் காண பாளப் பொன்னுந் தங்கமாக்கி
தங்கக் காசியினில் சான்றோ ருருவை யெழுதி
தாரணி தன்னிலே பேரும் படைத்தோம் மகளே
இங்கு படை கொண்டு வந்திடும் மன்ன னினிமேல்
இப்புவி தன்னில் இருக்க வொட்டாது முனிவான்
நாமே மனம் வந்து ராசன் வெருட்டிடும் முன்பே
நாடுவிட்டு மறு நாட்டிலே நாமள்தான் போவோம்
போவோமென வந்த வெங்கல ராசனும் சொல்ல

(சங்கு முகத்தழகி அழுதுபுலம்புதல்)

பூவையாம் சங்கு முகத்தழகி ஏதோ சொல்லுவாள்
அருமையுட னெந்தன் கூடப் பிறந்திடுந் தங்கை
அவளை யறுத்து நீர் கோட்டைக்கு அப்பா லெறிந்தீர்
உரிமையாம் தங்கை தனையு மிழந்தோமே நாமள்
உண்மை யுலகினி லாரும் உதவிக ளில்லை
வம்பிலே இந்த மலைநாடு தன்னி லிருந்தால்
வலங்கை குலத்துக் கிழுக்கல்லவோ யினி மன்னா
சம்பரனை வெட்டி ரெட்டைச் சங்கு பறித்தோர்கள்
தாரணி தன்னிலே ஈழன் சிறை கொண்ட வள்ளல்
கண்டீரே செட்டித் தோள் மேலாக ஏறியே வந்து
காசினி மெய்க்கவே பேரும் புகழதும் வற்றோர்
என்று மகள் சொல்ல வெங்கலராசனுங் கேட்டு
இந்த நல்ல கோட்டை விட்டு இனிப் போவோமென்றார்.

(வெங்கலராசன் மீண்டும் இடம்பெயர்தல்)
(வேறு)

கோட்டை விட்டுப் போவோமென்று குவலயத்தோ ரறியாமல்
நாட்டைவிட்டுத் தான்போக நகுலன் வெங்கலராசாவும்

தோட்டமுடன் மன்னவனும் சிறந்த படைத் தலைவர்களும்
வாட்ட மற்ற படைத் தலைவர் மற்றுமுள்ள காலாளும்
காலாளும் பெரும்படையும் கருவூலம் திரவியமும்
தா ளறையி லிட்டுவைத்த தங்கப் பொன்னுப் பாளங்களும்
உருவதிலே யெடுத்து வைத்து ஒருவ ரறியாதபடி
திருமருவம் புயரூபன் தீரன் வெங்கலராசாவும்
சாமிக்காட்டு விளைதனிலே தங்க மணிக்கோட்டைக் குள்ளே
நேமித்தவன் மேடையிலே நெறியுடனே விளக்கு வைத்து
கதவடைத்துத் தாள் பூட்டிக் கப்பலிலே தானேறி

**(செங்கிடாக்காரன் திருமாலிடம் வரம்பெற்று
கப்பலில் உடன் வருதல்)**

இதமாக மணக்குடியும் ஏற்ற இடைக் காடும் விட்டு
கரை வாற வேளையிலே கணக்கன் செங்கிடாய்க்காரன்
திரைமுகத்து அழகியுடன் திருமாலி னிடமேகி
வரம் வேண்டி யிவர்களுமோ வரிசை பெற்று உடன் வரவே
திரமாகக் கப்பலிலே திருஷ்டியிட்டு வரும்போது
ஆவலாய் வெங்கலராசன் அருமையுள்ள மகளான
பாவை சங்கு முகத்தழகி படையறைக்குள் தானிருந்து
தங்கைபட்ட துயரமதால் தண்ணீரு மருந்தாமல்
மங்கை நல்லாள் முகங்கோடி மனஞ் சடைத்துத் தானிருக்க

**(செங்கிடாய்காரன் சங்கு முகத்தழகியை
பலிகொள்ள நினைத்தல்)**

ஆவலுட னுருவோட அழகு செங்கிடாய்க்காரன்
கோவை குளங் கல்லு மூலை குருசடியுந் தான்கடந்து
அழகு உருதானோடி யங்கு வர கணக்குனுமோ
பழைய கோட்டை தான் கடந்து பகவதியின் கோயிலதும்
அரிசித்துறை தவிட்டுத்துறை ஆணதாண்டு வாங்கமும்
கருவூலந் தான் பார்த்து கடிய செங்கிடாய்க்காரன்
முட்டம் வெள்ளியாப் பாறை மூத்த நயினார் கோயில்
பட்டனத்தார் குடியிருப்பும் பாவனையாய் தான் கடந்து
முட்டப்பதியுங் கடந்து முடுக்கன் செங்கிடாய்க்காரன்
அட்டியின்றி படவதிலே அழகு சங்கு முகத்தழகி
பாவையரைத் தான் மயக்கிப் பழியெடுக்க மனதிலுன்னி

(கப்பல் திருச்செந்தூர்பதியை அடைதல்)

தாவமுடன் தட்டாரிப்பு சமுத்திரத்தி லுருவோட
குற்றமற்ற ராசன் கப்பல் கூட்டப்புளி தானும் விட்டு
ஆத்திக் கல்லோடை விட்டு அரிய சுறிக் காடும் விட்டு
குறிய குன்னங் குடியாறும் கூண்ட புலிக் குளமும் விட்டு

அரிசிக்கரை யானதிலே அழகு கப்பல் நிறுத்துவாராம்
நிறுத்தி கப்பலானதையும் நீதியுள்ள ராசாவும்
வருத்தமின்றி அவ்விடத்தில் வாழ்ந்திருக்கத் தலம் பார்த்து
பார்த்து மனம் பொருதாமல் படர்ந்த புல் காடா மெனவே
ஆற்றில் கரைத்த புளி போல் ஆன வெங்கலராசன்
இத் தலத்தில் கோட்டையிட்டு இருக்கப் போகாது வெனவே
அத் தலமா மரிசிக்கரை யது கடந்து உருவோடி
இடிந்தகரையுடன் கடந்து ஏற்ற விசையாபதியும்
கடந்து கூத்தன் குழியுமிட்டு கப்பலது விரைந்தோடி
தோட்டாவளி நாட்டாறு சிறந்து பொழிமுகமும் விட்டு
ஓட்டத்துடன் குண்ட லெல்கை உவரிப்பதி தான் கடந்து
செய்யச் சிலை வடிவழகன் சுயம்புலிங்கம் பெரிய ஐயன்
ஐயருட திருப்பதியும் அது கடந்து கப்பல்வர
பெரிய தாழை கூடுதாழை பெருத்த கூட்ட பனையும் விட்டு
கரும்பனை யாற்றுப் பொழியும் கடந்து உருவோடி வர
பொன் னீட்டாங் கயாமதிலே பொன்னு முடி ராசாக்கள்
குன்னாமல்ஆண்டிருந்த குலசேகரன் பட்டணமும்
சீலமுள்ள வீதிகளும் சேர்ந்த பல மேடை கண்டு
ஆலந்தலை மணப்பாடும் அழகு சீர் தோப்பதுவும்
சேர்ந்த நல்ல அம்பலமும் சீர் சிறந்த காடதுவும்
கூர்ந் தவரும் மனமிசைந்த கூட வந்தோர் மன மகிழ
மணப்பாட்டு பொழிமுகத்தில் வாய்த்த கப்பல்தான் நிறுத்தி
குணமுடைய ராச மன்னன் கூண்ட செந்தூர்பதியுங் கண்டான்.

(குறும்பூரில் கோட்டைகட்டி வாழுதல்)

(வேறு)

கண்டபோ தந்த வெங்கல ராசாவும்
கந்தனைப் போற்றி சந்தோஷமாகவே
பண்டிருந்த தலத்திலே போனாலும்
பாரிலுள்ளோர் பழித்து நகைப்பார்கள்
என்று வெங்கல ராசனு மெண்ணியே
இந்த நாட்டி லிருப்போ மெனவேதான்
மன்னர் வீரர் வளநாடு தன்னிலே
வாழ்ந்திருக்கவே வேணுமெனச் சொல்லி
சொல்லி வெங்கல ராசனு மப்போது
சுத்தமாக இருக்கத் தலம் பார்த்து
பல் வளமுடன் நாட்டு வளமையும்
பண்டுள்ளோர்க ளிருந்த தலமதும்
கண்டு வெங்கல ராசன் மகிழ்ந்துதான்
கட்டதான குறும்பூரு தன்னிலே
நன்று தா னிதில் வாழலா மென்னவே
நமன் படைவீடு நளராசன் கோட்டையும்

சென்று பார்த்தவர் நன்று நன் றித்தலம்
தேசம் தன்னில் லரிய தல மென்ன
கண்ட தில்லை பல நாடு பார்த்ததில்
காரிய மானதோர் தல மென்னவே
கருக்கு வா ளையன் கோவிலும் வீதியும்
கண்டு சந்துஷ்டியாக யிருக்கவே
உருக்கமாகப் பொன் காத்தப் பெருமாளும்
உத்த கையில் தண்டாயுதங் கொண்டுதான்
தாண்டி செந்தூர் பதியுங் கடந்துதான்
தாட்டிகன் செங்கிடாய்க்காரனு மப்போ
கூண்ட நல்ல கருவூலங்கள் பார்த்து
குணமதாக கணக்கேடுங் கொண்டுதான்
மண்டலத்தில் மலை நாடு தன்னிலும்
மறு நாடு வடதேசம் தன்னிலும்
கண்ட தில்லையே இந்த தலம் போலே
காண்பதற்கு வளமுடன் நீதியும்
ஈட்டமாக இருக்கு தென் றவ் வூரில்
ஏற்ற கோட்டை யிடவே சந்தோசமாய்
வாட்ட மின்றியே வெங்கல ராசாவும்
மந்திரி மார்கள் தன்னை வருத்தியே
காட்டை வெட்டி நாம் கோட்டை முடிக்கவே
கனத்த மாந்தையர் தன்னை வருத்தியே
தீட்டு மென்னவே தச்சரைக் கூட்டியே
தீரமாக வருத்தி யுரைப்பாராம்.

(வேறு)

வருத்தி யந்த தச்சர்களை மன்னன் வெங்கல ராசாவும்
திருத்தமுடன் பணி முடிக்க சிறப்புடனே விடை கொடுத்தான்
கொடுத்தவிடை தனை வேண்டி கோட்டையிட மனதி லுன்னி
தொடுத்தவுடன் மலை பிளந்து சுற்றி மதிலுண்டாக்கி
சேர்த்து மதிலுண்டாக்கித் தெய்வக் கண்ணாள ரவர்
காற்று வெயில் வாராமல் கனகமணி மண்டபமும்
மண்டபமும் மடப்பள்ளியும் மணிமேடை யானதுவும்
கண்டவர்கள் கொண்டாட கனக மொத்த வாயில் வைத்து
நாலு கோட்டை வாயிலுக்கும் நாழிகை மணிதூக்கி
பாருலகோர் கொண்டாட பண்புடனே தானிருந்தார்

(சங்கு முகத்தழகி நீராடச் செல்லுதல்)

இருந்தாரே கோட்டையிலே ஏற்ற வெங்கல ராசாவும்
வருத்தி மனத் துயராலே வாடி மனங் கோடி மன்னன்
சடைத் திருக்கும் வேளையிலே சங்கு முகத்தழகி யவள்
இடமதிலே வந்து மவள் ஏதுமொழி சொல்லுவளாம்
சொல்லெரிய அப்பச்சரே சொல்லும் மொழி நீர் கேளும்

நல்ல மலை நாடும் விட்டு நாமள் வந்தோ மிவ் விடத்தில்
நளினமுள்ள தங்கை செத்த நாளிலிருந் தீதுவரையும்
குளித்து நீராடாமல் கோட்டைக்குள்ளே சடைத்திருந்தேன்
இன்று வரை யிருந்தோமே ஏந்திழைமார் தோழியரும்
நன்று சுனையாடிடவே நான் போறேன் விடை தாரும்
என்ற மொழிதனைக் கேட்டு ஏற்ற வெங்கலராசனுமோ
வன்னச் சுனையாட வென்ன மங்கையரைப் போக விட்டான்

(வெங்கலராசன் மகளுக்கு அறிவுரை கூறுதல்)

(வேறு)

சுனையாட வேணுமென்று தோகை சங்கு முகத்தழகி
தோழியர்க ளேழு பேருடனே (தோழி...)

வன்னச் சுனையாட வென்ன மணிமேடை தன்னைவிட்டு
மங்கையர்கள் வாறதொரு நேரம் (மங்கையர்...)

வாரதொரு வேளையிலே மன்னன் வெங்கல ராசாவும்
மகள் தனையும் பார்த்தேது சொல்லுவான் (மகள்...)

தேரிச் சுனையாடி வர தோகையரே என் மகளே
தேசத்தி லொருவ ரறியாமல் (தேசம்...)

அறியாமலே குளித்து ஆயிழையே நீங்களெல்லாம்
அன்பினுட னிங்கே வார தல்லால் (அன்பினுட...)

குறியாக அங்கு நின்று கோதி முடி தூற்றாதே
கொலுவுமணி மேடையிலே வந்து (கொலுவு...)

வந்து மணி மேடையிலே மயிர் கோதி முடிப்பதல்லால்
மற்றொரு இடத்திலும் நில்லாதே (மற்றொரு...)

என் மகளே நில்லாதே இடைஞ்சலது வருத்தாதே
இவ்விடத்தில் வந்துசேர் மகளே (இவ்விடத்தில்...)

எல்லோரு முந்தனுட திருமுகத்தைக் காணாமல்
இன்று வந்துசேர் மகளே யென்று (இன்று...)

(சங்கு முகத்தழகி தோழியருடன் நீராடுதல்)

சொல்லிடவே தோழியரும் சொந்த மகளுங் கூடி
சூழும் வினை வாரதறியாமல் (சூழும்...)

மாயவிதி வருவதையும் மண்மாரி பொழிவதையும்
வன் கொலையா யிறப்ப தறியாமல் (வன்கொலை...)

ஆய புகழ் தோழியரும் அம்மை சங்கு முகத்தழகி
அல்லோரும் வழிநடக்க வென்ன (அல்லோரும்...)

கோட்டையதுவுங் கடந்து நாட்டிய நீராழி வந்து
கூடியவர் சந்தோசமாக (கூடியவர்...)

வாட்டமின்றி தோழியுடன் வனிதை சங்கு முகத்தழகி
வாடை புனுகானதுவும் பூசி (வாடை...)

பூசியே புனைந்தவளும் பொற் சரிகைப் பட்டுடுத்து
பூவையர்களோடே குளித்தாரே (பூவை...)

கோதை சங்கு முகத்தழகி குளித்து விளையாடியவள்
கூண்ட பட்டுச் சேலையு முடுத்து (கூண்ட...)

பட் டுடுத்துப் பணிப் பூண்டு பாயையுந் தோழியரும்
பைந் தொடிமார் தங்கள் முடிகோத (பைந்தொடி...)

திட்டமுடன் தகப்பன் செப்பும் மொழியை மறந்து
தேறி யந்த பெண்மணிகள் தானும் (தேறியந்த...)

வாட்ட மற்று நின்று கொண்டு மங்கை சங்கு முகத்தழகி
வார விதி தானு மறியாமல் (வாரவிதி...)

கோட்டை தனிலேறி நின்று கோதி முடி தூற்றுதற்கு
கோதையர்கள் நிற்கு மந்தநேரம் (கோதையர்...)

(நளராசன் வெங்கலராசனுடைய கோட்டையைக் காணவருதல்)

வாட்ட மறவே நாட்டை ஆண்ட நளராசனுடன்
மந்திரிமா ரேது சொல்லுவாராம் (மந்திரிமார்...)

ஈட்டமுடன் நம்முடைய ராச்சியத்து எல்லைக்குள்ளே
இப்பே ஒரு மன்னவன்தான் வந்து (இப்போ...)

வந்தவருங் காடு வெட்டி வாய்ந்த நல்ல கோட்டை கட்டி
வந்திருந்தாரென்ற செய்தி கேட்டோம் (வந்திருந்தார்...)

எந்தவித மென்றறிய வேணுமென்று மந்திரிமார்
இயம்பும் மொழி கேட்டு நளராசன் (இயம்பும்...)

அறிந்துவர வேணு மென்று ஆன படையோடு மன்னன்
அந்நேரம் சிவிகை தனி லேறி (அந்நேரம்...)

குறித் தவரு மெழுந்தருளி கோட்டை யதுவுங் கடந்து
குறும்பூரு தன்னில் வரும் நேரம் (குறும்பூரு...)

(சங்குமுகத்தழகியுடைய பன்னிருசாண் அளவுள்ள முடி காற்றில் பறந்து வந்து சிவிகையில் விழுதல்)

பளிரெனவே மன்னர்வர பாவையர்க ளங்கு நின்று
பகிர்ந்து முடி கோதினது தன்னில் (பகிர்ந்து...)

கழிந்த முடிதான் பறந்து காவலவ னேறி வந்த
கன சிவிகைக் கொம்பில் வந்து சுற்ற (கனசிவிகை...)

சுற்றும் முடியை யெடுத்து சித்திரம் போ லப்பொழுது
சிறந்த நளராசன் முன்பில் வைத்தார் (சிறந்த...)

வைத்தமுடி யானதுதான் பன்னிரு சாணுண்டு மென
வைத்தவர்கள் சொல்ல மன்னன் நானும் (வைத்தவர்...)

பன்னிரு சாண் முடியுடைய பாவையரைக் கண்ட தில்லை
பாவலரே காவலரே என்ன (பாவலரே...)

இந்த முடியுள்ள பெண்க ளிவ்வுலகி லுண்டோடா
இப்படியும் பெற்று வளர்த்தாரோ (இப்படியும்...)

(பன்னிருசாண் நீள கூந்தலுள்ள பெண்ணை நளராசன் மணமுடிக்க எண்ணுதல்)

கண்டதில்லை யிப்படிப் பெண் காசினியிலே நாமும்
கலியாணஞ் செய்ய வேணுமென்ன (கலியாணம்...)

அன் றரசனும் மயங்கி ஆசைத் துயராலே யவர்
அகங் குழைந்து மெய் மறந்து நின்றார். (அகங்குழைந்து...)

(வேறு)

நின்று நளராசாவும் நெஞ்சமது புண்ணாகி
மன்று தனி லிப்படிக்கு மணி முடி காணவில்லை
பாவை நல்லாள் தலைமுடி தான் பன்னிரு சா ணிருந்ததுவும்
ஆசையுள்ள மன்னவனும் அந்நேரமேது சொல்வான்

(முடிக்குச் சொந்தமான பெண்ணைக் கண்டறியச் சொல்லுதல்)

நீதியுடன் நம் நாட்டில் நேரிழைமார் தலைமுடியை
சோதிக்கவே வேணுமென்று சொல்லலுற்றான் மன்னவனும்
அப்போது மந்திரிமார் ஆன தலையாரிகளை
நட்புடனே சோதியென நடந்து தலையாரிகளும்
சென்று படை வீடுகளில் சேர்ந்த பெண்ணார் தலைமுடியை
நன்றெனவே தா னளந்து நமன் படை வீடத்தனையும்
சென்று தலையாரிகள்தான் சேர அளந்தே பார்க்க
ஒன்று பாதி காணாது ஒவியத்தார் தலைமுடிகள்
காணாது என்று சொல்லி காவலர்கள் தானுரைக்க
தோணாது மன்னவனும் சொல்லுவானாம் வாய்திறந்து
ஆருடைய முடியெனவே அறியவுந்தான் வேண்டுமென

(சங்குமுகத்தழகியின் முடியென கண்டறிதல்)

சீருடனே தானுரைக்க சிறந்தோடிக் காவலர்கள்
குறும்பூரு நாடதிலே கோட்டை யதுவுங் கடந்து

சறுக்காமற் றானோடி சான்றோர்கள் வங்கிசத்தில்
சான்றோர்கள் குலத்துதித்த சாதி வலங்கைத் தலைவர்
கூண்ட மன்ன னாண்டிருக்கும் குறும்பூரு நாடதிலே
சங்கை பெற யிருக்கும் மன்னன் தன்னுடைய மகளான
சங்குமுகத் தழகியுட தலை சிமி யென்றே யுரைத்தார்

(நளராசன் பெண்கேட்டல்)

உரைத்த மொழி தனைக் கேட்டு உற்ற நளராசாவும்
வரைத் தடஞ்சேர் திண்புயத்தான் மந்திரிமார் தனை நோக்கி
பன்னிரு சாண் முடியழகி பாவை சங்கு முகத்தழகி
தன்னையுமோ மாலையிட சதிவார தறியாமல்
அறியாமல் மையல் கொண்டு ஆயிழையை மாலையிட
பிரியமுற்று மன்னவனும் பிழை வார தறியாமல்
மாலையிட வேணுமென்று மன்னன் நளராசாவும்
ஓலையது தானெழுதி ஒட்டன் கையிலே கொடுத்தான்
கொடுத்த ஒலைதனை வாங்கி கும்பிட்டு அடி பணிந்து
திடத்தமுட னொட்டனுமோ சிறந்த படை வீடும் விட்டு
கோட்டை யிட்டு ஆண்டிருக்கும் குறும்பூரு நாடதிலே
ஒட்டன் வந்து தானுங் கண்டு உற்ற மன்னன் தனைத் தொழுது
தொழுதவனு மடி பணிந்து திரு நீட்டுத் தான் கொடுக்க
பழுதுபடா மன்னவனும் பாவனையாய் தான்வாங்கி
அடுத்து நின்ற மந்திரிமார் அவர்களுட கைதனிலே
எடுத்தோலை வாசகத்தை இப்போது பாருமென்றார்

(வேறு)

பாருமென்றந்த வெங்கல ராசாவும்
பாவனையா யுரைத்த பொழுதிலே
நேருடன் ஓலை வாசகந் தன்னையும்
நிச்சயமாக வாசித்துக் கேட்டனர்

(வெங்கலராசன் பெண்கொடுக்க மறுத்தல்)

கேட்டபோ தந்த வெங்கல ராசாவும்
கெறு விதமாக மந்திரிக்கே சொல்வார்
நாட்டகத்தில் நமன் படை வீட்டினில்
நளராசன் நமக்குச் சரியோதான்
சரிதா னிது சான்றோர் குலத்திலே
தக்க வெண் கொள்ளவே சரிதா னிதோ
எதிர் யில்லை நமக்கவர் தானுமே
ஈழத்து நாடு தன்னையும் விட்டு நாம்
தாரணியிற் றலங்கள் புகழவே
சாமிக் காட்டுவிளையி லிருந்தோம் நாம்
வாரணியும் மலை நாடு தேசத்தில்
வஞ்சி மன்னவன் பெண்கேட்டு வந்ததும்

மன்னவனுக்குப் பெண்ணில்லை யென்று நான்
மனத் தீர்க்க மதாக உரைத்திட
மன்னன் வந்தங்கே நிற்கிற நேரத்தில்
மகள் தலையை அறுத்து எறிந்து நான்
அந்த ராச்சியந் தன்னையும் விட்டல்லோ
ஆன மானாடுவான குறும்பூரில்
சந்தமாகக் குறும்பூரு நாட்டிலே
தக்க கோட்டை யிட்டே நானிருந்திட
இருக்கும்போது நளராச னிப்போது
என் மகளையும் பெண்கேட்டு வந்தானே
சரிதானோ அவனும் பெண் கேட்டிட
சந்திரனோடு தாரகை யொக்குமோ
கூடுமோ அவன் என்னுடன் பெண் கேட்க
கொஞ்சமாக நினைத்தானோ போடா நீ
நாடுவிட்டு நான் போன பொழுதிலும்
நானவனுக்குப் பெண் கொடுப்பதில்லை
என்று தானும் சுருட்டோலை வாங்கியே
எறிந்தானவன் கோட்டைக்கு அப்பாலே
பின்னே போடா அப்பிலே என்று வைதவன்
பிடித்துத் தள்ளி வெருட்டியே போ வென்றான்

(நளராசன் கோபம்கொள்ளுதல்)

(வேறு)

என்றுரைத்த மொழி கேட்டு எரியெனவே கண் சிவந்து
நன்று நன்று சொல்கிறேன் நளராசனிட மதிலே
என்று வந்து நளராசன் இணையடியைத் தான் போற்றி
சென்று கண்டே னவர்களையும் திருநீட்டு தான் கொடுத்தேன்
கொடுத்தவுடன் அவர் வாங்கி குறிப்புணர்ந்து கோபமுடன்
அடுத்து வந்து என் மகளை ஆரடா பெண் கேட்பது தான்
செய்ய வலங்கைக் குலத்தில் சிறந்த மன்னர்க் கல்லாதே
வையகத்தில் மாலையிட மன்னவர்கள் தானுமுண்டோ
உண்டோ யிந்த ராச்சியத்தில் உண்மையுட னெனக்குச் சரி
கண்டாயோ வென்று சொல்லி கடுகடுத்து வெருட்டி விட்டான்
வெருட்டி விட்டா னென்ற மொழி வீரன் நளன் றான் கேட்டு
மருட்டி யவன் கண் சிவந்து மதயானை போல் மீறி
எனக்கே பெண்ணில்லை யென்று இருப்பானோ என் நாட்டில்
கனக்கேடு சொன்னவன் தான் காசினியில் வீரமுடன்
கோட்டை யிட்டும் ஆள்வானோ குறும்பூரு பட்டணத்தில்
வேட்டைப்புலி போற் சீறி வீடழித்து தீக் கொழுத்தி
குறும்பூரு தன்னிலிட்ட கோட்டையதும் தானிடித்து
மறுத்து அவன் தரமறுத்த மங்கையரைக் கொண்டு வர
கோட்டையிலே போகவென்று கோபமுடன் மன்னன் சொல்ல

(மந்திரி சதியால் வெல்லலாம் என்று கூறுதல்)

கேட்டு நல்ல மந்திரிமார் கிருபையுட னேது சொல்வார்
வெண் சிறையை நாவெடுத்தால் பூவுலகுக் கேராது
உண்மையுள்ள மன்னவரே ஒரு வார்த்தைக் கேளுமென்றார்
தன்னிகரில்லாத கன்னி சங்கு முகத்தழகி தன்னை
இந் நாட்டோர் தானறிய ஏற்ற மணஞ் செய்வதற்கு
இல்லை யென்ன நமக்கொருவர் எதிரியில்லை என்றதற்கும்
வல்லபடியு மவளை வசப்படுத்திக் கொண்டு வந்து
மந்திரத்தால் கபடு செய்து வரவழைத்து நாமளெல்லாம்
சந்தியிலே கொண்டுவந்து தாரணியோர் தாமறிய
கள்ளி யென்று அவள் தனையும் கேவலப்படுத்த வேணு மென்ன

(சதியாலோசனை செய்தல்)

தெள்ளியதோர் மந்திரிமார் சொல்ல நளராசாவும்
மங்கையரை இப்படித்தான் மதி மயக்க வேண்டு மென்ன
சங்கையுடன் நம்முடைய தக்க படை வீடதிலே
வருஷமொரு கனியதுதான் மன்னன் நளராசனுக்கு
அதிசயமாய் கூடைகட்டி அவரெடுக்கும் மாங்கனிதான்
கொம்பில் வளர் மாங்கனியை குடத்தினுள்ளே அகப்படுத்தி
வம்பு செய்ய வேணுமையா மன்னன் நளராசாவே
என்று சொல்லத் தான்கேட்டு இலங்கம் நளராசாவும்
நன்று நன்று கீர்த்திபெற்ற **ராமகிருஷ்ண மூர்த்தியையும்**
நட்டமின்றி யவருடனே நடந்து யிங்கே துடர்ந்து வந்த
துட்டன் **செங்கிடாய்க்காரன்** துடிய **னரகுலமாடன்**
பங்கயப்பூ வடிவழகி **பாதாள இயக்கியையும்**
திங்கள் செறி முகத்தழகி சேயிழையைத் தான் மயக்க
மூவரையும் பிறவி செய்தால் மொய் குழலை மயக்கிடலாம்
ஆவலுடன் பிறவி செய்து அவர்களுக்குப் பூசையிட்டு
கைக்குள்ளவர் தனை நிறுத்தி கனத் தகனை யானதிலே
மைக் குழலாள் தோழியுடன் வளர் சுனையில் நீரெடுத்து
வருமளவிற் சுனையருகே மரமதிலே இருந்த கனி
சிறுமாது குடத்துக்குள்ளே சேர்ந்திடுங் கா ணப்போது
வருஷக் கனி காணாமல் வையமெல்லா மாராய்ந்து
அரிய சங்கு முகத்தழகி அவள் குடத்திற் கனிதோண
கொண்டு வந்து அவள் தனையும் கூறழிக்கலா மெனவே
நன்று யிது தாமெனவே ராசாவு முரைத்திருந்தார்.

(வாதைகளைப் பிறவி செய்தல்)

(வேறு)

என்ற மன்னன் சொற்கேட்டு ஏற்ற மந்திமார்
இது கருமமா மெனவே ஏந்தலுடன் சொல்லி
வன்னமுள்ள **கயிலாசம் காத்த** பெருமாளும்
வடிவழகன் மாயான கிருஷ்ண மூர்த்தியுடனே
ஆரொருதர்க் கடங்காத அரகுல மாடனும்
அவர்களுக்கு இணையாக நமன் படை யியக்கி
பாரதனில் வல்லவள்தான் பாதாள இயக்கி
பரு மலைபோல இவர்கள் தனைப் பிறவி செய்தால்
நாம் நினைத்த காரியங்கள் நலமுடனே முடியும்
நாட்டமுடன் பிறவி செய்ய வேணுமெனவே தான்
தாமாகப் பிறவி செய்ய வேணுமெனவேதான்
தன்மையுடன் கொத்தர்களால் வேள்வியது வெட்ட
எட்டுத் திக்கும் வட்டமிட்டு இருபத்தொரு முழத்தில்
ஏழு முழ அகலத்திலே வேள்வியதும் வெட்டி
திட்டமுட னிருபத்தொரு குல விறகும் வெட்டி
தீரமுள்ள ஓமக்குண்ட மானதில் தீமூட்டி
பக்தியுடன் நெய்யூற்றி பூப்பொரியுந் தூவி
பாங்காகத் தீபமுடன் தூபமதும் புகைத்து
சித்தியுடன் நாலு திக்கும் திரையதுவும் வளைந்து
திருவேள்வி தான் வளர மந்திரஞ் செபித்தார்
செபித்த நல்ல திருவேள்வி யானதில்
சேர வக்கினி தானு மெழும்பவே
திருத்த மாகவே குண்டத் தெழும் புகை
தேவலோகம் வரை புகை யோடவே
எழும்பி அக்கினி எட்டுத் திசையிலும்
இந்திர லோகம் தானும் மயங்கவே
தொழு மடியவர் தன் துயர் மாறவே
சோக மின்றி யுருவது தோணவே
செங்கிடாய்க்காரன் பொன் காத்த சப்பாணி
தீரன் நல்ல **கருவூலங்காத்தவன்**
எங்குந் தேறிய தோர் **காணிக்காரனும்**
ஏற்ற நல்ல **அரகுலமாடனும்**
தேன் மொழியாள் **பாதாளஇயக்கியும்**
சேரவே பல வர்ணங்கள் கொண்டவள்
மானனையார் தனையும் மயக்கியே
மாறாட்டஞ் செய்யும் **மாநீலி** யானவள்
நளராசன் நமன் படை வீடதை

நாசமாக்கவே வந்து பிறந்தவள்
குறும்பூரிலே வெங்கல ராசனும்
கூட வுள்ளவர் தன்னையும் மாய்க்கவே
முடிவாகவே ஈஸ்வர னானவர்
மூவரையம் பிறப்பித்த வாரது
அடி வரலாற்றை யறியாமலே நளன்
ஆன மன்னன் அரிவையைச் சேரவே
மாளப் போற தறியாமலே மனம்
மங்கை சங்கு முகத்தழகி மேலே
வீழ வேள்வியில் வீரர் பிறக்கவே
வேகமாக அனலை யெழுப்பிட
வீரியமான கிருஷ்ண மூர்த்தியும்
வெற்றி வீரனெனவே பொன் காத்தவன்
தாரகனான அரகுல மாடனும்
தக்க நல்ல அரகுல மாடியும்
மாயக்காரி பாதாள யியக்கியும்
வண்டிக்காரன் கருவூலங் காத்தவன்
பாயமாகவே கண்டோர் திடுக்கிட
பாரக் கண்ணு முடலும் முகமாய்
கச்சையும் மணிச் சல்லடம் சட்டையும்
கையிலே கணக்கோ டெழுத்தாணியும்
இச்சையான குரடுந் தடிகளும்
ஏற்ற மார்பிலே சங்கிலி யானதும்
காலிலே வீரத் தண்டை சிலம்புடன்
கையி லேந்திய பொந்துத் தடியுமாய்
சீலை மாலையும் துப்பட்டி வேட்டியும்
திரு நாமக் குறியிட்ட வேட்டியும்
நாம மிட்ட குறி யலங்காரமும்
நல்ல நல்ல கபாலமும் நாதமும்
நேமமாகத் திருவேள்வி தன்னிலே
நீள மா மலைபோலே பிறந்தனர்.

(வாதைகள் பிறவி செய்த காரணத்தைக் கேட்டல்)
(வேறு)

பிறந்து நின்றார் மலைபோலே பொன்காத்த பெருமாளும்
அறந் தழைக்க நளராசன் அன்புடன் கண் டக மகிழ்ந்து
சீதமுடன் நின்றவனை செங்கிடாய்காரன் பார்த்து
ஏது பிள்ளாய் எந்தனையும் இப்போது பிறவி செய்தாய்
என்றிடவே நளராசன் இயம்புவானாம் பெருமாள்க்கு
என்னையுமோ கெணியாமல் இந்நாட்டில் கோட்டையிட்டு

மண்ணுலகை யாண்ட மன்னன் வடிவன் வெங்கலராசன்
தன்னுடைய மகளான சங்குமுகத்தழகி தன்னை
மாலையிடக் கேட்டதற்கு வம்பு சொன்னா னெந்தனையும்
ஆலமொத்த மன்னனுட அழகு மகளானவளை
பம்பழிக்க வேணுமென்று பாருலகர் தாமறிய
கொம்புக் கனியாக அவள் குடத்துக்குள்ளே நீ புகுந்து
சதமாக எந்தனுக்குத் தானேற்றுத் தருவதற்கு
அதற்காக உன்னையும் நான் அக்கினியிற் பிறவி செய்தேன்

(செங்கிடாய்காரன் மாய மாங்கனியாய் மரத்தில் தொங்குதல்)

ஏது வேண்டுமானாலும் இப்போது தருவேனென
இதுக்கேற்ற பூசைமுறை இப்போது தாருமென
பூசை பொரி சர்க்கரையும் பொங்க லிள நீருடனே
வாசமுள்ள மலர்போட்டு வாழைக் குலை தானுமிட்டு
தேசமெய்க்கச் செங்கிடாயும் சிறப்பாக பலிகொடுக்க
பூசை கொண்டு மனமகிழ்ந்து பொற்கனியாய்த் தூங்குவானாம்
தாமரைவாழ் பொய்கையிலே தக்க வருக்கை மரத்தில்
மாயக் கனியாகவேதான் வடிவன் செங்கிடாய்க்காரன்
மாயக்கனி யென்று சொல்லி வையகத்தோ ரறியாமல்
ஆரு மறியாதபடி அழகுபடை வீடதிலே
மரியாதையாக வளர் மங்கையரு மறியாமல்
குறும்பூரு நாட்டிலுள்ள கொற்றவர்க ளறியாமல்
மாயமதை யறியாமல் மாங்கனி என் றெல்லோரும்
தேசமதி லுள்ளோர்கள் தெரிந்திருக்கும் வேளையிலே

(மாய மாங்கனி சங்குமுகத்தழகியின் குடத்திற்குள் விழுதல்)

மாங்கனியாய் தான் கிடக்கும் மாயமதை யறியாமல்
போங்காலம் தோழியுடன் பூவை சங்குமுகத்தழகி
தொடுத்த வினை யறியாமல் தோழியர்கள் புடை சூழ
எடுத்துக் குட மிடுப்பில் வைத்து ஏற்ற மணி மேடைவிட்டு
மடந்தையர்க ளருகுவர மாது சங்குமுகத்தழகி
துடர்ந்து பொய்கை யானதிலே சுத்த சல மெடுப்பதற்கு
திருவருளால் பொய்கையிலே செல்வி சங்குமுகத்தழகி
அரிவையருங் கைக் குடத்தை அச்சுனையி னருகு வைத்து
கைக் குடத்தைக் கரையில் வைத்து கயமதிலே தானிறங்கி
மைவிழியாள் தோழியுடன் மாநீரில் நீராடி
செய்ய துகில் தானுடுத்து திருமுடிகோதி முடித்து
மையுமிட்டு வாடை பூசி மஞ்சணையுந்தான் பூசி
திருவருளாற் பெண் கொடியாள் செப்புக்குடம் தனையெடுத்து
அறிவுடனே நீர்முகந்து அவர் கரையி லெடுக்கையிலே

எடுக்கும் முன்னே குடத்தினகம் இலங்குஞ் செங்கிடாய்க்காரன்
திடுக்கெனவே தானோடி திருக்கனிபோல் புகுந்தனனே

(சங்குமுகத்தழகி குடத்தைத் தூக்கமுடியாமல் அவதிபடல்)

புகுந்திருப்ப தறியாமல் பொற்கொடிமா ரெல்லோரும்
மகத்துவமா யவரவரும் மகிழ்ந்து குடம் தானெடுத்து
கரையில் வைத்து தோழியர்கள் கட்டுடனே நிற்கையிலே
அரிவை சங்கு முகத்தழகி அவள் குடத்தைத் தானெடுக்க
உயரவில்லை குடமதுவும் உபாயமதை அறியவில்லை
கயமதிலே தாழ்க்குதில்லை கைதனையும் விடவுமில்லை
வருகுதில்லை யென்று சொல்லி மங்கை சங்குமுகத்தழகி
அருளுஞ் சிவன் கற்பனையோ அயன் விதித்த படிதானோ
ஏதுவிதியோ அறியேன் என்னுடைய தோழியரே
தீதுவரக் காரியமேன் செய்தக் கொடுவினை தானோ
வாருங்கடிக் கைதனையும் தாழ்க்குதடி கயமதிலே
கயமதிலே தாழ்க்குதடி கண்டதில்லை இக் கொடுமை
செயமான காலமில்லை செய்வினைக ளுண்டுமடி

(சிவனை வணங்கி குடத்தைத் தூக்கிச் செல்லுதல்)

என் குடம்தான் கயத்தை விட்டு இடுப்பதிலே சேருதில்லை
என்று சங்கு முகத்தழகி ஈஸ்வரரைத் தானோக்கி
பரமசிவன் றனைப் போற்றி படித்தாளே திருப்பாட்டை
அரிநமச் சிவாய மென அம்மை யுமை பார்வதியை
திருமாலே அரிராமா சீதை சிறை மீட்டாயே
இரு ளகற்றிக் காருமென ஏந்திழையுந் தெண்டனிட்டாள்
தெண்டனிட்டு அடிபணிய தேன்மொழியாள் திருக்குடம் தான்
அண்டர் பிரான் திருவருளால் அவள் கரத்தில் குடமுயர
உயர்ந்த குட மிடுப்பில் வைத்து ஓவியத்தா ரெல்லோரும்
ஓயிலாகக் குடமெடுத்து உறுங்கோட்டை தனிலே வந்தார்
கோட்டைக் குள்ளே வந்திருந்து கோதை சங்கு முகத்தழகி
கோட்டு முகம் தான்வாடி கோதையர்கள் முகம் நோக்கி
மாயமாக இருக்குதடி வளர்கயத்தில் குடம் தாழ்தல்
நாயனுட செயல்தானோ நாமறியோம் தோழியரே
நாட்டை யரசாளுகின்ற நளராசன் செய்வினையோ
நாட்டமுடன் நாமலைய நான்முகனார் கட்டளையோ
அறியோமே என வாடி அகம் மெலிந்து முகஞ்சடைத்து
வெறி கொண்ட பித்தரைப் போல் வேற்று முகமாயிருந்தாள்

(நளராசன் மாங்கனியைத் தேடக் கட்டளையிடல்)

இறுக்கமுட னிவளிருக்க ஏற்ற நளராசாவும்
மருக் கமழும் மார்பழகன் மந்திரிமார் தனை வருத்தி

வருஷமது சரியாச்சு மாங்கனியைக் கண்டுதில்லை
எந்தவிதமோ வறியோம் இம்மரத்தில் கனி யில்லையே
எங்கள் தலைவிதி வசமோ என்றவர்கள் தானோடி
வந்து நின்று அடிபணிந்து மாவில் கனியில்லை யென்றார்
கண்டுதில்லை மாங்கனியைக் கள்ளர் கொடு போனாரோ
வண்டு செறி வாய்கைதனில் வளர் கயத்தில் தாழ்ந்ததுவோ
பட்சி பறவையது தான் பழமதனைக் கொடுபோச்சோ
வச்சிரமய் பார்ப்பார்கள் வந்து அந்தப் பொய்கையிலே
கெங்கைதனில் விழுந்தகனி கிளி மொழியார் குடத்தினுள்ளே
சங்கையுடனே புகுந்து தானே கொடுபோனாரோ
நாய் நரிகள் தின்றதுவோ நாட்டிலுள்ளோ ரெடுத்தாரோ
மாயமதா யிக்கனிதான் மறைந்த செய்தி தெரியுதில்லை
ஏது விதமோ அறியோம் என்றுரைத்தார் தூதுவர்கள்
மாது செறி மலர்மார்பன் மன்னன் நளராசாவும்
என் கனியை எடுத்தவர்கள் இந்நாட்டிலே யிருந்தால்
வன் தரத்தை யறுத்திடுவேன் வாணாளை முடித்திடுவேன்
நாட்டமுடன் நீங்கள் சென்று நமன் படைவீடானதிலே
தோட்டமுள்ள குறும்பூரு சேர்ந்தகுடி யானவர்கள்
வீட்டில் தண்ணீர்க்குடமதனை விரைவினுடன் நீங்கள் சென்று
தாட்டிகமா யாராய்ந்து தான் பார்த்து வாருமென்றான்

(சங்குமுகத்தழகியின் குடத்திலுள்ள மாங்கனி கண்டு வீரர்கள் அவளை இழுத்துச் செல்லுதல்)

என்றவுடன் தூதுவர்கள் எனக் குனக்கென்றே யோடி
சென்றவர்கள் குடத்தை யெல்லாம் சீக்கிரஞ் சோதித்தவர்கள்
மன்னவரே யிவ்வூரில் தீரன் வெங்கல ராசன்
பெற்ற சங்கு முகத்தழகி பெண் கொடியாள் குடமதனை
கொற்றவனே நாங்களெல்லாம் கோட்டைக்குள் போய் பார்த்ததில்லை
இல்லை யென்ற தூதுவரை ஏற்ற மன்னன் தான் சீறி
வல்லவனோ என்னி லவன் மகள் குடத்தைத் தான் பார்த்து
சோதித்துக் கனியிருந்தால் சீக்கிரத்திற் கொடுவாடா
நீதியுண்டோ கள்ளருக்கு நீங்கள் சென்று பாருமென்றார்
என்றவுட னவரோடி ஏற்ற வெங்கலக் கோட்டைக்குள்ளே
சென்றவர்கள் கைக்குடத்தைத் திட்டனவே பார்க்கையிலே
கைக்குடத்துக் குள்ளாகக் கனியிருக்கக் கண்டவர்கள்
மைவிழியாள் தன்னுடனே மாங்கனியும் கைக்குடமும்
குடத்தினுள்ளே கனியுடனே கோதையரையும் பிடித்து
திடத்துடனே கோட்டை விட்டு தெருக் கடத்திக் கொடுவரவே

(வெங்கலராசன் உட்பட அனைவரும் இறத்தல்)

மகளை யவர் கொடுபோக மரியாதை போச்சுதென்று
செகமெல்லாம் தான்கூடி சிரிக்குமல்லோ நம்மை யென்று
பொருது வெல்லக் கூடாது பூட்டுமென்றார் கதவுதனை
அரிதாகக் கோட்டைக்குள்ளே அகத்திருந்த எல்லோரும்
இருந்த நாட் போதுமென்று இறந்துவிட்டா ரப்பொழுது

(நளராசன் சங்குமுகத்தழகியை அவமானப்படுத்தச் சொல்லுதல்)

திருந்து புகழ் படைத் தலைவர் திருக்கனியைக் களவாண்ட
கள்ளிதனைக் கண்டோமெனக் கையடித்துத் தான்பாடி
நள்ளி யில்லார் தம்மை யிந்த நாட்டி லுள்ளோ ரறியார்கள்
சளக்காரக் கள்ளிதனை தான் கொணர்ந்தோ மென்று சொல்லி
நளராசன் முன்புவிட்டு நற்கனியுங் குடமும் வைக்க
கண்டதுவே அதிசயந்தான் கள்ளிதனைப் பிடியுமென்றார்
தொண்டிரை சூழுலகிலுள்ளோர் திருடவுந்தான் மாட்டார்கள்
நான் புசிக்கும் மாங்கனியை நாட்டிலுள்ளோ ரறியார்கள்
வானவர்க ளானாலும் மாங்கனியைத் தீண்டார்கள்
என்கனியைத் தான் பறித்து இடும்பு செய்த கள்ளிதனை
அம்புவியில் வைப்பதில்லை ஆருமக ளானாலும்
என் நாட்டி லிருந்து கொண்டு என் கனியைப் பறிப்பாரோ
மன்னன் மகளானாலும் மரியாதைக் கெடுத்திடுவேன்
கொண்டைதனைக் குலையுமடா குறடுகொண்டு அடியுமடா
வண்டத் தனஞ் செய்தவளை மயிர்முடியை அறுவுமடா
மயிர் முடியைத் தான் பகிர்ந்து மரத்தோடே கட்டுமடா
வயிராக்கியமாக வலுவுடனே நிற்குகிறாள்
முட்டாக்கைக் குலையுமடா முடியைப் பிடித்திழுவுமடா
பட்டாலே பொதிந்திருந்த பழிகாரி சரீரமதில்
கிட்டியிட்டு அடியுமடா கீறுமடா சரீரமதை
மட்டிபெற்ற மகள் தனக்கு மானமுண்டோ சுணையுமுண்டோ
முள்ளுவெட்டி அடியுமடா மூளிநாயைக் கடிக்கவிடு
தெள்ளு மகள் பெண் தனக்கு தேசமதில் சரியில்லையாம்
கள்ளக் கனி பறித்தவளைக் கட்டிக் கொண்டு வாருமென்றான்
கொள்ளையிட்டு அவளுடைய கோட்டையில் தீக் கொழுத்து மென்றான்
அந்நேராம் தூதுவர்கள் அரசனுக்கு ஏது சொல்வார்
மன்னவனே கோட்டைக்குள்ளே மாண்டு விட்டா ரெல்லோரும்
என்றவுடன் நளராசன் இறுதிவரு மென்று சொல்லி
அன்றவனு மறியாமல் அரும்பாவி நளராசன்
நாட்டி லிந்தக் கள்ளிதனை நாலுபெயர் தானறிய

கேட்வளை நாலுதுண்டாய் கீறி நடைதனில் தூக்கும்
மேலு மென்ன யோசனை காண் மிஞ்ச விடாச் செய்யுமென்ன

(சங்குமுகத்தழகி நளனிடம் வாதிடல்)

வாலை மதிப் பெண் கொடியாள் மங்கை சங்குமுகத்தழகி
கொன்றிடுவான் நம்மையவன் கொலைப்படுமுன் சறுக்குவதேன்
நன்று நடுவில்லை யினி நம்மளவுந் தெய்வமில்லை
என்று முகமே திரும்பி ஏத்த நளனோ டுரைப்பாள்
சென்றிடத்தி லுனைப் போலே சிரத்தைக் கெட்டபேர்க ளில்லை
நாசம் வருங் காலமதில் நல்லறிவு உனக்கில்லையே
மோசம் வரும் நாளையிலே முட்டியும் நீ குனியலையே
பெண்களுக்கு ஏறாத புத்தி கற்றாய் முழுமூடா
வண்டுமது உண்ணுவதை மண்டூகம் புசித்திடுமோ
உனைப்போல வெண்மதியோ உன் கனியை நான் பறிக்க
எனைப் பறித்தா யென்றாயே ஏதுமறியா மடையா
மடையா புலையா சாவாய் வார்த்தை யறியாக் கேடா
சடையாமற் பிழை வார்த்தைத் தானுரைத்தாய் கெடுமதியே
என்னாலே உன்னுடைய ராச்சிய மெல்லாம் முடியும்
உன்னோடு உன் நாமம் ஒக்கவே பாழாகுமடா
பாழாகு முன் நாடு பழியறியா முழுமூடா
தாழ்வு செய்ய வேணுமென்று சதிகேடா மாய்கைச் செய்தாய்
உன் சீமையானாலும் உனது சட்டம் நடந்தாலும்
வன் சான்றோர் நீதிகளும் வகை விபரம் நீயறிவாய்
நளச் சக்கரவர்த்தி யென்ற நாமமுறை யறியாயோ
சளப்படுவாய் நீ முடிவாய் சரியென்று பெண் கேட்பாயே
குலச் சான்றோர் பெண்ணுனக்குக் கொடுப்பாரோ வாங்குவையோ
இயல்பாக யிருந்தாலும் இழிகுலமல்லோ வெனக்கு
கற்பதனைக் குலைக்கவென்று கன மாய்கைச் செய்தாயோ
அற்பமல்லோ நீ யெனக்கு அழிந்திடுவாய் குடி முடிவாய்
குலச் சான்றோர் காவிரியில் கூடை தொடோ மென்றவர்கள்
தலை யழிந்து போனாலும் தருவானோ பெண் ணுனக்கு
மாபாவி நளராசா மாங் கனியில் மாயை செய்து
தீபாவி என் குடத்தில் சேர்த்தல்லவோ எனைப் பிடித்து
கள்ளி என்று பேராக்கி கனக் கொடுமை செய்தாயே
முள்ளுவெட்டி யடிக்கச் சொன்னாய் முடியுமடா வுன் சீமை
எனக்கல்லா லுனக்கேது இந்துலகில் கனிச் சீனி
அனைவோரும் புசிப்பதற்கு அழகுகனி ஏதுகண்டாய்
எங்களுக்கே யல்லாது இவ்வுலகில் யார்க்குளது

(சங்குமுகத்தழகி சாபமிடல்)

பொங்கமுட னுந்தனுக்குப் பிழை கேடு வந்துதடா
முன் னிருந்தோர் பெண்ணாலே முடிந்ததுவு மறியாயோ

உன்னாலே நீ முடிவாய் உன் குலமும் தான் முடியும்
கற்புடைய ஸ்ரீயானால் கன்னி பெற்ற மகளானால்
அற்பத்திலே நீ முடிவாய் அரும்பாவி யுன்நாடு
மண் மாரி பொழியுமடா மாபாவி நளராசா
எண்ணமற்ற யுன் நாடு இயல் கூகை யடையுமடா
கூகையது அடையுமடா குட்டிச் சுவராகுமடா
மாய்கையினால் மாயவினை வந்து உன்னைச் சூழுமடா
வெளவாலு மடையுமடா வாழ்வு குன்றி நீ முடிவாய்
எவ்வாறு முன் நாடு இப்போது அழியுமடா
உன்னாலே என் தகப்பன் உடன் பிறந்த சுற்றமெல்லாம்
வன்னமுள்ள என்னாலே மாண்டாரே யிப்போது
நானிருந்து ஆவதென்ன நல்லோனே ஆதிபரா
வானிருக்கும் தெய்வாரே மாதவரே இருஷிகளே
என்று சங்குமுகத்தழகி ஈஸ்வரனைப் போற்றி நின்று
அன்று புரமெரித்தவனே அம்மை யுமை பங்காளா
பெரும்பாவி செய்தவினை புகழும் குறும்பூரில் வளர்
கறைக் கண்டனார் திருமகனார் கருக்குவா ளைய னறியலையோ
இறையவனார் திருமகனார் இளம்பாளைய னறிந்திலையோ
குறையறவே ஆண்டிருக்கும் குமர பர னறிந்திலையோ
படைத்த பிரமாவுடனே பார்வதியு மறிந்திலையோ
குடையாக மலை யெடுத்த கோபாலா அறியலையோ
எங்கள் குல தெய்வாரே இயல்முனியே அறியலையோ
மங்கை பத்திர காளியம்மா மாதாவே அறியலையோ
என்னை யவன் கோப்பழித்து ஈடழிக்க வேணுமென்று
அந் நீதமாக அவன் அரும்பாவி நாளராசன்
ராமகிருஷ்ண மூர்த்தியுடன் நகுலன் செங்கிடாய்க்காரன்
சாமத்து ரோகியான சதிய னர குலமாடன்
பாதாள இயக்கியையும் பழிகாரன் பிறவி செய்து
சீராக இருந்த வென்னை சிறையழிக்க வேணுமென்று
மாயக் கனி யுண்டு பண்ணி மருட்டுடனே குடத்திலிட்டு
பாயமதாய் தான்பிடித்து படுபாவி கள்ளியென்றான்
தகப்பன் வெங்கலராசன் சாலத் தம்பி சின்னத்தம்பி
அகஸ்மாத்தாய் என்னாலே அல்லோரு மிறந்தார்கள்
என்னாலே யவரிறக்க இருப்பேனோ நானடியாள்

(சங்குமுகத்தழகி உயிர்விடுதல்)

என்பரனே நானிறப்பேன் எனக்குதவி செய்யுமென்ன
சங்குமுகத்தழகி சொல்லத் தானிரங்கி ஆதிபரன்
எங்குமுள்ளோர் தானறிய ஈஸ்பரரும் மனதிரங்கி
அழகு சங்குமுகத் தவளும் அப்படியே இறந்திடுவாள்
சளப்பாடு வருமுன்னே சண்டாள நளனுடைய

(குறும்பூர் அழிதல்)

பட்டணமாம் குறும்பூரும் பழிகாரன் வங்கிசமும்
அட்டியின்றி மண்மாரி ஆயிழையாள் கற்பதனால்
மண்மாரி கல்மாரி மாயத்தீயா யெரிந்திடவே
பெண் பழியாற் கல்மாரி பெய் தவனி யழிந்திடவும்
ஆதிபர னுதவி செய்தார் அழகு சங்கு முகத்தழகி
நீதியினால் மண்மாரி நிறைய அவளு மிறக்க
அறிந்து கருக்கு வா ளையனார் அவர்படையுந் தானெழுந்து
செறிந்த இளம் பாளை ஐயன் சேனைப்படை யுடனெழுந்து
பாவி நளராசனுட பட்டணத்தை யழிக்க வென்று
தாவியவர் வரும் முன்னே சங்கரனார் கற்பனையால்
பெய்யுதல்லோ மண்மாரி பேருலகம் அழியுதல்லோ
ஐயனுட படைகள் நின்ற அரிய தலம் தனை நீக்கி
நளராசன் பட்டணமும் நமன் படை வீடானதுவும்
கிளை வழியும் பலசனமும் கோட்டையதும் மண்மூடி
மறுவில்லா நளன் சீமை மண்மாரி பெய்ததல்லோ

(நளராசனும் படைகளும் அழிதல்)
(வேறு)

மண்மாரி வெய்திடவே மாண்டனர் கா ணெல்லோரும்
திண்ணமுள்ள நளனுடனே சேனைகளுந் தான் மாள
மாபாவி நளராசன் மாய்கையினால் வந்துதித்த
ராமகிருஷ்ண மூர்த்தியுடன் நகுலன் செங்கிடாய்க்காரன்
வம்ப னர குல மாடன் மாயக்காரி புலமாடி
சங்கையுள்ள மாவியக்கி தானவர்க ளெல்லோரும்
சிறந்த புகழ் நளராசன் சீமையென முன்னிருந்த
குறும்பூரு நாடதையும் கூகைக் காடாக்கின பின்
நளராசன் படையுடனே நல்ல செந்தூர் பதி நோக்கி
வளமாக வழி நடந்து வந்தவர்க ளெல்லோரும்
ஆறுமுக நயினாரை அடிதொழுது வணங்கிடவே

(அடிதொழுத நளராசனை நயினார் துரத்துதல்)

மாறுபட நயினாரும் மாபாவி தனை நோக்கி
பெண் பாவஞ் செய்தவனே பெரும்பாவி நளராசா
கண்ணெதிரே நில்லாதே கசடா நீ போவெனவே
திருநடையில் நில்லாதே திரைகடலிற் சாடுமென்ன
அருமையின்றிப் பேசிடவே அல்லோரும் பார்த்திருக்க
சண்முகனார் சொற்கேட்டு தங்க இடமில்லை யென்று
தண்ணீரிற் சாடி விட்டான் சண்டாளன் நளராசன்

(திரைமுகத்தழகியும் சங்குமுகத்தழகியும் பூசை பெறுதல்)

பின்னுந் திரை முகத்தழகிப் பெண்ணாளோ டெல்ல வரும்
அந் நகராங் குறும்பூரு ஐயனுட திருமுன் வந்தார்
கருக்கு வா ளையனுடைய கனத்த மணி மேடை புக்கி
உருக்கமுடனே தொழுது உள்ளதெல்லா முரைத்திடவே
பிறந்த கதை வளர்ந்த கதை பெரும் பழியா யிறந்த கதை
அறந் தழைக்குஞ் சிவசுதன் முன் அபயமுட னுரைத்திடவே
நன்றேனவே ஐயனாரும் நாடி யகமே மகிழ்ந்து
இன்றுனக்கு வரந்தாறேன் என்றவரும் வரங்கொடுத்தார்
தொண்டிரை சூழ் பூவுலகில் திருவாழுங் கோயிலதில்
சங்குமுகத்தழகியுடன் தானே திரை முகத்தழகி
என்று நீங்கள் பூசையுண்டு இனிதாகவே வாழ்ந்து
மண்டலத்தி லிருங்களென்ன மன மகிழ்ந்து எல்லோரும்
கருக்குவாளையனுடைய கருணையினாற் பூவுலகில்
திருக்கோயிற் பூசையுண்டு சீருடனே வாழ்ந்திருந்தார்.

(முடிந்தது)

(கதைப் பாடலை இயற்றிய புலவர் ஆறுமுகம் நாடார்)

பரமசிவ சிவனு பாண்டியர் கதை

(தாள்சுவடி பதிப்பு)

(சுரண்டை ஆ.வேல்சாமி பாண்டியன் தேவர் அவர்களிடமிருந்து தாள்சுவடி பெறப்பட்டது.)

(காப்பு)

முன்னவனே முதியவனே முட்டிநலம் சொன்னவனே
தூயவனே தூய்மை நலங்காத்தவனே என் சிற்பகனே
ஐங்கரனே கரிமுகனே செஞ்சடையான் சேகரனே
தற்பரனே நின் றாள் சரணம் காப்பு.

(சரஸ்வதி துதி)

வேதத்தில் வீற்றிருக்கும் விமலையே கமலவாணி
அழகுபார்வதி உன் பாதத்தை நம்பினோர்க்கு
பரிசு தந்து அருள் பாகிப்பாய் சூதற்ற மனசுடனே
சுந்தர வடிவாய் தோன்றும் தீதற்ற பசுங்கிளியே
என் சிந்தனையிலிருந்து செப்புவாயே.

(முருகன் தோத்திரம்)

அருவமும் உருவமுமாகி அன்பகள் துயர்தீர்க்கும்
குருமுனி உபதேசித்த கூறு வடிவேலும் தாங்கி
வருகின்ற அடியார்க்கு வல்வினை துயர்தீர்க்கும்
திருமலைதனில் வாழும் ஈசன்திருவடி சரணம் போற்றி.

(கைலாயச் சிறப்பு)

ஆதி கைலாச வாசலிலே ஆராரெல்லாம் கொலுவிருந்தார்
மாணிக்க கைலாசத்தில் மரகத பொன்வெள்ளி ஆசனத்தில்
ஆனி பொன் நாள் முடிகுலுங்க ஆராரெல்லாம் கொலுவிருந்தார்
பரமசிவன் பார்வதியும் பச்மொலும் லட்சுமியம்மையும்
மூவர்களும் முனிவர்களும் முப்பத்தி முக்கோடி தேவர்களும்
நராதரும் நல்முனியும் நாப்பதினாயிரம் கோடிரிசியும்
அட்டத்திக்கு பாலகர்களும் அதை சார்ந்த தேவர்களும்
நாரதரும் நல்முனியும் காளிகூளி ஏவல் செய்யும்
கவித்துக்காரர்கொலுவிருந்தார் கொலுவிருக்கும் நாளையிலே

(உயிர்களைக் காத்து பகவான் கொலுவிருத்தல்)

அரணான பகவானும் ஈரேழு பதினாலு லோகம்
அதலை விதலை சுதலை மகாதலை தகாதலை
பூமி அப்பு தேயு வாய்வு ஆகாயமென்று சொல்லக்கூடிய
பதினாலுலோகத்தை படைத்து அப்படிப் படைத்த லோகத்திலே
எறும்பு யானை முதல் எம்பத்தி நாலு ஜீவாத்மாவையும் படைத்து
கற்புக்குள் முத்துக்கும் கல்லிருக்கும் தேளுக்கும்

கருவிலிருக்கும் திசுக்களுக்கும் விருப்பத்துடன் அமுதளிக்கும்
மெய்யான பகவான் கைலாய மலையிலே வீற்றிருந்தார்

(நாட்டு வருணனை)

நாட்டிலையும் நல்ல நாடு நாவலர்கள் புகழும் நாடு
கோடைமழை பொழியும் நாடு குளிர்ந்த தென்றல் வீசும் நாடு
இஞ்சி பிஞ்சி பூக்கும் நாடு இருவாச்சி மலரும் நாடு
கன்னல் செந்நெல் விளையும் நாடு காரம் பயிருவிளையும் நாடு
வரிக்கா பலா மரமும் வளர்ந்தோங்கி செழிக்கும் நாடு
அகப்பா நாடு துளுவா நாடு அனைவோரும் போற்றும் நாடு
அப்பெரிய நாடாதிலே ஆண்டுவாரார் பாண்டியமார்

(ராஜதுரை பாண்டியன் பிள்ளையின்றி வருந்துதல்)

ராஜதுரை பாண்டியரும் மனைவி ராஜலெட்சிமியும்
அரண்மனை கட்டிலிலே ஆனந்தமாய் ஆண்டுவர
ராஜதுரை பாண்டியருக்கு வயது நாற்பத்தஞ்சு ஆச்சி
மனைவி ராஜலெட்சுமிக்கு வயது மூப்பித்திரெண்டாச்சி
ஆணும் பெண்ணும் அரசாள அழகு மைந்தன் இல்லை
பிள்ளை இல்லா கவலையது பெருங்கவலை ஆச்சு

(ராஜலெட்சுமியின் பிள்ளையில்லா பெருந்துன்பம்)

மைந்தன் இல்லா வாசலிலே மறையோர்கள் வரமாட்டார்
பிள்ளை இல்லா வாசலிலே வரியோர்கள் வரமாட்டார்
மலடி என்று சொல்லுவதற்கோ மாபாவி நான் பிறந்தேன்
இருள்சி என்று சொல்வதற்கே இவ்வுலகில் நான் பிறந்தேன்
நம் கண்ணுக்குப் பின்னால் காணி ஆள பிள்ளை இல்லை
வைகுண்டம் போகும்போது வழி அனுப்ப பிள்ளை இல்லை
எள்ளு தண்ணீர் இறைப்பதற்கே நமக்கு பிள்ளை இல்லை
வட்டிலில் சாதம் போட்டால் வாரி உக்க பிள்ளை இல்லை
இலை அன்னம் போட்டால் இருந்து உக்க பிள்ளை இல்லை
கறி அரைக்கும் தேங்காக்கு கை ஏந்தும் பிள்ளை இல்லை
நீர் குடித்து தண்ணீரை நின்று அலம்ப பிள்ளை இல்லை
மழை பேஞ்ச முத்தத்திலே மண் அளைய பிள்ளை இல்லை
குற்றம் ஒன்று செய்யவில்லை குறை வந்த விபரம் என்ன
கொத்தக் குறைக்கலையே குறை மரக்கா அளக்கலையே
குத்தால் வேலை வாங்கி கூலியைக் குறைக்கலையே
பட்டறை நெல்லதில் பதர கலக்கல்லையே
ஓட்ட மரக்கா நாழிபோட்டு நான் அளக்கலையே
சோதனை காலமாச்சே இது கடவுள் சோதனையோ
என் கணவன் ராஜமன்னா என்று கருத்துடைய வாசகமோ

முத்துபோல் கண்ணீரை முகமெல்லாம் சோரவிட்டாள்
புகழைப் போல் கண்ணீரை பைங்கிளி பக்கம் சோரவிட்டாள்
தங்கம் போல கண்ணீரை ராஜலட்சுமி பொன்கொடியாள்
தரையில் சோரவிட்டாள் அழுது புலம்பலுற்றாள்

(மன்னனின் ஆறுதல் மொழி கூறுதல்)

மங்கையுடைய துயரம் கண்டு மன்னன் துரை பாண்டியன்
அஞ்சவேண்டா மழ வேண்டாம் அருங்கிளியே பொன் கிளியே
நமக்கு சொத்து இருந்து என்ன நாடு நகரிருந்தென்ன
செய்ய பவுசு இருந்து என்ன செய்ய பாலு இருந்து என்ன
கண்ணுமூடி நாளை போகும் போது கைகாட்டி அனுப்புவதற்கு
பிள்ளை இல்லைதான் தர்மம் செய்ய வேண்டும்
ஊரில் உள்ள கோவிலுக்கு நெய்வேத்தியம் போட வெண்டும்
நின்று விளக்கேற்ற வேண்டும் என்று ராஜதுரை பாண்டியனும்
சோசியரை அழைத்து தேங்காய் தச்சனை கொடுத்து
சாதகத்தைப் பார்க்கச் சொன்னார் மன்னவனும்

(ஜோசியன் பலன் பார்த்துக் கூறுதல்)

ஓண்டிச் சுருள் எடுத்து உத்துப் பார்த்தார் சோசியரும்
ராஜதுரை பாண்டியனே உமக்கு நல்லகாலம் பிறந்தாச்சு
ஆசைக்கொரு ஆண் குழந்தை அருமைக்கொரு பெண்குழந்தை யுண்டு
மேநாடு சன்னதியிலே மேன்மையுள்ள தட்சணை தேசத்திலே
திருநெல்வேலி சில்லாவிலே சங்கரன் கோவிலிலே வீற்றிருக்கும்
சங்கர நயினாருக்கும் சங்கர ஆவுடையம்மைக்கும்
பதினோரு மாதந்தம் நடத்த வேண்டும் பச்சை அரிசி சாதம் பொங்கி
தலைமை மூழ்கி பிறங்கை கட்டி வாயால் கவ்வி வாரி அள்ளி
சாதம் உக்க வேண்டும் இந்த விரதம் முடித்துவிட்டால்
கட்டாயம் குழந்தை இரண்டு கடவுளவர் தவம் கொடுப்பார்

(மன்னவனும் தேவியும் பிள்ளை வேண்டி பயணம் செல்லுதல்)

சோசியர் சொன்ன வார்த்தைக் கேட்டு ராஜதுரை பாண்டியனும்
ராஜலெட்சுமி அம்மாளும் பாத யாத்திரை போணுமென்று
அக்கம் பக்கத்து வீடுகளெல்லாம் அறிக்கை செய்தாள் பெண்கொடியும்
பொட்டணங்கள் கட்டிக் கொண்டு புறப்பட்டார்கள் இரண்டு பேரும்
இருட்ட கண்ட இடங்களிலெல்லாம் இறங்கி அங்க தங்கிடுவர்
அன்று அங்கு தங்கிவிட்டால் அடுத்த நாள் காலையிலெழுந்து
தண்ணி கண்ட இடங்களிலே சாதன பாணம் செய்துவிட்டு
கோவில் கண்ட இடங்களெல்லாம் கூம்பிட்டவர்கள் இரண்டு பேரும்
பொட்டணத்தைத் தூக்கிக் கொண்டு புறப்பாட்டார் இரண்டு பேரும்
பத்தோட பத்து நாள் பாதயாத்திரை முடித்துவிட்டு மவர்

சங்கர நயினார் கோவிலுக்கு சீருடனேதான் வந்து இறங்கிடுவர்
தெக்கு மாடவீதி விடுதி வீடு அமைத்து வீற்றிருந்தார்

(பிள்ளை வேண்டி நயினாரை வழிபடல்)

செவ்வாய் கிழமை அன்று சோலையாள் தான் எழுந்து
மன்னனை அழைத்து மங்கையவள் சொல்கிறாள்
பூவோடு தேங்காய் பழம் வாங்கிக் கொண்டு வந்து
சாயங்கால வேளையிலே வடக்கு வாசலிலே
சாந்தலை மூழ்கி சந்தனத்தால் கோலமிட்டு
பாவதலை மூழ்கி பவிசாய் நீறுமிட்டு தான்
பன்னீரால் கோலமிட்டு பாவினையாய் தலைமூழ்கி
மஞ்சணையால் கோலமிட்டு குருத்துவாழை இலைவிரித்து
சாணிப்புள்ளையார் பிடித்து வைத்து அருகம்புல் பிடித்து வைத்து
நெறநாழி அமைத்து வைத்து நெல்லு தட்டி வைத்து
பாக்கு வெற்றிலையும் அவலோடு பொறிகடலையும்
ஆதி மூலத்துக்கு தாம் படைத்து அகமகிழ்ந்துதானே
தேங்காயை உடைத்து வைத்து தீபாராதனை முடித்து
அடுப்புக் கூட்டி பானை வைத்து பச்சரிசி போட்டு சாதம் வைத்து
ராஜதுரை பாண்டியனும் ராஜலெட்சுமி அம்மாளும்
தரையில் சாதம் கொட்டி பின்னால் கையை கட்டி
வாயால் சாதம் உண்டார் விரதமதை நோற்றிருந்தார்
இப்படி மாதாத்தம் முடிச்சு கடைசி மாதாத்தம் முடியவுமே
கட்டழகன் ராஜபாண்டியன் முன்நூறு ரூவாய் காசமாத்தி வச்சி
சாயங்காலம் ஆகாரம் உண்ட பின் அகமகிழ்ந்திருக்க
ராஜலெட்சுமி அம்மாள் பட்டரை சாமி இங்கே வாங்க
இதிலே ரூபாய் காசு இருக்கு சங்கர ஆவுடைய அம்மனுக்கு
அபிஷேகம் பண்ணிருங்கோ வென்று சொன்னாள்
ராஜதுரை ஓடி வந்து பட்ட ரையரைக் கூப்பிட்டு
முன்நூறு ரூபாய் காசு இருக்கு முறையாக நீங்களுந்தான்
சங்கர நயினாருக்கு அபிஷேகம் பண்ணிருங்கோ வென்றான்
அதைக்கேட்டு பட்டரைசாமி ஆகட்டும் என்று சொல்லிவிட்டு
சாமிக்கும் அபிஷேகம் செய்து வருகிறார் பவிசாகவே
பாண்டியரும் பெண்கொடியும் பார்த்து மகிழ்கின்றனர்

(ராஜலெட்சுமிக்குப் பிள்ளை வரம் கிடைத்தல்)

பட்டரைசாமி கற்பூரத்தைக் கொண்டு வந்து நின்றுதான்
ராஜதுரைக்கும் ராஜலெட்சுமி அம்மாள்க்கும் கொடுத்தார்
இராஜலெட்சுமி அம்மாவிடம் ஈசன் வாசலிலே பதினொரு மாதம்
குறை யில்லாமல் வந்திருந்து நற் றவம் செய்ததனால்
அருமைக்கொரு பெண்மகளும் ஆசைக்கொரு ஆண் குழந்தையும் தருவார்

பிறக்கும் பெண் குழந்தைக்குச் சிறப்பாகவே நீயும்
சங்கர நயினார் வாசியிலே நற்பலன் கிடைத்ததால்
சங்கர ஆவுடை என்று பெயரிடு வென்றார்

(இருவரும் மகிழ்ச்சியுடன் நாடுதிரும்புதல்)

அன்று அங்கு தாமதித்து அடுத்த நாள் காலையிலே
அவனும் தேவியரும் அகமகிழ்ந்துசிறப்புடனே
பாதயாத்திரை முறைப்படியே பவுசோடு பயணம் வைத்தார்

(கனவில் அம்மன் அருள்பாலித்தல்)

அப்பா நாடு ஊரில் அழகு நல்ல மன்னவன்
ராஜதுரை பாண்டியனும் ராஜலெட்சுமி அம்மாளும்
சாதி சனத்துக்கெல்லாம் பந்தி போஜனம் வைத்து
பவுசோடு முடித்ததால் பாங்குடனே கனவில்
அன்று இரவு படுத்திருந்த இடத்தில் சங்கர ஆவுடை தோன்றி
இன்றுமுதல் உன் வயிற்றில் குழந்தை உண்டாகும் மென்றாள்

(ராஜலெட்சுமி கர்ப்பமாதல்)

அன்று முதல் குடிமறந்தாள் பாண்டியனுடைய மனைவி
பத்தினியானாள் ராஜலெட்சுமி மனமகிழ்ந்துதான்
நத்தியிடம் குடி மறந்து நாற்பது நாள் சூலியானாள்

(பேறுகால மாற்றங்களும் துயரும்)

ஒண்ணாவது மாதத்திலே உடையவனே தஞ்சமென்றாள்
இரண்டாவது மாதத்திலே இசக்கிக்கு மசக்கை
மூன்றாவது மாதத்திலே மெய்குழல் பொன்கொடிக்கு
முத்து முத்தா வேத்திடுமாம் முகமெல்லாம் வெளுத்திடுமாம்
நாலாவது மாதத்திலே நாசிக்கே மச்கையாகுமாம்
ஐந்தாவது மாதத்திலே அரைவயிறு பூரணமாம்
ஆறாவது மாதத்திலே ராஜலெட்சுமி பொன்கொடிக்கு
அனைவரும் வந்திருந்து அரி பழம் போட்டிடுவார்
ஏழாவது மாதத்திலே இனத்தார் எல்லாம் வந்திருந்து
இன்பமுடன் வளகாப்பு இனிதே செய்திடுவார்
எட்டாவது மாதத்திலே திட்டுமுட்டு வருதென்பாள்
தின்பண்டம் வேணுமென்பாள் நினைத்தவொரு பண்டத்தை
ராஜதுரை பாண்டியன் சூலியிடம்தான் கொடுத்தார்
ஒன்பதாவாது மாதத்திலே ஓலைபோல் சுழலவே
பத்தாவது மாதத்திலே பலன் கிடைக்கும் நாளிலே
வலிக்குது என்பாள் வானாலை எடுக்குது என்பாள்
உழக்கு வலி என்பதுதான் உயிர்வலி ஆகுது என்பாள்

நலிவலி என்பதுதான் நான்குவலி ஆகுதென்பாள்
மருத்துவத்தைக் கூப்பிடுங்கள் மன்னவரே ராஜாவே

(மருத்துவச்சியை அழைத்துவரல்)

அதைக்கேட்ட ராஜதுரை அடுத்த தெருவிலே போய்
அழைத்து வந்தார் அழகு நல்ல மருத்துவத்தை
மருத்துவத்தைக் கண்டவுடன் மங்கை ராஜலெட்சுமியும்
நான் சாவேனா பிழைப்பேனோ தைரியத்தைச் சொல்லிடம்மா
மான்போல் வார்த்தைச் சொல்லி மனக்கவலை தீர்த்து வைத்தாள்
தேறும் வார்த்தைச் சொல்லி தேத்தி வைத்தாள் மருத்துவம்
கொஞ்ச நேரம் கழித்து வந்தால் குழந்தை வந்து பிறக்குமம்மா

(பெண் குழந்தைப் பிறத்தல்)

மோட்டில் கயிற்று போட்டாள் முக்காலி எடுத்து போட்டாள்
முக்கா இருந்துக்க அம்மா கடவுளை நேந்துக்க அம்மா
கைக்குழந்தைப் பிறக்குதம்மா சொல்லி வாய்மூடும் முன்னர்
தோகை ராஜலெட்சுமி அம்மாளுக்கு துயர் தீரவே
பொழுது விடிவதற்கு முன் பெண் குழந்தைப் பிறந்ததையா

(குழந்தைக்குப் பெயர் சூட்டுதல்)

பிள்ளை பிறந்தவுடன் பேரழகி மருத்துவம்
கையில் வாங்கி குளிப்பாட்டி சேணை போட்டு
கொண்டுவந்து பார்த்தாளே கண் சிறந்த மருத்துவமும்
மாசு மரு கிடையாது மங்கையுடைய சரீரத்தில்
கோவைப் பழ நிற குழந்தைக்குச் சகலரும் கூடி வந்து
சங்கர ஆவுடையாளென்று பெயர் கொடுத்தார்

(குழந்தையைச் சிறப்புடன் வளர்த்தல்)

பூவில் விட்டோம் ஆனால் பொற்பாதம் நோகும் என்றும்
தரையில் விட்டோம் ஆனால் கண்டைக்கால் நோகும் என்றும்
தோளில் தொட்டில்கட்டி தொடை அதிலே நடைபதித்து
சொகுசாக நடத்துராா் சீராட்டி தாராட்டி சிறப்புடனே
உண்மையாக வளர்த்துவாராா் வெண்கொடியாள் ராஜலட்சுமி
ஒன்று இரண்டு வயது ஆச்சு சங்கர ஆவுடையாளுக்கு
மூன்றாவது வயதில் முடியெடுத்துக் காதுகுத்தி நான்காவது வயதில்
நல்லுருவு பிறந்திடுமாம் நாயகியாள் வெண் கொடிக்கு

(குழந்தைக்கு கல்வி கற்பித்தல்)

ஐந்தாவது வயதினிலே அறிந்து கொண்டார்
ராஜதுரைபாண்டி பள்ளியில் படிக்க வைத்தார்

ஆறாவது வயதினில் அரிச்சுவடி பெரிச்சுவடி
அருமையுள்ள சங்கர ஆவுடை அடிபணிந்து படித்துவாராள்
அவளது ஏழாவது வயதினிலே அருஞ்சுவடி குழிபெருக்கம்
இன்பமுடன்தான் படித்தாள் தேன்மொழி ஆவுடையாள்
பன்னீரண்டு வயது ஆச்சு பலசாஸ்திரங்கள் எல்லாம் தான்
படித்தாள் வேதகீதம் ஆவுடையுமேதான் படித்தாள்

(சங்கர ஆவுடையாள் பவருமெய்துதல்)

பதினான்கு வயது ஆச்சு பைங்கிளி சங்கர ஆவுடை
சங்கர அம்மன் கிருபையில் சிறப்புடனேதான் வளந்து
பூத்திருந்தாள் முல்லை மர மெய்குழல் ஆவுடையாள்
பூந்தலை பிச்சிமரம் பூத்தது போல் பெண்ணரசி பூத்தாளே
இருவாச்சி பூத்தது போலன்ன பிள்ளை சங்கர ஆவுடை
இன்பமுடன் பூத்திருந்தாள் இயல்புடனே அந்நாளில்

(பூப்புச் சடங்கு செய்தல்)

பூத்து இருந்த நேரம் கண்ட புண்ணியவான் ராஜதுரை பாண்டியன்
தலைக்குத் தண்ணீரிட்டு பதினாறாவது நாளைய சடங்குச் செய்தானே

(சங்கர ஆவுடையாளின் அழகுச் சிறப்பு)

சங்கர ஆவுடை அழகு பற்றி சொல்கிறேன் கேளும்
மாசு மரு கிடையாது மங்கையவளுட சரீரத்திலே
ஏறு நெத்தி புருவத்தாள் ஏத்திழையாள் சங்கர ஆவுடை
மூன்றாவது பிறை சந்திரன் போல் முகத்தில் திருவருளும்
கெண்டை மீனைப் போல கிளிமொழியாள் கண்ணழகும்
தாமரை இதழ்போல் தையலாளின் கன்னம் இரண்டும்
தங்கமுலாம் பூசியது போல கொம்பனையாள் நாசிகளும்
கோவை கனிபோல நல்ல கொம்பனையாள் உதடுகளும்
பயத்த நெத்து சாயலிலே பச்சரிசி பதித்தது போல் நகத்தழகு
ஆனை துதிக்கைபோல் அருங்கிளியாள் தொடையழகும்
கட்டில்கால் கனகமணிபோல் அழகு கால் இரண்டும்
ஆமை ஓட்டின் சாயலிலே அருங்கிளியாள் பாதம் இரண்டும்
முன்னும் அழகு பின்னும் அழகு முகத்தினுள் திரு அழகும்
புத்தகத்தைப் போலல்லோ புறமுதுகுதான் அழகு
கன்னார் உலையதிலே பொற்கட்டிக் கொள்ளார் உலையதிலே
கூடாம்தட்டி வார்த்தது போல் மேனகையவள் ஆனாள்
மேலே ஒரு கருப்பு இருக்கும் ஊர்வசிக்கு ஆனால்
உடல் பக்கத்தில் கருப்பிருக்கும் மாதுளம் பழத்துக்கானால்
மை உண்மை கருப்பு ஈச்சம்பழம் போலதான்
இளக்காளி பல் வரிசை பதக்கையம் கொடுத்தது போல

பக்கம் பதினாரு பல்லும் முல்லை அரும்பு போல
முன்வரிசை பல் அழகும் பிச்சி அரும்பு போலதான்
பின்வரிசை பல்லழகும் செவ்விளனி குரும்பல் போல்
கோ விதழாள் நாடிகளும் கமுகம் குலை சாய்ந்தது போல்
கட்டழகி கழுத்து அழகும் ஆல இலைபோல் செயலும்
அருங்கீரியாய் மருவிலா அழகு நல் வயிறு அழகும்
சிந்துடுக்கு சாயல் சேலைகட்டும் இடை அழகும் கண்டு
வாழைத் தண்டு போல் கனத்த இரண்டு கை அழகும்
அவரைக்காய் சாயலிலே அவளுடைய விரல் அழகும்
எலுமிச்சை பழம் ஆனால் இலை உண்ட கருப்பு இருக்கும்
ஒடுகின்ற தண்ணீருள் உள் மணலும் கருப்பு இருக்கும்
ஆடுகின்ற நாகத்திற்கு அடிவயத்தில் கருப்பு இருக்கும்
சூரியனுக்கு ஆனால் சுற்றிவர கருப்பு இருக்கும்
சந்திரன் ஆனாலும் சற்றே ஒரு கருப்பு இருக்கும்
இவள் தலை கருப்பொழிய இவள் புருவம் கருப்பொழிய
வேறு ஒன்றும் கருப்பில்லை தாருகுழல் பெண்கொடிக்கு
அள்ளி தெளித்தது போல் அஞ்றாறு தேமல் உண்டு
இப்படி அழகு வாய்ந்த ராஜதுரை பாண்டியன் மகள்
ராஜலெட்சுமி பெற்ற திருமகளல்லாவா நலமுடன் வசித்து வருகிறாள்

(தருமதுரை பாண்டியன் திருவிழாகாண வருதல்)

கோவில் திருவிழாவதுதான் நடந்து கொண்டிருக்கிறது
ஏழாம் திருநாள் எண்ணை காப்பு மண்டகப்படி
கெட்டி மேளம் சங்கீதம் பசனக் கோஷ்டி நடந்து வருகிறது
அப்படி இருக்கிற நேரத்திலே சங்கர ஆவுடையாவை
பக்கத்துவீட்டு பெண்கள் கூடி திருநாள் பார்க்க பயணம் வைத்தார்
தருமதுரை பாண்டியன் குதிரையை அலங்காரம் பண்ணி
சப்பரம் முன்னாலே வந்து கொண்டே சாகவாசமா யவன்
ஆடல் பாடல் கெட்டி மேளம் பதினொரு வாத்தியங்கள் முழங்க
இதைப் பார்த்து ரசித்துக் கொண்டு வரும் தருமதுரை பாண்டியன்
இரு பக்கமும் சிலம்பு கும்ப விளையாட்டு தரைவிளையாட்டு
பாண்டியன்மார்களெல்லம் நின்று தருமதுரை பாண்டியனை
எதிர் கொண்டு வணங்கி சிறப்புச் செய்கையிலேதான்

(தருமதுரை பாண்டியன் ஆவுடையாள் மீது காதல் கொள்ளுதல்)

தெற்கு ரத வீதியிலே ஆடல் பாடலுடன் ஒரு சப்பரம் வந்து நிற்கவும்
சங்கர ஆவுடையாள் சப்பரத்தைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள்
தருமதுரை பாண்டியன் சங்கர ஆவுடையாவைப் பார்க்கிறார்
பார்த்தவுடன் அவர் பரவசமாகி மதுகுடித்த வண்டைப் போல மயங்கி

சங்கர ஆவுடையாவை பார்த்து ஆகா ஆகா அழகான திரேகக் கட்டு
கம்பீரமான முகவெட்டு துடுக்கான நடை அடுக்கான பல்வரிசை
வயோதிகளுக்கு வாலிப முறுக்கை ஏத்திடுவாள் என்பதால்
நம்போன்ற இளம் காளையின் கதி யென்னதான் ஆவது
இம்மாதிரி பெண்ணைப் படைப்பது நான்முகத்துக்கு
ஒரு வழுதுபோக்கு வேலையாக இருக்குமோ
என்று மனம் உருகி மங்கையைப் பார்த்த வண்ணமிருக்கிறார்

**(சேவகனை ஆவுடையாள் குறித்து
விசாரித்து வரச் சொல்லுதல்)**

தன்னுடைய சேவகனை அழைத்து அதோ நிற்கிறாளே பெண்
அந்த பெண் எங்கு போகிறாள் அவர் அப்பா பெயர் என்ன
கிளை என்ன என்று தெரிந்து வா என்று அனுப்பினார் சேவகனை

**(சேவகன் ராஜதுரை பாண்டியனை
மன்னரிடம்அழைத்துவருதல்)**

மாடத்தெரு வீதியிலே கடைசியில் வந்தான் சேவகன்
ராஜதுரை பாண்டியன் உள்ளிருந்து வெளியே வந்து
சேவகனை அமரச் சொல்லி ஐயா எங்க வந்தீங்க என்றதும்
விசயமதை தான் கூறி அரண்மனைக்கு அழைத்துக் கொண்டு வருகிறார்

(தருமதுரை பாண்டியன் பெண் கேட்டல்)

ராஜதுரை பாண்டியன் தருமதுரை பாண்டியனைக் கண்டு வணங்கினார்
மன்னனே என்னையும் நீர் அழைத்த காரணம் என்னவோ
கோவில் திருவிழாவிற்கு ஆயிரம் பெண்கள் நின்றனர்
அதில் உங்கள் பெண்கொடி சங்கர ஆவுடையும் நின்றாள்
நானும் அவளைப் பார்த்தேன் அவளும் என்னைப் பார்த்தாள்
ஒருவரொருவர் கண்ணோக்கினோம் உள்ளம் பறிமாறினோம்
அன்று முதல் எனது உள்ளம் அவளை நினைத்து வாடுகிறது
உன்னுடைய பெண் கொடியை நான் திருமணம் செய்து கொள்கிறேன்
எவ்வளவு செலவு ஆனாலும் நான் செலவு செய்கிறேன்
என் வீட்டுக்கிளை மறுவீட்டுக்கிளை மன்னவர் கிளை

(ராஜதுரை பாண்டியன் திருமணத்திற்குச் சம்மதித்தல்)

பெண்கிளை வீரமுறுத்தான் கிளை சிறந்த கிளை
என் மகளை உங்களுக்குத் திருமணம் செய்து கொடுத்தால்
எனக்கு ஒரு பாக்கியம் புண்ணியம் செய்து இருக்கனும்
ஆனி மாதம் பத்தாம் தேதி பெண் அழைப்பு சடங்கு
பதினொன்றாம் தேதி திருமணம் என்றான் ராஜதுரை பாண்டியனும்

(திருமண விழாவிற்கு அலங்காரம் செய்தல்)

அன்று முதல் தருமதுரை அரண்மனையில் பந்தல் கால் நாட்டி
மாவிலையால் தோரணமாம் நான்கு வாசலுக்கும்
சிறந்த நல்லவொரு அலங்காரமாம் சாந்தாலே தரைமெழுகி
சிறந்த கல்யாண பந்தலிலே சந்தனத்தால் கோலமிட்டு
பாலால் தரை முழுகி பன்னீரால் கோலமிட்டு
மாவால் தலைமொழுகி மஞ்சணையால் கோலமிட்டு
கோலம் போட்ட வாசலில் குருத்துவாழை இலைவிரித்து
தலைவாழை இலையில் பிள்ளையார் பிடித்து வைத்து
பல ஐயர் எல்லாம் வந்து மந்திரங்கள் முழங்கவும்
மேளம் முழங்கவும் நாலாயிரவர் கூடிவந்து நின்று
மன்னன் தேயத்துடன் நின்று அன்னதானம் சென்னதானம்
மாதானம் கோதானம் பக்தர்தானம் பசுமாடு தானம்
இப்படியெல்லாம் தருமம் இயல்புடனவர் செய்து
ஐம்பத்தாறு ராஜாக்கள் எல்லாம் வந்து இருந்து மகிழ்ந்து
உக்கிரபாண்டியனுடைய மகன் தருமதுரை பாண்டியன்
திருமணத்தை நடத்தினார்கள் திருவிழாக்கோலமுடனே

(மணமக்கள் திருக்கோலம் கண்டு மக்கள் வியத்தல்)

வந்தார்க்கெல்லாம் சாப்பாடு திருப்தியாக கொடுத்து
பல்லக்கு அலங்காரம் செய்து பகல் நாளும் இரதவீதியும் சுற்றி
மக்கள் எல்லாம் கண்டு மகிழ்ந்து பெண் மாப்பிள்ளை
இப்படியல்லவா இருக்க வேண்டும் என்று வியந்தனர்
சங்கர ஆவுடையும் தருமதுரை பாண்டியனுமங்கே
மக்களுக்கு மன்மதனும் ரதியும்போல காட்சியளித்தார்கள்

(சங்கர ஆவுடையாள் கர்ப்பமாதல்)

திருமணம் சிறப்பாக முடிந்தது எட்டோடு எட்டு நாளா
இந்த கல்யாணம் நடந்து ஐயா ஒரு வருஷம் கழிந்து போனது
ஆண்டவனுடைய கருணை அருட் கடாட்சியத்தால்
தருமதுரை பாண்டியன் சங்கர ஆவுடை சிவனுடைய கருணையால்
நந்தியுடன் குளி மறந்து நாற்பதுநாள் சூலியானாள்

(கற்பகால உடலியல் மாற்றங்கள்)

காற்றடித்து சாலை பூத்ததுபோல் கட்டழகி சூலி ஆனாள்
ஒன்றாவது மாத்தையிலே உத்தமி உசக்கி மசக்கை ஆனாள்
இரண்டாவது மாத்தையிலே இசக்கி மசக்கி ஆனாள்
மூன்றாவது மாத்தையிலே முத்து முத்தாய் வேத்திடுமாம்
நான்காவது மாத்தையிலே நசக்கியை மயக்கை ஆனாள்
ஐந்தாவது மாத்தையிலே அரைவயிறு பூரணமாம்

ஆறாவது மாத்தையிலே அருங்கிளியாள் சங்கர ஆவுடை
அடிவயிறு கனத்திடுமாம் அங்கமெல்லாம் தங்க மயம்
ஏழாவது மாத்தையிலே இளம் உடல் சூடான அங்கலையால்
அவங்க இனத்தார் எல்லாம் வந்து நின்று திரளாகவே
எட்டாவது மாத்தையிலே எல்லோரும் வந்து இருந்து
பட்டுப்பாவாடைக் கட்டி பதிற்று நின்று காப்பு எல்லாம் அணிந்து
எல்லோரும் சூடிக் குலவை விட்டு மகிழ்ந் திருக்கையிலே
திட்டு முட்டு வருகுது என்பாள் சங்கர ஆவுடை

(மன்னனின் பாசம்)

மன்னர் தருமதுரை வந்து மனைவி எப்பொருள் கேட்டாலும்
உடனே உண்டு பண்ணிப் பாங்குடனே கொடுப்பார்
ஒன்பதாவது மாத்தையிலே ஓலை போல் சுழல்வாளை
உத்தமி சங்கர ஆவுடை பத்தாவது மாத்தையிலே
பைங்கிளிக்குப் பலன் கிடைக்கும் நாளாச்சு

(மருத்துவச்சி ஆறுதல் கூறுதல்)

வயிறு வலிக்கு என்பாள் வாணால் எடுக்கு என்பாள்
குறுக்கு வலிக்குது என்பாள் கொம்பளையாள் சங்கர ஆவுடை
மருத்துவத்தை அழைத்து வந்து மங்கை முன்னால் நிறுத்தினார்
ஏம்மா அச்சம் வேண்டாம் பொழுது விடியு முன்னே
ஒரு பெண்குழந்தைப் பெற்றுவிடுவாய் விடியும் முன்னே
ஒரு பெண்குழந்தைப் பெற்றுவிடுவாய் எனச் சொல்லி வாய்மூடும் முன்னே

(பெண் குழந்தைப் பிறப்பும் பெயரிடலும்)

தருமதுரை பாண்டியன் மனைவி சங்கர ஆவுடையாள்
ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள்
பெற்றெடுத்த பிள்ளையைக் குளிப்பாட்டிச் சேலை போத்தி
தொட்டிலிலிட்டுத் தாலாட்டி சாதி சனங்கள் சந்தோசமாய்
பந்து சனங்களெல்லாம் பக்கம் வந்து அமர்ந்து கொண்டு
பெயரிட்டார்கள் சிறப்பாய் வெள்ளைத்தாயென்று

(வெள்ளைத் தாயின் வளர்ப்பு நிலை)

பூமியில் விடுத்தோமானால் பொற்பாதும் நோகும் என்று
தரையில் விட்டோமானால் கண்டைக்கால் நோகும் என்று
தோளில் தொட்டில் கட்டி தொடை அதில் நடை பழத்தி
செருக்காக நடந்து வாராள் அரண்மனையில் நடந்து வாராள்
அருமை பிள்ளை வெள்ளைத்தாய்க்கு ஒன்று இரண்டு வயது ஆச்சு
உத்த பிள்ளை வெள்ளைத்தாய் மூன்றாவது வயது தன்னில்
முடி எடுத்து காது குத்தி நாலாவது வயது தனில்

நாயகி வெள்ளைத்தாய் ஐந்தாவது வயதுதனில்
சங்கர ஆவுடை தலைமகளை அருமையாக வளர்த்து
பள்ளியில் பாங்குடனேயவர் படிக்க வைத்தார்

(வெள்ளைத்தாய் பருவமடைதல்)

அவள் பண்ணிரெண்டு வயதில் சாஸ்திரம் எல்லாம் படித்து
அரண்மனையில் வளர்ந்தபோது பதினாலு வயதாச்சு
வெள்ளைத்தாய் பைங்கிளியாள் பக்குவதி பெண்ணானாள்
முல்லை மரம் பூத்தது போல் மொய் குழலாள் பூத்திருந்தாள்
பிச்சிமரம் பூத்ததுபோல் பெண் கொடியாள் பூத்திருந்தாள்
தலைக்குத் தண்ணீர் விட்டு சடங்கு எல்லாம் முடிந்தது
வயது பதிநாலு ஆச்சு வெள்ளைத்தாய் வீற்றிருக்கிறாள்

(சங்கர ஆவுடையாள் ஆண்குழந்தை வேண்டி தவமிருத்தல்)

கடவுளின் கிருபையால் ஆண்குழந்தை வேண்டுமென்று
துதியருள் சிவனாருடைய கோவிலுக்குத் தினசரி குழியானாள்
பலநாளா பல வருஷம் பகவானுக்கு நோன்பு இருந்தாள்
அந்தி மூழ்கி அருணைகிரியில் நல்நோன்பு இருந்தார்கள்
திங்கள் மூழ்கி சிவகாமி நோன்புதான் அவளிருந்தாள்
வெள்ளி மூழ்கி வெகுநாள் அவளும் தவமிருந்தாள்
தவம் இருந்த பலனது சங்கர ஆவுடைக்குக் கிடைத்து

(சங்கர ஆவுடையாள் கர்ப்பமாதல்)

நந்தியுடன் குளி மறந்தாள் நாற்பது நாள் சூலி ஆனாள்
ஒன்றாவது மாத்தையிலே உசக்கிய மசக்கையானாள்
உடையவனே தஞ்சம் என்றாள் இரண்டாவது மாத்தையிலே
இசக்கி மசக்கை ஆனாள் ஈஸ்வரனே தஞ்சம் என்றாள்
மூன்றாவது மாத்தையிலே முத்து முத்தாய் வேத்திடும் என்பாள்
முக்கண்ணனே தஞ்சம் என்றாள் நான்காவது மாத்தையிலே
நசுக்கிய மயக்கை ஆனாள் நாயகியாகிய சங்கர ஆவுடை
ஐந்தாவது மாத்தையிலே அங்கமெல்லாம் தங்கமயம்
அடிவயறு கனத்திடுமாம் அரையெல்லாம் நொந்திடுமாம்
அனைவரும் வந்திருந்து அரி பவளம் போட்டிடுவர்
ஏழாவது மாத்தையிலே இனத்தார் எல்லாம் வந்திருந்து
சூழ இருந்து கொண்டு சூழல் காப்பு அணிந்து விடுவார்
திட்டு முட்டு வருகுது என்பாள் தின்பண்டம் வேண்டும் என்பாள்

(மன்னனின் அன்பும் கோபமும்)

ராஜதுரை பாண்டியனும் வேணும் என்ற பண்டம் எல்லாம்
கேட்டதை எல்லாம் சேகரித்து கிருபையுடன் தான் அளித்தார்

கொடுத்ததைத் தின்னாமல் கொம்பனையார் சங்கர ஆவுடை
கணவனுக்குத் தெரியாமல் சுட்டமண்ணைப் புட்டுத் தின்னாள்
ஆள்முகத்தைப் பார்த்து தெரியாமல் அடுப்பு சாம்பல் எடுத்துத் தின்னாள்
அதைக் கண்ட அரசன் அடங்காத கோபம் கொண்டு
மனைவி என்று பாராமல் மண்டையில் அடிக்கப் போனார்
கீழவிட்டு கிழவி அவள் கிடந்து ஓடி வந்து நின்று
ஐயா ராசா மன்னா அது அரைவயிறு சூலி அய்யா
அடிப்பது மோசம் ஐயா என்றவளும் தடுத்தாள்

(மருத்துவச்சியை அழைத்து வருதல்)

ஒன்பதாவது மாத்தையிலே ஓலைபோல் அவள் சுழலுவாள் என்பாள்
பத்தாவது மாத்தையிலே பத்தினியாள் சங்கர ஆவுடை
கர்ப்ப வேதனை வந்து கிளிமொழியாள் வருந்துகின்றாள்
மருத்துவத்தை அழைக்கும்படி மங்கை அவள் சொல்லுகின்றாள்
அதை கேட்ட அரச மன்னர் அழைத்து வரார் மருத்துவத்தை

(சங்கர ஆவுடையாள் புலம்புதல்)

கண்டவுடன் மங்கையவள் கண்ணீர்விட்டுப் புலம்புகின்றாள்
சிறந்த புகழ் மருத்துவமே சாவேனா பிழைப்பேனா
தைரியத்தை சொல்லிடம்மா எனக்கு வயிறு வலிக்குதம்மா
இடுப்பு வலிக்குதம்மா எனக்கு ஈரக்குலை கவ்வுதம்மா
எனக்கு உலக்குவலி எல்லாம் உயிர்வலியாகுதம்மா
நடுவலி எல்லாம் இன்று நறுக்குவலி ஆகுதம்மா
குருளைவலி எல்லாம் குறுக்குவலி ஆகுது அம்மா

(மருத்துவச்சியின் ஆறுதல் மொழி)

அதைக் கேட்ட மருத்துவம் நீ அஞ்சாதம்மா மலையாதம்மா
மான்போல வார்த்தைச் சொல்லி மனக்கவலை மாத்தி வைத்தாள்
தேன்போல வார்த்தைச் சொல்லி தேத்தி வைத்தாள் மருத்துவம்மாள்

(ஆண் குழந்தைப் பிறப்பு)

மோட்டில் கையிறு போட்டாள் முக்காலி எடுத்து போட்டாள்
மோட்டுக் கயித்தை முகணையாய் பிடிக்சுக்கம்மா என்றாள்
கடவுளை நேந்துக்கம்மா கைக்குள்ளே வந்து பிறக்குதம்மா
பளபள விடியும் முன்னே பாலகனைப் பெற்று எடுத்தாள்
விடியுமுன்னே பொற்கொடியாள் சங்கர ஆவுடையாள்
ஒரு புத்திரனைப் பெற்று எடுத்தாள் அழகுடனே

(அரண்மனையில் அனைவரும் மகிழ்ச்சியடைதல்)

ஆண் குழந்தை பிறந்தவுடன் தருமதுரை பாண்டியன் சந்தோசமானார்
அரண்மனை சோசியரும் பெரியவர்களும் வந்தமர்ந்து

அரண்மனையில் நமது தருமதுரை பாண்டியனுக்கு நல்ல
ஆண்குழந்தை பிறந்திருக்கு அனைவரும் சந்தோசமாய்
தொப்பிள் அறுத்து குளிப்பாட்டி சேலை போத்திக் கொண்டு வந்து
சங்கர ஆவுடை கையில் கொடுத்தாள் மருத்துவச்சியானவள்
இணையில்லாத மகிழ்ச்சியில் இருந்தாள் சங்கர ஆவுடை

(ஜோசியருக்கு முறை செய்தல்)

தருமதுரை பாண்டியன் பழமும் சீனியும் கொடுத்து தான்
அந்த சோசியர் சொன்னது போல் ஆண்குழந்தை கிடைத்தது
சோசியருக்கு வேஷ்டி தட்சணைக் கொடுத்து அனுப்பிவிட்டு

(குழந்தைக்குப் பெயர் சூட்டல்)

நூற்றுக் கணக்கான கன்னியர்களும் மன்னர்களும் கூடிநின்று
தர்மதுரை பாண்டியன் சங்கர ஆவுடை அம்மையும்
ராஜதுரை பாண்டியன் ராஜலெட்சுமி எல்லோரும் வந்து
குழந்தைக்கு என்னபெயர் விடுவதென்று நினைத்து
சங்கர ஆவுடையும் தருமதுரையும் சிவனருளால் கிடைத்ததால்
அவனுக்குச் **சிவனாண்டி வீரன்** என பெயரிட்டு மகிழ்ந்தனர்

(சிவனாண்டி வீரனின் வளர்ப்புநிலை)

எல்லோர்க்கும் தானதர்மம் எல்லாம் அள்ளிக் கொடுத்து
சிவனாண்டி வீரன் வளர்கிறான் சீரும் சிறப்புமாக
சங்கர ஆவுடை அம்மாள் குழந்தையை எடுத்து முத்தமிட்டாள்
தொட்டில் இட்டு ஊட்டி வளர்த்தால் இளம் உடம்பு வலிக்குமென்று
நெய்யது தேய்த்து வளர்த்தால் தேகம் எல்லாம் நெய்யுருகுமென்று
பூமிதனில் விட்டால் பொற்பாதம் நோகும் என்றும்
தரையில் விட்டாக்கால் கண்டைக்கால் நோகும் என்றும்
தோளில் தொட்டில் கட்டித் தொடை அதில் நடை பரத்தி
தொட்டில் அதில் தாலாட்டுகிறார் சிறப்புறவே தான்

(குழந்தைக்குத் தாலாட்டுப் பாடுதல்)

ரா...ரா...ரா..ராரி....ராரிரோ
பொன்னே நீ உறங்கு என் கண்ணே நீயும் உறங்கு
பூமரத்து வண்டே யுறங்கு என் கண்மணி நீ உறங்கு
கெட்டி வைத்த முத்தே யுறங்கு நவரத்தினமே யுறங்கு
மருவே மரிக்கொழுந்தே யுறங்கு மலர் விரிந்த மல்லிகையே யுறங்கு
என் குருவே அரும்பே என் குலக்கொழுந்தே யுறங்கு
கிள்ளை குயில் மொழியே நான் எடுத்த பொக்கிஷமே யுறங்கு
என் பிள்ளைக் கலி தீர்க்கவந்த பேரரசே கண் உறங்கு
உறங்கு ரா...ரா...ரா...ராரி ...ராரிரோ

(வெள்ளத்தாயின் திருமணம்)

அப்படி இருக்கும் போது அருங்கிளியாள் வெள்ளைத்தாயை
பெண்கேட்டு வரார் பேரும் பெற்று **செல்லத்துரை பாண்டியன்**
நல்லதொரு நாளையிலே வெள்ளத்தாய் திருமணம்
நன்மையுடன் முடிந்தது ஐயா நாவலர் போற்றிடவே

(வெள்ளத்தாயின் மண வாழ்க்கை)

செல்லத்துரை பாண்டியனும் வெள்ளத்தாய் அம்மையும்
நகமும் சதையும் போல நாதன் உடன் வாழ்ந்து வாரார்
பூ நல்ல வாசம் போல புருஷன் உடன் வாழ்ந்துவரார்

(வெள்ளத்தாய் கர்ப்பமாதல்)

அப்படி வாழ்ந்துவரும் வேளையிலே வரிசை யுள்ள வெள்ளத்தாய்
பகவான் கிருபையில் கெர்ப்பம் ஆனாள் ஆயிளையாள்
நன்றியுடன் குழி மறந்து நாற்பது நாள் சூலி ஆனாள்

(கர்ப்பவதியின் கர்ப்பகால நிலை)

ஒண்ணாவது மாத்தையிலே உசக்கி மயக்கை ஆனாள்
இரண்டாவது மாத்தையிலே இயக்கி மயக்கை ஆனாள்
மூணாவது மாத்தையிலே முத்து முத்தாய் வேத்திடும்
நான்காவது மாத்தையிலே நசுக்கு மயக்கை ஆனாள்
தரைத் தேங்காய் வேணம் என்பாள் தாயாரும்
மாங்காய் இனித்திடும் கரிச்சாம்பல் ருசித்திடும்
ஐந்தாவது மாத்தையிலே அரை சூழி ஆனாள்
ஆறாவது மாத்தையிலே அடிவயிறு கனத்திடும்
அட மாங்காய்அளவின்றி வேணுமென்பாள்
ஏழாவது மாத்தையிலே இளம் உடம்பு சூலி ஆனாள்
எட்டாவது மாத்தையிலே திட்டு முட்டு வருகுதென்பாள்
ஒன்பதாம் மாத்தையிலே ஓலை போல சுழல் ஆனாள்
பத்தாம் மாத்தையிலே பலன் கிடைக்கும் வேளையிலே
பைங்கிளி வெள்ளத்தாயும் கொர்ப்பவேதனையால் புலம்புகின்றாள்

(மருத்துவச்சியை அழைத்து வருதல்)

பக்கத்து வீட்டு மருத்துவத்தை சேவகர் ஓடிச்சென்று அழைத்துவாரார்
மருத்துவத்தைக் கண்ட உடன் வெள்ளத்தாய் அம்மா மருத்துவமே
எனக்கு வயிறு வலிக்குது வானால் எடுக்குது அம்மா
இருந்தா எந்திரிக்க முடியல எந்திருச்சால் உட்காரமுடியல
படுத்தா உறக்கமில்லை அதைக்கேட்ட மருத்துவம்
அஞ்சாதே மலையாதம்மா ஒரு ஆண் குழந்தையது

பிறக்கும் வரை சஞ்சலந்தான் பிறந்துவிட்டால் குச்சலம்தான்
மான்போன்ற வார்த்தைகள்சொல்லி மனக்கவலை மாத்தி வைத்தாள்

(ஆண் குழந்தைப் பிறத்தலும் பெயரிடலும்)

பள பள விடியும் முன்னே பாலகனை வெற்று எடுத்தாள்
பிள்ளை பிறந்த உடன் தொப்பிள் அறுத்து குளிப்பாட்டி
சேணை ஊட்டிக் கொண்டு வந்து வெள்ளைத்தாய் பதினாறு கழித்து
பரமசிவன் என்று பெயர் வைத்து பவுசோடு வளர்த்து வருகிறார்

(சிவனாண்டி வீரன் வளர்ப்பு நிலை)

ஒன்னும் ஆச்சு இரண்டும் ஆச்சு ஒத்த பிள்ளை சிவனாண்டி வீரன்
நான்காவது வயது ஆச்சு நடந்து பாலகனவன் ஓடிடுவான்
அழகுகளில் சிறந்த பிள்ளையென கண்டவரும் பார்த்தவரும்
அவனைக் கடவுள் என்று அனைவருமே போற்றிடுவர்
ஆயர்பாடி கண்ணன்தான் என்று அனைவரும் பார்த்திடுவர்

(சிவனாண்டி வீரனுக்குக் கல்வி கற்பித்தல்)

ஐந்தாவது வயதில் அறிந்து கொண்டு தருமதுரை பாண்டியனும்
சிவனாண்டி வீரனுக்கும் வயது ஐந்து ஆச்சு தென்று
கல்வி பயின்று கொடுக்க வேண்டும் என்று எண்ணி
ஒரு வேத பிராமணரை சாஸ்திரம் கற்பிக்க வரவழைத்து
அரண்மனையிலே வாத்தியார் வந்து அமர்ந்திருந்து
சாத்தால் தலை மூழ்கி சந்தனத்தால் கோலமிட்டு
பாலால் தலை முழுகி பன்னீரால் கோலமிட்டு
கோலமிட்ட வாசலிலே வாழை குருத்து எடுத்து
தலைவாழை விரித்து சாணிப்பிள்ளையார் பிடித்து வைத்து
அருகம் புல் குத்தி வைத்து அருமையுடன் சீராய்
நிறை நாழியில் நெல் நேர்மையுடன் அளந்து வைத்து
அடக்காயும் வெத்தலையும் அவலும் பொரியும் கடலையும்
ஆதிமூலத்திற்கு அளந்துவைத்து தேங்காய் உடைத்துவைத்து
தீபாராதனை தான் முடித்து அரிச்சுவடி ஏடு தொடங்கி
சிவனாண்டி வீரனை தரையில் அமர்த்தித்தானே
வாத்தியார் பாடம் சொல்லிக் கொடுத்தாரே.

(அரிச்சுவடிக் கற்றல்)

ஐந்தாவது வயதுதனில் அறிவுரிதான் படித்தான்
ஆறாவது வயதில் பெயர்ச்சுவடி தான் படித்தான்
ஏழாவது வயதில் இன்சுவடிதான் படித்தான்
எட்டாவது வயதினில் மூதுரையும் குழிபருக்கம் படித்தான்

(விவேக சிந்தாமணி கற்றல்)

ஆதிச்சுவடி கொண்டு தான் அருமையுடனேதான்
வேந்தன் மூதுரை விவேகசிந்தாமணி வினோதமாகதான் படித்தான்
குற்றாலக் குறவஞ்சி குறையில்லாமல் தான் படித்தான்
பதினாறு வயது சிவனாண்டி வீரன் பலசாஸ்திரம் எல்லாம் படித்தான்

(பன்நூற்கள் கற்றல்)

நான்கு வேதம் ஆறு சாஸ்திரம் பதினொரு புராணம்
நூற்றி எட்டு ஆகமம் தொண்ணூற்றி ஆறு தத்துவம்
இதிகாசம் அழகு சிலம்பு தொழில் புதுமை நுணுக்கம்
நன்னூல் சூடாமணி நிகண்டு நற்றமிழ் நூல் கற்றார்
போருக்குப் புகுதலும் நோக்கலும் தெளிவுடன் கற்றான்
போர் புரியும் காலத்தில் எதிர் நோக்கலும் கற்றான்
சண்ட பிரசண்ட தானு வேத சாஸ்திரம் படித்தான்
பத்தொன்பது வயதானபோது அவனைப் பார்த்தவரும்
கோவேந்தர் மன்னவரும் சிவனாண்டி வீரனை புகழ்கின்றனர்.

(தருமதுரை பாண்டியன் இறந்து போதல்)
(வேறு)

இப்படி இருக்க கூடிய அந்த காலத்தில் தான்
தருமதுரை பாண்டியன் இறந்து விடுகிறார்
அவருக்கு நன்மை செய்யும் கடனெல்லாம் முடித்து
அரண்மனையில் வீற்றிருக்கிறார்கள் அனைவருமே
சலபுரி ஊர் அதிலே இருந்து சிறப்புடன் அமர்ந்து
செல்லத்துரை பாண்டியன் பரமசிவ பாண்டியனை
வளர்த்து வருகின்ற அந்த காலத்திலே

(பரமசிவ பாண்டியன் கல்விக் கற்றல்)

ஒன்று இரண்டு வயது ஆச்சு ஒத்த பிள்ளை பரமசிவம்
முடி எடுத்து காது குத்தி முகமன் சடங்கு முடித்து
நான்காவது வயது தனில் நல்லறிவு வளர்ந்திடுமாம்
ஐந்தாவது வயது தன்னில் ஆண் அழகன் வீரன்
பரமசிவம் அரிய பள்ளியில் படித்து வாரான்
பன்னிரெண்டு வயது ஆனபோதுதான் அவனும்
பல சாஸ்திரம் எலலாம் பவிசுடன் படித்தான்

(செல்லத்துரை பாண்டியன் வெள்ளத்தாய் இறந்து போதல்)

அப்படி படித்துக் கொண்டிருந்த பொழுதினிலே
செல்லதுரை பாண்டியன் இறந்து விடுகிறார்

அப்பா இறந்த பத்தாம் நாள் அம்மாவும் இறந்துவிடுகிறார்
என்ற செய்தி கேட்டவுடனே இளகி மனம் பதைத்து
சிவனாண்டி வீரனும் சங்கர ஆவுடையாளும்
பரமசிவத்தை அழைத்துக் கொண்டு வந்து சேர்ந்தனர்

(சிவனாண்டி வீரன் மருமகனுக்கு
வித்தைகள் கற்றுக் கொடுத்தல்)

அங்கு வந்த வுடன் மருமகனுக்கு வயது பதினைந்து ஆச்சு
பலவகையான வித்தகைள் அனைத்தையும் வீருடனே
மருமகனுக்கு மாமா கற்றுக் கொடுத்தார் சிறப்புடனே
மாவீராதி வீரர் அப்படி இருக்கும்போது தானே
மாமாவும் மருமகனும் வீராதி வீரர்களாக அங்கு
அகப்பா நாட்டிலே உலகப்புகழ் கூடியே சிறப்பான
வீர அம்சத்திலே வாழ்ந்து வருகிறார்கள்.

(பெரும் பஞ்சம் உண்டாதல்)

அப்படி வளர்ந்து வரும் வேளையிலே சாரமழை பெய்யலே
கோடைமழை பெய்யலே கொடி மிளகு விளையலே
செந்நெல் வந்து விளையலே சிறு மிளகு விளையலே
ஆளாக்கு உண்ட பஞ்சம் அரண்மனை வித்த பஞ்சம்
ஊருக்கு உருண்ட பஞ்சம் உள்ளது உரியது வித்த பஞ்சம்
நலி உருண்ட பஞ்சம் நாடு நகரம் எல்லாம் வித்த பஞ்சம்
இப்படி பன்னிரெண்டு வருடம் பஞ்சத்தினால் பரிதவித்து
தன்னிடமிருந்த பொன் பொருள் எல்லாம் எடுத்து
ஊரில் மக்களுக்காக தான தருமம் தான் கொடுத்து
மழை இல்லாமல் குளம் ஏரி கரையெல்லாம் வற்றி
வெடிப்போடு பதலம் முட்டும் ஆண்டினிலே தான்
வெடிப்பளவு பஞ்சத்தினால் மக்களுக்கு ஏது சொல்ல முடியும்

(பிழைப்பு தேடிப் பெயரல்)

தாயான சங்கரஆவுடை பரமசிவன் ஆண்டிவீரன் மூவரும்
ஆலோசனை பண்ணி தாயான சங்கர ஆவுடையாளும்
பாங்காய் குத்தாலத்துக்குப் பயணம் வைத்தார்

(குலதெய்வங்களை எடுத்தல்)

அவர் தரும சாஸ்தாவை கேட்டு அருள்வாக்கு வாங்கி
பெட்டியில் தூக்கி சிவனைப் பெருமாளிடத்தில் வைத்து
இறைவா எங்களால் இனி இங்கு ஒரு நிமிடம் இருக்க முடியாது
ஒன்னுடய அருளைக் கொண்டு குற்றாலம் போய் வாரோம்
குற்றாலநாதரையும் குற்றால நங்கையையும் கும்பிட்டு புறப்படுகிறார்
அகப்பா நாட்டிற்கு அருமையாக நடந்து வருகிறார்கள்

(தீய சகுனம் தோன்றுதல்)

அம்மா சங்கர ஆவுடையாரை ஒரு காட்சி சத்தம் எதிர்போடுமாம்
ஆந்தை வந்து அலறிடும் தேவாங்கு வந்து கத்திடுமாம்
கூதலை வந்து கரைந்திடும் கோடாலிகாரன் எதிர்ப்படுவான்
விறகு சுமை தலையில் வைத்து வீதியிலே இறங்கி வரான்
பத்தாவது தெருவிலே வருகிற காலத்து வராத குமரி அவள்
ஆளு நெருப்புடன் ஒத்த குரல் விட்டு வருவதைக் கண்ட சங்கர ஆவுடை
கவலை மிக மனதில் கொண்டு துக்கம் மிகுந்து அவள்
துதி மிகுந்தவள் வணங்குவாள் ஆதிபரனையும்
அமைதியாக அழைத்துக் கொண்டு வந்தாள் சங்கர ஆவுடை

(ஊத்துமலை செல்லுதல்)

சங்கர ஆவுடை அகப்பா நாடுவிட்டு கிழுவநாடு வழியாக
சாலை வழிதான் நடந்து வாரார் சீரான பாதைக் கூடி
வருகிற வழி அதிலே வரிசையாகச் சங்கர ஆவுடையாள்
சங்கர நயினாரையும் கோமதி நாயகிஅம்பாளையும்
சங்கர ஆவுடையாளையும் தானே நினைத்துக் கொண்டு
மகனையும் பேரனையும் அழைத்துக் கொண்டு வழி நடந்தார்
இருட்டுன இடம் அதிலே தங்கிடுவர் இருந்து இளைப்பாருவார்
மூவரும் பொழுது விடிந்தவுடன் புறப்படுவர் தான் எழுந்து
வெயில் வருமுன்னே வேகமாகதான் நடப்பார்கள் அனைபேரும்
பச்சைமலை பவளமலை பவள ரத்தினங்கள் காய்க்கும் மலை
மலங்காட்டு வழியாக மகிழ்ச்சியோடு இறங்கி வாரார்கள்
கோவில் கண்ட இடங்கள் எல்லாம் கும்பிடுவர் மூவரும்
அப்புறத்தில் பயணம் வைப்பர் மனமதிலே துயரம்வைத்து
எத்தனை ஊர் விட்டு ஏகிவாரார் மூவரும் சங்கரன்கோவிலிலே
தெய்வ தரிசனம் முடித்துவிட்டு மனம் தெளிந்தானே
சங்கர ஆவுடையாவும் மகன் சிவனுபாண்டி வீரனும்
பேரன் பரமசிவனும் மூவர்களும் சால வழி பெரும்பாதை
கோயிலாங்குளம் கழித்து குருக்கள்பட்டி பாதைக் கூடியேகி
சண்முக நல்லூர் மேல சோழியநல்லூர் விட்டு வழிநடந்து
பாதைக்கூடி திருமலாபுரம் விலக்குவிட்டு பனைவடலி சத்திரம்தான் வந்து
ஊருக்கு மேல்புறத்திலுள்ள குளத்தங்கரையின் ஆலமரம்
அருகில் வந்து மூவர்களும் அங்கு அன்று இரவுவெளி தங்கிவிட்டு
அதிகாலை நாலுமணி அளவில் எழுந்திரித்து சங்கர ஆவுடையாவும்
மகன் சினுபாண்டிவீரனும் பேரன் பரமசிவனும் மூவர்களும்
குலதெய்வம் தர்மசாஸ்தாவை காட்டுப் பெட்டியில் வைத்திருந்த
சாஸ்தாவை எடுக்கும்போது தர்மசாஸ்தா சங்கர ஆவைவுடையிடம்
நான் பனைவடலி குளத்தங்கரை ஆலமரத்தில் அமர்ந்துவிட்டதால்
நீங்கள் மூவரும் குற்றாலம் சென்று அருவிக்கரை தீர்த்தமது ஆடி

தெய்வதரிசனம் பார்த்து போங்கள் என்று உரைத்தார்
உடனே மூவர்களும் எங்கேவாரார் சொக்கலிங்கபுரம் கழித்து
பாலத்தராபுரம்தான் கழித்து கூத்தாடிச்சியம்மன் கோவில் பாதைக்கூடி
ஆனைமலை அய்யனார் எல்லைவிட்டு ஊத்துமலை பாதைக் கூடி
காட்டுவழி பெரும்பாதையாக கால்நடையாக நடந்துவரார்
மொட்டையன் பாறை பாதைக் கூடி ஒத்த ஆலமரம் கழிந்து
வெள்ளைக்கல் பரம்புபாதை வழியாக அங்கு வரும்போது

(காட்டாரிபாண்டியன் காணுதல்)

சுரண்டை சிவனுசாளுவை காட்டாரி பாண்டியன் தனது குதிரையில்
எல்கை சுத்தி பார்த்து வாரபோது எதிரேகண்டார் மூவரையும்
சங்க ஆவுடையாளையும் மகன் சினுபாண்டி வீரனையும்
பேரன் பரமசிவனையும் பார்த்தபோது பாண்டியன் நினைக்கிறார்
இவர்கள் மூவர்களும் தெய்வலோகப் பிறவிகளோ
மேனகையோ ஊர்வசியோ மேல்நார் மங்கையரோ
சங்கர ஆவுடையாவையும் கண்டபோது மனம் மயங்கி
சிவனுசாளுவை காட்டாரி பாண்டியன் நினைவில் நினைக்கிறார்
பக்கத்தில் நிற்கும் இளஞ்சிங்கங்கள் இரண்டு பேரையும் பார்த்தார்
குளிர்ந்த முகம் கோவை செவ்வாயும் குமின் மூக்கும்
புன் சிரிப்பும் படர்ந்த முகமும் பவளம் போல் மேனியும்
கணக்கான திரேககட்டும் கம்பீரமான முகவெட்டும்
துடுக்கான நடையும் அடுக்கான பல்வரிசையும்
இவர்கள் மகிமை மனம் இருந்தால் இவர்கள் மூவரையும்
நமது அரண்மைனயில் அமைத்துக் கொண்டால்
இந்த நெல்லை மாவட்டத்தில் நம்மை இனிமேல்
எந்த மன்னராலும் வெல்லமுடியாது என நினைத்தான்

(காட்டாரிபாண்டியன் யாரென்று வினவுதல்)

உடனே சிவனு சாளுவை காட்டாரிபாண்டியன்
இவர்கள் அருகில் சென்று யார் என்று விசாரித்தார்
சங்கர ஆவுடையிடம் கருணையுடன் மன்னனும்
ஊர் என்னம்மா பேரைச் சொல்லுங்கள் என்றான்
இந்த வழியாக வந்ததென்ன அம்மா நாடென்ன நகரமென்ன
நீங்கள் நடந்துவந்ததொரு விபரம் சொல்லுங்கோ வென்றான்

(சங்கர ஆவுடை பதிலுரைத்தல்)

உடனே சங்கர ஆவுடை சொல்லுகிறார் ஆவலுடன்
அகப்பை நாடு கீழகை நாடு பாரோர் போற்றும் வீரநாடு
கொண்டையங்கோட்டார் வம்சத்தில் குறைவில்லாமல் பிறந்தோம்
தர்மதுரை பாண்டியன் மனைவி சங்கர ஆவுடை என் பெயர்

என் மகன் சிவனுபாண்டி இது மக பிள்ளை பரமசிவன்
பன்னிரெண்டு வருஷம் மழையில்லாத காரணத்தால்
பஞ்சம் வந்த காரணத்தால் பஞ்சக் கொடுமையின்
கருமம் தொலைப்பதற்குக் குற்றாலம் செல்கிறோம்
அப்படி ஆவுடையாளும் அருமையுடன் சொன்னபோது

(கட்டாரி பாண்டியன் மெய்காப்பாளர் பணிசெய்ய வேண்டுதல்)

உடனே சிவனு சாளுவை காட்டாரி பாண்டியன் சொல்கிறான்
நீங்கள் எனது அரண்மனையில் மெய்காப்பாளராக இருக்கவேண்டும்
வேண்டிய பொன் பொருளைத் தருகிறேன் நானுங்களுக்கு
உங்கள் எல்லா பிரச்சினையும் உடனே தீர்த்து வைக்கிறேன்
குற்றாலம் சென்று குறைகளைத் தீர்த்துவிட்டு வாருங்கள் என்றான்

(சங்கர ஆவுடையாள் குற்றாலம் செல்லுதல்)

உடனே சங்கர ஆவுடையும் சிவனாண்டிவீரனும் பரமசிவனும்
குற்றாலம் பயணம் வைத்தார் சுரண்டை மாநகரம் விட்டு
அனுமன் நதி கடந்து சுந்தரபாதைக்கூடி நாணல் குளம் பாதைகூடி
பட்டாகுறிச்சி பாதைக் கூடி புலியூர்தான் கழித்து மல்லோ
தென்காசியாதை வழியாகஆனைப்பாலம் தனைக்கடந்து
சிந்தாமணிதனைக் கடந்து மேலகரம் குடியிருப்பு பாதையாக
நன்னாகாரம் பாதை வழியா குற்றாலம் வந்து சேர்ந்தார்

(குற்றால நாதரை வழிபடல்)

அருவிக்கரை தீர்த்தம் ஆடி அகமகிழ்ந்து மனம் தேறி
தேன் அருவியில் தீர்த்தமாடி ஆடி மூர்த்தியை சேர்வை செய்து
அருவிக்கரை தீர்த்தம் ஆடி அறுபத்தி மூன்று சேர்வை செய்து
தேங்காய் கடை சிரட்டை பிள்ளையாரை வணங்கி
கருமங்களைத் துலைத்து கோவிலுக்குள் சென்று
குத்தால நாதர்க்கும் குழல்வாய்மொழி அம்மைக்கும்
பால் சர்க்கரை தேன் அபிசேகம் செய்து இறைவனை தரிசம் பண்ணி
அன்று இரவு தங்கி விடிந்தவுடன் புறப்பட்டனர் மூன்று பேரும்
சங்கரஆவுடைஅம்மாள் சிவனுபாண்டிவீரர் பரமசிவபாண்டியன்
மூவரும் குற்றாலத்தில் குளித்து கும்பலஉடையார் வாசல்விட்டு
பாதை வழி நடந்து பவிசுடனே அவர் வாராார்

(தென்காசி நாதரை வழிபடல்)

மூன்று பேரும் குடியிருப்பு பாதை வழியாக நடந்து
மேலகரம் பாதை வழி சிந்தாமணிப்பாதை வழியாக வந்து
ஆனைபாலம்தனை கழித்து தென்காசிநாதர் கோவில்வந்து
காசி நாதரையும் உலகம்மாவையும் சேவை செய்தனர்

(காட்டாரிபாண்டியன் தூதுவரை அனுப்புதல்)

இப்படி இருக்கையில் சுரண்டை அரண்மனையில்
குற்றாலம் நீராடச் சென்றவர்களைக் காணவில்லையே என்று
மாமன்னர் காட்டாரி பாண்டியன் மனதிலுன்னி வருந்தி
எதிர் கொண்டு அழைத்து வருமாறு ஆட்களை அனுப்பினார்

(தூதுவர்கள் மூவரையும் தேடி அழைத்து வருதல்)

தூதுவர் குற்றாலம் சென்று காணவில்லையே என்று
அலைந்து திரிந்து திக்கு முக்காடி அலைமலைந்து
தென்காசியில் விஸ்வநாதர் கோவிலில் கண்டார்கள்
மூவரையும் கண்டு அழைத்துக் கொண்டுதானே
சுரண்டைக்குப் புறப்பட்டார்கள் நல்ல சேவகர்கள்
தென்காசி கழித்து கொடிமரம்தான் கழித்து
மேல புலியூர் தாண்டி கீழ புலியூர் விட்டு
புலிகுட்டி விநாயகர் கோவில் கழித்து
ஆலிபாறை வழி கடந்து சூலி பொத்தை வழி கடந்து
புலியூர் குளம் மறுகால் கழித்து விவேகமுடனே
செரட்டை பிள்ளையார் கோவில் கழித்துதான்
பட்டா குறிச்சி ஊர் விட்டு பவிசுயுடனேதான்
காலை வழி பெரும் பாதை தான் கடந்து அவர்
மாசானபோத்தி எல்கையாக நான்குளம் வழி கடந்து
சுந்தரபாண்டியர்புரம் ஊர் அடைந்து மனமுகந்து
செந்தீ விநாயகரை யவர் சேவை செய்து
சந்தோசமாக நடந்து வரும் நேரத்தில்
சாலைத் தெருவழியாக மருகால் தான் கழித்து
சீவலப்பேரியோன் கோவில் வணங்கி கண்குளிர்ந்து
சிறப்புடன் நடந்து இறைவழி தனைக் கடந்து ஏகி
இறங்கிவாராரர் நான்குபேரும் நடுத்தெவளம் கடந்து
மரபாலம் பாதை விட்டு மாபாதை வழியாக
அனுமன்நதி ஆறுகடந்து அவசரமாக நாலுபேரும்
வண்ணார் மாடசாமி எல்கைவிட்டு வழிநடந்து
சிலுவை வழியாக சிறப்புடனே வருகின்றனர்
ஆற்றோரம் இருக்கின்ற அழகு விநாயகரை சேர்வை செய்து
வடமுகமாக திரும்பி சத்தி விநாயகரை தொழுது
திங்கள் சந்தை தெருவழியாக வந்தடைந்து
அரண்மனைவீடு தன்னில் அமர்கின்றனர் முவருமே

(பரமசிவ சிவனு பாண்டியரைக் காண மக்கள் திரளுதலும் பட்டம் சூட்டுதலும்)

பாவிகளும் சூலிகளும் பச்சபிள்ளை தாச்சிகளும்
சிவனாண்டி பேரனை பார்ப்பதற்கு முண்டியடித்து

தவழுகின்ற குழந்தைகள் முதல் தள்ளாடுகின்ற கிழவர்கள்வரை
ஐயாயிரம் கூட்டமையா இப்பெருமக்கள் கூட்டத்தில்
பரமசிவனுக்கும் சிவனாண்டிவீரனுக்கும் பட்டங்கள் பலசூட்டி
மாலை மரியாதைகள் பலச் சூட்டிச் சிறப்புச் செய்து
மொட்டைத் தலைச் சிவனு சாளுவை மன்னன்
காட்டாரி பாண்டியன் அரண்மனையில் இன்றுமுதல்
மெய்காப்பாளர்கள் என்ற பட்டமும் பொறுப்புகளையும்
மக்கள் மத்தியில் கொடுத்து வாழ்த்தினார்கள்

(மக்கள் நலம் காத்தல்)

பெற்ற பட்டங்கள் சீர் குலையாமல் இருவருமே
அன்று முதல் செவ்வனே செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்
ஆராய்ச்சி மணிகட்டி ஆண்டு வருகிறார்கள் இரண்டு பேரும்
சிவனுபாண்டியன் பரமசிவன் பேர் சொன்னால்
காடை பதுங்கும் கவுதாரி முட்டை கலங்கும்
சிட்டு பறக்காது திசைகாட்டி ஆண்டு வருகிறார்கள்
இப்படி இருக்கையில் கள்ளம் கபடு சூது பித்தலாட்டம்
கொள்ளை கொலை களவு கற்பழிப்பு இல்லாமல்
சுபிட்சம் நிலவி சுகமாக மக்கள் காணப்பட்டனர்
மாதம் மும்மாரி மழை பொழிய சோளம் கம்பு தென்னைச் சோலை
நெல்வயல் எல்லாம் பூத்துக் குலுங்க நல்வளம் காணுது
பொங்கி வழியுது பால்வளம் பெருகுது மாடு கண்ணு
மக்கட் கல்வி அறிவு தெளிவு பெற்று வளமுடன் வாழ்ந்தனர்
ஒற்றுமையுடன் உயர்வு தாழ்வு இல்லை யென்று மனம் படைத்து
மக்கள் கல்யாணம் சீமந்தம் சடங்கு புதுவீடு கட்டி
புதுவாழ்வு தொடங்கி பொங்கும் மங்களத்தோடு
பேரன் பேத்திகளோடு சிறப்போடு வாழ்ந்து வந்தார்கள்

(வேட்டைக்குச் செல்லதல்)

அப்படி இருக்கையில் காட்டாரி பாண்டியன்
வேட்டைக்குப் போகும் நேரத்திலேதான்
சிவனுபாண்டியனும் பரமசிவபாண்டியனும்
ஆளுக்கொரு நாய் கொண்டுப் போவது வழக்கம்
சிவனாண்டி பேரன் நாய் பெயர் சின்ன அணைஞ்சி
பரமசிவன் நாய் பெயர் பெரிய அணைஞ்சி
நாலடி உயரமும் ஆறு அடி நீளமுமுள்ள அந்த நாய்கள்
சீறிவரும் சிங்கமா பாய்ந்து வரும் புலியா என்று
பார்ப்பவர்கள் பயந்து நடுங்கும் வண்ணமிருந்தன
அவர்களுக்கு உற்ற உதவிகள் செய்து வந்தன
வேட்டை வீரர்கள் வீர தீரத்துடன் வேட்டைக்குச் சென்றார்கள்

(நடுவக்குறிச்சி பாண்டியர்களுடன் பகை ஏற்படல்)

நடுவகுறிச்சியை ஆண்ட பாண்டியர்களான
சின்ன அணைஞ்சி பெரிய அணைஞ்சி
வேட்டையில் வீரர்களாகத் திகழ்ந்து வந்தார்கள்
வீரசிகாமணி குலைய நேரி பொத்தையின் அருகே
காட்டிற்கு வேட்டைக்கு வந்தார்கள் அவர்கள்
முந்தைய பகை கொண்ட நடுவக்குறிச்சி பாண்டியர்கள்
சுரண்டை சாளுவை காட்டாரி பாண்டியன்
வேட்டையாடும் மலை பகுதிகளுக்குச் சென்று
வேட்டையைத் தொடங்கி பகையை உருவாக்கினார்கள்
வீரசிகாமணி பொத்தையில் நடுவக்குறிச்சி பாண்டியமார்கள்
சின்ன அணைஞ்சி பெரிய அணைஞ்சி கொண்டுவந்த
நாய்கள் கலைத்துவிட்ட முயலைத்தானே
ஓடிச் சென்று சுரண்டை பாண்டியனின் நாய் கவ்வி
கொண்டு வந்து பரமசிவன் காலடியில் வைக்க
முயலை பின் தொடர்ந்து வந்த வேட்டை வீரர்கள்
சுரண்டைப் பாண்டியனிடம் முயலதனைக் கேட்கவும்
அந்த நல்ல காட்டுப் பகுதியிலேயே
இருவருக்கும் வீண்வாக்குவாதம் ஏற்பட
சுரண்டை வீரர்கள் ஏது கூறுகிறார்களென்றால்
எங்கள் சின்ன அணைஞ்சியும் பெரிய அணைஞ்சியும்
முயலை பிடித்து வந்தது என்று கூறினார்
திடுக்கிட்ட நடுவக்குறிச்சி வீரர்களும்
நம் பாண்டியர்களான சின்ன அணைஞ்சி
பெரிய அணைஞ்சி என்ற பெயர்களை
உங்கள் நாய்களுக்கு எப்படி வைப்பதென
கடுமையாகக் கோபப்பட்டு சென்றுடனேயே
நடுவக்குறிச்சி பாண்டியர்களிடம் சென்று
நடுவக்குறிச்சி பாண்டியமார்களிடம் கூறி
முந்தைய பகையை வலுப்பெறச் செய்துவிட்டார்கள்

(சிவனுபாண்டியனையும் பரமசிவ பாண்டியனையும் அழிக்க முடிவு செய்தல்)

சுரண்டைசாளுவை காட்டாரி பாண்டியரிடம்
சிவனுபாண்டியனும் பரமசிவபாண்டியனும்
மந்திரியாக இருக்கும் நாட்கள் வரையிலும்
சுரண்டையில் நாம் வெற்றி பெறமுடியாதுயென
எண்ணிய நடுவக்குறிச்சி பாண்டியமார்கள்
சிவனுபாண்டியனுக்கும் பரமசிவனுக்கும்

வடுவச்சி நாள் பார்த்து இருந்த அவர்கள்
கல்க்குவியலிலிருந்து சங்கு ஊதுகிறார்கள்

(பரமசிவ, சிவனுபாண்டியர் எண்ணைத் தேய்த்துக் குளித்தல்)

அன்று சனிக்கிழமை ஆகையால் வீரர்கள்
இரு பாண்டியரும் எண்ணைத் தேய்த்துக் கொண்டு
அம்ம கன்னிக் கோழி சமைக்கிற நேரத்திலே
அடுப்பு பானையில் வென்னீர் கொதித்த

(காட்டாரி பாண்டியன் கோபம் கொள்ளுதல்)

அரண்மனையில் இருந்து காட்டாரி பாண்டியன் ஆள்வர
மூணுதடவை ஆள் அனுப்பியும் இருவரும் வராததால்
நாலாவது தடவை கட்டாரி பாண்டியன் மன்னவனோ
சீறிப்பாய்ந்து சினம் கொண்டு நிற்பதை அறிந்து

(போருக்கு புறப்படுதல்)

இருவரும் எண்ணை உடம்மை துடைத்துவிட்டு
ஆயுதம் எடுத்து கச்சை வேட்டியை அரையில் அணிந்து
அன்னையிடம் ஆசி பெற்று ஆங்கார கோபத்தோடு
நடுவக்குறிச்சிப் படையை நோக்கியல்லோ சீறி
சிங்கமாக வேங்கைபோல் வேகம் கொண்டுதான்
மாமனும் மருமகனும் ஆசகாய சூரர்கள் இருவரும்
பதினெட்டு அடி வேங்கை போல் பாய்ந்து எழுந்து
போர்வில்லை கோபமுடன் கையில் எடுத்தார்
வில்லை எடுக்கும் போது வில்நாணில் நடு மத்தியில்
எலி கடித்து தேய்ந்திருந்ததை இருவரும் கவனிக்கவில்லை
கண்ணுக்கும் காலன் வந்த காரணத்தால் கண்ணை மறைத்துவிட்டது
மாமனும் மருமகனும் போர்புரியும் எண்ணத்தில்
ஆயுதம் அத்தனையும் பிரித்து போர்முனைக்கு பாய்ந்தார்
இருவரும் வளர்த்த அருமையுட நாய்களான
சின்ன அணைஞ்சியும் பெரிய அணைஞ்சியும் பாய்ந்து சென்றது
நடுவக்குறிச்சி சமீந்தார் இவர்களது படை திரண்டு வருகிறதையா
கச்சை விரித்து கட்டி சுருங்கச்சுங்கல்விட்டுக் கொண்டு
கட்ட கம்பு கடையில் எடுத்து வேல் கம்பு வீச்சரிவாள் கொடுக்க
அருவாள் இப்படியதாக படை திரட்டி வந்து நின்றுதான்
சுரண்டைக்கு வடபுறத்தில் ஈசானமூலையில் வந்து
சோனகாத்தான் பாறையில் படை திரண்டு நின்று கொண்டு
வங்காவை கையில் எடுத் தூதும் போது போர்முரசு ஒலிக்குதையா
வங்கா சத்தம் காதில் கேட்டு பாச்ச கயறு எடுத்து பாய்ந்து வாரார்

(போரில் வெற்றிபெறுதல்)

சிவனுபாண்டி வீரன் பரமசிவன் பாண்டியன்
சூராவளி காற்றுபோல மின்னல் வேகத்தில் பாய்ந்து வாரார்
மாமனும் மருமகனும் பீமன் அர்ச்சுனன் போல்
வேகத்தோடு பாய்ந்த அவர்வாரார்கள் போர்முகமே
அங்கு வந்திருந்த படைகளெல்லாம் ஒருநொடியில்
அடித்து விரட்டத்தான் ஆகாயத்தில் பாய்ந்து வாரான்
வில் கொண்டு அடிக்கிறான் வேல் கம்பு கொண்டு அடிக்கிறான்
வந்திருந்த படைகள் எல்லாம் மாமனும் மருமகனும் விரட்டி விட்டி
வெற்றி முரசு கொட்டி வீர மறத்தி பெற்ற பாலர்கள்
மாமனும் மருமகனும் எல்லை இல்லா மகிழ்ச்சி கொண்டு
கட்டாரி பாண்டியன் அரண்மனை வாசலில் வரும்போது

(பொறாமைக்காரர் சதிசெய்தல்)

அங்கே இருக்கிறார் காட்டாரி பாண்டியனும்
பாண்டியன் பக்கத்தில் நின்று கொண்டு தான்
கோனுகான் தலையாரி குசும்புகள் பேசுதாரே
இல்லாததை எல்லாம் இட்டுகட்டி சொல்லுதாரே
பாரதத்தில் சகுனி போல படுபாவி கோள் சொல்லி
சமீந்தார் மனதை மாற்றிவிட்டான் மா பாவியும்

நடுவக்குறிச்சி சமீந்தாரிடம் கைகூலி வாங்கியதாக பழிசுமத்தல்)

அதை கேட்ட பாண்டியனும் ஆத்திரம் கொண்டு
ஏனப்பா சிவனுபாண்டி பரமசிவன் உங்கள் இரண்டு பேரையும்
மூன்று முறை கூப்பிட்டும் வராத காரணம் என்ன
நடுவக்குறிச்சி சமீந்தாருட நீங்கள் கைக்கூலி வாங்கிக் கொண்டு
என்னை மிகவும் அவமானப்படுத்திவிட்டீர்கள்
சதி பண்ணிவிட்டீர்களென்று அவர் சொன்னபோது

(இருவரும் மறுத்துரைத்தல்)

அந்த வார்த்தை காதில் கேட்ட சிவனுபாண்டி பரமசிவன்
ஐயா எங்கள் உயிர் போனாலும் கூட
ஒரு போதும் அப்படி ஒரு காரியத்தை
செய்யமாட்டோம் ஐயா நாங்கள்
கருமறத்தி பெற்ற பாலகன் நாங்கள்
தருமத்தாய் பெற்ற மக்கள் நாங்கள்
எங்களைத் தவறாக நினைக்க வேண்டாம்
சமீந்தார் ஏ அப்பா சிவனுபாண்டி வீரா

(பொறாமைக்காரர் தண்டிக்கச் சொல்லுதல்)

நீ எதைச் சொன்னாலும் நான் நம்பமாட்டேன்
அப்படி இருக்கும் போது சல்லியனவன் சகுனி
தலையாரி இது தான் சமயமென எண்ணி
தப்பிக்க பார்க்கிறார்கள் இவர்கள் இருபேருக்கும்
சமீந்தார் அவர்கள் தக்க தண்டனைக் கொடுக்கவுமென

(கட்டாரி பாண்டியன் சிரச்சேதம் செய்ய ஆனையிடல்)

உடனே சமீன்தார் இவர்கள் இருவரையும்
இலந்தகுளம் சங்கிலி ஆலமரம் பக்கத்தில்
சிரச்சேதம் செய்யும்படி உத்தரவிட்டார்
சிவனுபாண்டியனையும் பரமசிவத்தையும்
அழைத்து வந்து படுகளத்தில் அமரவைத்து
ஆங்கார புலையன்களையும் அழைத்து
காட்டாரி பாண்டியன் என்ன கூறுகிறாரென்றால்
இருவர் தலைகளைத் துண்டிக்கும்படி கட்டளையிட்டார்

(புலையர்களிடம் வேண்டுதல்)

அப்போது வீரன் சிவனுபாண்டியனும் பரமசிவனும்
புலையர்களிடம் என்ன கூறுகிறார்க ளென்றால்
நாங்கள் இருவரும் இரு கைகளையும் ஏந்துகிறோம்
ஓ புலையா நீ ஒரே வெட்டா எங்கள் தலையை துண்டிக்கனும்
துண்டித்த தலைகள் எங்கள் கைகளில் விழவேண்டும்
அப்படி விழவில்லை என்றால் உன் தலையை நாங்கள்
ஒரு வெட்டில் துண்டித்து துள்ள தூடிக்க வேடிக்கை காட்டிவிட்டு
வீரத்தோடு வெற்றிச் சிறப்போடு கூத்தாடுவோம் என்றாரே

(புலையர்கள் சிரச்சேதம் செய்தல்)

உடனே வாள் எடுத்து புலையனவன் ஆவேசமாக
பாண்டியர்களை ஒரே வெட்டில் வெட்டி வீழ்த்தி
அவர்கள் கைகளில் தலையை விழச் செய்து
படுகளப்படுத்தி விட்டான் படுபாவி புலையன்
பட்டுவிழுந்தார் சிவனாண்டி பேரன் பாரமுடி சாய்ந்தாரே
செத்து விழுந்தாரே சிவலோகம் அடைந்தாரே

(நாய்கள் சங்கர ஆவுடைக்குத் தெரிவித்தல்)

சின்ன அணைஞ்சி நாய் சீறி வந்து
சிவனாண்டி ரத்தத்தில் புரண்டு எழுந்து
முக்கி முனங்கி வீடு நோக்கி ஓடி வந்தது
பஞ்சணையில் பாவி மகள் சங்கர ஆவுடை

தூக்கமின்றி புரண்டு படுத்துமவள்
அயர்ந்து தூங்கி அவர் கனவில் தான்
பயங்கர கனவு கண்டு விழித்தார்
அக்கனவு அங்கே பலித்துவிட்டது
அந்தக் கனவில் வெற்றி வீரனவன்
சிவனுபாண்டி தலையை துண்டிக்கக்கண்டு
துவண்டு எழுந்து கண்ணீர் மல்க நிற்கும்
அந்த நேரத்தில் சின்னணைஞ்சி நாய் வந்து
சீறிவரும் கோலத்தைக் கண்டதும் ஆவுடை
கலங்கி நாய்க்கு பின்னால் நடந்துவாராள்
சங்கர ஆவுடை படுகளம் கண்டு பார்த்தாளே
பாவி மகள் பரமசிவனை அய்யா என்றெடுத்து
அலறி துடித்தாளே அழுது புலம்பினாளே

(சங்கர ஆவுடையாள் அழுது புலம்புதல்)

உனக்கு புல்லோ தலையனை
புழுதியோ வெண் பஞ்சுமெத்தை
கல்லோ உன் தலையணை
கரும் புழுதியோ பஞ்சுமெத்தை
நான் நின்று விளக்கு எரித்து
நெடுநாளா தலந்தோறும் தவமிருந்து
தான் அந்தி முந்தி நோன்பிருந்து
நான் பெற்ற சிவனாண்டி மகனே உன்னை
இந்த அரிவாளுக்குப் பலியாக்கவா பெற்றேன்
அந்தி காலை வேளையிலே எனக்கு
நீர்க் கடனும் மோர்க்கடனும் செய்வாய்
என்று மனதில் எண்ணியிருந்தேன்
ஒன்றுக்கும் உதவாமல் உயிர்போன மாயமென்ன
ஒருமாதம் என் உடம்பெல்லாம் தளர்ந்து
இரா மாதம் இசக்கி மயங்கி
மூன்றுமாதம் முனி முகில் கருத்து
நாலாமாதம் நசுக்கிய மயக்கமாகி
ஐந்தாம் மாதம் அரைவயிறு சூலியானேன்
ஆறாம் மாதம் அடிவயிறு கனத்து
அரையெல்லாம் நொந்து நொந்து
ஏழாம் மாதம் இளம் உடம்பு சூலியானேன்
எட்டாம் மாதம் திட்டு முட்டாகி
பட்டுப்பாவாடை அணிந்து சீமந்தம் செய்து
ஒன்பதாம் மாதம் ஓலைபோல் சுழன்று

பத்தாம் மாதம் நான் பெற்ற சிவனாண்டி
உன்னை பவுசோடு பெற்றெடுத்து
இந்த பாவிகள் செய்த அநியாயத்தால்
பாவிகள் அரிவாளுக்காகப் பலிகொடுத்தேன்
அகப்பாநாடு அரண்மனை வாசலிலே மாளாமல்
அடுத்தவரிடத்தில் அநியாயமாய் மாண்டாயே
பூங்காவமும் புதுக்கிணறும் சோலையும்
நந்தவனமும் நாழிக்கிணறும் அங்கிருக்க
நீ நாடுவிட்டு நாடு வந்து மாண்ட தென்ன
இஞ்சிக்கிணறும் இருவாச்சி தோப்புகளும் அங்கிருக்க
நீ இடம் விட்டு இங்கு மாய்ந்தது என்ன என்ன
உன்னோடு அல்லாம் வெள்ளைத்தாய் பெற்ற மகன்
வீரமுள்ள பரமசிவனையும் பறிகொடுத்து
பெருவழியாய் நின்றேனே நான் என்றாள்
சிவனாண்டி வீரனையும் பாவிநான் இழந்துவிட்டு
இந்த பார் உலகில் இனி நான் உயிர் வாழ்வேனா
என மகன்மேல் விழுந்து அழுது புலம்பினாளே

(ஆவுடையாள் கோபத்தில் சாபமிடல்)

மாதாவான சங்கர ஆவுடை அலறி புலம்பி
அரண்மனைக்கு ஓடிவாராள் கோபமுடன்
காட்டாரி பாண்டியனே கோள் பேச்சு கேட்டு
துர்புத்தி உள்ளவனை துணை வைத்துக் கொண்டு
கோள்பேச்சுக் கேட்டுக் கொலை செய்தயே என் பிள்ளைகளை
சத்தியம் தவறாத உத்தமராம் மதுரைப்பாண்டியன்
தன் காவலாளி உண்மைக் கள்வனைக் காணாது
கண்ணகியின் கால் சிலம்பினை விற்க வந்த
கோவலனைக் கள்வனென்று நீதிவழுவி
பண்டு அறியாமல் கொலை குற்றம் சுமத்தியதால்
பாண்டியன் அரண்மைன அழிந்தது போல்
இருக்கும்இடம் தெரியாமல் உன்வம்சமும் அழிந்துபோக
இந்த உத்தமி தாயின் சாபங்கள் பலிக்கும் என்று கூறி
கண்ணீர்விட்டு கதறி அழுதாள் சங்கர ஆவுடை
உன் வாசலில் எருக்கும் குருக்கும் தான் நிலைக்கும்
ff எறும்பு கூட உயிர் வாழாது என்றாள்
ஏழேழு ஜென்மத்திற்கும் பாழடைந்து போகும்
என்று மன்னனைத் தூவி மார்தட்டி அழுதுதாள்
சஞ்சலத்தோடு சாபமிட்டு அழுது புலம்பினாள்
பிள்கைளின் பிணத்தருகில் வந்து கட்டிப்புரண்டு
அழுத காட்சி காண்போர் கண்கள் கலங்கியது

அம்மையின் பின் தொடர்ந்து வந்தவர்கள்
அத்தனை ஜனங்களும் கட்டித் தழுவி கலங்கினரே

(ஆவுடையாள் உயிர்விடலும்
மக்கள் இறுதிச்சடங்கு செய்தலும்)

மகனையும் பேரனையும மடியில் எடுத்துப் போட்டு
அழுதுபுலம்பி தன் நாக்கைப்பிடுங்கி நாயகியாள் உயிர் துறந்தாள்
ஊரில் உள்ள உற்ற மற்ற ஜனங்கள் எல்லாம் ஒன்றுகூடி எருஅடுக்கி
சிவானாண்டியைத் தூக்கிவைத்து பரமசிவனையும் பக்கம் வைத்து
வலதுபுறம் சங்கர ஆவுடையைச் சீராக எடுத்து வைத்துதான்
எரு அடுக்கி கட்டை வைத்து தீபம் மூட்ட இருக்கும் தருவாயில்
மயங்கிய நிலையில் பக்கத்தில் வந்து சுருண்டு விழுந்து பிராணனை விட்ட
இரண்டு நாய்களையும் பக்கத்தில் வைத்து ஜனங்கள் எல்லாம்
கண்ணீர் விட்டு அழுது புலம்பாதவர் அங்கு யாருமில்லை
ஊரார் கொள்ளி வைக்க உற்றார் பார்த்திருக்கும்போது தான்
கொளுந்துவிட்டு எரியுது ஐந்து பிணங்களும் அப்படியே சாம்பலானது

(மூவரும் தெய்வமாதலும் வழிபாடுபெறுதலும்)

அழகு பார்வதி அம்மாள் வந்து காட்சி தந்து
இவர்கள் சத்தியவந்தர்கள் சுத்த வீரர்கள்
இவர்களை அரசு தேவதைகளாக்கி வைத்து
பூலோகத்தில் எல்லோருக்கும் குலதெய்வம்
என்று சொல்லிக் கொண்டாடி மகிழ அருள்செய்தார்
அம்பாள் ஆலமரத்திற்குக் கீழ்புரத்தில்
சங்கர ஆவுடையாள் பெண்கொடிக்கும்
சிவனுபாண்டியன் பரமசிவபாண்டியனுக்கும்
சின்ன அணைஞ்சி பெரிய அணைஞ்சி பேர்கொண்ட
நாய்கள் இரண்டிற்கும் மேற்கு பார்த்து நிலையமிட்டு
ஆண்டிற்கு ஒருமுறை அழகாகக் கொடைவிழா எடுத்து
கும்பிட்டு குறைகளைத் தீர்க்க மக்கள் அனைவரும்
சத்தியம் தர்மம் நிலைக்க வேண்டி கும்பிட்டு வருகிறார்கள்.

(முற்றும்)

(கதைப் பாடலை இயற்றிய புலவர் எஸ்.சொக்கலிங்கம் பிள்ளை.)

அந்தரமுடையார் கதை

(ஓலைச் சுவடி பதிப்பு)

(சிவசுப்பிரமணியபுரம் அ.அப்பாவு நாடாரிடமிருந்து
ஓலைச்சுவடி பெறப்பட்டது.)

(காப்பு)

ஆன சிவ னருகே சிவகாமி ஆயிளையும் பிரகாய்
ஆயிளையும் பிரகாய் சிவகாமி ஆன யுருவானாள்
ஆனை யுருவாக அந்த ஆயிளையும் மருவ
ஆயிளையும் மருவ கணபதி ஆனை யுருவானார்
ஈசன் வடவாசி அவர்களுக் கேற்ற அவல் பொறியாம்
ஓட்டி ரொட்டி யவலா மவர்க்கு ஓயிலான தேன் குழலாம்
சிறு கதலி குலையாம் யவல் பொரி தேன் குழல் தன்னுடனே
கடலை விடலை காயாம் சிறுபயர் காரமாணிப்பயரும்
விடலை பொரி அவலா மவர்க்கு வேண்டும் பலகாரம்
அதிரசம் எள்ளுருண்டை கணபதிக்கு அன்புடனே படைப்பேன்
சொர்க்கமே போறபோக்குத் தும்பிக்கையான் துணையாமே
தும்பிக்கையானே தொடுத்தக் கதை நடக்க அருள்புரிவாய்.

(தெய்வார் துதி)

அரவே பரம ஈசனவர் கண்டுடன்
அப்பனார் எங்கள் அம்பல தோப்பிலே
சேர மாங்கனி வாழை பழத்துடன்
தேனும் பாலும் திகட்ட படைப்பேனே
சீருலவும் சிவன் திரு மைந்தனே
திருமால் மருக அரி நான்முகா
பாரிலே உந்தன் பொற்பட வர்ணத்தை
பாடவே அடியேனுக்கு முன் நிற்பாய்
முன் நிற்கும் தெய்வ மூத்த நயினாரே
முக்கண்ணனே முருகோனே கந்தையா
தன்னில் ஒன்றாய் அமர்ந்த பெருமாளும்
நானே ஈஸ்பர கால பூதத்தானும்
இணக்கமாய் அங்கு வேதாள பூதமும்
நாச்சிமாரும் கலியுக ஐயனும்
நடு காட்டிலே வாழும் கணங்களும்
ஐயனோடு கணங்கள் பலபூதம்
ஆண்டு கொண்டவள் கொத்தன் குளத்தம்மை
செய்யும் மேனி துளப வடங்களும்
திக்கு எங்கும் புகழும் பெருமாளும்
கல்லை யொற்றார் மனத்தா லிரங்கவே

கனக சிந்து கவிபாட வல்லவா
சொல்லும் வார்த்தை மொழிக்கொரு கிண்ணரம்
தூண்டி படிக்கின்றக் கைக்கொரு சங்கிலி
சொரியும் பூஞ்சோலை ஊர் வள்ளியூரிலே
தோழி மூன்றுயுகம் கொண்ட காளியாம்
வரங்கள் தருவாயே கரும்பாண்டி நாயகா
வானுமாமலை ஐயன் துணை செய்ய
சீர் பெறும் நாயகா தொழுதிடுவேன்
அடியேனை வந்து நீயும் காப்பாய்
காப்பாயே நல்ல கடற்கரை சுப்பையா
கதைகளில் பிழைதான் பொறுத்தருள்வாய்
ஓதிவைக்கும் பலகலை நூல்களை
உந்தன் பாதம் சிரசினிலே கொண்டேன்
நித்திரையும் நினைவும் கனவிலும்
நினைவில் குடியது கொண்ட பெருமாளே
எருக்கலை வெட்டி நாட்டில்
இறையவன் பொன் அந்தரமுடையார்
மருக் கமிழ் வள்ளி நாட்டில்
வாழ்ந்திடும் வளத்தைப் பாட
திருக்கவி மலர்க் கை ஐந்தும்
தெளிவுரு பொன்னுமுள்ள அருள்கடலான
தொந்தி அப்பனைப் போற்றுவேனே.

(மாடநாடார், பொன்னிலங்கி பிள்ளையின்றி வாடுதல்)
(வேறு)

நாடானதொரு நாடதிலே நலம் பொருந்தும் நகர் ஆனதிலே
தேசமானதோர் தேசத்திலே சிறந்த செந்தமிழ் தேசத்திலே
தென் பூமி குறை தீர்க்க தெய்வ செண்பக நாச்சியாரும்
சிறந்த திருக்கோயில் கொண்டிருந்து சிறப்புடனே படிஅளந்து வாரார்
திருவாவினம்குடி மலை மேலே சிறந்த நாச்சியார் ஆலயத்தில்
அகத்தியர் பூசை செய்ய அருள் முனிவர்கள்தான் வணங்க
தேவாதி தேவரெல்லாம் சிறந்த தவம் செய்து நிற்க
மன்றுலகில் உள்ள உயிரினங்கள் மாதாவை தொழுது நிற்க
புதுமையுடன் நாச்சியாரும் பூசைக் கொண்டு அரசிருந்தார்
அரசிருக்கும் காலமதில் அழகு எருக்கலம் பட்டிதனில்
ஆண்டுவாரார் மன்னன் மாடநாடார் ஆயிளையாள் பொன்இலங்கியோடு
தம்பதியர் இருபேரும் தரணி புகழ்ந்திட ஆண்டுவாரார்
வாழ்ந்துவரும் காலமதில் வளமுடைய நல் நாட்டை ஆள
மைந்தன் அது இல்லாமல் மனது நொந்து வாடுகின்றார்

(செண்பக நாச்சியாரிடம் பிள்ளைவரம் கேட்டல்)

வாடிமனம் சோர்ந்ததல்லவோ வல்ல தவம் செய்திட வேணுமென்று
தேசமெல்லாம் தான் புகழும் தெய்வ செண்பக நாச்சியாரை
நாச்சியார்தனை நோக்கி அவர் நற்தவமும் செய்திடுவார்
மன்னவனும் தேவியுமாய் மாதவம் செய்திடுவார்
பிள்ளைவரம் வேணும் என்று பெருந்தவமும் செய்திடுவார்
குன்றுமலைதனிலிருந்து நாச்சியாரும் கொற்றவன் தவத்தில் வந்தார்
தம்பதியர்தனை அழைத்து தாயவளும் ஏது சொல்வாள்
என்னை நீ அழைத்த தென்ன இன்பமுடன் சொல்லு மென்றார்
அம்மை பொற்பாதம் போற்றி அழகு பொன்இலங்கியது சொல்வார்
மாதாவின் பாதம் போற்றி மாடநாடார் ஏது சொல்வார்
பிள்ளை வரம் வேணும் அம்மா பெற்றவளே அருள்புரிவாய்
மைந்தன் வரம் வேணும் அம்மா மாதாவே அருள்புரிவாய்
நாட்டை எல்லாம் ஆளுதர்க்கு நல்ல வல்ல பிள்ளை வேணும் அம்மா
கள்ளர் கொள்ளை அடக்குதற்கே கன்னி நாச்சியாரே அருள் புரிவாய்
அம்மா உன்பாதம் மறவாது உனக்கு ஏவல் செய்யும் நல்லோனை
சிறப்புடனே தர வேணும் தெய்வ செண்ப நாச்சியாரே

(செண்பக நாச்சியார் பிள்ளைவரம் நல்குதல்)

வல்ல நல்ல நாச்சியாரும் வாசல் காவல்காரன் தன்னையுமே
மழலை யுருதானாக்கி பிறவிசெய்து மனமகிழ்ந்து கைக் கொடுத்தார்
மன்றுலகில் அழியாத மாபெரும் வரம்தான் கொடுத்தார்
கோடியும் தேடிடுவான் அவன் கொடிகட்டி வாழ்ந்திடுவான்
அரசனாக வாழ்ந்தாலும் ஆண்டி மகள்தனை யடைவான்
கள்ளர் கொள்ளை யகற்றிடுவான் கெடியோர்தனை வதைத்திடுவான்
எதிர்த்தோரை யழித்திடுவான் ஏழைக்கு யிரங்கிடுவான்
ஏற்றவழி செல்லுதற்கு இயல்பான குதிரைதான் கொடுத்தார்
மழலையுட கரமதிலே மந்திரவாள் தான் கொடுத்தார்
வள்ளி நாட்டை யோர் குடைக்குள் வளமுடனே யாண்டிடுவாய்
எட்டுத் திக்கும் புகழ் மணக்க இன்பமுடன் அரசாள்வாய்
என்று சொல்லி பிள்ளை தன்னை ஏற்ற பொன்னிலங்கி கரமதிலே
மாதாவும் தான் கொடுக்க மன மகிழ்ந்து பெற்றுக் கொண்டார்
அம்மை திருப்பாதம் பணிந்து அழகு மாடநாடார் ஏது சொல்வார்
அம்மை யவள் தந்தபிள்ளை அந்தரமுடையார் என்றே நாமமிட்டார்.

(குழந்தைக்குத் தலாட்டு பாடுதல்)

(வேறு)

சுந்தரம் சேர்பிள்ளை தன்னைத் தொட்டிலிட்டுத் தாலாட்டி
சீராட்டி பாராட்டி சொந்த மினில் தாலாட்டி

பிள்ளைக் குறை தீர்க்க வந்த பெருமகனே என்றுரைத்தார்
நாவுலகை முன்படைத்த நாச்சியாரின் திருமகனே
அருதல வங்கிசத்தை ஆளவந்த திருமகனே
ஆண்டவனே எங்களுட அந்தரமுடையாரே
என்று சொல்லி மங்கையர்கள் இன்பமுடன் தாலாட்டி
அருக்கர் குலம்தான் அழிப்பாய் அருங்குடியைக் காப்பாய்
நம்பியோரைக் காத்தருள்வாய் நவ்வல்நகர்பதியில் தோன்றினாய்
என்று சொல்லி பொன்னிலங்கி இன்பமுடன் தாலாட்ட
மாடநாடார் மனமகிழ மன்னவனும் வளர்ந்து வாரார்

(அந்தரமுடையாருக்குக் கல்வி கற்பித்தல்)

அறவழி கொன்றைவேந்தன் ஆத்திச்சூடி மூதுரையும்
நாலுவேதம் ஆறு சாஸ்திரம் நலமுடனே கற்ற பின்பு
ஆன ஏற்றம் குதிரை ஏற்றம் அழகு படை நடத்தும் வகை
வில் அடவு மல் அடவு விரைவுடனே கற்றறிந்தார்
வாழும் எருக்கலை வெட்டியூர் வாசமுமானார்
வாக்குத் தவறாத பெரும் பாக்கியவான் ஆனார்

(அரண்மனைக் கட்டி வாழுதல்)

நாளும் தொட்டயோக பத்ரகாளி புத்ரனானார்
வள்ளல் செண்பக நாச்சியாரை வணங்கியே வாரார்
ஆன களக்காடு வள்ளியூர் திருநெல்வேலி
அரண்மனை தோறும் பெரிய அம்பலங்கள் செய்தார்
கானமலை வேடரோடு தான் உறவு கொண்டார்
கரட்சி பெரியோர்கள் கேட்கவே கொடுத்தார்
வஞ்சகம் இல்லாதவர்க்கு நெஞ்சிரக்க முள்ளோன்
வராக தங்கக் காசு பணம் தேடிவைத்தப் பணக்காரன்
கொஞ்சமில்லை வாழ்வு குறையாதிருக்கும் பொன்னே
கோடியும் தேடி கொடியும் கட்டி வாழ்ந்தார்.

(அந்தரமுடையார் வள்ளியூர் வருதல்)
(வேறு)

வாழ்ந்து வரும் காலமதில் வள்ளியூரில் சென்று
வரவேனும் என்று மனுக்குதிரை ஏறி
சூழ்ந்து வரும் சேவகர்கள் தொங்கலோட்டமாக
துள்ளி வைத்த நாலுகாலில் வெள்ளி சிலம்போசை
நாகரிக அந்தரமுடையாருட குதிரை
நாட்டுவனைப் போல பரத நாட்டியத்தைக் காட்டும்
வாலை தொடும்போது மேக மண்டலத்தைப் பார்க்கும்
மூன்று நிறமாய் பதித்த முப்பரி சதங்கை

மோதியே வள்ளியூர் மடத்திலே முழுங்க
ஆண்டித் தெரு வீதி எங்கும் ஏறி விளையாடி
ஆண்டி மடத்தாருட வாசலிலே வந்தார்

(பண்டாரப் போத்தியின் மகளை விரும்புதல்)

அமர்ந்த குதிரையை விட்டிறங்கி அந்த அய்யன்
ஆசார வாசலில் ஓர் புறமாக நிமிர்ந்த தலையணையோடு
வட்ட கோட்டையிட்டு ரத்தின கம்பளி தன்னை
விரித்தங்கே யிருந்தார் செம்புதனை வைத்து இசைவாய்
இசைவாய் யமைத்திட்ட செம்பு செல்வந்தன் முன்னே
வைத்து நின்றான் ஒரு சிறுக்கன் அம்பலம் பண்ணும்
துரை எனவே மடத்தாண்டி அய்யா நீர் வந்தீரோஎன்று
திருநீற்றை அள்ளி வாயார வாழ்த்தி கொடுத்திட
கும்பிட்டு வாங்கி மகிழ்ந்து திருநீற்றை நெற்றியில் வளமாய் தரித்தார்
வெயிலில் நடந்த கை ஆரிட வேண்டி
வெண்னீரு வர வேண்டும் பண்டாரபோத்தி விரைவாய்
பொய்யான வார்த்தைக்கு மெய்யான பண்டார போத்தி
பூத்தானமாய் சென்று பூசைமடத்தில் புகுந்தார்
செம்பு தட்டதிலே இட்டதோர் வங்காள சீனி
சின்னம்மையரைக் கூப்பிட்டே யுரை செய்தார்
வைப்பு பணக்காரன் எருக்கலம்பட்டி மணியம்
வந்தத் தகையோடு இருக்கிறார் அந்த மடத்தில்
கொண்ட தகை தீர வெண்னீரும் செம்பிலே கொண்டுவாவென
கூப்பிட்டுச் செல்ல மகளையும் ஏவல் கொண்டார்
ஆண் பிள்ளை முன்சென்று வெண்பிள்ளை ஏவல் அழகோ
அப்பச்சி சொல்வதைத் தட்டுதல் பிள்ளைக்கு அழகோ
மானமுள்ள அய்யா பண்டார பேச்சு மாறாமல்
மடத்தை வலம் சுத்தி சேவித்து மீண்டும் வருவோம்
அந்த செல்வந்தன் முன்னே சென்றாக்கால் நமை என்ன செய்வான்
தீண்டாதக் கற்புக்கு மனச் சேவகம் என்றுமே திண்ணம்
காவாலி அல்லவே யோசனைக் காரியக்காரன்
கல்விமான் பக்கத்தில் போகலாம் என்றவள் கண்டாள்
வென்னீரும் வங்காளச்சீனியும் செங்கையின் மேலே
வேலப்பன் உண்டென்று வாசல்படியை மிதித்தாள்
பக்குவமான பிராயா பருவத்தினைப் பார்த்து
பாடகந் தண்டையின் பாதத்தைக் கண்ணாலே பார்த்தார்
பண்டை விதியை ஒருவரால் வெல்லப்படுமோ
சிக்கெனக் கையை வீசி நடக்கச் சிலையாள்ச்
சீவரோலி அய்யன் செவிக்கு முன்தூது போய் சொல்ல
பக்கத்தில் வந்தவள் தன்னை முகம் கொண்டு பார்த்தார்
பெரியோர்கள் தேடியும் காணாத லட்சுமி பெண்ணை

பிச்சை பரதேசி பெற்றுக் கொண்டார் முழு பேறால்
விதி வந்து கூடி மதியைத் துரத்தி வெருட்டி
வெகுமானம் ஆச்சுதே அந்தரமுடையாரின் மேனி
ஆண்டியும் அம்மையும் சுத்தி நின்றாரும் அறியாமல்
அந்தரமுடையார் அதுவேளை பட்ட அவதி
தாண்டி குதிரையைப் பார்த்து அந்த தையல்
தண்ணீரும் சீனியும் ஒன்றாக வைத்தாள் சமர்த்தாய்
வைத்த உடமை எடுக்க திறங்கள் இல்லாமல்
மானிடர் கூடிச் சிரிப்பார் என்று அபிமானம் வந்து
வெண்னீரும் செப்பும் அஞ்சரிடை கொண்ட பாரம்
பைய எடுத்து குடித்தார் தண்ணீர் தகைத் தீர
சீனிமனம் போல் இருக்குது என்றே சிரித்தார்

(சுருட்டு பற்ற வைக்க நெருப்புகேட்டல்)

என் தகை தீர்ந்தது சின்ன வேலை ஒன்று
இருக்குது என்றே இயல்பாய் சிரித்தார்
என்புகை சுருட்டுக்கு இப்போ தணல் வேணும் என்றார்
எமக்கிட்ட வேலை என்று ஏந்திளை மெல்ல இசைந்தார்
சீக்கிரம் சென்று நெருப்பை எடுத்து திரும்பி
சின்னம்மை நீட்டினார் செல்வ திருமகன் முன்னே
நாளைக்குக் கல்யாணம் இன்றைக்கு வேலை நமக்கு
காணாமல் கொள்ளாமல் என்ற வார்த்தையைத் தணித்தார்
வேலைச் சிருக்கனை ஒட்டு உருவம் போல் விட்டு
வெளியில் வராதவள் தன்னைக் கொள்வினார் வேலை
இன்னும் ஒரு தரம் ஓடிப்போய் தீயை எடுத்து
இங்கு வராவிட்டால் என் தகைத் தீருவதில்லை
வேறு ஒருவரை தீயை எடுக்கச் சொல்லாதே
மேட்டிப்பயல் சொல்லைத் தட்டாதே பெண்ணே
புண்ணியம் வேணும் பொசுக்கென நீ ஓடி போவாய்
புலம்பிடக் கேட்டு பரமார்த்தினி மீண்டும் ஒரு பொழுது
அன்னம் தென்னஞ் சிரட்டை நிறையவே வாரி
அந்தரமுடையார் முன்னே வைத்தவள் போனாள்
ஆண்டி எடுத்து கொடுத்திட வாங்கிக்குடித்து
அந்த புகையாலே திரும்பதான் கொண்ட ஆசை
தூண்டிய காயத்தின் வேகமாய் தலையைச் சுட்ட
தூசணை சரிந் தாண்டி முகம்பார்த்துச் சொல்வார்

(பண்டாரப் போத்தியிடம் குடும்ப விபரம் கேட்டல்)
(வேறு)

சென்று உம்பள சம்பளம் தானுண்டோ
சுத்தப் பூசைக்குப் பணிவிடை தானுண்டோ

சோறு கஞ்சிக்குதான் விடை தானுண்டோ
இந்தப் பெண்கொடியைப் போல வேறு பெண் உண்டோ
என்று கேட்க மடத்தோண்டி சொல்வார்
சொந்தமான தொழில் எனக்குப் பூசை
கோவில் தொழிலது செய்தாக்கால் சோறுண்டு
தூக்கு செம்பு கடுக்கனோடு பெண்டாட்டி பிள்ளையும்
சுரப்பந்தனை அது சீர்தமையாய்தான்
தாய்க்கும் பிள்ளைக்கும் தம்பிரான் தானுண்டு
சாண் வயிருண்டு நானுண்டு தம்பி
சம்பளமும் பணமும் வாங்கி சாப்பிட்டால்
தந்தவன் புண்ணியத்தைக் கொடுபோவான்
வம்பிலே பாடுபட்டுக் கொடுப்பானேன்
வாங்கி வாயிலே போட்டால் வணக்கு உண்டோ
உற்ற பெண் பிள்ளை ஆண்பிள்ளை உண்டானால்
ஒதுக்குத் தேடுவீர் ஒட்டிக்கு ரெட்டியாய்
செத்துப் போவது இன்றைக்கோ நாளைக்கோ
தீராணி மண்ணில் இதுக்குள்ளே செல்லுமே
தொட்ட வேலை குறையாக விட்டிட்டால்
கூத்து வந்து நெருங்கி விரட்டுவான்
கண்ட வெள்ளாண்மைக்கு நின்ற தண்ணீர் போல்
கவ்வை உள்ளி பாக்கவே வாயையும் பாருங்கோ

(மகளுக்குத் திருமணம் நடத்தாமைக்குக் காரணம் கேட்டல்)

என்ற பண்டாரம் தன்னை முகம் பாரத்து
ஏது சொல்லுவார் அந்தரமுடையார்
மண்ணில நல்ல விவசாயி நாங்கள் தான்
வையகத்தில் முறை செய்குவோமையா
சிவனுக்கு வேலை செய்கின்ற பேருக்கு
தேடிப்போட சமுசாரி வேண்டாமோ
இவளை பெண் பிள்ளையாய் பெற்ற தேவரீர்
இன்னும் மாப்பிள்ளைக் கேளாதிருப்பதேன்
மாப்பிள்ளை வேண்டாம் என்று இருக்காலோ
ஏதும் ஒளியாமல் சொல்லுவீர் என்றனர்
எடுத்து உரைக்க மடத்தாண்டி சொல்வார்
பண்டுள்ள பழவினை அல்லாது
பணத்திலே குறை முடியாது காண்
ஆல்பழுத்தால் குருவிக்குச் சீட்டு உண்டோ
அழைத்த பேர்களை யார் என்று சொல்வார்

(பொடி வைத்து அந்தரமுடையார் பெண் கேட்டல்)

தீர்த்தமான சிவன் செயல் இதுவன்றோ
செப்பிட அந்தரமுடையாரும் ஏது சொல்வார்

எருக்கலை வெட்டியூரிலே மாப்பிள்ளை
என்னைப் போலே இருப்பான் அவனுக்கு
மறுக்காமல் மணம்வுள்ள கல்யாணம்
மாலை சூட்ட மனம் உண்டோ
சோத்துக்கும் பணத்துக்கும் குறையில்லை
தொட்ட காரியம் சாதிக்க வல்லவன்
ஏற்றுக் கொண்டல் ஒருவரைக் கைவிடான்
இருக்கும் பேரை பணக்காரன்ஆக்குவான்
அவனை நம்பி பிழைக்கும் சனங்கள்தான்
ஆயிரம் பதினாயிரம் தா னுண்டு
இவளை நீங்கள் கொடுத்திடுவோம் என்றால்
எப்போதும் இவன் அவனாச் சாதிப்பான்
மூன்று மாதத்திற்கு முன்னே முடித்தது
முன்னூறு பவுன் நகை உண்டென்று
மூத்த பேத்தி முன்வந்து மொழிந்தானே

(போத்தி மாப்பிள்ளை யார் என்று வினவுதல்)

ஆரப்பா பணக்காரனைச் சொல்லப்பா
அப்பலக்காரன் அறியாததில்லையே
தூரபோகாமல் நாளை வரச் சொல்லி
துணையாக நீயும் கூட வருவாய்
என்றுரைத்த வார்த்தை தான் கேட்டு
ஏது சொல்வார் அந்தரமுடையாரும்
எதிரி இல்லாமல் அவரே முடிப்பார் காண்
தன்மை உள்ள சம்மந்தம் ஆச்சுது
தங்கம் கொடுத்து அனுப்புங்கள்
வார்த்தைத் தப்பாமல் இன்றேக்கு மூன்றாம் நாள்
மாப்பிளை விவாகம் பண்ண வருகிறார்

(அந்தரமுடையார் ஊர் திரும்புதல்)

பார்த்த பார்வையினால் அல்லவோ
பகட்டிப் போட்டு குதிரை வரட்டுமென்றார்
கல்லணையம் செங்கச்சை இறுக்கியே
கல்பாடியாக வடித்துமே மேற்கொண்டார்
வள்ளல் வள்ளி ஊர் விட்டு சீக்கிரம்
வாழ எருக்கலம் பட்டியூர் வந்தார்.

(அந்தரமுடையார் மணக்கோலம்பூண்டு பவனிவருதல்)

(வேறு)

வந்திருந்து தகையாரி வாழ் கிளையை வரவழைத்து
வள்ளியூர் மடத்திலே ஒரு பெண்ணவளும் தானிருந்தாள்

பெண் கொடியைக் கல்யாணம் பேசிவந்தேன் எந்தனக்கு
பண்புடனே பாக்கு வைத்து பந்தலிட்டு முகூர்த்தமிட்டான்
அரண்மனைக்கு பாக்கு வைத்து ஆதாயம் உண்டாக்கி
தெற்கு வீதி அலங்கரித்து தேசத்தாரை வரவழைத்து
ராசாக்கள் சமூகத்திலே நல்வரிசை வாங்கிக் கொண்டு
செகமெல்லாம் தான்புகழ் சாத்திரங்கள் தான் முடித்து
குலவரிசை மணக்கோலம் கொண்டாரே அந்தரமுடையார்
பலவரிசை சூழ்ந்துவர பல்லக்கிலே பவனிவந்தார்.

(அந்தரமுடையார் பல்லக்கில் பவனிவரும் அழகுக்காட்சி)

(வேறு)

பவனி வருகிறார் காண் அந்தரமுடையார்
பவனி வருகிறார் காண் பல்லக்கின் மீதேறி
பலகுடை பெரும்படை நெருங்க
அவனியோர் போற்றிட மகுட முடிமன்னர்
வாசலில் செய செயமென பவனி வருகிறார்
அந்தரமுடையார் பவனி வருகிறார்
சுத்தி குழல் அது எத்திசையும் முழங்க
சித்திர மாதர்கள் நற்குரவை பாடிட
தக்கிட தரிகிட தாம் தோம் தீமெனவே
பவனி வருகிறார் காண் அந்தரமுடையார்
பவனி வருகிறார் காண் பத்தி திசையெங்கும்
தீ வெட்டி பந்தமும் பகல்போல் விளங்குதாம்
பாதச் சிலம்புகள் கலீர் கலீரென்றிட
தம்புரு கிம்புரு தாம்தோம் தீமென்றிடவே
பவனி வருகிறார் காண் அந்தரமுடையார்
பவனி வருகிறார் காண் செப்பு சந்தனவாசம்
செந்தூரம் புனுகும் கம கம வென்று மணம்வீசிட
பத்து துப்பட்டி ராச சமுதாடு இலங்கவே
பத்தரைமாத்து தங்கப்பதக்கமும் போலவே
பிரகாசம் அது மட மடவென்றிடவே
சந்திரவட்டக் குடையில் கொடியும் கொடித்தொனியும்
கூரிய கட்டியகாரர்கள் வாத்தியதொனி முழங்க
பவனி வருகிறார்காண் அந்தரமுடையார்
பவனிவருகிறார் காண் வல்ல புலவோர்கள்
வீணை வாசிக்க நந்தினி மந்தினிமாரும்
ரோகினி தாங்கிய கொங்கைக் குழலாரும்
தொந்தனை வந்தனை தோம் தீமெனவேதான்
இந்திர அந்தரமுடையாரும் பவனி வருகிறார் காண்

அந்தரமுடையார் தான் பவனி வருகிறார் காண்
நடைதனில் பவனிவந்து கழுவூர் படைதான் எழும்ப
நாட்டுப் படை கூட்டமிட நடந்து வாரார்
வாள்படையும் வேல்படையும் கால்படையும்
மேக மண்டலமும் தானதிர பிச்சுவாக்காரரோடு
பெரும் வில் படையும் தான் வரவே
முன்னும் பின்னும் வாரபடை எண்ண முடியாது காண்
மெச்சும் நடை புரவியது எண்பதுக்கும் மேலாக
அத்தியாளி மேலாக பெரும் கத்திக்காரர் சூழ்ந்துவாரார்
கவலை பதித்த கைக்காரர் கை கருமக்காரரோடு
கட்டியக்காரனோடு அவன் கைமணியும்தான் வரவே
பத்துநூறு தீவட்டியும் பந்தமும் விளக்குகளும்
பட்டபகல் ஆக்கினர் பாதி இருள் ஆனதை
வள்ளி ஊருக்குள் வர விடிவெள்ளி உதிக்குமுன்னே
வானக்கெட்டுக்காரனோடு கோணத்திலே வந்தார்
துள்ளிக் குதிரைப் படை வள்ளி ஊரைச் சுற்றி
தூசிவிட்டு தம்பட்டத் தொனியும் முழக்கினாரே
மட்டுப்போட மேல்படி மணியம் வந்த தென்றே
வைத்த கழுவூர் கிராமத்தாரும் நடுங்க
செட்டு பண்ணி வெண்ணைத் திருடுதர்க்கு வந்த
அந்தரமுடையார் பல்லாக்கு தெருவில் வரக்கண்டார்
வீட்டு மடத்திலே படைகள் கூட்டமிட்டு இறங்கி
மேளதொனி காளதொனி வீச எல்லோரும் கண்டார்கள்
அந்தரமுடையார் மாப்பிள்ளைக் கோலத்தை.

(பண்டாரப் போத்தி பெண்தர மறுத்தல்)

(வேறு)

ஏது மணக் கோலம் அந்தரமுடையாரே
என்று மடத்தாண்டி வந்து நின்று கொண்டு கேட்டான்
சொந்தமான மாமனாரே உந்தன் மகளையும்
மாலை சூட்ட வந்த மாப்பிள்ளை நான் என்றார்
மாப்பிள்ளை நான் என்ற வார்த்தைக் கேட்ட பண்டாரம்
வல்லடி வழக்கு என்று மடத்தில் போய் ஒளிந்தான்
வொப்பமிட்டு தடியூன்ற மூத்தபோத்தி வந்து
என்னைப் போல மாப்பிள்ளை யிருக்குதென்று சொன்னாய்
கூத்துகாரன் போல இந்த வேசம் கட்டி வந்தாய்
கூலிக் கிடையாது கூத்தைக் கொண்டு போடா என்றான்
மாத்திக் கொண்டு ஆண்டிக்கொரு மாப்பிள்ளையாய் வந்தாய்
வள்ளியூரில் சென்று நீயும் பிச்சை எடுப்பாயோ
வொக்கிஷத்துப் பொன்னெடுத்து கைக் கூலி கொடுத்து

பூப்புனைந்த வெண்ணைக் கொண்டு போவதற்கு வந்தாய்
தன்மையுடனே வெண்ணை நீயும் கட்டுதர்க்கு வந்தால்
காட்டுப்படை நாட்டுப்படை கூட்டி வருவானேன்
மேட்டுக்குடி பிறந்தும் குரங்கன் சேட்டை பண்ணி வந்தாய்
வெட்கமில்லையோ உனக்கு தூக்கியே போவாயோ
சேட்டமுடனே கிழவி செப்புகின்ற நேரம்

(பெண்கள் அந்தரமுடையார்க்குப் பெண் கொடுக்கச் சொல்லுதல்)

தெளிவாகவே உரைத்தார் வள்ளியூர் பெண்கள்
ஏ பேய்பிள்ளை உன் பேத்திக்கு யிந்த மாப்பிள்ளைக் கிடைத்தால்
பிச்சைக்காரி எங்கள் ஊரில் மச்சுக்காரி ஆவாய்
வாய் சமர்த்தால் மடையர்க்கு மூக்கில் கோபம் ஆமோ
ஆண்டி இந்த நாட்டு வழி வேண்டி திரியாமல்
அந்தரமுடையார் பொருட்டால் அம்பலம் உண்டாச்சு
தாண்டுக் கிழவனைத் தள்ளி தாலிகட்ட
நல்லநேரம் தப்பிப்போகு முன்னே வந்துநின்ற பெண்கள்
இந்தவார்த்தைச் சொல்லும்பொது பண்புடைய பெண்களையும்
எட்டிமுகம் பார்த்து ஏற்றபடி சென்றுடமை முக்காதில் பூட்டி
இங்குள் வாரும் என்றவரை ஏவினாரே வள்ளல்
மற்றுமுள்ள சிலர் சூழ்ந்து வள்ளியூரில் புகுந்து
வேண்டும் மட்டும் ஆள்பிடித்து பந்தல் போடுமென்றார்.

(சிலர் பல்லக்கைத் தடுத்தலும் அவர்களைச் சிறை பிடித்தலும்)

(வேறு)

உள்ளூரதான் மகிழ்ந்து ஆண்டியைக் கூப்பிட்டு
ஊரில் பாக்குவைத்து சிலபேரை வரச்சொல்லி
தம்பிரார்க்குப் பூசை பண்ணும் நம்பியானைக் கூட்டி
சாத்திரங்கள் மாறும் சடங்குகள் செய்யென்றார்
செம்பு காசில் தூட்டவர்கள் சங்குநாதம் செய்ய
சித்திர பல்லாக்கைத் தெருவிலே விட்டார்கள்
உள்ளூரில் சில பேர்கள் குரலை தொனிமுழங்க
வள்ளல் பிராமணர்கள் வரிசை ராசாக்கள்
இருக்கும் தெருவையும் எல்லா தெருவையும்
சுத்திவாரார் வெடுக்கென்று அந்த ஊரவர்கள்
மேட்டிக்காரர் சிலர் கூட்டமிட்டு தடுத்தார்கள் பல்லக்கை
அந்த சாதிக்கு தக்கது செய்யாமல் முடுக்காய் நடத்தி வந்த
மூடரை பின் கட்டாய் கட்டுமென்றார்

அடித்தார்கள் தடியாலே ஆடலும் பாடலு மானவரை
தடிக் கம்புதான் கலங்க தம்பிக்காரரை விளாசினார்
அபயசத்தம்தான் எழும்ப அந்தரமுடையார் தான் அறிந்து
சபைதனில் கலகமிட்ட முழுச் சண்டாளர் தம்மை
கொண்டு பிடியுமென்றார் பிடியுமென்றார்
பிடியுமென்ற சத்தத்திலே பின் வந்த பெரும்படைகள்
கடிதாய் குதிரைவிட்டு கட்டியே கொண்டு வந்தார்
சிலுக்கிட்ட பேரிடத்தில் தீவெட்டிக்காரர் போய் நின்றார்
வளைவாய் சம்மட்டி பறைந்தனர்
மேட்டியல் அறியாது இந்த பிழை செய்தார்
பெருமானே நீ அது பொறுத்தருள வேண்டும்
கருத்துள்ள பெண்ணை கைப் பிடிக்கும் முன்னே
கால் பிடித்தார் சிலர் கைப் பிடித்தார் சிலர்
குதிரையின் மேல் மாவுத்தன்மார் முகமது நோக்கி
வண்டருட கோபமெல்லாம் சண்டையோடு போச்சு
மனமகிழவே குதிரையாளி விடுமென்றார்
இப்படி அலங்காரமாய் பவனிவரும் போது
அப்படி நமக்கு முறை தப்பி விடாமல்
அந்தரமுடையார் கண்டு பெண் கொடுப்போமென்று
ஆண்டி மடத்தில் மகிழ்ந்திருக்கும் வேளை

(மணியக்காரன் போத்தியை அடித்து இழுத்துச் செல்லுதல்)

மொட்டையர்கள் அஞ்சாறு பேர்கள் ஓடிவந்து
முத்திரை பண்டாரத்தை முன்னி பிடித்தாரே
கட்டி பிடித்தவர்கள் கவிழவே தள்ளி
கலியாண பிரபலங்கள் கண்டு களிகூர
வள்ளி ஊரில் பிச்சை வாங்குவது போச்சு
வல்லமை நடத்திட மணியம் உண்டாச்சு
வெள்ளியும் பொன்னும் மிகுந்திடுமே யானால்
மேலும் தலையது கீழே நடப்பாரோ
பணத்தையும் பல்லையும் பரியாமல் வைத்து
பல்லக்கு வந்ததே தெரு வீதி என்றார்
இணக்க மில்லாதவன் விலா புடைக்கவென்று
இச்சிடாமலே எந்தனது கூச்சம் தீராது
முட்டுக் கண்ணிக் கட்டி யிட்டே உருட்டி
மூச்சுவிடாதபடி ஆச்சுதடா என்றார்
ஆண்டிதனை இழுத்து மணியம் வீடுகொடுபோனார்

(அந்தரமுடையாரின் வீரர்கள் போத்தியை மீட்டல்)

ஆண்டியை இழுத்துச் சென்ற செய்திதன்னை
அந்தரமுடையாரிடத்தில் அறிக்கை செய்தாரே

குடியான ஊர் மணியக்காரனையும் கொண்டுவாடா வென்று
குதிரையை விட்டார் மட மட வென்று
வீட்டை சுத்தியே வந்து வார்த்தைச் சொல்லாதபடி
சாத்தினார் முதுகில் இருக்கும் சத்திலே
இருக்கும்வரை எல்லாம் ரத்தம் குதிக்கவே குத்தினார்
கையாலே ஆண்டியுட கையை கருத்துடனே அவிழ்த்து
அக்கயிறு கொண்டே அவர்களையும் கட்டி
திண்டு கன்னம் ரெண்டும் எண்ணவே கொடுத்து
அந்தரமுடையார் முன்கொண்டு வந்தாரே.

(அந்தரமுடையாரை அனைவரும் சமாதானம்செய்தல்)

(வேறு)

பாண்டிய நாட்டு அதிகாரம் பண்ணுதல் அறியாமல்
ஆண்டிதன்னைத் தொட்டதர்க்கு அபதாரம் தாறோம்
தேசமெல்லாம் தான் அறிய சீர்தனமும் தாறோம்
கட்டவிழ்த்து விட்டு எம்மை காப்பாற்ற வேண்டும்
விலக வந்த பெண்பிள்ளைகள் மீறி கொண்டு போனதால்
கலகமிட்ட ஆண் பிள்ளைகள் கை சாத்து வாங்க வந்தார்
பெண் கொண்டு போகுமுன்னே பிராணனை வாங்காதே
கோபமெல்லாம் தீர்வதர்க்குக் கொடும்புலிபோல் இருந்தவர்க்கு
தாகமெல்லாம் தீர்வதற்கு சந்தனமும் தான் பூசி
மேகுவுள்ள ஊரவர்கள் வெத்தலபாக்கு கொடுத்து
கால்நாட்டி முகூர்த்தமிட்டு கைபிடிதது வாருமென்றார்

(அந்தரமுடையார் மணப்பந்தலில் அமர்தல்)

ஆண்டி மகள் தன்னை அலங்கிருதம் செய்தார்
பட்டம் கட்டி நெத்தியில் பகுந்து காப்புமிட்டு
பள்பள என குலையுடனே ஆபரணம் இலங்க
கட்டித் தங்க வேலை செய்த தங்க வளையிட்டு
காலிலிடு நூலதிரம் பாதமும் இலங்க
அந்தரமுடையார் இருந்த சந்தரகாந்த பல்லாக்கை
அமுது பொழியும் நிறைமதியும் இரவியுடன் அணிந்து வாளும்
வந்து நின்று மடத்தாண்டி தன்ன மேலாய்
வலக்கையில் கைபிடித்து வணங்கியே கொடுத்தார்
பெரும் குரவைதான் முழங்க சங்கொலி முழங்கிவர்
பூமாரிதான் பொழிய பிரதட்சனமாய் வந்தார்
வக்கணமாய் கட்டிய மலர்மாலை பகுந்திட்டு
மாளிகைச் சூழ போகனமாய் மணவறையில் வந்தமர்ந்தார்
பெண்ணும் மாப்பிள்ளையும் சந்தோசமாய் இனிதா யரசிருந்தார்.

(வடநாட்டுக் கள்ளர் திருட வருதல்)

(வேறு)

அப்படியே யிவர் யிருக்க
ஏற்ற வட நாட்டு கள்வர்கள்
திருடி பிழைத்திட வேணுமென்று
கருதி வடநாட்டு கள்வர்கள்
இரவில் புறப்பட்டு தெற்குநோக்கி
திருச்சிராபள்ளியூர் பதியிடமாய்
ஏற்ற யானை மலை அனையூரார்
பிரமலை கள்வர்கள் தானும்
சீட்டுக் கொடுபோறோம் தெற்கே என்று
ஏற்ற பகல் பொழுதில் பொங்கியுண்டார்
தரித்திரம் தீரும் என்றவர்கள்
சமைத்த உடமைகள் எங்கும் உண்டு
சீவலப் பேரி குளக்கரையில்
சோறு பொங்கினார் குலப் பெண்கள்
காவலர் தங்கள் இருப்பு கட்டி
கடந்து வள்ளியூர் பக்கம் வந்தார்
இந்த பொழுதிலே ஊர் புகுந்தால்
எவரோ கல்யாணம் முடிக்கிறார் காண்
அந்த சனங்களும் தூங்காமல்
இரவு தங்கள் குதிரை தன்னை
மடத்துவாசலில் கட்டியல்லோ இருக்கிறார்
காணும் தெருக்கள் தோறும்
வரவு பாராமல் போகப்படாது
இன்றைக்குத் தங்கி நாளைக்கு என்றால்
எல்லா சனங்களும் உறங்கிடுவார்
குன்றாத மூன்று யுகம் கொண்டவளின்
கோயிலிடமாகப் பொங்கியே உண்போமா
என்று சொல்லியே கள்வர்க்கு எடுத்துரைத்தானே.

(கள்ளர்கள் ஊர் புகுந்து திருடுதல்)

(வேறு)

அதில் ஒரு கள்வன் கள்ளர் கோலம் கொண்டு
நான் போறேன் களவு செய்ய நல்ல நேரமாச்சு
ஊரைக் காக்கின்ற தலையாரிகள்
உறங்கி விட்டார்கள் இது வேளை
கூரைப் பின்னாலே பதுங்காமல்
கொல்லைப் புறத்திலே பதுங்கிடுங்கோ
கைக்கு லேசான உடமையன்றி

கனத்த பண்டங்கள் எடுக்க வேண்டாம்
எடுத்த பண்டங்கள் கடத்துவார்க்கு
இரட்டை பங்கு என்று சாட்சி வைத்தார்
தடுத்த பேர்களைக் குத்திக் கொன்றால்
தலை ஒன்றிற்கு ஒரு தங்கம் என்றார்
வாங்குவோர் துய்க்கும் சொக்குப்பொடி
உள்ள கள்வர்க்கு ஒரு தங்கம் என்றார்
குறுக்கு வழி காட்டி போவோர்க்கு
குருணி பால் உள்ள எருமை என்றார்
என்று திரிமுரி ஓலை ஒப்பமிட்டு
இந்தபடியல்லோ துணிந்து வாரார்
சென்று வள்ளியூர் வீடுதோறும்
சிறந்த பண்டங்கள் தான் எடுத்தார்
துலைத்த சுவரிலே புதைத்திருந்த
கட்டி கலசத்து பணம் எடுத்தார்
இருட்டு வீட்டிற்குள் ஒருவன்தான் இறங்க
சுத்தி வெளியிலே ஒருவன் நின்றான்

(மக்களை மிரட்டி கள்வர் திருடுதல்)

கருத்தாய் படை வந்து வளைந்த தென்று
கதவை தட்டினான் வெளியில் கள்வன்
மையிருட்டில் கிடந்தவன் எழுந்திருந்து
வெள்ளி கருப்பத்தைக் கழட்டியே கீழ்வைத்தான்
காதில் உடமையும் சரப்பளியும்
சீதனமாகக் கொண்டு வந்த செப்புப் பணத்தையும்
எடுத்து வைத்தான் அடுப்புக்கொருபுறம்
புதைத்து வைத்த ஆஸ்தி உடமையை
போத்து வைத்தான் இடத்துக்கொரு புறம்
புதைத்தது வைத்த குருணி பணத்தையும்
தோண்டி வைத்தார் மகள்தன் உடமையை
வைத்திருந்த மருமான் மடிச்சிலை எடுத்து வைத்தான்
மகவே இவள் வைத்த உம்மணம் எல்லாம்
வீட்டில் புகுந்தவன் எடுத்துக் கொண்டான்
அவள் ஒருபுறம் பிறக்கி வைக்க
அவளை அறியாமல் இவன் எடுப்பான்
இவள்தான் கழட்டி வைத்த உடமைத் தேடி
எங்கும் தேடியும் காணாமல்
அம்மா கெடுத்தானே பாவி என்றாள்
அரை பயித்தியமாகி தானழுது கொண்டாள்

(ஊர் முழுவதும் கள்வர் கொள்ளையிடல்)

வெளியில வந்தால் சும்மா கூச்சலிட்டால்
கொல்வேனென்று தொண்டைமேல் கத்தி
தொட்டு வைத்தான் அடுத்த அயல் வீட்டில்
புகுந்த கள்வன் அமுக்கிக் கொண்டானே
விடடா அவளை என்றான்
முடுக்காய் பேசாதே விடமாட்டேனென்று
முன்னும் பின்னுமாய் வளைந்து கொண்டார்
வெட்டி தலை கொண்டு போவதற்கு
போவதற்கு வீட்டை வளைத்தார்கள்
கத்திக்காரர்கள் தான் கட்டி இருக்கும் போது
ஏழை பெண்கள் கூவி எழுந்திருந்தார்
இன்று வயத்திலே பிறந்தேன் என்பார்
எல்லா உடமையும் எடுத்து வைத்தார்
வெளியில் போனதோர் கள்வன் நின்று
வெட்டிக் கொண்டுவா தலையை என்றான்
குழியில் அவன் தோண்டி பொன் யெடுத்து
கும்பிட்டு அவன் காலில் வைத்தார்
இந்த பணத்துக்கும் விடுவதில்லை
இன்னும் முதல் உண்டு கொண்டுவா என்றான்
அந்தபடி வைத்த உடமை எல்லாம்
அவதியாகவே கொள்ளையிட்டார்
அள்ளிக் கொண்டு போன களவு இதுதான்
அரண்மனை கொள்ளை அதிலும் ரெட்டி
வெள்ளி வெங்கல பாத்திரங்கள்
விளக்கு கொழுத்தியே பிறக்கு வாராம்
பிள்ளைகள் விளையாட வெள்ளிப் பெட்டி
பிடித்தெறிந்து விளையாடும் பந்துகளும் பொன்னாலே
வெள்ளி விளக்கு கலசங்களும்
வெத்திலை தட்டு கும்பாவட்டிலும் கிண்ணங்களும்
பப்படி பலகை செம்பு பாத்திரம் சட்டுவனம்
சருவபானை சட்டியும் சந்தனக் கிண்ணமும்
கொட்டுங் கூடையில் தலைச்சுமை
கோணியில் பட்டுச்சேலைகள் ஒன்பதுபேர் சுமை
பாக்கு மஞ்சள் சுமக்கவே நூறுபேர்
கொட்டைத் தேங்காயும் பாசி பருப்புக்கும்
கூட்டித் தின்பதற்குச் தென்னஞ் சக்கரையும்
மீன் கண்டத்தையும் பழஞ்சோத்தையும் விட்டதில்லை
பேராசைக் கள்வர்கள் தானியத்தை அளக்கப்படாது
செம்புகாசு ஒம்பது பேர் மாராப்பு சேலை பொட்டணம்

சேலை பொட்டணம் தொண்ணூறுபேர் சுமை
சம்பா நெல்வாக்கம் சகடம் முப்பது தகை பிடிக்கும்
தயிர் என்று சொல்லியே குடத்துக் கள்ளுக்கும்
முட்டைக்கும் கோழிக்கும் கொள்ளைக்காரர்க்கு
ஆனந்தம் ஆனந்தம் தப்பிடாமல் தடவி பிறக்கிய
தாலி சரட்டின் மணிகளைக் கைக் கொண்டார்
மாப்பிள்ளை மார்க்கும் பெண்ணுக்கும் பார்க்கவே
வார்ப்பு சீப்பு கண்ணாடியும் கைக் கொண்டார்

(கொள்ளையிட்ட பொருள்களை ஏற்றிக் கொண்டு தப்பிப் போதல்)

கூப்பிடாதபடி ஒருவனை முருக்கியே
கொள்ளி களாட்டியே கடுக்கனைச் சோதித்தார்
ஓலைக் கூரையில் ஒளித்த உடமையை
ஒன்றும் விடாமல் ஒளித்தங்கே கொண்டுவா
ஏலவே மண்ணுக்குள் ஒளித்ததை எல்லாம்
ஈட்டியால் குத்தி பாருங்கோ பாருங்கோ
ஆளைப்பிடித்து சுமையை ஏத்துங்கோ
அஞ்சாறு பேருடன் முன்னே போங்கோ
வாள்பிடித்தவர் வல்லயக்காரர்கள்
வழி கருப்பு மறைவிலே நில்லுங்கோ
சாமக் கோழிதன் சத்ததத்தைக் கேளுங்கோ
சத்தமிட்டபேரை குத்தியே கொல்லுங்கோ
காவல்காரர் பளிச்சென்று போகவே
கள்ளிக்குள்ளே கொள்ளியைக் காட்டுங்கோ
பத்து பேர்கள் நின்று தூரத்துங்கோ
பழிநாடாமல் சாத்தாவை நேருங்கோ
கொத்துகாரர்கள் கத்தாமல் பாருங்கோ
குதிரை வந்தால் குழல்காரர் நில்லுங்கோ
பொசிப்பு நீங்களும் வைத்துமே போங்கோ
புல்லின் மேல்மிதித்துமே போங்கோ
திசை தப்பாமல் குறுக்கே போங்கோ
தீவெட்டிக்காரர் வாரதை பாருங்கோ
கன்று கூட பசுவையும் பத்துங்கோ
கத்திக்காரர் கடந்து முன்னே போங்கோ
எடுத்த பண்டம் இடையிலே போடாதே
இளவட்ட சேவகர் என் கூட நில்லுங்கோ
நரைத்த கிழவன் முன்னே தள்ளுங்கோ
நமக்கு தெய்வம் குறை வைக்கவில்லையே
குரைத்த நாய்களை ஒருத்தர் தூரத்துங்கோ

கூப்பிட்டோரையும் இப்படி கொல்லுங்கோ
என்று சொல்லியே கன்னக்கோல்காரனும்
ஈட்டியைக் கானலில் தீட்டியே பிடித்தான்
முன்னே போறவன் கள்வர்க்கு மூத்தவன்
முன்னூறு பேர்கள் முடிப்பை அறுத்தவன்
பட்டணங்களைத் தீப்போட்டு அழித்தவன்
பத்துநூறுபேரை பழிகள் செய்தவன்
எட்டுப் பெண்களை கழுத்தை அறுத்தவன்
ஏழு பெண்களுக்கு இவன் ஒரு மாப்பிள்ளை
வட்டமிட்டு பழிசை உடைவாளும்
வல்லயமும் கட்டாரியும் தோன்றுதாம்
கம்பு கத்தி சமுதாடு சக்கரம் தடியுலக்கையும்
தணல் எரி அம்பும்தான் சிங்க வில்லும்
தொரட்டியும் கை வில்லும் தெளிந்த வில்லும்
மலையாள கை வில்லும் கண்ணைக் காட்டி
வெடிக்காரர் கை கவணும் அவன் கை ஆயுதம்
வாரபேருக்கு நானுண்டு நீங்கள்தான்
வச்சு வாங்குவீர் என்று வழிவிட்டான்
கள்ளர் வள்ளியூர் கடந்து போனபின்
கள்ளர் கொள்ளைக் கண்டவர்கள் கனத்தக் கூச்சலிட்டார்கள்.

(வேறு)

வள்ளியூர் மணியக்காரர் பிள்ளைமார் வர்க்கம்
வழுவும் மீனை போல சற்றும் வீரமில்லா வர்க்கம்
சட்டியை தலையில் வைத்து பெட்டிக் கொண்டு மூடி
தாலி கட்டும் மாப்பிள்ளைமார் தானும் பிழைத்தாரே
கட்டி ரொக்கமாய் வைத்த பணக் கலசமதை கொடுத்து
கற்ப்பழிவும் வராமல் காத்துக் கொண்டார் பெண்கள்
கோடிப் பணத்தோடு சேலைகளும் போச்சு
கூவ கோழி தானில்லாமல் காவல் கொண்டு போச்சு
காடிப் பானை பால் பானை கஞ்சி சோத்து பானை
கண்டவிடம் கிடந்து உருண்டோடிடுமாம்
வட்டியது ஒட்டி ரெட்டியாய் வாங்கும் செட்டியாரை
மந்தை சாலில் தூணில் கட்டி வைத்திருக்குதென்பார்
திட்டி வாசலில் தலை எட்டிப் பார்க்கமாட்டார்
செல்ல பிள்ளையாய் திரிந்த மல்லு பாருமென்பார்
கோப்புடனே இவ்வுலகில் மூப்பு கொண்டிருந்தோர்
கொல்லைக் குப்பையிலே புதைந்து கிடந்தாரே
இந்த ஊரில் கேட்க ராஜாக்கள் இல்லை
ஏன்டி பெண்ணே மூன்றுயுக தெய்வம் முன் போங்க

சந்தி தோரும் புயம் தட்டிக் கொள்ளும் பேரை
தப்பி வடநாட்டுக் கள்வர் துப்பிப் போட்டு போனார்

(கள்ளர் கொள்ளையை அந்தரமுடையார் அறிதல்)

வேகமாகிய சுத்த வீரன் இல்லையானால்
என்று சொல்லி பெண்கள் சத்தமிட்டபோது
இட்டமுடன் நித்திரையில் கேட்டார் அந்தரமுடையார்
பஞ்சணையை விட்டிறங்கி பார்த்தார் அபயச் சொல்லை
அபயமென்ற சொல்லதனை அந்தரமுடையார்தான் கேட்டு
வேட்டிதனை இறுக்கிக்கட்டி மெல்லி நல்லாள் முழிக்காமல்
தலைதனில் சாத்தி வைத்த சமுதாடு எடுக்கவில்லை
பலகை தனில் சாத்தி வைத்த பறக்கும் வேல் எடுக்கவில்லை
மதியோடு சாத்தி வைத்த மந்திரவாள் எடுக்கவில்லை
எரி ஈட்டி எடுக்கவில்லை கல்பதித்த குழலுடனே
கால்செருப்பும் எடுக்கவில்லை வாற்சரிகைப் பட்டுடுத்த
பூங்கொடியாள் முழிக்காமல் ஆண்டி மகள் அறியாமல்
அந்தரமுடையாரும் தான் வாரார் பாண்டியன்தன் கோட்டையிலே
பழிகள் வந்து நேர்ந்ததுண்டோ சமர்த்துடைய பெண்களுக்கு
சடவு வந்து மீண்டதுண்டோ அன்புடைய நெல்வேலி
அரசன் மனையார் கலகமிதோ கருமலையில்
புலிகடுவாய் கண்டவரைக் கொன்றதுண்டோ
வள்ளல் கதவை திறந்து வாசலில் மிதிக்கையிலே
கள்ளர் கொள்ளை என்ற சத்தம் காதில் கேட்டாரே

(அந்தரமுடையார் கள்வரைத் தேடிப் போதல்)

பந்தலிலே தானும் வந்து படுத்தவரை எழுப்பாமல்
மற்றுமுள்ள சேவகரும் படைகளையும் எழுப்பாமல்
மடத்திலே குதிரை கட்டும் மறநாட்டினரை எழுப்பாமல்
இடமுடைய தலைவாசல் மதில்மேல் ஏறியல்லோ
ஓம் என்று சொல்லியல்லோ உத்தமனும் தான் குதித்தார்
புலிபோல் பாய்ந்து வாரார் புகழ்பெரிய அந்தரமுடையார்
வட பத்ரகாளியவள் மலர்பாதம் துணையெனவே
பூமியிலே துணையாக போவதற்கு மனிதரில்லை
வள்ளியூர் கொள்ளை என்றால் வடிவேலர் அறியாரோ
தெள்ளியவர் ஊரைவிட்டு தெற்காகத்தான் குதித்தார்
தெற்காக குதித்தவரும் சினம் கொண்டு பார்க்கையிலே
சேதுற்ற திசைதனிலே கருப்பொன்றும் காணாமல்
பல்லைக் கடித்தவரும் பறந்துமே மேற்கே வந்தார்
பாவிக் கள்வரைக் காணாமல் வடதிசை சென்று
வேகமாய் திரும்பி வள்ளியூரை வலமாக வந்தார்

(அந்தரமுடையார் கள்வன் ஒருவனைக் கொல்லுதல்)
(வேறு)

இடமாகவே கள்வர்கள் வலமாக வந்து
இரவுதனிலே திரியும் பிசாசென்று போனார்
கொடிதான் இருளிலே சினந்து வரும்போது
கொடியவனை போல ஒரு தடியன்தனைக் கண்டார்
படியுமிசை செடிகொடியில் பதுங்கியொதுங்கி
பாதகனை அப்பொழுது பாரெனப் பார்த்தார்
காளியுட ஏவலோ எமதூதன் இவனோ
கள்ளர் படையில் செவிட்டு பூதம்தானோ
கொல்லப்படாது முன் செல்லப்படாது
காலாண்டு பூமியின் மேல் வைத்தபடியால்
கள்வன் இவன் என்றே கருத்திலே நினைத்தார்
ஆளியை போல் நின்ற நீலனை அடக்க
ஆயுதம் இல்லாமல் அமராடி வெல்வேன்
ஆண் பிள்ளையானால் பேர் தொனிக்க வேணும்
பாவி இவன் முன் சென்று பட்டுப் போனாலும்
பழி இல்லை சிவலோகப் பதவி பெறலாமே
கலியாண மாலை மணவாடையது வீச
கபாலினால் கொண்டு கலிரெனக் குதித்தார்
போற பேரோடு பூதத்தைப் போலாக
புரசைக் காட்டுப் பறவை போல் நெட்டையன்
எலிதனைப் பூனை முடுக்குவது போல
இரு கைக் கொண்டவரை இறுக்குவானாம்
கட்டிப்பிடித்து அவன் கைக்குள்ளாகவே
கையடவு கொண்டு கால் அடவு செய்தார்
மண்டைக்கு மேலாக முட்டு கொடுத்து
பிடரி மயிர் பற்றி பிட்டியில் மிதித்தார்
விலாவிலே தட்டி நிலத்திலே கிடத்தி
மிதித்தரே கள்வனைக் காலுக்குள்ளாக
காலால் மிதித்து கழுத்தை இறுக்கி
கத்தியைக் கொண்டவனைக் குத்தினார் மார்பில்
பெருங்களவு செய்தவன் கருங்கிடா ஆனான்
பேர்பெரிய அந்தரமுடையார் பெரும் வெற்றிக் கண்டார்
வருவி மணி ஈட்டிதனை வாங்கி
ஒருவனல்ல யின்னும் பலபேருண் டென்றே நடந்தார்.

(மீதிக் கள்வர்களைத் தேடிப்போதல்)

(வேறு)

மணியோசை கேளாமல் காதுக்குள்ளே வைத்து
வழியை விட்டோடினார் வடதிசை சமூகமாய்
தரியாது நிரை கொண்டு போறபேர் தம்மை
தடுப்பேன் என்றவரும் சுருக்காய் நடந்தார்
பண்டார மருமகன் பண்டார புத்தி
பாரடி நில்லாது நேரோடினரே
கடுகி ஒரு நொடியில் வடகரையில் வைத்து
நிரைதனை மறித்து ஈட்டி கொம்பால் அடித்தார்
திடமுடைய கள்வர்கள் தெற்கே திரும்ப
சேவகன் அந்த நிரைமேல் குதித்தார்

(அடுத்த கள்வனைக் கொல்லுதல்)

நிரையைத் திருப்பினவன் யாரென்று கேட்க
நெட்ட விலாவிலே பட்டதொரு குத்து
விழுந்தவன் எழுந்திட எழுந்து வரும்போது
விலாவிலே புடைத் தவரும் வாயிலே குத்தினார்
வருந்திடும் குருதி கள்வன் வாயிலே வரவே
மாற்றானும் வரவில்லை மேல் படையும் இல்லை
கோள்க்காரன் கைவேல் குத்து வருவானேன்
சுட வாடா என்று சுப்பிட்டானே
வாள்க்காரன் இல்லை ஒரு வேல்காரன் இல்லை
மட்டுடனே நின்று வட்டமிட்டு பார்த்தார்
காட்டையும் சுத்தும் நிரை மாட்டையும் சுத்தும்
கள்வனுக்கும் இவன் ஒரு கள்வனும் ஆகினான்
ஈட்டியுடன் மாட்டுடனே ஓடியே பார்த்தான்
இருபுறமும் பட்டுருவி அதன்மேல் விழுந்தான்
பரிசையுடன் செடி கொடியில் பதுங்கிய கள்வன்
பன்றி வந்து உடல் பகுந்ததென விழுவான்
ஊடுருவி விழும் கத்தி தன்னாலே ஒதுங்கிய கள்வன்
உச்சியில் ஆட்டிட விட்டிரு என்பான்

(கள்ளப் புலியனை அந்தரமுடையார் கொல்லுதல்)

மடியில் விட்ட அவல் வாயில் போடு முன்னே
வள்ளியூரை திரும்பி நின்று கொண்டு பார்த்தான்
கொள்ளைக்கு மூத்த கள்ளப் புலியன்
கோபமாக வழியில் வந்து நின்றான்
வெளிகண்டு சடாரென்று வார் பூட்டினார்கள்

மின்வெட்டு போலே கத்தி வீச்சிலே விழுந்தான்
ஏனியோர் சுமையை இறக்கி வில் எடுத்தார்
இருக்கின்ற சுமைமேல் ஆண்டவர் குதித்தார்
கச்சைக் கட்டி அந்த காவடிக்காரன்
கத்திட அகவித்தையார் அடித்தார்
பச்சைப் புலால் எல்லாம் மாற்றான் சுமக்க
படையான வேரொரு படையுமில்லை
பன்றி கடுவாயோ கொடும் புலியோ
பாய்ந்துக் கொல்ல பகைக்காரன் இல்லை
கன்றுகள் ஊடே கருப்புகள் நின்றாடுது
கணீர் கணீரென்று மணியோசை கேட்குது
வள்ளியூரைக் காத்த தெய்வமே யானால்
மாதம் மெருக்கால் பொங்கல் வைத்திடுவோம் மென்றான்
கள்வருட பேரிலே தெய்வம் வந்து ஆடி
களவிலே எனக்குப் பாதிக் கைபோடும் என்றார்
கைபோடும் என்ற தெய்வங்களுக்கும்
கன்னம் சிவக்க தேகத்தில் வேல் குத்து
வையக மீதில் பேய் அல்ல மலை மிருகமில்லை
மட்டுடனே நின்றான் அதில் ஒரு கள்வன்
கள்வன் இவன் தன்னைக் கருந்தலை அறுத்து
காட்டுடே அவர் நின்றார் தரையின் கால்கீழே
விரைவாய் சுமையொடு வாருங்கள் படைசேர
பின்காட்டி வந்தவர்கள் பின் போர் புரிந்தார்

(ஆநிரை ஓட்டிச் சென்றவனைக் கொல்லுதல்)

நின்றவனை அடுத்து கொன்றவனைக் காட்டினார்
நிரைதன்னை வடக்கேயிருந்து திருப்பியடி என்றார்
தின்றுவர நாய் நரிகள் வென்றுமே பதறி
துரை அந்தரமுடையார் சுழன்று விளையாடி
நிரை பத்தி போனவன் நெஞ்சிலே குத்தி
நெடுஞ்சுமைக்காரன் போன சுமையோடு சேர்த்து
ஒருவனுடை வலது கை அத்துவிழ வெட்டி
ஊரில் நிரைதானம் காடுதனில் விழுந்ததுவே
நிரைபோச்சு வெளியில் நிற்கிறான் மார்த்தன்
நெரிசக்கராயுதம் பாரிசிடம் வளைந்தார்

(கள்வர் அந்தரமுடையாரைச் சுற்றி வளைத்து தாக்குதல்)

வில்க்காரர் வாள்க்காரர் வேல்க்காரர் கூடி
விடுவதில்லை என்று முடுக்கியே வாரார்
வருகுதடி இரு இரு என வருகுதொரு பக்கம்

வலிய அமரர் கிலுகிலென வருகுதொரு பக்கம்
கவண்மீது எறிந்த கல் ஒரு பக்கம்
கத்திமுனை வீச கலந்தொரு பக்கம்
கவனமுடன் விழுந்தடித்து வருகுதொரு பக்கம்
வலது சாரி இடது சாரி தூசி விளையாடி
வளைந்தனர் முனைவோடு சமுதாடு வல்லயம்
தட்டதில் முறிய கல்வெடிக்காரரும் எட்டியே குதிக்க

(அந்தரமுடையார் வீரப்போர் செய்தல்)

கைத் தடிகள் உடைபட கத்தியால் உடைத்தார்
ஒருவர் மீதிலே ஒருபர் சாடினார் ஓங்கும் கையது
தொங்கியே சாடுவார் உதிரதாரைகள் அதிரவே பாய
ஒன்று இரண்டு மூன்று துண்டாக்கினார்
இந்த கல்வன் போய் அந்த கல்வனை
ஈட்டிவேல் கம்பால் தட்டியே குத்தினார்
முந்தவே இரண்டு மூன்று பேர் போய்
முட்டிலே தட்டிட சொட்டுப் போட்டனர்
சொட்டுப் போட்ட பேர்கள் கெட்டுப்பட்டுப் போனார்
துண்டுபட்ட பேருடன் சண்டை கள்வர்கள்
குத்துக் கொருவனாய் செத்துப் போனார்கள்
கூடும் பங்கல்லோ குறைந்து போச்சு
இன எத்துக் காரனைக் குத்தி கொன்றாக்கால்
ரெட்டைப் பங்கு எடுத்துக் கொள்வோமே
கத்திக்காரரைச் சுத்தியே பாருங்கோ
கையையும் காலையும் நைய புடையுங்கோ
வெள்ளி உதிக்கு முன்னே புள்ளிக் கள்வர்களை
வெட்டிப் போட்டாரே அந்தரமுடையாரும்
அள்ளிக் கொள்வதாய் அம்மையார்க்கு
ஆடு போலே அறுத்துப் போட்டாரே.

(கள்ளர்கள் ஆந்தரமுடையாரிடம் சரணடைதல்)

(வேறு)

வீட்டுக் கள்வர்கள் சீட்டு வாங்கினார்கள்
கொஞ்ச கள்வர்கள் மிஞ்சினார்க ளங்கு
காட்டுக் காச்சுதே வீட்டுப் பண்டங்கள் யென்ற
கழுத்து மொட்டையர் விழுந்துமே பட்டனர்
எடுத்தபண்டங்கள் அடுத்த கள்வரும் ஏத்த வாரினார்கள்
எங்குமே ஆச்சுது தர்மம் ஆனதை அதர்மம் வெல்லுமோ
தம்பிரானே உன் சரணம் என்று தெண்டனிட்டனர்

தெற்கு நோக்கி உங்கள் ஊரில் தெப்பெடுக்க வந்து சேவகனே
எங்களை நீர் கொன்றதுவும் போதும்
தாகமில்லை இனி மேலும் சண்டையில்லை
நாங்கள் தப்பிப்போக உன்மனது சாற்றிரங்கள் வேண்டும்
வெட்டிடாமல் எங்களையும் விட்டுப்போடுமையா
மேல்படையும் வந்தால் இனிமேலும் பெரும்பாடு
ஏழை வள்ளியூரில் ஒரு ஏழை இடும்பன் உண்டு
எட்டு தொட்டு போட்டு நாங்கள் பட்டுக் கொண்டோமையா
தோள் தெறிக்க இங்கே சுமந்து வந்த பண்டம்
தொட்டிடாமல் நாங்கள் இனி தூர போறோமையா

(அந்தரமுடையார் கள்ளவர்களை மன்னித்து போகச் சொல்லுதல்)

சேவகனின் கோபமெல்லாம் தீர்ந்துபோன பின்னால்
சிந்திப் போட்ட பண்டமெல்லாம் முந்தி கூட்டிப் போடுங்கோ
ஓடி ஓடிப்போய் பிறக்கி சூடு போல் குவித்தார்
ஊரில் காவல்காரர் கண்டால் தூரப்போகவொட்டார்
வாள்க்காரச் சேவகர்கள் வந்து வளைந்தால்
வாட்டியும் கள்வர் தம்மை காட்டிக் கொடுப்போமோ
பாடுபட்டுத் தேடுகின்ற பண்டங்களைப் போட்டு
பசியாறிக் கொண்டு நீங்கள் பயப்படாமல் போங்கோ
என்றவரும் கள்வர்களை வழிவிட்டு அனுப்பி

(அந்தரமுடையார் வெற்றியோடு திரும்புதல்)

ரத்தவெறித் அந்தங்களும் வேர்வையும் எடுக்க
கன்றுகளும் மாடுகளும் காட்டிலே பாயாமல்
கருத்துடனே சத்தமிட்டார் கானிடையர்போல
ஈட்டியுன்றி நின்று வள்ளிக் கோட்டை ஊரில் செல்ல
ஏவல்காரர் சில காவல்காரர் கூட்டி
கொள்ளிவாய் பிசாசுபோல வேசம் கொண்டு புறப்பட்டார்.

(வேறு)

இப்படியே இங்கிருக்க ஏற்ற வள்ளியூரதிலே
வீட்டிலே பெண்கள் கூடி நாக்கை நீட்டுவாராம்
வெளிகண்ட ஆண்பிள்ளைகள் ஒளிந்திருந்த பேர்கள்
கொட்டுபோட்டு ஆடினார்கள்
கூட்டமிகக் கண்டார் தந்திரமாய்
ஊரைச் சுற்றி தடமும் பார்த்து சாலை பாதை விட்டு
புல்லுகாட்டு பாதை வந்து நின்று
குத்துபட்டவர்களைக் குளக்கரையில் கண்டு

கொடு சுத்தியாடும் குறிக்காரன் சொல்வான்
கொள்ளையாடி போனகள்வன் குத்திபோட்டு போனான்
என்று சொல்லி குறிகாரன் ஆடுகின்ற வேளை

(கள்வர்களால் இறந்தவர்களின் குடும்பங்கள் அழுது புலம்புதல்)

தள்ளியோடிப் போன சிலர் வெள்ளித் தடிக்காரன்
சவத்தின்மேல் இடறியாங்கே சாய்ந்துமே விழுந்தார்
பந்தமும் தீவெட்டியும் பார்க்கவே கொளுத்தி
பார்க்கும் போது புல்லின் மேல் பச்சை ரத்தம் கண்டார்
தொந்தி வயத்தில் குடல் சிந்திக் கிடப்பாரும்
பெண்டிர் பிள்ளை என்று சிலர் சத்திமிடுவோரும்
பேச்சில்லாமல் மண்டை மூளை மாறி கிடப்பாரும்
வண்டுருக்கி போச்சுதென்று வாய்ப்பிளப்பாரும்
வாய்த்தகால் போச்சுதென்று கிடப்பாரும்
காசகவம் கொண்டு நரிவாலை பிடிப்பாரும்
கண்டமீனும் சோரும் வாய் கக்கிக் கிடப்பாரும்
தீன்கொண்டு வந்தகிடா உயிரோடு இருக்க
தெத்துப் பண்ணினபேர்கள் பொத்துக் கிடப்பாரும்
பச்சைப் பிணத்தைக் கண்டு பயப்பட்டு அலறி
பாய்ச்சல் காட்டிவந்தவர்கள் காச்சலாய் கிடந்தார்
வாய்த்த பண்டத்தைத் திருடி மாண்டவருக் கப்பால்
வள்ளி ஊரிலே எடுத்த கொள்ளை முதல் கண்டார்

(அந்தரமுடையாரின் தோற்றம் கண்டு மக்கள் அஞ்சுதல்)

வளைந்து கொண்டு சொக்கன் குளக்கரையில் ஏறி
மாட்டி நிரையான பெரும் கூட்டமதைக் கண்டார்
கண்டவர்கள் அத்தனையும் கள்ளர் கூட்டமென்று
கள்ளிகாட்டுக்குள் ஓடி முள்ளுக்குள் பதுங்கி
கொண்ட நிரை கண்டு நின்று கூப்பிடவே கேட்டு
கூடிக் கூடி தங்களிலே பேசி கூட்டமிட்டார்
மீண்டும் நல்ல காலம் போல வெள்ளி உதிக்கக் கண்டு
வீரவான்கள் சேர் நிரைமேய விழுந்து கொண்டாரே
மாண்டு கிடப்பார் நடுவில் வல்லயத்தை யூன்று
மாலை மண வாசமோடு ரெத்தவாடை வீச
தீப்பறக்கும் கோபத்தோடு அந்தரமுடையார் நிற்க
சேவகர்கள் கிட்ட முட்ட சென்றிடாமல் பார்த்தார்
கள்வன் இவன் காணுமென்று தூரநின்று பார்த்தார்
காயம்பட்டுப் போகாதக் கள்வன் இவன் தானோ
கள்வனைக் கொன்றவனோ கண்டு பாருமென்றார்

(அந்தரமுடையாரை மக்கள் போற்றுதல்)

பேயனைப்போல் நின்றவனோ பக்கத்தில் சென்று
போய் குதிரைகக்காரனிடம் பேச்சு கொடுத்தானே
ஊரைச் சொல்லடா உந்தன் பேரைச் சொல்லடா
உருக்கியே கேட்டதற்குச் சருக்கிடாமல் நின்றார்
சத்தம் காட்டாதிருந்தால் குத்துவேன் என்றான்
சாரைக் காட்டில் மேய்கின்ற மாசிக்கடா போல
சீக்கிரத்தில் சொல் என்று உரைக்கவே கேட்க
தெளிந்த வீரவான் என்று அந்தரமுடையார் சிரித்தார்
இத்தனை நேரமும் நித்திரை கொண்டீரோ
இங்கே வாருமென்று என்று சொல்ல சிங்க வேகமாய் ஓடினான்
சந்திக்குள்ளே மிதிபட்ட அம்பலக்காரன் வந்து
தாப் பரிசமாகவேதான் மாப்பிள்ளை என்றான்
வந்த வந்த சேவகர்கள் சந்திக்கவே கண்டு
வள்ளியூருக்கு வாழ்வு வந்ததே என்பார்
அன்று நிரை மீட்டதோர் அர்ச்சுனன் காண் என்பார்
ஆண்பிள்ளைகளிலே அந்தரமுடையார்
கன்றும் பசுவும் திரட்டி நின்றபடியால்
கஞ்சன் மருமகன் கார்வண்ணன் நீரோ
பண்டு வள்ளியூரைக் காத்த பாண்டியரும் நீரோ
பட்சம் வைத்து நீர் அவரை ரச்சிக்க வேணும்
இப்படி புகழ்ந்து கொண்டுச் செப்புக்குடம் தன்னில்
எடுத்து வந்தார் பண்டாரக் குளத்து நீர் தன்னை
மை படியும் திருமேனி திரு மஞ்சணையா லாட்டி
மஞ்சணைபோல் ஆகாத சீலை மாத்து களைந்தாராம்

(மக்கள் வெகுமதி வழங்கலும் அந்தரமுடையார் மறுத்தலும்)

கொள்ளையிட்ட பண்டத்திலே நல்லபண்டம் கட்டி
கொண்டு வரக் கண்டு கொற்றவனும் சொல்வார்
வள்ளியூர் பண்டமெல்லாம் கள்வருட பண்டம்
மாண்டுபோன சாவுடமை தீண்டவு மாகாது
அச்சமெல்லாம் தீர்ந்திருந்தால் பிச்சை வாங்கலாமோ
அல்லவென்றால் புலவரைப்போல் அனந்தராகம் வேண்டும்
இச்சையான வேலையிலே மிச்சம் மிக வேணும்
ஏந்தி பிழைப்பதைப் பார்க்கச் செத்துப் போனால் நன்று
வகை ஒருவர் பொருளை விரும்புவாரே யானால்
வலியச் சென்று வாங்கியுண்ட கூத்திமகன் ஆவான்
முத்தி நரைத்தோர் யுடமை எத்தியொன்றைத் தொட்டால்
முக்தி இல்லா ஆண் பிள்ளைகள் புத்திரன் இல்லைகாண்
வாடி வாடி ஓடி ஓடித் தேடுவார்கள் ஆனால்

மண்ணுலகில் புண்ணியங்கள் தேடுவார் மகிமை
அவரவர் பண்டங்களை அவரவர் எடுங்கோ
ஆசை வைத்து எடுத்த பேரை வீசிபோடு என்றார்

(மக்கள் அவரவர் உடைமையை எடுத்துக் கொள்ளுதல்)

தவறிவிடாமல் அவரவர் தனமது எடுத்து
சாந்தமோடு கோழி கிடா தனையும் கொடுத்து
பட்ட பிணத்தைக் குழிவெட்டி யதில் போட்டு
படுகளத்தில் சிந்தின பணம் மகிழ்ந்தெடுத்தார்
அரித்தெடுத்த பொன்னை எல்லாம் அவர் குழியில் போட்ட
அண்ணல் அந்த பாவம் தீர புண்ணியம்தான் செய்தார்
தரித்த வள்ளியூரில் உள்ள சனங்களெல்லாம் கூடி
தண்டியலுடன் சுருட்டிக் கொண்டு வரச் சொல்லி
மந்திர பூ வேட்டியுடன் வஸ்திரம் எடுத்து
ஆலவட்டம் போட்டு அன்பாக வந்தார்
பத்திரமாய் கொண்ட பட்டு மாலை கட்டி
பச்சை கொளுந்துடனே வஸ்திரமும் கட்டி
நேற்றைய மணக்கோலம் இன்றைக்கு உண்டாக்கி
நிறைந்த பல்லக்கு ஏறும்போது ஆதித்தன் உதித்தான்.

(அந்தரமுடையார் மனைவி தேடுதல்)

(வேறு)

செம்பொன் பல்லக்கை தெற்கு மேற்காய் விட்டு
சிறந்த வீரரும் வலமாக வாராா்
தூக்கியதோர் பல்லக்குச் சந்தியில் வரவே
தாட்டிய குரவையிட்ட மங்கைமார் தழைக்க
இப்படியே இங்கிருக்க ஏற்ற மடந்தாண்டி மக்கள்
பஞ்சணையில் ஆண்டி மகள் நித்திரையும்தான் களைந்து
பட்டுத்தலையாணி வைத்து படுத்தவரைக் காணாமல்
கிளிமொழியாள் கோபமுற்று கிடந்த நற் றிண்ணமதை
கழட்டியேதான் எறிந்தாள் கற்புடைய வெண்கொடியாள்
என்னை அவர் எழுப்பாமல் ஏகலாமோ தனி வழியே
என்று வெண்கொடியாள் ஏகிவாராள் மடமடஎன்று
ஆத்திரமாய் கோபமுற்று ஆண்டிமடம் தனிலே வந்தாள்
மெத்த சடைந்தம்மை வாசல்படி மிதித்திடுவாள்

(மக்கள் அந்தரமுடையாரைப் புகழ்தல்)

அங்கே வீடுதேடி வந்திடுவார் வீரவள்ளியூர் பெண்களெல்லாம்
வந்தவர்கள் ஏதுரைப்பார் வல்ல ஆண்டிமகள் தனைநோக்கி

தந்திரமாய் அந்தரமுடையார் சமைத்திட்ட தாலிக்கு ஈடு இணை
தானுமுண்டோ தளைத்த வள்ளி நட்டு பெண்கள் தாலி
கணவன் என்ற பேரினிலே தாலி கட்டிடும் ஆண்கள் தான்
இந்த காரிகைக்குத் தாலிகட்டும் அந்தரமுடையார் போ லுலகிலுண்டோ
மெத்தசடையாதே அம்மா எங்களுடன் கூட வாராய்
வீட்டைவிட்டு பெண்கள் அங்கே கூட்டியே போனார்கள்
பண்புடைய பல்லக்கு பவனி வரும்போது
பல்லக்கில் இருந்தவர் யார் என்று பார்த்து
மாதவ பண்டாரம் மகள் முன்னே வந்து
மருமகனைக் கண்டேன் என்று குதித்தான்
இருபுறமும் பெண்கள் குரவைதொனி முழங்க
அந்தரமுடையார் அருகில் அம்மையும் அமர்ந்தார்
தப்பிடாமல் மனைவாசல் தண்டிகைகளில் விட்டிறங்கி
காவல் சவுக்கையில் வந்து அமர்ந்தார்
சந்தித்தார் பலவேதியர்களும் பாண்டி நாட்டு பெண்கள்
தாலிகாத்தபடியால் பண்புடைய தாலிக்குவேலி என பகர்ந்தார்
ஆண்டிமகள் நீ எல்லோர்க்கும் அம்மையு மானாய்
ஆபத்து காத்தான் அர்ச்சுன அந்தரமுடையாரும்
தாலிக்கு வேலி என்ற திருநாமம் தன்னை
சந்திரரும் சூரியரும் உள்ள மட்டும் தரித்தோம்
வால பிராயத்து பெண்ணுக்கு இசைந்த சீர்வரிசை
வாரிவாரிக் கொடுத்தவர்கள் வாழ்த்தினரே
படணத்து மக்கள் எல்லாம் எல்லை மடத்தில் வந்து
பார்புகழ் அந்தரமுடையார் தன்னை வாழ்த்தினாரே
எல்லோரும் அந்தரமுடையார் அழகினைக் கண்டு
ஆனந்தக் களிப்படைந்தார் ஆகமமாகவே சீதனம் கொடுத்து
இந்திரன் போல வள்ளியூர் சனங்கள் எல்லாம் இன்பமுற்றார்
எருக்கலை வெட்டி ஊராரும் இன்பமாய் வாழ்ந்திருந்தார்
பெண்ணும் மாப்பிள்ளையும் இருபேரும் ஒன்றாய் வாழ்ந்து
போகவாழ்வு பெருகியே பெருவாழ்வு வாழ்ந்திருந்தார்.

(சுபம்)

(கதைப்பாடலை இயற்றிய புலவர் அருத(ன)குட்டி நாடார்.)

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

தரமணி, சென்னை - 600 113

அண்மை வெளியீடுகள்

	ரூ. பை.
அறிவியல் பார்வையில் வேதாத்திரிய உடல்நலக் கொள்கைகள்	60.00
பழங்குடி மாணவர்களுக்கான தமிழ்மொழிப் பாடநூல் மதிப்பீடு	65.00
பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் மனிதவள மேம்பாடும்	50.00
மேலைநாட்டறிஞர்களின் தமிழ்த் தொண்டு	175.00
பெரியார் என்னும் பேரொளி	60.00
சீனக்கவிஞர் குமோரோவின் தேவதைகள் (கவிதைத் தொகுப்பு)	70.00
புலம்பெயர்ந்தோர் படைப்புகளில் செவ்வியல் இலக்கியங்களின் தாக்கம்	100.00
உலகத் தமிழியல் ஆய்வுகள் (தொகுதி 1)	450.00
செவ்விலக்கியச் சாரம்	70.00
வேதாத்திரி மகரிசியும் மதநல்லிணக்கமும்	45.00
வீரமாமுனிவரின் சொல்லிலக்கணம்	50.00
திருமந்திரம் காட்டும் வாழ்வியல் நெறிகள்	165.00
தொல்காப்பிய உத்திகள்	60.00
தமிழில் இசுலாமிய மரபுகள்	60.00
தமிழில் இலக்கிய மானிடவியல்	80.00
தொடரியல் கோட்பாடுகளின் வளர்ச்சி	65.00
இராசேந்திர சோழனின் திருவாலங்காட்டுச் செப்பேடுகள்	80.00

வெ.எண் : 779

கதைப் பாடல் சுவடித் திரட்டும் பதிப்பும் (பகுதி- 1)

விலை : ₹ 210.00

ISBN : 978-81-925359-1-3